உ

தண்டியலங்காரம்

மூலமும் பழையவுரையும்

(விளக்கவுரையுடன்)

பதிப்பாசிரியர்:

பேராசிரியர், கு. சுந்தரமூர்த்தி

திருச்செந்திலாண்டவன் துணை

தண்டியலங்காரம்

மூலமும் பழையவுரையும்

(விளக்கவுரையுடன்)

பதிப்பாசிரியர்

பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி

செந்தமிழ்க்கல்லூரி

திருப்பனந்தாள்

முதற் பதிப்பு

1967

உரிமை ஆசிரியருக்கே.

கிடைக்குமிடம் :

பேராசிரியர், கு. சுந்தரமூர்த்தி
தெற்குத் தெரு
திருப்பனந்தாள் (அஞ்சல்)
தஞ்சை (மாவட்டம்)

மதிராஸ் லா ஜர்னல் அச்சகம், திருவிடைமருதூர்.

திருவம்பலமுடையார் துணை

அருளுரை

காஞ்சி தொண்டை மண்டலாதீனம் திருக்கயிலாய பரம்பரை மெய்கண்டதேவர் சந்தானம் ஞானபீடம் ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடாலயத்தின் 229 ஆவது குருமகா சந்நிதானம் **சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்** வழங்கியருளிய அருளுரை.

தண்டியலங்காரவுரைப் புதுப்பதிப்பு வரப்பெற்றேம். அதனை வெளியிட்டவர் நம் ஆதீனப்புலவர் சைவத்திருவாளர் கு. சுந்தரமூர்த்தி முதலியார் அவர்கள் ஆவர். அவர் தமிழ்ப் புலவர் தேர்வில் முதல்வகுப்பில் தேர்ச்சியுற்றவராவர். அவர் கற்ற திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தின் ஸ்ரீ காசிவாசி சீலஸ்ரீ சுவாமிநாத சுவாமிகளின் செந்தமிழ்க்கல்லூரியிலேயே தமிழ்ப் பேராசிரியராகப் பதினேழாண்டுகளாகத் தமிழ்ப்பணி செய்து வருகின்றார். அப்புண்ணியம் அவருக்குத், திருவைந்தெழுத்தைத் தாம் மறப்பினும் தம் நா மறவாதவாறு பயின்று, திருமுறைக் கருத்தே உருத்தாங்கியதென்னத் திகழும் அம்மடாலயத்துப் பெருமுனிவர் சீலஸ்ரீ காசிவாசி அருணந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்களின் கருணைப் பெருக்கத்தாற் கிடைத்தது. தமிழிலக்கிய விலக்கண சாத்திர நூல்களில் மிக்க பயிற்சியுள்ளவர். கற்பவை கசடறக் கற்றும், அதற்குத்தக நின்றொழுகியும், உண்மையைக் கடைப்பிடித்தும், தம் நல்லிசைப் புலமைக்குரிய பழைமை நலங்களைக் காத்தும் விளங்கும் மேன்மையர். புலமை மிகுதியாற் புலவர். கந்தபுராணம், பெரியபுராணம் முதலியவற்றையும், தனிப்பொருள்களையும் உலகு கேட்டுவக்கப் பொருட்செறிவோடு சொற்பொழிவாற்றலால் நாவலர். **'தொல்காப்பியச் செல்வர்'** என மதித்து இம்மடத்துக் குருபூஜைத்திருநாளில் பட்டங் கொடுத்துப் பாராட்டியதற்கு முற்றும் தக்கவர் ஆதலே இதிற் குறித்தல் எங்களுக்குற்றதொரு வாய்ப்பாகும். தொல்காப்பியம் - எழுத்து: நச்சினார்க்கினியமும்; சொல்: இளம்பூரணமும், சேனாவரையமும், நச்சினார்க்கினியமும், தெய்வச்சிலையாரும், கல்லாடமும்; செய்யுளியல் நச்சினார்க்கினியமும் இவர்களது ஆராய்ச்சிக் குறிப்பும் விளக்கமும் உடைய பழைய உரைப் பதிப்புக்கள் பலவும் இவர்களது நல்லியற் புலமைக்குச் சான்றாக நிலவுகின்றன.

இப்போது தண்டியலங்காரவுரைப் புதுப்பதிப்பு இவரது இயற்றமிழ்ப் புலமையை நன்கு தேற்றும். இப்பதிப்பில், முன் தோன்றிய தண்டியலங்காரப் பதிப்புக்களைக் குறித்த வரலாற் றொன்று மிக அரிதின் முயன்று எழுதப்பட்டிருக்கிறது. ஆசிரியர் வரலாறும், காலவரலாறும் குறிப்பும் விளக்கமும் கொண் டமைந்துள்ளன. பொதுவணியியல், பொருளணியியல், சொல் லணியியல் என்னும் மூன்றிலும் உள்ள எடுத்துக்காட்டுச் செய்யுட்களுக்கு ஆங்காங்கு விளக்கவுரை எழுதியதுமன்றி, ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையும் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளன. அவ்வச் செய்யுட்களுக்குரிய அணிகளின் விளக்கமும் தெளிவாகச் செய் யப்பட்டுள்ளன. இவர்கள் இவ்விலக்கண நூல்களுக்கு எழுதிய வாறே ஏனைய இலக்கண நூல்களுக்கும் எழுதிக்கொடுப்பது தன் தமிழன்னைக்குப் பெருந்தொண்டு செய்துதவியதாகும்.

இவர், ஆராய்ச்சி நூல்களை உலகம் ஆதரவு காட்டி, ஊக்கம் அளித்துதவின் பொதுவில் தமிழுக்கும், சிறப்பில் இலக்கணத்திற் கும் பெருந்தொண்டு செய்து வருவாரென்பதில் ஐயமே யில்லை. இவர்க்குத் திருவம்பலமுடையார் திருவருளால் எல்லா நலன் களும் உளவாகுக. இவர் நீடூழி இனிது வாழ்க.

இப்போது ஸ்ரீ காசி மடாலயத்தின் இளவரசராகத் தலைமை பெற்று விளங்கும் முனிவர் **சீலஸ்ரீ முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்** தருமைக் கல்லூரியில் முறையாகக் கற் றுணர்ந்து நன்கு தேர்ச்சிபெற்ற புலவராதலின், அவர்களும் தம் தமிழ்ப் புலமைப் பெருக்கிற்குத்தக இத்தொல்காப்பியச் செல் வர்க்கு ஞானத்துணையாக உதவுகின்றார்கள். அவர்களும் நீடூழி இனிது வாழ்க.

ஷை கல்லூரி முதலாசிரியர் கல்வெட்டாராய்ச்சிப் புலவர், சிவநெறிச் செல்வர் **திரு. கே. எம். வேங்கடராமையா M.A.,B.O.L.** அவர்கள், இவரைத் தம் மாணாக்கராயிருந்த காலத்தே வைத்த அன்பிற் சிறிதும் குன்றாமல் இவர்க்கு உற்றுழி யுதவிசெய்யும் உத் தமராய் விளங்குவதும் இவரது தமிழ்த் தொண்டிற்கு ஏதுவாக இருக்கின்றது. இவர்களனைவரும் நீடூழி வாழ்க.

காஞ்சீபுரம்
2-5-1967

சிவம்.

எந்தையார்

சைவத்திருவாளர்

அ. குப்புசுவாமி முதலியார் அவர்கள்

தோற்றம் : 13—9—1874

மறைவு : 7—5—1967

உ

உரிமையுரை

உறுவது நீற்றின் செல்வம் எனக்கொளும் உள்ளமும், பெறுவது சிவன்பால் அன்பாம் பேறு எனக் கருதி வாழும் பெற்றியும் வாய்ந்த எனது அன்பிற்கும் வணக்கத்திற்கும் உரிய அருமைத் தந்தையார் அவர்கள், இந்நூல் பதிப்பிக்கத் தொடங்குங்கால் இருந்து, இது நிறைவு பெறுவதற்குள் இறைவன் திருவடி நீழல் அடைந்துவிட்டார்கள். அவர்கள் மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தரிசித்தும், சந்தான குரவரிடத்தும், சமய குரவரிடத்தும் பேரன்பு கொண்டு அப்பெருமக்களுக்குக் குருபூசை நிகழ்த்துவித்துக் கண்ணினால் அவர்கள் நல்விழாப்பொலிவு கண்டும், திருமுறைகளை நாடொறும் ஓதியும், எனக்கும், என்னுடன் பிறந்தார்க்கும் ஓதுவித்தும் சிவபுண்ணியம் நிரம்பப்பெற்ற சிவநெறிச் செல்வர் ஆவார்கள். திருநாவுக்கரசு சுவாமிகளின் குருபூசையை நிகழ்த்துவிக்கச் சென்றவர்கள் அவ்விழா நிகழ்ந்த நான்கு நாட்களில், என்னையும் என் சுற்றத்தார்களையும் பெருந்துயரத்தில் ஆழ்த்திவிட்டுச் சிவபோகப் பெருவாழ்வில் கலந்துவிட்டார்கள். அவர்கள் மறைவு,

'மண்முதலாம் உலகேத்த மன்னுதிருத் தாண்டகத்தைப்
'புண்ணியா! உன்னடிக்கே போதுகின்றேன்' எனப்புகன்று
நண்ணரிய சிவானந்த ஞானவடி வேயாகி
அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்டஅரசு அமர்ந்திருந்தார்'

என்ற அருள்வாக்கினையே நினைவு படுத்துகின்றது.

இத்தகைய சிவபுண்ணியச் செல்வராக விளங்கியருளிய எனது அருமைத் தந்தையார் அவர்களின் திருவடி மலர்களை நினைந்து வணங்கி, இந்நூலை அவர்கட்குப் பணிவோடு உரிமையாக்குகின்றேன்.

பதிப்புரை

'கண்பொலி நெற்றியினன் திகழ் கையிலோர் வெண்மழுவான்
பெண்புணர் கூறுடையான் மிகு பீடுடை மால்விடையான்
விண்பொலி மாமதிசேர் தரு செஞ்சடை வேதியனூர்
தண்பொழில் சூழ்பனந்தாள் திருத் தாடகை யிச்சரமே.'

முன்னுரை :

இற்றைக்கு இருக்கும் அணியிலக்கண நூல்களில் பெரிதும் பயிலப்படுவது இத்தண்டியலங்கார மாகும். இதனினும் விரிவாகக் கூறப்படும் அணியிலக்கண நூல்கள் வேறுபல இருப்பினும் சுருக்கமாயும் அளவுபடவும் அமைந்திருப்பது இந்நூலேயாகும்.

உரை :

இந்நூலிற்குச் சுப்பிரமணிய தேசிகர் உரை எனக் கூறப்படும் பழையவுரை யொன்றுள்ளது. இவ்வுரை தானும் நூற்பாக்களுக்குப் பொருளும், எடுத்துக்காட்டுச் செய்யுட்களுக்கு முழுதும் இன்றி ஆங்காங்கு விளக்கமும் தர எழுந்ததாகும். ஒரோவழி பாடற்கும் அணிக்கும் உள்ள பொருத்தமும் ஆங்காங்கு கூறப்பட்டுள்ளது. எனவே இவ்வுரை கொண்டே அனைத்தையும் விளங்கிக் கொள்ள இயலாதிருக்கின்றது. எனினும் இப்பொழுதுள்ள உரைகளில் முதலாவதாக வைத்து எண்ணற்குரியது இவ்வுரையேயாகும்.

பதிப்புக்கள் :

இப்பழைய வுரையுடன் இந்நூலை முதன்முதல் பதிப்பித்துதவியவர்கள் தில்லையம்பூர்த் திரு. **சந்திர சேகர கவிராஜ பண்டிதர்** அவர்கள் ஆவர். திருவாவடுதுறை ஆதீன வித்துவான் தாண்டவராய சுவாமிகள், இயற்றமிழ் ஆசிரியராகிய திருத்தணிகை விசாகப்பெருமாள் ஐயங்கார் அவர்கள், ஆகிய இவர்கள் முன்னிலையில் பதிப்பிக்கப்பட்டதாக அப்பதிப்பின் முகப்பு ஏட்டில் உள்ளது. இது பதிப்பிக்கப்பட்ட ஆண்டு 1857 ஆகும். இது நூற்பாக்களை நூற்பா அமைப்பிலும், செய்யுட்களைச் செய்யுள் அமைப்பிலும் இன்றி நெடுங்கணக்காகப் பதிப்பிக்கப்பட்டதாகும்.

இதன் பின்னர் திரு. வை. மு. சடகோப இராமாநுஜாசாரியார் அவர்கள் தாம் எழுதிய குறிப்புரையுடன் 1901-இல் இப்பழைய வுரையைப் பதிப்பித்துள்ளார்கள். இது பொதுவணியியல்,

பொருளணியியல் மட்டுமே உடையது. இப்பதிப்பில் பாட்டிற்கும் அணிக்கும் உள்ள பொருத்தமும், பாடல்களுக்கு உரையும் தரப்பட்டுள்ளன. எனினும் எல்லாச் செய்யுட்களுக்கும் உள்ள அணியின் பொருத்தமும் கூறப்பட்டிலது.

இதனை யடுத்து இராமநாதபுரம் திரு. பொ. பாண்டித்துரைத் தேவர் அவர்களின் விருப்பத்திற்கு இணங்க, யாழ்ப்பாணத்துச் **சுன்னுகம் அ. குமாரசாமிப் புலவர்** அவர்கள் இயற்றிய புத்துரையுடன் சுன்னுகம் கு. அம்பலவாண பிள்ளையால் 1903-இல் பதிப்பிக்கப்பட்டது. இப்பதிப்பு நூற்பாக்களுக்கு மட்டுமே உரையுடையது. எடுத்துக்காட்டுச் செய்யுட்களுக்கும், அதன்கண்ணுள்ள அணிக்கும் உள்ள பொருத்தத்தைக் குறிப்பாகக் கூறுவது. தண்டியாசிரியரால் காட்டப்பட்ட எடுத்துக் காட்டுச் செய்யுட்களன்றி வேறு பிற இலக்கியங்களிலிருந்தும் எடுத்துக் காட்டுச் செய்யுட்கள் காட்டப்பட்டுள்ளன.

இதன் பின்னர் 1920-இல் மதுரை மாவட்டம் செம்பூர் **வித்துவான் திரு. வீ. ஆறுமுகம் சேர்வை** அவர்களால் இந்நூல் பழைய வுரையுடன் பதிப்பிக்கப்பட்டது. சுப்பிரமணிய தேசிகர் அவர்களால் முதலில் உரையெழுதாது விடப்பட்ட செய்யுட்களுக்கு உரையும், ஆங்காங்கு பாடற்கும் அணிக்கும் உள்ள பொருத்தமும் இப்பதிப்பில் காணப்படுகிறது. இந்நூலில் உரையின்றி விடப்பட்ட உதாரணச் செய்யுட்களுக்கு உரைகளும், விளக்கங்களும் முதல் ௬௮ நூற்பாக்கள்வரை சென்னை பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. கா. ர. கோவிந்தராச முதலியார் அவர்களாலும், அதற்குப் பின்னுள்ள பகுதிக்குச் செம்பூர் வித்துவான் திரு. வீ. ஆறுமுகம் சேர்வை அவர்களாலும் உரை எழுதப்பட்டு பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதனை அப்படியே பின்பற்றிச் சிவத்திரு. கொ. இராமலிங்கத் தம்பிரான் அவர்களின் குறிப்புரையுடன் 1938-இல் **சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால்** பதிப்பிக்கப்பட்டுள்ளது.

சொல்லணியியல், சென்னை விவேகானந்தர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் புலவர் **திரு. C. ஜெகந்நாதாசாரியார்** அவர்களின் குறிப்புரையுடன், வை. மு. நரசிம்மன் அவர்களால் 1962-இல் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இப்பதிப்புக்கள் அனைத்தையும் வெளியிட்ட சான்றோர்கள் அனைவர்க்கும் என்னுடைய நன்றியறிதலைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். இவையனைத்தும் ஒன்றன்பின் ஒன்றாக வெளிவந்த நிலையில் அரிய பல செய்திகளையும், திருத்தங்களையும் பெற்றிருப்பினும், மேலும் திருத்தமும் விளக்கமும் பெற

வேண்டியதாயிருந்தது. இதற்கு முன்பு சுப்பிரமணிய தேசிகர் உரையுடன் வெளிவந்த பதிப்புக்கள் நான்கு ஆகும். ஆயினும் அவை ஒவ்வொன்றிலும் அவர் உரை பல இடங்களில் மாறுபட்டுள்ளது. இதனை எண்ணும்பொழுது சுப்பிரமணிய தேசிகரின் உண்மையான உரை எதுவென அறிதற்கு இயலாதிருக்கின்றது. எனினும் சந்திரசேகர கவிராஜ பண்டிதர் அவர்களின் பதிப்பையும், திரு. வை. மு. கோபால கிருட்டிணமாசார்யார் அவர்களின் பதிப்பையும் கருவியாகக்கொண்டு இப்பதிப்பைப் பழைய வுரையுடன் பதிப்பித்துள்ளேன்.

இப்பதிப்பின் செம்மை :

இப்பதிப்பில் பழைய வுரையின்றி இருந்த செய்யுட்களுக்கு உரையும், ஒவ்வொரு பாடலிலும் அணிக்கும் அப்பாடற்கும் உள்ள பொருத்தமும் விளக்கவுரை என்ற பெயரால் எழுதிச் சேர்த்துள்ளேன். நூற்பாக்கள், செய்யுட்கள் ஆகியவற்றில் காணப்படும் பாடபேதங்களை அவ்வவ்விடத்து அடிக்குறிப்பாகக் கீழே குறித்துள்ளேன். எடுத்துக்காட்டுச் செய்யுட்களுக்கு அகரவரிசை அடிப்படையில் முதற் குறிப்பகராதியும், மாணக்கர்களுக்குப் பயன்படும் வண்ணம் பல்கலைக் கழகத்தும், பிறண்டும் கேட்கப்பட்ட வினக்களும் தொகுத்துச் சேர்த்துள்ளேன். நூலைப்பற்றியும், நூலாசிரியர் உரையாசிரியர்களைப்பற்றியும் அறியத்தக்க இன்றியமையாத செய்திகளை ஆராய்ச்சி முன்னுரையில் எழுதியுள்ளேன். மாணக்கர்க்கும், ஆராய்ச்சியாளர்க்கும் இப்பதிப்புப் பெரிதும் பயன்படுமென நம்புகின்றேன்.

எனினும் இப்பதிப்பு அச்சாகுங்கால் எதிர்பாராத பல்வேறு சூழல்களும், விரைவும் நேர்ந்தமையின் தவறுகள் சில இருக்கக் கூடும். அவற்றை அறிஞருலகம் பொறுத்தருள்வதுடன், அவற்றை எடுத்துக்காட்டின் அன்புடன் ஏற்றுக் கொள்வதுடன், அவர்களுக்கு என் உளங்கனிந்த நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

நன்றியுரை:

இந்நூலைத் திருக்கண் சார்த்தியருளி அருளுரை வழங்கியவர்கள் காஞ்சீபுரம் தொண்டை மண்டலாதீனம் **சீலஸ்ரீ ஞானப்பிரகாசதேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்** ஆவார்கள். அவர்கள் எளியேன்மாட்டுக் கொண்ட பெருங்கருணைத் திறத்தால், 2-5-67 ஆம் நாளன்று ஆதீன குருபூசை விழாவில் அடியேனுக்குத் '**தொல்காப்பியச் செல்வர்**' என்ற பட்டமும் வழங்கி இவ்வருளுரையையும் உடன் வழங்கி யருளினர்கள். இதனை நினையும்பொழுது 'பொற்றவிசு நாய்க் கிடுமாறன்றே நின்பொன்னருளே' என்னும் அருள்

மொழியே நினைவுக்கு வருகின்றது. அக்குருமூர்த்திகளின் திருவடி மலர்களுக்கு அடியேனுடைய பணிவான வணக்கங்களையும், நன்றியறிதலையும் திசை நோக்கித் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடியேனை இச்சீரிய பணிகளுக்கெல்லாம் ஆளாகுமாறு ஆட்கொண்டருளுகின்றவர்கள், பெருந்தவ முனிவரும், திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து அதிபராக எழுந்தருளியிருப்பவர்களுமான **ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள்** ஆவார்கள். அவர்களின் திருவடிமலர்களைப் பன்முறையும் சிரந்தாழ்த்தி வணங்குகின்றேன். அவர்களின் வழிநின்றொழுகி ஸ்ரீ காசி மடத்தின் இளவரசராக வீற்றிருப்பவர்களும், இப்பணியில் ஈடுபடுமாறு ஊக்கமளித்து ஆசி வழங்கி வருபவர்களுமான வித்துவான் **ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின்** திருவடிகளுக்கும் என்னுடைய பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இத்தகைய நற்பணிகளை யெல்லாம் ஆற்றுதற்கு வழக்கமாக அருகிருந்து ஊக்கமளித்து வருபவர்களும், என்னுடைய ஆசிரியப் பெருந்தகையுமான, கல்வெட்டாராய்ச்சிப் புலவர், சிவநெறிச் செல்வர், வித்துவான் **திரு. கே. எம். வேங்கடராமையா M. A., B. O. L.** அவர்கட்கும் என்றும் என்னுடைய வணக்கத்தையும் நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூலை விரைவாகவும், செம்மையாகவும் அச்சிட்டுதவிய M. L. J. அச்சகத்தின் மேலாளரான **திரு. வ. வேணுகோபாலன்** அவர்கட்கும், **அச்சகத்தினர்க்கும்** எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூல் சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து இடைநிலைத் தேர்வு மாணுக்கர்களுக்கும், B.A. மாணுக்கர்களுக்கும் பாடமாக வைக்கப்பட்டுள்ளது. தமிழறிஞர்களும், மாணுக்கர்களும் இந்நூலை வாங்கிப் பயன் படுத்தி, என்னை இத்துறையில் மேலும் ஊக்குவிக்குமாறு வேண்டுகின்றேன்.

இந்நற்பணியில் ஈடுபடுத்தி ஆட்கொண்டருளும் பெருங் கருணைத் தடங்கடலாகவுள்ள இறைவனின் திருவடிகளை மனம் மொழி மெய்களால் வணங்கி வழிபடுகின்றேன்.

பிறையார் சடையண்ணல் மறையார் மருதரை
நிறையால் நினைபவர் குறையார் இன்பமே'

இங்ஙனம்
கு. சுந்தரமூர்த்தி
தமிழ்ப்பேராசிரியர்

திருப்பனந்தாள்
12 – 5 – 67

ஆராய்ச்சி முன்னுரை

க. முன்னுரை :

மொழி பயிர்கள் போன்றது. இலக்கணம் வேலி போன்றது. வேலி பயிர்கள் அழியாதவாறு காக்குமேயன்றி அவற்றை அழித்துவிடுவதில்லை. அதைப்போன்றே இலக்கணமும் மொழியின் வளர்ச்சிக்கு உறுதுணையாய் நின்று, அதன் வளர்ச்சிக்குப் பயன் படுமேயன்றி அதனை அழித்துவிடாது. இத்தகைய அடிப் படையிலேயே நம் தமிழ் இலக்கணங்கள் பலவும் தோன்றின. இவ்விலக்கணங்கள் மொழிக்குப் பாதுகாப்பு மட்டுமன்றி அதற்குப் பெருமையும் தரவல்லதாகும். நம் தமிழ்மொழிக்கு இப்பெருமை வழிவழியாக வந்துள்ளது.

> **'மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்**
> **எண்ணி டைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ!'**

என இப்பெருமையைப் பரஞ்சோதியார் வீறுதோன்றக் கூறி மகிழ்தல் காண்க.

உ. ஐந்திலக்கணப் பாகுபாடு:

தமிழ் மொழியில் இற்றைக்குத் தொன்மையான இலக்கணங் களாக உள்ளன அகத்தியமும் தொல்காப்பியமுமாகும். இவற்றி லும் முன்னையது அழிந்து விட்டது. பின்னையதே கண்டு மகிழ்தற் குரியதாக உள்ளது. இது எழுத்துச் சொல் பொருள் என்ற மூன்று பாகுபாட்டை யுடையது. செய்யுளியல் யாப்புப் பற்றிய தாயினும், அதனைத் தனித்துக் கூறாது ஆசிரியர் பொருளதிகாரத் தின்பாற் படுத்தியே கூறியுள்ளார். இதற்கு முன்னுள்ள உவம இயலை அணி இலக்கணம் கூறுவதாகச் சேனாவரையர் முதலியோர் கூறுவர். பேராசிரியர் உவமை என்பது பொருளை விளக்குவதற் கும் சிறப்பித்தற்கும் வரும் கருவியேயன்றி அணியென்றல் தகாது என்பர். சேனாவரையர் கூற்றின்படி உவம இயலை அணி யிலக்கணம் கூறுவதாகக் கொள்ளினுங்கூட, அதனை வேறாகப் பிரித்துக் கூறாது பொருளதிகாரத்தின்பாற் படுத்தியே ஆசிரியர் கூறியுள்ளதால், தமிழிலக்கண ஆசிரியர்கள் எழுத்துச் சொல் பொருள் என்ற மூவகைப் பாகுபாடுகளையே கொண்டிருந்தனர் என்பது துணியப்படும். இங்ஙனம் மூவகையாகக் கொள்ளப் பட்ட இலக்கணநெறி இறையனார் களவியல் காலத்திற்கு முன்பு தான், பொருளில் அடக்கிக் கூறப்பட்ட யாப்பு வேறாகப் பிரிந் திருக்க வேண்டும் என அவ்வுரையால் தெரிகிறது. இறையனார் களவியல் எழுந்த காலம் கி. பி. எட்டாம் நூற்றாண்டாகும். எனவே தமிழிலக்கணம் தோன்றிய காலம்முதல் மூன்றாக அமைந்த பாகுபாடு, கி. பி. எட்டாம் நூற்றாண்டிற்கு முன்பு நான்காகப் பிரிந்து விளங்கிற்று எனலாம். பின் பொருளிலக் கணத்திலுள்ள அகப்பொருள் இலக்கணத்தை மட்டும் எடுத்துத்

தனிநூலாக நாற்கவிராச நம்பி என்பாரும், புறப்பொருள் இலக்கணத்தை மட்டும் எடுத்துச் சாமுண்டி தேவர் என்பாரும், செய்யுள் இலக்கணத்தை மட்டும் எடுத்து அமிதசாகரர் என்பாரும் முறையே நம்பியகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை, யாப்பருங்கலக் காரிகை என்ற பெயரால் நூல்களை யாத்தனர். கி. பி. 11 ஆம் நூற்றாண்டில் புத்தமித்திரர் என்பார் எழுத்துச் சொல் பொருள் யாப்புடன் அணியிலக்கணத்தையும் வேறாக அமைத்து **வீரசோழியம்** என்ற பெயரால் ஐந்திலக்கணங்களையும் ஒருங்கு சேர்த்துக் கூறுவாராயினர். இதற்குப் பின்பு **தொன்னூல் விளக்கம், முத்து வீரியம், இலக்கண விளக்கம்** என்பன ஐந்திலக்கணங் களையும் ஒருங்குகூற முற்படினும், இவற்றிற்கெல்லாம் முன் தோன்றியதாய் விளங்குவது வீரசோழியமே யாகும். இதற்குப் பின்பு கி. பி. **பன்னிரண்டாம் நூற்றாண்டில்** அணியிலக்கணத்தைத் தனியே எடுத்து விளக்க வந்த நூலே இத்தண்டியலங்காரம் ஆகும். இதற்குப் பின்பு அணியிலக்கணத்தை மட்டும் எடுத்து விதந்த நூல்கள் **மாறனலங்காரமும், குவலயானந்தமும்** ஆகும்.

௩. அணியிலக்கணத்தின் தோற்றமும் வளர்ச்சியும்:

ஒரு செய்யுளில் உள்ள சொற்களையும் பொருளையும் வேறு படுத்திக் காட்டி அவற்றில் உள்ள அழகையும் நயத்தினையும் எடுத்துக் கூறுவது அணியிலக்கணமாகும். இவ்வருமையை எல்லா மொழிகளிலும் காணலாம். எனினும் இங்ஙனம் பாகு படுத்திக் கூறுதற்காக எழுந்த இலக்கண நூல்கள் எவை? என்று பார்க்கும் பொழுது, வடமொழியிலேயே மிகப்பல இலக்கண நூல்கள் உள்ளன. வாமனகாரிகை, பாமஹ சூத்ரம், காவ்யதர்சம், ஸரஸ்வதீ கண்டாபரணம், சிருங்கார திலகம், காவ்யப் பிரகாசம், அலங்கார ஸர்வஸ்வம், ரஸதரங்கிணி, ரஸமஞ்சரி, தொனி, லோசனம், சாகித்ய சிந்தாமணி, சாகித்ய சூடாமணி, சாகித்ய தர்ப்பணம், சாகித்ய ரத்நாகரம், சமற்கார சந்திரிகை, பிரதாபருத்ரயசோபூஷணம், சந்திராலோகம், குவலயானந்தம், சித்ர மீமாம்ஸை, அலங்கார கவுஸ்துபம், ரஸகங்காதரம், ஏகாவலி, காவ்ய தர்ப்பணம் என்பன அவற்றுள் குறிப்பிடத் தக்கன.

இவ்வணி யிலக்கண அமைப்பு மிகவும் தொன்மை வாய்ந்தது என்பதைக் கீழ்க்கண்ட சான்றுகளால் அறிய முடிகின்றது.

1. வடமொழியில் தொல்காப்பியம் எனப்படும் வால்மீகி இராமாயணத்தின் முதல் சுலோகத்திலேயே காவ்ய இலக்கணமும் அணியழகும் பொருந்தி யிருக்கின்றன.

2. வேதத்திற்குப் பொருளுரைத்த யாஸ்கர் நிருத்தம் என்ற நூலில் உவமையணியைக் குறிக்கும் சொற்களையெல்லாம் தொகுத்திருக்கின்றார். இதன்காலம் கி. மு. 700 ஆகும்.

3. கி. மு. 500 – இல் வடமொழிக்கு இலக்கணம் வகுத்த பாணினி, உவமையணியின் உறுப்புக்களைக் கூறியுள்ளார்.

4. வேதாந்த சூத்திரங்களில் வேத வாக்கியங்களை ஆராயும் பொழுது உவமை, உருவக அணிகள் பற்றிப் பேசப்படுகின்றன,

5. பரத முனிவர் 36 அத்தியாயங்கள் கொண்ட நாட்டிய சாஸ்திரத்தில் 15 முதல் 18 ஆம் அத்தியாயம் வரையில் அணி யிலக்கணம் பற்றிப் பாடியுள்ளார்.

எனினும், தமிழ் மொழியில் இதுபற்றி எழுந்த நூல்கள் மிகச் சிலவே. தண்டியலங்காரம், மாறனலங்காரம், குவலயானந்தம், வீரசோழியம், இலக்கணவிளக்கம், தொன்னூல், முத்துவீரியம் என்ற ஏழு நூல்களே உள்ளன. இவற்றுள்ளும் முன்னைய மூன்றுமே அணியிலக்கணத்தைத் தனித்தனியே எடுத்து விதப்பன. அவையும் மொழிபெயர்ப்பாக அமைந்தவையே. பின்னைய நான்கும் அணியிலக்கணத்தை ஒரு பகுதியாகக்கொண்டு கூறுவன. இனி இவற்றிற்கெல்லாம் முதனூலாகவுள்ள தொல் காப்பியத்தை நோக்குழி, அதன்கண் உள்ள உவமவியல் நினை விற்கு வரும். தொல்காப்பியர் கூறிய உவமைஅணியிலிருந்தே மற்ற அணிகள் எல்லாம் தோன்றின என்றும், எனவே அணியிலக்கணத்தை முதன் முதல் கூறிய நூல் தொல் காப்பியமே என்றும் கூறுவர் சிலர். அப்பைய தீட்சதர் என்பார் வடமொழியில் சித்திர மீமாம்சை என்னும் நூலை இயற்றி யுள்ளார். அதன்கண் உள்ள சுலோகம் ஒன்றைக் கீழ்வருமாறு மொழிபெயர்த்துக் காட்டி, இதனால் அவரும் இக்கருத்தினரே என்பர். அம்மொழிபெயர்ப்பு வருமாறு :-

'உவமை யென்னும் தவலருங் கூத்தி
பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து
காப்பிய அரங்கினுட் கவினுறத் தோன்றி
யாப்பறி புலவர் இதயம்
நீப்பறு மகிழ்ச்சி பூப்ப நடிக்கும்மே.'

இதனைச் சான்றாகக் கொள்ளின் உவமையநு பல அணிகள் தோன்றின என்றும், அணியிலக்கணத்தை மொழி பெயர்ப்பு நூல்களிலன்றித், தனித்தமிழ் முதனூலாய தொல் காப்பியத்தினின்றும் அறியலாம் என்றும் கருதலாம். இந்தக் கண்ணோட்டத்துடன் தண்டியலங்காரத்தையும், தொல்காப்பிய உவமவியலையும் சிறிது ஒத்துநோக்குவோம்.

	தொல்காப்பிய உவமவியல்	தண்டியலங்காரம்
1.	'வினை, பயன், மெய்யுரு என்ற நான்கே வகைபெற வந்த உவமத் தோற்றம்'.	'பண்பும் தொழிலும் பயனும் என் றிவற்றின் ஒன்றும் பலவும் பொரு ளொடு பொருள் புணர்த்து ஒப்புமை தோன்றச்செப்புவது உவமை'. தொல் காப்பியர் மெய் உரு என்று கூறிய வற்றை இவ்வாசிரியர் பண்பில் அடக்கி யுள்ளார்.
2.	ஒரு பொருளோடு ஒரு பொருளை உவமை கூறுங்கால் மேற்கூறிய நான்கினுள் ஒவ்வொன்றே யன்றி விரவியும் உவமிக்கலாம்.	மேற்காட்டிய நூற்பாவில் 'என்றி வற்றின்' என்ற மிகையால் இக்கருத்து உரையாசிரியரால் கொள்ளப்படுகிறது,
3,	சுட்டிக்கூறா வுவமை.	தொகை யுவமை.

4	'முதலும் சினையுமென்றுயிரு பொருளும் நுதலிய மரபின் உரியவை உரிய' என்ற நூற்பாவில் பேராசிரியர் 'உரிய' என்றது 'உரியவை' என்ற மிகையால் ஒரு பொருளை ஒரு பொருளோடு உவமிக்கும் பொழுது திணையும் பாலும் மயங்கியும் வரலாம் என்பர்.	'மிகுதலும் குறைதலும் தாழ்தலும் உயர்தலும், பால் மாறுபடுதலும் பாகு பாடுடைய' என்ற நூற்பாவில் ஆசிரியர் இக்கருத்தினைக் கூறுவர்.
5.	'பொருளே உவமம் செய்தனர் மொழியினும் மருளறு சிறப்பின் அஃ(து) உவமாகும்'.	இதனை விபரீத வுவமை என்பர்.
6.	உவமப்போலி.	ஒட்டணி.
7.	'வேறுபட வந்த உவமத் தோற்றம் கூறிய மருங்கிற் கொள்வழிக் கொளாஅல்' என்ற நூற்பாவில், இதுகாறும் கூறிய உவமை யிலக்கணத்து வேறுபட வருவனவெல்லாம் கொள்க என்பர்.	தண்டியாசிரியர் உவமை யணியின் வகையாகக் கூறியிருப்பன பலவும், வேற்றுப்பொருள் வைப்பும் தொல்காப்பியர் கூறிய இவ்விலக்கணத்தில் ஒருவாறு அடக்கிக்கொள்ளலாம்.
8.	தடுமாறுவமம்.	இதரவிதரவுவமை.
9.	'அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே'.	மாலை யுவமை. (சந்தானவுவமை)
10.	'நிரனிறுத் தமைத்தல் நிரனிறை'.	நிரனிறையணி.

தண்டியலங்காரத்தில் கூறப்பட்ட பொருளணிகள் 35. தொல்காப்பியத்தில் இவற்றை யொத்துக் காணப்படுவன மிகச் சிலவே. ஆதலின் தொல்காப்பிய உவம இயலை அடிப்படை யாகக் கொண்டே, தண்டியலங்காரம் முதலிய அணியிலக்கணங் கள் எழுந்தன என்று கூறுவதினும், தொல்காப்பியத்தையும் வடமொழி அணியிலக்கணங்களையும் கொண்டு தண்டியலங்காரம் எழுந்தது என்றல் பொருந்துவதாகும். அன்றியும், அணியிலக் கணம் என்பதே பொருத்தமற்றதென்பதும், தொல்காப்பியரும் உவமையைப் பொருளை விளக்கும் கருவியாகக் கொண்டனர் என்பதும் பேராசிரியர் முதலானோருடைய கொள்கையாகும்.

பொதுவாகவே அணி இலக்கணம்பற்றிப் பலரும் பல குறைகள் கூறுவர். அவற்றுள் சில வருமாறு:—

1. அணியிலக்கண ஆசிரியர்கள் கூறுவன எல்லாம், செய்யுட் களில் வரும் பொருள் உறுப்பென்றே கூறவேண்டும்; அணி என்ப வாயின், சாத்தனையும், சாத்தனால் அணியப்பட்ட முடியும் தொடியும் அவனின்றும் வேறு கண்டாற்போல, அவ்வணியும் செய்யுளில் வேறுதல் வேண்டும். அவ்வாறின்மையின் அப்பெயரே பொருத்தமற்றதாம்.

2. அணியிலக்கணங்களும் சில வல்லார்செயின் அணியாக வும், அல்லாதார் செயின் அணியன்றாகவும் கூறப்படுகின்றது. இது இலக்கணத்திற்குப் பொருந்துவதன்று.

3. இலக்கணம் என்பது ஒரு வரையறைக்குட்பட்டிருத்தல் வேண்டும். ஆனால் அணியிலக்கணத்தைப் பொறுத்தமட்டில் அத்தகைய வரையறையே இல்லாதிருக்கின்றது. தண்டியலங் கார ஆசிரியர் பொருளணிகள் 35 என்பர். மாறனலங்கார ஆசிரியர் 64 என்பர். குவலயானந்த ஆசிரியர் 100 என்பர். இத்தகைய வரம்பின்மை இலக்கண நெறிக்குப் பொருந்துவ தன்றாம்.

4. ஓர் ஆசிரியர் ஓர் அணிக்கு இட்ட பெயரை மாற்றிப் பிறிதோர் ஆசிரியர் அதற்கு வேறு பெயர் தருகின்றார்.

5. எழுத்துச் சொல் பொருள் யாப்புப் பற்றிவரும் இலக் கணங்கள் கூட அணியென்ற பெயரால் கூறப்படுகின்றன. எடுத் துக்காட்டாக ஒன்றைக் காண்போம். அகப்பொருள் பற்றி வரும் உள்ளுறை உவமையை ஒட்டணியென்றும், புறப்பொருள் பற்றிவரும் நெடுமொழி கூறல், நெடுமொழி வஞ்சி என்பனவற் றைத் தன்மேம்பாட்டுரை என்றும் அணியிலக்கணத்து ஆசிரி யர்கள் கூறுதல் காண்க.

6. ஓர் அணியின் வகையாக ஓர் ஆசிரியர் கூறுவதைப் பிறிதோர் ஆசிரியர் தனி இலக்கணமாகக் கூறுவதும் இதன் வரம்பின்மையை விளக்குவதாகும். (புகழாப் புகழ்ச்சி யணியின் உரையை நோக்குக.)

7. சித்திர கவிகளும், மடக்குகளும் வெறும் சொல்லடுக்காக உள்ளனவேயன்றிப் பொருளின்பம் தருவனவாயில்லை. ஒரோ வழிப் பொருளின்பம் தரினும், படிப்போரை நெடுநேரம் மயக் கத்தில் ஆழ்த்தி விடுகின்றன.

இனைய பல குற்றங்கள் கூறப்படினும், செய்யுட் பொருளைப் பாகுபடுத்திச் சுவைத்தற்கு இவ்வணி யிலக்கணம் ஒரு கருவியாக இருக்கின்றது என்பதையும் மறுத்தற்கில்லை. அன்றியும் வட மொழியிலிருந்து இவ்வணியிலக்கணங்களைப் பெயர்க்கும் முன்ன ரேயே, இவ்வணியிலக்கண ஆசிரியர்கள் கூறும் உவமை, உருவகம் முதலாயின தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளன. ஏழாம் நூற்றாண்டில் தோன்றிய திருஞானசம்பந்தர் தேவாரத்தும் மாலைமாற்று, ஏகபாதம், எழுகூற்றிருக்கை, திருச்சக்கரமாற்று, மடக்கு முதலிய அணிகள் பயின்று வந்திருக்கின்றன. இவற்றை நோக்கும்பொழுது தமிழ் மொழியில் மொழிபெயர்ப்பாகவன் றித் தனித்தமிழ் அணியிலக்கண நூல்கள் இல்லாது போயினும், அணியிலக்கண ஆசிரியர்கள் கூறும் அணிவகைகள் பலவும் நம் பழந்தமிழ்ச் செய்யுட்களில் பல்கியிருந்தன என்பதை நன்கறியலாம்.

ச. தண்டியலங்காரம் :

தமிழ் மொழியிலுள்ள ஐந்திலக்கணங்களையும் கற்க விரும்பு வோர் எழுத்துச் சொல் இலக்கணங்களுக்கு நன்னூலையும், அகப் பொருள் இலக்கணத்திற்கு நம்பியகப் பொருளையும், புறப்

பொருள் இலக்கணத்திற்குப் புறப்பொருள் வெண்பா மாலையையும், யாப்பிலக்கணத்திற்கு யாப்பருங்கலக் காரிகையையும் சிறப்பாகக் கற்பதுபோல, அணி யிலக்கணத்திற்கு இத்தண்டியலங்காரத்தையே சிறப்பாகக் கற்கின்றனர். 100 அணிகள், 64 அணிகள் என விரிவாக நுவலும் இலக்கண நூல்கள் இருக்க, 35 அணிகள் பற்றியே நுவலும் இத்தண்டியலங்காரத்தைப் பலரும் பயில்வதொன்றே இதன் சிறப்பினை நன்கு விளக்கும். தொல்காப்பிய உரையாசிரியர், அடியார்க்கு நல்லார், வீரசோழிய நூலார், இலக்கண விளக்க நூலார் முதலிய பேராசிரியர் பலரால் எடுத்தாளப்பட்ட பெருமையும் இதற்குண்டு.

(அ) முதனூல் :

இந்நூல் தொகுத்தல் முதலிய நால்வகையுள் மொழிபெயர்ப்பு வகையைச் சார்ந்தது. இதன் முதனூல் **காவியதர்சம்** என்பதாகும். இதன் ஆசிரியர் **தண்டி** என்பவராவர். இவர் இராசசிம்ம பல்லவன் (கி. பி. 666 - 705) காலத்தவர். இந்நூலை முதனூலாகக்கொண்டு எழுந்த நூல்கள் தமிழில் மட்டுமன்றிப் பிறமொழியிலும் உள்ளன. அவையாவன: **தமிழ்** - தண்டியலங்காரம், **கன்னடம்** - கவிராச மார்க்கம், **சிங்களம்** - சியபஸ்லகாரம்.

இந்நூல் நான்கு பிரிவுகளை யுடையது. முதற் பிரிவில் காவியத்தின் இலக்கணமும் அதன் பிரிவுகளும் கூறப்பட்டுள்ளன. இரண்டாவது பிரிவில் பொருளணிகள் 35-இன் இலக்கணம் கூறப்பட்டுள்ளன. மூன்றாவது பிரிவில் யமகத்தின் (மடக்கின்) வகைகளும், சித்திரகவிகளின் இலக்கணங்களும் கூறப்பட்டுள்ளன. நான்காவது பிரிவில் காப்பிய வழுக்கள் கூறப்பட்டுள்ளன.

(ஆ) இந்நூலின் அமைப்பும் அழகும்:

மேற் கூறிய காவியதர்சத்தின் இலக்கணத்தை அப்படியே தழுவி, அந்நூலில் நான்கு பிரிவுகளாகக் கூறப்பட்டிருப்பதை மூன்று பிரிவில் அடக்கி இந்நூல் அழகாகச் செய்யப்பட்டுள்ளது. இந்நூல் பொதுவணியியல், பொருளணியியல், சொல்லணியியல் என்ற மூன்று பிரிவுகளை யுடையது. பொதுவணியியலில் செய்யுட்களின் வகைகள், அவற்றின் இலக்கணங்கள், வைதருப்பர், கௌடர் ஆகியோர்க்குரிய சொல்லமைப்பு நெறிகள் ஆகியவை கூறப்பட்டுள்ளன. பொருளணியியலில் 35 அணிகளின் இலக்கணமும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. சொல்லணியியலில் மடக்கின் வகைகள், அவற்றின் இலக்கணம், சித்திர கவிகளின் இலக்கணம், வழுக்கள், அவற்றின் அமைதிகள், மலைவுகள் ஆகியன கூறப்பட்டுள்ளன.

(இ) எடுத்துக்காட்டுச் செய்யுட்கள்:

இந்நூலில் அணிகளை விளக்குமுகமாகக் காட்டப்பட்ட செய்யுட்கள் மூவகைத் திறத்தன. (1) சில செய்யுட்கள் பிற இலக்கியங்களிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டன. (2) சில செய்யுட்கள்முதனூலின் மொழிபெயர்ப்பாக அமைந்தன. (3) சில செய்யுட்கள் ஆசிரியர் தாமே படைத்துக் கொண்டன. இவற்றுள் முன்னையதை மட்டும் வேறு பிரித்தறிய முடிகின்றது. ஏனைய

இரண்டையும் வேறுபடுத்திக்காண முதனூல் வல்லாரின் துணையும், போதிய காலமும் வேண்டும். அவை இதுபோழ்து கைகூடாமையின் இவ்வளவே ஆராய இயன்றது.

1. பிறநூல்களிலிருந்து எடுத்தாளப்பட்டன: பிறர்க்கின்னா, பொய்யாமை, வில்லேருழவர், நல்லார்கண்பட்ட, விலங்கொடு, அகர முதல (திருக்குறள்); அகலிரு விசும்பிற், மான்றோற் பள்ளி (பெரும்பாண்); ஓவத்தன்ன, ஈர்ந்தூ நிலந்தோயும் (சிறுபாண்); பாற்பகை யுழந்த (பொருந); அரிமாவன்ன (பட்டினப்); கருங்கால் வேங்கை (குறுந்); பாரி பாரி (புறம்); வைகலும் வைகல் (நாலடி); மனைக்கு விளக்கம் (நான்மணிக்); துறவுள்ளார்ச், கொள்பொருள் வெஃகி (திரிகடுகம்) என்பன.

2. திருக்குறள் கருத்தமைந்தன: காக்கைக்கு, தெய்வம் விருந்தொக்கல் என்பன.

3. விநாயகரைப்பற்றியன: தேனக்கலர் கொன்றை, மானமருங்கண்ணாள், அம்பொற் பணைமுகத்து என்பன.

4. சிவபெருமானைப்பற்றியன: இன்றுமையாள், நீலமணிமிடற்றன், உள்ளங் குளிர, பத்தித்தகட்ட, சூழ்ந்து, இறையோன்சடை, மறுப்பயின்ற, பாலினிடை நீலமணி, வாளரவின், அடிநோக்கின், காமருவு, பண்டு புரமெரித்த, பொங்கிச் செறிந்து, காவொடுநின்றார், வாய்த்த பொருள், மாதர் உமை, அருவியங் குன்றம், நிலனும், சோதி யிரவி, தொல்லை மறைதேர், காலையும் மாலையும், காமனை வென்றோன், தேங்கானல், கொடியார், வருமறை, கருமாலைதொறு, மறை நுவல், நலத்தகை, உமாதரன், பணிப வநந்தன, கோடாராவி, அருளின் றிருவுருவே, மருவினவர், நல்வினை நாற்கால், கருவார் கச்சி, மேருசாபமும், சீலத்தால், மூன்றெழுத்தும், ஆதாரந்தீர், சங்கந்தா, மாகதச் சோதி என்பன.

5. முருகனைப்பற்றியது: முருகவேள் சூர்மா என்பது.

6. திருமாலைப்பற்றியன: வையம் தகழியா, அடிநோக்கின், முன்னம் குடைபோல், மால்கரி காத்தளித்த, பாலன் தனதுருவாய், எண்ணும் பயன், புனல்நாடர், ஏறடர்த்து, விச்சாதர, மேயநிரை புரந்து, போர் வேலின், ஏந்திய வெண்படை, மாவா நீதா, பொற்றூணில், வாளரவின், மேவி வாழ்வார். வானாகி மண்ணாய் என்பன.

7. பிரமனைப்பற்றியன: அங்கண்மா ஞாலத்து, சீதமதியின், விரிகடல்சூழ், தலையிழந்தான் என்பன.

8. நாமகளைப்பற்றியன: இமையவர்கண், அளவே வடிவொப்பது என்பன.

9. கொற்றவையைப்பற்றியன: மலையு மலையும், புகைத்தகை என்பன.

10. சண்டிகேசுவரரைப்பற்றியது: பிதாவைக் கொலைபுரிந்தான் என்பது.

11. இந்திரனைப்பற்றியது: விண்ணின்மேல் என்பது.

12. புத்தரைப்பற்றியது: மாதவா போதி என்பது.

13. அருகனைப்பற்றியது: ஆயபொருள்கள் என்பது.

14. *அகத்தியரைப்பற்றின: மலயத்து மாதவனே, மூவாத்தமிழ், கொண்டல் மிசை என்பன.*

15. *தமிழைப்பற்றியன: ஓங்கலிடை வந்து, கனிகொள் என்பன.*

16. *பாண்டவரைப்பற்றியன: காய்கதிரோன், மண்ணகன்று, காமர் உருவம், என்னோடு இகல் என்பன.*

17. *காரியைப்பற்றியது: மூன்றெழுத்தும் என்பது.*

18. *சோழனைப்பற்றியன: என்னேய், செருமான, அவிழ்ந்த துணி, கால் நிமிர்த்தால், அன்னைபோல், தாதொன்று, செம்மை மரைமலரும், குழை பொருது, அடிநோக்கின், சரியும் புனைசங்கும், தண்கவிகையால், பூதலத்துள், சுற்றுவில், தம்மாற் பயன்தூக்காது, மண்படுதோட்கிள்ளி காடத்தான் மாரியும், பொன்னி வளநாடன், இகன்மதமால் யானை, கல்லுயர்தோள், உடைதலையும், முத்தரும்பி, கன்றும் வயவேந்தர், மனுப்புவிமேல், நறவேந்து கோதை, தள்ளாவிடத்தேர், கோட்டம் திருப்புருவம், ஏங்கா முகில், நினைவரிய, மழையார், பாவி நாடொறும், கொல்லியம் பொருப்பனை, கோவளர்ப்பன, வண்புயலை, கானவாரணம், அங்கமிலாதவன், ஒருவர் ஒருவர், ஆதாந்துயர்தர, இரவிதுணைத்தாள், தென்மலையின், தண்பொருநை என்பன.*

19. *ஒட்டக்கூத்தரைப்பற்றியது: சென்று செவியளக்கும் என்பது.*

இவர் தண்டி ஆசிரியரின் காலத்தவர். மலரி என்ற திருவெறும்பூரில் பிறந்தவர். இரண்டாம் குலோத்துங்க சோழனின் ஆசிரியராகவும், அவைக்களப் புலவராகவும் வீற்றிருந்தவர். அச்சோழன்மீது உலாவும், பிள்ளைத்தமிழும் பாடியவர். 'இவரும் நம் தண்டியாசிரியரும் ஒரு ஊரினராய் இருப்பதாலும், இவர்தம் கவித்திறத்தை தண்டியாசிரியர் பாராட்டி யிருப்பதாலும் ஒட்டக்கூத்தரின் மாணக்கராகத் தண்டியாசிரியரைக் கருத இடனுண்டு' என்பர் திரு. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள்.

20. *காஞ்சியைப்பற்றியன: [1]எரியிரண்டும், மலிதோரான் கச்சியும், ஆடவர்கள், பூண்தாங்கு, பூமகள் யார்? என்பன.*

21. *நாகையைப்பற்றியது: தண்மலர் வில்லி என்பது.*

22. *இடம் விளங்காத பாடல்கள்: கடுங்கை வயலுழவர், விழித்த குவளை (பக் - உஅ), முத்துக்கூர்த் தன்ன (பக் - சஅ) என்பன.*

(ஈ) **நூலாசிரியர்:**

தண்டியலங்காரத்தை இயற்றிய ஆசிரியர் பெயர், வரலாறு முதலியன தக்கவாறு அறிதற் கியலாதிருக்கின்றது. காவ்யதர்சத்தை இயற்றிய ஆசிரியர் பெயர் தண்டியாதல் போலவே, தமிழ்த் தண்டியலங்காரத்தை இயற்றியவரும் **தண்டி** என்ற பெயரினரே என்பது சிலருடைய கொள்கையாகும். இதற்குப் பின்வரும் சிறப்புப் பாயிரச் செய்யுளைச் சான்றாகக் காட்டுவர்.

---

1. *முதனூலாசிரியர் காஞ்சியைச் சிறப்பித்திருப்பது போன்றே, இவரும் இப்பாடல்களில் சிறப்பித்துள்ளார்.*

'வடதிசை யிருந்து தென்மலைக் கேகி
மதிதவழ் குடுமிப் பொதிய மால்வரை
இருந்தவன் தன்பால் அருந்தமிழ் உணர்ந்த
பன்னிரு புலவரின் முன்னவன் பகர்ந்த
தொல்காப் பியநெறி பல்காப் பியத்தும்
அணிபெறு மிலக்கணம் அரிதினில் தெரிந்து
வடநூல் வழிமுறை மரபினின் வழாது
ஈரிரண் டெல்லையின் இகவா மும்மைப்
பாரத விலக்கணம் பண்புறத் தழீஇத்
திருந்திய மணிமுடிச் செம்பியன் அவையத்து
அரும்பொருள் யாப்பி னமைவுற வகுத்தனன்
ஆடக மன்றத்து நாடக நவிற்றும்
வடநூ லுணர்ந்த தமிழ்நூற் புலவன்
பூவிரி தண்பொழிற் காவிரி நாட்டு
வம்பவிழ் தெரியல் அம்பி காபதி
மேவருந் தவத்தினிற் பயந்த
தாவருஞ் சீர்த்தித் தண்டியென் பவனே.'

இதிலிருந்து நூலாசிரியர் பெயர் தண்டி யென்பதும், அவர் அம்பிகாபதியின் புதல்வர் என்பதால் கம்பரின் பெயரர் என்பதும், வடமொழி தென்மொழி வல்லுநர் என்பதும், [1]சோழ நாட்டினர் என்பதும், சோழனவையில் இந்நூல் அரங்கேற்றப் பட்டதென்பதும் அறிய முடிகின்றது. இந்நூலில் மேற்கோளாகக் காட்டிய செய்யுட்களில் அனபாயனைப் பாராட்டியுள்ளமையான், இவர் சோழ நாட்டிலிருந்து, அச்சோழனவையில் இந்நூலை அரங் கேற்றி யிருக்கலாம் என்பதை நம்பமுடிகின்றது. ஆனால் அம்பிகா பதியின் புதல்வர் என்பதற்கும், அதனால் கம்பரின் பெயரர் ஆவார் என்பதற்கும் இச்செய்யுளன்றிப் பிறசான்றுகள் இன்மை யின், அதனை அவ்வளவாகத் துணிய இயன்றிலது. இன்னொரு சாரார் வடமொழித் தண்டியலங்காரத்தை மொழிபெயர்த்ததால் இவருக்கும் தண்டி எனும் பெயர் வந்தது என்பர். பிறிதொரு சாரார் தண்டியென்னும் ஆசிரியர் ஒருவரே வடமொழியில் காவிய தர்சத்தையும், தமிழ் மொழியில் இத்தண்டியலங்காரத்தையும் இயற்றினர் என்பர். இவ்விருசாராரின் கூற்றுக்களுக்கு எவ்விதச் சான்றும் இன்மையால் இவை களையத்தக்கனவே யாம்.

இவர்தம் பெயரைப் பற்றிய ஆய்வுகள் பல இருப்பினும், இவருடைய புலமையும் சால்பும் பற்றி ஒருசிறிதும் ஐயுறுதற் கியலாததாய் உள்ளன. வடமொழியினின்றும் இந்நூலை மொழி பெயர்த்திருப்பினும், மொழி பெயர்ப்பால் முதனூற் கருத்துக் களின் அமைப்பும், அழகும் கெடாதவாறு யாத்திருப்பதும், முதனூலாசிரியர் தம் காலத்து அரசனை இராசசிம்மனைப் பாராட்டியுள்ள இடங்களில் எல்லாம், இவர் தம் காலத்து அரச

1. சோழ நாட்டிலுள்ள மலரி என்னும் திருவெறும்பூரே இவருடைய ஊராகும் என்பர் திரு. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள். (சோழர் வரலாறு - இரண்டாம் பாகம் - பக். 100)

ஞகிய அனபாயனின் பெருமைகளைச் சுவை நலம் ததும்பக் கூறி யிருப்பதும், இவர்தம் காலத்துத் தலைமை சான்ற பெரும்புலவ ராய் விளங்கிய ஒட்டக்கூத்தரைப் பற்றிப் புலமைக் காழ்ப்பின்றிச் சிறப்பித்திருப்பதும் இவர்தம் புலமைக்கும் சால்பிற்கும் எடுத்துக்காட்டாக வுள்ளன.

பிரயோக விவேக நூலார் இவரைப்பற்றிக் கூறும் கருத்துக் களும் அறிந்தின்புறத்தக்கன. 'தண்டியாசிரியரும், சிந்தா மணியாரும் வடமொழியிற் பிறந்த வண்ணமே 'யுக்தமும் அயுக்தமும்', 'ராசமாபுரி', 'ரவிகுல திலகன்' என முறையே கூறுதல் காண்க. நாலடியாரும், தண்டியாசிரியரும், சிந்தாமணி யாரும் வடமொழியிற் பிறந்த வண்ணம் முறையே 'யோசனை கேட்பார்', 'யுக்தமும் அயுக்தமும்', 'ரவிகுலதிலகன்', எனத் தற்சமமாகக் கூறினாற்போல, யாமும் 'உருவபேதம்' என்னுமலே 'ரூபபேதம்' என்றும்' எனவரும் கூற்றுக்களால் இவர்தம் வட மொழிப் புலமை நன்கு விளங்குதல் காண்க.

காலம் : தண்டியாசிரியர் அணிகளின் இலக்கணம் கூறியதோ டன்றி, அவற்றை விளக்கத்தாமே எடுத்துக்காட்டுச் செய்யுட் களையும் பாடியவர் என்று பலரும் புகழ்வதுண்டு. '**தண்டியாசிரியர் மூலோதாரணமும் காட்டினாற்போல, யாமும் உரை யெழுதிய தல்லது மூலோதாரணமும் காட்டினும்**' எனவரும் பிரயோக விவேக நூலார் கூற்று இதனை வலியுறுத்தும். எனினும் சில செய்யுட்கள் வடமொழித் தண்டியலங்காரத்தின் மொழிபெயர்ப் பாயும், சில செய்யுட்கள் வேறுபிற இலக்கிய நூல்களிலிருந்து காட்டப்பட்டனவாயும் உள்ளன என்பதும் ஈண்டறியத்தக்க தாகும். இங்ஙனம் வரும் செய்யுட்களில் பொதுவாகச் '**சோழன்**' என்ற பெயரில் கூறப்படும் செய்யுட்கள் 45 உள்ளன. '**அனபாயன்**' என்று குறிப்பிடப்பட்ட செய்யுட்கள் 6 உள்ளன. இப்பாடல்கள் பலவும் சோழனின் நாட்டுவளம், அரசியற் சிறப்பு, போர்ச்செயல்கள், முதலியவற்றை விளங்கக் கூறுவன. இவ்வாசிரியர் பலவிடத்தும் தம் அன்புரிமை தோன்றத் தம்மை யுளப்படுத்தி '**எங்கோன்**' என்று கூறுவதால் இவர் அனபாயன் காலத்தவர்என்பதை நன்கறிய முடிகின்றது. இவ்வனபாயன் இரண்டாம் குலோத்துங்க சோழனேயாவன். இவனுடைய காலம் **கி. பி. 12-ஆம் நூற்றாண்டு** ஆகும். ஆதலால் இவர்தம் காலமும் அதுவேயாகும். அன்றியும் ஒட்டக்கூத்தரின் காலம் கி. பி. 12ஆம் நூற்றாண்டாதலால் இவ்வாசிரியர் காலமும் அதுவேயாதல் அறியலாம்.

சமயம்: இந்நூலாசிரியர் காட்டியுள்ள மேற்கோட் செய்யுட் களில் ஏறத்தாழ 41 பாடல்கள் சிவபெருமானைப்பற்றி உள்ளன. ஏறத்தாழ இருபது பாடல்கள் திருமாலைப் பற்றியதா யுள்ளன. சிவபெருமானைப் பற்றிய பாடல்களில் ஆசிரியர் தமக்கிருக்கும் அன்புடைமை தோன்ற '**எங்கோன்**' என்றும், '**அடியேற் கினிதாம் கச்சிக் கச்சாலைக் கனி**' என்றும், '**எம்பிரான் இனியார்**' '**உம்பர் நாயகனே!**' என்றும் குறிப்பிடுவதால் இவர் **சைவசமயத் தவர்** என்பதை நன்கறியலாம்.

(உ) உரையாசிரியர் :

இந்நூலுக்கு உரை வகுத்த ஆசிரியரைப்பற்றி ஒன்றும் தெளிவாக அறிய இயலவில்லை. சுப்பிரமணிய தேசிகர் உரை எனச் சில பிரதிகளில் உள்ளன. சில பிரதிகளில் அப் பெயரும் இல்லாதிருக்கின்றது. ஆதலின் இவரைப் பற்றிய செய்திகள் ஏதும் தெரிந்தில. எனினும் இவர் தம் உரையைக் கொண்டு இவருடைய புலமையை நன்கறிய முடிகின்றது. சுருங்கிய முறையில் ஆற்றொழுக்காக உரையெழுதிச் செல்லுதலும், சிற்சில இடங்களில் பொழிப்புரையின்றிச் சொற் பொருள் மட்டும் தந்து போதலும், இன்றியமையாத இடங்களில் ஆங்காங்கு இலக்கணக் குறிப்புக்கள் தந்து போதலும், ஒரு சில இடங்களில் அணிக்கும் அப்பாடற்கும் உள்ள பொருத்தத்தைக் குறிப்பாய்க் காட்டிச் செல்லுதலும், ஒரு அணிக்கும் பிறிதொரு அணிக்கும் உள்ள வேற்றுமைகளைச் சிற்சில இடங்களில் கூறிப் போதலும் இவர்தம் இயல்பாகும். எனினும் இவர் உரை இப்பொழுதுள்ள நிலையில் ஒரு நெறியாக அமைந்திலது என்றே தோன்றுகிறது. இவர் தம் உரையுடன் வெளிவந்த பதிப்புக்களும் ஒவ்வொரு அமைப்பில் உள்ளன. ஆதலின் இதுபற்றிய முழுவுண்மை புலனாகவில்லை. இவர் பல இடங்களில் 'என்பாருமுளர்' எனக் குறிப்பதிலிருந்து இவருக்கு முன்னமேயே இந்நூலிற்கு உரையிருந்தது என அறியமுடிகின்றது.

பாடலுக்கும் அணிக்கும் உள்ள பொருத்தத்தினை விளக்கிச் செல்லாதிருத்தல் இவ்வுரைக்கு அமைந்த ஒருகுறையென்பர். எனினும் இக்குறை உரையாசிரியர்தம் புலமைக் குறைவால் ஏற்பட்டது என்று எள்ளளவும் நினைதல் கூடாது. பாடற் பொருளை விளக்கிச் செல்லுதலே அமையும் எனக் கொண்டு அந்நிலையில் உரை அமைந்ததல்லது வேறில்லை. எனினும் நூற் பாவின் பொருளையும், எடுத்துக்காட்டாகக் காட்டப்பட்ட செய்களின் பொருளையும் விளங்கிக் கொள்ள இவ்வுரை பெருந்துணையாக உள்ளது என்பதில் ஐயமில்லை.

(ரு). முடிவுரை :

இவ்வுரைவழி நூலையும், நூல்வழி அணியிலக்கணத்தையும் அறிந்தின்புறுவது நம்முடைய கடமையாகும்.

பொருளடக்கம்

1.	அருளுரை	3
2.	உரிமையுரை	5
3.	பதிப்புரை	7
4.	ஆராய்ச்சி முன்னுரை	11
5.	நூல் :	
	க. பொதுவணியியல்	க
	க. செய்யுள் வகை	உ
	உ. செய்யுள் நெறி	கச
	உ. பொருளணியியல்	௩க
	க. தன்மையணி	௩உ
	உ. உவமையணி	௩௫
	௩. உருவகவணி	௬க
	ச. தீவகவணி	எ௯
	௫. பின்வருநிலையணி	அஎ
	௬. முன்னவிலக்கணி	அ௯
	எ. வேற்றுப்பொருள் வைப்பணி	க0க
	அ. வேற்றுமையணி	க0௬
	௯. விபாவனையணி	கக௩
	க0. ஒட்டணி	கக௬
	கக. அதிசயவணி	கஉ0
	கஉ. தற்குறிப்பேற்றவணி	கஉ௩
	க௩. ஏதுவணி	கஉ௫
	கச. நுட்பவணி	க௩ச
	க௫. இலேசவணி	க௩௫
	க௬. நிரல்நிறையணி	க௩எ
	கஎ. ஆர்வமொழியணி	க௩அ

கஅ.	சுவையணி	கஙஅ
ககூ.	தன்மேம்பாட்டுரையணி	கசங
உ0.	பரியாயவணி	கசங
உக.	சமாயிதவணி	கசச
உஉ.	உதாத்தவணி	கசச
உங.	அவநுதியணி	கசரு
உச.	சிலேடையணி	கசஅ
உரு.	விசேடவணி	கருரு
உசா.	ஒப்புமைக் கூட்டவணி	கருஅ
உஎ.	விரோதவணி	கருகூ
உஅ.	மாறுபடு புகழ்நிலையணி	கசாக
உகூ.	புகழாப் புகழ்ச்சியணி	கசாஉ
ங0.	நிதரிசனவணி	கசாச
ஙக.	புணர்நிலையணி	கசாரு
ஙஉ.	பரிவருத்தனையணி	கசாஎ
ஙங.	வாழ்த்தணி	கசாஅ
ஙச.	சங்கீரணவணி	கசாஅ
ஙரு.	பாவிகவணி	கஎஉ

ங. சொல்லணியியல் கஎச

க.	மடக்கு	கஎச
உ.	சித்திரகவி	உ0எ
ங.	வழுக்கள்	உஉஎ
ச.	மலைவுகள்	உஙகூ

6. நூற்பா முதற்குறிப்பு அகரவரிசை உசகூ

7. செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை உரு0

8. வினாக்கள் உருரு

உ

திருச்செந்திலாண்டவன் துணை

தண்டியலங்காரம்

மூலமும் பழைய வுரையும்

க. பொதுவணியியல்

தற்சிறப்புப் பாயிரம்

க. சொல்லின் கிழத்தி மெல்லியல் இணையடி
சிந்தைவைத் தியம்புவல் செய்யுட் கணியே.

இவ்வதிகாரம் என்ன பெயர்த்தோவெனின், அணியினது இலக்கணம் உணர்த்தினமையின் **அணியதிகாரம்** என்னும் பெயர்த்து.

இவ்வதிகாரத்துள் இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின், அணிபெறுஞ் செய்யுட்கும், ஒருசார் அணிக்கும் இலக்கணம் உணர்த்தினமையின் **பொதுவியலோத்து** என்னும் பெயர்த்து.

இவ்வோத்தினுள் இத்தலைச் சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், கடவுள் வணக்கமும் உரைக்கும் பொருளும் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்: கலைமடந்தை துணைத்தாளைக் கருத்துள் வைத்து, யாப்புக்கு அலங்கார இலக்கணஞ் சொல்லுவன் என்றவாறு.

சொல்லின்கிழத்தி எனினும், கலைமடந்தை எனினும் ஒக்கும். இணையடி எனினும் துணைத்தாள் எனினும் ஒக்கும். சிந்தை எனினும் கருத்து எனினும் ஒக்கும். 'உள்' என்பது ஏழாம் வேற்றுமை தொக்கு நின்று விரித்துரைக்கப்பட்டது. இயம்புவல் எனினும் சொல்லுவல் எனினும் ஒக்கும். செய்யுள் எனினும் யாப்பு எனினும் ஒக்கும். அணி எனினும் அலங்காரம் எனினும் ஒக்கும்.

'அணி' என்றது ஈண்டு அலங்கார இலக்கணத்தை; ஆகு பெயர். ஏகாரம் — ஈற்றசை.

'வாழ்த்து, தெய்வம் வணங்குதல், வருபொருள் உரைத்தல் என்பன காப்பியத்து முதல் இலக்கணம்' (பொதுவியல்: அ-ஆம் நூற்பா) என்றார் ஆசிரியர் ஆகலின், ஈண்டுத் தெய்வ வணக்கமும், உரைக்கும் பொருளும் உணர்த்தப்பட்டன. இஃது இலக்கியத்திற்கு ஓதியவதனை இலக்கணத்திற்கும் ஓதி உடம்பொடு புணர்த்தார் ஆசிரியராகலின், ஈண்டு இவ்வாறு உரைக்கப் பட்டது. என்றதனால் சிறப்புப் பாயிரமாயிற்று.

(விளக்கவுரை) 'தெய்வ வணக்கமும் செயப்படு பொருளும், எய்த வுரைப்பது தற்சிறப் பாகும்' என்பது தற்சிறப்புப் பாயிரத்தின் இலக்கணமாகும். இந் நூற்பாவில் 'சொல்லின் கிழத்தி மெல்லியல் இணையடி சிந்தை வைத்து' என்பதால் தெய்வ வணக்கமும், 'செய்யுட்கு அணியே இயம்புவல்', என்பதால் உரைக்கும் பொருளும் உரைக்கப்பட்டமை காண்க. ஆதலின் இந் நூற்பா தற்சிறப்புப் பாயிரமாயிற்று.

உடம்பொடு புணர்த்தல் — கூற வேண்டுவதோர் இலக்கணத்தை, இலக்கணமாக விதித்துச் சொல்லாமல் தான் அவ்விலக்கணம் அமையக் கூறியதைக் கொண்டு தெரிவித்தலாம். (க)

செய்யுள் வகை

> ௨. செய்யுள் என்பவை தெரிவுற விரிப்பின்
> முத்தகங் குளகந் தொகைதொடர் நிலையென
> எத்திறத் தனவும ஈரிரண் டாகும்;

என்பது சூத்திரம் என்னுதலிற்றோவெனின், மேல் 'செய்யுட்கு அணியிலக்கணம் உணர்த்துவல்' என்றார். அச்செய்யுளாமாறு உணர்ந்தே அணி யுணரப்படுமாகலான், அவ்வணி பெறுஞ் செய்யுளினது பெயரும், முறையும், தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: செய்யுளென்று கூறப்படுவன, விளங்க விரித்துணர்த்துங்கால், எவ்வகைப்பட்ட பாவேனும் முத்தகச் செய்யுளும், குளகச் செய்யுளும், தொகைநிலைச் செய்யுளும், தொடர்நிலைச் செய்யுளும் என நான்கு வகைப்படும் எ-று.

'செய்யுள்' என்பதை நான்கினோடும், 'நிலை' என்பதைப் பின் இரண்டினோடுங் கூட்டி உரைக்கப்பட்டன. முத்தகம் குளகம் என்பன வடமொழிப் பெயர். ஏனை யிரண்டுந் தமிழ்மொழிப் பெயர். அவையாமாறு முன்னர் அறியப்படும்.

(வி-ரை) செய்யுள் என்பதை நான்கனொடும் கூட்ட முத்தகச் செய்யுள், குளகச் செய்யுள், தொகைநிலைச் செய்யுள், தொடர்நிலைச் செய்யுள் என்றாகும். நிலை என்பதைப் பின் இரண்டினொடுங் கூட்டத் தொகைநிலை, தொடர்நிலை என்றாகும். (௨)

முத்தகச் செய்யுள்

> ௩. அவற்றுள்
> முத்தகச் செய்யுள் தனிநின்று முடியும்.

எ-ன், முத்தகச் செய்யுளாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: மேற்சொன்ன நான்கனுள் முத்தகச் செய்யுள் என்பது தனியே நின்று ஒருபொருள் பயந்து முற்றுப் பெறுவது எ-று.

எடுத்துக் காட்டு:

> 'என்னேய் சிலமடவார் எய்தற் கெளியவோ
> பொன்னே யனபூயன் பொன்னெடுந்தோள் — முன்னே
> தனவேயென் றோளுஞ் சயமடந்தை தோளாம்
> புனவேய் மிடைந்த பொருப்பு'

இ - ள்: பொன்னை யொப்பாய்! அடிப்படத் தனக்கே சொம் மாக நினைத்துத் துய்க்கின்ற கொற்றவையுடைய தோளாகிய செறிந்த வேயினுலே நெருங்கப்பட்ட பொருப்பாகிய அனபாயனு டைய அழகினையுடையவாய்ப் பெரியவாகிய தோள்களானவை, என்னையொக்குந் தன்மை யுடையராகிய பெண்டிர் பலரும் புல்லுதற்கு எளிவந்தனவாமோ? ஆகா எ - று.

வேய் மிடைந்த பொருப்பாகிய தோள் எனக் கூட்டுக. தோளாகிய பொருப்பு என்பாருமுளர். 'என்னேய்' என்புழி இரண்டனுருபு தொக்கு நின்றதெனக் கொள்க. 'என்' என்ப தனை இரக்கத்தின்கட் குறிப்பு என்பாருமுளர். சில என்பது—பல. எய்துதல்—கூடுதல். அனபாயன்—அபாயரகிதன். பொன்—அழகு. நெடுந்தோள்—பெரிய தோள். 'என்று' என்றது என்று நினைத்து என்றவாறு. சயமடந்தை—வனதுர்க்கை. புனவேய்—செழித்தவேய். மிடைதல்—நெருங்குதல். பொருப்பு—மலை.

(வி - ரை) ஸ்வம் என்பது சொம் எனத் திரிந்தது. ஸ்வம் - உரிய பொருள். அபாயரகிதன் - அபாயமில்லாதவன்.

இப்பாடலில் தொடங்கிய கருத்து இப்பாடலிலேயே முற்றுப் பெற்றிருத் தலின் முத்தகச் செய்யுளாயிற்று. (ரு)

குளகச் செய்யுள்

சு. **குளகம் பலபாட் டொருவினை கொள்ளும்.**

எ - ன், குளகச் செய்யுளாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: குளகச் செய்யுளென்பது, பல பாட்டாய் ஒருவினை கொண்டு முடிவது எ - று.

'ஒருவினை' என்ற விதப்பான், ஒரு பெயர் கொண்டும் முற்றுப் பெறுமென்க.

இதற்கு இலக்கியம் வந்துழிக் காண்க.

(வி - ரை) குளகச் செய்யுட்களாகவே வந்த இலக்கியம் காண்டற் கரிதாகலின் இதற்கு இலக்கியம் வந்துழிக் காண்க என்றார். எனவே முத்தகச் செய்யுளாகவே வந்த இலக்கியம் பல உள என்பது பெற்றும். அவை எட்டுத்தொகை நூல்கள் முதலாயினவும், பிற்காலத்து வந்த பிள்ளைத் தமிழ், கலம்பகம் போல்வனவுமாம்.

குளகச் செய்யுளாகப் பெயர்கொண்டு முடிதற்குப் பின்வரும் பாடல்களை எடுத்துக் காட்டுவர்.

'முன்புலகம் ஏழினையுந் தாயதுவு மூதுணர்வோர்
இன்புறக்கங் காநதியை யீன்றதுவும்—நன்பரதன்
கண்டிருப்ப வைகியதுங் கான்போ யதமிரதம்
உண்டிருப்பா ருட்கொண் டதும்'

'வெந்த கரியதனை மீட்டுமக வாக்கியதும்
அந்தச் சிலையினைப்பெண் ணாக்கியதும்—செந்தமிழ்தேர்
நாவலன்பின் போந்ததுவும் நன்னீர்த் திருவரங்கக்
காவலவன் மாவலவன் கால்.'

இ - ள்: புனிதமான காவிரி சூழ்ந்த திருவரங்கம் என்னும் இடத்திற்குத் தலைவனும், குதிரையை நன்கு செலுத்தித் தேர் ஊர்தற்கு இசைந்தருள்பவனுமான திருமாலின் கால்கள், மாவலியினிடமாக மூன்றடி மண் வேண்டி உலகம் ஏழினையும் தாவி யளந்ததும், அருளுணர்ச்சி யுடையவர்கள் இன்புறுமாறு கங்கையை ஈன்றதுவும், நன்மைகள் அனைத்திற்கும் இருப்பிடமாகிய பரதன் நந்திக் கிராமத்தில் பதினான்கு ஆண்டுகள் வரை கண்டு இன்புறுமாறு வைகியதுவும், தந்தையின் ஏவலால் பதினான்கு ஆண்டுகள் காட்டிற்குச் சென்று வந்ததுவும், அமிழ்தத்தை யுண்பவரான தேவர்கள் எப்பொழுதும் நினைந்து வணங்குதற்குரியதுவும், உபமந்நிய முனிவரின் மனைவி வயிற்றிலிருந்து சாபத்தால் பிறந்த கரிக்கட்டையை அச்சாபம் நீங்கப் பிள்ளையாய் உருக்கொள்ளுமாறு செய்ததுவும், கணவனின் சாபத்தால் கல்லாய்க் கிடந்த அகலிகையைச் சாபம் நீங்கப் பெண்ணாய் உருக்கொளச் செய்ததுவும், செந்தமிழை நன்கு கற்றுத் தேர்ந்த திருமழிசை யாழ்வாரின் பொருட்டுக் காஞ்சியை விட்டு அகன்றதுவும் ஆன சிறப்பினையுடையன எ - று.

'மூதுணர்வோர் இன்புறக் கங்கா நதியை ஈன்றது' என்றது பிரமன் திருமாலின் திருவடிகளை நீராட்டி வழிபட, அந்நீரே கங்கையாயிற்று என்னும் கதையை உட்கொண்டதாகும்.

'வெந்த கரியதனை மீட்டு மகவாக்கியது' என்றது உபமந்நிய முனிவரின் மனைவிக்குப் பிறந்த மகவு சாபத்தால் கரிக்கட்டையாகப் பிறக்கப், பின்பு அது திருமாலின் திருவடிபட மகவாயிற்று என்னும் கதையை உட்கொண்டதாகும்.

'செந்தமிழ்தேர் நாவலன் பின் போந்தது' என்றது, காஞ்சியில் திருவெஃகாவில் பணிசெய்து கொண்டிருந்த ஒரு கிழவிக்குத் திருமழிசை ஆழ்வார் இளமைப் பருவம் வரச்செய்தனர் என்பது கேட்ட அரசன், தனக்கும் இளமைப் பருவம் வருமாறு செய்தருளத் தனது அலுவலாளரான கணிகண்ணன் மூலம் திருமழிசை ஆழ்வாரை வேண்ட, அதற்கு அவர் உடன்படாராக, அரசன் கணிகண்ணனையும் ஆழ்வாரையும் நாடு கடக்குமாறு ஆணைபிறப்பிக்க, அது பொழுது ஆழ்வார்,

> 'கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி
> மணிவண்ணா நீகிடக்க வேண்டா—துணிவுடைய
> செந்நாப் புலவன்யான் செல்கின்றேன் நீயுமுன்றன்
> பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்'

எனக் கூறிச் செல்லப் பெருமாளும் அங்ஙனமே சென்றார் என்பதை உட்கொண்டதாகும்.

இவ்விரு பாடல்களும் சேர்ந்து ஒரு கருத்தை நிறைவு செய்தலின் குளகமாயிற்று. (சு)

தொகைநிலைச் செய்யுள்

ரு. **தொகைநிலைச் செய்யுள் தோன்றக் கூறின்**
ஒருவர் உரைத்தவும் பல்லோர் பகர்ந்தவும்
பொருளிடங் காலந் தொழிலென நான்கினும்
பாட்டினும் அளவினுங் கூட்டிய வாகும்.

எ - ன், தொகைநிலைச் செய்யுளாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: தொகைநிலைச் செய்யுளென்பதனை விளங்கச் சொல்லின், ஒருவரால் உரைக்கப்பட்டுப் பல பாட்டாய் வருவனவும், பலரால் உரைக்கப்பட்டுப் பல பாட்டாய் வருவனவுமாம். அவை பொருளாற் றொகுத்த பெயர் பெற்றனவும், இடத்தாற் றொகுத்த பெயர் பெற்றனவும், காலத்தாற் றொகுத்த பெயர் பெற்றனவும், தொழிலாற் றொகுத்த பெயர் பெற்றனவும், பாட்டாற் றொகுத்த பெயர் பெற்றனவும், அளவாற் றொகுத்த பெயர் பெற்றனவுமாம் எ - று.

அவற்றுள் ஒருவரால் உரைக்கப்பட்டது—திருவள்ளுவப் பயன். பலரால் உரைக்கப்பட்டது—நெடுந்தொகை. இஃது எல்லாத் தொகைகளுக்கும் பொதுவிலக்கணம். பொருளால் தொகுத்தது—புறநானூறு. இடத்தால் தொகுத்தது—களவழி நாற்பது. காலத்தால் தொகுத்தது—கார்நாற்பது. தொழிலால் தொகுத்தது—ஐந்திணை. பாட்டால் தொகுத்தது—கலித்தொகை. அளவால் தொகுத்தது—குறுந்தொகை. இவை சிறப்பிலக்கணம்.

'கூட்டிய' என்ற விதப்பான், இவ்வறு வகையானும் அன்றிப் பிறவற்றால் பெயர்பெற்று வருவனவும் உளவேல் அவையுங் கொள்க.

(வி - ரை) திருவள்ளுவப் பயன் - திருக்குறள். நெடுந்தொகை - அகநானூறு. களவழி நாற்பது - போர்க்களத்தின் சிறப்பினை நாற்பது பாடல்களால் வருணித்துக் கூறும் நூல். ஐந்திணை - குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்ற ஐந்து திணைகளுக்கும் உரிய புணர்தல், பிரிதல், இருத்தல், ஊடல், இரங்கல் என்னும் ஐந்து ஒழுக்கங்களையும் விரித்துக் கூறும் நூல். ஐந்திணை யைம்பது, ஐந்திணை யெழுபது, திணைமொழி யைம்பது, திணைமாலை நூற்றைம்பது முதலிய நூல்கள் இதன்கண் அடங்கும். அகப்பொருள் நவலும் நூல்களில் ச முதல் அ அடி வரையிலுள்ள பாக்களின் தொகுப்பைக் குறுந்தொகை என்பர். அகநானூற்றில் கங முதல் ௩எ வரையுள்ள அடிகளால் இயன்ற பாக்கள் உளவாதல் நோக்கி அதனை நெடுந்தொகை என்றனர். (௬)

தொடர்நிலைச் செய்யுள்

௭. **பொருளினுஞ் சொல்லினும் இருவகை தொடர்நிலை.**

எ - ன், தொடர்நிலைச் செய்யுளாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: பொருளினால் தொடர்தலும், சொல்லினால் தொடர்தலுமென இருவகைப்படும் தொடர்நிலைச் செய்யுள் எ - று.

எனவே, பொருள் தொடர்நிலைச் செய்யுளும், சொற்றொடர்நிலைச் செய்யுளும் என இருவகைப்படும்.

'இரண்டு' என்னது **'வகை'** என்ற மிகையான், மூன்றாவது பொருளினாலுஞ் சொல்லினாலும் தொடர்தலும் உண்டெனக் கொள்க.

(வி - ரை) முற்செய்யுளோடு பிற்செய்யுளுக்குத் தொடர்புயாதுமின்றித் தனித்தனியே ஒரு பொருளுணர்த்தும் செய்யுட்கள் பல விரவித் தொகுக்கப்பட்ட நூலுக்குத் தொகைநிலைச் செய்யுள் என்றும், முற்செய்யுளோடு பிற்செய்யுளுக்குச் சொல்லினாலோ, அன்றிப் பொருளினாலோ தொடர்புடைய நூலுக்குத் தொடர்நிலைச் செய்யுள் என்றும் பெயர் கூறப்படும். பொருள் தொடர்நிலைச் செய்யுளுக்குப் பெரிய புராணம், கம்பராமாயணம் முதலியனவும், சொல் தொடர்நிலைச் செய்யுளுக்குத் திருச்சதகம், அந்தாதி, கலம்பகம் முதலியனவும் எடுத்துக் காட்டாம். திருவாசகத்திலுள்ள திருச்சதகத்திற்குச் சொல்லினாலன்றிப் பொருளினாலும் ஒன்றற்கொன்று தொடர்பு உளதாதலை சான்றோர் எடுத்துக் காட்டி விளக்கியுள்ளனர். இதனை நோக்குழி இந்நூல் சொற்பொருள் தொடர்நிலைச் செய்யுளுக்கும் எடுத்துக்காட்டாமாறு உணரலாம். (௬)

அதன் வகை

எ. பெருங்காப் பியமே காப்பிய மென்றாங்(கு)
இரண்டாய் இயலும் பொருள்தொடர் நிலையே.

எ - ன், அவற்றுள் பொருள் தொடர்நிலைச் செய்யுளைப் பகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: பெருங்காப்பியம் காப்பியம் என இரண்டு வகையாய் நடக்கும், பொருள் தொடர்நிலைச் செய்யுள் எ - று.

'பெருங்காப்பியம்' என்று ஆசிரியர் அடைசொற் புணர்த்தமையின், காப்பியம் என்பது சிறிதெனப் பெறப்பட்டது. இஃது உய்த்துக் கொண்டுணர்தல். இதனைச் சிறுகாப்பியம் எனினும் இழுக்காது. அல்லதூஉம் 'எடுத்த மொழிஇனஞ் செப்பலு முரித்தே' (தொல்-சொல்-௬௦) எனக் கொள்க, என்றார்க்குச் செப்பாமையும் உரித்தென்று கொள்ளாமோ வெனின், ஒன்றே இனமாயக்காற் கோடலும், பல இனமாயக்காற் கொள்ளாமையு மாம் ஆதலான், ஆண்டே கூறினாரென்பது.

அஃதேல் 'இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை, வழக்கா றல்ல செய்யு ளாறே' (தொல்-சொல்-௧௮) என்றதென்னாமோ வெனின், அவை செய்யுட்கே யுரியன சில சொல்லுதல் வகை; இஃது அன்னதன்றென்பது.

அஃதேல் கவியாற்பாடப்படுவன வெல்லாம் காப்பியமன்றோ? பொருள் தொடர்நிலையைக் காப்பியமென்றது என்னை? எனின், சேற்றுள் தோன்றுவன வெல்லாம் பங்கயமெனப் பெயர் பெறுமாயினும், அப்பெயர் தாமரை யொன்றன் மேற்றே ஆயினவாறு போல இப்பெயர் பொருள் தொடர்நிலைக்கே ஆயிற்று. ஒழிந்தனவும் ஒழிந்த தமக்கேற்ற பெயர் பெற்றன எனக் கொள்க.

'இரண்டு' என்றது 'இயலும்' என்ற மிகையால் பத்து வகைப்பட்ட நாடக சாதியும், கோவையும் பொருள் தொடர்நிலைப் பாற் படுமெனக் கொள்க.

பத்து வகைப்பட்ட நாடக சாதியாவன:—நாடகம், பிரகரணம், பாணம், பிரகசனம், டிமம், வியாயோகம், சமவா

காரம், வீதி, அங்கம், [1]ஹீயாமிருகம் என இவை. கோவை என்பன தமிழ் முத்தரையர் கோவை முதலாயின.

அல்லதூஉம், அவ்விலேசானே முற்கூறிய முத்தக முதல் மூன்றும், பின்னர்க்கூறிய பொருள் தொடர்நிலைச் செய்யுட்கு உறுப்பாய் வருதலுமுடையவெனக் கொள்க.

(வி - ரை) தொடர்நிலைச் செய்யுட்களுக்குக் காப்பியம் எனப் பெயர் கூறுதலபற்றி நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார் ஆகிய உரையாசிரியர் களிடையே கருத்து வேறுபாடு நிலவுகிறது. அவை வருமாறு:—

நச்சினார்க்கினியர்: 'மூத்த நூல்களிற் காப்பியம் என்னும் வடமொழியால் தொடர்நிலைச் செய்யுட்குப் பெயரின்மையும், இதற்குப் பின்பு கூறிய நூல்கள் இதற்கு விதியன்மையும் உணர்க. (சிந்தாமணி — உரை)

அடியார்க்கு நல்லார்: முந்து நூல்களிற் காப்பியம் என்னும் வடமொழிப் பெயா இன்றேனும் ஆசிரியர், 'வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ, எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே' (தொல் - சொல் - சு0௪) என்றா; 'ஆகும்மே' என்ற இலேசினான் உய்த்துணாற்பாலதனை, மாணாக்கன் ஐயந்தீர்தற்கன்றே பின்னும 'சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்' (சொல் - சு0௫) என்றா எனக் கொள்க; அன்றியும் பெரியதனைப் பெருங் காப்பியம் என்றே கூறி மறுக்க வேண்டுதலானும், சான்றோர் செய்யுட்களி லும் 'கூத்தியர் இருக்கையும் சுற்றியதாகக், காப்பிய வாசனை கலந்தவை சொல்லி' (பெருங : ௪.ந : ௪௯-௨) என........உதயணன் கதையுளளும், 'கருதுவ தங்கொன் றுண்டோ காப்பியக் கவிகள் காம, எரியெழ விகற்பித் திட்டார' (௧௫அ௫) எனச் சிந்தாமணியுள்ளும, 'நாடகக் காப்பியம் நன்னூல் நுனிப் போர்' (௧௯ - அ௦) என மணிமேகலையுள்ளும், பிறவற்றுள்ளும் கூறின மையானும், சொற்றொடர்நிலை பொருட்டொடர்நிலை என்னும் தொடர்நிலைச் செய்யுட்கும் காப்பியம் என்று பெயர் கூறுதலும் ஆசிரியா கருத்தெனஉணர்க (சிலம்பு — உரைப்பாயிரம்)

அடியார்க்கு நல்லார் காட்டும் மேற்கோள் பகுதிகள், வடமொழிக் காப்பி யங்களையே குறித்தலானும், தொல்காப்பியத்தில் காப்பிய இலக்கணமோ, சங்க இலக்கியங்களில் காப்பியம் என்ற பெயரால் நூல்களோ காணப்படாமை யானும் நச்சினார்க்கினியர் கூறும் கருத்தே வலியுடைத்தாம்.

பெருங்காப்பியம், காப்பியம் என்ற இரு சொற்களுள் முன்னையது அடைமொழியுடனும் பின்னையது அடைமொழியின்றியும் கூறப்பட்டுள்ளது. எனினும் முன்னையதைப் பெருங்காப்பியம் என்ற அடைமொழியுடன் கூறி யிருப்பதால், பின்னையது சிறு காப்பியம் என அறியப்படும் என்கின்றார் உரையாசிரியர். அதற்கு அவா கூறும் காரணம் இரண்டு. (௧) உய்த்துக் கொண்டுணர்தல் என்பது:—ஒன்றனைக் கூறிய வழி அதனாலேயே பிறி தொன்றையும் உளதாக நுனித்தறிவதாம். பெருங்காப்பியம், காப்பியம் என்ற இரு சொற்களில் முன்னையதைப் பெரிய என அடைமொழி கொடுத்துக் கூறியதனால், அடுத்துள்ள காப்பியம் சிறிது என உணர்தலின் இது உய்த்துணர்வதாம். (௨) எடுத்த மொழி இனஞ் செப்பலும் உரித்தே

1. 'ஈஹா ம்ருகம்' என்பதும் பாடம்.

என்பது:— இனமாகிய பொருட்கண் ஒன்றனை எடுத்துக் கூறியவழி அச் சொல், தன் பொருட்கு இனமாகிய பொருளைக் குறிப்பால் உணர்த்துதலும் உரித்து என்பது இதன் பொருளாகும். பெருங்காப்பியமும் காப்பியம் என்ற இனப்பொருள்கள் இரண்டனுள், ஒன்றைப் பெருங்காப்பியம் என எடுத்துக் கூறவே, அச்சொல் தனக்கினமாய காப்பியத்தைச் சிறு காப்பியம் எனக் குறிப்பால் உணர்த்தியது என்பது கருத்து.

இவ்விரு காரணங்களுள் முதற்காரணத்தை ஏற்றுக்கொண்டவர்கள், இரண்டாவது காரணத்தில் ஒரு தடையை எழுப்ப அதற்கும் விடை தரு கின்றார் உரையாசிரியர். தடை:- 'எடுத்த மொழி இனஞ் செப்பலும் உரித்தே' என்னும் நூற்பாவில் உள்ள உம்மையை எதிர் மறையாகக்கொண்டு செப்பாமை யும் உரித்தென்று கொண்டால், பெருங்காப்பியம் என்ற அடைமொழியால், அடுத்துள்ள காப்பியம் சிறுகாப்பியம் எனல் பெறப்படாதன்றோ என்பது தடை. அதற்கு அவர் தரும் விடை:- எடுத்த மொழிகளுக்கு இனம் ஒன்றாயக்கால் அவை இனம் செப்பும்; பலவாயக்கால் இனம் செப்பா என்பது. எனவே பெருங்காப்பியத்திற்கு இனமாகக் காப்பியம் என்ற ஒன்றே கூறப்பட்டிருத்த லின் அது இனம் செப்புவதாம் என்பது.

காவ்யம் என்பது காப்பியம் எனத் திரிந்தது; அது கவியாற் செய்யப்பட் டது எனப்பொருள்படும். எனவே கவிஞர்களால் பாடப்படுவன வெல்லாம் காவியம் எனப்பெயர் பெறவேண்டி யிருக்க, இப்பொருள் தொடர்நிலைச் செய்யுளை மட்டும் காப்பியம் என்றல் பொருந்துமா? எனத் தாமே வினா எழுப் பிக்கொண்டு அதற்கு விடையும் கூறுகின்றார் உரையாசிரியர். பங்கஜம் என்பது பங்கயம் எனத் திரிந்தது; (பங்கம்-சேறு, ஜம்-தோன்றுவது) அது சேற்றுள் தோன்றுவது எனப் பொருள்படும். எனவே, சேற்றுள் தோன்றுவன வெல்லாம் பங்கயம் என்றே பெயர் பெறவேண்டும். ஆனால் அங்ஙனம் வழங் காது அப்பெயரைத் தாமரை யொன்றற்கே வழங்குவதுபோல இதனையும் கொள்ள வேண்டும் என்பது அவர் தரும் விடையாகும். எனவே காப்பியம், பங்கயம் என்பன வெல்லாம் காரண இடுகுறிப்பெயர் என்பது போதரும்.

'ஒழிந்தன' என்றது முத்தகம் முதலாக முற்கூறிய மூன்றையுமாம். மூக் தகம் என்பது முத்தகம் எனத் திரிந்து நின்றது. அது பிறிதொரு செய்யுளை அவாவாது தன்னில்தான் முடிந்துவிடுவது எனப்பொருள்படும். குளகம்-ஒரு செய்யுளில் ஒருபொருள் முடியாது பல செய்யுட்களால் ஒரு பொருள் முற்றுப் பெறுவது. இவை யிரண்டும் வடமொழிப் பெயர். தொகைநிலை - பல செய் யுட்கள் தொகுக்கப் பட்டது. தொடர் நிலை — பொருளினாலோ அன்றிச் சொல்லினாலோ தம்முள் தொடர்ந்து வருவது. இவையிரண்டும் தமிழ்ப் பெயர்.

மிகை — இன்றியமையாத தல்லாத சொல். இந்நூற்பாவில் 'இயலும்' என்ற சொல் வேண்டுவதன்று. அஃது இன்றியும் பொருள் நன்கு விளங்கும். அங்ஙனமாக அதனைக் கூறியது மிகையாம். இம்மிகையால் கொள்ளப்படும் பொருள் இரண்டு. (க) பத்து வகைப்பட்ட நாடக சாதியும், கோவையும் பொருள் தொடர்நிலைச் செய்யுளில் அடங்கும். (உ) முத்தகம், குளகம், தொகை நிலை என்ற மூவகைச் செய்யுட்களும் பொருள் தொடர்நிலைச் செய்யுட்கு உறுப்பாய் வரும் என்பது. (எனவே பொருள் தொடர்நிலைச் செய்யுட்களில் ஆங்காங்கெல்லாம் முத்தகமாகவும், குளகமாகவும் செய்யுட்கள் வரும் என்பதாம்.)

பத்து வகைப்பட்ட நாடக சாதி:—

௧. நாடகம்:— தற்புகழ்ச்சியற்ற நற்பண்பு வாய்ந்த தலைவனை நாடகத் தலைவனாகக் கொண்டிருக்கும். வீரம் அல்லது இன்பச் சுவை தழுவியதாய், ஏனைச் சுவைகளையும் ஆங்காங்கு உடையதாய், முகசந்தி, பிரதி முகசந்தி, கர்ப்பசந்தி, விமர்சசந்தி, நிர்வகனசந்தி ஆகிய ஐந்து சந்திகளையும் உடையதாய் ஐந்து அங்கங்கள் முதல் பத்து அங்கங்கள் வரையில் உள்ளதாய் அமைந்து விளங்குவது இதன் இலக்கணமாகும். இதில் கூறப்படும் கதை புராணத்தில் உள்ளதாகவே இருக்கும்.

௨. பிரகரணம் :— கற்பனைக் கதையாக இருக்கும். வீரம் குறைந்தவனை நாடகத் தலைவனாகக் கொண்டிருக்கும். இன்பச் சுவை மிகுதியாக இருக்கும். ஏனைய இலக்கணங்கள் எல்லாம் முன்னாக் கூறிய நாடக இலக்கணத்தை ஒத்திருக்கும்.

௩. பாணம்:— கற்பனைக் கதையாக இருக்கும். தீயவனையும், தாமற்றவனையும் நாடகத் தலைவனாகக் கொண்டிருக்கும். இன்பச்சுவை, வீரச்சுவை ஆகிய இரண்டும் கலந்திருக்கும். இதில் அமைந்த பேச்சுக்கள் உலகியல் நடையில் இருக்கும். முகசந்தி, நிர்வகனசந்தி ஆகிய இரு சந்திகளை மட்டும் கொண்டு ஓரங்க நாடகமாக இருக்கும்.

௪. பிரகசனம்:— ஒழுக்கமற்றவனை நாடகத் தலைவனாகக் கொண்டு நகைச்சுவை நிரம்பப் பெற்று இருக்கும். ஏனைய இலக்கணங்கள் மேற்கூறிய பாணத்தை ஒத்து விளங்கும்.

௫. டிமம்:— உலகறிந்த கதையாக இருக்கும். தேவன், கந்தருவன் அசுரன் முதலியவர்களுள் ஒருவனைத் தலைவனாகக் கொண்டு விளங்கும். வெகுளிச் சுவை மிக்கும், ஏனைய வீர, இன்பச்சுவைகள் ஆங்காங்கு இடம் பெற்றும் விளங்கும். மாயை, இந்திரசாலம், போர் ஆகிய நிகழ்ச்சிகள் இடம பெற்றிருக்கும். நான்கு அங்கங்களையும் நான்கு சந்திகளையும் கொண்டு விளங்கும்.

௬. வியாயோகம்:— இதில் கூறப்படுவதும் உலகறிந்த கதையாக இருக்கும். வீரச்சுவை மிக்கிருக்கும். ஒரே நாளில் நடந்த கதையாயும், அதுவும் போர்ப்பற்றியதாயும் இருக்கும்.

௭. சமவாகாரம்:— தேவர்களையும் அசுரர்களையும் நாடகத் தலைவனாகக் கொண்டிருக்கும். வீரச்சுவை மிகுதியாக இருக்கும். ஒரே நாளில் நடந்த கதையை மூன்று யாமமாகப் பிரித்து, மூன்று அங்கங்களில் விவரிக்கப்பட்டிருக்கும்.

௮. வீதி — தீயவனைத் தலைவனாகக் கொண்டிருக்கும். கற்பனைக் கதையாக இருக்கும். குறிப்பாக இன்பச்சுவை இருக்கும். இரண்டு சந்திகளையுடைய ஓரங்க நாடகமாக இருக்கும்.

௯. அங்கம்:— உலக மக்களில் ஒருவனைத் தலைவனாகக் கொண்டிருக்கும். உலகறிந்த கதையாகவும் இருக்கும். கருணைச் சுவை மிகுதியாக இருக்கும். பெண்களுடைய வாய்ச் சண்டை, விளையாட்டு ஆகிய இவை இடம் பெற்றிருக்கும்.

௧0. **ஹீயாமிருகம்:—** புராணத்தில் உள்ளதும், கற்பனையுமான கதையாக இருக்கும். நாடகத் தலைவன் தேவனாகவும், துணைத் தலைவன் மனிதனாகவும் இருப்பர். மகளிரை விரும்பி, அவர்களைக் களவினால் கொண்டு வரும் நிகழ்ச்சிகள், போர்கள் முதலியன இடம் பெற்றிருக்கும். எனினும் கொலை நிகழ்ச்சி யற்றிருக்கும். உரையாடல்கள் தகுதியற்றனவா யிருக்கும்.

தமிழ் முத்தரையர் கோவை:— இத்தகைய நூலொன்று பெயரளவி லேயே அறியப்படுகின்றது. யாப்பருங்கல விருத்தியுரையால் இது சந்தத் தால் அமைந்த நூல் என்று மட்டும் அறிய முடிகின்றது. (கூரு-ஆம் நூற்பா உரை.) (எ)

பெருங்காப்பியம்

அ. அவற்றுள்

பெருங்காப் பியநிலை பேசுங் காலை
வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றினொன்(று)
ஏற்புடைத் தாகி முன்வர வியன்று
நாற்பொருள் பயக்கும் நடைநெறித் தாகித்
தன்னிகர் இல்லாத் தலைவனை யுடைத்தாய்
மலைகடல் நாடு வளநகர் பருவம்
இருசுடர்த் தோற்றமென்(று) இனையன புனைந்து
நன்மணம் புணர்த்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழில் நுகர்தல் புனல்விளை யாடல்
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியிற் புலத்தல் கலவியிற் களித்தலென்(று)
இன்னன புனைந்த நன்னடைத் தாகி
மந்திரந் தூது செலவிகல் வென்றி
சந்தியில் தொடர்ந்து சருக்கம் இலம்பகம்
பரிச்சேதம் என்னும் பான்மையின் விளங்கி
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றிய தென்ப.

எ - ன், பெருங்காப்பியம் என்னும் பொருள் தொடர்நிலைச் செய்யுளாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: 'பெருங்காப்பியநிலை....வியன்று' என்பது பெருங் காப்பியத்தின் இலக்கணத்தைச் சொல்லுமிடத்து வாழ்த்துதல், தெய்வம் வணங்குதல், உரைக்கும் பொருள் உணர்த்தலென்னும் மூன்றனுள் ஒன்று முன்வர நடப்பது எ - று.

'[1]ஏற்புடைத்தாகி' என்றதனான் அவற்றுள் ஒன்றேயன்றி, இரண்டுவரினும், மூன்றுவரினும் இழுக்கன்றென்பது. '**வாழ்த்து**' என்பது ஓர் அலங்காரம்; அது [2]முன்னர் உரைக்கப்படும்.

'நாற்பொருள்....நெறித்தாகி' என்பது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினையும் பயக்கும் ஒழுகலாறு உடைத்தாய் எ - று.

1. 'வருபொருள்' என்றதனான் என்பதும் பாடம்.
2. அஎ-ஆம் நூற்பா.

'தன்னிகரில்லா . . யுடைத்தாய்' என்பது தன்னோடு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதானை நாயகனாக வுடைத்தாய் எ - று.

'பல்பொருட் கேற்பின் நல்லது கோடல்' என்பதனால், தன்னில் உயர்ந்தார் இல்லாதானென்று கொள்ளப்பட்டதாயிற்று.

'மலைகடல் . . . . புனைந்து' என்பது மலைவருணனையும், கடல் வருணனையும், நாட்டு வருணனையும், நகர வருணனையும், இருது வருணனையும், ஆதித்தோதய வருணனையும், சந்திரோதய வருணனையும் என்று இன்னோரன்ன வருணனை யுடைத்தாய் எ-று.

'நன்மணம் . . . . நன்னடைத்தாகி' என்பது இன்னோரன்ன செய்கைச் சிறப்புப் புகழ்ந்து தொடுக்கப்பட்ட நல்லொழுக்க முடைத்தாய் எ - று.

[1]'இன்னன' என்றதனால் பல வருணனைகளையு முடைத்தாய் வருவதெனக் கொள்க.

'மந்திரம் . . . . தொடர்ந்து' என்பது மந்திரமிருத்தலும், தூதுவிடுத்தலும், மேற்செலவும், செருச் செய்கையும், வென்றி யெய்தலும் சந்திபோலத் தொடரப்பட்டு எ - று.

'சந்தி' என்பது நாடகத்தே நிலைபெறுதலான், ஈண்டு அது போலவெனக் கூறப்பட்டது. [2]அஃதாவது வித்தல், விளைத்தல், விளைவு துய்த்தல் என்பது போல்வது.

'சருக்கம் . . . . விளங்கி' என்பது சருக்கம் என்றுதல், இலம்பகம் என்றுதல், பரிச்சேதம் என்றுதல் பாகுபட்டு விளங்கி எ - று.

'நெருங்கிய . . . . விரும்ப' என்பது எட்டுவகைப் பட்ட சுவையும், மெய்ப்பாட்டுக் குறிப்பும் இடைவிடாமற் கேட்போர் மதிக்க எ - று.

'கற்றோர் . . . . தென்ப' என்பது இவ்வகைத்தாகப் புலவராற் புனையப்படுந் தன்மையை யுடைத்தென்பர் ஆசிரியர் எ - று.

'நாற்பொருள் பயக்கும் நடை' என்பது அகமும், அகப்புறமும், புறமும், புறப்புறமும் பயந்தநடை யென்றுமாம்.

(வி - ரை) தன்னிகரில்லாத் தலைமை யுடையோன் எனில், அவனுக்கு அழகு, இளமை, புகழ், ஆண்மை, ஆக்கம, ஊக்கம், அருள், பிரதாபம், கொடை, குலம் முதலிய குணங்கள் இருக்கவேண்டும் என்பர் சாகித்யதர்ப்பணத்தின் நூலாசிரியர். இவையனைத்தும் ஒருங்கு இருப்பதே அரிது; அதிலும் அவனுக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாது இருத்தல் அதனினும் அரிது. அங்ஙனம் இருப்பினும் 'அரியகற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால், இன்மை அரிதே வெளிறு' என்பதனாலும், 'பலநல்ல கற்றக் கடைத்தும் மனநல்லர், ஆகுதல் மாணார்க் கரிது' என்பதனாலும், 'அரம் போலும் கூர்மைய ரேனும் மரம் போல்வர், மக்கட்பண் பில்லா தவர்' என்பதனாலும் ஓரிரு தீக்குணமேனும் ஓரோ வழி இல்லாதிருத்தல் அரிது. ஆதலின் தன்னிகரில்லாத் தலைவனை ஒரு காப்பியம் தலைவனாகக் கொண்டியங்க வேண்டுமெனில், அது இறை

1. 'நன்னடைத்தாகி' என்றதனான் என்பதும் பாடம்.

2. 'அவையாவன, வித்து, முளை தழைத்தல், விளைவு துய்த்தல் என இவை போல்வன' என்பதும் பாடம்.

வனைக் கொண்டியங்கினன்றி இயலாதாம். இதுபற்றியே திருவிளையாடல் புராண ஆசிரியரான பரஞ்சோதியார், தன்னிகரில்லாத் தலைமையோனைப் பெற்றியங்க வேண்டும் என்னும் இலக்கணத்திற்கு எடுத்துக் காட்டாக விளங்குவது தமது இலக்கியமே என்றும், ஏனோர் தம் இலக்கியமெல்லாம் அவ்விலக்கணத்திற்கு உபசார வழக்காகுமே யன்றி உண்மை வழக்காகாது என்றும் வீறு தோன்றக் கூறுவர்.

> 'தன்னிக ருயர்ச்சி யில்லான் காப்பியத் 'தலைவ னாக
> முன்னவர் மொழிந்த தேனோர் தமக்கெலா முகம னன்றே
> அன்னது தனதே யாகும் அண்ணலே பாண்டி வேந்தாய்
> இந்நகர்க் கரச னவான் இக்கவிக் கிறைவ னவான்'

மந்திரம் — அமைச்சர்களுடன் ஆய்வு நிகழ்த்துவது.

சந்தி — சந்தி ஐந்து வகைப்படும்; அவை முகம், பிரதி முகம், கருப்பம், விளைவு, துய்த்தல் என இவை. இவற்றுள் முகமாவது, எழுவகைப்பட்ட உழவினாற் சமைக்கப்பட்ட பூழியுள் இட்ட வித்துப் பருவஞ் செய்து முளைத்து முடிவது போல்வது. பிரதிமுகமாவது, அங்ஙனம் முளைத்தல் முதலாய் இலை தோன்றி நாற்றாய் முடிவது போல்வது. கருப்பமாவது, அந்நாற்று முதலாய்க் கருவிருந்து பெருகித் தன்னுட் பொருள் பொதிந்து கருப்பம் முற்றி நிற்பது போல்வது. விளைவாவது, கருப்பம் முதலாய் விரிந்து கதிர் திரண்டிட்டுக் காய் தாழ்ந்து முற்றி விளைந்து முடிவது போல்வது. துய்த்தலாவது. விளையப் பட்ட பொருளை அறுத்துப் போரிட்டுக் கடாவிட்டுத் தூற்றிப் பொலி செய்து கொண்டு போய் உண்டு மகிழ்வது போல்வது. இவை ஐந்து சந்தியும் நாட்டியக் கட்டுரை.' (சிலம்பு — ௩ : க௩ - அடியார்க்கு நல்லார்)

சருக்கம் என்ற பாகுபாட்டில் அமைக்கப்பட்டது பாரதம் முதலியன. இலம்பகம் என்ற பாகுபாட்டில் அமைக்கப்பட்டது சிந்தாமணி முதலியன. பரிச்சேதம் என்ற பாகுபாட்டில் அமைந்த இலக்கியம் இது பொழுது காணக் கிடைத்திலது.

சுவை எட்டு:— நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்பன. இவ்வெட்டும் சுவையணியில் பின்னர் விளக்கப்படும்.

அகம் - ஐந்திணை. அகப்புறம் - கைக்கிளை, பெருந்திணை. புறம்-வெட்சி முதல் வாகையீறாக உள்ளன. புறப்புறம்-பாடாண், பொதுவியல் என்பன. (அ)

அதற்குப் புறனடை

௯. கூறிய வுறுப்பிற் சிலகுறைந் தியலினும்
வேறுபா டின்றென விளம்பினர் புலவர்.

எ - ன், மேலதற்கு ஒரு புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: மேற்சொல்லப்பட்ட உறுப்பிற் சில குறைந்து வரினும், பெருங்காப்பியத்திற் பிறிதன்றென விளம்பினர் அறிவுடையோர் எ - று. (௯)

சிறு காப்பியம்

௧௦. அறமுதல் நான்கினுங் குறைபா டுடையது
காப்பிய மென்று கருதப் படுமே.

எ - ன், காப்பியம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினுள் ஒன்றேனும் பலவேனும் குறைந்து வருவது காப்பியமென்று கருதப்படுவது எ - று.

இதனால் 'கூறிய வுறுப்பிற் சில குறைந்தியலும்' என்பதற்கு அறமுதல் நான்கு மொழித்து அல்லாத வுறுப்பிற் சில குறைவதே பெருங் காப்பியமென்று கொள்ளப்படும். இது '**வந்தது கொண்டு வாராதது முடித்தல்**' என்பது.

(வி - ரை) வந்தது கொண்டு வாராதது முடித்தல் — பின்பு ஓரிடத்து வந்தது கொண்டு, முன்பு வாராததோர் பொருளை அறிய வைப்பது.

அ — ஆம் நூற்பாவில் பெருங்காப்பியத்தின் இலக்கணத்தைக் கூறிய ஆசிரியர், கூ-ஆம் நூற்பாவில் அவ்விலக்கணங்களுள் சில குறைந்து வரினும் பெருங்காப்பியமென்றே கருத வேண்டும் என்றார். ஆனால் எவ்விலக்கணங்கள் குறையலாம் என்றாரில்லை. இந்நூற்பாவில் சிறுகாப்பியமென்பது அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய பொருள்களில் குறைபாடுடையதாம் என்றனர். சிறு காப்பியத்தின் இலக்கணமாய இவ்விலக்கணத்தைக் கொண்டு, முன்னர்ப் பெருங்காப்பியத்தில் எவை குறைந்து வரினும் இழுக்கில்லை என்பது விளக்கமாகின்றது. அறமுதல் நான்கும் அல்லாத ஏனையிலக்கணங்களில் குறைந்து வரினும் பெருங்காப்பியம் என்று கருதப்படும் என்பதும், ஏனைய இலக்கணங்கள் எல்லாம் நிரம்பி, ஆனால் அறமுதல் நான்கனுள் ஏதேனும் ஒன்று குறையினும் அது சிறுகாப்பியம் என்று கருதப்படும் என்பதும் விளங்குதலின் இது அவ்வுத்தி யாயிற்று.

இவ்வகையால் பிள்ளைத்தமிழ், உலா, பரணி முதலியன சிறுகாப்பியமாதல் நன்கு தெளியலாம். (க0)

அதன் இலக்கணம்

கக. **அவைதாம்**
ஒருதிறப் பாட்டினும் பலதிறப் பாட்டினும்
உரையும் பாடையும் விரவியும் வருமே.

எ - ன், அக்காப்பியங்கட்கு எய்தியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: மேற்கூறிய பெருங்காப்பியமும் காப்பியமும், ஒருவகைச் செய்யுளானும் பலவகைச் செய்யுளானும், உரை விரவியும் பிறபாடை விரவியும் வருதலுடைய எ - று.

ஈண்டுச் 'செய்யுள்' என்பது பாவும் இனமும் நோக்கியது. '**விரவியும் வரும்**' என்ற உம்மையான், விரவாது செய்யுளான் வருவதே சிறப்புடைத்தெனக் கொள்க.

(வி - ரை) பாட்டு — அடி, தொடை முதலிய உறுப்புக்கள் அமைந்து ஓசை பொருந்த வருவது. அது வெண்பா முதலிய பாக்களாகவும், தாழிசை, துறை, விருத்தம் ஆகிய இனங்களாகவும் வரும். உரை — செய்யுள் போல அடி தொடை முதலிய உறுப்புக்களின்றி நூற்பா போன்ற அமைப்பில் வருவது. நூற்பாவையும் செய்யுள் என்பர் இலக்கண விளக்கப் பாட்டியலார். பாடை— பிற மொழி. இங்ஙனம் பிறமொழி விரவிவரும் காப்பியம் தமிழில் ஏதும்

இல்லை. 'வழக்கத்தில் கதை சொல்லுவது போல ஓசை முதலிய வின்றித் தொடர் மொழிகளாக வருவனவே பாடை' என்பர் திரு. சுன்னாகம் குமாரசாமிப் புலவர் அவர்கள். பாடை — திசைச் சொல் என்பர் மாறனலங்கார வுரையாசிரியர்.

ஒருதிறப்பாட்டால் வந்த காப்பியம் நளவெண்பா, பாரத வெண்பா முதலியன. பலதிறப்பாட்டால் வந்தன பெரிய புராணம், கம்பராமாயணம் முதலியன. உரையும்பாட்டும் விரவிவந்தன தகடூர் யாத்திரை முதலியன. (கக)

சொற்றொடர்நிலைச் செய்யுள்

கஉ. செய்யுளந் தாதி சொற்றொடர் நிலையே.

எ - ன், சொற்றொடர்நிலைச் செய்யுள் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: ஒரு செய்யுளின் இறுதி அடுத்த மற்றொரு செய்யுட்கு ஆதியாகத் தொடுப்பது, சொற்றொடர்நிலைச் செய்யுளாம் எ - று.

அவை கலம்பகம் முதலியன. அல்லதூஉம், ஒரு செய்யுளுள்ளே ஓரடி யிறுதி மற்றையடிக்கு முதலாகத் தொடுப்பனவுமுள; அவை [1]முன்னர் உரைக்கப்படும்.

இவற்றிற்கு இலக்கியம் வந்துழிக் காண்க. ஈண்டுரைப்பிற் பெருகும். (கஉ)

செய்யுள் நெறி

கங. **மெய்பெறு மரபின் விரித்த செய்யுட்கு**
வைதருப் பம்மே கௌடம் என்றாங்(கு)
எய்திய நெறிதாம் இருவகைப் படுமே.

எ - ன், மேற்கூறிய செய்யுட்களின் நெறிக்கூறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: பொருள் பெறும் இலக்கண நெறியான் விரித்தோதப்பட்ட செய்யுள் அனைத்திற்கும் வைதருப்பமும், கௌடமும் எனப் பொருந்திய நெறி இருவகைப்படும் எ - று.

அஃதேல், மேற்கூறிய செய்யுளனைத்தும் 'இருவகை நெறிப்படும்' என்றமையின், ஒன்றற்கே இருவகை நெறியும் உளவென்று கொள்ளற்க; வைதருப்ப நெறியான் வருவனவுமுள, கௌட நெறியான் வருவனவுமுள மேற்கூறிய செய்யுளனைத்தும் எனக் கொள்க.

(வி - ரை) நெறி — பாடல்களில் சொற்களை அமைக்கும் போக்கு. இங்ஙனம் சொற்களை யமைக்கும் நெறியில் ஒவ்வொரு நாட்டாரும் ஒவ்வொரு முறையில் வேறுபடுவர்; தத்தம் நெறியே சுவையுடையதெனவும் கூறுவர். அந் நெறிகளில் விதர்ப்ப நாட்டாரும் கௌட நாட்டாரும் விரும்பும் நெறிகள் மட்டும் ஈண்டுக் கூறப்படுகின்றன. (கங)

---

1. சொல்லணியியல் — ௫-ஆம் நூற்பா உரையில் காண்க.

வைதருப்ப நெறி

கச. **செறிவே தெளிவே சமநிலை யின்பம்**
ஒழுகிசை யுதாரம் உய்த்தலில் பொருண்மை
காந்தம் வலியே சமாதி யென்றாங்(கு)
ஆய்ந்த ஈரைங் குணனும் உயிரா
வாய்ந்த வென்ப வைதருப் பம்மே.

எ - ன், வைத்த முறையானே வைதருப்ப நெறியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: செறிவு முதல் சமாதி யீறாகக் கூறப்பட்ட பத்துக் குணனும் உயிராகப் புலப்படுவது, வைதருப்பநெறி எ - று.

'வாய்த்த' என்பது 'வாய்ந்த' என மெலிந்து நின்றது. 'உயிரா' என்பதனை உயிர்போல இன்றியமையாத எனவுங் கொள்க. (கச)

கௌட நெறி

கரு. **கௌட மென்பது கருதிய பத்தொடும்**
கூடா(து) இயலுங் கொள்கைத் தென்ப.

எ - ன், கௌட நெறியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: கௌட நெறியென்று சொல்லப்படுவது மேற்கூறித் துரைக்கப்பட்ட பத்துக் குணவலங்காரங்களோடுங் கூடாது நடக்கும் ஒழுகலாறுடையது எ - று.

'பத்தொடும் கூடாது' என்னும் முற்றும்மையை எச்சவும்மை யாக்கிச் சிலவற்றோடு கூடியும் வரும் எனக் கொள்க.

(வி - ரை) 'முற்றும்மை ஒரோவழி எச்சமும் ஆகும்' (நன் - சஉகூ) என்பதால் 'பத்தொடும் கூடாது' என்பதிலுள்ள முற்றும்மை எச்சப் பொருள் பட்டு, கௌட நெறியார் இப்பத்து நெறிகளில் சிலவற்றை ஏற்கவும் செய்வர் என்பது பெறப்படும்.

இப்பத்து நெறிகளுள் கௌட நெறியாரும் ஏற்கும் நெறிகள் ஐந்தாம். அவையாவன:— பொருள் காரணமான இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலிற் பொருண்மை, சமாதி என்பன. (கரு)

(க) செறிவு

கசு. **செறிவெனப் படுவது நெகிழிசை யின்மை.**

எ - ன், செறிவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: செறிவென்று சொல்லப்படுவது நெகிழ்ந்த இசை யின்றி வரத் தொடுப்பது எ - று.

எ - டு: *'சிலைவிலங்கு நீள்புருவஞ் சென்றொசிய நோக்கி*
முலைவிலங்கிற் றென்று முனிவாள் — மலைவிலங்கு
தார்மாலை மார்ப தனிமை பொறுக்குமோ
கார்மாலை கண்கூடும் போது'

இ - ள்: புணர்ச்சிக் கண்ணே நின்னுடைய மார்பஞ் செறிய முயங்குங்கால் முலை சிறிது விலங்கா நிற்ப, அதனை நோக்கிப் பொருளாய் விற்போல வளைந்துநீண்ட புருவமானது நெற்றிமிசை யேறி வளைய ஊடுந்தன்மையை யுடையாள்; மாறுபாடிலங்கிய

பலவகைப்பட்ட பூவாலாக்கப்பட்ட தாரினையும் மாலையினையும் உடைய மார்பினையுடையாய்! நீ வினைகருதிப் பிரியுங்கால் இவட்கு உண்டாகிய தனிமையால் வருந்துயரம் ஆற்றுந் தன்மையளோ? இருளோடு கூடிய மாலை வந்து சேருமிடத்து எ- று.

விலங்குதல் - வளைதல். சென்று ஒசிதல் - நெற்றிமீது ஏறி வளைதல். விலங்குதல் - விலக்குதல். முனிதல் - ஊடுதல். மலைவு- மாறுபாடு. இலங்குதல்-விளங்குதல். ஓ - வினு. கார்-இருள். மாலை - அந்திப்பொழுது. கண் - இடம். கூடுதல் - சேர்தல்.

'மலை விலங்கு தார்மாலை மார்ப' என்பதற்குத் தாரும், மாலையும் கிடக்கப்பட்ட பரப்பினையுடைத்தாகிய மலைபோன்ற மார்ப! எனினும் அமையும்.

இனி 'நெகிழிசை' என்பது வல்லினம் விரவாது ஓரினத்து எழுத்தானே நெகிழத் தொடுப்பது.

எ—டு: 'விரவலராய் வாழ்வாரை வெல்வாய் ஒழிவாய்
இரவுலவா வேலை யொலியே — வரவொழிவாய்
ஆயர்வா யேயரிவை யாருயிரை யீராவோ
ஆயர்வாய் வேயோ வழல்'

இ - ள்: தமியராய் உயிரோடு கூடி வாழ்வாரை வருத்துவாய், வருத்தா தொழிவாய்; இரவின்கண்ணும் குறையாதே அரவஞ் செய்கின்ற கடலொலியே! இவளுடைய ஆருயிரைத் தாயராயுள்ளாருடைய வாயிலுண்டாகிய வசையே அறுக்குந் தன்மைத் தாயிருக்க, அதன் மேலும் இடைக் குலமாக்கள் வாயிலுண்டாகிய வேய்விளை யிசையும் அழலைக் கொடா நின்றது: அதனால் இப்பொழுது இவளைக் கருதி வருகின்ற வரவை யொழிவாயாக எ - று.

விரவலர் - பிரிந்தார். வாழ்வார் - இருந்தார். வெல்லுதல் - வருத்துதல். உலத்தல் - குறைதல். ஆயர் - தாயர். ஈர்தல் - அறுத்தல். வேய் - குழல். ஓ - இரக்கக் குறிப்பு.

இவ்வாறு ஓரினத்து எழுத்தால் தொடுக்கப்படுவதொரு சுவை நோக்கிக் கௌட நெறியார் விரும்புவர்[1].

(வி - ரை) செறிவு — பாடலில் நெகிழ்ந்த ஓசையின்றி சொற்கள் ஒன்றோடொன்று இறுகச் செறிந்து வருவது.

'சிலை விலங்கு' என்ற பாடல், பிரிவுணர்த்திய தலைவனுக்குத் தோழி தலைவியது ஆற்றாமை கூறிச் செலவழுங்குவித்ததாம். இப்பாடலில் நெகிழ்ந்த ஓசையின்றிச் செறிவான ஓசை யமைந்திருத்தலின் செறிவாயிற்று.

'இனி, நெகிழிசை என்பது' என்ற விடத்தில் 'இனிச் செறிவென்பது' என்றிருப்பின் பொருத்தமாகும். கௌட நெறியார், வல்லினம் இல்லாததாய்ப் பெரும்பாலும் ஓரினமாயும், வந்த வெழுத்தே பின்னும் வருவதாயும் வருவதே செறிவென்பர்.

---

1. இதனையடுத்து, 'இஃதிரண்டு நெறியார்க்கு மொக்கும்' என்ற வாக்கியம் சில பதிப்புக்களில் உள்ளது. ஆயினும் அது பொருந்தாது.

'விரவலராய்' என்ற பாடல் பிரிவாற்ருத தலைவியின் ஆற்ருமைக் கிரங்கிய தோழி கடலை நோக்கிக் கூறியதாகும். இதன்கண் இடையினமாகிய ஓரினமே வந்தும், வகர வெழுத்துப் பின்னும் பின்னும் வந்தும் இருத்தல் பற்றிக் கௌடர் விரும்புவர். (கசு)

(உ) தெளிவு

கஎ. **தெளிவெனப் படுவது பொருள்புலப் பாடே.**

எ - ன், தெளிவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: தெளிவென்று சொல்லப்படுவது கவியாற் கருதப்பட்ட பொருள், கேட்போர்க்கு உளங்கொண்டு விளங்கத் தோன்றுவது எ - று.

எ - டு: 'பிறர்க்கின்ன முற்பகல் செய்யின் தமக்கின்ன
பிற்பகல் தாமே வரும்' (குறள் — நகக)

இவ்வாறு தொடுத்தால் கவியருமையும் நோக்குடைப் பொருள் கோளுமின்றித் தோன்றுமென இந்நெறி விரும்பாது,

'பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று' (குறள் — உகசு)

எனத் தொடுப்பனவே சுவையுடைய வென்று சொல்லுவர் கௌடர்.

(வி - ரை) 'பிறர்க்கின்ன' என்பதன் பொருள்:— பிறர்க்கு இன்னாதவற்றை ஒருவன் ஒரு பகலின் முற்பகுதியிற் செய்தால், அத்தீமைகள் அவனுக்கு அப்பகலின் பிற்பகுதியிலேயே தாமாக வந்துவிடும் என்பதாம்.

இங்ஙனம் பாடலைப் படித்த அளவிலேயே பொருள் எளிதில் விளங்குதலின் இது தெளிவாயிற்று.

'பொய்யாமை' என்பதன் பொருள்:— ஒருவன் பொய் கூருமையையே பொய் கூருமையையே எப்பொழுதும் செய்ய வல்லவனாயின், அவன் வேறு பிற அறங்களைச் செய்யாமையே செய்யாமையே நல்லது என்பதாம். எனவே பல அறங்களைச் செய்தலினும், பொய்யாமை யென்ற ஓரறத்தினையே செய்தல் தக்கதாம். அவை யனைத்தும் தரும்பயனை ஈதோ ரறமே தந்துவிடும் என்பது கருத்து. அடுக்கிரண்டனுள் முன்னையது இடைவிடாமை மேற்று; ஏனையது துணிவின் மேற்று.

இங்ஙனம் பொருள் எளிதில் விளங்காது அரிதின் உணருமாறு இருப்பதையே கௌடர் விரும்புவர். நோக்குடைப் பொருள்கோள் — கவிஞனின் ஆழமான உள்ளக் கருத்து. (கஎ)

(ந) சமநிலை

கஅ. **விரவத் தொடுப்பது சமநிலை யாகும்.**

எ - ன், சமநிலை ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: வன்மை, மென்மை, இடைமை என்னும் மூவினமும் தம்முள் விரவத் தொடுப்பது சமநிலையாம் எ - று.

எ - டு: 'சோக மெவன்கொ லிதழிபொன் றூக்கின சோர்குழலாய்
மேக முழங்க விரைசூழ் தளவங் கொடியெடுப்ப
மாக நெருங்கவண் டானங் களிவண்டு பாட வெங்கும்
தோகை நடஞ்செயு மன்பர் திண்டே ரினித் தோன்றியதே'

இ - ள்: நான்ற குழலினை யுடையாய்! கொன்றைகளானவை பொன்மாலை நாற்ற, மேகங்கள் முழவென முழங்கா நிற்ப, விரையுடைய மலரோடு கூடிய முல்லை பலவும் கொடியெடா நிற்ப, அழகிய தானத்திலே வண்டுகள் களித்துப்பாட, எப்பக்கமும் மயில்கள் ஆடா நின்றன; இதனாலே, இப்பொழுதே நம்முடைய தலைவர் ஏறிய தேர் வந்து அவரோடு தோன்றுவதாயிருந்தது; அதனாலே, நின்னுடைய வருத்தம் எங்கே போகக் கடவது? எ - று.

மாகம் - ஆகாயம். வண்தானம், வண்டானம் எனத் திரிந்தது. சோகம் - வருத்தம். இதழி - கொன்றை. விரை - நாற்றம். தளவம் - முல்லை. தோகை - மயில்.

'சோகமெவன் கொல்' என்று பாடமோதி அதற்கேற்பச் 'சோகம் என்?' என நிறுத்தி வினாவாக்குவாரு முளர்.

இனிக் கௌடநெறி வருமாறு:—

'இடர்த்திறத் தைத்துற பொற்றொடி நீயிடித் துத்தடித்துச்
சுடர்க்கொடித் திக்கினைத் திற்றடு மாறத் துளிக்குமைக்கார்
மடக்குயிற் கொதத்தொளிக் கக்களிக் கப்புக்க தோகைவெற்றிக்
கடற்படைக் கொற்றவன் பொற்கொடித் தேரினிக் கண்ணுற்றதே'

என வற்கெனத் தொடுப்பனவே விழுமியவென வேண்டுவர் கௌடர்.

இ - ள்: பொன்னாற் செய்யப்பட்ட தொடியினையுடையாய்! இருண்ட நிறத்தையுடைய மேகமானது, முழங்குவதுஞ் செய்து, மின்னாகிய ஒளியோடுங் கூடிய ஒழுங்கு பல திக்கினுந் தோற்றி நடுங்க, மழையைத் தராநின்றது; அதுவேயுமன்றி, மடப்பத்தை யுடைய குயில் திரள்கள் ஒளிக்கக், களிக்கத் தொடங்கா நின்றன மயில்களானவை; ஆதலால் வெற்றி கொண்ட கடல் போன்ற பெருமை யுடைத்தாகிய தானையையுடைய தலைவனேறிய பொற்கொடியை யுடைய தேரானது இப்பொழுதே வந்து நம்மைச் சேர்வதா யிருந்தது; நீ வருத்தம் ஒழிவாயாக எ - று.

இடர் - வருத்தம். இடித்தல் - முழங்குதல். தடித்து - மின். சுடர் - ஒளி. கொடி-ஒழுங்கு. தடுமாறுதல் - நடுங்குதல். துளித்தல் - மழை பெய்தல். மைக்கார் - கரியமேகம். மடம் - அறியாமை. கொத்து - திரள். தோகை - மயில். கடற்படை - கடல் போன்ற பெரிய சேனை. கொற்றவன் - தலைவன். இனி - இப்பொழுது. கண் - இடம். உறுதல் - சேர்தல்.

இச்சூத்திரங் கூறுக்கால் மேல், 'செறிவு' என்று கூறிய வதனானே நெகிழத் தொடாமையேயன்றி வற்கெனத் தொடுப்பினும், செறிவென்று வைதருப்பருக்குங் கொள்ளக் கிடக்கும்.

(வி - ரை) 'சோகமெவன் கொல்' என்ற பாடல் பருவங் குறித்து வாராத தலைவனை நினைந்து ஆற்றாளாய தலைவிக்குத் தோழி, தலைவன் வரவு கூறி ஆற்றுவித்தது. இப்பாடலில் மூவினங்களும் விரவியுள்ளமையின் சமநிலை யாயிற்று.

'இடர்த்திறத் தைத்துற' என்ற பாடலும் முன்னைய துறையைச் சேர்ந்ததாகும். இப்பாடலில் வல்லோசை மிக்கிருத்தல் காண்க. வற்கெனத் தொடுத்தல் - வல்லோசை மிகுமாறு செய்தல்.

செறிவில் நெகிழ்ந்த இசையின்றி வருதலையும் இதன்கண் மூவினங்களும் விரவத் தொடுத்தலையும் வைதருப்பர் விரும்பவே, அவர் மிகவும் வற்கென்ற ஓசையோ, மிகவும் நெகிழ்ந்த ஓசையோ இன்றி இடைப்பட்ட ஓசையையே விரும்புதல் கருத்தாதல் தெளியலாம். ஆனால் கௌடர் வல்லோசை, மெல்லோசை யென்பதன்றி, எவ்வினமாயினும் ஓரினமான எழுத்துக்களால் வருவதையே விரும்புதல் தெளியலாம். (கஅ)

(௪) இன்பம்

கக. **சொல்லினும் பொருளினும் சுவைபடல் இன்பம்.**

எ - ன், இன்பம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: சொல்லினாற் சுவைபடத் தொடுத்தலும், பொருளினாற் சுவைபடத் தொடுத்தலும் இன்பமாம் எ - று.

அவற்றுள், சொற்காரணமாகிய இன்பமாவது வழி மோனை முதலாயின வரத்தொடுப்பது.

எ - டு: 'முன்னைத்தஞ் சிற்றில் முழங்கு கடலோத மூழ்கிப் போக
அன்னைக்கு ரைப்ப னறிவாய் கடலேயென் றலறிப் பேருந்
தன்மைமட வார்தளர்ந் துகுத்தவெண் முத்தந் தயங்கு கானற்
புன்னையரும் பேய்ப்பப் போவாரைப் பேதுறுக்கும் புகாரே
[யெம்மூர்'

இ - ள்: முன்பு தம்முடைய சிறு வீடானது ஒலிக்கின்ற கடல் வெள்ளத்தில் மூழ்கிப் போக, அதைக்கண்டு 'என்னுடைய அன்னைக்குச் சொல்லுவேன், கடலே! அறிவாயாக' என்று அலறியோடுகின்ற தன்மையினையுடைய பெண்கள் கானலின்கண் வருந்தி அறுத்துச் சிதறிய வெண்மையான முத்தம் பிரகாசிக்கின்ற புன்னை யரும்பை யொப்பாக ஆண்டுப் போவாரை மயங்கச் செய்கின்ற காவிரிப்பூம்பட்டினமே எம்மூர் எ - று.

இத்துணைச் சுருங்கத் தொடுப்பது இன்னாதென்று கௌடர் சொல்லுமாறு:—

எ - டு: '[1]துனைவருநீர் துடைப்பவராய்த் துவள்கின்றேன்
துணைவிழிசேர் துயிலை நீக்கி
[2]இனவளைபோல் இன்னலஞ்சோர்ந் திடருழப்ப
[3]இறந்தவர்நாட் டில்லை போலும்
தனியவர்கள் தளர்வெய்தத் தடங்கமலந்
தளையவிழ்க்குந் தருண வேனில்
[4]பனிமதுவின் பசுந்தாது பைம்பொழிலிற்
பரப்பிவரும் பருவத் தென்றல்'

இ - ள்: துயர மிகுதியாலே என் கண்ணினிடத்து விரைந்து இழிதரு நீரை மாற்றினராய், வருந்தும் என்னுடைய இணை விழியானவை இமை பொருந்துந் தன்மைத்தாகிய உறக்கத்தை நீக்கிக் கரத்தின்கண் இனமாக இடப்பட்ட வளை சோருதல்

---

1. 'தனிவருநீர்' என்பதும், 2. 'இனவளை போய்' என்பதும், 3. 'இகந்தவர்' என்பதும், 4. 'பனிமதுவும் பசுந்தாதும்' என்பதும் பாடங்களாகும்.

போல, இனிய அழகு குறைந்து யான் துயருறும் வண்ணம் பிரிந்து போனவருடைய நாட்டின்கண், பிரிந்திருந்தோர் நடுக்க மெய்தப் பெரிதாகிய பொய்கையிலுண்டாகியூ தாமரையின் கட்டை விடுவிக்கும் இளவேனிலும், அக்காலத்தி லுண்டாகிய குளிர்ந்த தேனையும், பசிய தாதுக்களையும் பசுமையான சோலையின்கண் பரப்பி வருகின்ற •இளந்தென்றலும் இல்லையோ? சொல்லுவாயாக தோழீ! எ - று.

துனைதல் - கடுகுதல். நீர் - கண்ணீர். துடைத்தல் - மாற்றுதல். துவளுதல் - வருந்துதல். துணைவிழி - இணைவிழி. தனியவர்கள் - பிரிந்தவர்கள். தட - பெருமை. தருண வேனில் - இளவேனில். பனிமது - குளிர்ந்த தேன்.

இனி, பொருள் காரணமாகிய இன்பமாவது **மதுகாரணமாக மதுகரங்கட்கு வரும் மகிழ்ச்சிபோலக்** கவி கேட்போர்க்கு வரும் இன்பமாம்; கருதிய பொருள் கேட்டார்க்கு வரும் வியப்பும் அது.

எ - டு: 'மானேர் நோக்கின் வளைக்கை யாய்ச்சியர்
கான முல்லை சூடார் கதுப்பில்
பூவைப் புதுமலர் சூடித் தாந்தம்
இடங்காப் பணைமுலை யிழைவளர் முற்றத்துச்
சுணங்கின் செவ்வி மறைப்பினு மலர்ந்த
பூவைப் புதுமலர் பரப்புவர் பூவயின்
ஆனிரை வருத்தம் வீடமலை யெடுத்து
மாரி காத்த காளை
நீல மேனி நிகர்க்குமா லெனவே'

எனவும்,

'பொற்றொடிப் புதல்வர் ஓடியாடவும்
முற்றிழை மகளிர் [1]முகிழ்முலை திளைப்பவுஞ்
செஞ்சாந்து சிதைந்த மார்பி னொண்பூண்
அரிமா வன்ன வணங்குடைத் துப்பின்
திருமா வளவன் [2] தெவ்வர்க் கோக்கிய
வேலினும் வெய்ய கானமவன்
கோலினுந் தண்ணிய தடமென் றோளே'

(பட்டினப் : ௨௯௫— ௩0௧)

எனவும் வரும்.

இப்பொருள் காரணமாகிய இன்பம் இரண்டு நெறியார்க்கும் ஒக்கும். இவ்வாறு தொடுக்குங்கால், கிராமியச் சொல்லும் பொருளும், இடக்கர்ச் சொல்லும் பொருளும் தீண்டாமல் பாடுவது சிறப்புடைத்து.

(வி - ரை) வழிமோனை — ஒவ்வொரு அடியிலும் சீர்கள், இடையிட்டு மோனைத் தொடை கொண்டு வருவது.

'முன்னைத்தம்......எம்மூர்' — இப்பாடல் இளம்பெண்டிர் சிற்றில் இழைத்து விளையாடுங்கால், அதனைக் கடலோதம் அழித்துச் செல்ல், அது

1. 'முலைமுக டுழக்கவும்' என்பதுவும், 2. 'தெவ்வர்க் கோச்சிய' என்பதுவும் பாடங்களாகும்.

கண்டு மனமழிந்து கூறியதாகும். இப்பாடலில் ஒவ்வொரு அடியிலும் க, ரு, ங-ஆம் சீர்களில் மோனை வந்து அமைந்து இன்பம் பயத்தலின் இது இன்பமாயிற்று.

கௌடர் இங்ஙனம் க, ரு, ங—ஆம் சீர்களில் இடையிட்டு மோனை வருதலை விரும்பாது சீர்தோறும் மோனையமைதலையே விரும்புவர். சுருங்கத் தொடுப்பது — மோனைத் தொடை குறைந்து வருதல்.

'துனைவருநீர்.....தென்றல்' — இப்பாடல் பிரிவாற்றாத தலைவி ஆற்றாமை மீதூரத் தோழிக்குச் சொல்லியதாகும். இதில் ஒவ்வொரு அடியிலும் ஆறாவது சீர் நீங்கலாக ஏனைய ஐந்து சீர்களிலும் மோனைத்தொடை அமைந்திருத்தல் காண்க.

'மானேர் ...... எனவே' — இப்பாடல் யாண்டுளதெனத் தெரிந்திலது. ஆயர் மகளிருக்குக் காயாம்பூவிலுள்ள பற்றை இப்பாடல் விவரிக்கின்றது.

இதன் பொருள்: மானை யொத்த நோக்கினையும், வளையணிந்த கைகளையும் உடைய ஆய்ச்சியர்கள், தாம் வசிக்கும் காட்டிலுள்ள முல்லைப் பூக்களைக்கூடக் கூந்தலில் சூட மாட்டார்கள்; அதற்கு மாறாகக் காயாம் பூவையே தலையில் சூடிக் கொண்டு, தமது அடங்காத பெருத்த முலைகளையும் நல்ல அணிகளையும் உடைய மார்பாகிய முற்றத்திலுள்ள தேமல் அழகினை மறைப்பதாயினும், அன்றலர்ந்த இக்காயாம் பூவினையே பரப்பி வைப்பர். காரணம், இவ்வுலகிலுள்ள பசுக்களுக்கு இந்திரன் பெய்வித்த பெருமழையினால் உண்டான துன்பம் நீங்குமாறு கோவர்த்தன கிரியைக் குடையாக எடுத்துக் காத்து அத்துன்பத்தினை நீக்கியருளிய நீலநிறம் பொருந்திய கண்ணபிரானின் திருமேனியை அக்காயாம் பூக்கள் ஒப்பதாலாகும் என்பது.

தனக்கு அணித்தாக வுள்ளதும், கற்பிற்குரியதுமான முல்லையை விடுத்துக் கண்ணபிரானின் நிறம் போன்றிருக்கும் ஒரு காரணத்தாலேயே அக்காயாம் பூவினை விரும்புவர் என்பதால், அவர்கட்கு அப்பெருமான் மீதுள்ள ஈடுபாடு நன்கு விளங்கும்.

'பொற்றொடிப் ...... தோளே' — இப்பாடற்பகுதி பட்டினப் பாலையின் இறுதியிலுள்ள பகுதியாகும். இது தலைவன் பொருள்வயிற் பிரியக் கருதிய நெஞ்சிற்கு ஆற்றினது அருமை கூறி விலக்குவித்ததாகும்.

இதன் பொருள்: பொன்னாற் செய்த தொடியினையுடைய பிள்ளைகள் ஓடிவந்து ஏறி விளையாடுகையினாலும், மெய்ம்முழுதுமணிந்த அணிகலங்களையுடைய மகளிருடைய தாமரை முகை போலும் முலைகள் புணர்தலாலும், சிவந்த சந்தனமழிந்த மார்பினையும், ஒள்ளிய பேரணிகலங்களையும், சிங்க வேற்றை யொத்த வருத்தத்தையுடைய வலியினையுமுடைய திருவின் பெருமையையுடைய கரிகாற் பெருவளத்தான் பகைவரைக் கொல்லுவதற்கு அறுதியிட்டு வைத்த வேலினும் கடியவாயிருந்தன காடு; அவன் செங்கோலினும் குளிர்ந்திருந்தன பெரிய தோள்கள் என்பதாம்.

இவ்விரு பாடல்களும் பொருள்காரணமாக இன்பம் விளைவித்தல் காண்க. (கரு)

(ரு) ஒழுகிசை

உ௦. ஒழுகிசை யென்பது வெறுத்திசை யின்மை,

எ - ன், ஒழுகிசை ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று:

இ - ள்: ஒழுகிசை யென்று சொல்லப்படுவது வெறுக்கத் தகும் இன்னா இசையின்றி வரத்தொடுப்பது எ - று.

எ - டு: 'இமையவர்கண் [1]மோலி யிணைமலர்த்தாள் சூடச்
சமையந் தொறுநின்ற தையல் — சிமைய
மலைமடந்தை வாச மலர்மடந்தை யெண்ணெண்
கலைமடந்தை நாவலோர் கண்'

இ - ள்: துணையாகிய மலர்போன்ற சீர்பாதத்தைத் தேவர்கள் எல்லாரும் தங்கள் முடிமேலே சூடும் வண்ணம் பலவகைப்பட்ட சமயங்கள்தோறும் புக்குநின்ற மடவாள், சிகரங்களை யுடைய மலையரையன் மகளுமாய், நறுநாற்றத்தை யுடைத்தாகிய தாமரை மலர் மீதிருந்த சீதேவியுமாய்ப், பலவகைப்பட்ட கலைகளுக்கு இறைவியுமாய் நின்ற சரசுவதி, அவள் நாவினால் வலியோர்க்குக் கண்ணாயிருப்பவள் எ - று.

மோலி - தலை. சிமையம் - மலையுச்சி. வாசம் - நாற்றம். மலர்மடந்தை - சீதேவி. மலைமடந்தை - பார்வதி.

இனி, 'இன்னா இசை' என்பது மென்னடை யொழுக்கத்து வல்லொற்றடுத்து மிக்கது போலவும், அந்நடை யொழுக்கத்து உயிரெழுத்தடுத்துப் பொய்ந்நலம்பட்டு அறுத்திசைப்பது போலவும் வரும்.

எ - டு: 'ஆக்கம் புகழ்பெற்ற தாவி யிவள்பெற்றாள்
பூக்கட் குழற்கார் பொறைபெற்ற — மாக்கடல்சூழ்
மண்பெற்ற வொற்றைக் குடையாய் வரப்பெற்றெங்
கண்பெற்ற வின்று களி'

இ - ள்: பெரிய கடல் சூழ்ந்த உலகத்துள்ளார் தங்கள் தவப்பலனைப் பெற்ற ஒப்பற்ற குடையையுடைய தலைவனே! நீ எங்களை நினைத்து வந்த இதனானே, இன்று, நின்னுடைய புகழானது பெருக்கம் பெற்றது; தலைமகளாகிய இவள் உயிர்பெற்றாள்; இவளுடைய கார் போன்ற குழலானது மதுவினை யுடைத்தாகிய பூக்களின் பாரத்தைப் பெற்றது; எங்களுடைய கண்களும் செருக்குப் பெற்றன எ - று.

ஆக்கம் - பெருக்கம். ஆவி - உயிர். கள் - தேன். 'குழற்கார்' என்றது கார்போன்ற குழல் என்றவாறு. பொறை-பாரம். களி - செருக்கு.

இவ்வாறு வேண்டார் இரண்டு நெறியாரும்.

(வி - ரை) மெல்லெழுத்துக்களால் இயன்ற யாப்பமைதி யினிடையில் வல்லெழுத்துக்கள் வரினும், வல்லெழுத்துக்களால் இயன்ற யாப்பமைதி யினிடையில் உயிரெழுத்துக்கள் வரினும் செவிக்கு இன்னா இசையையே உண்டாக்கும்.

---

1. 'மௌலி' என்பதும் பாடம்.

'இமையவர்கண்' என்ற பாடல் நாமகளுக்கு வணக்கம் சொல்வதாகும். இதன் ஓசை வெறுக்கத்தக்கதாயின்றி இனிய ஓசையாயிருத்தலின் இது ஒழுகிசையாயிற்று.

'ஆக்கம் புகழ் பெற்றது' என்ற பாடல், தலைவன் வரவு கண்டு மகிழ்ந்த தோழி, அவனுக்கு உரைத்ததாகும். 'பூக்கட் குழற்கார்' என்ற விடத்து வெறுக்கத்தக்க ஓசை யிருத்தலின் இப்பாடலை இரண்டு நெறியாரும் வேண்டாராயிற்று. (௨௦)

(சு) உதாரம்

௨௧. உதார மெனபது ஓதிய செய்யுளிற்
குறிப்பின் ஒருபொருள் நெறிப்படத் தோன்றல்.

எ - ன், உதாரம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: உதாரமென்று சொல்லப்படுவது, சொல்லப்பட்ட செய்யுளுள் சொற்படு பொருளின்றி அதன் குறிப்பினால் ஒரு பொருள் நெறிப்படத் தோன்றுவது எ - று.

எ - டு: 'செருமான வேற்சென்னி தென்னுறந்தை யார்தம்
பெருமான் முகம்பார்த்த பின்னர் — ஒருநாளும்
பூதலத்தோர் தம்மைப் பொருணசையாற் பாராவாம்
காதலித்துத் தாழ்ந்திரப்போர் கண்'

இ - ள்: பொருள்மேல் வைத்த அவாவினாலே தாழ்வு வைத்திரப்போர் கண்களானவை, போரின்கண் வலியுடைத்தாகிய வேலையும், சென்னியென்னும் பெயரையும் உடையவனாகிய தெற்கின்கணுண்டாகிய உறந்தைப் பதியார்க்குத் தலைவனாகிய சோழனுடைய முகத்தைப் பார்த்த பின், பூமண்டலத்துள்ளார் முகங்களைப் பொருள் விருப்பினாற் பாரா எ - று.

மானம் - வலி. உறந்தை - உறையூர். சென்னி - சோழன். ஆம் என்பது அசைநிலை.

இதனுள் 'உறந்தையார் கோமானை ஒருநாள் முகம் பார்த்த இரவலர் பின்னைப் பிறரைப் பொருள் நசையாற் பாரார்' எனவே, அவன் இரப்போர் வறுமை தீரக் கொடுப்பான் என்னும் பொருள் குறிப்பினாற் கொள்ளக் கிடந்தவாறு காண்க.

'அவிழ்ந்த துணியிசைக்கும் அம்பலமுஞ் சீக்கும்
மகிழ்ந்திடுவார் முன்னர் மலரும் — கவிழ்ந்து
கிழறுழாம் யானை [1]நெடுந்தோ இரவி
கழறொழா மன்னவர்தங் கை'

என்பதும் அது.

இ - ள்: தன்னுடைய நிழலைக் கவிழ்ந்து சிதைக்கும் யானையினையும் நெடிய தேரினையு முடைய இரவி குலத்துள்ளானுடைய பாதங்களைப் பணியாத அரசர்களுடைய கைகளானவை, உடுக்க வேண்டின் முடிந்த துணிகளை யுடைத்தாகிய உடையின் அவிழ்ந்த துணிகளைப் பின்பு முடியா நிற்கும்; கிடக்க வேண்டின் ஊர்ப்புறத்து உண்டாகிய அம்பலங்களைத் துடையா நிற்கும்; உணவு வேண்டின் இடுவார் முன்னர்ச் சென்று நின்று உள்ளத்து உவகையோடும் விரியா நிற்கும் எ - று.

---

1. 'நெடுமான்தேரக் கிள்ளி' என்பதும் பாடம்.

'இடுவார் முன்னர் உவந்து விரியும்' என்றதனால், இடாதார் முன்னர் உவகையின்றி விரியும் எனக் கொள்க.

இசைத்தல் - முடிதல். சீத்தல் - துடைத்தல். மல்ர்தல் - விரிதல். கவிழ்தல் - இறங்குதல். துழாவுதல் - சிதைத்தல். 'நிழல் துழாவும் யானை' யென்பது 'நிழறுழாம் யானை' என விகாரமாயிற்று.

இஃது இரண்டு நெறியார்க்கும் ஒக்கும்.

(வி - ரை) உதாரம — பாடலிலுள்ள வெளிப்படையான பொருளே யன்றிக் குறிப்பாகச் சிறப்பானதொரு பொருள் தோன்றப் பாடப்படுவதாகும்.

இவ்விரு பாடல்களிலும் ஒவ்வொரு குறிப்புப் பொருள் இருத்தலின் உதாரமாயிற்று. குறிப்புப் பொருள்படுதலில் முன்னைய பாடலே சிறப்புடைத்து. (உக)

(எ) உய்த்தலில் பொருண்மை

உஉ. **கருதிய பொருளைத் தெரிவுற விரித்தற்(கு)**
உரியசொல் லுடைய(து) உய்த்தலில் பொருண்மை.

எ - ன், உய்த்தலில் பொருண்மை ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: உய்த்தலில் பொருண்மை என்பது கவி தன்னாற் கருதப்பட்ட பொருளை விளங்க விரிக்குஞ் சொல்லைச் செய்யுளுள்ளே யுடைத்தாய்ப் பிறிது மொழி கூட்டி யுரைக்கும் பெற்றியின்றி வரத் தொடுப்பது எ - று.

எ - டு: 'இன்றுமையாள் மாசிலா வாண்முகங்கண் டேக்கற்றோ
அன்றி விடவாவை யஞ்சியோ — கொன்றை
உளராவா றோடு மொளிர்சடையீர் சென்னி
வளராவா றென்னோ மதி'

இ - ள்: 'உமையாளுடைய குற்றமற்ற ஒளியினை யுடைத்தாகிய முக மண்டலத்தைக் கண்டு அதனுடைய நலனை ஆசைப்படுதலானோ? அஃதன்றியே, நீர் ஆபரணமாக அணிந்த விடத்தை யுடைத்தாகிய பாம்பினைக் கண்டு அஞ்சுதலானோ? கொன்றையின் மலர்களை யீர்த்துக்கொண்டு கங்கையாறு விரைந்து திரியும் ஒளியோடு கூடிய சடையினை யுடையீர்!' இன்று உம்முடைய திருமுடிமேல் உண்டாகிய பிறையானது வளராதிருந்த காரணம் யாது? சொல்லுவீராக எ - று.

'கொன்றை' என்றது ஆகுபெயராற் பூவை எனக் கொள்க. உளர்தல் - கலக்குதல். சென்னி - சென்னியிலே என விரிக்க. 'வளரா ஆறு' என்றது வளராத தன்மை எனக் கொள்க. மதி - பிறை.

இனி உய்த்துணர்தல் வருமாறு:—

எ - டு: 'இன்றுமையாள் மாசிலா வாண்முகங்கண் டேக்கறுமால்
அன்றி விடவரவு மங்குறையும் — கொன்றை
உளராவா றோடு மொளிர்சடையீர் சென்னி
வளராவா றென்னோ மதி'.

என்பதனுள் 'யாதனுலோ' என்னுஞ் சொற்கூட்டி யுரைக்கப் படும்.

இவ்வாறு வேண்டுவர் இரண்டு நெறியாரும்.

(வி - ரை) இவ்விரு பாடல்களுள், முன்னைய பாடலில் கருதிய பொருளை விளக்குதற்குப் பிறசொற்கள் எவையும் தேவையில்லா திருத்தலின் அது உய்த்தலில் பொருண்மை யாயிற்று. உய்த்துணர்தற்குக் காட்டப்பட்ட பாடல் அத்துணைச் சிறப்புடைத்தன்று. (உஉ)

(அ) காந்தம்

உ௩. உலகொழுக் கிறவா(து) உயர்புகழ் காந்தம்.

எ - ன், காந்தம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: காந்தம் என்பது ஒன்றனை உயர்த்துப் புகழுங்கால் உலகநடை யிறவாமல் உயர்த்துப் புகழ்வது எ - று.

எ - டு: 'ஒருபே ருணர்வுடனே யொண்ணிறையுந் தேய
வருமே துறவென்பால் வைத்த — ஒருபேதை
போதளவு வாசப் புரிகுழல்சூழ் வாண்முகத்துக்
காதளவு நீண்டுலவுங் கண்'

இ - ள்: யான் வருத்தத்தையுறும் வகையாகப் பேதைத் தன்மையை யுடையாள் ஒருத்தி என் உள்ளத்திடத்து வைத்த, பூவொடு கலந்த நறுநாற்றத்தை யுடைத்தாகிய சுருண்ட குழலினையுடைத்தாய் ஒளியோடுங் கூடிய முகத்தின்கண் உண்டாகிய காதின் எல்லை யளவுஞ் சென்று மீண்டு திரியுங் கண்களானவை, இக்காலத்து எனது ஒரு தன்மையாய் இருக்கப்பட்ட அறிவுடனே ஒள்ளிதாகிய ஒழுக்கமுங் கெட வந்து தோன்றுநின்றன எ - று.

வாள் - ஒளி. ஒரு பேதை என் உள்ளத்து வைத்த கண் எனக் கூட்டுக. 'தேய' என்பது கெட என்பதாம். 'ஏதம்' என்பது ஏதெனநின்று வருத்தமாயிற்று. 'என்பால் வைத்த' என்றது என் உள்ளத்து வைத்த என்றவாறு.

இனிக் கௌடநெறி வருமாறு:—

எ - டு: 'ஐயோ வகலல்குல் சூழ்வருதற் காழித்தேர்
வெய்யோற் கநேகநாள் வேண்டுமால் — கைபரந்து
வண்டிசைக்குங் கூந்தன் மதர்விழிகள் சென்றுலவ
எண்டிசைக்கும் போதா திடம்'

எனவும்,

இ - ள்: திரளாகப் பரந்து வண்டுகள் பாடப்பெற்ற கூந்தலினை யுடையாளுடைய அகன்ற அல்குற் பரப்பைச் சூழ்வதற்கு, ஐயோ! ஆகாயப் பரப்பெல்லாம் ஒரு பொழுதிற் கடக்கும் ஒருகால் தேரையுடைய பகலோனுக்குப் பன்னெடுநாள் வேண்டுவதாயிருந்தது; அதுவேயன்றி, இவளுடைய களிப்பையுடைத்தாகிய கண்கள் சென்று மீண்டு உலாவுவதற்கு எண்வகைப்பட்ட திக்குகளில் உண்டாகிய இடப்பரப்பும் போதாததாய் இருந்தது; இஃது ஓர் உருவத்தன்மை யிருந்தபடியென்! எ - று.

'ஐயோ' என்பது இரக்கத்தின்கட் குறிப்பு; இவ்விரக்கம் ஆதித்தன்மேல் ஏற்றுக.

ஆழி - தேர்க்கால். கை - திரள். இசைத்தல் - பாடுதல். கூந்தல் - கூந்தலையுடையாள். மதர்விழி - களித்த விழி.

'அங்கண்மா ஞாலத் தகல்விசும்பை முன்படைத்த
பங்கயத்தோ னந்நாளிப் பைந்தொடிதன் — கொங்கைத்
தடம்பெருக வோங்குமெனத் தானினையா வாறோ
இடம்பெருகச் செய்யா வியல்பு'

எனவும் வரும்.

இ - ள்: அழகினை யுடைத்தாகிய இடத்தை யுடைத்தாய்ப் பெரியதாகிய உலகத்தின்மீது உண்டாகிய அகன்ற விசும்பை முன்பு படைத்த நான்முகன் அந்நாளில் இவ்வாகாயத்தை இடப் பரப்புண்டாகப் படையாத காரணம், பசும் பொன்னாற் செய்த தொடியினை யுடையாளுடைய முலைகள் புடைபரக்க வளர்ந்து மீதுயர்ந்தோங்குமென நினையாதவாறோ? சொல்லுவீர் எ-று.

அம் - அழகு. கண் - இடம். மா - பெருமை. ஞாலம் - உலகம். 'ஞாலத்து அகல் விசும்பு படைத்த' என்பதற்கு, ஞாலத்தோடு அகல் விசும்பு படைத்த எனவும் அமையும். இயல்பு - செய்தி.

இவ்வாறு உலகநடை இறப்பப் புணர்ப்பதே சுவையுடைய தென வேண்டுவர் கௌடர்.

(வி - ரை) 'ஒருபேருணர்வு ..... கண்' — இதன்கண் 'காதளவும் நீண்டுலவும் கண்' என்றவிடத்து, உலகியற்கைக்குப் பொருந்துமாறு கூறி யிருத்தலின் இது காந்தமாயிற்று.

'ஐயோ ...... இடம்' என்ற பாடலில் அல்குல், கண் ஆகிய ஈருறுப்புக் களையும் உலகியற்கைக்கு மாறாகப் புனைந்திருப்பதும்; 'அங்கண் ..... இயல்பு' என்ற பாடலில் கொங்கைகளை உலகியற்கைக்கு மாறாகப் புனைந்திருப்பதும் காண்க. இங்ஙனம் உலகியற்கைக்கு மாறாகப் புனைந்துரைப்பதையே கௌடர் விரும்புவர். (உரு

(௯) வலி

உச. வலியெனப் படுவது தொகைமிக வருதல்.

எ - ன், வலி ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: வலியென்று சொல்லப்படுவது தொகைச் சொற் றொடர்பு மிகத் தொடுப்பது எ - று.

'மிக' என்றது சிறப்புடையவாக எனக் கொள்க.

எ - டு: 'காளிமிர்த்தாற் கண்பரிவ வல்லியோ? புல்லாதார்
மானனையார் மங்கலநாண் அல்லவோ? — தான
மழைத்தடக்கை வார்கழற்கால் மானவேற் கிள்ளி
புழைத்தடக்கை நால்வாய்ப் பொருப்பு'

இ - ள்: காலம் வரையாது உபகரிக்கின்ற மேகம் போன்ற பெரிய கையினையும், நீண்டிருக்கின்ற கழலோடு கூடிய காலினை யும், வலிதாகிய வேலினையும் உடையனாகிய சோழனுடைய, துளையை யுடைத்தாகிய பெரிய கையினையும், நான்ற வாயினை யும் உடைய மலையாகிய வாரணம், தன்னுடைய தாளை வலித்

தால், அறுந்தன்மையை யுடையன, நிகளத்தின் கண்ணேயோ? பகைத்த வேந்தருடைய உரிமைச் சுற்றத்து மான்போன்ற விழியினை யுடையார் கழுத்தில் நல்ல நாளிற் பூட்டிய வலியை யுடைத்தாகிய மங்கலக் கயிறல்லவோ? எ - று.

வல்லி - விலங்கு. புல்லாதார் - பகைவர். தானம் - கொடை. வார்தல் - நீளுதல். கழல் - வீரக்கழல். மான வேல் - வலிய வேல். புழை - துளை. தடக்கை - பெரிய கை. நால்வாய் - நான்றவாய். பொருப்பு - யானை.

இத்துணைச் சுருங்கத் தொடுத்தல் இன்னுதென்று கௌடர் சொல்லுமாறு:—

எ - டு: 'செங்கலசக் கொங்கைச் செறிகுறங்கிற் சீறடிப்பேர்ப்
பொங்கரவ வல்குற் பொருகயற்கட் — செங்கனிவாய்க்
காருருவக் கூந்தற் கதிர்வளைக்கைக் காரிகைத்தாம்
ஓருருவென் னுள்ளத்தே யுண்டு'

இ - ள்: செம்மை நிறத்தை யுடைத்தாகிய கலசம் போன்ற முலையினையும், செறிந்த குறங்கினையும், சிறிதாகிய அடியினையும், பெரிதாகிய பாம்பின் படம் போன்ற அல்குலினையும், பகைத்தெதிர்ந்த கயலையொத்த கண்ணினையும், செம்மையாகிய கொவ்வைக்கனி போன்ற வாயினையும், கருமையாகிய நிறத்தினை யுடைய கூந்தலினையும், ஒளியோடு கூடிய வளைகளை யுடைத்தாகிய கையினையும், அழகினையும் உடைத்தாய் இருப்பதொரு வடிவம் என் உள்ளம் விட்டு அகலாது எ - று.

பொங்குதல்—பெருமை.

(வி - ரை) சொற்கள் ஒன்றோடொன்று புணருங்கால் இடையே வேற்றுமை யுருபு, உவம வுருபு முதலியன மறைந்துவரின் அவை தொகையாம். இத்தகைய தொகைச்சொற்கள் மிக்கு வருவது வலியாம்.

கால்நிமிர்த்தால், கழற்கால், வேற்கிள்ளி, புழைத் தடக்கை, நால்வாய்ப் பொருப்பு என்ற இடங்களில் வேற்றுமைத் தொகையும், புழைத் தடக்கை என்றவிடத்து உவமைத் தொகையும் வந்திருத்தலின் இப்பாடல் வலியாயிற்று.

கௌடர் தொகைச்சொற்கள் வருவதே வலி யென்பார் ஆயினும், ஒரு பாடலில் எத்துணையளவு மிகுதியாகத் தொகைச் சொற்களைப் புணர்க்க முடியுமோ அத்துணையும் பெற்று வரவேண்டும் என்பர். திரு. சுன்னாகம் குமாரசாமிப் புலவர் அவர்கள், 'வல்லெழுத்துக்களால் இயன்ற பாடலில் தொகைச் சொற்கள் மிக்கு வருதலையே கௌடர் விரும்புவர்' என்பர்.

'செங்கலசக் கொங்கை' என்ற பாடலில், கலசக் கொங்கை, அரவஅல்குல், கயற்கண், கனிவாய் என்ற இடங்களில் உவமத்தொகையும், உருபுத் தொகையும் உடன் வருதல் காண்க. (உச)

(கo) சமாதி

உரு. உரியபொரு ளன்றி யொப்புடைப் பொருள்மேல்
தரும்வினை புணர்ப்பது சமாதி யாகும்.

எ - ன், சமாதி ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: முக்கியப் பொருளின் வினையை ஒப்புடைப் பொருள் மேல் தந்து புணர்த்து உரைப்பது, சமாதியென்னும் அலங்காரமாம் எ - று.

'சமாதி' என்றது 'ஆகும்' என்றதனால் பெயரும் அவ்வாறு உரைக்கப்படும்.

எ - டு: *'அகலிரு விசும்பிற் பாயிருள் பருகிப்*
பகல்கான் றெழுதரும் பல்கதிர்ப் பரிதி' (பெரும்பாண்: க-உ)

எனவும்,

'விழித்த குவளைக் கழிப்போது வாக்கிய
கள்ளுண்டு களித்த வண்டினம்'

எனவும்,

'கன்னி யெயில்', 'குமரி ஞாழல்' (நற் - ருச)

எனவும்,

'கடுங்கை வயலுழவர் காலைத் தடிய
மடங்கி யரியுண்ட நீலம் — தடஞ்சேர்ந்து
நீளரிமேற் கண்படுக்கு நீணீ ரவந்தியார்
கோளரியே றிங்கிருந்த கோ'

எனவும் வரும்.

இஃது இரண்டு நெறியார்க்கும் ஒக்கும்.
இவற்றைக் குணவலங்காரம் என்றுங் கூறுப.

அஃதேல், இன்ன இலக்கணமெல்லாம் முன்னையோர் மொழிந்தது, நடைபல பயின்ற வடமொழிக்கன்றே; செந்தமிழ் மொழியின் வந்தவாறு என்னை? எனின்; இதன் முதனூல் செய்த ஆசிரியர் உலகத்துச் சொல்லையெல்லாம் [1]சமஸ்கிருதம், பிராகிருதம், அவப்பிரஞ்சம் என மூன்று வகைப் படுத்து, அவற்றுள் சமஸ்கிருதம் புத்தேளிர் மொழி எனவும், அவப்பிரஞ்சம் இதர சாதிகளாகிய இழிசனர் மொழி எனவுங் கூறினர். அதனால், பிராகிருதம் எல்லா நாட்டு மேலோர் மொழி எனப்படும். அல்லதூஉம், பிரகிருதி என்பது இயல்பாகலான், பிராகிருதம் இயல்பு மொழி.

அந்தப் பிராகிருதத்தைத் தற்பவம், தற்சமம், தேசியம் என மூன்றாக்கினர். அவற்றுள் தற்பவம் என்பன ஆரியமொழி திரிந்து ஆவன. அவை: பாபம்-பாவம் எனவும், 'நிதியந்துஞ்சும்' எனவும், 'தசநான் கெய்திய பணைமருளுேன்றாள்' எனவும் வரும். தற்சமம் என்பன ஆரியச் சொல்லும் தமிழ்ச் சொல்லும் பொதுவாய் வருவன. அவை: குங்குமம், மூலம், மலயமாருதம் என்பன. தேசியம் என்பன அவ்வந் நாட்டவர் ஆட்சிச் சொல்லேயாய்ப் பிற பாடை நோக்காதன. அவை: நிலம், நீர், தீ, சோறு என்பன. இவற்றையே செய்யுட் சொல்லெனத் தமிழ் நூலாரும் வேண்டினாராகலின், இவ்வாற்றான் தமிழ்ச் சொல்லெல்லாம் பிராகிருதம் எனப்படும். அச்சொற்களால் இயற்றப்படும் எல்லாக் கவிக்கும்

1. 'சங்கிருதம்' என்பதும் பாடம்.

அவ்வலங்காரம் அனைத்தும் உரியவாகலின், ஈண்டு மொழி பெயர்த்து உரைக்கப்பட்டன.

(வி - ரை) 'அகலிரு......பரிதி' என்பதன் பொருள்:— அகன்ற பெரிய விண்ணிடத்தே தோன்றிப் பரந்த இருளை விழுங்கிப் பகற் பொழுதை உலகத்தில் தோற்றுவித்து எழுதலைச் செய்யும் பல ஒளிக்கதிர்களையுடைய கதிரவன் என்பதாம்.

இதன்கண் முக்கியப் பொருள் மக்கள். அவர்களுக்குரிய பருகுதலையும், தோற்றுவித்தலையும் ஒப்புடைப் பொருளான கதிரவனுக்கு ஏற்றிச் சொல்லப் பட்டிருத்தலின், இது சமாதி யாயிற்று.

'விழித்த ...... வண்டினம்' என்பதன் பொருள்:— மலர்ந்த குவளை மலர் உப்பங் கழியிலுள்ள மலர்களில் சொரிந்த கள்ளினை உண்டு மகிழ்ந்த வண்டுக் கூட்டங்கள் என்பதாம்.

இதன்கண் விழித்தலும், சொரிதலும், களித்தலும் ஆகிய மக்களின் வினைகளைக் குவளைக்கும் வண்டிற்கும் ஏற்றிச் சொல்லப்பட்டிருத்தலின், இது சமாதியாயிற்று.

'கன்னி யெயில்' என்பது அழியாத மதில் என்றும், 'குமரி ஞாழல்' என்பது இளமையான ஞாழல் மரம் என்றும் பொருள்படும். இவற்றில் கன்னித் தன்மை, குமரித் தன்மை ஆகிய பெண்களின் தன்மைகளை முறையே மதிலுக்கும், மரத்திற்கும் ஏற்றிச் சொல்லப்பட்டிருத்தலின் இவை சமாதி யாயின.

'கடுங்கை......கோ' என்பதன் பொருள்:— வலிய கையினையுடைய வரும், வயலில் உழவுத் தொழிலைச் செய்கின்றவருமான உழவர்கள் தனது அடிப் பகுதியை வெட்ட, அதனால் அறுபட்டு மடங்கிய குவளைக் கொடி வரப்பிற் சேர்ந்து பின்பு நீண்ட நெற்றாள் அரிகளின் மீது கிடக்க, அக்கொடியிலுள்ள மலர் குவிந்து கிடக்கும்படியான நீண்ட நீர்வளமுடைய அவந்தி நாட்டரசாகிய ஆண் சிங்கமே இங்கிருக்கும் தலைவனாவான் என்பதாம்.

இது சுயம்வர மண்டபத்தில் தோழி, தலைவிக்கு அவந்திநாட் டரசரை அறிமுகம் செய்து வைப்பதாகும்.

கால் என்று உறுப்பினை வழங்குவதும், கண்படுத்தல் என்ற வினைக்குரிய தாக்குவதும் மக்களுக்குரிய தன்மையாம். இவற்றைக் குவளைக் கொடிக்கும், அம்மலருக்கும் ஏற்றிச் சொல்லியிருத்தலின் இது சமாதியாயிற்று.

இதுகாறும் கூறியவற்றான் வைதருப்ப நெறிக்கும் கௌட நெறிக்கும் உள்ள வேற்றுமை நன்கு புலனாகும். அது வருமாறு:—

வைதருப்ப நெறி	கௌட நெறி
1. செறிவு முதலிய பத்துக் குணங் களையும் ஏற்கும்.	அப்பத்தனுள் சிலவற்றை ஏற்கும்
2. பெரும்பாலும் மூவினங்களால் இயன்ற பாடலையே விரும்புவர்.	ஒரினமான எழுத்துக்களால் இயன்ற பாடலையே விரும்புவர்,

3. பொருள் எளிதில் விளங்கத் தக்கதாக இருக்க வேண்டும் என்பர்.
பொருள் அரிதில் புலப்படுதலை விரும்புவர்.

4. வழிமோனை, தொகைகள் ஆகி யனவெல்லாம் ஓரளவிருப்பினும் ஏற்பர்.
அவை மிகுதியாக இருத்தலை விரும்புவர்.

5. ஒன்றனைப் புகழுங்கால் உலகியற் கைக்கு மாறுபடலாகாது என்பர்.
ஒன்றனைப் புகழுங்கால் உலகியற் கையை நோக்காது, எத்துணை உயர்த்த வேண்டுமோ, அத்துணையும் உயர்த்திச் சொல்லலாம் என்பர்.

இருவருக்கும் ஒத்த நெறிகள்:— பொருள் காரணமான இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலிற் பொருண்மை, சமாதி என்பன. சொல்லின் பம், வலி என்பன கௌடருள் ஒரு சாரார் விரும்புவன. (உரு)

புறனடை

உசு. [1]ஏற்ற செய்யுட்(கு) இயன்ற அணியெலாம்
முற்ற வுணர்த்தும் பெற்றிய தருமையிற்
காட்டிய நடைநெறி கடைப்பிடித் திவற்றொடு
கூட்டி யுணர்தல் ஆன்றோர் கடனே.

எ - ன், இச்சொல்லப்பட்ட அலங்காரங்கட் கெல்லாம் புற னடை உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: உலகத்து நிலைபேறுடைய செய்யுளனைத்திற்கும் பொருந்திய அணிவேறுபாடெல்லாம் ஒழிவின்றி யுணர்த்தும் பெற்றி அரிதாகலான், காட்டப்பட்ட ஒழுக்க நெறியே பற்றுக் கோடாக இவற்றோடுங் கூட்டிக் கொண்டுணர்தல் முற்றக் கற்றோரது கடனும் எ - று.

மாங்கனியும், தீம்பாலும், [2]வருக்கைச் சுளையும், சருக்கரை யும் தம்முள் வேறுபட்ட சுவைய வெனினும், கூறுவது மதுர மொன்றன்றே? அதுபோல, எழுத்துச் செறிவும், சொற்செறி வும், பொருட் செறிவும் செறிவெவ் வேறே சொல்லுவதல்லது, பிறிதொருவகை பேசிற் பெருகிய அகலமுடைத்தாமாகலின், அவையெல்லாம் உய்த்துணர்ந்து கொள்க. ஒழிந்தனவும் அன்ன. (உசு)

பொதுவணியியல் முற்றிற்று.

---

1. 'இயன்ற செய்யுட் கியைந்த' என்பதும் பாடம்.

2. பலாச் சுளை.

உ. பொருளணியியல்

காப்பு

என்னை யுடையாள் கலைமடந்தை யெவ்வுயிர்க்கும்
அன்னை யுடைய வடித்தளிர்கள் — இன்னளிசூழ்
மென்மலர்க்கே கன்று மெனவுரைப்பர் மெய்யிலா
வன்மனத்தே தங்குமோ வந்து.

இ-ள்: மிகவும் இழிவான என்னை அடிமையாகவுடையாள் கலைமடந்தை, எல்லாவுயிர்க்குந் தாயாயுள்ளவளது தளிராகிய அடியிணைகளானவை, இனிதாகிய பண் முரலும் வண்டுகள் சூழ் கின்ற மிருதுவாகிய மலரின் மீது மிதிப்பினும் கன்றும் என்று சொல்லா நிற்பர்; இத்தன்மையாகிய தளிரடிகள், உண்மையற்ற கடினமாகிய என் மனத்தின்கண் வந்து நிலையாக நிற்கும் எ-று.

ஓகாரம்-அசை. கலைமடந்தை என்பதற்குக் கலையையூரும் வனதுர்க்கை என்பாருமுளர்.

பொருளணிகள்

உஎ. தன்மை யுவமை யுருவகந் தீவகம்
பின்வரு நிலையே முன்ன விலக்கே
வேற்றுப் பொருள்வைப்பே வேற்றுமை விபாவனை
ஒட்டே யதிசயந் தற்குறிப் பேற்றம்
ஏது நுட்பம் இலேசம் நிரனிறை
ஆர்வ மொழிசுவை தன்மேம் பாட்டுரை
பரியா யம்மே சமாயிதம் உதாத்தம்
அரிதுண ரவநுதி சிலேடை விசேடம்
ஒப்புமைக் கூட்டம் மெய்ப்படு விரோதம்
மாறுபடு புகழ்நிலை புகழாப் புகழ்ச்சி
நிதரிசனம் புணர்நிலை பரிவருத் தனையே
வாழ்த்தொடு சங்கீ ரணம்பா விகம்இவை
[1]ஏற்ற செய்யுட் கணியே ழைந்தே.

இவ்வியல் என்ன பெயர்த்தோவெனின், பொருளாநும் அணி களது இயல்பு உணர்த்தினமையால், பொருளணியோத்து என்னும் பெயர்த்து. அஃதேல், சொல்லால் உணர்த்தப்படும் அணி ஈண்டு உணர்த்திலரோ வெனின், மிகுதி பொருள்மேலதாகலான் மிக்க தனாற் பெயர் தொடுக்கப்பட்டது.

இவ்வியலினுள் இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், அலங்காரங்களின் பெயரும், முறையும், தொகையும் உணர்த் துதல் நுதலிற்று.

இ-ள்: தன்மையும், உவமையும், உருவகமும், தீவகமும், பின்வருநிலையும், முன்ன விலக்கும், வேற்றுப்பொருள் வைப்பும், வேற்றுமையும், விபாவனையும், ஒட்டும், அதிசயமும், தற்குறிப்

1. 'ஏற்ற செய்யுட் கியன்ற வணியே' என்பதும் பாடம்.

பேற்றமும், ஏதுவும், நுட்பமும், இலேசமும், நிரனிறையும், ஆர்வ மொழியும், சுவையும், தன்மேம்பாட்டுரையும், பரியாயமும், சமாயிதமும், உதாத்தமும், அவநுதியும், சிலேடையும், விசேடமும், ஒப்புமைக் கூட்டமும், விரோதமும், மாறுபடு புகழ்நிலையும், புகழாப் புகழ்ச்சியும், நிதரிசனமும், புணர்நிலையும், பரிவருத்தனையும், வாழ்த்தும், சங்கீரணமும், பாவிகமும் என இவை முப்பத்தைந்தும் மேற்கூறிய செய்யுட்கு அலங்காரமென்று சொல்லப்படும் எ - று.

இவை யெல்லாம் உம்மை தொகுத்து எண்ணேகாரம் இடையிட்டு எண்ணப்பட்டவற்றை அவ்வும்மை விரித்து உரைக்கப்பட்டன. தன்மையும் உவமையும் என விரித்துக்கொள்க.

அஃதேல், இது முறைமையாயினவாறு என்னையோ வெனின், இயல்பு விகாரம் [1]என இரண்டல்லது வேறில்லை; அவற்றுள் தன்மை, இயல்பாகலான் [2]முற்கூறப்பட்ட முறைமைத்தாய்த் தன்மை யென்றும் சொன்னடையென்றும் சொல்லப்படும். உவமை விகாரமாய் மிக்க வரவிற்றாய்ப் [3]பின் வருகின்ற பல அலங்காரங்கட்கு உபகார முடைத்தாகலால் தன்மையின்பின் வைக்கப்பட்டது. ஒழிந்தனவும் வைத்தவாறு உய்த்துணர்ந்து கொள்க: ஈண்டுரைப்பிற்பெருகும். அல்லதூஉம் தொல்லாசிரியர் சொல்லிய நெறியெனினும் அமையும்.

இனி 'ஏற்ற' என்றதனால், சில செய்யுட்கு ஏற்றுச் சில செய்யுட்கு ஏலாதனவும் உள ஒருதிறத்து அணி எனக் கொள்க.

'**அரிதுண ரவநுதி**' என்று சிறப்பித்தவனால், சிறப்பு முதலாயினவற்று உண்மை மறுக்குங்கால், அம்மறையானே ஒரு புகழ் தோன்ற வைக்கப்படுமென்பது. அஃது அதன் இலக்கணம் கூறும் வழியே உணர்ந்துகொள்க.

'**மெய்ப்படு விரோதம்**' என்பதற்கு மெய்யென அடை கொடுத்தது, [4]தமிழாசிரியர் முரண்தொடை என்று தொடைப்பாற்படுத்துச் செய்யுட்கு உறுப்பாக்கினார்; இவ்வாசிரியர் அதனை அலங்காரத்தின்பாற் படுத்தினாராகலின் அவ்வேறுபாடு அறிவித்தற்கு எனக் கொள்க.

இவையெல்லாம் [5]மேற் சூத்திரச் சுருக்க நோக்கி ஈண்டு உரைக்கப்பட்டன. ஒழிந்த அகலம் உரையிற் கொள்க. (க)

க. தன்மையணி

௨அ. எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்கும்
சொன் முறை தொடுப்பது தன்மை யாகும்.

எ - ன், நிறுத்த முறையானே தன்மை யென்னும் அலங்காரத்துப் பொதுவிலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: எவ்வகைப்பட்ட பொருளும், மெய்ம்மைக் கூறுபாட்டான் விளக்குஞ் சொன்முறையாற் பாடப்படுவது தன்மை என்னும் அலங்காரமாம் எ - று. (௨)

---

1. 'என்று இரண்டலவே அவற்றுள்' என்பதும் பாடம். 2. 'முற்படு முறைமைத்தாய்' என்பதும் பாடம். 3. 'பிற வக்கிரவடை அலங்காரங்கட்கு' என்பதும் பாடம். 4. தமிழாசிரியா - யாப்பிலக்கண ஆசிரியர். 5. 'மேற் சூத்திரக் கருத்து நோக்கி' என்பதும் பாடம்.

அதுவே அதன் வகை

௨௬. பொருள் குணஞ் சாதி தொழிலொடு புலனும்.

எ - ன், தன்மையது பகுதியாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: அத்தன்மை பொருளும், குணமும், சாதியும், தொழிலும் என்னும் இவைபற்றித் தோன்றும் எ - று.

அவற்றுள்,

(க) பொருட்டன்மை

'நீல மணிமிடற்ற னீண்ட சடைமுடியன்
நூலணிந்த மார்பன் நுதல்விழியன் – தோலுடையன்
கைம்மான் மறியன் கனன்மழுவன் கச்சாலை
எம்மான் இமையோர்க் கிறை'

இ - ள்: கருங்குவளை போன்ற அழகிய மிடற்றினையும், முடியின் கண்ணே நீண்டிருக்கப்பட்ட சடையினையும், மார்பினிடத்தே யணியப்பட்ட முப்புரி நூலினையும், நெற்றியின்கட் சேர்ந்த விழியினையும், உடையாக அசைத்த தோலினையும், கரதலத் தேந்திய மானினையும், கனல் போன்ற மழுவினையும், திருக்கச்சாலை யென்னும் திருப்பதியினையும் உடையவனாய் எம்மை யாண்டுகொண்ட பெரியோன் இமையவர்க்குத் தலைவன் எ - று.

அன் - சாரியை. நீலமணி போன்ற மிடற்றினையுடையன் எனவும், நீலத்தையுடைய அழகிய மிடற்றினன் எனவும் அமையும். மிடற்றன், சடையன், மார்பன், விழியன் எனச் செவ்வெண்ணாக்கினும் அமையும். மணி - அழகு. 'கன மழுவன்' எனப் பாடமோதிப் 'பெரிய மழுவினன்' என்பாருமுளர். கனலையும் மழுவையும் உடையன் என்றாக்கினும் அமையும். நீலம் - கருங்குவளை; அஃது ஆகுபெயரால் பூவெனக் கொள்க. 'கச்சாலை எம்மான்' என்றது, கச்சாலையிலே உறையும் பெரியோன் எனினும் அமையும்.

(வி - ரை) சிவபெருமானாகிய பரம்பொருளினிடத்துள்ள பலவிதமான தன்மைகள் இப்பாடலில் கூறப்படுவதால், இது பொருள்தன்மை யாயிற்று.

(உ) குணத் தன்மை

'உள்ளங் குளிர வுரோமஞ் சிலிர்த்துரையும்
தள்ளவிழி நீரரும்பத் தன்மறந்தாள் - புள்ளலைக்கும்
தேந்தா மரைவயல்சூழ் தில்லைத் திருநடஞ்செய்
பூந்தா மரைதொழுத பொன்'

இ - ள்: நெஞ்சமானது குளிர மெய்ம்மயிரரும்பி மாற்ற முந் தளரக் கண்ணிலே புனல் தோன்றத் தன்னுருவத்தையும் மறந்தாள்; புட்குலம் அலைக்கா நின்ற மது நிறைந்த தாமரையையுடைய பழனஞ் சூழ்ந்த தில்லைப் பொதுவின் கண்ணே அழகுடைத்தாகிய கூத்தையாடுகின்ற சபாபதியின் பொலிவினையுடைய திருவடித் தாமரையை வணங்கின பொன்னையொப்பாள் எ - று.

பொன் தன்னை மறந்தாள் எனக் கூட்டுக. பூந்தாமரை - சீர் பாதம். 'உரையுந்தள்ள' என்னும் உம்மையால், நாணும், மடம், அச்சம், பயிர்ப்பு என்பனவும் தளர எனக் கொள்க. புள்ளலைக்கும் வயல் - புள்ளலைக்கும் தாமரை எனினும் அமையும்.

(வி - ரை) இது தில்லை நடராசப் பெருமானைத் தொழுதலால் ஆகும் இன்பத்தின் தன்மையைக் கூறுதலின் குணத்தன்மை யாயிற்று.

(௩) சாதித் தன்மை

'பத்தித் தகட்ட கறைமிடற்ற பைவிரியும்
துத்திக் கவைநாத் துளையெயிற்ற - மெய்த்தவத்தோர்
ஆகத்தான் அம்பலத்தான் ஆரா வமுதனையின்
பாகத்தான் [1] சாத்தும் பணி'

இ - ள்: பத்தியாகிய வரைகள் பொருந்திய வயிற்றினை யுடையனவாய்க் கருமையாகிய மிடற்றினை யுடையனவாய்ப் படத்தின்கண் விரிந்த பொறி நிறத்தையும், இரண்டு பிரிவான நாவையும், புரையை யுடைய பல்லினையும் உடையனவா யிருப்பன; மெய்யாகிய தவத்தினை யுடையோர் அகத்தின்கண் ணுள்ளான், அம்பலத்திலே நிற்பான், பருகாத அமுதமன்ன உமாதேவியின் பாகத்தை யுடையான் சாத்தும் பணிகள் எ - று.

'பத்தித்த அகட்ட' என்பது 'பத்தித் தகட்ட'வென விகார மாயிற்று. அகடு - வயிறு. துத்தி - நிறம். 'அகத்தான்' என்பது 'ஆகத்தான்' என முதல் நீண்டது. ஆர்தல் - உண்ணல்.

(வி - ரை) இது பாம்புச் சாதியின் பலவிதமான தன்மைகளைக் கூறுத லின் சாதித்தன்மை யாயிற்று.

(௪) தொழிற்றன்மை

'சூழ்ந்து முரன்றணவி வாசத் துதைந்தாடித்
தாழ்ந்து மதுநுகர்ந்து தாதருந்தும் - [2]வீழ்ந்தபெரும்
பாசத்தார் நீங்காப் பரஞ்சுடரின் பைங்கொன்றை
வாசத்தார் நீங்காத வண்டு'

இ - ள்: பாச நீங்கிய முத்தர்களை விட்டு நீங்காத பரஞ்சோதி யின் வாசனையை யுடைய பசுமையாகிய கொன்றை மாலையைப் பிரியாத வண்டு, சூழ்ந்து பண்ணை முரன்று சேரச் சென்று மணத் தைச் செறிந்து மீதே பறந்து விரும்பி மதுவை யுண்டு தாதைக் கோதா நிற்கும் எ - று.

துதைதல் - செறிதல். ஆடுதல் - பறத்தல். தாழ்தல், வீழ்தல்- விரும்புதல். நுகர்தல் - உண்டல். அருந்துதல் - கோதுதல்.

அல்லதூஉம்,

'மான்ஏற் பள்ளி மகவொடு முடங்கி
ஈன்பிண வொழியப் போகி நோன்காழ்
இரும்புதலை யாத்த திருந்துகணை விழுக்கோல்
உளிவாய்ச் சுரையின் மளிர மிண்டி

1. 'சூடும் பணி' என்பதும் பாடம்.
2. 'வீழ்ந்தவிழ்ந்த' என்பதும் பாடம்.

விருகிலக் கரம்பைப் படுநீ றாடி
நுண்புல் லடக்கிய வெண்பல் லெயிற்றியர்
பார்வை யாத்த பறைதாள் விளவின்
நீழன் முன்றி னிலவுரற் பெய்து' (பெரும்பாண்: அகூ - கூகூ)

என்பதூஉம் அவ்வலங்காரம். இஃது இலக்கியத்திற் சிறுபான்மை; இலக்கணத்துள்ளே பயின்று வருமெனக் கொள்க.

(வி - ரை) 'சூழ்ந்து......வண்டு' - இப்பாடல் வண்டு தாதருந்துதலாகிய தொழிற்கண் உள்ள பலவிதமான தன்மைகளைக் கூறுதலின், தொழில் தன்மை யாயிற்று.

'ஞான்றேற் பள்ளி' என்று தொடங்கும் பாடல், எயிற்றியர் புல்லரிசிச் சோறு அமைக்குமாற்றை விவரிக்கும் பகுதியாகும். இப்பகுதிக்குரிய பொருள்:—'பிள்ளையைப் பெற்ற எயிற்றி மான் தோலாகிய படுக்கையிலே அப்பிள்ளையுடன் முடங்கிக் கிடக்க, ஒழிந்தோர் போய்ப் பூண் தலையிலே அழுத்தின நன்றாகிய திரட்சியையும் வலியையும் உடைத்தாகிய உயிரத்தினையுமுடைய சீரிய கோல் செருகின உளிபோலும் வாயினையும் உடைய பாரைகளாலே, கட்டிகள் கீழ் மேலாகக் குத்துகையினாலே, கருநிலமாகிய கரம்பை நிலத்திலுண்டாகிய புழுதியை அளைந்து மெல்லிய புல்லரிசியை வாரியெடுத்துக் கொண்ட வெள்ளிய பல்லையுடைய எயின் குடியிற் பிறந்த மகளிர் பார்வைமான் கட்டி நின்ற தேய்ந்த தாளினையுடைய விளவினது நிழலையுடைய முற்றத்திடத்துத் தோண்டின நிலவுரலிலே அப்புல்லரிசியைச் சொரிந்து'

(நச்சினார்க்கினியர் உரை)

இது எயிற்றியர் புல்லரிசியைக் காடுகளிலிருந்து கொண்டு வந்ததாகிய தொழில் தன்மையைக் கூறுதலின், தொழில்தன்மை யாயிற்று. (௩)

உ. உவமையணி

௩௦. பண்புந் தொழிலும் பயனுமென்(று) இவற்றின்
ஒன்றும் பலவும் பொருளொடு பொருள்புணர்த்(து)
ஒப்புமை தோன்றச் [1]செப்புவ(து) உவமை.

எ - ன், உவமை என்னும் அலங்காரத்தின் பொது இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: பண்பு, தொழில், பயன் என்பன காரணமாக ஒன்றாகியும், பலவாகியும் வரும் பொருளோடு பொருள் இயைய வைத்து ஒப்புமை புலப்படப் பாடுவது உவமை யென்னும் அலங்காரமாம் எ - று.

ஒன்றும் பலவும் பொருளொடு பொருள் புணர்த்தலாவது - ஒரு பொருளோடு ஒருபொருளும், ஒரு பொருளோடு பல பொருளும், பல பொருளோடு பல பொருளும், பல பொருளோடு ஒரு பொருளும் இயைய வைத்துப் பாடுவது.

1. 'செப்பி னஃதுவமை' என்பதும் பாடம்.

அவற்றுள்,

(க) பண்புவமை

'பவளத் தன்ன மேனி' (குறுங் - கடவுள்) எனவும், 'வேய்புரை பணைத் தோள்' எனவும், 'தெம்முனை யிடத்திற் சேயகொல், அம்மா வரிவை யவர் சென்ற நாடே' எனவும் வரும்.

(உ) தொழிலுவமை

'அரிமா வன்ன வணங்குடைத் துப்பிற், றிருமா வளவன்' (பட்டினப்: உகூஅ - கூ) எனவும், 'களிற்றிரை தெரீஇய பார்வ லொதுக்கின், ஒளித்தி யங்கு மாபின் வயப்புலிபோல, நன்மனை நெடுநகர் காவலர் அறியாமை........ நோய்தணி காதலர்வர' (அகம் - உஉ) எனவும் வரும்.

(ங) பயனுவமை

'மாரி யன்ன வண்மைத், தேர்வே ளாயைக் காணிய சென்மே' (புறம் - கங௩) எனவும், 'செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை' (திருமுருகு - ரு) எனவும் வரும்.

அஃதேல் 'வேய்புரை பணைத்தோள்' என்பது வடிவுவமை எனவும், 'தெம்முனை யிடத்திற் சேயகொல் என்பது எல்லையுவமை எனவும் சொல்லுபவா லெனின்;

'வண்ணத்தின் வடிவின் அளவிற் சுவையினென்(று)
அன்ன பிறவும் அதன் குணம் நுதலி
இன்ன திதுவென வரூஉ மியற்கை
என்ன கிளவியும் பண்பின் தொகையே'

(தொல் - சொல் - ௪கக)

என்புழி வடிவும் பண்பெனக் கூறினர் ஆசிரியர்தொல்காப்பியனார். சேய்மை அணிமை என்பனவும் அளவாகலாற் பண்பெனப்படும்.

இனி, ஒரு பொருளோடு ஒரு பொருள்: 'செவ்வான் அன்ன மேனி' (அகம் - கடவுள் வாழ்த்து) எனவும், ஒரு பொருளோடு பல பொருள்: 'அவ்வான், இலங்கு பிறை யன்ன விளங்குவால் வையெயிற்று' (அகம் - கடவுள்) எனவும், பல பொருளோடு பல பொருள்: 'களிறே....சுறவினத் தன்ன வாளோர் மொய்ப்ப, மரீஇயோ ரறியாது மைந்துபட் டன்றே' (புறம் - க௩) எனவும், பல பொருளோடு ஒரு பொருள்: [1]பெரும்பெயர்க் கரிகாலன் முன்னிலைச் செல்லார்....பீடின் மன்னர் போல, ஓடுவை மன்னால் வாடைநீ யெமக்கே' (அகம்-கஉரு) எனவும் வரும்.

அஃதேல் உவமையும் பொருளும் ஒத்த பண்புமாவன யாவை? யெனின்; 'பவளம் போலுஞ் செவ்வாய்' என்புழிப் 'பவளம்' உவமை யெனவும், உவமானம் எனவும் படும். 'வாய்' பொருள் எனவும், உவமேயம் எனவும் படும். 'செம்மை' இரண்டிற்கும் பொதுவாகிய குணம் எனப்படும். 'போலும்' என்பது உவமை யுருபிடைச்சொல். இஃது பண்பு காரணமாக வந்த உவமை எனப் படும். இதனை உவமை யென்றது என்னை யெனின், 'பவளவாய்' என்பதனைத் தொகையுவமை என்றும், 'பவளச் செவ்வாய்' என் பதனை விரியுவமை என்றுங் கூறுபவாதலான். அல்லதூஉம் 'பவளம்

1, 'பெருவளக் கரிகால் முன்னிலைச் செல்லார்' என்பதும் பாடம்

போலச் செய்யவாய்' என்பதனை முற்றுவமை என்றுங் கூறுபவா கலின். ஈண்டு உவமை யலங்கார மென்பது அத்தொடர்ச்சொல் முழுவதும் எனக்கொள்க.

மற்றும் பண்பியும், பண்பும், தொழிலும், பயனும் எனக் கூறப்படுவன நான்கு. அவற்றுள் **பண்பி**யென்பன: காட்சிப்பொரு ளும் கருத்துப் பொருளுமாகிய இயங்குதிணையும் நிலத்திணையு மாம். **பண்பு** என்பன: அவற்றின் குணமாய்த் தோன்றித் தமக்கு வேறு குணமின்றி நிகழ்வன. **தொழில்** என்பன: அவற்றின் புடை பெயர்ச்சியாய்க் காலம் புணர்ந்து நிற்பன. **பயன்** என்பன: அவை காரணமாகப் புலப்படுங் காரியம்.

பண்பியாகிய ஒருபொருட்கு ஒருபொருள் உவமை யாங்கால், இரண்டற்கும் பொதுவாகியதொரு குணம் ஏதுவாக லானும், தொழில் ஏதுவாகலானும், பயன் ஏதுவாகலானும் ஒப்பித்து உரைக்கப்படும்.

'என்று இவற்றின்' என்பதனுன், பண்பு தொழில் பயன் என் பன ஓரோவொன்றே யன்றிப் பலவும் காரணமாக வரும். அவை:—

> 'கான யானை கைவிடு பசுங்கழை
> மீனெறி தூண்டிலி னிவக்கும்
> கான நாடன்' (குறுந் - ருச)

என்பது தொழிலும், பண்பும்.

> 'காந்தள், அணிமலர் நறுந்தா தூதும் தும்பி
> கையாடு வட்டிவிற் றோன்றும்' (அகம் - கoஅ)

என்பது பண்பும் தொழிலும். அல்லதூஉம், அவ்விலேசானே பண்பு, தொழில், பயன் என்பனவே யன்றிச் சொற்பொதுமை காரணமாகவும் பிற காரணமாகவும் வரும் உவமை அலங்கார மென்பது. அவை 1 முன்னர் உரைக்கப்படும்.

'ஒப்புமை தோன்ற' என்றதனுல், அவ்வுவமை கேட்போர் உளங்கொண்டு விளங்கத் தோன்றுவதேயாகல் வேண்டும்; யாதானும் ஒரு முகத்தாற் கூறற்க என்பது.

(வி - ரை) பண்புவமை.—'பவளத்தன்ன மேனி' என்பது வண்ணப் பண்பு. 'வேய்புரை பணைத்தோள்' என்பது மூங்கில் போன்ற பருத்த தோள் எனப் பொருள் படுதலின் வடிவுப் பண்பாம். 'தெம்முனை...நாடே' என்பது 'தோழீ! தலைவன் நம்மை விட்டுப் பிரிந்து சென்ற நாடு பகைவர் முனையிடத்தினும் செய்மை யுடையதோ?' எனப் பொருள்படுதலின் அளவுப் பண்பாம்.

தொழிலுவமை—'அரிமா வன்ன....வளவன்' என்பது சிங்கத்தை யொத்த பகைவர்க்கு அஞ்சத்தக்க வலிமையுடையவன் கரிகாற் பெருவளத் தான் எனப் பொருள்படும். அச்சத்தைத் தருதலாகிய தொழில்பற்றிச் சிங்கம் வளவனுக்கு உவமையாயிற்று. 'களிற்றிரை...போல' என்பது யானை யாகிய உணவைத் தின்னத் தேடிக்கொண்டு வரும் புலி பக்கப்பார்வையுடன் பதுங்கி வருதல் போலத், தலைவியிடத்து இன்பந் துய்த்தற்காக வரும்

1. 'பிறிமொழிச் சிலேடை யுவமை'யைக் காண்க.

தலைவன், மனையிலுள்ளாரும் காவலர் முதலியோரும் அறியாதவாறு தலைவியின் வீட்டிற்கு வருகின்றான் எனப் பொருள்படும். தப்புதலின்றித் தலைவியைப் பெறுதற்காக வரும் தலைவனுக்குத் தப்புதலின்றி இரையைக் கொள்ள வரும் புலியை உவமை கூறினமையின் இது தொழிலுவமையாயிற்று.

பயனுவமை:—'மாரியன்ன......சென்மே' என்பது மழை பொழியும் மேகத்தை யொத்த கைம்மாறு கருதாத கொடைத் தன்மையையும், தேரையும் உடைய ஆய் அண்டிரான் எனப் பொருள்படும். ஆய் அண்டிரானின் கொடைத்தன்மையால் விளையும் பயனுக்கு, மழையின் பயனால் விளையும் நன்மையை உவமை கூறுதலின் பயனுவமையாயிற்று. 'செறுநர்த்...தடக்கை' என்பது பகைவரை அழித்தற்கு இடியை யொத்த பெருமையையுடைய கை எனப் பொருள்படும். இடியால் விளையும் பயனைக் கையால் விளையும் பயனுக்கு உவமை கூறினமையின் பயனுவமை யாயிற்று.

பண்புவமைக்கு எடுத்துக் காட்டியனவற்றுள் முதற்கண்ணதாகிய நிறம் பற்றிய உவமை பண்பில் அடங்குவதில் தடையில்லை. ஆனால் அடுத்துக்கூறிய வடிவும், அளவும் கூடப் பண்பில் அடங்குமாறு எங்ஙனம்? என்ற வினாவை எடுத்துக்கொண்டு உரையாசிரியர் விடை கூறுகின்றார். தொல்காப்பியர் பண்பில் நிறத்தையேயன்றி, வடிவு, அளவு (எல்லை), சுவை ஆகிய மூன்றும் அடங்கும் என 'வண்ணத்தின்' என்று தொடங்கும் நூற்பாவில் கூறுகின்றாராதலின், வடிவும் அளவும் பண்பில் அடங்கத் தடையில்லை என்பது அவர் தரும் விடையாகும். நன்னூலார் பண்பில் இந்நான்கு மட்டுமேயன்றி வேறு பிறவும் அடங்கும் என்பாராக 'அளவுஅறிவு ஒப்பு வடிவு நிறம்கதி, சாதி குடி சிறப் பாதிப் பல்குணம்' (நன் - உளசு) என யாத்திருப்பதும் ஈண்டு நினைவு கூர்தற்குரியதாம்.

'செவ்வான் அன்ன மேனி' அவ்வான், இலங்குபிறையன்ன விளங்குவால் வையெயிற்று' என்ற அடிகள், அகநானூற்றில் கடவுள் வாழ்த்தாகக் கூறப் பட்ட முதற்பாடலில் உள்ளனவாகும். இப்பாடல் முழுமுதற் கடவுளான சிவ பெருமானின் திருவுருவினைப் பாராட்டி அப்பெருமானின் திருவடிக்கீழ் உலகம் இருத்தலினாற்றான் இனிது இயங்குகிறது என்று கூறுவதாகும்.

'செவ்வான் அன்ன மேனி' என்பதில் செவ்வானமாகிய ஒரு பொருளை இறைவனின் திருமேனியாகிய ஒரு பொருளுக்கு உவமை கூறுவதால் ஒரு பொருளோடு ஒரு பொருள் ஆயிற்று. வானத்தில் விளங்குகின்ற பிறையின் வெண்மையைப் போன்று அப்பெருமானின் பற்கள் வெண்மையாக வுள்ளன என்பது அடுத்தவரியின் பொருளாகும். இங்ஙனம் பிறையாம் ஒரு பொருளைப் பற்களாம் பல பொருளுக்கு உவமை கூறுதலின் இது ஒரு பொருளோடு பல பொருளாயிற்று. 'களிறே . . . . பட்டன்றே' என்பது யானையானது சுறு மீனின் கூட்டத்தை யொத்த வாட்படை வீரர்கள் சூழத் தன்மீது இவர்ந்த பாகரை மதியாது மதம் மிக்கது என்று பொருள்படும். சுறவினமாகிய பல் பொருளை வாளோராகிய பல் பொருளுக்கு உவமை கூறினமையின் இது பல பொருளோடு பல பொருள் ஆயிற்று. 'பெரும்பெயர்க் . . . . எழுக்கே' என்பது மிகு புகழையுடைய கரிகாற் பெருவளத்தானின் முன்னிலையிற் சென்று பொரும் ஆற்றல் இல்லாதவராய்ப் பகைவர்கள் புறமுதுகிட்டோடுமாறு, 'வாடைக் காற்றே! நீயும் என்னுடைய தலைவன் வர ஓடுவை' எனப் பொருள்

படும். பகை மன்னரைப் போல என்ற பொருளை, வாடையாகிய ஒரு பொரு ளுக்கு உவமை கூறினமையின் பல பொருளோடு ஒரு பொருள் ஆயிற்று.

ஒரு பொருளோடு ஒரு பொருளை உவமிக்கும் பொழுது, பண்பு பற்றியோ தொழில்பற்றியோ பயன்பற்றியோ உவமிக்க வேண்டும் என்பது நூற்பாவின் கருத்து. 'என்றிவற்றின்' என்ற மிகையால் ஒரு பொருளோடு ஒரு பொருளை உவமிக்கும் பொழுது, இம்மூன்றனுள் ஒரோவொன்றன்றி இரண்டும் மூன்றும் காரணமாகவும் உவமிக்கப்படும் என்பது பெறப்படுகின்றது. தொல்காப்பியர் 'விரவியும் வரூஉம் மரபின என்ப' என்று கூறிய இலக்கணத்தையே இவ்வுரை யாசிரியர் இம்மிகையால் அடக்கிக் கூறுகின்றார்.

'கான யானை . . . . நாடன்' என்பது காட்டின் கண்ணுள்ள யானையின் துதிக்கையால் பற்றிவிடப்பட்ட மூங்கில், மீன் பிடிக்கும் தூண்டில் போல ஓங்கி யெழப்பெற்ற காட்டு நாட்டையுடையவன் எனப் பொருள்படும். 'காந்தள் . . . . தோன்றும்' என்பது அழகிய காந்தள் மலரில் வாசனை பொருந்திய தாதினை மொய்த்து ஊதுகின்ற வண்டு, கையில் வைத்து ஆடப்படும் வட்டு என்னும் கருவியை யொக்கும் எனப் பொருள்படும். இவற்றுள் முன்னையதில் வடிவுப் பண்பும் தொழிலும் பற்றி உவமிக்கப்பட்டவாறும், பின்னையதில் நிறப் பண்பும் தொழிலும்பற்றி உவமிக்கப்பட்டவாறும் அறிக.

'ஒப்புமை தோன்ற' என்பதால் எதனையும் எதற்கும் உவமையாக்கல் கூடாது. கூந்தலின் கருமைக்கு மேகத்தை உவமை கூறலன்றிக், கருமை நிறம் ஒன்றேபற்றிக் காக்கையின் நிறத்தை உவமை கூறல் தக்கதன்றாம். ஆதலால்தான் உவமையைக் கேட்போர் மன மகிழுமாறு உவமை கூறவேண் டும் என்றார். கேட்போர் உளங்கொள்ளுமாறு - கேட்போர் மன மகிழுமாறு.

(௪)

அதன் வகை

ரு௧. அதுவே
விரியே தொகையே யிதர விதரம்
உரைபெறு சமுச்சயம் உண்மை மறுபொருள்
புகழ்தல் நிந்தை நியமம் அநியமம்
ஐயந் தெரிதரு தேற்றம் இன்சொல்
எய்திய விபரீதம் இயம்புதல் வேட்கை
பலபொருள் விகாரம் மோகம் அபூதம்
பலவயிற் போலி யொருவயிற் போலி
கூடா வுவமை பொதுநீங் குவமை
மாலை யென்னும் பால தாகும்.

எ - ன், அவ்வுவமையை விரித்து உணர்த்துதல் நுதலிற்று

இ - ள்: அச்சொல்லப்பட்ட உவமை யலங்காரம், விரியுவமை யும், தொகை யுவமையும், இதரவிதரவுவமையும், சமுச்சய வுவமையும், உண்மை யுவமையும், மறுபொருளுவமையும், புகழுவமையும், நிந்தையுவமையும், நியமவுவமையும், அநியம வுவமையும், ஐயவுவமையும், தெரிதருதேற்ற வுவமையும், இன் சொலுவமையும், விபரீத வுவமையும், இயம்புதல் வேட்கை யுவமையும், பல பொருளுவமையும், விகார வுவமையும், மோக வுவமையும், அபூத வுவமையும், பலவயிற்போலி யுவமையும், ஒருவயிற்போலி யுவமையும், கூடா வுவமையும், பொதுநீங்கு

வுவமையும், மாலை யுவமையும் என்னும் இருபத்து நான்கு பாகு பாடுஉடையதாம் எ - று.

இவையெல்லாம் சொல்லின் முடியும் இலக்கணத்தவாகலாற் பெரும்பான்மையும் தம் பொருளே இலக்கணம் புலப்படுத்தும்; அல்லது உரையினுங் கொள்க.

(வி - ரை) சொல்லின் முடியும் இலக்கணத்தன—கூறப்பட்ட சொற்களிலிருந்தே அவற்றின் இலக்கணமும் புலப்படுமாறு இருப்பன. எனவே விரியுவமை எனவே இன்னவை விரிந்து நிற்பது என்பதும், தொகையுவமை எனவே இன்னவை மறைந்து வரும் என்பதும் தாமே விளங்கும் என்பதாம். எனினும் உரையில் ஆங்காங்கு விளக்கப்பட்டுள்ளன.

அவற்றுள் (க) விரியுவமை என்பது பண்பு முதலியன விரிந்து நிற்பது.

எ - டு: 'பால்போலு மின்சொற் பவளம்போற் செந்துவர்வாய்
சேல்போற் பிறழுந் திருநெடுங்கண்—மேலாம்
புயல்போற் கொடைக்கைப் புனனுடன் கொல்லி
அயல்போலும் வாழ்வ தவர்'

இ - ள்: பாலை யொத்து இனிதாகிய சொல்லினையும், பவளத்தை யொத்துச் சிவந்து விளங்கிய வாயினையும், சேலை யொத்துப் பிறழ்தலால் விளங்கிய அழகினை யுடைத்தாகிய நெடிய கண்ணினையுமுடைய அவர் வாழுமிடம், மின்னும் முழக்கமும், காலவரைவுமின்றிச் சான்றோராலே புகழப்பட்டு உயர்ந்த நெறியே ஒழுகிய மழை போன்று கொடுத்தலால் விளங்கிய கையை யுடையனுகிய சோழனுடைய கொல்லிமலைப் பக்கம் போலும் எ - று.

பிறழ்தல் - உகளுதல். திரு - அழகு. புயல் - மழை. புனனுடன் - சோழன். கொல்லி - ஒரு மலை. அயல் - பக்கம்.

(வி - ரை) பண்பு முதலியன - பண்பும் தொழிலும் பயனும் ஆகியன. பொருளுக்கும் உவமைக்கும் பொதுத்தன்மையாகவுள்ள இவை விரிந்து நிற்பது விரியுவமையாம்.

'பால் போலும் இன்சொல்,' 'பவளம்போல் செந்துவர்வாய்' என்ற தொடர்களில் இனிமையும் செம்மையுமாகிய பண்பும், 'சேல்போல் பிறழுந் திருநெடுங்கண்' என்ற தொடரில் பிறழ்தலாகிய தொழிலும், 'புயல்போல் கொடைக்கை' என்ற தொடரில் கொடையாகிய பயனும் விரிந்து நிற்றல் காண்க.

இனி உவமையும் பொருளும் உருபும் பொதுத்தன்மையும் ஆகிய நான்கும் விரிந்து வருதலே விரியுவமை என்பாரும் உளர். இப்பாடல் இதற்கும் ஒக்கும். பொருள் - உபமேயம்.

(உ) தொகையுவமை என்பது பண்பு முதலியன தொக்குநிற்பது.

எ - டு: 'தாமரை [1]வாண்முகத்துத் தண்டரளம் போன்முறுவல்
காமரு வேய்புரைதோட் காரிகையீர்!—தேமருவும்
பூங்குழலின் வாசப் பொறைசுமந்து நொந்ததோ
பாங்குழலுந் தென்றற் பரிசு'

1. 'போல்முகத்து' என்பதும் பாடம்.

இ - ள்: தாமரை போன்ற ஒளியை யுடைய முகத்தினையும், குளிர்ந்த முத்துப் போன்ற நகையினையும், அழகு மருவிய வேய் போன்ற தோளினையும் உடைய மாதரீர்! உம்முடைய பக்கத்திலே யுலாவுகின்ற தென்றலின் தன்மை, உம்முடைய தேன் பொருந்திய பூவினையுடைத்தாகிய குழலின்கண் உண்டாகிய நறுநாற்றப் பாரத்தைத் தாங்கிக்கொண்டு வருகின்ற. வருத்தந் தானோ மெல்லிய வுருவுடைத்தானது? சொல்லுவீராக எ - று.

பொறை - பாரம். பரிசு - தன்மை.

(வி - ரை) முகத்திற்குத் தாமரையையும், முறுவலுக்கு முத்தையும், தோளிற்கு மூங்கிலையும் உவமையாகக் கூறப்பட்டிருப்பினும், இன்ன தன்மையால் உவமை கூறப்பட்டது என்னும் பொதுத்தன்மையை மறைத்துக் கூறியுள்ளமையால் இது தொகையுவமையாயிற்று.

உவமை, பொருள், உவம உருபு, பொதுத்தன்மை ஆகிய நான்கனுள் ஒன்றேனும் இரண்டேனும் மூன்றேனும் தொக்கு வருவது தொகையுவமை என்பர் தண்டியலங்காரசார ஆசிரியர். தொகையுவமையைத் தொல்காப்பியர் 'சுட்டிக்கூறா உவமை' என்பர்.

(ரு) **இதரவிதர வுவமை** என்பது பொருள் ஒருகால் உவமையாயும், உவமை ஒருகாற் பொருளாயும் ஒருதொடர்ச்சிக் கண்ணே வருவது.

எ - டு: 'களிக்குங் கயல்போலு நுங்கணுங் கண்போல்
களிக்குங் கயலுங் கனிவாய்த் - தளிர்க்கொடியீர்!
தாமரைபோல் மலரு நும்முகம் நும்முகம்போல்
தாமரையுஞ் செவ்வி தரும்'

இ - ள்: கொவ்வைக் கனிபோன்ற வாயினையுடைத்தாய்த் தளிரோடு கூடிய கொடிபோன்ற மடவீர்! செருக்கினை யுடைத்தாகிய கயல்போன்ற தன்மையை யுடைத்தாயிருந்தன நும்முடைய நாட்டங்களானவை; இத்தன்மைத்தாகிய உம்முடைய நாட்டங்களிற்கு உவமையாகின்றன கயற்குலமானவை. இஃதன்றியே, உம்முடைய முகமண்டலமானது தாமரைபோல் மலரா நின்றது; அத்தன்மைத்தாகிய தாமரை உம்முடைய முகமண்டலம் போலச் செவ்வியினையுடைத்தாகின்றது எ - று.

'தளிபெற்று வைகிய தண்சுனை நீலம்
அளிபெற்றார் கண்போல் அலரும் - அளிபெற்ற
நல்லார் திருமுகத் தாற்ற ளிர்பெற்ற
கல்லாரம் போன்மலருங் கண்'

என்பதூஉம் அது.

இ - ள்: மழையை ஏற்றுக் கோடலின் தட்பத்தை யுடைத்தாகிய சுனையின்கண் இருக்கின்ற நீலப்பூவானது தலைவரால் நலம் பாராட்டப் பெற்ற மடவார்கண்ணேபோல மலரா நின்றது; அத்தன்மைத்தாக அளிபெற்ற நல்லாராகிய மடவாருடைய அழகிய முகமண்டலத்து மிகக் குளிர்ச்சியை யுடைத்தாகிய கண்களும் நீலம்போல மலரா நின்றன எ - று.

தளி — மழைத்துளி.. ஆற்ற — மிக.

(வி - ரை) இதரவிதரம் - ஒன்றற்கொன்று. கண்ணிற்குக் கயலை உவமை கூறிப்பின் அக்கயலுக்கே கண்ணை உவமை கூறுகின்றமையும், முகத்திற்குத் தாமரையை உவமை கூறிப் பின் அத்தாமரைக்கே முகத்தை உவமை கூறுகின்றமையும் இதர விதரமாம். முன்னிரண்டடி ஒரு தொடராயும், பின்னிரண்டடி ஒரு தொடராயும் வருதலின் ஒரு தொடர்ச்சிக் கண்ணே இவ்வுவமை வந்ததாயிற்று.

'தளிபெற்று வைகிய' என்ற பாடல் முழுதும் ஒரே தொடராம். நீலத்திற்குக் கண்ணை உவமை கூறிப் பின் அக்கண்ணிற்கே நீலத்தை உவமை கூறினமையின் இதர விதரமாயிற்று. இதனைத் 'தடுமாறு உவமை' என்பர் தொல்காப்பியர்.

(ச) **சமுச்சய வுவமை** என்பது [1]இதனை யொப்பது இதனோ யன்றி இதனானும் ஒக்கும் என்பது.

எ - டு: 'அளவே வடிவொப்ப தன்றியே பச்சை
இளவேய் நிறத்தானு மேய்க்கும் - துளவேய்
கலைக்குமரி போர்துளக்குங் காரவுணர் வீரம்
தொலைக்குமரி யேறுகைப்பாள் தோள்'

இ - ள்: துழாய் மாலையைச் சூடிய கலைமடந்தையாகிய கன்னி, போரிடத்துப் பகைவரை [2]நடுக்கஞ் செய்யவற்றாய வெகுளியினையுடைய அசுரருடைய ஆண்மையைக் கெடுக்கும் சிங்கப் போத்தை வாகனமாக வுடையாள் தோள்களைப் பசிய இளவேயானது அளவினானும் வடிவினானும் ஒப்பதன்றிப் பசுமை நிறத்தானும் ஒக்கும் எ - று.

ஏறு உகைக்கும் கன்னி தோளெனக் கூட்டுக. கன்னியுடைய தோள்களானவை வேயைப் பண்பினாலும் ஒக்கும் எனினும் அமையும். ஏய்க்கும் - ஒக்கும். காரவுணர் - வெகுளியையுடைய அசுரர்.

(வி - ரை) வெற்றித் திருவின் தோள்களை மூங்கிலானது அளவினாலும் வடிவினாலுமேயன்றி நிறத்தினாலும் ஒக்கும் என்பதால் இது சமுச்சய வுவமை யாயிற்று. சமுச்சயம் - இரண்டு மூன்று முதலியவைகளின் கூட்டம். ஒரு பொருளோடு ஒரு பொருள் உவமையாங்கால் ஒரு காரணத்தாலன்றி ஈண்டு இரண்டு மூன்று காரணங்களாலும் உவமையாயிற்று என்றலின் சமுச்சய மாயிற்று.

கலைக்குமரி - கலைமானை ஊர்தியாக உடையவள் என்றல் பொருந்துவதாம். வெற்றித் திருவிற்கு (துர்க்கைக்கு) மானும், சிங்கமும் ஊர்தி என்ப. திருமாலுக்குத் தங்கையாதல்பற்றித் துளவ மாலை உரியதாயிற்று.

(ரு) **உண்மை யுவமை** என்பது உவமையைக்கூறி மறுத்துப் பொருளினையே கூறி முடிப்பது.

---

1. 'அதனோ யன்றி இதனை இஃது ஒப்பது இதனானும் என்பது' என்பதும் பாடம்.

2. 'கருமையான நிறத்தையுடைய அசுரரின்' என்பதும் பாடம்.

எ - டு: 'தாமரை யன்று முகமேயீ தீங்கிவையும்
காமருவண் டல்ல கருநெடுங்கண் - தேமருவு
வல்லியி னல்லள் இவளென் மனங்கவரும்
அல்லி மலர்க்கோதை யாள்'

இ - ள். இது தாமரை மலரன்று முகமே; இவையும் அழகு மருவிய வண்டல்ல, கறுத்து நீண்ட கண்களே; தேன் மருவப் பட்ட கொடியல்லள் இவள் மடந்தையே. இத்தன்மைத்தாகிய அவயவங்களுடைய இவள் என்னுள்ளங்கவரும் அகவிதழ்களை யுடைய பூவாற் செய்யப்பட்ட மாலையினையுடையாள் எ - று.

இன் - சாரியை, அல்லிமலர்க்கோதையாள் - சீதேவி என் பாருமுளர்.

(வி - ரை) முகம், கண், பெண் ஆகிய மூன்று பொருள்களுக்கும் முறையே தாமரை, வண்டு, வல்லி ஆகிய மூன்று உவமைகளைக் கூறிப் பின்பு மறுத்துச் சொல்லப் பட்டமையால் இது உண்மை யுவமை யாயிற்று.

(சு) மறுபொருளுவமை என்பது முன்னர் வைத்தபொருட்கு நிகராவதொரு பொருளைப் பின்னர் வைப்பது.

எ - டு: 'அன்னைபோல் எவ்வுயிருந் தாங்கும் அனபாயா!
நின்னையார் ஒப்பார் நிலவேந்தர் - அன்னதே
வாரிபுடை சூழ்ந்த வையகத்திற் கில்லையால்
சூரியனே போலுஞ் சுடர்'

இ - ள்: தாயினை யொப்பாக எவ்வகைப்பட்ட உயிர்களை யும் தாங்கும் அனபாயனே! நிலத்திலுண்டாகிய வேந்தரில் உன்னை யொப்பாராருமில்லை; அதுபோலக் கடல் சூழ்ந்த வைய கத்திற்குச் சூரியனை யொக்குஞ் சுடரும் இல்லை எ - று.

சுடர் - ஒளி; விளக்குமாம்.

(வி - ரை) இப்பாடலில் முன்னர் வைத்த பொருள் அனபாயன். பின்னர் வைத்த பொருள் சூரியன். உலகிற்கு அனபாயனைப் போல் தாங்குநர் எவரும் இல்லையாதல் போல, இருளை நீக்குதற்கும் சூரியனை யொத்த சுடர் இல்லை எனக் கூறுதலின் இது மறுபொருளுவமை யாயிற்று.

(எ) புகழுவமை என்பது உவமையைப் புகழ்ந்து உவமிப்பது.

எ - டு: 'இறையோன் சடைமுடிமேல் எந்நாளுந் தங்கும்
பிறையேர் திருநுதலும் பெற்ற - தறைகடல்சூழ்
பூவலயந் தாங்கும் அரவின் படம்புரையும்
பாவைநின் னல்குற் பரப்பு'

இ - ள்: ஒலிக்கின்ற கடலாற் சூழப்பட்ட நிலப்பரப்பைத் தாங்குகின்ற சேடனுடைய படப்பரப்பை ஒக்கின்றது உனது அல்குல்; அதுவேயன்றி, முக்கட் கடவுள் முடியினைப் பிரியாது எந்நாளும் தங்கும் பிறையினுடைய அழகினை நின்னுடைய நுதலும் பெற்றது; ஆதலால், பாவாய்! நின்னுருவத்தன்மை யிருந்தபடியென்? எ - று.

ஏர் - அழகு; பூவலயம் - நிலப்பரப்பு.

(வி - ரை) நுதலுக்குக் கூறப்பட்ட பிறையும், அல்குலுக்குக் கூறப் பட்ட அரவின் படமும் முறையே 'இறையோன் சடைமுடிமேல் எந்நாளும்

தங்கும்' என்றும், 'அறைகடல்சூழ் பூவலயந் தாங்கும்' என்றும் புகழ்ந்து உவமிக்கப்பட்டிருத்தலின் இது புகழுவமை யாயிற்று.

(அ) நிந்தையுவமை என்பது உவமையைப் பழித்து உவமிப்பது.

எ - டு: 'மறுப்பயின்ற வாண்மதியு மம்மதிக்குத் தோற்கும்
நிறத்தலரு நேரொக்கு மேனும் - சிறப்புடைத்துத்
தில்லைப் பெருமா னருள்போல் திருமேனி
முல்லைப் பூங்கோதை முகம்'

இ - ள்: தில்லைக்கண் கூத்தாடுகின்ற பெரியோன் அருளை யொத்த அழகிய மேனியினையுடைய, முல்லைப் பூவாற் செய்யப்பட்ட கோதையினையுடையாள் முகமானது மறுப்பிரியாத ஒளியினையுடைத்தாகிய மதியமும், அம்மதியத்திற்குக் கருகுகின்ற தாமரை மலரும் உவமிக்கப் பொருந்துமெனினுஞ் சிறப்புடையது எ - று.

நிறத்தலர் - தாமரை மலர். தோற்றல் - கருகுதல்.

(வி - ரை) முகத்திற்கு உவமையாகிய மதியையும், தாமரையையும் முறையே களங்கம் உடையது என்றும், மதிக்குத் தோற்கும் என்றும் பழித்துப், பின் 'நேரொக்கு மேனும்' என்பதால் உவமித்துக் கூறுவதால் இது நிந்தை யுவமை யாயிற்று.

இரவில் தாமரை குவிந்திருத்தல் நோக்கி 'மதிக்குத் தோற்கும்' என்றார்.

(கூ) நியம வுவமை என்பது இன்னதற்கு இன்னதே உவமையாம் எனத் தேற்றேகாரம் புணர்த்துத் துணிந்து சொல்லுவது.

எ - டு: 'தாதொன்று தாமரையே நின்முகம் ஒப்பதுமற்
றியாதொன்று மொவ்வா திளங்கொடியே! - மீதுயர்ந்த
சேலே பணியப் புலியுயர்த்த செம்பியர்கோன்
வேலே விழிக்கு நிகர்'

இ - ள்: இளங்கொடியை ஒப்பாய்! எல்லாருடைய கொடிக்கு மேலாக வுயர்ந்த பாண்டியனுடைய சேற்கொடி தாழத், தனது புலிக்கொடியை யுயர்த்த சோழனுடைய வேலே விழிக்கு நிகராவது; தாதுக்கள் பொருந்தியிருக்கப்பட்ட தாமரை மலரே நின்முகத்தை ஒப்பது; இவையல்லது உன் விழியினையும் முகத்தினையும் உலகத்துண்டாகிய யாவும் ஒவ்வா எ - று.

சேலே என்பதில், ஏகாரம் - அசை.

(வி - ரை) முகத்திற்கும் விழிக்கும் உவமை கூறுங்கால் முறையே தாமரையே நின முகம் ஒப்பது என்றும், வேலே விழிக்கு நிகர் என்றும் தேற்றேகாரம் புணர்த்துத் துணிந்து சொல்லியிருப்பதால் இது நியமவுவமையாயிற்று.

நியமம் - வரையறைப்படுத்தி உரைப்பது.

(கo) அநியம வுவமை என்பது நியமித்த வுவமையை விலக்கிப் பிறிதும் இப்பெற்றியனவாம் என்பது.

எ - டு: 'கௌவை விரிதிரைநீர்க் காவிரிசூழ் நன்னாட்டு
மௌவல் கமழுங் குழன்மடவாய்! - செவ்வி
மதுவார் கவிரேநின் வாய்போல்வ தன்றி
அதுபோல்வ துண்டெனினு மாம்'

இ - ள்: ஆரவாரத்தையும் பரந்த திரைகளையும் உடைத்தாகிய நீரையுடைய காவிரி சூழ்ந்த நன்னாட்டின்கண் மௌவற்பூவாற் செய்த மாலையானது நாறப்பட்ட குழலினையுடைய மடவாய்! செவ்வியும் தேனும் நிறைந்த முருக்கிதழே நின்வாயையொப்பது; அதுவன்றி, அப்பூப் போல்வது உலகத்து உண்டாயினும் நின்வாயை யொக்கும் எ - று.

கவிர் : முருக்கு.

(வி - ரை) வாய்க்கு முருக்கிதழே உவமை கூறத்தகும் என முன்னர் நியமித்துப், பின்பு அம்முருக்கிதழ் போன்ற பிற பொருள்களுண்டெனினும் அதற்குவமையாகும் எனக் கூறப்படுதலின் இது அநியம வுவமை யாயிற்று.

அநியமம் - வரையறையின்றி உரைப்பது.

(கக) **ஐயவுவமை** என்பது உவமையையும் பொருளையும் ஐயுற்று உரைப்பது.

எ - டு: 'தாதளவி வண்டு தடுமாறுந் தாமரைகொல்!
மாதர் விழியுலவு வாண்முகங்கொல்!—யாதென்
றிருபாற் கவர்வுற் றிடையூச லாடி
ஒருபாற் படாதென் னுளம்'

இ - ள்: தாதைக் கலந்து வண்டுகள் சூழப்பட்ட தாமரை மலரோ! காதலைச் செய்கிற விழியுலவுகின்ற ஒளியினையுடைய முகமண்டலமோ! என்னென்று என் மனமானது ஊசலைப் போலாடி இருதலைப்பட்டு ஒன்றன்கண் துணிகின்றதில்லை எ - று.

இடை யூசலாடி - ஈரிடத்தும் போய் மீண்டு. இருபாற் கவர்வுற்று - இரண்டனையும் ஆசைப்பட்டு. கொல் - ஐயம்.

(வி - ரை) தாமரையாகிய உவமையையும், முகமாகிய பொருளையும் உறுதியாகத் தெரியாது இதுவோ, அதுவோ என ஐயுற்றுரைத்தலின் இது ஐயவுவமை யாயிற்று.

(கஉ) **தெரிதருதேற்ற வுவமை** என்பது ஐயுற்றதனைத் தெரிந்து துணிவது.

எ - டு: 'தாமரை நாண்மலருந் தண்மதியால் வீறழியும்
காமர் மதியுங் கறைவிரவும் - ஆமிதனுல்
பொன்னை மயக்கும் புனைசுணங்கி னார்முகமே
என்னை மயக்கு மிது'

இ - ள்: நாட்காலை மலருந் தாமரையும் குளிர்ந்த மதியினாலே அழகு கெடும்; அழகிய மதியும் களங்கத்தோடு கூடியிருக்கும்; ஆதலால், என்னை மயக்கஞ் செய்த இது, பொன்னையொப்பாக அலங்கரிக்கப்பட்ட சுணங்கினை யுடையாளுடைய முகமே எ - று.

காமர் - அழகு. மயக்கும் - ஒக்கும்.

(வி - ரை) முகத்தைக் கண்டு இது தாமரையோ, மதியோ என முன்னர் ஐயுற்றுப் பின்னர், அது தாமரையேல் மதியத்தைக்கண்டு குவியும்; மதியேல் களங்கம் உடைத்தாயிருக்கும்; இவ்விரண்டும் இன்றி எஞ்ஞான்றும் மலர்ச்சியும், களங்கமின்றியும் இருத்தலின் முகமே எனத் தெளிந்து உரைக்கப்பட்டுள்ளமையின் இது தெரிதருதேற்ற வுவமையாயிற்று.

சுன்னாகம் திரு. குமாரசாமிப் புலவர் அவர்கள் இதனைத் 'தேற்றவுவமை' என்பர். உண்மையுவமை மயக்கவுணர்வு காரணமாகத் தோன்றும்; இது ஐய வுணர்வு காரணமாகத் தோன்றும் என வேற்றுமை காண்பர் அவர்.

(கந) **இன்சொலுவமை** என்பது பொருளினும் உவமைக் கொரு மிகுதி தோன்றக் கூறி யுவமித்து, இன்ன மிகுதியை யுடைத்தேனும் ஒப்பதன்றிச் சிறந்ததன்று என்பது.

எ - டு: 'மான்விழி தாங்கு மடக்கொடியே! நின்வதனம்
மான்முழுதுந் தாங்கி வருமதியம் - ஆனாலும்
முற்றிழை நல்லாய்! முகமொப்ப தன்றியே
மற்றுயர்ச்சி யுண்டோ மதிக்கு'

இ - ள்: நிறைந்த அணிகளையுடைய நல்லாய்! நின்னுடைய முகமானது மானின்விழி யொன்றனையே தாங்கா நின்றது; ஆகாயத்தின்கண் வருகின்ற மதியானது மானின் அவயவ முழுதுந் தாங்கா நின்றது; இப்படி முழுவதுந் தாங்கினும் நின் முகத்தை யொப்பதன்றியே விசேடமுடைத்தாகவற்றோ அம்மதியம்? எ-று.

(வி - ரை). இதன்கண் கூறப்பட்ட பொருள் முகம். உவமப் பொருள் மதியம். முகம் மானின் விழியை மட்டுமே கொண்டுள்ளது. மதியமோ மான் வடிவம் முழுவதையும் தாங்கி நிற்கின்றது. இவ்வாற்றான் முகத்தினும் மதியம் உயர்ந்திருப்பினும், அம்மதியமும் முகத்திற்கு உவமையாதலின்றி வேறு உயர்வு கூறப்படுதற்குண்டோ? எனக்கூறுதலின் இது இன்சொல் உவமை யாயிற்று.

(கச) **விபரீதவுவமை** என்பது மேற்றொட்டு உவமையாய் வருவதனைப் பொருளாக்கிப், பொருளாய் வருவதனை யுவமை யாக்கி யுரைப்பது.

எ - டு: 'திருமுகம் போல்மலருஞ் செய்ய கமலம்
கருநெடுங்கண் போலுங் கயல்கள் - அரிவை
இயல்போலு மஞ்ஞை யிடைபோலும் கொம்பர்
மயல்போலும் யாம்போம் வழி'

இ - ள்: அரிவையுடைய திருமுகத்தை யொப்ப மலரும் சிவந்த கமலம்; கறுத்து நெடிதாகிய கண்கள் போலும் கயல்கள்; சாயல்போலும் மயில்; மருங்குல் போலும் கொம்பு; ஆதலால் இவ்வழியில் யாம் போகின்ற போக்கு மயல் போலும் எ - று.

இயல் - சாயல். மயல் - ஆசை.

'ஓவத் தன்ன வுண்டுறை மருங்கிற்
கோவத் தன்ன கொங்குசேர் புறைத்தலின்,
வருமுலை யன்ன வண்முகை யுடைந்து
திருமுக மவிழ்ந்த தெய்வத் தாமரை' (சிறுபாண்: எ0 - எ௩)

என்பதூஉம் அது.

(வி - ரை) மேற்றொட்டு-பண்டுதொட்டு. பண்டுதொட்டுப் பெண்களின் முகத்திற்குத் தாமரையையும், கண்களுக்குக் கயலையும், சாயலுக்கு மயிலையும், இடைக்குக் கொம்பையும் உவமை கூறல் இயல்பு. அவ்வியல்பை மாற்றித் தாமரை, கயல், மயில், கொம்பு ஆகிய உவமைப் பொருள்களைப் பொருளாக்கி

யும், முகம், கண், சாயல், இடை ஆகிய பொருள்களை உவமையாக்கியும் கூறப் பட்டிருத்தலின் இது விபரீதவுவமை யாயிற்று.

'ஓவத்தன்ன...தாமரை' என்பதன் பொருள்:—இந்திர கோபத்தை யொத்த பூந்தாதைத் தன்னிடத்து உதிர்த்தலால், அத்தாது சேர்ந்து சித்தி ரத்தை ஒத்த நீருண்ணும் துறையிடத்தே நின்று, எழுகின்ற பெரிய முலை யினை யொத்த பெரிய அரும்பு நெகிழ்ந்து அழகிய முகம்போல மலர்ந்த தெய் வத்தன்மையையுடைய தாமரை மலர் என்பதாகும். கோவத்தன்ன கொங்கு சேர்பு உறைத்தலின் ஓவத்தன்ன எனக்கூட்டியுரைக்க. ஓவம் - சித்திரம்.

பண்டுதொட்டுப் பெண்ணின் முலைக்கு அரும்பையும், முகத்திற்குத் தாமரையையும் உவமையாகக் கூறல் மரபு. ஈண்டு அவ்வியல்பினை மாற்றி முலையையும் முகத்தையும் உவமையாக்கியும், அரும்பையும் தாமரையையும் பொருளாக்கியும் கூறப்பட்டிருத்தலின் விபரீதவுவமை யாயிற்று.

'பொருளே உவமம் செய்தனர் மொழியினும்
மருளறு சிறப்பினஃ துவம மாகும்' (தொல் - பொருள் - உவம - ௯)

என்ற நூற்பாவில் இது அடங்கும்.

(௧௫) **இயம்புதல் வேட்கை யுவமை** என்பது பொருளை இன்னது போலுமென்று சொல்ல வேட்கின்றது என் உள்ளம் என்பது.

எ - டு: 'நன்றுதீ தென்றுணரா தென்னுடைய நன்னெஞ்சம்
பொன்றுதைந்த பொற்சுணங்கிற் பூங்கொடியே! - மன்றல்
மடுத்ததைந்த தாமரைநின் வாண்முகத்திற் கொப்பென்
றெடுத்தியம்ப வேண்டுகின்ற தின்று'

இ - ள்: பொன் துதைந்த போலும் அழகிய சுணங்கினையும் பொலிவினையும் உடைத்தாய்க் கொடியை யொப்பாய்! நன்று தீது என்பதனை ஒன்றுந்தெளியாது நறுநாற்றத்தை யுடைத்தாய் மடுவிடத்து நின்று தயங்காநின்ற தாமரை, நின் ஒளியினையுடைத் தாகிய முகத்திற்கு ஒப்பாம் என்று எடுத்துரைக்க வேண்டுகின் றது, இன்று என் நல்ல நெஞ்சம் எ - று.

துதைதல் - செறிதல். மன்றல் - மணம். இயம்பல் - சொல் லல். வாள் - ஒளி.

(வி - ரை) இதன்கண் எடுத்துக் கூறப்படும் பொருள் முகம். நன் றென்றோ தீதென்றோ உணராமல் இம்முகத்திற்குத் தாமரையை ஒப்பாகச் சொல்ல வேண்டுகின்றது என் உள்ளம் என்று கூறப்பட்டிருத்தலின் இது இயம்புதல் வேட்கையுவமை யாயிற்று.

(௧௬) **பலபொருளுவமை** என்பது ஒருபொருட்குப் பல வுவமை காட்டுவது.

எ - டு: 'வேலுங் கருவிளையு மென்மானுங் காவியும்
சேலும் வடுவகிருஞ் செஞ்சரமும் - போலுமால்
தேமருவி யுண்டு சிறைவண் டறைகூந்தற்
காமருவு பூங்கோதை கண்'

இ - ள்: மதுவை விரும்பியுண்டு சிறைவண்டு முரல்கின்ற கூந்தலையும், அழகிய மாலையையும் உடையாளுடைய கண்க

ளானவை வேலையும், கருவிளை மலரையும், மிருதுவாகிய நோக்கத்தையுடைய மானையும், காவி மலரையும், சேலையும், மாவடுவையும், செவ்விய சரத்தினையும் போலும் எ - று.

ஆல் - ஆசை. தே - மது,

(வி - ரை) இதன்கண் கண்ணாகிய ஒரு பொருளுக்கு வேல், கருவிளை மலர், மான், நீலம், மீன், மாவடு, அம்பு ஆகிய பல பொருள்களையும் உவமை கூறப்பட்டிருத்தலின் இது பல பொருளுவமை யாயிற்று.

(கஎ) **விகார வுவமை** என்பது ஓர் உவமையை விகாரப் படுத்தி யுவமிப்பது.

எ - டு: 'சீத மதியி னொளியுஞ் செழுங்கமலப்
போதின் புதுமலர்ச்சி யுங்கொண்டு - வேதாதன்
கைம்மலரா லன்றிக் கருத்தால் வகுத்தமைத்தான்
மொய்ம்மலர்ப்பூங் கோதை முகம்'

இ - ள்: செறிந்த மலர்களாற் பொலிவு பெற்ற கூந்தலினையுடையாள் முகத்தினைப் பிரமன், குளிர்ந்த மதியின்கண் உண்டாகிய ஒளியினையும், செழித்த கமலப்போதில் உண்டாகிய புதிய மலர்ச்சியையுங் கொண்டு, தன் கைத்தாமரையினாலன்றித் தன்னுள்ளக் கருத்தால் வகுத்து அமைத்தான் எ - று.

செழுமை - வளப்பம். போது - பூ. வேதா - அயன். கருத்து - உள்ளம். வகுத்தல் - செய்தல். அமைத்தல் - முடித்தல். மொய்ம்மலர் - செறிமலர்.

'முத்துக்கூர்த் தன்ன முளையிளங் கூரெயிற்று
மணிதொடுத் தன்ன வைம்பான் மறுத்துடைத்து
மதியம்வைத் தன்ன வாண்முகத் தொருத்தி'

என்பதூஉம் அது.

(வி - ரை) 'சீதமதியின் . . . . முகம்' - இப்பாடலில், முகத்திற்கு உவமையாகக் கூறப்படும் மதி, மலர் ஆகிய இரண்டையும் முழுமையாக உவமமாக்கிக் கூறாது அவற்றின் ஒளி, மலர்ச்சி ஆகிய இரண்டை மட்டுமே பிரித்து உவமையாகக் கூறப்பட்டிருத்தலின் இது விகாரவுவமை யாயிற்று. மதியினின்று ஒளியையும், மலரினின்று மலர்ச்சியையும் பிரித்தல் விகாரமாம்.

'முத்துக் கூர்த்தன்ன...ஒருத்தி' என்பதன் பொருள் —முத்துக்களைக் கூர்மையாக்கினாற்போல முளைத்த இளமையான கூரிய பற்களையும், நீலமணியை ஒழுக வைத்தாற் போன்ற கூந்தலையும், களங்கத்தைத் துடைத்துச் சந்திரனை வைத்தாற்போன்ற ஒளி பொருந்திய முகத்தையும் உடைய ஒருத்தி என்பதாகும்.

ஒரு பெண்ணின் பற்கள், கூந்தல், முகம் ஆகியவற்றிற்கு முத்துக்கள், நீலமணி, சந்திரன் ஆகிய பொருள்களை இயல்பாக உவமையாக்காமல், விகாரப் படுத்தி உவமித்தலின் இது விகாரவுவமை யாயிற்று. முத்துக்களைக் கூர்மையாக்கியதும், நீலமணிகளை ஒருங்கு தொகுத்தலும், சந்திரனினின்று களங்கத்தைத் துடைத்தலும் விகாரமாம்.

(கஅ) **மோகவுவமை** என்பது ஒரு பொருள்மேல் எழுந்த வேட்கையான் வந்த உள்ள மயக்கந் தோன்ற உரைப்பது.

ஏ - டு: 'கயல்போலு மென்றுநின் கண்பழிப்பல் கண்ணின்
செயல்போற் பிறழுந் திறத்தாற் - கயல்புகழ்வல்
ஆரத்தா ளேமருங்கு லந்தரள வாண்முறுவல்
ஈரத்தா லுள்வெதும்பும் யான்'

இ - ள்: முத்தினாற் செய்யப்பட்ட பூணால் வருந்தாநின்ற மருங்குலினையும் அழகிய முத்தினுடைய ஒளிபோன்ற முறுவலினையு முடையாய்! உன்னுடைய குறிப்பினால் மனமழியும் யான், கயல்போலுமென்று நின் கண்ணினைப் பழிப்பன்; நின் கண்போற் பிறழுந் திறப்பாட்டாற் கயலைப் புகழ்வன் எ - று.

பிறழ்தல் - விளங்குதல். ஆரம் - முத்துவடம். அம்தரளம் - அழகிய முத்து. ஈரம் - குறிப்பு. உள் - மனம். வெதும்பல் - அழலுதல்.

(வி - ரை) இது கண்ணாகிய ஒரு பொருளை அதற்கு உவமையான கயலுடன் மயக்கந் தோன்ற உவமித்துக் கூறலின் மயக்கவுவமை யாயிற்று. கண், கயல்போலுள்ளன எனப் பழித்துப் பின் அக்கயல் கண்போல் உள்ள தெனப் புகழ்தல், கண்ணாகிய அப்பொருள்மேல் எழுந்த உள்ள மயக்கத்தாலாம். இவ்வாற்றான் கண்ணிற்கும் கயலுக்கும் ஒப்புமை யுண்டு எனத் தெரிதலின் உவமையுமாயிற்று. மோகம்—மயக்கம்.

(கசு) அபூதவுவமை என்பது முன்பு இல்லததனை உவமை யாக்கி உரைப்பது.

எ - டு: 'எல்லாக் கமலத் தெழிலுந் திரண்டொன்றின்
வில்லேர் புருவத்து வேனெடுங்கண் - நல்லீர்!
முகம்போலு மென்ன முறுவலித்தார் வாழும்
அகம்போலு மெங்க ளகம்'

இ - ள்: வில்லினை யொத்த புருவத்தினையும், வேல் போன்ற நெடிய கண்ணினையு முடைய நல்லீர்! உம்முடைய முகத்தினை யொக்கும் எங்குமுள்ள கமலப்பூக்களின் செவ்வியும் செறிந் தொன்றுமாயின் என, முறுவலைச் செய்தார் மருவி வாழும் இடம் போலும் எங்கள் உள்ளம் எ - று.

அஃதேல், விகார வுவமையோடு இதனிடை வேற்றுமை என்னை? எனின், விகார வுவமை யென்பது பிறரான்[1] விகாரப் பட்டதாகக் கொண்டு அஃதொன்றற்கு உவமையாக்கி யுரைப்பது. இஃது அன்னதன் றென்க.

(வி - ரை) அபூதம் - இல்லாதது. தாமரையும் அதன் எழிலும் உள்ள பொருளே. எனினும், எல்லாத் தாமரைகளின் அழகும் சேர்ந்து ஒன்றுதல் இல்பொருளாம். அவ்வழகு அனைத்தும் சேர்ந்து ஒன்றின் முகத்தை யொக்கும் எனவே இது அபூதவுவமையாயிற்று. இதனை, 'இல்பொருளுவமை' என்றும் வழங்குப.

விகார வுவமையில், மதியத்திலிருந்து ஒளியையும், மலரிலிருந்து மலர்ச்சியையும் வேறுபடுத்திப் பிரமன் இப்பெண்ணின் முகத்தை அமைத்தான் எனக் கூறப்பட்டுள்ளது. ஈண்டு எல்லாக் கமலங்களின் எழிலும் தாமாக ஒன்றின்,

---

1. 'விகாரப்பட்டதாகக் கொண்டதனை ஒன்றற்கு' என்பதும் பாடம்.

இம்முகத்தை யொக்கும் எனக் கூறப்பட்டுள்ளது. எனவே அது பிறரால் (பிரமனால்) விகாரப்பட்டதாகக் கூறி உவமித்ததாயிற்று. இது தாமாக விகாரப் படின் உவமையாம் என்பதாயிற்று. இவை தம்முள் வேற்றுமை.

(உ௦) **பலவயிற்போலி யுவமை** என்பது ஒரு தொடர் மொழிக்கண் பல உவமை வந்தால், வந்த உவமைதோறும் உவமைச் சொல் தோன்றப் புணர்ப்பது.

எ - டு: 'மலர்வாவி போல்வரான் மாதர் கமல
மலர்போலு மாதர் வதனம் - மலர்சூழ்
அளிக்குலங்கள் போலு மளக மதனுட்
களிக்குங் கயல்போலுங் கண்'

இ - ள்: கமல மலர்ந்த வாவி போல்வார் மாதர்; கமல மலர் போலும் மாதர் வதனம்; மலர் சூழ்ந்த வண்டின் குலம் போலும் அளகம்: அதனுள் களித்து உகளாநின்ற கயல்போலுங் கண்கள் எ - று.

வதனம் - முகம். அளிக்குலம் - வண்டின் திரள்.

(வி - ரை) பலவயின் - பலவிடத்தும். இதன்கண் அடிதொறும் உவமிக்கப்பட்டு, அங்ஙனம் உவமிக்கப்பட்ட இடங்களிலெல்லாம் போல என்னும் உவம உருபு வந்தமையின் இது பலவயிற்போலி யுவமை யாயிற்று.

(உக) **ஒருவயிற்போலி யுவமை** என்பது ஒரு தொடர் மொழிக்கண் பலவுவமை வந்தால், அவ்வந்த உவமைதோறும் உவமைச்சொற் புணராது, ஓர் உவமைச் சொற் புணர்ப்பது.

எ - டு: 'நிழற்கோப மல்க நிறைமலர்ப்பூங் காயா
சுழற்கலவ மேல்விரித்த தோகை - தழற்குலவு
தீம்புகை யூட்டுஞ் செறிகுழலார் போலுங்கார்
யாம்பிரிந்தோர்க் கென்னு மினி'

இ - ள்: காயாமலரின் நிழலின்கண் இந்திர கோபஞ் செறிய, அப்பொலிவினை யுடைய காயாவின் நிறைந்த மலரின் சூழலிலே தன் கலாபத்தை விரித்த மயிலானது தழலின்கண் தோன்றிய நறும்புகையினை யூட்டும் செறிந்த குழலினையுடைய மடவாரைப் போலுங் கார்காலம்: யாம் பிரிந்து போகப்பட்டாருக்கு என்னும் இனி? எ - று.

நிழல் - காயா நிழல். கோபம் - இந்திரகோபம். அல்க - தங்க. சுழல் - தழைப்பு. கலவம் - பீலி. விரித்தல் - ஆடுதல். தோகை - மயில். குலவல் - உண்டாதல். தீம்புகை - அகிற் புகை. கார்—கார்ப்பருவம்.

(வி - ரை) ஒரு தொடர்மொழிக்கண் - ஒரு நிகழ்ச்சி பற்றிய வருணனையிடத்து. இப்பாடலில் கார்காலம் பற்றிய நிகழ்ச்சி கூறப்படுகின்றது. அக்கார்காலத்தைக் கண்டு மகிழும் மயிலுக்குத் தழற்புகை யூட்டும் பெண்களை உவமையாகக் கூறுகின்ற பொழுது, மயில் பெண்களை ஒக்கும் என்றவிடத்து மட்டும் 'போலும்' என்ற உருபை விரித்து, ஏனைய இடங்களில் எல்லாம் அவ்வுருபை விரியாமையின் இது ஒருவயிற்போலி யுவமை யாயிற்று. இந்திர கோபத்தை நெருப்பாகவும், மயில் தோகையைத் தீம்புகையாகவும் உவமிக்கப் பட்ட பொழுது அவ்வுவம வுருபு இல்லாதிருத்தல் காண்க. ஒருவயின் - ஓரிடத்து மட்டும்.

(உஉ) **கூடாவுவமை** என்பது ஒரு பொருட்குக் கூடாதவதனைக் கூடுவதாகக்கொண்டு அதனை ஒன்றற்கு உவமையாக்கி உரைப்பது.

எ - டு: 'சந்தனத்திற் செந்தழலுந் தண்மதியில் வெவ்விடமும்
வந்தனவே போலுமால் நும்மாற்றம் - பைந்தொடியீர்!
வாவிக் கமல மதிமுகங்கண் டேக்கறுவார்
ஆவிக் கிவையோ வாண்'

இ - ள்: பைந்தொடியீர்! சந்தனத்தின்கண் செந்தழலும், குளிர்ந்த மதியினிடத்து வெவ்விய விடமும் பிறந்தாற்போலும், நும்முடைய வார்த்தைகள்; ஆனால், குளிர்ந்த வாவியிடத்துக் கமல மலரும் மதியமும் போலும் நும்முகங்கண்டு ஏக்கறுவார் ஆவிக்கு இவையோ காவல் எ - று.

வெவ்விடம் - கடியவிடம். மாற்றம் - வார்த்தை. ஆவி - உயிர். ஏக்கறல் - ஆசைப்படுதல். அரண் - காவல்.

(வி - ரை) சந்தனத்தில் நெருப்பும், மதியில் விடமும் தோன்றக் கூடாதன. இவற்றைத் தோழியிடமிருந்து வந்த சொல்லிற்கு உவமை கூறினமையின் கூடாவுவமை யாயிற்று.

இதனைப் பாங்கியிற் கூட்டத்துத் தலைவியும் தோழியும் ஒருங்கிருந்த வழித் தலைவன் இரந்து பின்னிற்க, அவனைத் தோழி யகற்றல் ஆற்றாத தலைவன் கூறிய கூற்றாகக் கொள்க.

(உரு) **பொது நீங்குவமை** என்பது உவமையைக் கூறி மறுத்துப் பொருள் தன்னையே உவமையாக உரைப்பது.

எ - டு: 'திருமருவு தண்மதிக்குஞ் செந்தா மரையின்
விரைமலர்க்கு மேலாந் தகையால் - கருநெடுங்கண்
மானே! யிருளளகஞ் சூழ்ந்தநின் வாண்முகம்
தானே யுவமை தனக்கு'

இ - ள்: கரிய நெடிய கண்களையுடைய மானே! குளிர்ந்த மதிக்கும், திருமருவப்பட்ட சிவந்த தாமரையினது நறு நாற்றத்தையுடைய மலருக்கும் மேலாகிய தன்மையை யுடைத்தாகலான், இருளாகிய அளகஞ் சூழ்ந்த நின் ஒளியினையுடைய முகம் தானே தனக்கு உவமையாம் எ - று.

திரு-கண்டாரால் விரும்பப்படுந்தன்மை நோக்கம். மருவல் - உண்டாதல். தகை - தன்மை.

(வி - ரை) முகத்திற்கு உவமையாயுள்ள மதி, தாமரை ஆகிய இரண்டையும் முன்னர்க் கூறி மறுத்துப், பின்பு அம்முகத்திற்கு அதுவே உவமையாதலன்றிப் பிறிதில்லை என்பதால் இது பொதுநீங்குவமை யாயிற்று.

•உவமையைக் கூறி மறுத்துப் பொருளினையே கூறி முடிப்பது 'உண்மையுவமை'. •இஃது உவமையைக் கூறி மறுத்துப் பொருள் தன்னையே உவமமாக்கியுரைப்பது. இவை தம்முள் வேற்றுமை.

(உச) மாலையுவமை என்பது ஒரு பொருட்குப் பலவுவமை வந்தால், [1] அவை யொன்றோடொன்று இடைவிடாது தொடர்ச்சியுடையவாகப் புணர்த்துக் கடைக்கண் பொருள்கூட்டி முடிப்பது.

---

1. 'அவை யொன்றினொன் றிடைவிடாது' என்பதும் பாடம்.

எ - டு: 'மலயத்து மாதவனே போன்றும் அவன்பால்
அலைகடலே போன்றும் அதனுட் - குலவும்
நிலவலய மேபோன்றும் சேரியன்பா னிற்கும்
சிலைகெழுதோள் வேந்தர் திரு'

இ - ள்: பொதிய மலையிடத்து அகத்தியனைப் போன்றும், அவன் உண்ணப்பட்ட அலையையுடைய கடல்போன்றும், அதனுள் உண்டாகிய நிலாவட்டம் போன்றும், சோழனுடைய இடத்தே பேராதே நிற்கும், விற்பயின்ற தோள்களையுடைய வேந்தர் செல்வம் எ - று.

(வி - ரை) இதன்கண் சோழனைவிட்டு நீங்காத செல்வத்திற்கு மூன்று உவமைகள் தரப்பட்டு, அம்மூன்றும் ஒன்றின் ஒன்று தொடர்ச்சியுடைவாகப் புணர்க்கப் பட்டுள்ளமையானும், இறுதியில் அப்பொருளைக் (உபமேயத்தை) கூறி முடித்திருப்பதானும் இது மாலையுவமையாயிற்று. (௯)

உவமை பிற அணிகளுடன் கூடிவரும் எனல்

௩௨. அற்புதஞ் சிலேடை யதிசயம் விரோதம்
ஒப்புமைக் கூட்டந் தற்குறிப் பேற்றம்
விலக்கே யேதுவென வேண்டவும் படுமே.

எ - ன், அவ்வுவமை யலங்காரம் பிற அலங்காரங்களோடுங் கூடிவருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: அற்புதமும், சிலேடையும், அதிசயமும், விரோதமும் ஒப்புமைக் கூட்டமும், தற்குறிப்பேற்றமும், விலக்கும், ஏதுவும் எனச் சொல்லப்பட்ட எட்டு அலங்காரங்களோடு கூடியும் வரும் அவ்வுவமை யலங்காரம் எ - று.

அவை அற்புதவுவமை, சிலேடையுவமை, அதிசயவுவமை, விரோதவுவமை, ஒப்புமைக்கூட்டவுவமை, தற்குறிப்பேற்றவுவமை, விலக்குவமை, ஏதுவுவமை, எனப்பெயர் கொடுத்து வழங்கப்படும்.

அவற்றுள், (க) அற்புதவுவமை

எ - டு: 'குழையருகு தாழக் குனிபுருவந் தாங்கி
உழைய ருயிர்பருகி நீண்ட - விழியுடைத்தாய்
வண்டே திருளளகஞ் சூழ வருமதியொன்
றுண்டேல் இவள்முகத்திற் கொப்பு'

இ - ள்: குழை தாழ்ந்த முகத்தினை யுடைத்தாய், வளைந்த புருவத்தினை யுடைத்தாய்ப், பக்கத்தினின்றுங் கண்டாருடைய உயிரை உண்டு வளர்ந்த கண்களையுடைத்தாய்ச், சுரும்புகளாலே மேவப்பட்டிருக்குங் குழலைச் சூழக் கொண்டு வருவதொரு மதிய முண்டாயின் இவளுடைய முகத்திற்கு ஒப்பாம் எ - று.

(வி - ரை) அற்புத அணி முதலாக வுள்ள எட்டணிகளோடும் உவமை யணி வரும் என்றார்; இனி அவற்றிற்கு முறையே எடுத்துக் காட்டுத் தருகின்றார். இவ்வெட்டனுள் முதற் கண்ணுள்ளது அற்புத அணியாம். பொருளணியியலுள் கூறப்பட்ட முப்பத்தைந்தணிகளுள் அற்புத அணியென்பது ஒன்றில்லை. எனினும் எண்வகை மெய்ப்பாட்டினிடமாகப் பிறக்கும் சுவையணியில் வியப்புச் சுவையில் இது அடங்கும் என்க.

இதுவரையில் தோன்றியில்லாததும், இனித் தோன்றக் கூடாததுமாகிய நிகழ்ச்சிகள் விளைகின்ற காலத்து உளதாவது அற்புதமாம் இதுவரையில் அறிவுக்குப் புலனாகாத வொன்று புலப்படின் அது அதிசயமாகும்.

பொருளின் குணங்களை உவமையில் ஏற்றி அற்புதந் தோன்றச் சொல்வது அற்புதவுவமையாம். இப்பாடலில் கூறப்பட்ட பொருள் முகம். உவமை மதி. காதில் குழை தாழ்தல், புருவம் தாங்கல், கண்டார் உயிருண்ணும் தோற்றமுடைய கண்ணையுடைத்தாதல், இருண்ட கூந்தல் உடைத்தாதல் ஆகியன பொருளின் குணங்களாம். இவற்றை உவமையாம் மதிக்கும் ஏற்றி, இத்தகைய மதியுண்டேல் இவள் முகத்திற்கு ஒப்பாம் எனக்கூறலின் இது அற்புத வுவமை யாயிற்று.

அற்றேல் இத்தகைய மதியம் இல்பொருளன்றோ? எனவே இதற்கும், இல்பொருளுவமைக்கும் (அபூதவுவமை), விகாரவுவமைக்கும் வேற்றுமை என்னை? எனில், கூறுதும். இல்பொருளுவமையிலும், விகாரவுவமையிலும் கூறப்பட்ட உவமைகள் எல்லாம் தன்னாலோ அன்றிப் பிறராலோ விகாரப் பட்டதாகக் கூறி உவமிக்கப்பட்டுள்ளன. இஃது அன்னதன்றி, பொருளின் குணங்கள் அனைத்தையும் உவமையில் ஏற்றிக் கூறப்பட்டுள்ளனவா யுள்ளன. ஆதலின் இவை தம்முள் வேறுபாடுடையனவாம் என்றறிக.

(உ) சிலேடையுவமை. அஃது இருவகைப்படும்; செம்மொழிச் சிலேடையுவமையும், பிரிமொழிச் சிலேடை யுவமையும் என.

அவற்றுள், செம்மொழிச் சிலேடையுவமை.

எ - டு: 'செந்திருவுந் திங்களும் பூவுந் தலைசிறப்பச்
சந்தத் தொடையோ டணிதழுவிச் — செந்தமிழ்நூல்
கற்றார் புனையுங் கவிபோல் மனங்கவரும்
முற்றா முலையாள் முகம்'

இ - ள்: திருவென்றும், திங்களென்றும், பூவென்றும் சொல்லப்பட்ட இவற்றது பெயரை முதற்கண்ணே யுடைத்தாய் ஓசையோடு கூடிச், சொற்கோவையோடு அலங்காரம் புணர்ந்து, பயின்றார் உளங்கவருந்தன்மை யுடைத்தாய்ச், செந்தமிழ் நூல் கற்றாராலே சொல்லப்பட்ட கவிபோலத், திருவினுருவத்தையுந் திங்களினுருவத்தையும் பூவையும் உச்சிமீதில் உடைத்தாய், நிறத்தோடுங் கூடியிருந்துள்ள பூமாலையோடும் அழகு தழுவிப் பயின்றார் உள்ளங்களைக் கவரும் முகம் எ - று.

கவிமேற் செல்லுங்கால்: சந்தம் - ஓசை, தொடை - சொற் கோவை, அணி - அலங்காரம் எனவும்; முகமேற் செல்லுங்கால்: சந்தம் - நிறம், தொடை - மாலை, அணி - அழகு எனவும் வரும்.

(வி - ரை) இச்சிலேடை யணியின் இலக்கணத்தை ௭௫, ௭௬-ஆம் நூற்பாக்களில் விரிவாகக் காண்க.

சொற்கள் ஒரு பொருளிலன்றிப் பலபொருட்பட வருமேல் அவை சிலேடையாம். அங்ஙனம் ஒரு சொல் ஒன்றற்கு மேற்பட்ட பொருளைத்தரும் பொழுது, ஒரே தன்மைத்தாய் நின்று பொருள்படுமேல் செம்மொழிச் சிலேடையாகும்.

இப்பாடலிலுள்ள சொற்கள் கவிக்கும், முகத்திற்கும், ஒரே தன்மைத் தாக நின்று பொருள்படுவதால் செம்மொழிச் சிலேடை யாயிற்று. கூறப்பட்ட இருபொருளில் கவியை முகத்திற்கு உவமை கூறுதலின் 'உவமையுமாயிற்று. எனவே இது செம்மொழிச் சிலேடை யுவமையாம்.

இனி, பிரிமொழிச் சிலேடை யுவமை.

எ - டு: 'நளிதடத்த வல்லியின் கண்ணெகிழ ஞாலத்
தளவி னிறைகடாஞ் சிந்திக் - களிறிகலும்
கந்த மலையா நிலவுங் கவடசைய
வந்த மலையா நிலம்'

இ - ள்: செறிவினையும் பெருமையினையு முடைய காலிலே, செறிந்திருக்கின்ற விலங்கின் கண் அறத் தரைமீது நிறைந்த கடாம் பொழியத் தறியைச் சீறிப் புரசைக் கயிறு அசையவரும் யானை போன்று, தென்றல் பெரிய பொய்கைப் பூவல்லித் தேன் சோர உலகத்தார் நிறைகளை யழித்து விரை கமழ நெருங்கிய பணைகளை யசைத்து வருகின்றது எ - று.

யானையின்மேற் செல்லுங்கால்: நளி - செறிவு, தடம்-பெருமை, வல்லி - விலங்கு, கண் - மூட்டுவாய், நெகிழ்தல் - கழலுதல், ஞாலம் - பூமி, நிறைகடாம் - பெரிய மதம், சிந்தி - பொழிய, கந்தம் - தறி, மலையா - சீறு, நிலவுதல் - பொருந்துதல். கவடு- புரசைக்கயிறு, அசைய - ஆட, வந்த - வரும் எனவும்; தென்றல் மேற் செல்லுங்கால்: நளி - பெருமை, தடம்-பொய்கை, அல்லி- பூ, கள்-தேன், நெகிழ்தல்-சோர்தல், ஞாலம் - உலகம், நிறை - ஒழுக்கம், சிந்தி - அழித்து, கந்தம் - விரை, அலைதல் - நீாறுதல், நிலவுதல்-நெருங்குதல், கவடு - மரக்கொம்பு, அசைதல்-அலைதல் எனவும் வரும்.

இதனைச் 'சந்தான வுவமை' என்பாருமுளர். சந்தானம் என்பது இரண்டு பொருளுக்கும் உபகாரமாயிருக்குஞ் சொற்க ளாலே பாடப்படுவது.

இதனை இவ்வாறு வேறுபடுத்திக் காட்டியது என்னை? எனின், [1]மேல் பண்பு முதலியனவே யன்றிச் சொற்பொதுமை காரண மாகவும் உவமை புணர்க்கப்படும் என்றார்; அது காட்டற்கு என்க.

(வி - ரை) புரசைக் கயிறு - யானை கட்டும் கயிறு. இப்பாடலிலுள்ள சொற்கள் யானைக்கும் தென்றற்காற்றிற்கும் பொதுமையாக நிற்றலானும், அவற்றுள் பெரும்பாலான சொற்கள் ஒவ்வொரு பொருட்கும் ஒவ்வொரு வித மாகப் பிரிந்து பொருள்படுதலானும் பிரிமொழிச் சிலேடையாயிற்று. யானை யைத் தென்றல் காற்றிற்கு உவமை கூறலின் உவமையுமாயிற்று. எனவே இது பிரிமொழிச் சிலேடை யுவமையாம்.

(ட) அதிசயவுவமை

எ - டு: 'நின்னுழையே நின்முகங் காண்டும் நெடுந்தடம்
தன்னுழையே தன்னையுங் காண்குவம் - என்னும்
இதுவொன்று மேயன்றி வேற்றுமை யுண்டோ
மதுவொன்று செந்தா மரைக்கு'

1. (டூO - ஆம் நூற்பா உரை காண்க.

இ - ள்: நல்லாய்! நின்னிடத்திலே நின் முகத்தினைக் காணு நின்றேம்; பெரிதாகிய பொய்கையிலே தாமரையையும் காணு நின்றேம் என்கிற இத்தன்மையே யன்றி வேறுபாடு கண்டிலேம், மதுவினையுடைத்தாகிய தாமரைக்கும் நின் முகத்திற்கும் எ - று.

உழை - இடம்.

'பாலினிடை நீல மணிநிறஞ்சேர் பான்மைபோல்
ஞாலம் பரந்த நகைநிலவும் - மாலிருளாம்
வைம்மருவு மூவிலைவேல் வன்கட் டமருகக்கைச்
செம்மல் கருமாமை சேர்ந்து'

என்பதூஉம் அது.

இ - ள்: நீலமணியானது பாலைச் சேர்ந்து தன் ஒளியைப் பாலுக்குக் கொடுத்தாற் போலக், கூர்மை மருவிய மூன்று தலையையுடைய சூலத்தையும், வலிய கண்ணையுடைய தமருகத்தையும் உடைய கையனாகிய பரமசிவன் மிடற்றிலுண்டாகிய கறுத்த நிறத்தைச் சேர்ந்து உலகத்திற் பரந்த வெண்மையுடைய நிலவும் பெரிய இருள்நிறம் பெற்றது எ - று.

மால் - பெருமை. மாமை - நிறம். செம்மல் - பெரியோன். பான்மை - தன்மை. நகை - வெண்மை.

(வி - ரை) 'மனப்படு மொருபொருள் வனப்பு உவந்துரைப்புழி, உலகுவரம் பிறவா நிலைமைத் தாகி, ஆன்றோர் வியப்பத் தோன்றுவது அதிசயம்' என்பது அதிசய அணியின் இலக்கணமாகும். 'நின்னுழையே....செந்தாமரைக்கு' இப்பாடலில் முகத்தின் அழகை உவந்து, அதற்கும் உவமையாகிய தாமரைக்கும், அவை சார்ந்திருக்கும் இடங்களாலன்றி வேற்றுமையில்லையென அதிசயிக்குமாறு கூறப்பட்டிருத்தலின் அதிசயவுவமை யாயிற்று.

'பாலினிடை.....சேர்ந்து' - இப்பாடலில் எடுத்துக் கொள்ளப்பட்ட பொருள் சிவபெருமானின் மிடற்றிலுள்ள கருமை. அத்தகைய கருமிடற்றினையுடைய சிவபெருமானைச் சார்ந்ததால் வெண்மையான மதியமும் கருநிறமாய களங்கத்தைப் பெற்றது என ஆன்றோர் வியக்குமாறு அதிசயத்துக் கூறலின் அதிசயமாயிற்று. சிவபெருமான் தனது நிறத்தை மதியத்திற்குக் கொடுத்தது, நீலமணியானது தன் நிறத்தைப் பாலுக்குக் கொடுத்தது போலாம் என உவமித்துக் கூறலின் உவமையுமாயிற்று. எனவே இது அதிசயவுவமை யாயிற்று.

(ச) விரோத வுவமை

எ - டு: 'செம்மை மரைமலருந் திங்களும் நும்முகமும்
தம்மிற் பகைவிளைக்குந் தன்மையவே - எம்முடைய
வைப்பாகுஞ் சென்னி வளம்புகார் போலினியீர்!
ஒப்பாகும் என்பா ருளர்'

இ - ள்: எமது தனமாகிய சோழனது வளவிய புகார் போன்ற இனிமையையுடையீர்! சிவந்த தாமரை மலரும், மதியமும், நுமது முகமும் தம்முள்ளே பகை பெருக்குந் தன்மையாயிருக்க, இவற்றை உவமைக்குப் பொருந்தும் என்பாரும் உளர்; இதற்குக் காரணஞ் சொல்லுவீராமின் எ - று.

(வி - ரை) 'மாறுபடு சொற்பொருள் மாறுபாட் டியற்கை, விளைவுதர் வுரைப்பது விரோத மாகும்' என்பது விரோத அணியின் இலக்கணமாகும். இவ்வகையால் இப்பாடல், பொருள் விரோதமாகும்.

தாமரை மலருங்கால் சந்திரன் ஒளி கெடுதலும், சந்திரன் ஒளிதருங்கால் தாமரை குவிதலும், முகம் மலர்ந்து ஒளிதரும் பொழுது இவ்விரண்டுமே ஒருங்கு ஒளிகெடுதலும் விரோதமாம். எனினும் முகத்திற்குத் தாமரை மதியம் ஆகிய இரண்டையுமே ஒப்பாகக் கூறுவர் என்பதால் உவமையுமாயிற்று

தாமரை பகலில் மலருதல்பற்றி அப்பொழுது சந்திரன் ஒளி கெடும் என்றார்.

(ரு) ஒப்புமைக் கூட்டவுவமை

எ - டு: 'விண்ணின்மேற் காவல் புரிந்துறங்கான் விண்ணவர்கோன்
மண்ணின்மே லன்னை வயவேந்தே! - தண்ணளியில்
சேரா வவுணர் குலங்களையுந் தேவர்கோன்
நேரார்மேல் அத்தகையை நீ'

இ - ள்: விண்ணின்மேல் உண்டாகிய உலகத்தைக் காக்குந் தொழிலின் மிக்கு உறங்கானாயினன், தேவர்கட்குத் தலைவனாகிய இந்திரன்; மண்ணின்மேல் உண்டாகிய உயிர்களைக் காக்க வேண்டி, வலியையுடைய வேந்தனே! நீயும் உறங்காயாயினாய்; உள்ளங் குளிர்ந்து பிறரைக் காக்குந் தன்மையிற் சேராத அசுரர் குலங்களைக் களையா நிற்கும் இந்திரன்; பகைவரிடத்திலே நீயும் அத்தன்மையை எ - று.

புரிதல் - மிகுதல்.

(வி - ரை) ஒப்புமையுடைய இருபொருளைக் கூட்டி அவ்விரண்டிற்கும் ஒப்புமை தோன்றச் சொல்லப்படுவது இவ்வணியின் இலக்கணமாகும். ௩௧ - ஆம் நூற்பாவில் இதன் இலக்கணத்தைக் காண்க.

இப்பாடலில் காத்தற்றொழிற்கு ஒப்புமையுடையவராகக் கூட்டிச் சொல்லப்பட்டவர்கள் இந்திரனும் சோழனும் ஆவர். இவர்கள் இருவரும் காத்தலிலும், பகைத்திறங் களைதலிலும் ஒத்து விளங்கியமை கூறப்படுதலின் ஒப்புமைக் கூட்டமாயிற்று. சோழனுக்கு இந்திரனை உவமை கூறுதலின் உவமையுமாயிற்று.

(சு) தற்குறிப்பேற்ற வுவமை

எ - டு: 'உண்ணீர்மை தாங்கி யுயர்ந்த நெறியொழுகி
வெண்ணீர்மை நீங்கி விளங்குமால் - தண்ணீர்த்
தரம்போலு மென்னத் தருகடம்பை மாறன்
கரம்போற் கொடைபொழிவான் கார்'

இ - ள்: முதுவேனிற் காலத்தில் தடத்திலுண்டாகிய குளிர்ந்த நீர்போலச் சேர்ந்தோர் யாவர்க்கும் வருத்தம் நீங்கக் கொடுக்க வல்ல கடம்பை யென்னும் பதியிலுண்டாகிய மாறன் என்னும் இயற்பெயரை உடையவனது கரம்போலக் கொடுப்பான் நினைந்து, மேகமானதும், உள்ளே நீரை யுடைத்தாய் உயர்ந்த வானெறியே நடந்து வெளுத்த தன்மையை நீங்கி விளங்காநின்றது எ - று.

இவன் கையும், பிறர்க்கு நீர்பெய்து கொடுக்குந் தொழிலானே நீர் புலராது உலகத்தார் கைகளுக்கு மேலாகப் பயின்று சிவந்த தன்மையை யுடைத்தாய் விளங்குதல் கண்டு கொள்க. தண்ணீர்த் தரும்போலு மென்னத் தருங்கரம் எனக் கூட்டுக. இத்தொழில் கைக்கு ஏற்ற மென்க.

(வி - ரை) இயல்பாக விளையும் தன்மையில் கவிஞன் தான் குறித்த கருத்தை ஏற்றிச் சொல்லுதல் தற்குறிப் பேற்றமாம். இதன் இலக்கணத்தை ருரு—ஆம் நூற்பாவில் காண்க.

மேகம் மழை பொழியுங்கால் தன்னுள்ளே நீரையுடைத்தாயிருத்தலும், வானத்திலிருத்தலும், வெண்ணிறம் நீங்கி விளங்குதலும் இயல்பு. இங்ஙனம் இயல்பாக இருப்பதை மாறன் கைபோல இருந்து கொடுக்கவேண்டும் என்பதற்காகத்தான் அம்முத்திறங்களையும் பெற்றிருந்தது எனக்கூறல் தற்குறிப் பேற்றமாம். மேகத்திற்குக் கையை உவமை கூறினமையின் உவமையுமாயிற்று. எனவே இது தற்குறிப்பேற்றவுவமை யாயிற்று.

(எ) விலக்குவமை

எ - டு: ‘குழைபொருது நீண்டு குமிழ்மேன் மறியா
உழைபொருதென் னுள்ளங் கவரா—மழைபோல்
தருநெடுங்கைச் சென்னி தமிழ்நா டனையார்
கருநெடுங்கண் போலுங் கயல்’

இ - ள்: மழையைப்போலக் கொடுக்கவல்ல பெரிய கையினையுடைய சென்னியுடைய தமிழ்நாட்டையொப்பாருடைய கரிய நெடிய கண்போலும் கயலும், சங்கொடு பொருது வளர்ந்து நீர்க்குமிழி மேலே மறிந்து தன்னிடத்திலே பொருதும், என்னுள்ளத்தைக் கவரமாட்டா என்ற இதனுனே, கண்ணும் காதிலுண்டாகிய குழையோடு சேர்ந்து வளர்ந்து குமிழுக்கு மீதே தாவுவது போன்று மானின் விழியோடு பகைத்து என்னுள்ளத்தைக் கவருமென நின்றவாறு காண்க.

கயல்மேற் செல்லுங்கால் : குழை - சங்கு, குமிழ் - நீர்க்குமிழி, உழை - பக்கம் எனவும்; **கண்மேற் செல்லுங்கால்**: குழை- மகரக்குழை, குமிழ் - மூக்கு, உழை - மான், நீள்தல் - வளர்தல், கவர்தல் - கொள்ளுதல், மறிதல் - தாவுதல், பொருதல் - பகைத்தல், சென்னி-சோழன், தமிழ்நாடு-சோணுடு எனவும் வரும்.

(வி - ரை) ஒரு பொருளோடு ஒரு பொருளை உவமித்து அவற்றிற்குள்ள ஒப்புமையை முன்னர்க்கூறிப் பின்பு, யாதானுமொரு செயற்றிறனல் அப்பொருளொடு உவமை ஒவ்வாது என விலக்கிக் கூறின் அது விலக்குவமையாம்.

இப்பாடலில் கயலைக் கண்ணிற்கு உவமித்து அவற்றிற்குள்ள ஒப்புமையை முன்னர்க் கூறிப் பின்பு, உள்ளங் கவராத தன்மையால் கண்ணினைக் கயல் ஒவ்வாது என விலக்கினமையின் விலக்குவமை யாயிற்று.

இங்குக் கூறப்பட்ட விலக்கு, முன்னவிலக்கு என்னும் அணியே யாகும். இதன் இலக்கணத்தை ௬௨ — ஆம் நூற்பாவில் காண்க.

(அ) ஏதுவுவமை

எ - டு: 'வாளரவின் செம்மணியும் வன்னியிளம் பாசிலையும்
நாளிளைய திங்கள் நகைநிலவும் - கீளொளியால்
தேனுலவு பூங்கொன்றைத் தேவர்கோன் செஞ்சடைமேல்
வானுலவு விற்போல் வரும்'

இ - ள்: ஒளியினையுடைய அரவின் சூட்டிலுண்டாகிய மணியானது சிவந்த வொளியை மிகுத்தலானும், வன்னியாகிய மரத்தின் இளைய இலை தன்னுடைய பசுமையை மிகுத்தலானும், குழவித் திங்களானது தன்னுடைய வெண்மையை மிகுத்தலானும், தேனுலவப்பட்ட பொலிவையுடைய கொன்றையினது பூ தன்கண் உண்டாகிய புற்கென்ற நிறத்தை மிகுத்தலானும், தேவர்கட்குத் தலைவனாகிய முக்கட் கடவுளுடைய சிவந்த சடையானது வான்மீது உண்டாகிய வில்லுப்போலத் தோன்றுகின்றது எ - று.

நகை - ஒளி. வில் - இந்திரவில்.

அஃதேல் உவமையை விரித்த சூத்திரங்களெல்லாம் ஒன்றாக்கி யுரையாது இரண்டாக்கி யுரைத்தது என்னை? எனின், மேலைச் சூத்திரத்திற் சொல்லப்பட்டன, **'சொல்லின் முடிவில் அப்பொருள் முடித்தல்'** என்னுந் தந்திர வுத்தியன; இவை **'எதிரது நோக்கல்'** என்னுந் தந்திர வுத்தியன; ஆதலால், இரண்டாக வைத்தா ரென்பது.

(வி - ரை) இன்ன ஏதுவால் இதனை இது ஒக்கும் என ஏதுவோடு கூட்டி உவமிக்கப்படுவது ஏதுவுவமையாம். இதன் இலக்கணத்தை ருஎ-ஆம் நூற்பாவில் காண்க.

சிவபெருமானுடைய சடை வானவில்லை யொக்கும் என்பதால் உவமையும், அங்ஙனம் வானவில்லைச் சிவபெருமானுடைய சடை ஒப்பதற்குக் காரணம் வானவில்லில் இருக்கும் செம்மை, பசுமை, வெண்மை ஆகிய நிறங்களுக்கு ஏற்பச் சிவபெருமானுடைய சடையிலும் செம்மணி, வன்னி, திங்கள் ஆகிய முப்பொருளும் இருப்பதாலாம் என்பதால் ஏதுவும் கூறப்பட்டவா றறிக.

உவமையணியை இதுகாறும் இரு நூற்பாக்களால் விரித்துரைத்தார் ஆசிரியர். முன்னையது 'விரியே தொகையே' என்று தொடங்குவது. ஏனையது 'அற்புதம் சிலேடை' எனத் தொடங்குவது. இவ்விரு வகையையும் ஒன்றாக உரையாதது ஏன்? என்னும் வினாவைத்தாமே எழுப்பிக் கொண்டு உரையாசிரியர் விடை தருகின்றார். 'விரியே தொகையே' என்று தொடங்கும் நூற்பாவில் கூறப்பட்டன வெல்லாம் தத்தம் பெயரைக் கொண்டே தாமாக இலக்கணம் விளங்கும் இயல்பினவாம். அடுத்து இந்நூற்பாவிற் கூறியன வெல்லாம், இனிக் கூற இருக்கும் அணிகளை நோக்கி, அவற்றோடு கூடி வருவனவாகும். இவ்வேறுபாடு பெறுதற்கே இரண்டாக உரைத்தார் என்பது. (சு)

உவமைக்கு எய்தியதோர் வேறுபாடு

ருரு. மிகுதலுங் குறைதலுந் தாழ்தலும் உயர்தலும்
பான்மாறு படுதலும் பாகுபா டுடைய.

எ - ன், இதுவும் அவ்வுவமைக்கு எய்தியதொரு வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: உவமேய அடைக்கு உவமான அடை மிகப் புணர்தலும், உவமேய அடைக்கு உவமான அடை குறையப் புணர்தலும், இழிந்த உவமையோடு உயர்ந்த பொருள் உவமையாகலும், உயர்ந்த உவமையோடு இழிந்த பொருள் உவமையாகலும், ஆண்பாற்குப் பெண்பால் உவமையாகலும் பெண்பாற்கு ஆண்பால் உவமையாகலும், ஒருமைப்பாற்குப் பன்மைப்பால் உவமையாகலும், பன்மைப்பாற்கு ஒருமைப்பால் உவமையாகலுமாகிய வேறுபாடுடையன எ - று.

[1] 'வேறுபாடுடைய' என்றது இவை புன்புலவர் புணர்க்குங்கால் மிக்கோரால் வெறுக்கப்படுவதோர் சிறப்பின்மை தெரிந்து குற்றமென்று கூறப்படும்; அல்லதூஉம் தெள்ளியோரால் சிறப்புடையது என்று கொள்ளப் புணர்க்கவும்படும் என்றவாறு.

(வி - ரை) இத்தகைய உவமைகள் ஓரளவு அறிவுடையவர்களால் கூறப்படின் குற்றம் என்று கருதப்படும். இவையே அறிவிற் சிறந்த சான்றோர்களால் கூறப்படின் அவற்றின் சிறப்புடைமை நோக்கிக் கூறப்பட்டதென அறிந்து ஏற்றுக் கொள்ளப்படும் என்பது கருத்து.

அவற்றுட் சில வருமாறு:—

மிகுதல்

எ - டு: 'நீலப் புருவங் குனிய விழிமதர்ப்ப
மாலைக் குழல்சூழ்ந்த நின்வதனம் — போலும்
கயல்பாய வாசங் கவருங் களிவண்
டயல்பாய வம்போ ருகம்'

இ - ள்: நீல நிறத்தை யுடைய புருவமானது முரியக் கண் மதர்ப்பப் பூமாலையை யுடைய குழலாற் சூழப்பட்ட நின்னுடைய முகம் போன்றது, கயல் மிளிர மதுவை யுண்கிற களித்த சுரும்பு பக்கத்திலேயே பரவ மலர்ந்த தாமரை எ - று.

இதனுள் உவமையாகிய முகத்திற் புருவ முரிவிற்கு ஒப்ப தொன்று, பொருளாகிய தாமரைக்கண் புணராமையின், உவமேய அடைக்கு உவமான அடை மிக்குவழுவாயிற்று.

(வி - ரை) இதன்கண் முகம் உவமையாகவும், தாமரை பொருளாகவும் கூறப்பட்டுள்ளது. உவமையாகிய முகத்திற்குப் புருவம் குனிதல், விழி மதர்த்தல், குழல் சூழ்தல் ஆகிய மூன்று அடைமொழிகளும், பொருளாகிய தாமரைக்குக் கயல் பாய்தல், வண்டு அயல் பாய்தல் ஆகிய இரு அடைமொழிகளும் கூறப்பட்டிருத்தலின் மிகுதற்கு எடுத்துக் காட்டாயிற்று. மிகுதல்— பொருளடையினும் உவமையடை மிகுதல்.

---

1. 'வேறுபாடு' என்பது, புன்புலவர் புணர்க்குங்கால் நன்புலவரால் வேறுபடுத்துச் சிறப்பின்மையிற் குற்றமெனக்கூறப்படுவதூஉம், அல்லதூஉம் நன்புலவராற் சிறப்புடையவென்று கொள்ளப் புணர்க்கப்படுவதூஉம் ஆமென்க' என்பதும் பாடம்.

குறைதல்

எ - டு: 'நாட்டந் தடுமாறச் செவ்வாய் நலந்திகழத்
தீட்டரிய பாவை திருமுகம் — காட்டுமால்
கெண்டைமீ தாட நறுஞ்சே யிதழ்விளர
வண்டுசூழ் செந்தா மரை'

இ - ள்: மீதே கண் தடுமாறி யுலாவச், சிவந்த வாய் அழகெறிப்ப, எழுதுதற்கரிய உருவையுடைய பாவை போன்றாள் திருமுகத்தை யொவ்வா நின்றது; மீதே கெண்டை யுலாவ, நறுநாற்றத்தை யுடைத்தாய்ச் சிவந்த இதழ் விளங்க, வண்டாற் சூழப்பட்ட சிவந்த தாமரை எ - று.

தீட்டரிய பாவை-கொல்லியம் பாவை. காட்டும் - ஒக்கும்.

இதனுள் பொருளாகிய தாமரைக்கண் வண்டொழுங்கிற்கு ஏற்பதோர் உவமை, உவமையாகிய முகத்துக்கண் தோன்றப் புணர்த்தலில்லாமையின், உவமேய அடைக்கு உவமான அடை குறைந்து குற்றமாயிற்று.

(வி – ரை) இதன்கண் முகம் உவமையாகவும், தாமரை பொருளாகவும் கூறப்பட்டுள்ளது. உவமையாகிய முகத்திற்கு நாட்டந் தடுமாறல், செவ்வாய் நலந்திகழல் ஆகிய இருஅடைமொழிகளும், பொருளாகிய தாமரைக்குக் கெண்டை மீதாடல், நறுஞ்சேய் இதழ் விளரல், வண்டு சூழ்தல் ஆகிய மூன்று அடைமொழிகளும் கூறப்பட்டிருத்தலின் குறைதற்கு எடுத்துக் காட்டாயிற்று. குறைதல் - பொருளடையினும் உவமையடை குறைதல்.

தாழ்தலும் உயர்தலும் பால்மாறுபடுதலும்

எ டு: 'மன்னவர்க்கு நாய்போல் வனப்புடையர் வாள்வயவர்
மின்மினியும் வெஞ்சுடரோன் போல்விளங்கும் — அன்னப்
பெடைபோலுஞ் சந்திரன் பைந்தடங்கள் போலும்
மிடைமாசொன் றில்லா விசும்பு'

இ - ள்: வேந்தரிடை நாயிடத்துண்டாகிய நற்செய்தியைச் செய்தலால், வாளினையுடைய வலியோர் நாயை யொப்பர்; மின்மினியும், வெய்ய சுடரோனைப் போல விளங்கும்; அன்னப் பெடையை யொக்கும், மதியம்; பசிய தடாகங்கள் போலும், செறிந்திருக்கப்பட்ட மாசில்லாத ஆகாயம் எ - று.

இதனுள், 'மன்னவர்க்கு நாய்போல் வனப்புடையர் வாள் வயவர்' என்புழி, இறப்ப இழித்து இன்னாதாகப் புணர்க்கப் பட்டது உவமை.

'மின்மினியும் வெஞ்சுடரோன்போல் விளங்கும்' என்புழி, மின்மினிக்கு நிகராக்கலாகாத வெஞ்சுடரோனை யுவமிக்க உவமை வழுவாயிற்று.

'அன்னப்பெடை போலுஞ் சந்திரன்' என்புழி, ஆண்பாற்குப் பெண்பால் உவமையாய்க் குற்றமாயிற்று.

'பைந்தடங்கள் போலும் மிடைமாசொன்றில்லா விசும்பு' என்புழி, ஒருமைப் பாலுக்குப் பன்மைப் பாலை உவமை காட்ட வழுவாயிற்று. பிறவுமன்ன.

இனி, வழுவின்றி வருஞ்செய்யுளை வந்துழிக் காண்க. மிகுதல், குறைதல், தாழ்தல், உயர்தல், பால் மாறுபடுதல் முதலியன குற்றமேனும், ஆணம் மிக்குழிக் கொள்க.

(வி - ரை) வீரர்களுக்கு நாயை உவமை கூறியது தாழ்தல் பற்றிய உவமையாம். தாழ்தல் - பொருளுக்குக் கூறப்பட்ட உவமை மிகவும் தாழ்ந்ததா யிருத்தல்.

மின்மினியின் ஒளிக்குக் கதிரவனை உவமைகூறியது உயர்தல் பற்றிய உவமையாம். உயர்தல் - பொருளுக்குக் கூறப்பட்ட உவமை மிகவும் உயர்ந்ததாயிருத்தல்.

ஏனையிரண்டும் வெளிப்படை. (எ)

உவமவுருபுகள்

௩௪. போல மானப் புரையப் பொருவ
நேரக் கடுப்ப நிகர நிகர்ப்ப
ஏர ஏய மலைய இயைய
ஒப்ப எள்ள வுறழ ஏற்ப
அன்ன அனைய அமர வாங்க
என்ன இகல இழைய எதிரத்
துணை தூக்(கு) ஆண்(டு)ஆங்கு மிகுதகை வீழ
இணைசிவண் கேழ்அற்றுச் செத்தொடு பிறவும்
நவைதீர் பான்மை யுவமைச் சொல்லே.

எ - ன், இடைநிற்கும் உவமைச் சொற்களை உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: போல முதல் செத்து ஈறுகச் சொல்லப்பட்ட முப்பத்தைந்தும், இவை போல்வன பிறவும் குற்றமற்ற பாகுபாடுடைய உவமைச் சொல்லாம் எ - று.

1 'பாகுபாடு' என்பது, போல என்று சொல்லப்பட்ட சொல் 'புலிபோல் மறவன்', 'புலிபோல் வந்தனன்' என இடைச்சொல் வாய்பாட்டாற் பொதுவாய் நிற்கும்; அல்லது 'புலிபோலும் மறவன்' எனப் பெயரெச்ச வாய்பாட்டாற் பெயர்கொண்டும், 'புலிபோல வந்தான்' என வினையெச்ச வாய்பாட்டால் வினைகொண்டும் நிற்கும் என்பது. பிறவுமன்ன.

'பிறவும்' என்றதனால், நாட, நக, நடுங்க, நந்த, கள்ள, கருத, காட்ட, மிளிர, ஏய்ப்ப, மருள என்பன முதலியனவுங் கொள்க.

இவற்றுள், தொக்கும், விரிந்தும், தொகாதே விரிந்தும் நிற்பனவெல்லாம் கண்டு கொள்க. (அ)

௫. உருவகவணி

௩௫. உவமையும் பொருளும் வேற்றுமை யொழிவித்(து)
ஒன்றென மாட்டின்அஃ துருவக மாகும்.

---

1. 'பாகுபாடுடைய' என்றதனால், போல என்பது புலிபோலும் மறவன் எனப் பெயரெச்சமாயும், புலிபோல வந்தான் என வினையெச்சமாயும் வரும்; பிறவுமன்ன' என்பதும் பாடம்.

எ - ன், நிறுத்த முறையானே உருவகம் என்னும் அலங்காரத்தின் பொது விலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள் : உவமையாம் பொருளையும், உவமிக்கப்படும் பொருளையும் வேறுபாடு ஒழிவித்து ஒன்றென்பதோர் உள்ளுணர்வு தோன்ற ஒற்றுமை கொளுத்தின், அஃது உருவகம் என்னும் அலங்காரமாம் எ - று.

(வி - ரை) உவமைக்கும் பொருளுக்கும் வேற்றுமை தோன்றக் கூறுதல் உவமை அணியாம். அவ்விரண்டிற்கும் வேற்றுமையின்றி ஒன்றென் றெண்ணுமாறு கூறின் அது உருவக அணியாம். மாட்டுதல் - பொருளில் உவமையை ஏற்றிச் சொல்லுதல். (க)

அதன்வகை

கஅ. தொகையே விரியே தொகைவிரி யெனாஅ
இயைபே இயைபிலி வியநிலை யெனாஅச்
சிறப்பே விரூபகஞ் சமாதான மெனாஅ
உருவகம் ஏகம் அநேகாங்க மெனாஅ
முற்றே அவயவம் அவயவி யெனாஅச்
சொற்றஐம் மூன்றும் மற்றதன் விரியே.

எ - ன், அவ்வுருவகம் என்னும் அலங்காரத்தை விரித்து உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: தொகையுருவகமும், விரியுருவகமும், தொகைவிரி யுருவகமும், இயைபுருவகமும், இயைபிலியுருவகமும், வியநிலை யுருவகமும், சிறப்புருவகமும், விரூபகவுருவகமும், சமாதானவுரு வகமும், உருவகவுருவகமும், ஏகாங்கவுருவகமும், அநேகாங்க வுருவகமும் முற்றுருவகமும், அவயவவுருவகமும், அவயவி வுருவகமும் எனச் சொல்லப்பட்ட பதினைந்தும் மேற்கூறிய உருவ கத்து விரியாம் எ - று.

இவற்றிற் கெல்லாம் உருவகம் என்னுஞ் சொல்லும், ஏகம் என்பதனோடு அங்கம் என்னும் சொல்லும் கூட்டி யுரைக்கப் பட்டன. இவையெல்லாம் சொல்லின் முடியும் இலக்கணத்தன.

(வி - ரை.) தொகையுருவகம் முதலியன தத்தம்பெயர் கூறும் அளவிலேயே, அவற்றின் இலக்கணமும் புலப்படுதலின் சொல்லின் முடியும் இலக்கணத்தனவாம். ஆதலின் நூலாசிரியர் விளக்கிற்றிலர். எனினும் உரையாசிரியர் அவற்றை முறையே விளக்குவர்.

அவற்றுள், (க) தொகையுருவகம் என்பது ஆகிய என்னும் மாட்டேற்றுச் சொல் தொகுத்துக் கூறுவது.

எ - டு: 'அங்கை மலரும் அடித்தளிருங் [1]கண்வண்டும்
கொங்கை முகிழுங் குழற்காரும் - தங்கியதோர்
மாதர்க் [2]கொடியுளதா லண்பா! அதற்கெழுந்த
காதற் குளதோ கரை'

இ - ள்: அழகிய கையாகிய மலரினையும், அடியாகியதளிரினையும், கண்ணாகிய வண்டினையும், கொங்கையாகிய அரும்பினையும், குழலாகிய மேகத்தினையும் உடைத்தாய்ப் பிறர்க்குக்

---

1. 'கண்ணம்பும்' என்பதும், 2. 'கொடி உளதால் மண்பால்' என்பதும் பாடங்களாகும்.

க்காதல் செய்யவற்றாயிருப்பதொரு கொடியுளது, நான் நெருநற் கண்டது; நண்பனே! அக்கொடிமேல் எழுந்த காதலுக்கு எல்லை உலகத்துண்டோ வெனில், இல்லையாயிருந்தது எ - று.

மாதர் - காதல். எழுதல் - செல்லுதல்.

(வி - ரை) மாட்டேற்றுச் சொல் - பொருளில் உவமையை ஏற்றும் சொல். அது ஆகிய என்பதாம். 'அங்கை மலரும்' என்றவிடத்து அங்கை பொருளும், மலர் உவமையும் ஆகும். இப்பொருளில் உவமையாகிய மலரை ஏற்றிச் சொல்லுங்கால் ஆகிய என்னும் உருபு விரிந்து அங்கையாகிய மலர் என வரும். அவ்வுருபு மறைந்து வருதலைத் தொகையுருவகம் என்பர்.

அங்கை மலர், அடித்தளிர், கண்வண்டு, கொங்கை முகிழ், குழற்கார், மாதர்க் கொடி என்றவிடங்களில் ஆகிய என்னும் உருபு தொக்கு வருதலின் இது தொகையுருவகம் ஆயிற்று.

ஆகிய என்ற உருபு ஆக, ஆ எனக் குறைந்து நிற்றலும் உண்டு. அவை தொக்குநிற்பினும் தொகையுருவகமேயாம்.

(உ) **விரியுருவகம்** என்பது அச்சொல் விரிந்து நிற்பது.

எ - டு: 'கொங்கை முகையாக மென்மருங்குல் கொம்பாக
அங்கை மலரா அடிதளிராத் — திங்கள்
அளிநின்ற மூர லணங்காம் எனக்கு
வெளிநின்ற வேனிற் றிரு'

இ - ள்: கொங்கை அரும்பாக, நுண்ணிடை வஞ்சிக் கொம்பாக, அழகிய கையே மலராக, அடி தளிராக, நிலவு போல வெள்ளிய ஒளியினை யுடைத்தாய், என்மேல் வைத்த தண்ணளி யுடைத்தாகிய நகையினை யுடைத்தாய், நெருநல் தோன்றிய அணங்கு போன்று இருந்தாள், இப்பொழுது எனக்கு இளவேனிற் காலத்தைக் கொண்டு வெளிப்பட்ட திருவை யொப்பாள் எ-று.

இவையிரண்டும் எல்லாவற்றிற்கும் பொதுவிலக்கணம். இதனுள் தொகையை முற்கூறியது, உவமை விரித்த சூத்திரம் நோக்கி '**முந்து மொழிந்ததன் தலை தடுமாற்றம்**' என்னுந் தந்திர வுத்தியான்.

(வி – ரை.) இப்பாடலில் முகையாக, கொம்பாக என்ற இடங்களில் 'ஆக' என்ற உருபு விரிந்தும், மலரா, தளிரா என்ற இடங்களில் 'ஆ' என்பது விரிந்தும் நிற்றலின் விரியுருவகமாயிற்று.

இவையிரண்டும்—உவம உருபு மறைந்து வருதலும், விரிந்து வருதலும். எல்லாவற்றிற்கும் பொதுவிலக்கணம் — பின்னர் இவ்வுருவக வேறுபாடாகக் கூறப்படும் அணிகட்கு எல்லாம் பொது என்பதாம்.

முந்து மொழிந்ததன் தலை தடுமாற்றம் — முன்பு கூறிய முறைமைக்கு மாறாகப் பின்பு கூறுதல். உவமையின் வகையை விரிக்குங்கால் 'விரியே தொகையே' எனக்கூறினார்; ஈண்டு உருவகத்தை விரிக்குங்கால் 'தொகையே விரியே' எனக் கூறுகின்றார். ஆதலின், இது முந்துமொழிந்ததன் தலைதடுமாற்றமாம்.

(ங) **தொகைவிரியுருவகம்** என்பது அச்சொல் தொக்கும் விரிந்தும் நிற்பது.

எ - டு: 'வையந் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச் — செய்ய
சுடராழி யானடிக்கே [1]சூட்டினேன் சொன்மாலை
இடராழி [2]நீங்குகவே யென்று'

இ - ள்: உலகமே தகளியாகவும், நெடிய கடலே நெய்யாகவும், வெம்மையை யுடைய பகலவனே விளக்காகவும், சிவந்த நிறத்தை யுடைத்தாகிய சக்கரத்தை யுடையான் அடிக்கே சேர்த்தினேன், சொல்லினால் தொடுத்த மாலையை, என்னுடைய துக்கமாகிய கடல் வறப்பதாக எ - று.

(வி - ரை) தகளியா, நெய்யாக, விளக்காக என்ற இடங்களில் அவ்வுருபு விரிந்தும், இடர் ஆழி என்றவிடத்து அவ்வுருபு தொக்குநிற்றலின், இது தொகைவிரி யுருவகமாயிற்று.

(௪) **இயைபுருவகம்** என்பது பல பொருளை உருவகஞ் செய்யுங்கால் தம்முள் இயைபுடையவாக வைத்து உருவகஞ் செய்வது.

எ - டு: 'செவ்வாய்த் தளிரும் நகைமுகிழுங் கண்மலரும்
மைவா ரளக மதுகரமும் — செவ்வி
உடைத்தாந் திருமுகமென் னுள்ளத்து வைத்தார்
[3]துடைத்தாரே யன்றோ துயர்'

இ - ள்: சிவந்த வாயாகிய தளிரினையும், நகையாகிய முல்லை அரும்பினையும், கண்ணாகிய மலரினையும், கரிய நீண்ட அளகமாகிய வண்டினையும், செவ்வியினையும் உடைய கண்டாரால் விரும்புந் தன்மை யுடைத்தாகிய முகத்தை யென்னுள்ளத்திலே வைத்தார்; இதனாலே என்னுடைய உள்ளத்திலுண்டாகிய துயரத்தை நீக்குவாரன்றோ? சொல்லுவீராக எ - று.

முகை - அரும்பு. இதனுள் தளிரும், முகிழும், மலரும், மதுகரமும் தம்முள் இயைபுடைமையின், அப்பெயர்த்தாயிற்று.

(வி - ரை) வாய், நகை, கண், கூந்தல் ஆகியன ஒன்றற்கொன்று இயைபுடைய பொருள்கள். இவற்றை முறையே தளிர், அரும்பு, மலர், வண்டுகளாகவும், அவை தமக்குள் இயைபுடையனவாகவும் உருவகிக்கப் பட்டுள்ளமையின் இது இயைபுருவக மாயிற்று.

(௫) **இயைபிலுருவகம்** என்பது பல பொருளுந்தம்முள் இயையாமை வைத்து உருவகஞ் செய்வது.

எ - டு: 'தேனக் கலர்கொன்றை பொன்னாகச் செஞ்சடையே
கூனற் பவளக் கொடியாகத் — தான
மழையாகக் கோடு மதியாகத் தோன்றும்
புழையார் தடக்கைப் பொருப்பு'

இ - ள்: மதுவைக் காலுகின்ற கொன்றைமலர் பொன்னாகவும், சிவந்த சடை வளைந்து நன்மையுடைத்தாகிய பவளக் கொடியாகவும், மதம் மழையாகவும், மருப்பு மதியாகவும் தோன்றாநின்றது, துளையை யுடைத்தாகிய பெரிய கையை யுடைய யானையாகிய மலை எ - று.

1. 'சூட்டுவன்' என்பதும், 2. 'நீங்கவே' என்பதும் பாடங்களாகும்.
3. 'துடைத்தாரே யன்றே' என்பதும் பாடம்.

'தடக்கைப் பொருப்பு' என்றது விநாயகரை. தேனக்கலர் - வண்டுமலர் எனினும் அமையும்.

(வி - ரை) விநாயகப் பெருமான் அணிந்திருக்கும் கொன்றை மலர், அவர்தம் சடை, மதம், மருப்பு ஆகிய பொருள்களை முறையே, தம்மில் இயைபற்ற பொருள்களான பொன், பவளக்கொடி, மழை, மதியாக உருவகிக்கப்பட்டுள்ளமையின் இது இயைபில் உருவகமாயிற்று.

இயைபுருவகத்தில் உருவகம், பொருள் ஆகிய இரண்டுமே தம்மில் இயைபுடையனவாயின. இதன்கண் பொருள் தம்முள் இயைபுடையனவாயும், உருவகிக்கப்பட்ட பொருள்கள் மட்டும் தம்முள் இயைபற்றனவாயும் உள்ளன.

(கூ) வியநிலையுருவகம் என்பது ஒன்றன் அங்கம் பலவற்றினுள் சிலவற்றை உருவகஞ் செய்தும், சிலவற்றை உருவகஞ் செய்யாதும் உரைத்து, அங்கியை உருவகஞ் செய்து உரைப்பது.

எ — டு: 'செவ்வாய் நகையரும்பச் செங்கைத் தளிர்விளங்க
[1]மைவாள் நெடுங்கண் மதர்த்துலவச் — செவ்வி
நறவலருஞ் சோலைவாய் நின்றதே நண்பா!
குறவர் மடமகளாங் கொம்பு'

இ - ள்: சிவந்தவாய் எயிற்றை யரும்பச், செங்கரங்கள் தளிரை விளக்க, வருத்தஞ் செய்யும் வாளாகிய கண்கள் சிவந்த அரியோடு உலாவப், புதிதாகிய தேனை யுடைத்தாய் மலருஞ் சோலையின்கண்ணே தோன்றிற்று; நண்பனே! குறவர்க்கு மடப்பத்துடனே கூடிய மகளாந் தன்மை யுடைத்தாயிருப்பதொரு வஞ்சிக்கொம்பு எ - று.

மை - குற்றம்; அஞ்சனமுமாம். மதர்த்தல் - அரிபரத்தல். செவ்வி - புதுமை.

(வி - ரை) இப்பாடலில் கூறப்பட்ட பொருள் குறவர் மடமகள். இப் பெண்ணின் உறுப்புக்களில் இங்குக் கூறப்படுவன வாய், கை, கண் ஆகிய மூன்றுமாம். இவற்றுள் கையை மட்டும் தளிராக உருவகஞ் செய்து, ஏனைய உறுப்புக்களை உருவகிக்காதும், உறுப்பினையுடைய பெண்ணை (அங்கியை) மட்டும் கொம்பாக உருவகித்தும் இருத்தலின் இது வியநிலை யுருவகமாயிற்று.

(எ) சிறப்புருவகம் என்பது ஒரு பொருளை எடுத்து அதற்குச் சிறந்த அடைகளை உருவகஞ் செய்து அவற்றுனே உருவகமாக்கி யுரைப்பது.

எ - டு: 'விரிகடல்சூழ் மேதினி நான்முகன்மீ கானுச்
சுரநதிபா யுச்சி தொடுத்த - அரிதிருத்தாள்
கூம்பாக எப்பொருளுங் கொண்டபெரு நாவாய்
ஆம்பொலிவிற் றுயினதால் [2]இன்று'

இ - ள்: பரந்த கடல்சூழ்ந்த உலகமானது, நான்முகத்தோன் மீகாமனாகவும், தேவகங்கை பாயாகவும், அப்பாயையுச்சியிலே உடைத்தாகிய திருமால் மேனோக்கி யெடுத்த சீர்பாதம்

1. 'மைவார்' என்பதும் பாடம். 2. 'அன்று' என்பதும் பாடம்.

கூம்பாகவும், பல வகைப்பட்ட பொருள்களையும் உடைத்தாய்ப் பெரிதாகிய அழகோடு கூடிய நாவாய் ஆனது எ-று.

இதனுள் நான்முகன் மீகாமனாகவும், சுரநதி பாயாகவும், அரிதிருத்தாள் கூம்பாகவும் உருவகஞ் செய்யப் புவி நாவாய் ஆயினமையின், அப்பெயர்த்தாயிற்று.

'பாயை உச்சியிலே உடைத்தாகிய தாள்' எனக் கூட்டுக. உலகமானது இவ்வுறுப்புக்களை யுடைமையின் மரக்கலம் ஆயிற்றெனக் கொள்க. தொடுத்தல் - கட்டல். ஆல் - அசை.

(அ) **விரூபகவுருவகம்** என்பது ஒரு பொருட்குக் கூடாத தன்மை பலவுங்கூட்டி உருவகஞ் செய்வது.

எ — டு: *'தண்மதிக்குத் தோலாது தாழ்தடத்து வைகாது*
முண்மருவுந் தாண்மேன் முகிழாது — நண்ணி
இருபொழுதுஞ் செவ்வி இயல்பாய் மலரும்
அரிவை வதனம் புயம்'

இ - ள்: தட்பத்தினையுடைய மதியின் தொழிற்குக் கெடாது, ஆழ்ந்த கயத்தில் தங்காது, முள்ளை யுடைத்தாகிய தாளின்மீது மொட்டியாது, காலையும் மாலையுஞ் சேர்ந்து செவ்வியை யுடைத்தாய் மலர்ந்து நிற்கும், என் காதலியுடைய முகமாகிய தாமரை எ - று.

மதிக்கு அழிதலும், தடத்து வைகுதலும், அடியில் முள்ளுடைத்தாதலும், மொட்டித்தலும் தாமரைக்கு உளவெனக் கொள்க.

(வி - ரை) *மதிக்குத் தோலாமை, தடத்துள் வைகாமை, முள்தாளின் மீது முகிழாமை, இருபொழுதும் மலர்தல் ஆகிய இவை தாமரைக்குக்கூடாத தன்மைகளாம். இத்தன்மைகளை அதற்கு ஏற்றி, அத்தகைய தாமரையாக முகத்தை உருவகம் செய்தமையின், இது விரூபகவுருவக மாயிற்று.*

(கூ) **சமாதானவுருவகம்** என்பது ஒருபொருளை நன்றுக உருவகஞ் செய்து, அதனையே தீங்கு தருவதாகக் கூறி, அத்தீங்கும் அதனானே வருகின்றது அன்றென்று அதற்குப் பிறிதோர் காரணங் கூறுவது.

எ - டு: *'கைகாந்தள் வாய்குமுதங் கண்நெய்தல் காரிகையீர்!*
மெய்வார் தளிர்கொங்கை மென்கோங்கம் — இவ்வனைத்தும்
வன்மைசேர்ந் தாவி வருத்துவது மாதவமொன்(று)
இன்மையே யன்றோ எமக்கு'

இ - ள்: அழகினையுடையீர்! உம்முடைய காந்தள் மலராகிய கையும், குமுதமாகிய வாயும், நெய்தல் மலராகிய கண்ணும், நீண்ட தளிராகிய மெய்யும், மென்மையுடைய கோங்கரும்பாகிய கொங்கையும் என்று சொல்லப்பட்டன நும்முடைய அவயவமாகிலும், அவை யனைத்துந் தன்மை திரிந்து வன்கண்மையைச் சேர்ந்து எம்முடைய உயிரை வருத்தஞ் செய்யும்; இது, முற்காலத்தில் யாஞ்செய்த தீவினைப்பயன் இக்காலத்து எமக்குப் பயத்தலாலன்றோ? நும்மேல் தவறுண்டோ? எ - று.

கொங்கைக்கு அடையாகிய மென்மையைத் தீவகமாக்கிக் காந்தள் உள்ளிட்ட உறுப்புக்கள் அனைத்தினுங் கொள்க. தவம்-நல்வினை.

(வி - ரை) இப்பாடலில் எடுத்துக் கூறப்பட்ட பொருள் ஒரு பெண் ஆவள். அப்பெண்ணின் உறுப்புக்களான கை, வாய், கண், மெய், கொங்கை ஆகியவற்றை முறையே காந்தள், குமுதம், செய்தல், தளிர், கோங்கரும்பு என நன்முக உருவகஞ் செய்து, இத்தகைய உறுப்பு நலமுடைய பெண்ணே தன்னுவியை வருத்துவதாக அவ்வழகு நலத்திற்குத் தீங்கு கூறி, அத்தீங்கும் தன்னுடைய தீவினைப் பயனுலேயே வந்ததாம் என அதற்குப் பிறிதொரு காரணமும் கூறியிருத்தலின் இது சமாதான உருவகமாயிற்று.

முதற்கண் பெண்ணுல் தீங்கு வந்ததாகக் கூறிப், பிறகு அதுவும் தன் தீவினையினுலேயே வந்தது எனச் சமாதானம் செய்து கொள்கின்றமையின், இது சமாதான உருவகம் என்ப் பெயர் பெற்றது.

(கo) **உருவகவுருவகம்** என்பது ஒன்றனை உருவகஞ்செய்து, அதனையே பெயர்த்தும் பிறிதொன்முக உருவகஞ் செய்வது.

எ - டு: 'கன்னிதன் கொங்கைக் குவடாங் கடாக்களிற்றைப்
பொன்னெடுந்தோட் குன்றே புனைகந்தா — மன்னவநின்
ஆகத் தடஞ்சே வகமாக யான்அணைப்பல்
சோகித் தருளேல் துவண்டு'

இ - ள்: தலைவனே! நீ காதலித்த கன்னியுடைய முலையென்னும் மலையாகிய மதக்களிற்றை, நின் பொற்கலனணிந்த பெரிய தோளாகிய குன்றமே திரளச் செய்யப்பட்ட கந்தாகவும், மார்பாகிய பரந்த இடமே கூடமாகவும், யான் சேர்த்துவன்; நீ அழகழிந்து வருந்தாதொழிக எ - று.

கடாம் - மதம். புனைதல் - செய்தல். சேவகம் - யானைக் கூடம். துவளுதல் - அழகழிதல். கந்து - தறி. மன்னவன் - தலைவன். குவடு - மலை.

இதனுள் கொங்கையைக் குவடாக உருவகஞ்செய்து, அதனையே மீண்டும் களிமுக உருவகஞ் செய்தவாறு காண்க.

(வி - ரை) இப்பாடலில் கொங்கையைக் குவடாக உருவகஞ் செய்து, அதனையே மீண்டும் களிமுகவும், தோளைக் குன்முக உருவகஞ் செய்து, அதனையே மீண்டும் கந்தாக (கட்டுத்தறியாக)வும் உருவகம் செய்யப்பட்டுள்ளமையின், இது உருவக வுருவகமாயிற்று.

(கக) **ஏகாங்கவுருவகம்** என்பது ஒரு பொருளினது அங்கம் பலவற்றுள்ளும் ஓரங்கமே உருவகஞ் செய்து, ஒழிந்த அங்கங்களை வாளாவே கூறுவது.

எ - டு: 'காதலனைத் தாவென் றுலவுங் கருநெடுங்கண்
ஏதிலனுல் யாதென்னும் இன்மொழித்தேன் — மாதர்
மருண்ட மனமகிழ்ச்சி வாண்முகத்து வந்த
இரண்டினுக்கும் என்செய்கோ யான்'

இ - ள்: நெஞ்சமே! எமக்கொரு கணவனைத் தருவாயாக என்பது போன்றிருந்தது, காதளவும் உலவுகின்ற கரிய நெடிய கண்கள்; அயலானுற் பயனில்லை என்பது போன்றிருந்தது, இனிய தேனுகிய மொழி; மாதருடைய கண்டார்க்கு மயக்கத்தோடு கூடிய உள்ளக் களிப்பைக் கொடுக்கின்ற ஒளியையுடைய முகத்திலே தோற்றிய இவ்விரண்டினுக்கும் யான் என்ன செய்யக்கடவேன்? எ - று.

ஏதிலான் - அயலான்.

(வி - ரை) இப்பாடலில் கூறப்பட்ட பொருள் ஒரு பெண் ஆவள். அப்பெண்ணின் உறுப்புக்களுள் மொழியை மட்டும் தேனாக உருவகித்து, ஏனைய கண், முகம் இரண்டையும் உருவகஞ் செய்யாது வாளா கூறினமையின், இது ஏகாங்க உருவகமாயிற்று.

(கஉ) அநேகாங்கவுருவகம் என்பது ஒன்றன் அங்கம் பலவற்றையும் உருவகஞ் செய்து உரைப்பது.

எ - டு: 'கைத்தளிராற் கொங்கை முகிழ்தாங்கிக் கண்ணென்னும்
மைத்தடஞ்சேல் மைந்தர் மனங்கலங்க — வைத்ததோர்
மின்னுளதால் மேக மிசையுளதால் மற்றதுவும்
என்னுளதாம் நண்பா! இனி'

இ - ள்: கையாகிய தளிரினாலே முலையாகிய அரும்பினைத் தாங்குகின்ற தன்மையையுடைத்தாகவும், கண்ணெனப்பட்ட கரிய குளிர்ந்த சேல்களாலே ஆடவர் உள்ளங்களை அழிக்குந் தன்மையையுடைத்தாகவும், கறுத்த மேகத்தைச் சுமந்து கொண்டு நிற்பதாகவும், ஒரு மின் தோன்றிப் பூமிக்கண்ணே நின்றதேல், அது, நண்பனே! என் உள்ளத்ததுவேயாம் எ - று.

வைத்தல் - தோற்றுதல். மற்று - அசை.

(வி - ரை) இப்பாடலில் ஒரு பெண்ணின் கை, கொங்கை, கண், கூந்தல், வடிவம் ஆகிய பலவுறுப்புக்களும் முறையே தளிர், கோங்கரும்பு, கயல், மேகம், மின்னல் ஆக உருவகிக்கப்பட்டுள்ளமையின் இது அநேகாங்கவுருவகமாயிற்று.

அங்கம், அவயம், உறுப்பு என்பன ஒரு பொருளன. அங்கி, அவயவி, உறுப்பி என்பன ஒரு பொருளன. உறுப்பி - உறுப்பினையுடையது.

(கங) முற்றுருவகம் என்பது அவயவ அவயவிகளை ஏற்ற இடத்தோடும், பிறவற்றோடும் முற்ற உருவகஞ்செய்து உரைப்பது.

எ - டு: 'விழியே களிவண்டு மென்னகையே தாது
மொழியே முருகுலாந் தேறல் — பொழிகின்ற
தேமருவு கோதைத் தெரிவை திருமுகமே
தாமரையென் னுள்ளத் தடத்து'

இ - ள்: தேன் மருவிய கூந்தலையுடைய தெரிவை திருமுகமே தாமரை, விழிகளே களிக்கின்ற வண்டு, மெல்லியவாகிய நகையே தாது, வார்த்தையே நறுநாற்றம் உலாவுகின்ற மது, என் உள்ளமாகிய தடாகத்து எ - று.

நகை - பல். தாது - அகவிதழ். முருகு - நறுநாற்றம். உலவுதல் - உண்டாதல். தேறல் - மது. தேம் - தேன்.

(வி - ரை) இப்பாடலில் ஒரு பெண்ணின் விழி, நகை, மொழி, முகம் ஆகிய உறுப்புக்களை முறையே வண்டு, தாது, தேன், தாமரை ஆக உருவகித்து, அது தன் உள்ளத்தில் இருப்பதற்கு ஏற்ப உள்ளத்தைக் குளமாகவும் உருவகித்துள்ளமையின் இது முற்றுருவகம் ஆயிற்று.

(கச) அவயவவுருவகம் என்பது அவயவத்தை உருவகஞ் செய்து, அவயவியை வாளாவே கூறுவது.

எ - டு: 'புருவச் சிலைகுனித்துக் கண்ணம்பெ னுள்ளத்
துருவத் துரந்தார் ஒருவர் — அருவி
பொருங்கற் சிலம்பிற் புனையல்குல் தேர்மேல்
மருங்குற் கொடிநுடங்க வந்து'

இ - ள்: அலங்கரிக்கப்பட்ட அல்குலாகிய தேரின்மேல் ஏறி, இடையாகிய கொடி யசைய வந்து, அருவி யலைக்கப்பட்ட மலைச் சிலம்பினிடத்திலே தோற்றித், தம்முடைய புருவமாகிய வில்லை வளைத்துக், கண்ணாகிய அம்பினாலே என் உள்ளத்திலே உருவிப் போக ஒருவர் எய்தார்; இதற்குச் செய்யக்கடவது என்கொல்? சொல்லுவாயாக எ - று.

'மலைப்பக்கத்திலே வந்து தோன்றி எய்தார்' எனக் கூட்டுக. சிலம்பு - மலையடி.

(வி - ரை) இப்பாடலில் ஒரு பெண்ணின் புருவம், கண், அல்குல், மருங்குல் ஆகிய உறுப்புக்களை மட்டும் உருவகித்து, இவ்வுறுப்புக்களையுடைய பெண்ணை மட்டும் 'ஒருவர்' என வாளாவே கூறியுள்ளமையின், இது அவயவ வுருவகம் ஆயிற்று.

ஒரு பொருளது உறுப்புக்கள் பலவற்றையும் உருவகம் செய்துரைப் பதில் இதுவும், அநேகாங்க உருவகமும் ஒக்குமேனும், இது அவ்வுறுப்பியை (அவயவியை) உருவகஞ் செய்யாது விடுத்தும், அது அவ்வுறுப்பியையும் உருவகஞ் செய்தும் நிற்றல் காண்க. இவை தம்முள் வேற்றுமை.

(கரு) அவயவியுருவகம் என்பது அவயவியை உருவகஞ் செய்து, அவயவங்களை வாளாவே கூறுவது.

எ - டு: 'வார்புருவங் கூத்தாட வாய்மழலை சோர்ந்தசைய
வேரரும்பச் சேர்ந்து விழிமதர்ப்ப — மூரல்
அளிக்குந் தெரிவை வதனம் புயத்தால்
களிக்குந் தவமுடையேன் கண்'

இ - ள்: நல்லாருடைய புருவம் அசைய, வாயில் வார்த்தை யானது உருத்தெரியாது அழிந்து தளரக், குறுவியர்ப்பை யுடைத் தாக விழியானது சிவந்து மதர்ப்ப, முறுவலிப்புதொரு [1]முக மாகிய தாமரையினாலே களிக்குந் தன்மையைப் பெற்றது; முற் காலத்தில் யான் செய்த நல்வினைப் பயத்தினாலே, எனது கண் எ - று.

மழலை - உருவந் தெரியாச்சொல். சோர்தல் - அழிதல். அசைதல் - தளர்தல். சேந்து - சிவந்து. மூரல் - நகை. தவம் - நல்வினை.

(வி - ரை) இப்பாடலில் கூறப்படும் பெண்ணின் முகம் அவயவியாகும். அதனை மட்டும் தாமரையென உருவகித்து, அதன்கண்ணுள்ள உறுப்புக் களான புருவம், மழலை, விழி, முறுவல் ஆகியவற்றை உருவகியாது வாளாவே கூறியுள்ளமையின், இது அவயவி யுருவகமாயிற்று. (கO)

உருவகம் பிற அணிகளுடன் கூடிவரும் எனல்

௩எ. உவமை ஏது வேற்றுமை விலக்கே
அவநுதி சிலேடையென்(று) அவற்றொடும் வருமே.

1. 'தாமரையாகிய முகத்தினாலே' என்பதும் பாடம்.

எ - ன், அவ்வுருவக அலங்காரம் பிற அலங்காரங்களோடும் கூடி வருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: உவமையும், ஏதுவும், வேற்றுமையும், விலக்கும், அவநுதியும், சிலேடையும் என்னும் ஆறு அலங்காரங்களோடு கூடியும் வரும் அவ்வுருவக அலங்காரம் எ - று.

அவற்றுள், (க) உவமையுருவகம்

எ - டு: 'மதுமகிழ்ந்த மாதர் வதன மதியம்
உதய மதியமே யொக்கும் — மதிதளர்வேன்
வெம்மை தணிய மதராக மேமிகுக்கும்
செம்மை யொளியால் திகழ்ந்து'

இ - ள்: மதுவுண்டு களித்த மடவாருடைய முகமதியம், உதயஞ்செய்த நிறை மதியம் போன்றது; அறிவழியுந் தன்மையை யுடையேனுடைய ஆற்றலழியக் களிப்போடு கூடிய காதலைப் பெரிதும் புலப்படுத்தித் தோற்றுகின்ற சிவந்த நிறத்தாலே அழகு பெற்று எ - று.

மதம் - களிப்பு. ராகம் - காதல். திகழ்தல் - அழகுபெறுதல்.

இதனுள் முக்கியப்பொருளையும் குணப்பொருளையும் ஒப்புமை காட்டினமையான், உவமையுருவகமாயிற்று.

(வி - ரை) உவமையணியோடு கூடிவரும் உருவகம் உவமையுருவகம் ஆகும். முகத்தை மதியமாக உருவகித்துப் பின்பு அது உதய மதியத்தை ஒக்கும் என உவமையோடு கூட்டிக் கூறுதலின் இது உவமையுருவக மாயிற்று.

'வதன மதியம்' என உருவகித்துப் பின்பு 'உதய மதியமே ஒக்கும்' என்றல் 'கூறியது கூறல்' போன்று தோன்றும். எனினும் இதற்கு அக ஆம் நூற்பாவில் அமைதி கூறுவர். அதனை ஆண்டுக் காண்க.

முக்கியப் பொருள் - பொருள் (உபமேயம்). குணப் பொருள் - உவமை.

(உ) ஏதுவுருவகம்

எ - டு: 'மாற்றத்தால் கிள்ளை நடையால் மடவன்னம்
தோற்றத்தால் தண்ணென் சுடர்விளக்கம் - போற்றும்
இயலால் மயில்எம்மை யிந்நீர்மை யாக்கும்
மயலார் மதர்நெடுங்கண் மான்'

இ - ள்: நண்பனே! எம்மை இப்படித் தாழ்வு பண்ணிய நெடிதாய்ச் சிவந்து காதலைக் கொடுக்கின்ற கண்களை யுடைமையான் மான் போன்றுள்; மொழியினால் கிள்ளை யாயினாள்; நடையினால் மடவிய அன்னமாயினாள்; மேனியால் குளிர்ந்த உருவத்தையுடைய விளக்கின் நிறமாயினாள்; யாவரும் பரவப்படும் சாயலால் மயிலாயினாள் எ - று.

சுடர் - விளக்கு. விளக்கம் - நிறம். மயல் - காதல். மதர் - சிவப்பு.

(வி - ரை) ஏது அணியோடு கூடிவரும் உருவகம் ஏது வுருவகம் ஆகும். இப்பாடலில் ஒரு பெண்ணைக் கிளியாகவும், அன்னமாகவும், விளக்காகவும் மயிலாகவும் உருவகம் செய்ததோடு, அவ்வப்பொருளாக உருவகம் செய்ததற்குரிய காரணங்களையும் உடன் கூறியுள்ளமையின் இது ஏதுவுருவகமாயிற்று.

(௩) வேற்றுமையுருவகம்

எ - டு: 'வையம் புரக்குமால் மன்னவநின் கைக்காரும்
பொய்யின்றி வானிற் பொழிகாரும் - கையாம்
இருகார்க்கு மில்லைப் பருவம் இடிக்கும்
ஒருகார் பருவம் உடைத்து'

இ - ள்: அரசனே!, உன்னுடைய கையாகிய மேகமும், காலம் பிறழாது ஆகாயத்தின்கண் நின்று பொழிகின்ற மேகமும், உலகத்தைப் புரக்குந்தன்மையில் ஒக்குமாயினும், கையென்கிற இரண்டு மேகங்களுக்கும் பருவமில்லை; இடியையுடைய ஒரு மேகத்துக்குப் பருவமுண்டு எ - று.

ஆல் - அசை. இதனுள் குணப்பொருளேயும், முக்கியப் பொருளேயும் 'வையம் புரக்கும்' என்று ஒப்புமை காட்டிக், 'கைக் காருக்குப் பருவமில்லை; ஏனைக்கார் பருவமுடைத்து' என்று வேற்றுமை செய்தமையின், அப்பெயர்த்தாயிற்று.

(வி - ரை) வேற்றுமை அணியோடு கூடிவரும் உருவகம் வேற்றுமை யுருவகம் ஆகும். அரசனின் கையை மேகமாக உருவகித்துப், பின்பு அம் மேகத்திற்கும் கைக்கும் வேற்றுமை காட்டியுள்ளமையின், இது வேற்றுமை யுருவக மாயிற்று.

(௪) விலக்குருவகம்

எ - டு: 'வல்லி வதன மதிக்கு மதித்தன்மை
இல்லை யுளதேல் இரவன்றி — எல்லை
விளக்கு மொளிவளர்த்து வெம்மையால் எம்மைத்
துளக்கும் [1]இயல்புளதோ சொல்'

இ - ள்: வல்லியாயினுள் முகமாகிய மதியத்திற்கு, மதியி னுடைய தன்மையில்லை போலும்; உண்டாயின், பகற்பொழுது தன்னிடத்திலே ஒளியை மிகுத்து நம்மை வருத்தி அறிவையழிக் கும் இயல்புடைத்தாமோ? நண்பனே! சொல்லுவாயாக எ - று.

(வி - ரை) விலக்கு அணியோடு கூடிவரும் உருவகம் விலக்குருவக மாகும். இப்பாடலில் ஒரு பெண்ணின் முகத்தை மதியமாக உருவகித்துப் பின்பு அம்முகத்திற்குள்ள தன்மை மதியத்திற்கு இல்லை என விலக்கலின் விலக்குருவகம் ஆயிற்று.

(௫) அவநுதியுருவகம்

எ - டு: 'பொங்களக மல்ல புயலே யிதுஇவையும்
கொங்கை யிணையல்ல கோங்கரும்பே—மங்கைநின்
மையரிக்கண் அல்ல மதர்வண் டிவைஇவையும்
கையல்ல காந்தள் மலர்'

இ - ள்: மங்கைப் பருவத்தை யுடையவளே! உன்னுடைய மிக்க கருமையை யுடைய கூந்தலன்று, இது மேகப்பரப்பே; இரண் டாகிய தனங்கள் அல்ல, இவை கோங்கரும்புகளே; மையணிந்த செவ்வரி பரந்த கண்கள் அல்ல, இவை செருக்கினையுடைய வண்டுகளே; கையல்ல, காந்தள் மலர்களே எ - று.

---

1. 'இயல்புடைத்தோ' என்பது பாடம்.

பொங்கு அளகம் - தழைத்த கூந்தல். மையரிக்கண் — அரி பரந்து மையுண்ட கண்.

இது உண்மைப் பொருளை மறுத்து ஒப்புமைப் பொருளை உடன்பட்டமையான், அப்பெயர்த்தாயிற்று.

(வி - ரை) அவநுதி அணியோடு கூடிவரும் உருவகம் அவநுதியுருவக மாகும். ஒன்றைச் சிறப்பித்தற்காக உண்மையை மறுத்துப் பிறிதாக உரைப்பது அவநுதியாகும். இதன் இலக்கணத்தை எச்-ஆம் நூற்பாவால் அறிக.

இப்பாடலில் ஒரு பெண்ணின் உறுப்புக்களைச் சிறப்பிக்கும் முகமாக அவளுடைய கூந்தல், கொங்கை, கண், கை ஆகிய உறுப்புக்களை அவ்வவ் வுறுப்புக்கள் அல்ல என மறுத்துப், பின்பு அவற்றை முறையே புயல், கோங் கரும்பு, வண்டு, காந்தள் என உருவகித்துள்ளமையின் இது அவநுதி யுருவக மாயிற்று.

(௬) சிலேடையுருவகம்

எ - டு: 'உண்ணெகிழ்ந்த செவ்வித்தாய்ப் பொற்றோட் டொளிவளராத்
தண்ணளிசூழ்ந் தின்பந் தரமலர்ந்து — கண்ணெகிழ்ந்து
காதல் கரையிறப்ப வாவி கடவாது
மாதர் வதனம் புயம்'

இ - ள்: உள்ளே விரியாநின்ற பொலிவினை யுடைத்தாய் அழகிய இதழ்களின் ஒளி மிகக்குளிர்ந்திருக்கின்ற வண்டுகளாற் சூழப்பட்டுக் கண்டார்க்கு இனிமை தோன்ற இதழ் விரிந்து மதுப் பொசிந்து கண்டார்க்கு ஆசை மிகுப்பப் பொய்கை யிடத்து நீங் காது தோன்றிய தாமரை என்றும்; உள்ளக் கசிவால் [1] மலர்ந்த புதுமை யுடைத்தாய்ப், பொன்னான் இயன்ற தோடுகளின் ஒளி தழைப்பக் குளிர்ந்த விருப்பத்தை மேவிக், கண்டார்க்கு ஆசை யளிக்குந் தோற்றரவினை யுடைத்தாய்க் கண்ணினையும் உடைத் தாய், ஆசைப்பாட்டெல்லை கடப்ப, உள்ளங்கடவாது இவளுடைய வதனமாகிய தாமரை என்றும் வந்தவாறு காண்க.

இது தாமரைக்கும் முகத்திற்கும் சிலேடை. இதனுள் தாமரை யொழுக்கத்தையும் முகவொழுக்கத்தையும் ஒரு சொற்றொடர் பால் சிலேடித்து வதனம்புயம் என்று உருவகஞ் செய்தவாறு கண்டு கொள்க.

தாமரைமேற் செல்லுங்கால்: உள் - தாமரையுள், நெகிழ்தல் - விரிதல், செவ்வி - பொலிவு, பொன் - அழகு, தோடு - இதழ், தண் - குளிர்ச்சி, அளி - வண்டு, இன்பம் - இனிமை, தர - தோன்ற, கள் - மது, நெகிழ்தல் - விரிதல், வாவி - பொய்கை எனவும்; **முகத்தின்மேற் செல்லுங்கால்:** உள் - மனம், நெகிழ்தல் - பொசிதல், செவ்வி - புதுமை, பொற்றோடு - பொன்னின்தோடு, அளி - விருப்பம், இன்பம் - ஆசை, தர - கொடுக்க, மலர்தல் தோன்றல், கண் - விழி, நெகிழ்தல் - உண்டாதல், காதல் - ஆசை, ஆவி - உயிர் எனவும் வரும்.

(வி - ரை): சிலேடை அணியோடு கூடிவரும் உருவகம் சிலேடை யுரு வகமாகும். இப் பாடலில் ஒரு பெண்ணின் முகத்திற்கும், தாமரைக்கும் பொருந்துவதான சொற்றொடர்களை முன்னே அமைத்துக் கூறிப், பின்பு அம்

---

1. 'வந்த' என்பதும் பாடம்.

முகத்தைத் தாமரையாக உருவகித்துக் கூறப்பட்டுள்ளமையின் இது சிலேடை யுருவகமாயிற்று. (கக)

உவமை உருவகங்கட்குப் புறனடை

நூஅ. உருவகம் உவமை யெனஇரு திறத்தவும்
நிரம்ப வுணர்த்தும் வரம்புதமக் கின்மையிற்
கூறிய நெறியின் வேறுபட வருபவை
தேறினர் கோடல் தெள்ளியோர் கடனே.

எ - ன், மேற்சொல்லிய உருவகம் உவமை என்னும் இரண்டு திறத்து அலங்காரங்களுக்கும் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: உருவகமும் உவமையும் என்னும் இரண்டு திறத்து அலங்காரங்களும், ஒழிவின்றி யுணர்த்தும் வரையறை யுடைய வல்ல வாகலால், சொல்லப்பட்ட நெறியின் வேறுபட வருபவை யறிந்து அவற்றின்பால் சார்த்திக்கோடல் அறிவுடையோர் கடன் எ - று.

ஈண்டு உருவகம் முற்கூறியது, அதிகாரம் இடையறுமல் எனக் கொள்க. அவற்றுள் சில உருவகம் வருமாறு:—

(க) ஏதுவுருவகம்

எ டு: 'வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை' (குறள் - அஎஉ)

(வி - ரை) இ - ள்: வில்லை ஏராகவுடைய வீரர்களோடு பகைமை கொள்ளினும், நீதி நூல்களை ஏராகவுடைய அறிஞர்களோடு பகை கொள்ளற்க என்பதாம்.

'வீரம், சூழ்ச்சி என்னும் ஆற்றல்களுள் வீரமே யுடையாரோடு பகை கொண்டால் கேடு வருதல் ஒருதலையன்று, வந்ததாயினும் தனக்கேயாம்; ஏனைச் சூழ்ச்சி யுடையாரோடாயின் தன்வழியினுள்ளார்க்கும் தப்பாது வருதலின், அது கொள்ளினும் இது கொள்ளற்க என்றார். உம்மையால் அதுவும் ஆகாமை பெறுதும். இரண்டும் உடையாரோடு கொள்ளலாகாமை சொல்ல வேண்டாவாயிற்று. உருவக விசேடம்.' (பரிமேல் - உரை)

இப்பாடலில் வீரர், அறிஞர் ஆகிய இருவர்களையும் உழவராக உருவகித்த துடன், அதற்குரிய காரணங்களையும் உடன் தந்துள்ளமையின், இது ஏது உருவகமாயிற்று.

இவ்வுருவகம் முதலாக இந்நூற்பாவில் கூறப்படுவன வெல்லாம் முன்பு கூறிய அணிகளினும் சிறிது வேறுபட வந்தனவாகும். ஆதலின் அவ்வேற்றுமை அறிதல் இன்றியமையாததாகும்.

முன்பு கூறிய ஏது உருவகத்திற்கும் (பக்-எ0) இதற்கும் வேற்றுமை:— ஆங்குக் கூறப்பட்டதில் உருவகிக்கப்பட்ட பொருள், உருவகப் பொருள், ஏது ஆகிய மூன்றும் வெளிப்படையாகத் தெரிகின்றது. ஈங்கு உருவகப் பொருளும் ஏதுவுமேயன்றி, உருவகிக்கப்பட்ட பொருள் இன்னதெனத் தெற்றெனத் தெரியுமாறில்லை. எனவே இது குறிப்பும், அது வெளிப்படையாயும் உள்ள வேற்றுமை என்பது பெறப்பட்டது.

(உ) இயைபுருவகம்

எ - டு: 'எரி யிரண்டும் சிறகா எயில்வயிறாக்
காருடைய பீலி கடிகாவா — நீர்வண்ணன்
அத்தியூர் வாயா அணிமயிலே போன்றதே
பொற்றேரான் கச்சிப் பொழிலிவு'

எயில் - மதில். கடி - புதுமை. கா - சோலை. அணி - அழகு.

(வி - ரை) இ — ள்: இரு பக்கத்திலுமுள்ள எரிகள் சிறகுகளாகவும், இடையிலுள்ள மதில் வயிறாகவும், சுற்றிலுமுள்ள நறுமணம் வீசும் சோலைகள் கருமை நிறம் பொருந்திய தோகைகளாகவும், திருமாலினது திருவத்தியூர் வாயாகவும் கொண்டிலங்கும் சிறப்பால், அழகிய தோள்களையுடைய சோழனுடைய காஞ்சீபுரமானது அழகிய மயிலை யொத்து விளங்குகின்றது என்பதாம்.

இதன்கண் காஞ்சியிலுள்ள எரி, மதில், சோலை, அத்தியூர் ஆகிய வைகளை முறையே சிறகு, வயிறு, தோகை, வாய் ஆகவும், காஞ்சியை மயிலாகவும் தம்முள் இயைபுடையனவாக உருவகம் செய்யப்பட்டுள்ளமையின் இது இயைபுருவகமாயிற்று.

வேறுபாடு

இங்குக் கூறப்பட்ட இயைபுருவகம்	முன்னர்க் கூறப்பட்ட இயைபுருவகம்
1. மயிலாக உருவகம் செய்யப்பட்ட வாற்றால், ஒன்றினொன்று பிரிக்க இயலாதவாறு நெருங்கியதாக உருவகம் செய்யப்பட்டுள்ளது.	தளிர், அரும்பு, மலர், வண்டுகளாக உருவகம் செய்தவாற்றால் ஒன்று ஒன்ற னோடு பிரிக்க இயன்றதாக உருவகம் செய்யப்பட்டுள்ளது. (அரும்பினின்றும் மலரைப் பிரிக்க இயலாதெனினும் தன்மை வேறுபாடு அறிக.)
2. உறுப்புக்களையே யன்றி, உறுப் புக்களை யுடைய காஞ்சீபுரமும் உருவகம் செய்யப்பட்டுள்ளது.	உறுப்புக்களை மட்டும் உருவகித்து அவற்றை யுடைய முகத்தை உருவகம் செய்யப்பட்டிலது.
3. ஆகிய என்னும் உருபுகள் விரிந் துள்ளன.	ஆகிய என்னும் உருபுகள் தொக் குள்ளன.

(ங) விலக்குருவகம்

எ - டு: 'மலையிற் பயிலா மடமஞ்ஞை வாரி
அலையிற் பிறவா வமுதம் - விலையிட்(டு)
அளவாத நித்திலம் ஆராத தேறல
வளவாண் மதர்நெடுங்கண் மான்'

பயிறல் - தங்குதல். வாரியலை - கடல். அளத்தல் - நிறுத்தல். ஆர்தல் - உண்டல். தேறல் - மது. வள்வாள் - வளப்பத்தை யுடைய வாள்.

(வி - ரை) விலக்கு அணியுடன் உருவகம் செய்யப்படுவது விலக்கு உருவகமாம்.

இ - ள்: வளப்பம் பொருந்திய வாள்போன்ற மதர்த்த கண்களையுடைய மான் போன்ற பெண், மலையில் வாழாத இளமயிலும், கடலினது அலையிலே பிறவாத அமுதமும், விலையிட்டுக் கூற முடியாத முத்தும், உண்ண முடியாத தோர் தேனுமாவள் என்பதாம்.

இப்பாடலில் ஒரு பெண்ணை மயில், அமுதம், நித்திலம், தேன் என உருவகிக்குங்கால், அவ்வப் பொருள்களின் தன்மையினின்றும் விலக்கி உருவகம் செய்யப்பட்டிருத்தலால் இது விலக்குருவகமாயிற்று.

முன்னர்க் கூறப்பட்ட விலக்குருவகத்திற்கும் (பக்-எக) இதற்கும் வேற்றுமை:— ஆண்டு உருவகிக்கப்பட்ட பின்பு விலக்கப்பட்டுள்ளது. ஈண்டு உருவகிப்பதற்கு முன்பு விலக்கப்பட்டுள்ளது.

(ச) சிறப்புருவகம்

எ - டு: 'மழலைவாய் நவ்வி மதர்நெடுங்கண் மஞ்ஞை
குழலின் [1]பொறைமெலிந்த கொம்பர் - சுழல்கலவந்
தாங்கிய அன்னந் தடங்கொங்கை ஆரமுதந்
தேங்கொள் கமலத் திரு'

கலவம் - தோகை.

(வி - ரை) ஒன்றனை உருவகிக்குங்கால், அவ்வுருவகப் பொருளுக் கில்லாத சிறப்பினையேற்றி உருவகிப்பது சிறப்புருவகமாகும்.

இ - ள்: தேனைத் தன்னகத்தே கொண்ட செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளாகிய பெண், மழலைச் சொற்களைப் பேசும் வாயை யுடைய மானும், வளப்பம் பொருந்திய நீண்ட கண்களை யுடைய மயிலும், கூந்தலின் சுமையைத் தாங்குதலால் மெலிவுற்ற கொம்பும், திரண்ட தோகையை யுடைய அன்னமும், பெருத்த கொங்கைகளை யுடைய அமுதமும் ஆவள் என்பதாம்.

இப்பாடலில் ஒரு பெண்ணை மான், மயில், கொம்பு, அன்னம், அமுதம் ஆக உருவகிக்குங்கால் அவ்வப்பொருள்களிடத்தும் இல்லாததான மழலைவாய், மதர்நெடுங்கண், குழலின் பொறை மெலிதல், கலவம் தாங்கல், தடங் கொங்கை யுடைத்தாதல் ஆகிய சிறப்புக்களை ஏற்றி உருவகித்துள்ளமையின் இது சிறப்புருவக மாயிற்று.

முன்னர்க்கூறிய (பக்-சரு) சிறப்புருவகத்திற்கும், இதற்கும் வேற்றுமை:-ஒரு பொருளுக்கு இன்றியமையாததாயுள்ள (சிறந்த) பொருள்களை உருவகமாக்கி யுரைப்பது முற்கூறிய சிறப்புருவகமாம். (உலகாகிய ஒரு பொரு ளுக்கு இன்றியமையாததாக விளங்கும் படைப்புக் கடவுள், நீர், காத்தற் கடவுள் ஆகிய மூவரையும் ஆங்கு உருவகிக்கப்பட்டமை காண்க.) ஒரு பொருளை எவ்வெப்பொருள்களாக உருவகிக்கப்படுகின்றதோ அவ்வப்பொருள்களிடத்தும் இல்லாததான சிறப்பான அடை மொழிகளைக் கொடுத்து உருவகிப்பது ஈண்டுக் கூறப்பட்ட சிறப்புருவக மாகும்.

---

1. 'பொறை மலிந்த' என்பதும், 'பொறை சுமந்த' என்பதும் பாடமாகும்.

(ரு) அற்புதவுருவகம்

எ - டு: 'மன்றற் குழலார் உயிர்மேல் மதன்கடவும்
தென்றற் கரிதடுக்குந் திண்கணையம் - [1]மன்றலைக்
கங்குற் கடலிற் கரையேற்று நீள்புணையாம்
பொங்குநீர் நாடன் புயம்'

இ - ள்: பொலிவினையுடைய நீர்சூழ்ந்த காவிரி நாடனுடைய தோளானது, நறுநாற்றத்தையுடைய குழலினர் உயிரை அழிக்க மன்மதன் வரவிடுத்த தென்றலாகிய மதக்களிறு வராதபடி தடுத்தற்கு ஏற்ற வலிய கணையமும், அவர்களைக் கங்குலாகிய கடலின் கரையிலே சேர்க்கும் பெரிய மிதவையுமாம் எ - று.

கணையம் - யானை வராமல் தடுக்கும் மரம்.

இங்ஙனம் பிறவும் வருவனவற்றை உருவகத்தின்பாற் சார்த்தி யுணர்க.

(வி - ரை) ஒன்றனை உருவகிக்குங்கால் அற்புதம் (வியப்பு) தோன்ற உருவகிப்பது அற்புத உருவகமாகும்.

இப்பாடலில் சோழனின் தோள்களைக் கணையமாகவும், புணையாகவும் உருவகிக்குங்கால் அற்புதம் தோன்ற உருவகித்துள்ளமையின், இது அற்புத வுருவகமாயிற்று.

உவமை வருமாறு:—

(க) தெரிதருதேற்ற உவமை

எ - டு: 'நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு' (குறள் - ௪0அ)

(வி - ரை) இன்னதற்கு இன்னது உவமையாகும், இன்னது உவமையாகாது எனத் தெரிந்து கூறுவது தெரிதருதேற்ற வுவமையாகும்.

இ - ள்: கல்லாதவர் மாட்டுளதாய செல்வம், கற்றார் மாட்டுளதாய வறுமையினும் கொடிது என்பதாம்.

'தத்தம் நிலையினன்றி மாறி நிற்றலால் தாம் இடுக்கட் படுதலும், உலகிற்குத் துன்பஞ் செய்தலும் இரண்டற்கும் ஒக்குமாயினும், திரு கல்லாரைக் கெடுக்க, வறுமை நல்லாரைக் கெடாது நிற்றலான், வறுமையினும் திரு இன்னாது என்றார்.' (பரிமேல் - உரை)

இதன்கண் கல்லாதவர் மாட்டுளதாய செல்வத்திற்குக் கற்றாரிடத்துளதாய வறுமை உவமை கூறத்தக்கதன்று எனத் தெரிந்து கூறியிருத்தலின், இது தெரிதருதேற்ற வுவமை யாயிற்று.

முன்னர்க் (பக்-௪ரு) கூறிய தெரிதருதேற்ற வுவமைக்கும் இதற்கும் உள்ள வேறுபாடு:—முன்னர்க் கூறியது முதற்கண் ஐயுற்றுப் பின்பு தெளிந்து கூறுவது. ஈண்டுக் கூறியது ஐயுறாமலேயே தெளிந்து கூறுவதாம்.

(உ) [2]பலபொருளுவமை

எ - டு: 'அடிநோக்கின் ஆழ்கடல் வண்ணன் அவன்தன்
படிநோக்கிற் பைங்கொன்றைத் தாரான் - முடிநோக்கித்
தேர்வளவ னாகத் தெளிந்தேன்தன் சென்னிமேல்
ஆரலங்கல் தோன்றியது கண்டு'

---

1. 'அன்றலரை' என்பதும் பாடம். 2. 'பலவயிற் போலியுவமை' என்பதும் பாடம்.

(வி – ரை) ஒரு பொருளுக்குப் பலபொருளை உவமை கூறின் அது பலபொருளுவமையாம்.

இ - ள்: அவனது அடிகளை நோக்கின் ஆழமுடைய கடலின் நிறத்தையுடைய திருமாலாகத் தோன்றுகின்றான்; மற்றும் அவனுடைய வடிவத்தை நோக்கின் பசிய கொன்றை யணிந்த சிவபெருமான் போலத் தோன்றுகின்றான்; இங்ஙனம் ஒவ்வொரு வகையில் ஒவ்வொரு பொருளாகத் தோன்றுகின்ற அவனுடைய முடியை இறுதியில் நோக்க அவ்விடத்து ஆத்திமாலையிருக்கக்கண்டு அவனைத் தேரினையுடைய சோழனாகத் தெளிந்தேன் என்பதாம்.

இப்பாடலின்கண் சோழனாகிய ஒருவனுக்குத் திருமால், சிவபெருமான் ஆகிய இருவரையும் உவமை கூறியிருத்தலின் இது பலபொருளுவமையாயிற்று.

முன்னர்க் (பக்-சஎ) கூறப்பட்ட பலபொருளுவமைக்கும் இதற்கும் உள்ள வேறுபாடு:—ஆண்டு ஒரு பொருளுக்கே பல பொருள்களை உவமை கூறப்பட்டது. ஈண்டு ஒரு பொருளில் ஒவ்வொரு பகுதியையும் நோக்கி ஒவ்வொரு உவமை கூறப்பட்டுள்ளது.

பலவயிற்போலி யுவமைக்கும் (பக்-கூ0) இதற்கும் உள்ள வேறுபாடு:— ஆண்டு ஒரு பொருளிலுள்ள ஒவ்வொரு உறுப்பிற்கும் ஒவ்வொரு உவமை கூறப்பட்டு, அவ்வவ்விடத்தெல்லாம் உவம உருபும் விரிந்து நின்றது. ஈண்டு ஒரு பொருளில் ஒவ்வொரு பகுதியையும் நோக்கி உவமை மட்டும் கூறப்பட்டுள்ளது. ஆதலின் அதனின் வேறாயிற்று.

(ங) பண்புவமை

எ - டு: 'கருங்கால் வேங்கை வீயுறு துறுகல்
இரும்புலிக் குருளையில் தோன்றுங் காட்டிடை
எல்லி வருநர் களவிற்கு
நல்லை யல்லை நெடுவெண் ணிலவே' (குறுந் - சஎ)

(வி - ரை) ஒருபொருளொடு ஒருபொருளைப் பண்புபற்றி உவமை கூறுதல் பண்புவமையாம்.

இ - ள்: பரந்த வெண்ணிலவே! கரிய அடிப்பகுதியையுடைய வேங்கை மரத்தின் மலர்கள் பரவப்பெற்ற வலிய கல்லானது, பெரிய புலியினது குட்டியைப் போலத் தோன்றும் காட்டிடத்தே, இரவில் களவிடத்துத் தனித்து வரும் எம் தலைவருக்கு நீ நன்மை செய்யமாட்டாய் என்பதாம். இது தோழி கூற்று.

வேங்கைமலர் பாவப்பெற்ற கல், வண்ணத்தாலும், வடிவத்தாலும் கோடுகளையுடைய புலிக் குட்டியைப்போலத் தோன்றும் என்பதால், இது பண்புவமையாயிற்று.

(ச) [1]ஒப்புமையுவமை

எ - டு: 'முத்துக்கோத் தன்ன முறுவல் முறுவலே
ஒத்தரும்பு முல்லைக் கொடிமருங்குல் — மற்றதன்மேல்
மின்னளிக்கும் கார்போல் விரைக்கூந்தல் மெல்லியவாள்
தண்ணளிக்கும் உண்டோ தரம்'

---

1. 'மெய்யுவமை' என்பதும் பாடம்.

இ - ள்: முத்தைக் கோத்தது போன்றது இவளது எயிறு; அவ்வெயிற்றை யொத்த அரும்பையுடைய முல்லைக்கொடி போன்றது மருங்குல்; அம்மருங்குலாகிய கொடிமீதே மின்னைத் தோற்றிய கார் போன்றது நறுநாற்றத்தை யுடைய கூந்தல்; இத்தன்மைத்தாகிய மெல்லியு சாயலாளிடத்து உண்டாகிய அன்பிற்குத் தரமுண்டோ? எ - று.

(வி - ரை) உவமை கொடுத்துக் கூறப்பட்ட பொருளைப் பின்னும் பிறி தொன்றற்கு உவமையாக்கி யுரைப்பது ஒப்புமை யுவமையாம்.

முத்துக் கோத்தன்ன முறுவல் என உவமை கொடுத்துக் கூறப்பட்ட பொருளைப் பின்பு, அம்முறுவலை ஒத்த அரும்பு என உவமையாக்கிக் கூறியுள்ள மையின் இது ஒப்புமையுவமை யாயிற்று.

(ரு) சந்தானவுவமை

எ - டு: "[1]ஈர்ந்து நிலந்தோயு மிரும்பிடித் தடக்கையிற்
சேர்ந்துடன் செறிந்த குறங்கு குறங்கென
மால்வரை யொழுகிய வாழை வாழைப்
பூவெனப் பொலிந்த வோதி யோதியின்
அளிச்சினை வேங்கை நாண்மலர் நாண்மலர்க்
களிச்சுரும் பாற்றுஞ் சுணங்கு சுணங்குபிதிர்ந்
தியாணர்க் கோங்கின் அவிர்முகை முகையெனப்
பூணகத் தொடுங்கிய வெம்முலை முலையென
வண்டோட்டுப் பெண்ணை வளர்த்த நுங்கின்
இன்செறி நீர்தரு மெயிற்றின்' (சிறுபாண்: கக — உஅ)

இதனை 'மாலையுவமை' எனினும் அமையும்.

(வி - ரை) ஒன்றோடொன்று தொடர்புடைய பல பொருள்களை ஒவ்வொரு பொருளுக்கும் உவமையாக்கி யுரைப்பது சந்தான வுவமையாம். இங்ஙனம் வரும் உவமையும் பொருளும் ஒன்றற்கொன்று தொடர்புடையனவாக மாலை போல் நிற்றலின், இதனை மாலையுவமை யென்றும் கூறுவர்.

இ - ள்: இழுக்கப்பட்டு நிலத்திலே பொருந்தப் பெற்ற பெரிய பெண் யானையினது நீண்ட துதிக்கைபோலத் திரண்டு உருண்டு ஒன்றோடொன்று நெருங்கியுள்ள தொடைகளையும், அந்தத் தொடைகளைப் போலப் பெரிய மலையிடத்து வரிசையாகப் பொருந்திய வாழைமரங்கள், அவற்றின் பூவைப்போல அழகுற வமைந்த தலைமுடியினையும், அம்மயிர் முடியைப்போல கரிய நிறம் உடையதாய்த் தண்ணிதாகச் செறிந்த கிளைகளையுடைய வேங்கை மரத்தின் புதிய மலர், அம்மலர் என்று கருதி மகிழ்ந்த வண்டுகள் மொய்க்கின்ற தேமலையும், அத்தேமல் பொறியாகப் பரந்தாற்போலப் புதிதாகப் பூத்தலையுடைய கோங்கமரத்தின் அழகிய அரும்புகள், அவ்வரும்புகளைப்போன்ற அணியணிந்த முலைகளையும், பெரிய மடல்களையுடைய பனைமரம் அந்த முலை போல வளர்த்த நுங்குபோல இனிமை பொருந்திய நீரைத்தரும் பற்களையும் (உடைய மகளிர்) என்பதாம்.

---

1. இச்சிறுபாணாற்றுப் படை அடிகள் நச்சினார்க்கினியர் உரைக்கு மாறாகப் பல பாடபேதங்களுடன் ஈண்டுக் காணப்படுகின்றன.

இதன்கண் யானையின் துதிக்கையை முதலும், எயிற்றை யிறுதியாகவும் வைத்து ஒன்றோடொன்று தொடர்புடையனவாக உவமை செய்திருத்தலின் இது சந்தானவுவமை யாயிற்று.

முன்னர்க்கூறிய மாலை யுவமைக்கும்(பக்-ருக)இதற்கும் உள்ளவேறுபாடு:- முன்னர் ஒன்றோடொன்று தொடர்புடைய பல பொருள்களை ஒரு பொருளுக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. ஈண்டு ஒன்றோடொன்று தொடர்புடைய பல பொருள்களை வெவ்வேறு பொருள்களுக்கு உவமையாக்கிக் கூறப்பட்டுள்ளது.

(கூ) விலக்குவமை

எ - டு: 'பாரி பாரி யென்றுபல வேத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனும் அல்லன்
மாரியும் உண்டீண் டுலகுபுரப் பதுவே' (புறம்—கoஎ)

(வி - ரை) முன்னர்ப் பொருளைக் கூறிப் பின்பு உவமையைக் கூறுங்கால், குறிப்பாக முன்னர்க் கூறிய பொருளுக்குப் பின்னர்க் கூறிய உவமையை உவமையாகக் கூறுதல் தக்கதன்று என இழிவு தோன்றுமாறு செய்து விலக்குவது விலக்குவமையாம்.

இ - ள்: பாரி பாரி என்று பலகாலும் அவனுடைய புகழ்களைப் பாராட்டி அவ்வொருவனுடைய கொடைத் தன்மையையே பல புலவர்களும் பாராட்டுவார்கள்; ஆனல் அங்ஙனம் இவ்வுலகினைக் காத்தற்குப் பாரி ஒருவன் மட்டுமல்லன், மழையும் உண்டு என்பதாம்.

இப்பாடலில் கூறப்பட்ட பொருள் பாரி. அவனுக்கு மேகம் உவமையாகாது என நேரிதாகக் கூறி விலக்காமல், மாரியும் உண்டு என்னும் இழிவுசிறப்பாக வந்த குறிப்பினுல் அவனுக்கு அது உவமையாதல் தக்கதன்று என விலக்கப்பட்டமையின் இது விலக்குவமை யாயிற்று.

இங்ஙனம் பிறவும் வருவனவற்றை உவமையின்பாற் சார்த்தியுணர்க.

உருவகமும், உவமையும் ஓரினமாக்கிப் புணர்த்தமையால் உருவகத்திற்கு ஓதிய இலக்கணம் உவமைக்கு ஆதலும், உவமைக்கு ஓதிய இலக்கணம் உருவகத்திற்கு ஆதலும் உள; அவை வருமாறு அறிந்து கொள்க. (கஉ)

௪. தீவகவணி

நக. குணந்தொழில் சாதி பொருள்குறித் தொருசொல்
ஒருவயின் [1]நின்றும் பலவயின் பொருள்தரின்
[2]தீவகஞ் செய்யுள் மூவிடத் தியலும்.

எ - ன்: நிறுத்த முறையானே தீவகமென்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: குணத்தானும், தொழிலானும், சாதியானும், பொருளானும் குறித்து ஒருசொல் ஓரிடத்து நின்று, செய்யுளிற்

1. 'நின்று' என்பதும் பாடம் 2. இதனையடுத்துச் சில பிரதிகளில் 'மூவிட மாவன முதலிடை கடையே' என்றொரு நூற்பாவும் காணப்படுகிறது.

பலவிடத்து நின்ற சொற்களோடு பொருந்திப் பொருள் விளைப்பது தீவகம் என்னும் அலங்காரமாம். அது செய்யுளில் முதல், இடை, கடை என மூன்றிடத்துப் புலப்படும் எ - று.

எனவே, அது முதனிலைத் தீவகம், இடைநிலைத் தீவகம், கடைநிலைத் தீவகம் என மூன்றாகி நடக்கும் என்றவாறு. இம் மூன்றையும் குணம், தொழில், சாதி, பொருள் என்பனவற்றோடு கூட்டி யுறழப் பன்னிரண்டாமெனக் கொள்க. இதன் அகலம் உரையிற் கொள்க.

அவற்றுள், (க) **முதனிலைக் குணத்தீவகம்**

எ - டு: 'சேந்தன வேந்தன் திருநெடுங்கண் தெவ்வேந்தர்
ஏந்து தடந்தோள் இழிகுருதி — பாய்ந்து
திசையனைத்தும் வீரச் சிலைபொழிந்த வம்பும்
மிசையனைத்தும் புட்குலமும் வீழ்ந்து'

இதனுள் கண்களும், தோள்களும், திசைகளும், அம்புகளும், புட்குலங்களும் சிவந்தன என்க.

(வி - ரை) இ - ள்: அரசனுடைய அழகிய நீண்ட கண்கள் வெகுளியாற் சிவந்தன; அங்ஙனம் அவை சிவந்த அளவிலே பகைவர்களுடைய உயர்ந்த பெரிய தோள்கள், அம்புகள் தைக்கப்பட்டுச் சிவந்தன; அத்தோள்களினின்றும் பெருகுகின்ற குருதி எங்கும் பாய்தலால் திக்குகள் எல்லாம் சிவந்தன; அக்குருதி தோய்தலால் வில்லினின்றும் வெளி வந்த அம்புகள் சிவந்தன; அக்குருதி மேல்படுதலால் பறவை யினங்கள் அனைத்தும் சிவந்தன என்பதாம்.

'சிவத்தல்' என்பது நிறம்பற்றிய பண்புச் சொல். முதற்கண் இருக்கும் அச்சொல் கண், தோள், திசை, அம்பு, புட்குலம் ஆகிய சொற்களோடும் இயைந்து பொருள் தருதலின் இது முதனிலைக் குணத்தீவகம் ஆயிற்று.

(உ) **முதனிலைத் தொழில்தீவகம்**

எ - டு: 'சரியும் புனைசங்குந் தண்டளிர்போல் மேனி
வரியும் தனதடஞ்சூழ் வம்பும் - திருமான
ஆரந் தழுவுந் தடந்தோள் அகளங்கன்
கோரந் தொழுத கொடிக்கு'

வரி - அழகு. கோரம் - சோழன்குதிரை. இதனுள் வளையும், அழகும், கச்சும் சரியும் என்க.

(வி - ரை) குதிரைமீது சோழன் பவனி வரக் கண்ட ஒரு பெண்ணின் ஆற்றாத் தன்மையை எடுத்துச் சொல்வது இப்பாடல் ஆகும்.

இ - ள்: திருமகள் தங்குதற்கான பெருஞ் சிறப்புடையதும், முத்து மாலை யணிந்ததுமான தோள்களையுடைய குற்றமில்லாத சோழனுடைய குதிரையை வணங்கிய பூங்கொடி போன்ற பெண்ணுக்கு, அவள் கையில் அணிந்த வளையல்களும் சரிந்தன; குளிர்ந்த தளிர் போன்ற மேனியில் அழகும் சரிந்தது; பெருத்த கொங்கைகளின் மீதுள்ள கச்சும் சரிந்தது என்பதாம்.

'சரிதல்' என்பது தொழில்பற்றிய சொல். முதற்கண் இருக்கும் அச்சொல் வளையல், மேனியழகு, கச்சு ஆகிய சொற்களுடன் இயைந்து பொருள் படுதலின் இது முதனிலைத் தொழில் தீவகம் ஆயிற்று.

(ங) முதனிலைச் சாதித்தீவகம்

எ-டு: 'தென்றல் அனங்கன் துணையாஞ் சிலகொம்பர்
மன்றல் தலைமகனும் வான்பொருள்மேற் - சென்றவர்க்குச்
சாற்றவிடுந் தூதாகும் தங்கும் பெரும்புலவி
மாற்ற வருவிருந்து மாம்'

இதனுள் தென்றல் துணையாதலும், தலைமகனாதலும், தூதாதலும், விருந்தாதலும் கண்டு கொள்க.

(வி-ரை) தென்றல் காற்றின் தன்மையை எடுத்துக் கூறுவது இப் பாடலாகும்.

இ-ள்: தென்றற் காற்றானது காமவுணர்ச்சியைத் தூண்டுதலால் மன்மதனுக்குத் துணையாகும்; தான் வரச் சில பூங்கொம்புகள் தளிர்த்தலின் அக்கொம்புகளாகிய பெண்களுக்குக் கணவனாகும்; சிறந்த பொருள்மேல் சென்றாரை நினைத்து வருந்தும் தலைவியர்க்கு இன்ப வுணர்ச்சியை யூட்டுதலில், அவர்கள் தம் விருப்ப மிகுதியைத் தம் கணவர்பால் சொல்லுதற்காக அனுப்பப்படும் தூதாகும்; கணவனிடத்து ஊடிய பெண்டிர்க்கு இன்ப வுணர்ச்சியைத் தூண்டுதலால் தாம் கொண்டிருந்த ஊடலை நீக்குதற்கு வந்த புதிய வாயிலாகும் என்பதாம்.

'தென்றற் காற்று' என்பது காற்றில் ஓர் இனத்தைக் குறித்தலின் இது சாதிபற்றிய சொல்லாம். முதற்கண் இருக்கும் அச்சொல் துணை, தலைமகன், தூது, வாயில் ஆகிய நான்கிடத்தும் சென்றியைந்து பொருள்படுதலின் இது முதனிலைச் சாதித் தீவகம் ஆயிற்று.

(ச) முதனிலைப் பொருள்தீவகம்

எ-டு: 'முருகவேள் சூர்மா முதல்தடிந்தான் வள்ளி
புரிகுழல்மேல் மாலை புனைந்தான் - சரணளித்து
மேலாய வானோர் வியன்சேனை தாங்கினான்
வேலான் இடைகிழித்தான் வெற்பு'

இதனுள் முருகவேள், பொருள்.

(வி-ரை) இது முருகப் பெருமானின் பல்வேறு செயல்களையும் குறிக்கும் பாடலாகும்.

இ-ள்: முருகவேள் சூரபதுமனாகிய மாமரத்தை அடியோடும் சாய்த்தான்; வள்ளியம்மையின் அழகிய கூந்தலில் மாலையைப் புனைந்தான்; மேன்மை பொருந்திய தேவர்கட்கு அடைக்கலம் தந்து அவர்களின் சேனைகளைக் காத்தருளினான்; தன்னுடைய வேலினாலே கிரௌஞ்ச கிரியைப் பிளந்தான் என்பதாம்.

இதன்கண் உள்ள 'முருகவேள்' என்னும் முதற்சொல் பொருள்குறித்த சொல்லாகும். அச்சொல் தடிந்தான், புனைந்தான், தாங்கினான், கிழித்தான் என்னும் சொற்களோடு இயைந்து பொருள்படுதலின் இது முதனிலைப் பொருள் தீவகம் ஆயிற்று.

(ரு) இடைநிலைக் குணத்தீவகம்

எ - டு: [1]'எடுத்த நிரைகொணு வென்றனுமே வென்றி
வடித்திலங்கு வைவாளை வாங்கத் - துடித்தனவே
தண்ணார மார்புந் தடந்தோளும் வேல்விழியும்
எண்ணாத மன்னர்க் கிடம்'

இதனுள் **துடித்தல்,** பண்பு.

(வி - ரை) இ - ள்: தாம் கவர வேண்டுமென் நினைத்த ஆனிரைகளைக் கொண்டு வருக என அரசன் கூறிய அளவிலே, அவனது வீரன் வெற்றி பொருந்திய கூரிய வாளை வலக்கையில் ஏந்தினுகப், பகைவர்களுக்குக் குளிர்ச்சி பொருந்திய முத்துமாலை யணிந்த மார்பும், நீண்ட கண்ணும், இடது பக்கம் துடிப்பனவாயின என்பதாம்.

இப்பாடலின் இடையிலிருக்கும் '**துடித்தல்**' என்னும் பண்புகுறித்த சொல் மார்பு, கண் ஆகிய சொற்களோடு இயைந்து பொருள்படுதலின், இது இடைநிலைக் குணத்தீவகம் ஆயிற்று.

துடித்தல், தொழிலேனும் பண்பில் அடங்கும்.

(சு) இடைநிலைத் தொழில்தீவகம்

எ - டு: 'எடுக்குஞ் சிலைநின் றெதிர்ந்தவருங் கேளும்
வடுக்கொண் டுரந்துணிய வாளி - தொடுக்கும்
கொடையுந் திருவருளுங் கோடாத செங்கோல்
நடையும் பெரும்புலவர் நா'

இதனுள் **தொடுத்தல்,** தொழில்.

(வி - ரை) இ - ள்: ஒரு பேரரசன் தனக்குப் பகை ஆயினரும், அவர்களுக்குத் துணை ஆயினரும் வடுப்பட்டு அவர்கள் மார்பு பிளக்குமாறு தன் கையிலேந்திய வில்லில் அம்புகளைத் தொடுக்க, அவ்வளவிலேயே பெரும் புலவர்களின் நாவானது அப்பேரரசனின் கொடையையும், மேலான அருளையும், வளையாத செங்கோலின் திறனையும் பாக்களில் தொடுத்துப் புகழ்வதாயின என்பதாம்.

இப்பாடலின் இடையிலிருக்கும் 'தொடுத்தல்' என்னும் தொழில் குறித்தசொல் கொடை, அருள், நடை ஆகிய இடங்களோடும் சென்றியைந்து பொருள்படுதலின், இது இடைநிலைத் தொழில் தீவகம் ஆயிற்று.

(எ) இடைநிலைச் சாதித்தீவகம்

எ - டு: 'கரமருவு பொற்றொடியாங் காலிற் கழலாம்
பொருவில் புயவலய மாகும் — அர(வு) அரைமேல்
நாணும் அரற்கு நகைமணிசேர் தாழ்குழையாம்
பூணும் புனைமாலை யாம்'

இதனுள் **அரவு,** சாதி.

(வி - ரை) இ - ள்; நாகமானது சிவபெருமானுக்குக் கையில் பொருந்திய அழகிய வளையாகும்; காலில் அணியும் வீரக்கழலாகும்; ஒப்பில்லாத தோள் வளையமாகும்; அரையில் அணியும் அரைஞாணாகும்; ஒளியினையுடைய மணி

---

1. 'எடுத்த நிரைகொணரார்' என்பதும் பாடம்,

கள் பதித்த தொங்குகின்ற குழையாகும்; மற்றும் பல ஆபரணங்களாகும்; அழகிய மாலையாகும் என்பதாம்.

இப்பாடலின் இடையிலிருக்கும் 'அரவு' என்னும் சாதி குறித்த ஒரு சொல் தொடி, கழல், புயவலயம், நாண், குழை, பூண், மாலை ஆகிய சொற்களோடும் சென்றியைந்து பொருள்படுதலின் இது இடைநிலைச் சாதித்தீவகம் ஆயிற்று.

(அ) இடைநிலைப் பொருள்தீவகம்

எ - டு: 'மானமருங் கண்ணாள் மணிவயிற்றில் வந்துதித்தான்
தானவரை யென்றுந் தலையழித்தான் - யானைமுகன்
ஓட்டினான் வெங்கலியை யுள்ளத் தினிதமர்ந்து
வீட்டினான் நம்மேல் வினை'

இதனுள் யானைமுகன், பொருள்.

(வி - ரை) இப்பாடல் விநாயகப் பெருமானைப் பற்றியதாகும்.

இ - ள்: விநாயகப் பெருமான் மானின் பார்வையை யொத்த கண்ணினையுடைய உமையம்மையாரின் அழகிய திருவயிற்றில் வந்து பிறந்தான்; என்றும் அசுரர்களை அழித்தான்; கொடிய வறுமையைப் போக்கினான்; நம்முடைய உள்ளத்தே வீற்றிருந்து நம்மீதுள்ள வினைப் பகையை அழித்தான் என்பதாம்.

இப்பாடலின் இடையில் இருக்கும் 'யானைமுகன்' என்னும் பொருள் குறித்த ஒருசொல், உதித்தான், அழித்தான், ஓட்டினான், வீட்டினான் என்னும் சொற்களோடு இயைந்து பொருள்படுதலின், இது இடைநிலைப் பொருள் தீவகம் ஆயிற்று.

(கூ) கடைநிலைத் தொழில்தீவகம்

எ - டு: 'துறவுளவாச் சான்றோர் இளிவரவுந் தூய
பிறவுளவா [1]வூன் துறவா வூணும் - பறைகறங்கக்
கொண்டா னிருப்பக் கொடுங்குழையாள் தெய்வமுமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று'

இளிவரவு - தாழ்தல். இதனுள் வைக்கற்பாற்றன்று, தொழில்.

(வி - ரை) இ - ள்: மெய்யுணர்வு கைவரப்பெற்ற ஞானியர்களுக்குத் துறவு நெறியே உளதாக மற்றைக் கூடா வொழுக்கம் உளதாதலும், தூய்மையான பிற உணவுகள் இருக்க ஊனுண்டல் உளதாதலும், ஒரு பெண்ணிற்கு மணவொலி ஒலிக்க மணந்துகொண்ட கணவன் இருக்கப் பிறிதொரு தெய்வம் உளதாக வணங்குதலும் ஒரு பொருளாக மதிக்கத்தக்கதன்றாம்.

இப்பாடலின் இறுதியில் இருக்கும் 'வைக்கற்பாற்றன்று' என்னும் தொழில்குறித்த ஒருசொல் இளிவரவு, ஊண், தெய்வம் என்ற சொற்களுடன் இயைந்து பொருள்படுதலின், இது கடைநிலைத் தொழில் தீவகம் ஆயிற்று.

(௧௦) கடைநிலைப் பொருள்தீவகம்

எ - டு: 'புறத்தன வூரன நீரன மாவின்
திறத்தன கொற்சே ரியவே - அறத்தின்
மகனை முறை செய்தான் மாவஞ்சி யாட்டி
முகனை முறைசெய்த கண்'

---

1. 'ஊனளா' என்பதும் பாடம்.

இதனுள் **கண்**, பொருள். புறத்தன - மான். ஊரன - அம்பு. நீரன - தாமரை. மாவின் திறத்தன - மாவடு. கொற்சேரிய - வாள். மகனை முறை செய்தான் - மகன் மிசைத் தேரூர்ந்தான். வஞ்சி - ஊர். முகனைமுறை செய்த கண் - முகத்துக்குத் தக்க கண்.

மற்றீவைக்கு உதாரணம் வந்துழிக் காண்க.

அஃதேல், குணம் என்று சொல்லப்பட்டனவும் தொழிலாய்க் காலம் புணர்ந்து நின்றனவால் எனின்; அவ்வாறே குணமுந் தொழிலுங் காலம் புணர்ந்தல்லது தோன்று. தொழில் என்பது பொருளது புடைபெயர்ச்சி. குணம் என்பது அப்பொருட்குப் பண்பாய்த் தனக்கு வேறுபொருளின்றிப் பொருளை நீங்காது நிற்பது. அது [1]முன்னர் உணர்த்தப்பட்டது.

(வி-ரை) இ-ள்: *அறநெறி தப்பாது தன்மகனையே தேர்க்காலில் இடறச் செய்து முறையோம்பிய மனுநீதிச் சோழனின் நகரமான வஞ்சியில் இருக்கும் ஒரு பெண்ணின் முகத்திற்கு அழகு தரும்படியான கண்கள், காட்டிலுள்ள மானின் கண்களைப் போன்றன; நாட்டிலுள்ள அம்புகளைப் போன்றன; நீரிலுள்ள தாமரை மலர்களைப் போன்றன; மாவடுக்களைப் போன்றன; கொல்லர்களின் சேரியிலே செய்யும்படியான வாள்களைப் போன்றன என்பதாம்.*

இப்பாடலின் இறுதியில் இருக்கும் 'கண்' என்னும் பொருள் குறித்த ஒரு சொல், புறம், ஊர், நீர், மாவடு, கொற்சேரி ஆகிய சொற்களோடு இயைந்து பொருள்படுதலின் இது கடைநிலைப் பொருள் தீவகம் ஆயிற்று.

கடைநிலைக் குணத்தீவகத்திற்கும், கடைநிலைச் சாதித்தீவகத்திற்கும் எடுத்துக்காட்டுக்கள் காட்டாது வந்துழிக் காண்க என்றார் உரையாசிரியர். சுன்னாகம் திரு. குமாரசாமிப் புலவர் அவர்கள் கடைநிலைக் குணத்தீவகத்திற்கு மட்டும் எடுத்துக்காட்டுத் தருவர். அது வருமாறு:—

கடைநிலைக் குணத்தீவகம்

எ-டு: 'ஒருவன் அறிவானு மெல்லா மியாதொன்றும்
ஒருவன் அறியா தவனும் - ஒருவன்
குணனடங்கக் குற்ற முளானும் ஒருவன்
கணனடங்கக் கற்றானு மில்'

கடைநிலைச் சாதித்தீவகம்

எ-டு: 'தன்னெவ்வ நோக்காது தாயர் வெறுத்துளதாம்
என்னெவ்வம் நோக்கும் இகல்விளைப்பான் - மன்னருள்மால்
மோகூரனைத் தொழுதேன் மோகமிகக் காமாகூ
கூகூ வெனுங் கோகிலம்'

இது மாறனலங்காரத்திற் கண்டது. (கரு)

தீவகம் பிற அணிகளுடன் கூடிவரும் எனல்

சo. அதுவே
மாலை விருத்தம் ஒருபொருள் சிலேடையென்
நால்வகை யானும் நடைபெறும் என்ப.

1. *நo-ஆம் நூற்பாவுரை காண்க.*

எ - ன், [1]அத்தீவகாலங்காரம் பிற அலங்காரங்களோடுங் கூடி வருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: அச்சொல்லப்பட்ட தீவகம் மாலாதீவகம், விருத்த தீவகம், ஒருபொருள் தீவகம், சிலேடா தீவகம் என **நான்கு** அலங்காரங்களோடு கூடியும் வருமென்று சொல்லுவர் புலவர் எ - று.

அவற்றுள், **(க) மாலாதீவகம்**

எ - டு: 'மனைக்கு விளக்கம் மடவார் மடவார்
தமக்குத் தகைசால் புதல்வர் - மனக்கினிய
காதற் புதல்வர்க்குங் கல்வியே கல்விக்கும்
ஓதிற் புகழ்சால் உணர்வு' (நான்மணிக் - **௧௦௫**)

இ - ள்: இல்லறத்திற்கு விளக்கம், மடப்பத்தினையுடைய பெண்டிர் உண்டாதல்; அப்பெண்டிர்க்கு விளக்கம், அழகு சான்ற புதல்வரைப் பெறுதல்; அப்புதல்வர்க்கு விளக்கம், இனிமையான கல்வி; அக்கல்விக்கு விளக்கம், மறவாமை எ - று.

இதனுள் 'விளக்கம்' என்பதனை எவ்விடத்துங் கூட்டுக.

(வி - ரை) மாலை என்னும் அணியுடன் தீவக அணி சேர்ந்துவரின் அது மாலா தீவகமாம்.

இதன்கண் மனைக்கு மடவாரும், மடவாருக்குப் புதல்வரும், புதல்வர்க்குக் கல்வியும், கல்விக்கு உணர்ச்சியுமாக ஒன்றோடொன்று தொடர்புடைய பொருள்கள் வந்து மாலைபோல வருதலின் மாலையணி யாயிற்று. 'விளக்கம்' என்னும் சொல் மனை, மடவார், புதல்வர், கல்வி ஆகிய பொருள்களோடும் சென்றியைந்து பொருள்படுதலின் தீவகமும் ஆயிற்று.

(உ) விருத்த தீவகம்

எ - டு: 'வரிவண்டு நாண மதுமலர் அம்பாப்
பொருவெஞ் சிலைக்குப் பொலிவும் — பிரிவின்
விளர்க்கு நிறமுடையார் தம்மேல் மெலிவும்
வளர்க்கு மலயா னிலம்'

இ - ள்: பொறிவண்டு நாணாக, மது மலரே கணையாகக் காமன் தனி இருந்தாரைப் பொருகின்ற விருப்பத்தையுடைய சிலைக்குப் பொலிவினையும், பிரிவிற் பசலையுற்றார் தம்மேல் மெலிவினையும் வளர்க்கும் தென்றற் காற்று எ - று.

பொலிவும் மெலிவும் வளர்க்கும் எனக் கொள்க. இதனுள், ஒரு பொருளே பொலிவும் மெலிவுமாகிய இரண்டு குணஞ் செய்தலின் விருத்தம்.

(வி - ரை) விருத்தம் என்னும் அணியுடன் தீவக அணி சேர்ந்துவரின் அது விருத்த தீவகமாம். விருத்தம் — மாறுபாடு.

இதன்கண் மாறுபாடுடையனவாகிய பொலிவும், மெலிவும் ஆகிய இரு சொற்கள் வருதலின் விருத்தமாயிற்று. அவ்விரு சொற்களுடன் 'மலயா னிலம்' என்ற சொல் சென்றியைந்து பொருள்படுதலின் தீவகமும் ஆயிற்று.

---

1. *'அவ்வலங்காரத்திற் சில ஒழிபு உணர்த்துதல் நுதலிற்று' என்பதும் பாடம்.*

(௩) ஒருபொருள் தீவகம்

எ - டு: 'வியன்ஞாலஞ் சூழ்திசைகள் எல்லாம் விழுங்கும்
அயலார் துணைநீத் தகன்றார் - உயிர்பருகும்
விண்கவரும் வேரிப் பொழில்புதைக்கு மென்மயில்கள்
கண்கவரும் மீதெழுந்த கார்'

இ - ள்: அகன்ற உலகத்தைச் சூழ்ந்த திக்குகள் எல்லாவற்றையும் தன்னிடத்து அடக்கும்; துணையைப் பிரிந்து அயலவர் போலப் போயினார் உயிரை யுண்ணும்; ஆகாயத்தை மறைக்கும்; நறு நாற்றத்தையுடைய பொழிலை மூடும்; மென்மையையுடைய மயில்களின் கண்களை வவ்விக் கொள்ளும் உயரவெழுந்த மேகம் எ - று.

(வி - ரை) ஒரே பொருளைக் குறிக்கும் பல சொற்களுடன் ஒரு சொல், சென்றியைந்து பொருள் படுமாயின் அது ஒரு பொருள் தீவகமாம்.

இதன்கண் விழுங்கும், பருகும், கவரும், புதைக்கும் என்பன மேகத்தின் மிகுதியாகிய ஒரு பொருளையே குறித்தலின் ஒரு பொருள் ஆயிற்று. அவ்வச் சொற்களுடனும் 'கார்' என்னும் சொல் சென்றியைந்து பொருள் தருதலின் தீவகமும் ஆயிற்று.

(௪) சிலேடா தீவகம்

எ - டு: 'மான்மருவி வாளரிகள் சேர்ந்து மருண்டுள்ளம்
தான்மறுக நீண்ட தகைமையவாம் - கான
வழியும் ஒருதனிநாம் வைத்தகலும் மாதர்
விழியுந் தருமால் மெலிவு'

இ - ள்: மான்கள் மருவி ஒளியையுடைய சிங்கங்கள் சேர்ந்து மயங்கிக் கண்டார் உள்ளம் வெருவும்படி நீண்ட தன்மையை யுடைத்தாய காட்டு நெறியும், மயக்கம் மருவி ஒளியினை யுடைய அரிகள் பரந்து கண்டார் உள்ளமானது மயங்கித் தடுமாறும்படி பெரிதாய நான் தனியிருத்திப் போந்த கிழத்தியுடைய கண்ணும், நமக்கு வருத்தத்தைத் தராநின்றன எ - று.

இது வழிக்கும் விழிக்கும் சிலேடை. வழிமேற் செல்லுங்கால்: மான் - புள்ளிமான், அரி - சிங்கம், சேர்ந்து - திரண்டு, உள்ளம் - நெஞ்சு, மறுகல் - வெருவல், தகைமை - தன்மை, கானம் - காடு எனவும்; **கண்ணின்மேற் செல்லுங்கால்:** மால்மருவி - மயக்கம் மருவி, அரி - செவ்வரி, (மருண்டுள்ளம் தான்மறுக நீண்ட தகைமைய - ஒரு தன்மை) எனவும் வரும்.

(வி - ரை) சிலேடை அணியுடன், தீவக அணி கூடிவரின் அது சிலேடா தீவகமாம்.

இதன்கண் அமைந்துள்ள சொற்றொடர்கள் விழிக்கும் வழிக்கும் இயைய இருத்தலின் சிலேடை ஆயிற்று. அவ்விரு சொற்களுடனும் 'மெலிவு' என்னும் சொல் சென்றியைந்து பொருள் படுதலின் தீவகமும் ஆயிற்று.

'நால்வகையானும்' என்கிற முற்றும்மையை எச்சவும்மையாக்கிப் பிறவகையால் வருவனவும் உளவெனக் கொள்க. அவை வருமாறு:—

(க) உவமா தீவகம்

எ - டு: 'முன்னங் குடைபோல் முடிநா யகமணிபோல்
மன்னுந் திலகம்போல் வாளிரவி - பொன்னகலம்
தங்கு கவுத்துவம்போல் உந்தித் தடமலர்போல்
அங்கண் உலகளந்தாற் காம்'

இ - ள்: அழகிய பெரிய உலகை அளந்த திருமாலுக்கு ஆதித்தன் முதலில் குடை போலும், பின்பு முடியில் சூடிய நாயகமணி போலும், அதன்கீழ் உண்டாய நெற்றித்திலகம் போலும், மார்பிலுள்ள கௌத்துவமாகிய மணிபோலும், கொப்பூழில் உண்டாய பெரிய தாமரை போலும் எ - று.

(வி - ரை) உவமை அணியுடன் தீவக அணி கூடிவரின் அது உவமா தீவகமாம்.

திருமால் பேருரு எடுத்த காலத்துச் சூரியன் அவனுக்குக் குடை போன்றும், நாயகமணி போன்றும், திலகம் போன்றும், கௌத்துவம் போன்றும், உந்திமலர் போன்றும் இருந்தது என்பதால் இது உவமையணி ஆயிற்று. 'இரவி' என்னும் சொல் மேற்கூறப்பட்ட சொற்களோடும் சென்றியைந்து பொருள்படுதலின் தீவகமும் ஆயிற்று.

(உ) உருவக தீவகம்

எ - டு: 'கானற் கயலாம் வயலிற் கமலமாம்
ஏனற் கருவிளையாம் இன்புறவில்—மானும்
கடத்துமேல் வேடர் கடுஞ்சரமா நீங்கிக்
கடத்துமேல் மெல்லியலாள் கண்'

இ - ள்: நெஞ்சமே! இவளைத் தனியே யிருத்திவிட்டுப் பிரிந்து போவோமாயின், இவளுடைய கண்களானவை, நெய்தல் நிலத்திற் செல்வேமாயின் கயலாய்த் தோன்றியும், மருத நிலத்திற் செல்வேமாயின் தாமரை மலராய்த் தோன்றியும், குறிஞ்சி நிலத்திற் செல்வேமாயின் கருவிளை மலராய்த் தோன்றியும், முல்லை நிலத்திற் செல்வேமாயின் மானாய்த் தோன்றியும், பாலை நிலத்திற் செல்வேமாயின் வேடுவரது கையிலுள்ள கடிய சரமாய்த் தோன்றியும், இப்படிச் செய்து நம் போக்கை விலக்கும் ஆகலான், நமக்குப் பிரிதற்கு அரிது காண் எ - று.

கானல் - நெய்தல். வயல் - மருதம். ஏனல் - குறிஞ்சி. புறவு - முல்லை. கடம் - பாலை.

(வி - ரை) உருவக அணியுடன் தீவக அணி கூடிவரின் அது உருவக தீவகமாம்.

ஒரு பெண்ணின் கண்ணைக் கயலாகவும், கமலமாகவும், கருவிளையாகவும், மானாகவும், சரமாகவும் உருவகிக்கப்பட்டிருத்தலின் உருவகம் ஆயிற்று. 'கண்' என்னும் சொல் மேற்கூறிய உருவகச் சொற்களுடன் சென்றியைந்து பொருள்படுதலின் தீவகமும் ஆயிற்று. (கஏ)

ரு. பின்வருநிலையணி

சக. முன்வருஞ் சொல்லும் பொருளும் பலவயிற்
பின்வரு மென்னிற் பின்வரு நிலையே.

எ - ன், நிறுத்த முறையானே பின்வருநிலை என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: ஒரு செய்யுளுள் முன்னர் வந்த சொல்லே பின்னர்ப் பலவிடத்தும் வரினும், முன்னர் வந்த பொருளே பின்னர்ப் பலவிடத்தும் வரினும் அது பின்வருநிலையென்னும் அலங்காரமாம் எ - று.

அவற்றுள், (க) **சொற்பின்வருநிலை**

எ - டு: *'மால்கரி காத்தளித்த மாலுடைய மாலைசூழ்*
மால்வரைத்தோள் ஆதரித்த மாலையார்—மாலிருள்சூழ்
மாலையின் மால்கடல் ஆர்ப்ப மதன்தொடுக்கும்
மாலையின் வாளி மலர்'

இ - ள்: மதத்தால் மயங்கிய யானையின் இடர் தீர்த்தளித்த அரியுடைய தொடையல் சூழப்பட்ட பெரிய மாலையை ஒத்த தோள்களை விரும்பிய இயல்புடையார்மேல், மயங்கிருள் சூழ்ந்த அந்திப்பொழுதில் கருங்கடல் ஆர்ப்பக் காமன் இடையறுது மலராகிய கணைகளைத் தொடுக்கும் எ - று.

மால் - மயக்கம். கரி - யானை. காத்தல் - இடர்தீர்த்தல். அளித்தல் - அருளல். மால் - திருமால். மாலை - தொடையல். மால் - பெருமை. வரை - மலை. ஆதரித்தல் - விரும்புதல். மாலை - இயல்பு. மாலிருள் - மயங்கிருள். மாலை - அந்தி. மால் - கருங்கடல். மாலை - இடையறுமை. வாளி - அம்பு. மலர் - தாமரை முதலியன.

இதனுள் முன்வந்த 'மால்' என்னும் சொல்லே பின்னும் பலவிடத்து வந்தமையின் சொற்பின்வருநிலை ஆயிற்று.

(உ) **பொருட்பின்வருநிலை**

எ - டு: *'அவிழ்ந்தன தோன்றி யலர்ந்தன காயா*
நெகிழ்ந்தன நேர்முகை முல்லை— மகிழ்ந்திதழ்
விண்டன கொன்றை விரிந்த கருவிளை
கொண்டன காந்தள் குலை'

இதனுள் அவிழ்தலும், அலர்தலும் நெகிழ்தலும், விள்ளலும், விரிதலும், குலை கொள்ளுதலும் 'மலர்தல்' என்னும் ஒரு பொருள்மேல் நின்றனவாதலின் அப்பெயர்த்தாயிற்று.

(வி - ரை) இ - ள்: *தோன்றி மரங்கள் மலர்ந்தன, காயாம் பூக்கள் மலர்ந்தன, அழகிய அரும்பையுடைய முல்லைகள் மலர்ந்தன; கொன்றை மரங்கள் செழித்து இதழ்கள் மலர்ந்தன; கருவிளை மலர்கள் மலர்ந்தன; காந்தள் மலர்கள் பூங்கொத்துக்களாகப் பூத்து விளங்கின என்பதாம்.*

'**வருவது**' என்னுது '**வருமென்னின்**' என்றதனின், முன்னர் வந்த சொல்லும் பொருளும் பின்னர்ப்பலவிடத்தும் வருவது, சொற்பொருட் பின்வருநிலை எனக்கொள்க.

சொற்பொருட் பின்வருநிலை

எ - டு: 'வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகல்தம் வாழ்நாள்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்' (நாலடி - ௩௯)

(வி - ரை) இ - ள்: நாடோறும் நாள் கழிதலை அறிந்திருந்தும், அங்ஙனம் கழிதலைத் தம் வாழ்நாள்மீது வைத்து அதுதான் இங்ஙனம் கழிகின்றது என்பதை அறியாதவர், நாடொறும் நாள் கழிதலைக் கண்டு துன்புறாமல், இன்புறு நாளாக எண்ணி மகிழ்வர் என்பதாம்.

இதன்கண் 'வைகலும்' என்னும் சொல் பின்னர்ப் பலவிடத்தும் வந்தும் ஒருபொருளையே தந்து நிற்றலின், இது சொற்பொருட் பின்வருநிலை ஆயிற்று.

இன்னும் அவ்விலேசானே, பிற அலங்காரங்களோடு கூடிவருவனவுங் கொள்க.

உவமைப்பொருட் பின்வருநிலை

எ - டு: 'செங்கமல நாட்டஞ் செழுந்தா மரைவதனம்
பங்கயஞ் செவ்வாய் பதுமம்போல் — செங்கரங்கள்
அம்போ ருகந்தாள் அரவிந்த மாரனார்
தம்போ ருகந்தாள் தனம்'

என்பது உவமைப்பொருட் பின்வருநிலை. பிறவும் வந்தவழிக் கண்டு கொள்க.

(வி - ரை) உவமை அணியுடன் பொருட் பின்வருநிலை அணி கூடிவரின் அது உவமைப் பொருட் பின்வருநிலையாம்.

இ - ள்: மன்மதனது காமப்போரை விரும்பியவளுடைய கண்கள் செந்தாமரை மலர் போன்றன; முகம் செந்தாமரை போன்றது; வாய் செந்தாமரை போன்றது; கைகள் செந்தாரை போன்றன; கால்கள் செந்தாமரை போன்றன; கொங்கைகள் தாமரை யரும்பு போன்றன என்பதாம்.

ஒரு பெண்ணின் கண், முகம், வாய், கை, கால், கொங்கை ஆகியவற்றிற்குத் தாமரையை உவமை காட்டினமையின் உவமையாயிற்று. தாமரை என்ற பொருளைக் குறிக்கும் சொற்கள் மீண்டும் மீண்டும் வந்துள்ளமையின் பொருட் பின்வருநிலை ஆயிற்று. (௪௫)

௯. முன்னவிலக்கணி

௪௨. முன்னத்தின் மறுப்பின்அது முன்ன விலக்கே
மூவகைக் காலமும் மேவிய தாகும்.

எ - ன்: நிறுத்தமுறையானே முன்னவிலக்கு என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: ஒரு பொருளைக் குறிப்பினால் விலக்கின் அது முன்ன விலக்கு என்னும் அலங்காரமாம். அஃது இறப்பு, எதிர்வு, நிகழ்வு என்னும் மூவகைப்பட்ட காலங்களோடும் கூடியதாம் எ - று.

'மறுப்பது' என்னாது 'மறுப்பின்' என்றதனால், கூற்றினான் மறுப்பினும் அவ்வலங்காரமாம. குறிப்பினான் மறுப்பது பொருட்

பொலிவும் செய்யுட் சிறப்பும் நோக்கி எடுத்தோதினர்; ஏனையது அன்னது அன்மையின் இலேசான் உடன்பட்டார் என்பது.

இறப்பு, எதிர்வு, நிகழ்வு என்பனவற்றைக் [1]கூற்றொடுங் குறிப்பொடுங் கூட்ட அறுவகையாம்.

அவற்றுள், (க) **இறந்தவினை விலக்கு**

எ - டு: 'பாலன் தனதுருவாய் ஏழுலகுண் டாலிலையின்
மேலன்று கண்துயின்றாய் மெய்யென்பர் — ஆலன்று
[2]வேலைநீர் உள்ளதோ விண்ணதோ மண்ணதோ
சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல்'

(பொய்கையார் அந்தாதி)

இ - ள்: சோலை சூழ்ந்த குன்றமெடுத்த மாயவனே! நீ உலகம் ஏழையும் உண்டு பாலன் உருவத்தைக் கொண்டு ஆலிலையிலே உறங்காநின்றாய் என்பது உலகத்துள்ளோர் மெய்யென்று சொல்லுவர்; நீ உலகத்தை உண்டு உறங்கிய ஆலானது, அன்று கடலுள்ளே நின்றதோ? மண்ணிலே நின்றதோ? ஆகாயத்தே நின்றதோ? சொல்லுவாயாக எ - று.

(வி - ரை) இறந்த காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சியை விலக்குவது இறந்தவினை விலக்காம். இப்பாடல் கண்ணபிரானிடத்துப் பேரன்பு கொண்ட பொய்கையார் அப்பெருமானது அளவிலாற்றலை வியந்து கூறியதாகும்.

இப்பாடலில் பண்டொருநாள் கண்ணன் உலகனைத்தும் உண்ட பின்பு ஆலிலையில் கண் துயின்றான் என்ற நிகழ்ச்சி குறிக்கப்பட்டுள்ளது. உலகனைத்தும் உண்ட பின்பு ஆலிலை யொன்று தனியே இருப்பது பொருந்தாமையை, அவ்வாலிலைதான் அப்பொழுது கடலதோ? விண்ணதோ? மண்ணதோ? என வினாவுமுகமாக அந்நிகழ்ச்சியைக் குறிப்பாக விலக்கினமையின், இது இறந்தவினை விலக்காயிற்று.

இங்ஙனம் கூறவே இந்நிகழ்ச்சி நடந்திலது என்பது பொருளன்று. குன்றையே எடுத்துக் குடையாகப் பிடித்த நினக்கு, இதுவும் ஒரு அரிய செயலாமோ! என அப்பெருமானின் அளவிலாற்றலை வியந்ததாகக் கொள்க. இன்றேல் 'சோலைசூழ் குன்றெடுத்தாய்' என்ற அடைமொழி பயனின்றி நின்று வற்றும்.

(உ) **எதிர்வினை விலக்கு**

எ - டு: 'முல்லைக் கொடிநடுங்க மொய்காந்தள் கைகுலைப்ப
எல்லை யினவண் டெழுந்திரங்க — மெல்லியல்மேல்
தீவாய் நெடுவாடை வந்தால் செயலறியேன்
போவாய் ஒழிவாய் பொருட்கு'

இ - ள்: தலைவனே! முல்லைக் கொடியானது நடுங்க, நெருங்கிய காந்தள் மலரானது விரிய, ஒளியினையுடைய வண்டின் கூட்டங்கள் எழுந்தொலிக்கத், தீயையுடைய நெடிய வாடையானது மெல்லிய நடையையுடைய இவள்மேல் வந்தால் பின் விளையுஞ் செய்தி அறியமாட்டேன்! ஆதலின் பொருளீட்டுதற்குப் போவாய் ஒழிவாய் எ - று.

---

1. கூற்று - வெளிப்படை. அதற்கு எடுத்துக்காட்டு ஈண்டில்லை.
2. 'வேலைசூழ் நீரதோ' என்பதும் பாடம்.

(வி - ரை) இப்பாடல் தலைவனைத் தோழி செலவழுங்குவித்ததாகும். எதிர்காலத்தில் நடக்கும் நிகழ்ச்சியை விலக்குவது எதிர்வினை விலக்காம்.

'தீயாய நெடுவரை வந்தால்' என எதிர்கால நிகழ்ச்சிகூறி, அப்பொழுது ''செயலறியேன்' என்பதால் அதனை விலக்குவித்தலின், இது எதிர்வினை விலக்காயிற்று.

(ங) [1]நிகழ்வினை விலக்கு

எ - டு: 'மாதர் நுழைமருங்குல் நோவ மணிக்குழைசேர்
காதின் மிகைநீலங் கைபுனைவீர் — மீதுலவு
நீணீல வாட்கண் நெடுங்கடையே செய்யாவோ
நாணீலஞ் செய்யும் நலம்'

இ - ள்: காதலைச் செய்யும் நுண்ணிடை வருந்த, மணிக் குழையை யுடைய உமது காதின்மீதே மிகையாக நீலப்பூவைச் சாத்துகின்றவரே! அக்காதின் மீதே உலாவுகின்ற நீண்ட நீலா மாகிய நிறத்தையுடைய கண்களின் நெடிய கடையே செய் யாவோ, நீவிர் நன்றாகச் சூடிய நீலப்பூச் செய்யும் நலத்தை எ - று.

பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

(வி - ரை) நிகழ்காலத்தில் நடைபெறும் நிகழ்ச்சியை விலக்குவது நிகழ் வினை விலக்காம். இப்பாடல் தலைவன், தலைவியின் நலம் பாராட்டல் என்னும் துறையைச் சேர்ந்ததாகும்.

நீலநிறம் பொருந்திய அழகிய கடைக்கண் நோக்கினையுடைய தலைவி யொருத்தி, காதில் நீலோற்பல மலரையும் அணிந்தனள். இது நிகழ்வினையாம். அதனைக் கண்ட தலைவன் ஒருவன், நீலோற்பல மலர் செய்யும் அழகைக் கடைக்கண்ணே செய்வதாயிருக்க, அம்மலரணிதல் மிகையன்றோ எனக் கூறுமுகமாக அம்மலரணிதலை விலக்குவதால், நிகழ்வினை விலக்காயிற்று. (கஅ)

அதன் வகை

சங. அதுவே

பொருள்குணங் காரணங் காரியம் புணரும்.

எ - ன், அவ்வலங்காரத்துச் சில வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: அவ்விலக்கு பொருள் விலக்கும், குண விலக்கும், காரண விலக்கும், காரிய விலக்கும் என நான்கு வகையானும் வரும் எ - று.

அவற்றுள், (க) பொருள் விலக்கு

எ - டு: 'கண்ணும் மனமுங் கவர்ந்தவள் ஆடிடமென்
றண்ணல் அருளும் அடையாளந் - தண்ணிழலின்
சுற்றெல்லை கொண்டுலவுஞ் சோதித் திரளல்லால்
மற்றில்லை காணும் வடிவு'

1. சுன்னாகம் திரு. குமாரசாமிப் புலவர் அவர்கள் இறந்தகால விலக்கு, நிகழ்கால விலக்கு, எதிர்கால விலக்கு எனக் குறிப்பர்.

இ - ள்: நம்முடைய தலைவன் தன்னுடைய கண்களையும், மனத்தையும் கவர்ந்துகொண்ட மடவாள் விளையாடுமிடம் என்று நமக்கு அருளிச் செய்த சோலையின்கண் உண்டாகிய குளிர்ந்த நிழலைச் சேர்ந்த சூழலிடத்தைக் கைக்கொண்டு உலாவித் திரிவதொரு சோதியுருவம் அல்லது, அச்சோதியுருவின் அவயவங்களைக் காண்டற்கு அரிதாய் இருந்தது; இஃது ஓர் உருவத்தன்மை இருந்தபடி எ - று.

அடையாளந் தண்ணிழல்—இன மெலிந்தது.

(வி - ரை) இது தலைவன் கூறிய பொழிலகத்துச் சென்ற பாங்கன், தலைவியைக் கண்டு வியந்ததாகும்.

இப்பாடலில் பண்பாகிய சோதியைக் கண்டதல்லது, பண்பியாக அவ்வடிவத்தைக் காணவில்லை என விலக்கி இருப்பதால், இது பொருள் விலக்காயிற்று.

(உ) குண விலக்கு

எ - டு: 'மாதர் துவரிதழ்வாய் வந்தென் னுயிர்கவரும்
சீத முறுவல் அறிவழிக்கும் - மீதுலவி
நீண்ட மதர்விழியென் னெஞ்சங் கிழித்துலவும்
யாண்டையதோ மென்மை யிவர்க்கு'

இ - ள்: இவருடைய அழகிய பவளம் போன்ற வாயானது, என்னுடைய உயிரை வந்து கவரா நின்றது; குளிர்ந்த நகையானது, அறிவை அழிக்கா நின்றது; காதின் மீது உலாவி மதர்த்து நீண்ட விழியானது, என்னுடைய நெஞ்சத்தைக் கிழித்து உலவா நின்றது; ஆதலால், இவர்க்கு மென்மை எங்குள்ளதோ சொல்லுவாயாக எ - று.

யாண்டையதோ — எவ்விடத்ததோ.

(வி - ரை) இது தலைவன், தலைவி வருத்திய வண்ணம் உரைத்தலாகும்.

இப்பாடலில் தலைவியாகிய பண்பியை விலக்காது, அவட்குளதான பண்பாகிய மென்மைத் தன்மையை விலக்கியிருப்பதால், இது குண விலக்காயிற்று.

(௩) காரண விலக்கு

எ - டு: 'மதாரிக் கண்சிவப்ப வார்புருவங் கோட
அதரந் துடிப்ப வணிசேர் - நுதல்வியர்ப்ப
நின்பால் நிகழ்வனகண் டஞ்சாதால் என்னெஞ்சம்
என்பால் தவறின்மை யால்'

இ - ள்: மடவாய்! செவ்வரி பரந்து மதர்த்த கண் சிவப்ப, நீண்ட புருவம் வளைய, அதரந் துடிக்க, அழகு சேர்ந்த நெற்றியானது வியர்ப்ப, உன்னிடத்தில் நிகழ்வனவற்றைக் கண்டு என்னுடைய நெஞ்சம் பயப்பட மாட்டாது, என்னிடத்தில் குற்றம் இல்லாமையால் எ - று.

கோட — வளைய. அணி — அழகு. பால் — இடம்.

(வி - ரை) இது தலைமகளின் களவொழுக்கம் கண்ட தோழி அவளிடம் கூறியதாகும்.

இப்பாடலில் அச்சத்திற்குக் காரணமான குற்றத்தைத் தன்பால் இல்லையென விலக்கியிருத்தலின், இது காரண விலக்காயிற்று.

(ச) காரிய விலக்கு

எ - டு: 'மன்னவர் சேயா மயிலகவி யாடலும்
பொன்னலருங் கொன்றையும் பூந்தளவின் - மென்மலரும்
மின்னுயிரா நீண்முகிலும் மெய்யென்று கொள்வதேல்
என்னுயிரோ இன்னு முளது'

இ - ள்: நம் காதலர் வினை கருதிச் சேய்த்தாகிய நாட்டுளராக, மயிலினங்கள் கூவி யாடுதலும், கொன்றைகள் பொன்போல் மலர்தலும், அழகிய முல்லையின் மிருதுவாகிய மலரும், மின்னலைக் கொடுக்கின்ற நெடிய மேகமுமாகிய இவை மெய்யென்று கொள்வோமாயின், என் உயிரோ இன்னும் உடலோடு பொருந்தி நின்றது எ - று.

இதனுள் காரியம், உயிரில்லாது ஆதல்.

(வி - ரை) இது தலைமகள் பருவ வரவு கண்டு கூறியதாகும். இப்பாடலில் தலைமகனைப் பிரிந்து வருந்தும் தலைவிக்குக் கார்கால வரவாகிய காரணம் நிகழ்ந்தும், உயிர் போதலாகிய காரியம் நிகழவில்லை எனக் கூறியிருத்தலின், இது காரிய விலக்காயிற்று. (கஎ)

அதன் வகை

சச. வன்சொல் வாழ்த்துத் தலைமை யிகழ்ச்சி
துணைசெயல் முயற்சி பரவசம் உபாயம்
கையறல் உடன்படல் வெகுளி யிரங்கல்
ஐயம் என்றுங்(கு) அறிந்தனர் கொளலே.

எ - ன், அவ்விலக்கு என்னும் அலங்காரத்தை விரித்து உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: வன்சொல் விலக்கும், வாழ்த்து விலக்கும், தலைமை விலக்கும், இகழ்ச்சி விலக்கும், துணைசெயல் விலக்கும், முயற்சி விலக்கும், பரவச விலக்கும், உபாய விலக்கும், கையறல் விலக்கும், உடன்படல் விலக்கும், வெகுளி விலக்கும், இரங்கல் விலக்கும், ஐய விலக்கும் என்று சொல்லிய **பதின்மூன்று** பாகுபாட்டையுடையது என்று அறிந்து கோடலையுடைத்து அவ்விலக்கு அலங்காரம் எ - று.

அவற்றுள், (க) **வன்சொல் விலக்கு** என்பது வன்சொற் சொல்லி விலக்குவது.

எ - டு: 'மெய்யே பொருள்மேற் பிரிதியேல் வேறொரு
வையமலை நாடத் தகும்நினக்கு - செய்யிலைவேல்
வள்ளல் பிரிவற்றம் பார்த்தெங்கள் வாழ்நாளைக்
கொள்ள உழலுமாம் கூற்று'

இ - ள்: ஒருதலையாய்ப் பொருள்மேல் ஆசையால் பிரிதியேல், இப்பொழுதே உனக்கொரு மனையாளைத் தேடத்தகுவதாயிருந்தது; நெய்யை யுடைத்தாகிய வேலையுடைய வள்ளலே! நீ பிரிந்த அவகாசத்தைப் பார்த்து, அப்பொழுதே எங்கள் வாழ்நாளைக் கொள்வதாக நினைத்துத் திரியாநின்றது கூற்றம் எ - று,

வள்ளல் — அண்மை விளி. வாழ்நாள் — உயிர்மேல் நின்றது.

(வி - ரை) இது பொருள்வயிற் பிரியக் கருதிய தலைவனைத் தோழி செலவழுங்குவித்ததாம். 'உபாய விலக்கு'வரை இத்துறையே யாம்.

நீ தலைவியைப் பிரிந்தால் உடனே உயிர் துறந்து விடுவள்; ஆதலின் வேறொருத்தியை மணக்க இப்பொழுதே முயல்க என வன்சொற் கூறித் தோழி அவனுடைய செலவை விலக்கலின், இது வன்சொல் விலக்காயிற்று.

(உ) **வாழ்த்து விலக்கு** என்பது வாழ்த்தி வைத்து விலக்குவது.

எ - டு: 'செல்லு நெறியனைத்துஞ் சேம நெறியாக
மல்க நிதியம் வளஞ்சிறக்க - வெல்லும்
அடற்றேர் விடலை யகன்றுறைவ [1]தியாங்கவ்
விடத்தே பிறக்க வியாம்'

இ - ள்: வென்றியினையும் வலியினையும் உடைய தேரினை யுடைய வீரனே! நீ எம்மைப் பிரிந்து போகக் கருதிப் போகும் வழியனைத்தும் உனக்குக் காவலாகிப் பரிகாரஞ் செய்வதாக! நினக்குப் பொருள் வருவாயும் பெருகுவதாக! செல்வம் பெருகுக! நீ இப்படிப் பிரிந்து நிலையாக நிற்பது எவ்விடம்? அவ்விடத்தை எங்கட்குச் சொல்ல வேண்டும்; நாங்கள் அவ்விடத்தே யறிந்து பிறப்போமாக எ - று.

இறக்குங் காலத்து உண்டாய நினைவு, இறந்தபின்னர் வந்து ஊட்டும் என்பதனால் அறிக.

(வி - ரை) சேம நெறியாக, நிதியம் மல்க, வளஞ் சிறக்க எனத்தோழி முன்னதாக வாழ்த்திப், பின்னர் நீ பிரியின் யாங்கள் இறப்போம் ஆதலின், நீ பிரிந்து செல்லுமிடத்து யாங்கள் பிறப்போமாக எனக் கூறுவதன் மூலம் தலைவனுடைய செலவை விலக்குதலின், இது வாழ்த்து விலக்காயிற்று.

(ங) **தலைமை விலக்கு** என்பது தன்பால் தலைமை தோன்றக் கூறி விலக்குவது.

எ - டு: 'பொய்ம்மை நெறிதீர் பொருளும் மிகப்பயக்கும்
எம்முயிர்க்கும் ஏதம் இடரில்லை - வெம்மைதீர்ந்
தேக வினிய நெறியணிய வென்றாலும்
போக லொழிவாய் பொருட்கு'

இ - ள்: பொய்யாகிய வழியினைத் தப்புவிக்கின்ற பொருளும் பெரிது உண்டாகும்; எங்கள் உயிர்க்கும் ஓர் இடர் உண்டாக மாட்டாது; அவ்வழி நடையும் வருத்தமின்றி இன்பம் உண்டாக்கும்; அவ்வழிதானுஞ் சிறுகித் தோன்றும் என்று சொன்னேமே யாயினும், பொருள் கருதிப் போகின்ற போக்கை நீ ஒழிவாயாக எ - று.

(வி - ரை) தலைவனைத் தோழி விலக்கும் நிலையினளாயினும், நீ பிரியின் 'எம் உயிர்க்கு ஏதம் இடரில்லை' எனத் தம் தலைமை கூறி அதன் மூலமாக விலக்கலின், இது தலைமை விலக்காயிற்று.

---

1. 'ஆங்கோர்' என்பதும் பாடம்.

(ச) இகழ்ச்சி விலக்கு என்பது விலக்குதற்கு ஏதுவை இகழ்ந்து விலக்குவது.

எ - டு: 'ஆசை பெரிதுடையேம் ஆருயிர்மேல் அப்பொருள்மேல்
ஆசை சிறிதும் அடைவிலமால் - தேசு
வழுவா நெறியின் வருபொருள்மேல் அண்ணல்
எழுவாய் ஒழிவாய் இனி'

இ - ள்: தலைமை கெடாதவண்ணம் நல்வழிக்கண்ணே யொழுகுகின்ற பொருள் கருதிப் பிரிகின்ற பெரியோனே! யாம் எங்கள் அரிதாகிய உயிரின்மேல் மிக ஆசை யுடையேம்; நீ நினைத்துப் பிரிகின்ற பொருள்மேல் ஆசை யுண்டாதற்குக் காரணஞ் சிறிதுமிலேம்; ஆதலால், நீ பொருள்மேல் ஏகுவாய், அன்றி அதனைத் தவிர்வாய்; எங்கள் தன்மை இது எ - று.

'தேசு வழுவா நெறியின் வரும் அண்ணல்' எனக் கூட்டுக. 'தேசு வழுவா நெறியின் வருபொருள்' எனப் பொருட்கு அடையாக்கினும் அமையும். தேசு — தலைமை. வழுவல் - கெடுதல். நெறி — ஒழுக்கம். எழுதல் — போதல். ஒழிதல் — தவிர்தல். 'இனி' என்றது எங்கள் நினைவிருந்தபடி சொன்னோம், நீ செய்யுமாறு செய் என்றவாறு.

(வி - ரை) தோழி தலைவனை விலக்குங்கால், தலைவன் பிரிதற்குக் காரணமான பொருளை 'அப்பொருள்மேல் ஆசை சிறிதும் அடைவிலமால்' எனக் கூறுமாற்றான் இகழ்ந்து அவனுடைய செலவை விலக்கலின், இது இகழ்ச்சி விலக்காயிற்று.

(ரு) துணைசெயல் விலக்கு என்பது துணைசெய்வாரைப்போலக் கூறி விலக்குவது.

எ - டு: 'விளைபொருள்மேல் அண்ணல் விரும்பினையேல் ஈண்டெம்
கிளையழுகை கேட்பதற்கு முன்னே - விளைதேன்
புடையூறு பூந்தார் புனைகழலாய் போக்கிற்(கு)
இடையூறு வாராமல் ஏகு'

இ - ள்: மிகுதியாகிய தேன் ஊறுகின்ற பூமாலையினையும், அலங்கரிக்கப்பட்ட கழலினையும் உடைய தலைவனே! நன்மை பயக்கும் பொருள்மேலே போதல் விரும்பினையாயின், எங்கள் சுற்றத்தார் அழுவது கேட்பதற்கு முன்னே இப்பொழுதே உன்னுடைய போக்கிற்கு விலக்கு வாராவண்ணம் போவாய் எ - று.

நாங்கள் அறிந்து படுவதற்கு முன்னமே நீ போ என்றவாறு. ஈண்டு — இப்பொழுது. விளைதல் — உண்டாதல்.

(வி - ரை) பொருள்மேல் விரும்பினையேல் ஈண்டு எம் கிளையழுகை கேட்டலாகிய இடையூறு வருவதற்கு முன்னே ஏகுக எனத் தோழி தலைவனுடைய செலவிற்குத் துணை செய்வது போலக் கூறினும், அதனால் தாம் இறந்துபடுவேம் என்பதை யுணர்த்துமுகமாக அவனுடைய செலவை விலக்கலின், இது துணை செயல் விலக்காயிற்று.

(சு) முயற்சி விலக்கு என்பது முயற்சிதோன்றக் கூறி விலக்குவது.

எ - டு: 'மல்லணிந்த தோளாய்! இதென்கொலோ வான்பொருள்மேற்
செல்க விரைந்தென் றுளந்தெளிந்து – சொல்லுதற்கே
ஏன்று முயல்வலியான் ஏகல்நீ யென்றிடையே
தோன்றுகின்ற தென்வாயிற் சொல்'

இ - ள்: வளப்பத்தினை யுடைய தோளினை உடையாய்! நீ நன்மை பயக்கும் பொருளின் திறத்தே கடுகிப் போவாயாக என்று என்னுள்ளமானது கலக்கமறச் சொல்லுவதாக நினைத்துத் தொழிற்படாநின்றது; அதற்குள்ளே ஒருசொல் போகாதொழிவாயாக என்று சொல்லுவதாகத் தோன்றா நின்றது; இஃது என்னாகுமோ? சொல்லுவாயாக எ - று.

மல்லல் — கடை குறைந்தது. கொல் — ஐயம்.

(வி - ரை) பொருள்வயிற் பிரிதற்குச் செல்க என்று கூறுதற்கு உள்ளத்தால் யான் முயலினும், வாயில் வரும் சொல் 'ஏகல்நீ' என்றே வருகின்றது எனத் தோழி, தன் முயற்சி தோன்றக் கூறித் தலைவனுடைய செலவை விலக்கலின், இது முயற்சி விலக்காயிற்று.

(ஏ) பரவச விலக்கு என்பது தன்வசமல்லாமை தோன்றக்கூறி விலக்குவது.

எ - டு: 'செல்கை திருவுளமேல் யானறியேன் தேங்கமழ்தார்
மல்லகலந் தங்கு மதர்விழியின் - மெல்லிமைகள்
நோக்கு விலக்குமேல் நோவாள் இவள்காதல்
போக்கி யகல்வாய் பொருட்கு'

இ - ள்: இவளைப் பிரிவதே காரியமாகத் திருவுள்ளத் தடைத்துப் பொருட்குப் பிரிவாயானால், அதன் மேல் அடுக்குங் காரியம் என்னால் அறியப்படாதாகலான், நறுநாற்றத்தை யுடைத்தாகிய தாரினையும் வளப்பத்தினையும் உடைத்தாகிய நின்னுடைய மார்பின்கண்ணே பிரியாது தங்கப்பட்ட விழியினிடத்து உண்டாகிய மெல்லிய இமைகள் எம்முடைய தலைவன் மார்பினைப் பார்க்கின்ற பார்வையினை விலக்காநின்றன என்று அதற்கு வருந்துந் தன்மையை யுடைய இவள், நின்மேல் வைத்த ஆசையினைப் போக்கிப் போவாயாக எ - று.

(வி - ரை) 'செல்கை திருவுளமேல் யானறியேன்' என்பதால் தோழி தன்வயமின்மை கூறி, இவள் காதலைப் போக்கியே நீ பொருட்கு அகல வேண்டும் என்பதால் தலைவனுடைய செலவை விலக்குதலின், இது பரவச விலக்காயிற்று.

(அ) உபாய விலக்கு என்பது விலக்குவதனை ஓர் உபாயங் காரணமாகக் கூறி விலக்குவது.

எ - டு: 'இன்னுயிர் காத்தளிப்பாய் நீயே இளவேனில்
மன்னவனுங் கூற்றுவனும் வந்தணைந்தால் – அன்னோர்
தமக்கெம்மைத் தோன்றாத் தகைமையதோர் விஞ்சை
எமக்கின் றருள்புரிந்தே யேகு'

இ - ள்: எங்களுடைய இனிய உயிரைக் காக்குந் தன்மையை யுடையையாகிய நீயே பிரியக் கருதினையாயின், எங்களிடத்து

இளவேனிற் காலத்துத் தலைவகிைய காமனும், கூற்றுவனும் வந்து சேர்ந்தால் அவர் கண்ணுக்கு நாங்கள் தோன்றுதே யிருப்ப தொரு வித்தையை எங்களுக்குத் தந்து போவாயாக எ - று.

(வி - ரை) நீ பிரியின் மன்மதனுக்கும் இயமனுக்கும் கண்ணில் படாத வாறு இருக்கும் ஓர் உபாயத்தை யருளிச்செல்க எனத் தலைவனுக்கு ஓர் உபாயம் கூறுவதுபோல் கூறி, அது அவனுக்கு இயலாததால், செல்லுதலும் இயலாது என்பது தோன்ற விலக்கினமையின், இது உபாய விலக்காயிற்று.

(கூ) கையறல் விலக்கு என்பது தத்தமக்கு வேண்டிய பொருள் மேல் முயலும் ஒழுக்கமின்மை தோன்றக் கூறுவது.

எ - டு: 'வாய்த்த பொருள்விளைத்த தொன்றில்லை மாதவமே
ஆர்த்த அறிவில்லை அம்பலத்துக் - கூத்துடையான்
சீலஞ் சிறிதேயுஞ் சிந்தியேன் சென்றொழிந்தேன்
காலம் வறிதே கழித்து'

இ - ள்: நற்பொருளை விளைத்தற்குக் காரணமாகிய யாதொரு முயற்சியுஞ் செய்யவில்லை; பெரிய தவத்தைத் தேடிக் கொள்ளத் தக்க அறிவுமில்லை; சிதாகாசத்தில் ஆனந்தத் தாண்டவஞ் செய்கின்ற நடேசனுடைய மான்மியத்தைச் சிறிதேனும் நினைக்கவில்லை ; ஆதலால், என் வாணாளை வீணாளாக்கிவிட்டேன் எ - று.

வாய்த்த பொருள் — நற்பொருள். விளைத்தல் — தேடல். மாதவம் — பெரிதவம். ஆர்த்தல் — பிணித்தல்.

(வி - ரை) இது காலத்தை வறிதே கழித்தான் ஒருவனின் கூற்றாகும் நற்பொருளைத் தேடவுமில்லை, நற்றவத்தைச் செய்யவுமில்லை, அம்பலத்தானைச் சிந்திக்கவுமில்லை எனத் தத்தம் பொருள்மேல் முயலும் ஒழுக்கம் இன்மை கூறி, இதுவரை இவை செய்யாமையின், இனியும் அவை செய்ய இயலா எனக் குறிப்பான் விலக்கலின், இது கையறல் விலக்காயிற்று.

கையறல் — செய்யாதொழிந்த வினைகளுக்கு இரங்குதல். சிதாகாசம்— ஞானவெளி.

(கo) உடன்படல் விலக்கு என்பது உடன்பட்டார் போல விலக்குவது.

எ - டு: 'அப்போ தடுப்ப தறியேன் அருள்செய்த
இப்போ திவளும் இசைகின்றாள் - தப்பில்
பொருளோ புகழோ தரப்போவீர் மாலை
இருளோ நிலவோ வெழும்'

இ - ள்: குற்றமற்ற பொருளென்ன புகழென்ன இவற்றை உண்டாக்குதற்குப் பிரிந்து போவீர்! நீர் பிரிந்த அப்பொழுதே இவளுக்கு அடுப்பதொன்றும் என்றால் அறியப்படாது; நீர் அருளிச் செய்த பிரிவுக்கு இப்போது இவளும் உடன்படா நின்றாள்; இது கிடக்க, மாலைக்காலம் வந்த பொழுதே அதனோடு இருளோ மதியமோ வருதல் செய்யும், இதனை நீர் அறிவீர் எ - று.

(வி - ரை, இது பொருள்வயிற் பிரியக் கருதிய தலைவனைத் தோழி செலவழுங்குவித்ததாகும்.

'இப்போது இவளும் இசைகின்றாள்' என்பதால் உடன்பாடு தோன்றக் கூறினும், 'மாலை இருளோ நிலவோ எழும், அப்போது அடுப்பதறியேன்' என்பதால் பிரியின் இறப்பள் எனக் கூறித் தலைவனுடைய செலவை விலக்கலின், இது உடன்படல் விலக்காயிற்று.

(கக) வெகுளி விலக்கு என்பது வெகுளிதோன்றக் கூறி விலக்குவது:

எ - டு: 'வண்ணங் கருக வளைசரிய வாய்புலர
எண்ணந் [1]தளர்வே மெதிர்நின்று - கண்ணின்றிப்
போதல் புரிந்து பொருட்காதல் செய்வீரால்
யாதும் பயமிலேம் யாம்'

இ - ள்: இவளுடைய நிறங் கருகி வேறுபடவும், கையில் வளையானது சிந்தவும், வாயானது நீரற்று உலரவும், நன்மை எய்துவதாக நாங்கள் எண்ணிய எண்ணமெல்லாம் பழுதாகவும் எங்கள் எதிரே நின்று கண்ணோட்டமின்றிப் பிரிதல் விரும்பி எங்களை வெறுத்துப் பொருளை ஆசைப்படுவீராஞல், இனி எங்களுக்கு ஒரு பயனுமில்லை எ - று.

(வி - ரை) இதுவுமது. நின்னுடைய பிரிவால் வண்ணமும், வளையும், எண்ணமும் தளரும் எம்மைக் கண்டும் பொருள்வயிற் பிரிய வேண்டும் என் பீராயின் எமக்கு யாதும் பயமில்லை என வெகுளி தோன்றக் கூறி, பிரிதலை நினையவே இங்ஙனம் தளரும் யாம், பிரிந்தால் இறந்தே படுவோம் என்பதைக் குறிப்பால் அறிவுறுத்து விலக்கலின், இது வெகுளி விலக்காயிற்று.

(கஉ) இரங்கல் விலக்கு என்பது இரக்கந்தோன்றக் கூறி விலக்குவது.

எ - டு: 'ஊசல் தொழிலிழக்கும் ஒப்பு மயிலிழக்கும்
வாசஞ் சுனையிழக்கும் வள்ளலே! - தேசு
பொழிலிழக்கும நாளையெம் பூங்குழலி நீங்க
ஏழிலிழக்கும் அந்தோ இவண்'

இ - ள்: எம்முடைய பூவினால் அலங்கரிக்கப்பட்ட குழலினையுடைய இவள் உயிர் இழப்பதேயன்றி, ஆடுகின்ற ஊசல்களும் விளையாடல் தொழிலை யிழக்கும்; மயிலும் உவமையை யிழக்கும்; சுனைகளும் நறுநாற்றத்தை யிழக்கும்; பொழிலும் ஒளியை யிழக்கும்; இவ்விடமும் அழகை யிழக்கும்; தலைவனே! இனி அடுத்த வாறு செய் எ - று.

(வி - ரை) இதுவுமது. நீ பிரியின் ஊசலும், மயிலும், சுனையும், பொழிலும், இவ்விடமும் தத்தம் தன்மையை இழந்துவிடும் என இரங்கல் தோன்றக் கூறி, இவ்வாற்றான் நீ பிரியாமையே இவை தத்தம் தன்மையுடன் இருப்பதற்கு ஏதுவாம் எனத் தலைவனுடைய செலவை விலக்கலின் இது இரங்கல் விலக்காயிற்று.

(கங) ஐய விலக்கு என்பது ஐயுற்றதனை விலக்குவது.

---

1. 'தளரவெதிர் நின்று' என்பதும் பாடம்.

எ - டு: 'மின்னோ பொழிலின் விளையாடும் இவ்வுருவம்
பொன்னோ வெனுஞ்சுணங்கிற் பூங்கொடியோ - என்னோ
திசையுலவுங் கண்ணுந் திரள்முலையுந் தோளும்
மிசையிருளுந் தாங்குமோ மின்'

இ - ள்: இப்பொழிலின்கண்ணே விளையாடுகின்ற இவ்வுருவம், மின்னினது உருவமோ? அன்றியே, பொன்னோவென்று ஐயுறு நிறத்தையுடைய சுணங்கினையுடைத்தாய் இருப்பதோர் உருவத்தை யுடைத்தாகிய கொடியோ? யாதோ? என்று ஐயுறுகின்ற நெஞ்சமே! திக்கனைத்தும் பரந்து உலாவித் திரிகின்ற கண்ணிணையும், திரண்ட முலையிணையும், இரண்டு தோளிணையும், தன்மீதே இருளினையுந் தாங்கி யிருப்பதொரு மின்னும் உண்டோ? சொல்லுவாயாக எ - று.

மின்னோ கொடியோ என்று ஐயுற்று, மின் அன்மை துணிதலால், பூங்கொடியோ என்ற ஒகாரம் தெரிநிலைக்கிளவியான் அன்மையை விலக்கிற்று.

(வி - ரை) இது தலைவன் தலைவியை வியந்ததாகும்.

தலைவியை முதற்கண் மின்னோ, பூங்கொடியோ என ஐயுற்றவன் பின்னர், அம்மின்னல்தான் கண்ணும், முலையும், தோளும், இருளும் தாங்குமோ என்பதால் அதனை விலக்கிப் பெண் என உணருதலின், இது ஐய விலக்காயிற்று. (கஅ)

முன்னவிலக்குப் பிற அணிகளுடன் கூடிவரும் எனல்

சரு. வேற்றுப்பொருள் சிலேடை ஏதுவென் றின்னவை
மேற்கூ றியற்கையின் விளங்கித் தோன்றும்.

எ - ன், இதுவும் இவ்வலங்காரம் பிற அலங்காரங்களோடு கூடி வருமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: வேற்றுப்பொருள் வைப்பும், சிலேடையும், ஏதுவும் என்று சொல்லப்பட்டவைகளோடு இவ்விலக்கு என்னும் அலங்காரம் கூடி மேற்சொல்லப்பட்ட அலங்காரங்கள் போல வரும் எ - று.

அவற்றுள், (க) வேற்றுப்பொருள்வைப்பு விலக்கு

எ - டு: 'தண்கவிகை யாலுலகந் தாங்கும் [1]அனபாயன்
வெண்கவிகைக் குள்ளடங்கா வேந்தில்லை - [2]எங்கும்
மதியுந் தடனிரவி வந்துலவும் வானிற்
பொதியப் படாத பொருள்'

இ - ள்: உள்ளங் குளிர்ந்து கொடுக்கும் கொடையையுடைய அனபாயச் சோழனுடைய வெண்கொற்றக் குடைக்கீழ் அடங்காத வேந்தர் எங்கும் இல்லை; மதியும் இரவியும் தவழுகின்ற ஆகாயத்தில் அடங்காத பொருளும் எங்கும் இல்லை எ - று.

1. 'சயதுங்கன்' என்பதும், 'சனநாதன்' என்பதும் பாடங்கள்,
2. 'உண்டோ' என்பதும் பாடம்.

(வி - ரை) வேற்றுப் பொருள் வைப்பணியோடு விலக்கு அணி கூடி வரின், அது வேற்றுப்பொருள்வைப்பு விலக்காம். வேற்றுப்பொருள் வைப்பணியின் இலக்கணத்தை அடுத்த நூற்பாவால் அறிக.

அனபாயன் குடைக்கீழ் அடங்காத வேந்தில்லை என விலக்கலின் விலக்கணி யாயிற்று. இதனைப் பின்னிரண்டு அடிகளில் உலகறி பொருளான வேற்றுப் பொருளில் வைத்து விளக்கி யிருத்தலின், வேற்றுப் பொருள் வைப்புமாயிற்று.

(உ) சிலேடை விலக்கு

எ - டு: 'அம்போ ருகஞ்செற் றமுத மயமாகி
வம்பார் முறுவல் ஒளிவளர்க்க - இம்பர்
முகைமதுவார் கோதை முகமுண் டுலகின்
மிகைமதியும் வேண்டுமோ வேறு'

இ - ள்: தாமரையினது அழகை யழித்து, அமிருதத் தன்மைத்தாய்ப் புதுமையோடு கூடி விரியாநின்ற ஒளியையுடைத் தாதற்கு, முல்லை முகைகளையுடைய கோதையை யுடையாளுடைய முகமல்லது, தாமரையைக் கருகுவித்து அமிருத கலைகளால் இயன்ற வடிவுடைத்தாய்ச் செவ்வி தாராநின்ற ஒளிநிலா விரிமதி உலகத்திற்கு மிகை எ - று.

இது முகத்திற்கும் மதிக்குஞ் சிலேடை. முறுவல் - ஒளி. வம்பு- புதுமை. இம்பர் - இவ்விடம்.

(வி - ரை) சிலேடை யணியோடு விலக்கு அணி கூடிவரின், அது சிலேடை விலக்காம்.

இதன்கண் முகமிருக்க மதியமும் வேண்டுமோ? என மதியத்தை விலக்கலின், இது விலக்கணி யாயிற்று. முன்னிரண்டு அடிகள் முகத்திற்கும் மதியத்திற்கும் ஒப்பப் பொருள்படுதலின் சிலேடையு மாயிற்று.

(௩) ஏது விலக்கு

எ - டு: 'பூதலத்துள் எல்லாப் பொருளும் வறியாராய்க்
காதலித்தார் தாமே கவர்தலால் - நீதி
அடுத்துயர்ந்த சீர்த்தி அனபாயா! யார்க்கும்
கொடுத்தியெனக் கொள்கின் றிலேம்'

இ - ள்: பூமண்டலத்துள்ளே வறிஞராய் ஆசைப்பட்டார் யாவரும், தாம் ஆசைப்பட்ட பொருள்களைத் தடையின்றித் தாமே எடுத்துக் கொள்ளுகின்றனர் ஆதலால், நீ உலகத்து வறியோர்க்குக் கொடுக்கின்றாயாக நினைக்கின்றிலோம்; நீதியைச் செய்தலாலே உயர்ந்த கீர்த்தியையுடைய அனபாயனே எ - று.

[1] 'நீதி அடுத்துயர்ந்த சீர்த்தி' என்றது பிள்ளையைத் தேர்க்காலில் இட்ட குணம் என்றவாறு.

(வி - ரை) ஏதுவணியோடு விலக்கணி கூடிவரின் அது ஏது விலக்காம்.

பூதலத்தில் எல்லாப் பொருளையும் வறியாராயுள்ளார் அனைவரும் தாமே கவர்தலால் என்னும் ஏதுவால், யார்க்கும் கொடுத்தல் என்பது விலக்கப் பட்டிருத்தலின், இது ஏது விலக்காயிற்று.

காரண விலக்கிற்கும் (பக்-கூ உ) இதற்கும் உள்ள வேற்றுமை:—முன்னையது காரணத்தை விலக்குவது; இது காரணத்தால் விலக்குவது. (கக)

எ. வேற்றுப்பொருள் வைப்பணி

சசு. முன்னொன்று தொடங்கி மற்றது முடித்தற்குப்
பின்னொரு பொருளை யுலகறி பெற்றி
ஏற்றிவைத் துரைப்பது வேற்றுப்பொருள் வைப்பே.

எ - ன், நிறுத்தமுறையானே வேற்றுப்பொருள் வைப்பு என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: முன் ஒரு பொருள்திறந் தொடங்கிப் பின்னர் அது முடித்தற்கு வலியுடைய பிறிதொரு பொருளை உலகறி பெற்றியான் வைத்து மொழிவது வேற்றுப்பொருள் வைப்பென்னும் அலங்காரமாம் எ - று.

இதன் அகலம் உரையிற் கொள்க.

(வி - ரை) கவிஞன் தான் சொல்லக் கருதிய பொருளை முடித்தற்கு உலகறிந்த பொருளாய வேறொரு பொருளை வைப்பது வேற்றுப் பொருள் வைப்பாம். கவிஞன் தான் கருதிய பொருளை, வேற்றுப் பொருளாகக் கூறும் பொருள் உறுதிப்படுத்துவதாக இருக்கும். கவிஞன் தான் சொல்லக் கருதிய பொருளைச் சிறப்புப்பொருள் என்றும், அதனை முடித்தற்குக் கூறப்படும் வேற்றுப்பொருளைப் பொதுப்பொருள் என்றும் கூறுவர். முடித்தல்—உறுதிப்படுத்தல். (உo)

அதன் வகை

சஎ. முழுவதுஞ் சேறல் ஒருவழிச் சேறல்
முரணித் தோன்றல் சிலேடையின் முடித்தல்
கூடா வியற்கை கூடு மியற்கை
இருமை யியற்கை விபரீதப் படுத்தலென்(று)
இன்னவை எட்டும் அதன(து) இயல்பே.

எ - ன், இது அவ்வலங்காரத்தை விரித்து உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: முழுவதுஞ் சேறலும், ஒருவழிச் சேறலும், முரணித் தோன்றலும், சிலேடையின் முடித்தலும், கூடாவியற்கையும், கூடுமியற்கையும், இருமையியற்கையும், விபரீதப்படுத்தலும் என எண் வகையான் வருவது அவ்வலங்காரத்து இயல்பு எ - று.

அவற்றுள், (க) முழுவதுஞ்சேறல் என்பது ஒருதிறம் உரைத்தால் அத்திறம் எல்லாவற்றின் மேலும் முற்றச் செல்லவுரைப்பது.

எ - டு: 'புறந்தந் திருளிரியப் பொன்னேமி யுய்த்துச்
சிறந்த வொளிவளர்க்குந் தேரோன் - மறைந்தான்
புறவாழி சூழ்ந்த புவனத்தே தோன்றி
இறவாது வாழ்கின்றார் யார்?'

இ - ள்: உலகைக் காத்துப் பொலிவுடைய சக்கரத்தை நடத்தி இருள்கெட, மிக்க ஒளியை வளர்க்குந் தேரையுடைய ஆதித்தன் மறைந்தான்; கடல் சூழ்ந்த உலகிற் பிறந்தார் இறவாதே வாழ்கின்றார் யாவர்? எ - று.

(வி - ரை) இதன்கண் 'இருளை நீக்கி ஒளி வளர்த்த கதிரவன் மறைந்தான்' என்பது கவிஞன் சொல்லக் கருதிய பொருளாகும். இதனை முடித்தற்கு 'உலகில் தோன்றியவர்களில் யார்தாம் இறவாதவர்' என்ற உலகறிந்த பொருளை ஏற்றியுரைத்தலின், இது வேற்றுப் பொருள் வைப்பாயிற்று. தோன்றிய பொருள் யாவும் மறையும் என்பது உலகப் பொருள்கள் அனைத்திற்கும் பொருந்துதலின், இது முழுவதும் சேறல் என்னும் வகையாயிற்று. 'தோற்றம் உண்டேல் மரணம் உண்டு' என்ற சுந்தரர் தேவாரமும் காண்க.

(உ) **ஒருவழிச்சேறல்** என்பது ஒருதிறம் உரைத்தால் அத்திறம் எல்லாவற்றின் மேலும் முற்றச் செல்லாது, சிலவற்றின் மேலே சென்றொழிவது.

எ - டு: 'எண்ணும் பயன்தூக்கா தியார்க்கும் வரையாது
மண்ணுலகில் வாம னருள்வளர்க்கும் - [1]தண்ணறுந்தேன்
பூத்தளிக்கும் தாராய்! புகழாளர்க் கெவ்வுயிரும்
காத்தளிக்கை யன்றோ கடன்'

தூக்கல் - விசாரித்தல். வாமன் - திருமால். கடன்-முறைமை.

(வி - ரை) இ - ள்: திருமால் தனக்கென யாதும் பயன் கருதாது உலகில் யாவர்க்கும் இல்லையென்னாது கருணையைச் செய்தருளுகின்றான்; குளிர்ந்த நல்ல தேனை மலர்ந்து கொடுக்கும்படியான மாலையை யுடையவனே! புகழுடையார்க்கு எவ்வுயிர்களையும் காத்தளித்தலன்றோ கடமையாகும் என்பதாம்.

இதன்கண் 'திருமால் யாவர்க்கும் கைம்மாறு கருதாது அருள் சுரக்கின்றான்' என்பது கவிஞன் சொல்லக் கருதிய பொருளாகும். இதனை முடித்தற்குப் 'புகழ் பொருந்தியார்க்கு எவ்வுயிரும் காத்தளித்தலே கடன்' என்ற உலகறி பொருளை ஏற்றியுரைத்தலின் வேற்றுப் பொருள் வைப்பாயிற்று. எவ்வுயிரையும் காத்தளித்தல் உலகினர் அனைவர்க்கும் பொருந்தாது, அவர்களுள் ஒரு சாரார் ஆகிய புகழாளர்க்கே அமைதலின், இது ஒருவழிச்சேறலாயிற்று.

(ங) **முரணித்தோன்றல்** என்பது தம்முள் மாறுபட்டிருக்கும் இயல்புடைத்தாய பொருள் வைப்பது.

எ - டு: 'வெய்ய குரல்தோன்றி வெஞ்சினவே றுட்கொளினும்
பெய்யு முகில்தன்னைப் பேணுவரால் - வையத்
திருள்பொழியுங் குற்றம் பலவரினும் யார்க்கும்
பொருள்பொழிவார் மேற்றே புகழ்'

1. 'மின்னறுந்தேன்' என்பதும் பாடம்.

வெய்ய குரல் - முழக்கம். சினவேறு - நெருப்பு.

(வி - ரை) இ - ள்: கொடிய இடி முழக்கத்தைத் தோற்றுவித்து, அதற்குக் காரணமான கொடிய இடியைத் தன்னிடத்தே யுடைத்தாயினும் மழை பொழியும் மேகத்தை அனைவரும் பாராட்டுவார்கள்; உலகில் இருள் தன்மை வாய்ந்த மிகக் கொடிய குற்றங்களைச் செய்யினும், அவர்கள் யாவர்க்கும் வரையாது வழங்கும் வள்ளன்மையாராயின் அவர்களையே பாராட்டுவர் என்பதாம்.

இதன்கண் 'கடிய குரலையும், கொடுமையையும் உடைய இடியைத் தன்னகத்தே கொண்டிருப்பினும் மழை தருதலின் மேகத்தை யாவரும் புகழ்வர்' என்பது கவிஞன் சொல்லக் கருதிய பொருளாகும். இதனை முடித்தற்குக் 'குற்றமிருப்பினும் கொடையாளரை யாவரும் புகழ்வர்' என்ற உலகறி பொருளை ஏற்றியிருத்தலின் வேற்றுப் பொருள் வைப்பாயிற்று. குற்றம் உடையார் புகழப்படாதிருத்தலே இயல்பு. அங்ஙனமின்றிப் புகழப்படுவர் என்றல் முரணித் தோன்றலாம்.

(ச) **சிலேடையின் முடித்தல்** என்பது முன்னர் வைத்த பொருளையும், பின்னர் வைத்த பொருளையும் ஒரு சொற்றொடர்பால் சொல்லுவது.

எ - டு: 'எற்றே கொடிமுல்லை தன்னை வளர்த்தெடுத்த
முற்றிழையாள் வாட முறுவலிக்கும் - முற்று
முடியாப் பரவை முழங்குலகத் தென்றும்
கொடியார்க்கும் உண்டோ குணம்?'

இ - ள்: முல்லைக் கொடியானது, முன்பு தன்னை வளர்த்துக் காத்த குறைவற்ற அணிகளை யுடையளாகிய இவள் வருந்த முறுவல் செய்யா நின்றது; இஃது என்னே! முழக்கத்தினை யுடைய முடிவு தெரியாத கடல் சூழப்பட்ட உலகத்துக் கொடியார்க்கும் குணம் உண்டாமோ? எ - று.

கொடியார்—கொடுமையுடையார்க்கும், கொடிக்கும் பெயர். இதனுள், கொடுமையுடையார்க்கும், கொடிக்கும் சிலேடை வந்தவாறு காண்க.

(வி - ரை) இதன்கண் 'தன்னை வளர்த்தெடுத்த தலைவி தலைவனுடைய பிரிவால் வருந்துமாறு முல்லைக்கொடி முறுவலிக்கும் (அரும்பும்)' என்பது கவிஞன் சொல்லக் கருதிய பொருளாகும். இதனை முடித்தற்கு 'உலகத்தில் கொடியாரிடத்தும் குணம் உண்டாகுமோ?' என்ற உலகறி பொருளை ஏற்றி வைத்திருத்தலின் வேற்றுப்பொருள் வைப்பாயிற்று. இதன்கண் முன்னர்க் கூறிய பொருள் முல்லைக் கொடி. அதனை விளக்கப் பின்னர் வைத்த பொருள் கொடியவர்கள். இரண்டிற்கும் ஏற்பக் 'கொடியார்க்கும் உண்டோ குணம்' என்ற தொடர் இருத்தலின் சிலேடை ஆயிற்று.

கொடியார் – முல்லைக் கொடியார்; கொடியவர்கள். அஃறிணைப் பொருளாகிய முல்லைக் கொடியைக் கொடியார் என்றல் இழிவுபற்றி வந்த திணைவழுவமைதியாம்.

(ரு) **கூடாவியற்கை** என்பது கூடாததனைக் கூடுவதாக்கிக் கூறுவது.

எ - டு: 'ஆர வடமும் அதிசீத சந்தனமும்
ஈர நிலவும் எரிவிரியும் - பாரில்
துதிவகையான் மேம்பட்ட துப்புரவுந் தத்தம்
விதிவகையான் வேறு படும்'

துப்புரவு — அநுபவம். விரிதல் — மிகுதல்.

(வி – ரை) இ - ள்: தண்ணிய முத்து மாலையும், மிகவும் குளிர்ந்த சந்தனமும், குளிர்ந்த நிலவும் பிரிவாற்றாது வருந்துபவர்க்கு நெருப்பின் வெம்மையைத் தருவனவாயின், உலகில் புகழ்தற்குரிய பொருள்களும் அவரவர் விதி வகைக்கேற்பத் தத்தம் நிலைமையினின்றும் வேறுபடும் என்பதாம்.

இதன்கண் 'ஆரவடம், சந்தனம், நிலவு ஆகியன பிரிவாற்றாத பெண்டிர்க்கு நெருப்பாக இருக்கும்' என்பது கவிஞன் சொல்லக் கருதிய பொருளாகும். இத்தன்மை அவற்றிற்குக் கூடாத தன்மையாகும். இங்ஙனம் கூடாத தன்மையைக் கூடுவதாக்கி யுரைத்தற்கு, 'நுகர்தற்குரிய பொருள்களெல்லாம் அவரவர் விதிவகையான் வேறுபடும்' என்ற உலகறி பொருளை ஏற்றிவைத்திருத்தலின், இது வேற்றுப் பொருள் வைப்பாயிற்று. முன்னிரண்டு அடிகளில் கூடாத தன்மையைக் கூட்டி யுரைக்கப்பட்டிருத்தலின் கூடா இயற்கை ஆயிற்று.

(சு) **கூடுமியற்கை** என்பது கூடுவதனைக் கூடுவதாகக் கூறுவது.

எ - டு: 'பொய்யுரையா நண்பர் புனைதேர் நெறிநோக்கிக்
கைவளைசோர்ந் தாவி கரைந்துகுவார் – மெய்வெதும்பப்
பூத்தகையுஞ் செங்காந்தள் பொங்கொலிநீர் ஞாலத்துத்
தீத்தகையார்க் கீதே செயல்'

இ - ள்: எக்காலத்தும் பொய்யறியாத தலைவருடைய அலங்கரிக்கப்பட்ட தேர் வரும் வழிபார்த்துக் கைவளை வீழ உயிர் நைந்து விதனப்படுகின்ற மடவாருடைய மேனி அழலப் பூத்து விளங்கி வருத்துகின்றது, சிவந்த நிறத்தையுடைய காந்தள்; கடல் சூழ்ந்த ஞாலத்துத் தீக்குணத்தார்க்கு ஈதன்றோ செயல் எ - று.

'தீத்தகையார்' என்றது தீயகுணத்தையுடையார்க்கும், தீப்போலச் சிவந்த நிறத்தையுடைய பூத்த காந்தளுக்கும் பெயர்.

(வி - ரை) இதன்கண் 'தலைவனின் தேர் வரும் வழியைப் பார்த்து மனம் வெதும்புவார்தம் உடல் வருந்துமாறு செங்காந்தள் பூத்துக்கிடக்கின்றது' என்பது கவிஞன் சொல்லக் கருதிய பொருளாகும். இதனை முடித்தற்கு 'உலகில் கொடிய தன்மை யுடையார்க்குப், பிறர் வெதும்புமாறு செய்தலே இயல்பாம' என்ற உலகறி பொருளை ஏற்றி வைத்திருத்தலின், வேற்றுப்பொருள் வைப்பாயிற்று. தீயதன்மை வாய்ந்தார், பிறர்க்குத் தீய தன்மையை விளைவித்தல் பொருந்திய இயல்பாதலின், இது கூடும் இயற்கை ஆயிற்று.

(எ) **இருமையியற்கை** என்பது கூடாததனையும் கூடுவதனையும் ஒருங்கு கூறுவது.

எ - டு: 'கோவலர்வாய் வேய்ங்குழலே யன்றிக் குரைகடலும்
கூவித் தமியோரைக் கொல்லுமால் - பாவாய்!
பெரியோரும் பேணுது [1]செய்வரே போலும்
சிறியோர் பிறர்க்கியற்றுந் தீங்கு'

இ - ள்: இடைக்குல மாக்கள் வாயின் வேய்ங்குழல் இசையே யன்றி, ஒலிக்குங் கடலும் கதறிப் பிரிந்திருந்தாரைக் கொல்லும்; பாவாய்! பெருந்தகைமை உடையாரும் விசாரியாது செய்வர் போன்றதுகாண், எப்பொழுதுஞ் சிறியோர் அயலவர்க்குச் செய்யுந் தீமைக் காரியத்தை எ - று.

பெரியோர் - கடல். சிறியோர் - குழல். தீங்கு - தீமை. ஆல் - அசை.

(வி - ரை) இதன்கண் 'பிரிவால் வருந்தியிருப்பவர்களை அவர்கள் வருத்தம் மிகுமாறு கோவலரின் வேய்ங்குழலே யன்றிக் கடலும் அத்தன்மையைச் செய்கிறது' என்பது கவிஞன் சொல்லக் கருதிய பொருளாகும். இதனை முடித்தற்குச் 'சிறியோர் செய்யும் தீங்கினைப் பெரியோர்களும் செய்வர் போலும்' என்ற உலகறி பொருளை ஏற்றி வைத்திருத்தலின், இது வேற்றுப் பொருள் வைப்பாயிற்று. சிறியோர் பிறர்க்குத் தீங்கியற்றல் கூடும் தன்மை. பெரியோர அங்ஙனம் செய்தல் கூடாத் தன்மை. சிறுமையதாகிய குழல் செய்யும் தீங்கினைப், பெரிதாகிய கடலும் செய்கிறது எனவே, அவ்விருமை (கூடுமியற்கை, கூடா இயற்கை) இயற்கையும் ஒருங்கு கூறியதாயிற்று.

கொல்லுதல் — துன்பத்தை மிகுவித்தல். அஃது அன்னதாதல் 'தன்னையே கொல்லும் சினம்' (குறள்—௩o௫) 'கொல்லச் சுரப்பதாங் கீழ்' (நாலடி—உ௭௯) என்பவற்றால் அறிக.

(அ) **விபரீதம்** என்பது விபரீதப்படச் சொல்லுவது.

எ - டு: 'தலையிழந்தான் எவ்வுயிருந் தந்தான் பிதாவைக்
கொலைபுரிந்தான் குற்றங் [2]கடிந்தான் - உலகில்
தனிமுதன்மை பூண்டுயர்ந்தோர் வேண்டுவரேல் தப்பாம்
வினையும் விபரீத மாம்'

இ - ள்: முழுதுலகும் படைத்த பிரமன் தலை இழந்தான்; பிதாவைக் கொன்ற சண்டேசன் குற்றம் தீர்ந்தான்; ஒருவர்க்கு மில்லாத பெருமையுடையராய் உயர்ந்தோர் நினைப்பின் தப்பாத வினைகளும் உலகத்து மறுதலைப்படும் எ - று.

இதனுள் நல்வினைப்பயன் தீதாகவும், தீவினைப்பயன் நன்மையாகவும் வந்து விபரீதமானது காண்க.

(வி - ரை) இதன்கண் 'தலையிழந்த பிரமன் எவ்வுயிரையும் தந்தான் என்பதும், பிதாவைக் கொலைபுரிந்த சண்டேசரைக் குற்றமற்றவராக இறைவன் ஆட்கொண்டான் என்பதும்' கவிஞன் கூறக்கருதிய விபரீதப் பொருளாகும். இதனை முடித்தற்கு 'உலகில் தனித்தலைமை பூண்டவர்கள் தவறுகள் செய்யினும் தவறாகா' என்ற உலகறி பொருளை ஏற்றி வைத்திருத்தலின், இது வேற்றுப் பொருள் வைப்பாயிற்று.

1. 'செய்வாரே' என்பதும் பாடம். 2. 'தீர்ந்தான் என்பதும் பாடம்.

பிரமன் தலை இழந்த வரலாறு:—பிரமனும் சிவபெருமானைப் போன்றே ஐம்முகம் உடையனாய் இருந்தனன் என்றும், உமையம்மையாருக்கு ஐயம் ஏற்படாதிருக்கச் சிவபெருமான் பிரமனுக்குள்ள ஐம்முகத்துள் ஒன்றைக் கொய்தனர் என்றும் கூறுப.

பிதாவைக் கொலை புரிந்த வரலாறு: — திருச்சேய்ஞலூரில் உள்ள எச்சதத்தன் என்பாருக்கு பவித்திரையினிடமாகத் தோன்றிய அந்தணர் குலச் சிறுவர் விசாரசருமர் என்பார். இவர் அலகின், கலையின் பொருட்கெல்லை ஆடுங்கழலே எனத் தெளிந்த உள்ளத்தவர். அவ்வூரில் ஆனிரைகளை மேய்க்கும் இடையன் ஒருவன், ஒருநாள் ஓராவினைப் பரிவின்றி யடித்துவிட, அது கண்ட விசாரசருமர் அவனை நீக்கித் தாமே அவ்வானிரைகளை மண்ணியாற்றங்கரையில் மேய்ப்பாராயினர். அங்ஙனம் மேய்க்குங்கால் நாளும் அவ்வாற்றங்கரையில் மணலால் இலிங்கம் அமைத்து, ஆவின் பாலைக்கொண்டு திருமஞ்சனமாட்டி வழிபடுவாராயினர். இதனைக் கண்ட ஒருவன், ஆனிரைகளுக்குரியாரிடத்து இச்செய்தியைக்கூற, அவர்களனைவரும் எச்சதத்தனிடம் இதனைக் கூற, அவரும் அதனை நேரில் காண அவ்வாற்றங்கரைக்கண் மறைந்திருப்பாராயினர். வழக்கம்போல விசாரசருமர் மணலால் இலிங்கம் அமைத்து, ஆவின்பாலைக் கறந்து திருமஞ்சனமாட்ட, அதனை மறைவில் கண்டுகொண்டிருந்த தந்தையார் காலால் அவ்விலிங்கத்தை யிடற, சிவபோகப் பெருவாழ்வில் திளைத்துக்கொண்டிருந்த விசாரசருமர் ஆங்கிருந்த கோலைக்கொண்டு தடிய, அதுவே மழுவாக, தந்தையாரின் இருதாளையும் துணித்தது. இறைவன் நம்பொருட்டால் ஈன்ற தாதை விழ எறிந்தாய்; இனி உனக்கு அடுத்த தாதை நாமே என்று அருள்செய்து, அணைத்து நாம் உண்டகலமும் உடுப்பனவும் சூடுவனவும் உனக்காகச் சண்டீசனுமாம் பதந்தந்தோம் என்று அங்கு அவர் பொன்தடமுடிக்குத் தம்சடையிலுள்ள கொன்றை மாலையை வாங்கிச் சூட்டினார் என்பது வரலாறு. இதனால் விசாரசருமர் சண்டீசர் என்ற பெயரைப் பெற்றார். இது பெரியபுராணத்துட் கண்டது.

வேற்றுப்பொருள் வைப்பணியில் கூறப்பட்ட ஒருவழிச் சேறல் முதலிய வகைகளின் இலக்கணம், கவிஞன் தான் சொல்லக் கருதிய பொருளிலோ, அல்லது அதனை முடித்தற்கு வந்த பொருளிலோ, அல்லது அவ்விரண்டிலுமோ அமையலாம் என்பதை மேற்காட்டிய பாடல்களால் அறியமுடிகின்றது.

அ. வேற்றுமையணி

௪அ. **கூற்றினும் குறிப்பினும் ஒப்புடை யிருபொருள்**
வேற்றுமைப் படவரின் வேற்றுமை யதுவே.

என், நிறுத்தமுறையானே வேற்றுமை என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்: கூற்றினானுதல், குறிப்பினானுதல் ஒப்புடைய இருபொருளை ஒரு பொருளாக வைத்து அவற்றைத் தம்முள் வேற்றுமைப்படச் சொல்லுவது வேற்றுமை என்னும் அலங்காரமாம் எ-று.

'வேற்றுமை' என்றது **'அதுவே'** என்ற மிகையால், அவை ஒருபொருளான் வேற்றுமை செய்தலும், இருபொருளான்

வேற்றுமை செய்தலும் உடையன. அல்லதூஉம், அவ்வி லேசானே வேற்றுமைப்படக் கூறுதலேயன்றி, ஒன்றின் ஒன்று மிகுதிப்படக் கூறவும்படும்.

(க) ஒருபொருள் வேற்றுமைச்சமம்

எ - டு: 'அனைத்துலகுஞ் சூழ்போய் அரும்பொருள் கைக்கொண்(டு)
இனைத்தளவைத் தென்றற் கரிதாம் — பனிக்கடலீ
மன்னவநின் சேனைபோல் மற்றது நீர்வடிவிற்(று)
என்னும் இதுவொன்றே வேறு'

இ - ள்: முழுதுலகுஞ் சூழ்ந்து பிறர்க்கு அரிய பொருள்களையும் உடைத்தாய் இன்ன யளவினையுடைத்து என்றற்கு அரிதாகும் குளிர்ந்த கடலும், எல்லா நாட்டையும் கைக்கொண்டு அவ்வந் நாட்டரசரது அரிய நிதியமெல்லாம் கைக்கொண்டு எண்ணற்கு அரிய நினது சேனையும், மன்னவனே! ஒக்குமாயினும், கடலானது நீராகிய வடிவை உடையதென்னும் ஒரு குணமே வேறுபட்டி ருக்கும் எ - று.

(வி - ரை) கூறப்படும் இருபொருள்களுள் ஒன்றற்கு மட்டுமே வேற்றுமை கூறி, அவ்வேற்றுமை யிருப்பினும் அவ்விரண்டு பொருள்களும் சமமே என்று கூறுவது ஒரு பொருள்வேற்றுமைச் சமமாம்.

இப்பாடற்கண் கூறப்படும் பொருள்கள் சேனை, கடல் ஆகிய இரண்டாம். முன்னிரண்டடிகளில் இவ்விரண்டிற்குமுள்ள ஒப்புமையைக் கூறி, மூன்று மடியில் 'நீர் வடிவிற்று என்னும் இதுவொன்றே வேறு' எனக்கடலுக்கு மட்டும் வேற்றுமை கூறி, அவ்வேற்றுமை யிருப்பினும் அவ்விரண்டும் சமமே எனத் தோன்றுமாறு கூறியிருத்தலின், இது ஒருபொருள் வேற்றுமைச் சமமாயிற்று.

(உ) இருபொருள் வேற்றுமைச்சமம்

எ - டு: 'சென்று செவியளக்குஞ் செம்மையவாய்ச் சிந்தையுள்ளே
நின்றளவில் இன்பம் நிறைப்பவற்றுள் - ஒன்று
மலரிவருங் கூந்தலார் மாதர்நோக்(கு) ஒன்று
மலரிவருங் கூத்தன்தன் வாக்கு'

இ - ள்: உலாவிச் செவியை அளக்கும் செம்மையை உடைத்தாய், மனங்களில் நின்ற மாத்திரத்திலே உவகையை நிறைக்கும் தன்மையை உடையது மலர் செறியுங் கூந்தலை உடையாருடைய காதலைச் செய்யும் கண் என்றும்; உலகத்தார் செவியால் அளந் தறியும் தன்மையை உடைத்தாய்க் கேட்போர் மனங்களை விடாதே நின்று அளவில்லா இன்பத்தைத் தோற்றுவிப்பது மலரி எனப்பட்ட ஊரில் உண்டாகிய கூத்தன் என்னும் இயற்பெய ரையும், சக்கரவர்த்தி என்னும் சிறப்புப் பெயரையும் உடை யானது கவி என்றும் வந்தவாறு.

இதனுள் ஒன்று கண்ணாகவும், மற்றொன்று கவியாகவும் நின்றவாறு கண்டுகொள்க. மலரி என்பது ஓர் ஊர்.

(வி - ரை) கூறப்படும் இருபொருட்கும் வேற்றுமை கூறி, அவ் வேற்றுமை உடையவேனும், இரண்டும் சமமே என்று கூறுவது இருபொருள் வேற்றுமைச் சமமாம்.

இப்பாடற்கண் கூறப்படும் பொருள்கள் பெண்களின் நோக்கும், ஒட்டக்கூத்தரின் வாக்கும் ஆகும். முன்னிரண்டடிகளில் இவ்விரண்டற்கும் உள்ள ஒப்புமையைக் கூறிப்பின்பு, பின்னிரண்டடிகளில் ஒன்று மாதரிடத்திருக்கும் நோக்கு என்றும், இன்னொன்று ஒட்டக்கூத்தரின் வாயிடத்துள்ள வாக்கு என்றும் அவ்வப்பொருள்களுக்கும் இருக்கும் இடத்தால் வேற்றுமை கூறி, அவ் வேற்றுமை யிருப்பினும் அவ்விரு பொருள்களும் சமமே எனத்தோன்றுமாறு கூறியிருத்தலின், இது இருபொருள் வேற்றுமைச் சமமாயிற்று.

ஒட்டக்கூத்தரின் வாக்குச் செம்மையாகப் பொருள் தருதலோடு, அவாவரின் நுண்மாண் நுழைபுலத்திற்கேற்ப அவரவர் கருதும் நயப்பொருளையும் தருவதாகும். இவ்வாற்றான் அவர்தம் வாக்கிற்குப் பொருள் கூறுமாற்றான் அவரவர்தம் அறிவு நுட்பம் அறியப்படுதலின், 'சென்று செவியளக்கும்' தன்மை அக்கவிக்கு உளதாயிற்று.

ஒட்டக்கூத்தர்:—இவரைப்பற்றிய குறிப்பினை ஆராய்ச்சி முன்னுரையில் காண்க. மலரி - இவ்வூர் திருச்சிராப்பள்ளிக்கு அண்மையிலுள்ள திருவெறும்பூர் ஆகும். இவ்வுண்மை அவ்வூர்த் திருக்கோவிலிலுள்ள கல்வெட்டால் விளங்குகின்றது.

(ங) உயர்ச்சி வேற்றுமை

எ - டு: 'மலிதேரான் கச்சியும் மாகடலுந் தம்முள்
ஒலியும் பெருமையும் ஒக்கும் — மலிதேரான்
கச்சி படுவ கடல்படா கச்சி
கடல்படுவ வெல்லாம் படும்'

மாகடல் - பெரிய கடல். மலிதேர் - மிக்கதேர். கடலில் உள்ளதுகச்சியில் உண்டாகும்; கச்சியில் உள்ளன கடலில் இல்லை என்க.

இவை கூற்று வேற்றுமை.

(வி - ரை) இ - ள்: தேர்கள் நிறைந்து விளங்கும் காஞ்சீபுரமும், பெருமை பொருந்திய கடலும் தம்முள் ஒலியாலும், பெருமையாலும் ஒத்து விளங்கும். ஆயினும் தேர்கள் நிறைந்த காஞ்சீபுரத்தில் உள்ள பொருள்கள் கடலின்கண் இரா; ஆனல் கடலில் உள்ள பொருள்கள் எல்லாம் காஞ்சீபுரத்தில் இருப்பனவாம் என்பதாம்.

இப்பாடற்கண் கூறப்பட்ட பொருள்கள் கச்சியும், கடலும் ஆகிய இரண்டாம். முன்னிரண்டடிகளில் இவ்விரண்டற்கும் உள்ள ஒப்புமையைக் கூறிப், பின்னிரண்டடிகளில் கடலினும் கச்சியே உயர்ந்தது என அவ்வுயர்ச்சிக்கான காரணத்துடன் வேற்றுமையையும் கூறியிருத்தலின், இது உயர்ச்சி வேற்றுமை ஆயிற்று.

கூற்று வேற்றுமை—வெளிப்படையாக வேற்றுமை கூறுவது.

(ச) இருபொருள் வேற்றுமைச்சமம்

எ - டு. 'கார்க்குலமும் பாய்திரையுங் காட்டும் கடல்படையும்
போர்க்களிறும் பாய்மாவும் பொங்குமால் — [1]ஏற்ற
கலமுடைத்து முந்நீர் கதிராழித் திண்டேர்
பலவுடைத்து வேந்தன் படை'

---

1. 'ஏற்றுகலம்' என்பதும் பாடம்.

இ - ள்: கரிய முகிலேயும் பரந்த திரைகளேயும் உடைத்து, கடலானது; சோழனது சேனேயும், போர்த்தொழில் மிக்க களிறும், பாயுங் குதிரையும் மிக்குத் தோன்றும்; அந்தக் கடலானது, பலபொருளும் ஏற்றும் மரக்கலம் உடைத்து; சோழனது சேனேயும், பலகதிராழித் திண்டேரினே உடைத்து எ - று.

(வி - ரை) இப்பாடற்கண் கூறப்பட்ட பொருள்கள் கடலும், படையும ஆகிய இரண்டுமாம். முன்னிரண்டடிகளில் இவ்விரண்டற்கும் உரிய ஒப்புமையைக் கூறிப் பின்னிரண்டடிகளில் கடல் கலம் உடைத்து; படை தேர் உடைத்து என வேற்றுமை கூறி, அவ்வேற்றுமையிருப்பினும் அவ்விரண்டும் சமமே எனக் கருதுமாறு கூறியிருத்தலின், இது இருபொருள் வேற்றுமைச் சமமாயிற்று.

கடலிடத்துள்ள மேகம், அலே ஆகிய இரண்டற்கும், படையிடத்துள்ள களிறு, குதிரை ஆகிய இரண்டும் ஒப்புமை யுடையன என்பதைக் குறிப்பால் புலப்படுத்தி யிருத்தலின், இது குறிப்பான் வந்த வேற்றுமை யாயிற்று.

(ரு) உயர்ச்சி வேற்றுமை

எ - டு: 'பதுமங் களிக்கும் அளியுடைத்துப் பாவை
வதனம் மதர்நோக் குடைத்துப் — புதையிருள்சூழ்
அப்போ(து) இயல்பழியும் அம்போ ருகவதனம்
எப்போது நீங்கா தியல்பு'

பதுமம் - தாமரை. வதனம் - முகம். களித்தல் - மயங்குதல். புதையிருள்சூழ் அப்போது - மாலே.

இவை குறிப்பு வேற்றுமை. பிறவும் வந்தவழிக் கண்டு கொள்க.

(வி - ரை) இ - ள்: தாமரை தன்னிடத்து வண்டுகளே உடையது, இப்பெண்ணின் முகமும் தன்னிடத்து மதர்த்த கண்களே உடையது; எனினும் உலகை இருளில் மறைக்கும் இரவு நேரத்தில் தாமரை தன் இயல்பு கெடும், ஆனல் இப்பெண்ணின் முகமோ எப்போதும் தன் இயல்பு கெடாது என்பதாம்.

இப்பாடற்கண் கூறப்பட்ட பொருள்கள் தாமரை, பெண்ணின் முகம் ஆகிய இரண்டுமாம். முன்னிரண்டடிகளில் இவ்விரண்டற்கும் உள்ள ஒப்புமையைக் குறிப்பால் கூறிப், பின்னிரண்டடிகளில் தாமரையினும் முகம் உயர்ந்ததற்கான வேற்றுமையைக் கூறியிருத்தலின், இது குறிப்பான் வந்த உயர்ச்சி வேற்றுமைஆயிற்று.

'பிறவும்' என்பது குறிப்பான் வந்த ஒருபொருள் வேற்றுமைச்சமமாம். இதற்கு எடுத்துக்காட்டுக் காட்டாமையின் அதனே வந்தவழிக் கண்டு கொள்க என்றார். (உஉ)

அதன் வகை

சகூ. அதுவே
குணம்பொருள் சாதி தொழிலொடும் புணரும்.

எ - ன், அவ்வலங்காரத்தை விரித்து உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: அவ்வேற்றுமை என்னும் அலங்காரம் குணத்தோடும், பொருளோடும், சாதியோடும், தொழிலோடும் கூடியும் வரும் எ - று.

அவற்றுள், (க) குண வேற்றுமை

எ - டு: 'சுற்றுவிற் காமனுஞ் சோழர் பெருமானும்
கொற்றப்போர்க் கிள்ளியுங் கேழ்ஒவ்வார் - பொற்றொடியாய்
ஆழி யுடையான் மகன்மாயன் செய்யனே
கோழி யுடையான் மகன்'

இ - ள்: காமனும், சோழனும் தம்மில் நிறம் ஒவ்வார். பொன்னாற் செய்த வளையலை உடையவளே! சக்கரத்தை யுடையனாகிய மாயனுடைய மகனாகிய காமன் கறுத்திருப்பான்; கோழி என்னும் ஊரை யுடையவனாகிய சோழனுடைய மகன் சிவந்திருப்பான் எ - று.

கோழி - உறையூர். மால்மகன் - காமன். கேழ் - ஒளி.

(வி - ரை) இப்பாடற்கண் கூறப்பட்ட பொருள்கள் காமனும் சோழனும் ஆம். இவ்விருவருக்கும் கறுப்பும் சிவப்புமாகிய வேற்றுமை கூறப்பட்டிருத்தலின், இது குண வேற்றுமை ஆயிற்று. மாயன் - கறுப்பு நிறத்தை யுடையவன்.

(உ) பொருள் வேற்றுமை

எ - டு: 'ஓங்கல் இடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்'

இ - ள்: உதய மலையில் தோன்றி, மேன்மக்கள் தொழுதேத்த விளங்கி, இரைந்தொலிக்கும் கடல் சூழ்ந்த உலகத்து இருள் அகற்றுவதாயும்; பொதிய மலையில் தோன்றி, அறிவுடையோர் தொழுதேத்த விளங்கி, இரைந்தொலிக்கும் கடல்சூழ் உலகத்தில் மக்கள் உள்ளத்து உள்ள மயக்கந் தீர்ப்பதாயும் இருக்கின்றவற்றுள், ஒன்று ஒளியும் அழகும் தனிக்கால் தேரும் விரும்பும் வெயிலும் உடைய ஆதித்தன்; ஏனையது தனக்கொப்பற்ற தமிழ் எ - று.

ஆழி - தேர்க்கால். நேர் - ஒப்பு.

(வி - ரை) இப்பாடற்கண் கூறப்பட்ட பொருள்கள் தமிழ், கதிரவன் ஆகிய இரண்டாம். இவ்விரு பொருள்களும் ஓங்கலிடை வருதல் முதலிய தொழில்களால் ஒப்புமையுடையவேனும், பொருளால் இரண்டும் வெவ்வேறு என வேற்றுமை கூறியிருத்தலின், இது பொருள் வேற்றுமை ஆயிற்று.

இருபொருள் வேற்றுமைச் சமத்திற்கும் இதற்கும் வேற்றுமை:— இருபொருள் வேற்றுமைச் சமத்தில் இருபொருள்களுக்கும் உள்ள ஒப்புமையை முன்னர்க்கூறிப், பின்னர் அவ்விரண்டிற்கும் உரிய வேற்றுமை சமமாகக் கூறப்பட்டிருக்கும். இஃது அன்னதன்றி ஒரேவிதமான தன்மையையுடைய

பொருள்கள் இரண்டை மட்டும் கூறி அவற்றிற்குரிய வேற்றுமையைக் கூறு திருக்கும்.

(ங) சாதி வேற்றுமை

எ - டு: 'வெங்கதிர்க்கும் செந்தீ விரிசுடர்க்கும் நீங்கா(து)
பொங்கு மதியொளிக்கும் போகாது—தங்கும்
வளமையான் வந்த மதிமருட்சி மாந்தர்க்(கு)
இளமையான் வந்த இருள்'

இ - ள்: சூரியனுக்கும், விளக்குக்கும் நீங்காது; மதியொளிக்கும் போகாதே நிற்கும்; இளமைப் பருவத்தில் செல்வக் களிப்பான் வந்த அறியாமையாகிய இருள் எ - று.

(வி - ரை) இப்பாடற்கண் கூறப்பட்ட பொருள்கள் மருட்சியும், இருளும் ஆகும். இவற்றுள் முன்னையது அகஇருள்; ஏனையது புற இருள். ஆதலின் இவ்விரண்டும் இருள் என்னும் சாதி பற்றியதாகும்: இவ்விரண்டற்கும் வேற்றுமை கூறப்படுதலின், இது சாதி வேற்றுமை ஆயிற்று.

(ச) தொழில் வேற்றுமை

எ - டு: 'புனனாடர் கோமானும் பூந்துழாய் மாலும்
வினைவகையான் வேறு படுவர் — புனனாடன்
ஏற்றெறிந்து மாற்றலர்பால் எய்தியபார் மாயவன்
ஏற்றிரந்து கொண்டமையி னால்'

இ - ள்: நீர்நாடர் கோமானாகிய சோழனும், பொலிவினையுடைய துளசிமாலையை அணிந்த மாயனும் தொழிலான் வேறு பட்டிருப்பர்; சோழன், பகைஞர் எறிந்த வேலைத் தன்மீது ஏற்றும், தனது வேலைப் பகைஞர்மேல் எறிந்தும் கைக்கொண்ட உலகை, மாயத்தையுடைய திருமால் நீரேற்றும் இரந்தும் கொண்டமையினால் எ - று.

புனனாடு - காவிரி நாடு.

(வி - ரை) இப்பாடற்கண் கூறப்பட்டவர்கள் சோழனும் திருமாலும் ஆவர். இருவரும் காத்தல் தொழிலால் ஒப்புமை யுடையாராயினும், உலகைப் பெறுதலாகிய தொழிலில் வேற்றுமை கூறப்பட்டிருத்தலின், இது தொழில் வேற்றுமை ஆயிற்று.

'திருமால் நீரேற்று வாங்கிய உலகம்' என்றது மாவலிபால் இரந்து பெற்றமையை உட்கொண்டதாகும்.

'தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு' (குறள் - கஉக)

என்பதும் இவ்வகையில் அடங்கும். இதனைக் 'குறிப்பான் வந்த வேற்றுமையலங்காரம்' என்பர் பரிமேலழகர்.

[1]அஃதேல் மேற்காட்டியவற்றுள் இந்நான்கும் ஒழித்துக் காட்டியன உளவோ? எனின், இல்லை. மற்று இச்சூத்திரம்

1. ஈண்டுச் சில பிரதிகளில் கீழ்வருமாறு காணப்படுகிறது:— மேற்கூறியனவும் இந்நான்குமே என்க. 'ஒடும்' என்ற உம்மையால் வேற்றுமை பிற அலங்காரங்களோடும் கூடி வரும்.

வேண்டா கூறினார் வேண்டியது முடித்தற்கு. மற்றும் வேண்டியது யாதோ? எனின், இவ்வலங்காரம் பிற அலங்காரங்களோடு கூடி வருவன கோடற்கு என்பது. என்னை? 'விலக்கியல் சிலேடையின் மேவவும் பெறுமே' என்றலின். அவை வருமாறு: —

(வி - ரை) மேற்காட்டின என்பது ஒரு பொருள் வேற்றுமைச்சமம், இருபொருள் வேற்றுமைச்சமம், உயர்ச்சி வேற்றுமை ஆகிய மூன்றுமாம். அம்மூன்றிலேயே இங்குக் கூறப்படும் குணம், பொருள், சாதி, தொழில் வேற்றுமைகள் நான்கும் அடங்கும். அங்ஙனமாக இந்நூற்பா வேண்டாது கூறியதேயாகும். அதனால் பயன் என்னை? எனில், இவ்வேற்றுமையணி விலக்கு, சிலேடை என்ற அணிகளுடனும் கூடிவரும் என்பதற்காம்.

(க) விலக்கியல் வேற்றுமை

எ - டு: 'தம்மாற் பயன்றூக்கா தியாவரையுந் தாங்கினும்
கைம்மாறுங் காலம் உடைத்தன்றே — எம்மாவி
அன்னவனை யாழி யனபா யனை [1]யலராள்
மன்னவனை மானுமோ வான்'

இ - ள்: உலகத்தாரால் பயனை விரும்பாது யாவரையும் தாங்கினும் மேகம் கைம்மாறுங் கால வரைவுடைத்து; ஆதலால், கைம்மாறுங் கால வரைவின்றிக் கொடுக்கின்ற எம்முடைய உயிரை ஒத்தவனை, அனபாயனைத் திருமகளுக்கு நாயகனை மேகம் ஒக்குமோ? எ - று.

இரப்போரிடத்துப் பேறு ஓராது யாவர்க்கும் கொடுப்பினும் அனபாயன் கை மாறாது; மேகம் இப்படி கொடுத்துக் கை மாறும். ஆகலான், அனபாயன் கையை மேகம் ஒவ்வாது என்க. 'தம்மாற் பயன் தூக்காது' என்பதற்குக் கொடையாற் பெறும் பேறு ஓராது எனினும் அமையும்.

(வி - ரை) வேற்றுமையணி விலக்கணியோடு கூடிவரின் அது விலக்கியல் வேற்றுமையாம்.

இப்பாடற்கண் கூறப்படும் பொருள் சோழனும் மேகமும் ஆகும். முதலடியில் இவ்விரண்டற்கும் உள்ள ஒப்புமையைக் கூறி, இரண்டாமடியில் மேகம் கால வரையறை யுடையது என்பதால், சோழன் கால வரையறை யின்றி வழங்குவன் என வேற்றுமை கூறி யிருத்தலின், இது வேற்றுமை யாயிற்று. பின்னிரண்டடிகளில் இவ்வாற்றான் சோழனுக்கு மேகம் ஒப்பாகாது என விலக்கப்பட்டி ருத்தலின் விலக்கணியும் ஆயிற்று.

(உ) சிலேடை வேற்றுமை

எ - டு: 'ஏறடர்த்து வில்முருக்கி எவ்வுலகுங் கைக்கொண்டு
மாறடர்த்த வாழி வலவனைக் — கால்தொழுதற்(கு)
எஞ்சினா ரில்லெனினு மாய னிகரெனுமால்
வஞ்சியா னீர்நாட்டார் மன்'

இ - ள்: விடைதழுவி, வில்லிறுத்து, மூன்றுலகும் அளந்து கைக்கொண்டு, பகைஞரைத் தொலைத்த சக்கரத்தை யுடைய மாலை, உலகத்துள்ளார் யாவரும் வணங்குவார் எனினும் மாயன்

1. 'மலராள்' என்பதும் பாடம்.

என்று சொல்லப்படுவான். பாண்டியனுடைய சுறவேற்றுக் கொடியை அழித்துச் சேரனுடைய விற்கொடியைச் சிதைத்து எல்லா நாட்டையும் கைக்கொண்டு தன்னோடு ஒப்பார் உலகத்தில் இல்லையெனச் சக்கரம் செலுத்திய சோழனைத் தொழுதற்கு ஒழிந்தார் இல்லையென மாயனோடு ஒப்பித்துச் சொல்லினும், சோழன் வஞ்சியான் எ - று.

மாறு - பகைஞரும், உவமையும். இறுத்தல் - வளைத்தல். எஞ்சினர் - ஒழிந்தார். •வஞ்சி - கருவூர். நீர்நாடு - காவிரி நாடு. வஞ்சியான் - வஞ்சி என்னும் ஊருடையான். 'ஏற்றுக் கொடி' என்றதற்குக் காடவர்கேரன் கொடி என்று பொருள் கூறுவாரு முளர்.

'ஏது வேற்றுமை' என மற்றுமொரு வகையும் காணப்படும். பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

(வி - ரை) வேற்றுமையணி சிலேடை அணியோடு கூடிவரின் அது சிலேடை வேற்றுமையாம்.

இப்பாடற்கண் கூறப்படும் பொருள் சோழனும் திருமாலும் ஆவர். முன்னிரண்டடிகளில் இருவர்க்கும் உள்ள ஒற்றுமையைக் கூறிப், பின்னிரண்டடிகளில் திருமால் மாயன் (அதாவது வஞ்சிப்பவன்) என்றும், சோழன் வஞ்சியான் (அதாவது வஞ்சனை செய்யாதவன்) என்றும் வேற்றுமை கூறப் பட்டிருத்தலின், இது வேற்றுமையணி ஆயிற்று. மாயன் என்னும் சொல் கரியன், வஞ்சனையுடையவன் என்ற இருபொருளுக்கும், வஞ்சியான் என்னும் சொல் வஞ்சனையில்லாதவன், வஞ்சி என்னும் ஊரை உடையவன் என்ற இரு பொருளுக்கும் ஏற்ப இருத்தலின், இது சிலேடையணியும் ஆயிற்று.

வஞ்சி சேரநாட்டகத்ததாயினும், சோழன் தன் போராற்றலால் அதுவும் அவன் ஆணைக்கு உட்படுவதாயிற்று. (உரு)

கூ. விபாவனையணி

ரூ௦. உலகறி காரணம் ஒழித்தொன் றுரைப்புழி
வேறொரு காரண மியல்பு குறிப்பின்
வெளிப்பட வுரைப்பது விபாவனை யாகும்.

எ - ன், நிறுத்த முறையானே விபாவனை யென்னும் அலங் காரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: ஒன்றன் வினை உரைக்குங்கால் அவ்வினைக்குப் பல ரும் அறிய வருங்காரணம் ஒழித்துப், பிறிதொரு காரணமாக இயல்பாகக், குறிப்பின் வெளிப்பட உரைப்பது விபாவனை என் னும் அலங்காரமாம் எ - று.

அவற்றுள், (க) [1]அயற்காரண விபாவனை

எ - டு: • 'தீயின்றி வேந்தமியோர் சிந்தை செழுந்தேறல்
வாயின்றி மஞ்ஞை மகிழ்தூங்கும் - வாயிலார்
இன்றிச் சிலர்ஊடல் தீர்ந்தார் [2]தமரின்றித்
தூன்றிச் சிலைவளைக்கும் கார்'

1. 'இயல்புகாரண விபாவனை' என்பதும் பாடம்.
2. 'இகலின்றி' என்பதும் பாடம்.

தமியோர் - தனியிருந்தோர். மஞ்ஞை - மயில். தூங்கல் - ஆடல். வாயிலார் - ஊடல் தீர்ப்பார். கன்றல் - கறுத்தல். சிலை - வில், இந்திரதனு. கார் - கார்காலம்.

(வி - ரை) இ - ள்: துணையின்றித் தனித்திருப்போருடைய மனம் நெருப்பில்லாமலே வேகும்; செழிப்பான கள்ளை யுண்ணாமலேயே மயில்கள் மகிழ்ச்சியோடிருக்கும்; ஊடல் தீர்ப்பதற்குரிய வாயில்கள் இல்லாமலேயே சில பெண்கள் ஊடல் தீர்ந்தனர்; மேகம் யாரொடும் மாறுபாடு கொள்ளாமலேயே கோபித்து இந்திரவில்லை வளைக்கும் என்பதாம்.

வேதற்குத் தீயும், மகிழ்தற்குத் தேறலும், ஊடல் தீர்தற்கு வாயிலும், வில் வளைத்தற்கு மாறுபாடும் இன்றியமையாத காரணங்கள். இவை உலகறி காரணங்கள். எனினும், இவை யின்றியே அவ்வச் செயல்கள் நிகழ்ந்தன என்பதால் விபாவனை ஆயிற்று. இங்ஙனம் கூறவே இவற்றிற்குக் காரணம் 'கார் காலம்' என்பது உய்த்துணர்ந்து கொள்ளப்படுதலின் இது அயற்காரணமாயிற்று.

(உ) [1]இயல்பு விபாவனை

எ - டு: 'கழுடையாமே கூர்த்த கருநெடுங்கண் தேடிப்
படையாமே ஏய்ந்த தனம் பாவாய்! — கடைஞெமிரக்
கோட்டாமே கோடும் புருவங் குலிகச்சே(று)
ஆட்டாமே சேந்த வடி'

குலிகம் - சாதிலிங்கம். சேறு - குழம்பு. சேத்தல் - சிவத்தல்.

(வி - ரை) இ - ள்: பெண்ணே! நின்னுடைய கண்கள் எவரும் கடைதலின்றியே கூர்மையாய் உள்ளன, தனங்கள் தேடிப் படைக்காமலேயே பொருந்த அமைந்துள்ளன, புருவங்கள் நுனியமுங்குமாறு வளைக்கப்படாமலேயே வளைந்துள்ளன, அடிகள் சாதிலிங்கக் குழம்பு பூசப்படாமலேயே சிவந்துள்ளன என்பதாம்.

கூர்மையாதற்குக் கடைதலும், தனம் பெருக அமைதற்குத் தேடிப் படைத்தலும், வளைதற்குப் பிறரால் வளைக்கப்படுதலும், சிவத்தற்குக் குலிகச் சேறு ஆட்டுதலும் உலகறிந்த காரணங்கள் ஆகும். ஈண்டு அவையின்றியே அவ்வச் செயல்கள் இயல்பாக விளைந்தன எனக் குறிப்பாக அறியப்படுதலின், இது இயல்பு விபாவனை ஆயிற்று.

'விபாவனை' என்னாது 'ஆகும்' என்றதனால், வினையெதிர் மறுத்துப் பொருள் புலப்படுப்பினும், பொதுவகையாற் காரணம் விலக்கிக் காரியம் புலப்படுப்பினும் அவ்வலங்காரமாம் என்க.

அவற்றுள், (க) வினையெதிர்மறுத்துப் பொருள்புலப்படுப்பது

எ - டு: 'பூட்டாத விற்குனித்துப் பொங்கு முகிலெங்கும்
தீட்டாத அம்பு சிதறுமால் - ஈட்டமாய்க்
காணாத கண்பாப்புத் தோகை கடும்பழிக்கு
நாணா(து) அயர்த்தார் நமர்'

பூட்டாதவில் - வானவில். பூட்டும் வில் - மக்கள் கை வில். தீட்டாத அம்பு - மழைத்துளி. தீட்டும் அம்பு - கணை. காணாத

1. 'குறிப்புக்காரண விபாவனை' என்பதும் பாடம்.

கண் - பீலிக்கண். காணும் கண் - மக்கள் கண். அயர்த்தல் - மறத்தல்.

(வி - ரை) இது பருவங் கண்டு ஆற்றாத தலைவியது கூற்றாகும்.

இ - ள்: பார்த்து விளங்குகின்ற மேகங்கள் நாணால் பூட்டப்படாத வில்லை வளைத்து (அதாவது இந்திரவில்லைத் தன்னகத்தே கொண்டு) எவ்விடத்தும் தீட்டப்படாத அம்புகளைச் (அதாவது மழைத் துளிகளைச்) சொரிகின்றன, மயில்கள் கூட்டமாகக் காணாத கண்களைப் (அதாவது பீலிக் கண்களைப்) பரவச் செய்கின்றன, இத்தகைய கார் காலத்தில் பிரிவால் யாம் இறந்துபடுதலாகிய கொடும்பழிக்கு நாணாது நம்மைத் தலைவர் மறந்தார் என்பதாம்.

வில்லிற்குப் பூட்டுதலும், அம்பிற்குத் தீட்டுதலும், கண்ணிற்குக் காணுதலும் அவ்வவற்றிற்குரிய வினைகளாம். ஈண்டு அவ்வினைகளை மறுத்தலால் முறையே இந்திரவில், மழைத்துளி, பீலிக்கண் என்ற பொருள்கள் புலப்படுதலின், இது வினையெதிர் மறுத்துப் பொருள் புலப்படுத்தல் ஆயிற்று.

(உ) பொதுவகையாற் காரணம் விலக்கிக் காரியம் புலப்படுப்பது

எ - டு: 'காரண மின்றி மலயா நிலங்கனலும்
ஈர மதிவெதும்பற் கென்னிமித்தம் — காரிகையார்க்
கியாமே தளர வியல்பாக நீண்டனகண்
தாமே திரண்ட தனம்'

நிமித்தம் - காரணம். மலயாநிலம் - தென்றல். தனம்-முலை.

(வி - ரை.) இ - ள்: பொதிய மலையிலிருந்து வரும் தென்றற் காற்று காரணமின்றியே வெதுப்புகின்றது; இயல்பாகவே குளிர்ச்சியையுடைய சந்திரன் இப்பொழுது வெதுப்புதற்குக் காரணம் யாது? யாம் தளருமாறு இவ்வழகிய மகளிர்க்குக் கண்கள் இயல்பாகவே நீண்டுள்ளன, கொங்கைகளும் காரணமின்றி இயல்பாகவே திரண்டுள்ளன என்பதாம்.

கனலுதற்கும், வெதும்புதற்கும், தளர்தற்கும், திரட்சி பெறுதற்கும் உளவாகிய உலகறி காரணங்களைப் பொதுவகையால் 'காரணமின்றி' எனவும், 'என்னிமித்தம்' எனவும், 'இயல்பாக' எனவும், 'தாமே' எனவும் விலக்கி, அவற்றின் காரியமாய கனலுதல் முதலியவற்றைக் கூறியிருத்தலின், இது பொதுவகையாற் காரணம் விலக்கிக் காரியம் புலப்படுப்பது ஆயிற்று.

குறிப்பு விபாவனை

எ - டு: [1]'பாயாத வேங்கை மலரப் படுமதமா
பூவாத புண்டரிகம் என்றஞ்சி — மேவும்
பிடிதழுவி மாறதிருங் கானிற் பிழையால்
வடிதழுவும் வேலோய் வரவு'

இது குறிப்பு விபாவனையின் வேறுபாடாம். இதன்வேறுபாடு அறிந்து கொள்க.

பாயும் வேங்கை - புலி. பாயாத வேங்கை - மரம். பூக்கும் புண்டரிகம் - தாமரை. பூவாத புண்டரிகம் - புலி. மதமா - யானை. தழுவல் - சேர்தல். ஆல் - அசை. வடி - கூர்மை.

---

1. இப்பாடல் சுன்னாகம், திரு. குமாரசாமிப் புலவர் உரையில் இல்லை.

(வி - ரை) இ - ள் : கூர்மை பொருந்திய வேலினை உடையாய்! பாயாத வேங்கை (மரம்) மலர, அதனை மலராத புண்டரிகம் (புலி) என நினைத்து அஞ்சித் தம்மிடத்தே சாரும் பெண் யானைகளைத் தழுவி, அப்புலிக்கு எதிராகப் பேரொலி செய்யும் ஆண் யானைகள் உள்ள காட்டில், நீ இரவில் வருதல் தவறும் என்பதாம்.

பெண் யானைகள், வேங்கை மலர அதனைப் புலியென்று அஞ்சின என்பது முன்னிரண்டடிகளின் கருத்தாகும். பாயாத வேங்கை என்பதால் வேங்கைமரத்தையும், பூவாத புண்டரிகம் என்பதால் புலியையும் குறிப்பாகப் பெறுதலால், இது குறிப்பு விபாவனை ஆயிற்று.

இதற்கும் வினையெதிர் மறுத்துப் பொருள் புலப்படுத்தற்கும் உள்ள வேறுபாடு:— முன்னர்க் கூறிய வினையெதிர் மறுத்துப் பொருள் புலப் படுத்தலில் 'பூட்டாத வில்', 'தீட்டாத அம்பு', 'காணாத கண்' என்பவற்றால் அவ்வவ்வினைகளை மறுத்துக் கூறுமுகமாக அவ்வப்பொருள்களும் இன்னதெனக் குறிப்பால் விளங்கின. ஈண்டும் 'பாயாத வேங்கை', 'பூவாத புண்டரீகம்' என்பவற்றால் அவ்வவ்வினைகளை மறுத்துக் கூறுமுகமாக அவ்வப்பொருள்களும் இன்னதென விளங்கின. இவ்வாற்றான் ஒப்புமையுடையவாயினும், இப்பாடலில் பாடற்பொருளன்றிக் குறிப்பால் தோழி இரவுக்குறி மறுத்தாள் என்பதும் பெறப்படுகின்றது. ஆனால் அப்பாடலில் பாடற் பொருளன்றிப் பிறகுறிப்பு ஏதும் பெறப்படவில்லை. இதுபற்றியே உரையாசிரியரும் இது குறிப்பு விபாவனையின் வேறுபாடாம் எனக் கூறினர். (உச)

௧௦. ஒட்டணி

ருக. கருதிய பொருள்தொகுத்(து) அதுபுலப் படுத்தற்(கு)
ஒத்ததொன் றுரைப்பின்அஃ(து) ஒட்டெனெ மொழிப.

எ - ன், நிறுத்த முறையானே ஒட்டு என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள் : கவி தன்னால் கருதப்பட்ட பொருளை மறைத்து, அதனை வெளிப்படுத்தற்குத் தக்க பிறிதொன்றினைச் சொல்லின், அஃது ஒட்டு என்னும் அலங்காரமாம் எ - று.

(வி - ரை) இவ்வணியைப் பிறிது மொழிதல், நுவலா நுவற்சி, சுருக்கச் சொல்லல், தொகைமொழி என்ற பெயர்களாலும் வழங்குவர். சிலர் உள்ளுறையுவமம், உவமப் போலி என்றும் வழங்குவர். (உரு)

அதன் வகை

ருஉ. அடையும் பொருளும் அயல்பட மொழிதலும்
அடைபொது வாக்கி யாங்ஙன மொழிதலும்
விரவத் தொடுத்தலும் விபரீதப் படுததலும்
எனநால் வகையினும் இயலும் என்ப.

எ - ன், அவ்வலங்காரத்தை விரித்து உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள் : கூறுகின்ற பொருளும் அதனது அடையும் வேறுபட மொழிதலும், அடைபொதுவாக்கிப் பொருள் வேறுபட மொழி

தலும், அடைவிரவிப் பொருள் வேறுபட மொழிதலும், அடையை விபரீதப்படுத்துப் பொருள் வேறுபட மொழிதலும் என நான்கு வகையினை உடைத்து அவ்வொட்டு என்னும் அலங்காரம் எ - று.

அவற்றுள், (க) அடையும் பொருளும் அயல்பட மொழிதல்

எ - டு : 'வெறிகொள் இனச்சுரும்பு மேய்ந்ததோர் காவிக்
குறைபடுதேன் வேட்டுங் குறுகும் - நிறைமதுச்சேர்ந்(து)
உண்டாடுந் தன்முகத்தே செவ்வி யுடையதோர்
வண்டா மரைபிரிந்த வண்டு'

இ - ள் : தன்னிடத்துச் செவ்வியையும் வளப்பத்தையும் உடைய தாமரைக்கண் குறைவற்ற நிறைமதுவைச் சேர்ந்து உண்டு களித்து விளையாடுகின்ற வண்டும், களித்த பலவண்டுகள் சேர்ந்து உண்டு வெறுத்துவிட்ட குறைபடு காவியின் மதுவை ஆசைப்பட்டுச் சேருமானதே! எ - று.

இதனுள் தாமரை என்றது தலைமகளை. காவி என்றது பரத்தையை. வண்டாமரை பிரிந்த வண்டு என்றது தலைமகனை. இது பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகற்கு வாயில் நேர்ந்த தோழி சொல்லியது.

முகம் - இடம். ஓர் என்றது அசையுமாம். வெறி - களிப்பு. வெறிகொள் இனச்சுரும்பு - ஆண்வண்டு; இதற்கு மது நுகரும் வண்டு எனினும் அமையும்.

(வி - ரை) அடையும் பொருளும் அயல்பட மொழிதல் :—சிறப்பிக்க வந்த அடைமொழிகளையும் அவற்றால் சிறப்பிக்கப்படும் பொருளையும் வேறாகக் கூறி, அவற்றால் தம் உள்ளத்துள்ள கருத்தை வெளிப்படுத்துவது இதன் இலக்கணமாகும்.

இப்பாடற்கண் கவிஞன் சொல்லக் கருதிய பொருள், தலைவன் தலைவியைப் பிரிந்து பரத்தையிடத்து இன்பம் துய்த்தனன் என்பதாம். ஆனால் அதனை மறைத்து அதற்கு ஒத்த பொருளாகக் கூறப்பட்டது: ஒரு வண்டு தனக்கே உரிய தாமரையிலுள்ள தேனை உண்ணாது, பிற வண்டுகளாலும் நுகரப்பட்ட நீலமலரிடத்துள்ள தேனை உண்டது என்பதாகும். இங்ஙனம் கூறவே இது ஒட்டணி யாயிற்று. இங்ஙனம் தான் சொல்லக் கருதிய பொருள் ஒன்றாக, அதற்கு வேறான வண்டையும் அதற்கு ஏற்ற அடைமொழிகளையும் கூறியுள்ளமையால், இது அடையும் பொருளும் அயல்பட மொழிதல் ஆயிற்று.

(உ) அடைபொதுவாக்கிப் பொருள் வேறுபட மொழிதல்

எ - டு : 'உண்ணிலவு நீர்மைத்தா யோவாப் பயன்சுரந்து
தண்ணளி தாங்கு மலர்முகத்துக் - கண்ணெகிழ்ந்து
நீங்க லரிய நிழலுடைத்தாய் நின்றெமக்கே
ஓங்கியதோர் சோலை யுளது'

இ - ள் : மனத்துள்ளே உண்டாகிய குணமுடைத்தாய்ப், பலர்க்கும் ஏற உபகரித்துத் தண்ணளி யுடைத்தாகிய விரிந்த முகத்தையும், கண்ணோட்டத்தையும் உடைத்தாய்ப், பிரிதற்கரிய சாயலோடு கூடி நிற்பது என ஒரு வள்ளல் மேலும்; நடுவுண்டாகிய நீரை யுடைத்தாய், மாறாது பல வளங்களைக் கொடுத்துத்

தட்பமுடைய வண்டுகளைத் தாங்கிய மலர்களைத் தோற்றத்திலே யுடைத்தாய், மதுச்சோர்ந்து விட்டுப்போதற்கு அரிய நிழலு டைத்தாய், ஓங்கிநிற்பது என்று சோலை மேலும் செலுத்துக எ - று.

இது ஓர் வள்ளலைக் கொள்ள 'நின்றது. நின்றெமக்கே ஓங்கிய சோலை - நிலைபேறு உடைத்தாய் எமக்கு ஓங்கிய சோலை.

வள்ளல்மேற் செல்லுங்கால்: உள் - மனம், நிலவல் - உண்டாதல், நீர்மை - குணம், பயம் - உபகாரம், சுரத்தல் - அளித்தல், கண்ணெகிழ்தல் - கண்ணோட்டம், நிழல் - மென்மை எனவும்; சோலைமேற் செல்லுங்கால்: உள் - சோலைநடு, நீர்மை - புனல், பயம் - பழம், சுரத்தல் - கொடுத்தல், தண்ணளி - வண்டு, தாங்கல் - உடைத்தாதல், மலர் - பூ, முகம் - தோற்றம், கள் - மது, நெகிழ்தல் - சோர்தல் எனவும் வரும்.

(வி - ரை) அடை பொதுவாக்கிப் பொருள் வேறுபட மொழிதல்:— கவிஞன் தான் சொல்லக் கருதிய பொருளுக்கும், அதனை மறைத்து அதற்கு ஒத்ததாகக் கூறப்பட்ட பொருளுக்கும் அடைமொழிகளைப் பொதுவாகக் கூறி, தாம் கருதியதற்கு ஒத்ததாகக் கூறப்பட்ட பொருளை வேறாக மொழிதல் இதன் இலக்கணமாகும்.

இப்பாடற்கண் கவிஞன் சொல்லக் கருதிய பொருள் ஒரு வள்ளலாகும். அதனைப் புலப்படுத்த அதற்கு ஒத்ததாகக் கூறப்பட்ட பொருள் ஒரு சோலையாகும். முதல் மூன்றடிகளில் இவ்விரண்டற்கும் பொருந்துமாறு அடைமொழிகளைக் கூறித், தான் கருதிய பொருளாகிய வள்ளற்கு வேறாகச் சோலையைக் கூறியிருத்தலின், இது அடைபொதுவாக்கிப் பொருள் வேறுபட மொழிதல் ஆயிற்று.

(ங) அடைவிரவிப் பொருள் வேறுபட மொழிதல்

எ - டு: 'தண்ணளிசேர்ந் தின்சொல் மருவுந் தகைமைத்தாய்
எண்ணிய எப்பொருளும் எந்நாளும் - மண்ணுலகில்
வந்து நமக்களித்து வாழும் முகிலொன்று
தந்ததால் முன்னைத் தவம்'

இ - ள்: குளிர்ந்த கருணையையும் இன்சொல்லையும் உடைத்தாய், எல்லாரும் ஆசைப்பட்ட எல்லாப் பொருளையும் காலம் வரையாது மண்ணுலகிலே பிறந்து எம் போல்வார்க்கு அளித்து வாழும் என்று ஒரு வள்ளல் மேலும்; உலகத்தார்க்குக் குளிர்ச்சியோடு கூடக் கொடுக்கின்ற கொடைசேர்ந்து நன்றாய புகழ் மருவி, எண்ணப்பட்ட எல்லாப் பொருளையும் எக்காலமும் உலகிற்குச் சேர்ந்து கொடுத்து வாழும் என மேகத்தின் மேலும் செலுத்துக எ - று.

1 இதுவும் உட்கொண்ட பொருள் மேலதனோடு ஒக்கும்.

---

1. ஈண்டு, 'எண்ணிய எப்பொருளும் எந்நாளும் மண்ணுலகில் வந்து கொடுக்கும்' என்றது, உலகில் தோன்றும் பொருள்களுக்கு முதற்காரணம் நீராதலால் அக்காரணத்தை மேகம் கொடுப்ப அதன் காரியமாகிய பொருள் எல்லாம் புலப்படும் என்றவாறு — என்ற வாக்கியம் சில பிரதிகளில் காணப்படுகிறது.

வள்ளல்மேற் செல்லுங்கால்: தண்ணளி - குளிர்ந்த குணம், மருவுதல் - பொருந்தல், எண்ணல் - ஆசைப்படல் எனவும்; **மேகத்தின்மேற் செல்லுங்கால்:** தண்ணளி - குளிர்ந்த கொடை, இன்சொல் - புகழ் எனவும் வரும்.

(வி - ரை) அடை விரவிப் பொருள் வேறுபட மொழிதல்:— கவிஞன் தான் சொல்லக் கருதிய பொருள், அதனை மறைத்து அதற்கு ஒத்ததாகக் கூறும் பொருள் ஆகிய இரண்டற்கும் சில அடைமொழிகளைப் பொதுவாகக் கூறியும், சில அடைமொழிகளை ஒன்றற்கே சிறப்பாகக் கூறியும், தான் கருதிய பொருளுக்கு வேறான பொருளைக் கூறுதல் இதன் இலக்கணமாகும். அடை விரவுதல் — பொதுவும் சிறப்புமாகிய அடைமொழிகள் விரவுதல்.

இப்பாடற்கண் கவிஞன் சொல்லக் கருதிய பொருள் ஒரு வள்ளல் ஆகும். அதனைப் புலப்படுத்த அதற்கு ஒத்ததாகக் கூறப்பட்ட பொருள் முகில் ஆகும். தண்ணளி சேர்தலும், இன்சொல் மருவுதலும் வள்ளலுக்கும் முகிலுக்கும் பொதுவான அடைமொழிகளாகும். 'எண்ணிய எப்பொருளும் எந்நாளும் மண்ணுலகில் நமக்கு அளிக்கும்' என்னும் அடைமொழி வள்ளலுக்கே உரிய சிறப்பு அடைமொழியாகும. இங்ஙனம் இவ்விரு அடைமொழிகளும் விரவி வள்ளலுக்கு மாறாக முகிலாகிய பொருளைச் சொல்லியிருப்பதால், இது அடை விரவிப் பொருள் வேறுபட மொழிதல் ஆயிற்று.

(ச) அடையை விபரீதப்படுத்துப் பொருள் வேறுபட மொழிதல்

எ - டு: 'கடைகொல் உலகியற்கை! காலத்தின் தீங்கால்
அடைய வரிதாயிற் றன்றே - அடைவோர்க்(கு)
அருமை யுடைத்தன்றி யத்தேன் சுவைத்தாய்க்
கருமை விரவாக் கடல்'

இ - ள்: மிகவுந் தாழ்வுடைத்துப் போலும் உயர்ந்தோர் செய்தி! காலவியற்கையாலே மிடியாய்ச் சென்று இரப்பவும் வறுமையுற்றது; சேர்வோர்க்கு அருமையின்றித் தேன்போலுங் கிளவியும் உடைத்தாய் வெகுளி யில்லாக் கடல் எ - று.

கடல் - வள்ளல். சேர்வோர்க்கு அருமையும், இனிமையில்லாமையும், கருமையும் கடற்கு உண்டென்க.

இது வறுமையுற்றான் ஒரு வள்ளலைக் கொள்ள நின்றது.

'வகையின்' என்றதனால், பிறவகையான் வருவனவும், பிற அலங்காரங்களோடு கூடி வருவனவும் கொள்க. அல்லதூஉம், இவையெல்லாம் கருதிய பொருள் நோக்கி உணரவைக்கப்படும் என்க.

(வி - ரை) அடையை விபரீதப் படுத்துப் பொருள் வேறுபட மொழிதல்:— கவிஞன் தான் சொல்லக்கருதிய பொருளை மறைத்து, அதற்கு ஒத்ததாகக் கூறப்படும் பொருளில் அதற்கு ஒவ்வாத விபரீதமான அடைமொழிகளைப் புணர்த்துக் கூறுதல் இதன் இலக்கணமாகும்.

இப்பாடற்கண் கவிஞன் சொல்லக் கருதிய பொருள் வள்ளலாகும். அதற்கு ஒத்ததாகக் கூறப்பட்ட பொருள் கடலாகும். அடைவோர்க்கு அருமையின்றி யிருத்தல், அம்தேன் சுவைத்தாதல், கருமை விரவாதிருத்தல்

ஆகிய அடைமொழிகளைக் கடலுக்கு விபரீதமாகக் (மாறுபாடாக) கூறியிருத்தலின், இது அடையை விபரீதப்படுத்துப் பொருள் வேறுபட மொழிதல் ஆயிற்று. (உசு)

கக. அதிசயவணி

ருஙு. மனப்படும் ஒருபொருள் வனப்புவந் துரைப்புழி
உலகுவரம்(பு) இறவா நிலைமைத் தாகி
ஆன்றோர் வியப்பத் தோன்றுவ(து) அதிசயம்.

எ - ன், நிறுத்த முறையானே அதிசயம் என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: கவி, தான் கருதிய பொருளினது வனப்பை உவந்து சொல்லுங்கால், உலகநடை இறவாத தன்மைத்தாகி உயர்ந்தோர் வியப்புறச் சொல்லுவது அதிசயம் என்னும் அலங்காரமாம் எ - று.

(வி - ரை) 'உலக வரம்பு இறவா' என்பதற்கு உலக நடையினைக் கடந்து எனப் பொருள் கொள்ளுதலே சிறப்பாம். இதற்குப், பின்னுள்ள பாடல்களை சான்றாகக் காணப்படுதலானும், முதனூலும், வீரசோழியம் முதலாயினவும் இங்ஙனமே உரைத்தலானும் இங்ஙனம் பொருள் கொள்ளுதலே சிறப்புடைத்தாம். (உஎ)

அதன்வகை

ருச. அதுதான்
பொருள்குணம் தொழில்ஐயம் துணிவே திரிபெனத்
தெருளுறத் தோன்றும் நிலைமைய தென்ப.

எ - ன், அவ்வலங்காரத்தை விரித்து உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: மேற்சொல்லப்பட்ட அவ்வலங்காரம் பொருளதிசயம், குணவதிசயம், தொழிலதிசயம், ஐயவதிசயம், துணிவதிசயம், திரிபதிசயம் என ஆறு வகையான் தெளிவுறத் தோன்றும் நிலைமையை யுடைத்து எ - று.

அவற்றுள், (க) பொருளதிசயம்

எ - டு: 'பண்டு புரமெரித்த தீமேற் படர்ந்தின்றும்
அண்ட முகடு நெருப்பற(து) — ஒண்டளிர்க்கை
வல்லி தழுவக் குழைந்த வடமேரு
வில்லி நுதல்மேல் விழி'

இ - ள்: ஒளியையுடைய தளிர்க்கைக் கொடியாகிய மலைமகள் தழுவக் குழைந்த திருமேனியையும், வடமேருவாகிய வில்லினையும், மேல் நோக்கிய நெற்றிக்கண்ணினையும் உடைய பரமசிவன் முற்காலத்துத் திரிபுரத்தை நகைத்து எரித்த தீயானது விரைந்தோடுதலால், இக்காலத்தும் அண்டத்து உச்சியில் நெருப்பு அறுது எ - று.

நெருப்பு என்றது இடியை.

(வி - ரை) இப்பாடற்கண் கூறப்படும் மனப்படும் ஒரு பொருள் திரிபுரத்தை எரித்த தீயாகும். அத்தீ படர்ந்ததால்தான் வான்வெளி இன்னும் நெருப்பறாது இருக்கின்றது என அதனை உலக நடை கடந்து அதிசயித்து உரைத்திருத்தலின், இது பொருள் அதிசயமாயிற்று.

(உ) குணவதிசயம்

எ - டு : 'மாலை நிலவொளிப்ப மாதர் இழைபுனைந்த
நீல மணிகள் நிழலுமிழ — மேல்விரும்பிச்
செல்லும் இவள்குறித்த செல்வன்பாற் சேர்தற்கு
வல்லிருளா கின்ற மறுகு'

இ - ள் : மாலைக் காலத்தில் தோன்றிய நிலவானது ஒளிப்ப, ஆசையினாற் புனைந்த அணிகளிலுள்ள நீலமணிகள் ஒளியை யுமிழ, இவள் காதலோடு இச்சித்துச் செல்லும்படி குறித்த தலைவனிடத்திற் போதற்குத், தெருக்கள் செறிந்த இருளாகின்றன எ - று.

மாலை - இரவு. மாதர் - காதல். புனைதல் - இழைத்தல், அணிதல். இழை - ஆபரணம். உமிழ - பரப்ப. செல்லுமிவள் - தலைமகள். வல்லிருள் - செறிந்த இருள். மறுகு - தெருவு.

(வி - ரை) இப்பாடற்கண் கூறப்படும் பொருள் நீலமணிகளின் ஒளியாகும். அவ்வொளியே தலைவி தான் செல்லும் வீதியில் இருளைச் செய்கின்றது என அதனை உலகநடை கடந்து அதிசயித்து உரைத்திருத்தலின், இது குண அதிசயமாயிற்று. நீலமணியின் நிறப்பண்பைக் கூறியிருத்தலின் குணமாயிற்று.

(ந) தொழிலதிசயம்

எ - டு : 'ஆளும் பரியும் கரியும் சொரிகுருதி
தோளுந் தலையுஞ் சுழித்தெறிந்து - நீள்குடையும்
வள்வார் முரசும் மறிதிரைமேற் கொண்டொழுக
வெள்வாள் உறைகழித்தான் வேந்து'

இ - ள்: மள்ளர்களும், குதிரைகளும், யானைகளும் சொரிகின்ற குருதி வெள்ளமானது, தோள்களையும் தலைகளையும் சுழித்து வீசி, நீண்டகுடைகளையும் வார் இறுக்கிய பேரிகைகளையும் மடங்குகின்ற அலைகளையுடைய கடலின்மேல் அடித்துக்கொண்டு ஓடும்படி அரசன் வெண்மையாகிய வாளை உறையினின்று நீக்கினான் எ - று.

(வி - ரை) இப்பாடற்கண் கூறப்படும் தொழில் உறையினின்றும் வாளை எடுத்ததாகும். அதனை எடுத்தவுடனேயே பகைவர்தம் படையினின்று ஒழுகிய குருதியில் தோள், தலை முதலியன மிதந்தன என அத்தொழிலை உலக நடை கடந்து அதிசயித்து உரைத்திருத்தலின், இது தொழில் அதிசயமாயிற்று.

(ச) ஐயவதிசயம்

எ - டு: 'உள்ளம் புகுந்தே யுலாவும் ஒருகால்என்
உள்ளம் முழுதும் உடன்பருகும் - ஒள்ளிழைநின்
கள்ளம் பெருகும் விழிபெரிய வோ!கவல்வேன்
உள்ளம் பெரிதோ! உரை'

இ - ள்: ஒள்ளிய ஆபரணத்தை உடையாய்! நினது கள்ளம் மிக்க விழிகளானவை எனது உள்ளத்துப் புகுந்து உலாவுதலால் சிறிதாய்த் தோன்றின; அவை புகுந்து என்னுள்ளம் முழுதும் தமதுள்ளே அடக்கினமையின் அவ்வுள்ளம் சிறிதாய்த் தோன்றிற்று. இவற்றுள் விழி பெரியவோ? உள்ளம் பெரிதோ? சொல்லுவாயாக எ று.

(வி - ரை) இப்பாடற்கண் கூறப்படும் பொருள் விழி ஆகும். அது உள்ளம் புகுந்து உலாவுதலின் உள்ளம் பெரிதோ? அன்றி அது உள்ளம் முழுமையும் உடன் பருகுவதால் அவ்விழி பெரியதோ? என ஐயுற்றுக் கூறும்முகத்தான் அவ்விழியை உலகநடை கடந்து அதிசயித்து உரைத்தலின், இது ஐய அதிசயமாயிற்று.

(ரு) துணிவதிசயம்

எ - டு: 'பொங்கிச் செறிந்து புடைதிரண்டு மீதிரண்டு
செங்கலசக் கொங்கை திகழுமால் - [1]எங்கோன்தன்
தில்லையே யன்னார் இவரல்குல் தேரின்மேல்
இல்லையோ உண்டோ இடை'

இ - ள்: வளர்ந்து நெருங்கி அடிபரந்து திரண்டு மேலே இரண்டு சிவந்த கலசம் போன்ற கொங்கை விளங்கா நின்றன; ஆதலால், எந்தலைவனாகிய பரமசிவனுடைய தில்லைப்பதியை ஒத்த இவருடைய அல்குலாகிய தேரின் மேல், இடை இல்லையோ? உண்டு எ - று.

ஓகாரம் இரண்டனுள் முன்னது எதிர்மறை; பின்னது அசை நிலை. பொங்குதல் - வளர்தல். செறிதல் - நெருங்கல். திகழல் - விளங்கல்.

(வி - ரை) இப்பாடற்கண் கூறப்படும் பொருள் இடை ஆகும். அது இல்லையோ! உண்டோ! என முன்னர் ஐயுற்றுப், பின்பு 'மீ திரண்டு செங்கலசக் கொங்கை திகழ்வதால்' உண்டு எனத் துணிந்து கூறுமுகமாக, அவ் இடையை உலகநடை கடந்து அதிசயித்து உரைத்தலின், இது துணிவு அதிசயமாயிற்று.

(சு) திரிபதிசயம்

எ - டு: 'திங்கள் சொரிநிலவு சேர்வெள்ளி வள்ளத்துப்
பைங்கிள்ளை பாலென்று வாய்மடுக்கும் - அங்கயலே
காந்தர் முயக்கொழிந்தார் கைவறிதே நீட்டுவரால்
ஏந்திழையார் பூந்துகிலா மென்று'

இ - ள்: நிலா முற்றத்திருந்த வெள்ளிக் கிண்ணத்து உள்ள நிலவைப் பசுங்கிளிகள், பாலென்று கருதி வாய் மடுக்கும்; அதுவேயுமன்றி, அங்கு ஒரு புறத்துத் தங்கொழுநரைப் புணர்ந்து நீங்கினாராகிய ஏந்திழையார் தாம் ஒழித்த துகிலெனக் கருதி அந்நிலவிலே கையை நீட்டுவார் எ - று.

வள்ளம் - வட்டில். காந்தர் - தலைவர். பிறவாற்றான் வருவனவும் கண்டு கொள்க.

---

1. 'எங்கள்கோன்' என்பதும் பாடம்.

(வி - ரை) இப்பாடற்கண் கூறப்படும் பொருள் நிலா முற்றத்தில் உள்ள வெள்ளிக் கிண்ணத்தில் படும் நிலவின் ஒளியாகும். அதனைக்கண்டு கிளி பால் என்றும் பெண்கள் தம் துகில் என்றும் ஒன்றையொன்றாகத் திரித்து மயங்குகின்றார் என அதனை உலகநடை கடந்து அதிசயித்து உரைத்தலின், இது திரிபு அதிசயமாயிற்று. திரிபு - ஒன்றை ஒன்றாக மயங்கல். இதனை 'மயக்க அணி' என்றும் கூறுவர். (உஅ)

கஉ. தற்குறிப்பேற்றவணி

ருரு. பெயர்பொருள் அல்பொருள் எனவிரு பொருளினும்
இயல்பின் விளைதிற னன்றி அயலொன்று
தான்குறித்(து) ஏற்றுதல் தற்குறிப் பேற்றம்.

எ - ன், நிறுத்த முறையானே தற்குறிப் பேற்றம் என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: பெயரும் பொருளும், பெயராத பொருளும் என்னும் இருபொருட் கண்ணும் இயல்பாக நிகழும் தன்மை ஒழியக், கவி தான் கருதிய வேறொன்றினை அவற்றின்கண் ஏற்றிச் சொல்வது தற்குறிப்பேற்றம் என்னும் அலங்காரமாம் எ - று.

அவற்றுள், (க) பெயர்பொருள் தற்குறிப்பேற்றம்

எ - டு: 'மண்படுதோட் கிள்ளி மதயானை மாற்றரசர்
வெண்குடையைத் தேய்த்த வெகுளியால் - விண்படர்ந்து
பாயுங்கொல் என்று பனிமதியம் போல்வதூஉம்
தேயுந் தெளிவிசும்பி னின்று' (முத்தொள்ளாயிரம்)

இ - ள்: நிலவுலகத்தைத் தாங்கிய தோள் வலிமையை உடைய சோழனுடைய மதயானையானது மாறுபட்ட அரசர்களுடைய வெண்கொற்றக் குடையைச் சீறிச் சிதைத்த கோபத்தாலே நம்மேலும் வந்து பாயுமோ? என்று குளிர்ந்த ஆகாயத்திலே நிறைமதியம் எனப்படுவதூஉம் தேயாநிற்கும், தெளிந்த விசும்பின்கண் நின்று எ - று.

(வி - ரை) இப்பாடற்கண் கூறப்பட்ட பெயர்பொருள் சந்திரன் ஆகும். அதன் இயல்பு வளர்தலும் தேய்தலும் ஆகும். இங்ஙனம் இயல்பாக உள்ள தன்மைக்குச், 'சோழனின் யானை பகைவரின் வெண்கொற்றக் குடைகளைத் தேய்த்த வெகுளியால், அக்குடைபோன்ற தன்னையும் பாயுமோ! என்னும் அச்சத்தாலேயாம்' எனக் கவிஞன் தான் ஒரு காரணத்தை ஏற்றிக் கூறுதலின், இது பெயர்பொருள் தற்குறிப்பேற்றம் ஆயிற்று.

(உ) பெயராதபொருள் தற்குறிப்பேற்றம்

எ - டு: 'வேனில் வெயிற்குலர்ந்த மெய்வறுமை கண்டிரங்கி
வானின் வளஞ்சுரந்த வண்புயற்குத் - தானுடைய
தாதுமே தக்க மதுவுந் தடஞ்சினையாற்
போதுமீ தேந்தும் பொழில்'

இ - ள்: முதுவேனிற் காலத்து ஆதித்தன் வெயில் வெம்மைக்கு ஆற்றாது உலர்ந்த தமது மெய்வறுமை கண்டு இரங்கி, வானின்கண் நின்று மழைவளத்தைப் பொழிந்து தமது வாட்டம்

நீக்கின முகிலுக்குப் பொழில்களானவை தங்கண் உண்டாகிய மேதக்க தாதோடு கூடிய மலர்களையும், தங்கண் மதுவினையும், தமது பெரிய கிளைகளாகிய கைகளாலே மேனோக்கித் தாங்கா நிற்கும் எ - று.

மீதேந்தும் - மேனோக்கி நீட்டிக் கொடா நின்றன.

இவ்வணி பொருள்தற்குறிப்பு, ஏதுத்தற்குறிப்பு, பயன் தற்குறிப்பு முதலாக மற்றும் பலவாற்றால் விகற்பித்துக் கூறவும் படும்.

(வி - ரை) இப்பாடற்கண் கூறப்பட்ட பொருள் பொழில் ஆகும். இது பெயராத பொருள். அதன் இயல்பு அவ்வவ் விடங்களிலுள்ள செடி கொடிகள், கிளையும் தளிரும் மலரும் தேனும் உடைத்தாய் இருப்பதாகும். இவ்வியல்பான தன்மைக்கு, 'வேனில் காலத்துத் தனக்கு வெப்பம் தீர உதவிய மேகத்திற்கு நன்றியறிதலாக அப்பொழில் தன்பால் உள்ள பொருள்களைத் தருதலேயாகும்' எனக் கவிஞன் தான் ஒரு காரணத்தை ஏற்றிக் கூறுதலின், இது பெயராத பொருள் தற்குறிப்பேற்றம் ஆயிற்று. (உகூ)

தற்குறிப் பேற்றம் உவம உருபுகளோடும் வரும் எனல்

ருசு. அன்ன போலெனும் அவைமுத லாகிய
சொன்னிலை விளங்குந் தோற்றமும் உடைத்தே.

எ - ன், அவ்வலங்காரத்திற்கு உரியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: அன்ன, போல என்பவை முதலாகிய உவமைச் சொல் சிலபுணர்ந்து விளங்கும் தன்மையும் உடைத்தாம்; அத் தற்குறிப்பேற்றம் என்னும் அலங்காரம் எ - று.

எ - டு: 'காமருதேர் வெய்யவன் எங்கும் கரம்பரப்பித்
தேமருவு சோலை மலர்திறக்கும் - தாமரையின்
தொக்க இதழ்விரித்துப் பார்க்குந்தொலைந் திருள்போய்ப்
புக்க [1]புரைகிளைப்பான் போல்'

காமருதேர் - அழகு மருவிய தேர். வெய்யவன் - சூரியன். விரித்தல் - திறத்தல். புரை - இடம். கிளைத்தல் - ஆராய்தல்.

(வி - ரை) இ - ள்: அழகு பொருந்திய தேரினையுடைய சூரியன், தனக்குத் தோற்று இருள் சென்று ஒளிந்த இடத்தை ஆராய்ந்து பார்ப்பவன் போல, எவ்விடத்தும் தன் ஒளிக்கதிர்களாகிய கைகளை விரித்து நீட்டித் தேன் பொருந்திய சோலையிலுள்ள மலர்களைத் திறந்து பார்ப்பான்; மூடியிருக்கும் தாமரை மலரின் இதழ்களையும் விரித்துப் பார்ப்பான் என்பதாம்.

இதன்கண் கூறப்பட்ட பொருள் கதிரவன் தன் ஒளிக்கதிர்களைச் சோலையில் யாண்டும் பரப்புதல் ஆகும். இவ்வியல்பான நிகழ்ச்சிக்குக் 'கதிரவன் தன் பகையாகிய இருள் சென்று ஒளிந்த இடத்தைத் தேடுதற்காகத்தான் அங்ஙனம் செய்கின்றான்' எனக் கவிஞன் தான் குறித்ததொரு காரணத்தை ஏற்றிச் சொல்லுதலின், இது தற்குறிப்பேற்றம் ஆயிற்று. ஈற்றடியில் 'போல்' என்னும் உவமவுருபு இருத்தலின், இந்நூற்பாவின் இலக்கணத்திற்கு ஏற்புடையதாயிற்று. (௩0)

1. 'புரைதிளைப்பான்' என்பதும் பாடம்.

கரு. ஏதுவணி

ருஎ. யாதன் திறத்தினும் இதனின்இது விளைந்ததென்
றேதுவிதந்(து) உரைப்ப(து) ஏது அதுதான்
காரக ஞாபகம் எனவிரு திறப்படும்.

எ - ன், நிறுத்த முறையானே ஏது என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: யாதானும் ஒரு பொருள்திறத்து இதனுன் இது நிகழ்ந்ததென்று காரணம் விதந்து சொல்லுவது, ஏது என்னும் அலங்காரமாம்; அது காரகவேது என்றும், ஞாபகவேது என்றும் இரண்டு கூறுபடும் எ - று.

(வி - ரை) காரகம் - தொழிலை இயற்றுவிப்பது. ஞாபகம் - அறிவிப்பது. (௬க)

காரகவேது

ருஅ. 1முதல்வனும் பொருளும் கருமமும் கருவியும்
ஏற்பது நீக்கமும் எனஇவை காரகம்.

எ - ன், காரகவேது ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: கருத்தா முதல் நீக்கநிலை யீறுகச் சொல்லப்பட்ட இவை ஆறும் காரணமாகத் தோன்றுவது காரக ஏதுவாம் எ - று.

(வி - ரை) இந்த நூற்பாவிற்குத் திரு. சுன்னுகம், குமாரசாமிப் புலவர் அவர்கள் 'முதல்வனும் பொருளும் கருமமும் கருவியுமாகிய இவை, ஏற்பதும் நீக்கமும் என இருவகையாகி வருவன காரக ஏதுக்களாம்' என உரை காண்பர். ஏற்பது - ஒன்றற்கு நன்மையாக நிற்பது. நீக்கம் - ஒன்றனை அழிக்க வருவது. இவ்விருவகையில் அந்நான்கும் வரும் என்பது கருத்து. இங்ஙனம் உரை காண்பதே பொருத்தம் உடைத்தாகும்.

அவற்றுள், (க) **கருத்தா காரகவேது**

எ - டு: 'எல்லைநீர் வையகத்(து) எண்ணிறந்த எவ்வுயிர்க்கும்
சொல்லரிய பேரின்பந் தோற்றியதால் — முல்லைசேர்
தாதலைத்து வன்கொன்றைத் தாரலைத்து வண்டார்க்கப்
பூதலத்து வந்த புயல்'

இஃது - **ஆக்கம்**. எல்லைநீர் - கடல். புயல் - காற்று. தோற்றியது - உண்டாக்கிற்று.

(வி - ரை) ஒரு வினைமுதலே (கருத்தாவே) தொழிலை இயற்றுவிப்பதாயும் (காரகமாயும்), பிற தோன்றற்கு ஏதுவாயும் நிற்பின், அது கருத்தா காரக ஏதுவாம்.

இ - ள்: முல்லை மலரிற் சேர்ந்த தாதினைக் கீழே உதிர்த்து, வளப்பம் மிகுந்த கொன்றை மலர்களையும் உதிரச் செய்து, அவற்றில் உள்ள வண்டுகள்

1. இவ்விடத்தில் 'முதல்வனும் கருமமும் கருவியுந் தோன்றும்' என்ற நூற்பாவும், அதற்கேற்ப எடுத்துக்காட்டுக்களும் சில பிரதிகளில் காணப்படுகின்றன.

ஒலிக்க, இந்நில வுலகத்து வந்த காற்றானது, கடல் சூழ்ந்த நிலவுலகத்திலுள்ள எவ்வுயிர்களுக்கும் சொல்லுதற்கரிய பேரின்பத்தைத் தோற்றுவித்தது என்பதாம்.

இப்பாடற்கண் கூறப்பட்ட கருத்தா காற்று ஆகும். அதுவே உயிர்களுக்கு இன்பத்தைத் தோற்றுவித்தது எனக் காரகமாகவும், தாதலைத்தல், தாரலைத்தல் ஆகிய செயல்கள் நிகழ்தற்கு ஏதுவாகவும் நிற்றலின், இது கருத்தா காரக ஏது ஆயிற்று. காற்று உயிர்களுக்குப் பேரின்பம் தோற்றியது எனக் கூறலின் இது ஆக்கமாயிற்று.

(உ) பொருட் காரகவேது

எ - டு: [1]'கனிகொள் பொழிலருவி கைகலந்து சந்தின்
பணிவிரவிப் பாற்கதிர்கள் தோய்ந்து — தனியிருந்தோர்
சிந்தை யுடனே உயிருணக்குந் தென்மலயம்
தந்த தமிழ்மா ருதம்'

இ - ள்: மலை மீதுண்டாய பொழில்கள் உகுத்த கனியோடு கலந்து இழியாநின்ற அருவியினுட் புக்குக் கலந்தும், அதனினுண்டாய சந்தனத்தின் தட்பத்துடன் மருவியும், பால் போன்ற சந்திர கிரணங்களில் மூழ்கியும், தனது தன்மை ஒழிந்து கொழுநரைப் பிரிந்திருந்தோர் மனத்தோடு உயிரையும் உணக்கா நின்றது; பொதிய மலையிற் பிறந்து தமிழோடு பழகிய தென்றற் காற்று எ - று.

இஃது — அழிவு.

(வி - ரை) ஒரு செயப்படு பொருளே காரகமாயும், அதுவே ஏதுவாயும் நிற்பின், அது பொருட்காரக ஏதுவாம்

இப்பாடற்கண் கூறப்பட்ட செயப்படு பொருள் மாருதமாகும். அதுவே பிரிந்திருந்தோரின் மனத்தோடு உயிரையும் வாட்டுகின்றது எனக் காரகமாயும்; கைகலத்தல், மருவல் தோய்தல் ஆகிய காரணங்களாலே உயிரை வாட்டிற்று எனக் கூறுதலின் ஏதுவாயும் நிற்றலின், இது பொருட்காரக ஏதுவாயிற்று. காற்று உயிரை வாட்டுகின்றது என்பதால் இது அழிவாயிற்று.

மலயம் தந்த மாருதம் என்பது மலயத்தால் தரப்பட்ட மாருதம் எனப் பொருள்படுதலின், மாருதம் என்பது செயப்படுபொருளாயிற்று. இங்ஙனம் பொருள்கொள்ளாக்கால் கருத்தா காரக ஏதுவிற்கும், இதற்கும் வேற்றுமையின்றாம்.

(ங) கரும காரகவேது

எ - டு: 'மலையின் அலைகடலின் வாளரவின் வெய்ய
தலையிற் பயின்ற தவத்தால் — தலைமைசேர்
அம்மாதர் புல்லும் அபயன் புயம்புணர
எம்மா தவம்புரிந்தோம் யாம்'

1. சில பிரதிகளில் இதனையும் கருத்தா காரக ஏதுவிற்கே எடுத்துக்காட்டாகக் காட்டப்பட்டுள்ளன. சுன்னாகம், திரு. குமாரசாமிப் புலவரும் இக்கருத்தினரே.

இ - ள் : மலையில் தவம் புரிந்தோள் - சயமடந்தை. அலை கடலில் தவம் புரிந்தோள் - சீதேவி. வாளரவின் வெய்ய தலையில் நின்று தவம் புரிந்தோள் - பூமிதேவி. இப்படிப் பெரிய தவம் புரிதலாலே அவர்களால் தழுவப்பட்ட அபயனுடைய புயத்தை யாம் தழுவுதற்கு எத்தவம் புரிந்தேம்? எ - று.

(வி - ரை) ஒரு கருமமே காரகமாகவும், அதுவே ஏதுவாயும் நிற்பின் அது கருமகாரக ஏதுவாம்.

இப்பாடற்கண் கூறப்படும் கருமம் தவமாகும். அதுவே அபயன் புயத்தைப் புணர்வித்தது எனக்காரகமாயும், அங்ஙனம் புணர்தற்கு ஏதுவாதல் பற்றி ஏதுவாயும் நின்றலின், இது கருமகாரக ஏதுவாயிற்று.

(ச) கருவி காரகவேது

எ - டு : 'கரடத்தான் மாரியும் கண்ணால் வெயிலும்
நிரைவயிரக் கோட்டால் நிலவும் — சொரியுமால்
நீளார்த் தொடையதுல னேரார் கலிங்கத்து
வாளாற் கவர்ந்த வளம்'

இ - ள் : மதத்தால் மழையையும், கண்ணின் கடுமையால் வெயிலையும், கோட்டின் வெண்மையால் நிலவையும் கொடா நின்றது; நெடிய ஆர்த்தாரையுடைய ஒப்பில்லாதானாகிய சோழன் பகை கொண்ட கலிங்கருடைய தேயத்துச் சென்று வாளாலே கவர்ந்து கொண்ட வளம் எ - று.

ஈண்டு வளம் என்றது, கலிங்கனுடைய யானைத்திரள்கள் எனக்கொள்க. கரடம் - மதம்.

(வி – ரை) ஒரு கருவியே காரகமாயும், அதுவே ஏதுவாயும் நிற்பின் அது கருவிகாரக ஏதுவாம்.

இப்பாடற்கண் கூறப்பட்ட கருவிகள் கரடம், கண், கோடு என்பனவாம். இவை முறையே மாரி, வெயில், நிலவு ஆகியவற்றைத் தோற்றுவித்தது என்பதால் காரகமாயும், இவற்றை அக்கருவிகள் தோற்றுவித்தன என்பதால் அவையே ஏதுவாயும் நிற்றலின், இவை கருவிகாரக ஏதுவாயின. (௩௨)

ஞாபகவேது

நுகூ. அவையல பிறவின் அறிவது ஞாபகம்.

எ - ன், ஞாபகவேது ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ – ள் : அச்சொல்லப்பட்ட காரணமன்றிப் பிற காரனத்தினால் உய்த்துணரத் தோன்றுவது ஞாபக ஏதுவாம் எ - று.

எ - டு: 'காதலன்மேல் ஊடல் கரையிறத்தல் காட்டுமால்
மாதர் நுதல்வியர்ப்ப வாய்துடிப்ப - மீது
மருங்குவளை வின்முரிய வாளிடுக நீண்ட
கருங்குவளை சேந்த கருத்து'

காதலன் - தலைவன். மேல் - இடம். முரிதல் - வளைதல். வில் - புருவம். இடுக - சிறுக. கருங்குவளை - கண். சேத்தல் - சிவத்தல். கரை - எல்லை. இறத்தல் - இல்லாமை.

(வி - ரை) இதனால் இது விளைந்தது என்று அறிவிப்பது ஞாபக ஏதுவாம். ஞாபகம் - அறிவிப்பது.

இ - ள்: மகளிரின் நெற்றி வியர்க்கவும், வாய்துடிக்கவும், பக்கம் வளைந்த புருவங்களாகிய விற்கள் மேற்சென்று வளையவும், வாட்படையும் தோற்கும்படியான கரிய, நீண்ட, நீலமலர் போன்ற கண்கள் சிவக்கவும் உள்ள தன் கருத்து, அவர் தம்முடைய கணவன் மீதுள்ள ஊடல் மிகுதியைக் காட்டுவதாகும் என்பதாம்.

நுதல் வியர்த்தல், வாய் துடித்தல், புருவம் வளைதல், கண் சிவத்தல் ஆகிய காரணங்கள், அப் பெண்களுக்கு உள்ள ஊடல் மிகுதியை அறிவிப்பதால் ஞாபக ஏதுவாயிற்று. (நந)

அபாவவேது

சுo. அபாவந் தானும் அதன்பாற் படுமே.

எ - ன், இதுவும் அவ்வலங்காரத்தின் வேறுபாடு உணர்த்து தல் நுதலிற்று.

இ - ள்: அபாவமாவது ஒன்றனது இன்மை; அதுவும் அவ் வேதுவின் பாற்படும் எ - று. (நச)

அதன் வகை

சுக. என்றும் அபாவமும் இன்மைய தபாவமும்
ஒன்றினொன் றபாவமும் உள்ளத னபாவமும்
அழிவுபாட் டபாவமும் எனஐந் தபாவம்.

எ - ன், அபாவத்தை விரித்து உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: என்றும் அபாவம் முதல் அழிவுபாட்டு அபாவம் ஈறாச் சொல்லப்பட்ட ஐந்து பகுதியை உடையதாம் அவ் வபாவம் எ - று.

எனவே இவ்வைந்து அபாவமும் ஏதுவாகத் தோன்றுவது அபாவ ஏதுவாம் என்றவாறு.

அவற்றுள், (க) என்றும்அபாவம் என்பது எக்காலத்தும் இல்லாமை.

எ - டு: 'யாண்டு மொழிதிறம்பார் சான்றவர் எம்மருங்கும்
ஈண்டு மயில்கள் இனமினமாய் - மூண்டெழுந்த
காலையே கார்முழங்கும் என்றயரேல் காதலர்தேர்
மாலையே நம்பால் வரும்'

இ - ள்: இன்று காலையின்கண் இவ்விடத்து மயில்கள் கூட்டங்கூட்டமாய்ச் சேர்ந்தெழுந்து அகவா நின்றன; அது பற்றிக் கார் முழங்கா நிற்குமென்று வருந்தா தொழிக; அறிவால் நிறைந்தோர் எக்காலத்தும் சொன்னசொற் பிறழார், ஆதலால் அன்னராகிய நம்முடைய காதலர் தேரானது மாலையிலே நம்மிடத்தில் வரும் எ - று.

(வி - ரை) அபாவம் — இன்மை. ஒரு வினை நிகழ்ச்சிக்கு எக்காலத் தும் இல்லாத தன்மையை ஏதுவாகக் கூறி விளக்கின், 'அது என்றும் அபாவமாம்.

சான்றவர் யாண்டும் மொழி திறம்புதல் என்பது எக்காலத்தும் இல்லாத தொன்றாகும். இவ்வேதுவால் காதலர் தேர் மாலையே வரும் என்று கூறப் படுதலின் இது என்றும் அபாவமாயிற்று.

(உ) இன்மையது அபாவம் என்பது இல்லாமையினது இல் லாமை.

எ - டு : 'காரார் கொடிமுல்லை நின்குழன்மேற் கைபுனைய
வாராமை யில்லை வயவேந்தர் - போர்கடந்த
வாளையேய் கண்ணி! நுதல்மேல் வரும்பசலை
நாளையே நீங்கும் நமக்கு'

இ - ள் : கார்காலத்து ஓங்கிய கொடியையுடைய முல்லை யினது பூவினை நின்னுடைய கூந்தலின்கண் அலங்கரித்துச் சூட்ட வருகின்றார், வெற்றியையுடைய அரசர்; ஆகையால், போர்த் தொழில் முடித்த வாள்போன்ற கண்களையுடையாய்! உன் னுடைய நுதலின்மேல் உண்டாகிய பசலை விடியற்காலத்தே நீங்கும், ஆதலால் நமக்கு யாது குறை? எ - று.

பசலை - வெளுப்பு.

(வி - ரை) இல்லாமையினது இல்லாமை ஏதுவாக ஒன்றனை அறிவது இதன் இலக்கணமாகும்.

இப்பாடற்கண் 'வாராமை யில்லை' என்பது இன்மையது அபாவமாகும். வாராமை யில்லை எனவே வருதல் உண்டென்பது பெற்றாம். இதனால் பசலை நீங்கும் என்றலின், இன்மையது அபாவ ஏதுவாயிற்று.

(ந) ஒன்றினொன்று அபாவம் என்பது ஒன்றன்கண் ஒன்றனது இல்லாமை.

எ - டு : 'பொய்ம்மை யுடன்புணரார் மேலானோர் பொய்ம்மையும்
மெய்ம்மைசூழ் மேலாரை மேவாவாம் - இம்முறையாற்
பூவலர்ந்த தாரார் பிரிந்தாற் பொலங்குழையார்
காவலர்சொற் போற்றல் கடன்'

இ - ள் : உலகத்து மேலான அறிவையுடையார் பொய்யோடு கூடுவாரல்லர், அப்பொய்யும் மெய்தழுவிய மேலான அறிவுடை யாரைப் பொருந்தாவாகும்; இத்தன்மையால், பொலிவு விளங் கிய மாலையையுடைய தலைவர் பிரிந்த காலத்துப் பொற் குழையையுடைய மனையறக் கிழத்தியர்க்குக் காவற்கடன் பூண்ட தலைவர் குறித்துரைத்த பருவத்தை நோக்குதல் கடனன்றோ எ - று.

இம்முறை : இத்தன்மை. பூ - பொலிவு. அலர்தல் - விளங்கல்.

(வி - ரை) ஒன்றன்கண் ஒன்று இல்லாமை ஏதுவாக வருவது இதன் இலக்கணமாகும்.

இப்பாடற்கண் பொய்ம்மை என்ற ஒன்றன்கண் மேலானோர் புணரார் என்பதும், மேலார் எனப்படுவாரிடத்துப் பொய்ம்மை மேவாது என்பதும் ஒன்றின் ஒன்று அபாவமாகும். இதனை ஏதுவாகக்கொண்டு, தோழி தலைவர்

பிரிந்திருப்பின் அவர் கூறியவாறு வந்துவிடுவார் என்னும் சொல்லைப் பாது காத்துக்கொண்டு இருத்தலே தக்கது என வலியுறுத்தலின் இது ஒன்றி ஞென்றபாவ மாயிற்று.

(ச) **உள்ளதன் அபாவம்** என்பது ஓரிடத்தும் ஒருகாலத்தும் உள்ள பொருள், பிறிதோரிடத்தும் பிறிதொரு காலத்தும் இல்லாமை.

எ - டு : 'கரவொடு நின்ருர் கடிமனையிற் கையேற்(று)
இரவொடு நிற்பித்த தெம்மை - அரவொடு
மோட்டாமை பூண்ட முதல்வனை முன்வணங்க
மாட்டாமை பூண்ட மனம்'

இ - ள் : இரப்போர்க்குப் பயந்து காவல் கொண்டிருப்பவ ருடைய வீட்டிற்போய் எங்களைக் கையேற்று இரந்து நிற்கும்படி செய்தது, பாம்பையும் பெரிய ஆமையோட்டையும் அணியாகக் கொண்ட பரமசிவனை முற்பிறப்பில் வணங்கமாட்டாமையைக் கொண்ட மனம் எ - று.

மோட்டாமை - பெரிய ஆமை. மாட்டாமை பூண்ட - மாட்டாமையைத் தொடங்கின.

(வி - ரை) இப்பாடற்கண் கூறப்பட்ட பொருள் மனம் ஆகும். இப் பிறவியில், கரவினையுடைய பொருளாளரிடத்துச் சென்று வணங்கும் வணக்கம் 'உள்ளது' என்பதாகும். இவர்களிடத்து வணங்கும் உள்ளம் முற்பிறவியில் இறைவனிடத்துச் சென்று வணங்காததாயிற்று என்பது அதன் அபாவமாகும். இங்ஙனம் இப்பொழுது இரக்க நேர்ந்தமைக்குக் காரணம் இறைவனை முன்பு வணங்காமையே என்பதால் ஏதுவாயிற்று.

ஓரிடம் — காப்பவரிடம். ஒரு காலம் — இப்பிறப்பு. உள்ள பொருள் — வணங்கும் உள்ளம். பிறிதோரிடத்து — இறைவனிடத்து. பிறிதொரு காலம்— முற்பிறவி. இல்லாமை - வணங்காமை.

(ரு) **அழிவுபாட்டு அபாவம்** என்பது முன்பு உள்ளது அழிவு பட்டு இலதாதல்.

எ - டு : 'கழிந்த(து) இளமை களிமயக்கந் தீர்ந்த(து)
ஒழிந்தது காதல்மேல் ஊக்கம் - சுழிந்து
கருநெறியுங் கூந்தலார் காதல்நோய் தீர்ந்த(து)
ஒருநெறியே சேர்ந்த(து) உளம்'

இ - ள் : முதுமைப் பருவம் வந்தது; செல்வத்தினுல் வரும் மனக்களிப்பாகிய அறியாமையும் நீங்கிற்று; காதலிக்கப்பட்ட பொருள்களைத் தலைப்படவேண்டி எழாநின்ற ஊக்கமும் ஒழிந் தது; சுருண்டு நெறிப்பையுடைய கரிய கூந்தலார்மேல் வைத்த ஆசையாகிய நோயும் தீர்ந்தது; ஒருதன்மைத்தாய சித்தியைச் சேர்ந்தது என் உள்ளம் எ - று.

(வி - ரை) இப்பாடற்கண் இளமை, மயக்கம், ஊக்கம், காதல் என்பன முன்பு இருந்து அழிந்தன என்பதால் அழிவுபாட்டபாவ மாயிற்று. இவற்ருல் மனம் ஒரு நெறிப்பட்டது என்பதால் அவை ஏதுவாயிற்று. (௬௫)

சித்திரவேது

கூஉ. தூர காரியமும் ஒருங்குடன் தோற்றமும்
காரண முந்துறூஉங் காரிய நிலையும்
[1]யுத்தமும் அயுத்தமும் முத்தையோ டியலும்.

எ - ன், இதுவும் அவ்வேது அலங்காரத்தினையே பிறிதொரு வகையால் வகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: தூரகாரியம் முதல் அயுத்தம் ஈறுகச் சொல்லப் பட்ட இவ்வைந்தும் முன்னைய ஏது அலங்காரத்தோடு நடக்கும் எ - று.

'முந்தை' என்பது 'முத்தை' என வலிந்து நின்றது.

(வி - ரை) சித்திர ஏது — ஆச்சரியத்தைத் தாத்தக்க ஏது.

அவற்றுள், (க) தூரகாரியவேது என்பது ஒருவழிக் காரணம் நிகழப், பிறிதொருவழிக் காரியம் நிகழ்வது.

எ - டு: 'வேறொரு மாதர்மேல் வேந்தன் நகநுதியால்
ஊறுதர இம்மா(து) உயிர்வாடும் — வேறே
இருவரே மெய்வடிவில் ஏந்திழை நல்லார்
ஒருவரே தம்மில் உயிர்'

இ - ள்: தலைமகளாயினுள் தன்னை யொழித்து ஒரு காதலி மார்பகத்தே வேந்தன் நகத்தின் நுனியினுற் குறியிட, அதுகண்டு அழுது வருந்துவாள்; ஆதலால், இவ்வேந்திழை நல்லார் உருவத் தால் இருவர் எனினும், உயிரானது இவர்கட்கு ஒன்றே போலும் எ - று.

ஒருமாது - தலைவி. வேறொரு மாது - பரத்தை. 'இருவரே ஏந்திழை நல்லார்' என்றது தலைமகளையும், பரத்தையையும்.

(வி - ரை) 'தென்னை மரத்தில் தேள் கொட்ட, பனைமரத்தில் நெறி யேறியது போல' என்பது வழக்கில் கூறப்படும் பழமொழியாகும். இவ்வேது அதைப் போன்றதாகும்.

பரத்தையின் மார்பைத் தன் நகத்தின் நுனியால் தலைவன் வருட, அதனுல் தலைவி வருந்தினள் என்பது இங்குக் கூறப்படும் பொருளாகும். நகத் தாள் ஊறுபட்டவள் பரத்தை; எனவே அவளே அதற்கு (அச்சிறு புண்ணிற்கு) வருந்த வேண்டும். அங்ஙனமாகத் தலைவி வருந்தினுள் என்றலின், இது தூர காரிய நிகழ்ச்சி யாயிற்று. தலைவன் கை நகம் பரத்தையின் மாட்டுப் பட்டதால் தலைவி வருந்தினள் என்பதால் இது ஏதுவாயிற்று.

தலைவனுடைய பரத்தைமையையும், தலைவியினுடைய ஊடலையும் நாகரிகமாக இப்பாடல் விளக்குகின்றது.

(உ) ஒருங்குடன்தோற்றவேது என்பது காரணமும் காரிய மும் ஒக்க நிகழ்வது.

எ - டு: 'விரிந்த மதிநிலவின் மேம்பாடும் வேட்கை
புரிந்த சிலைமதவேள் போரும் - பிரிந்தோர்
நிறைதளர்வும் ஒக்க நிகழ்ந்தனவால் ஆவி
பொறைதளரும் புன்மாலைப் போழ்து'

1. 'யுக்தமும் அயுக்தமும்' என்பதும் பாடம்.

இ - ள் : முழுமதியினது நிலவின் மேம்பாடும், வேட்கை மிகுந்த சிலையையுடையவனாகிய மதவேள் போரும், பிரிந்தோர் நிறைதளர்வும் ஒருங்கு நிகழ்ந்தன; ஆதலால், தனித்தோர் உயிராகிய பாரத்தைத் தாங்கமாட்டாத தன்மையையும், புன்கண்மையையும் உடைத்து இம்மாலைப் பொழுது எ - று.

இவை யனைத்தும் மாலைப் பொழுதில் நிகழ்ந்தன என்க.

(வி - ரை) இப்பாடற்கண் பிரிந்தோர் நிறை தளர்தற்குக் காரணமாகக் கூறப்பட்டன இரண்டு. (க) நிலவு. (உ) மன்மதன். இவ்விரு காரணங்களோடு பிரிந்தோர்க்கு நிறை தளர்வும் ஒருங்கு ஏற்பட்டது என்றதால் இது ஒருங்குடன் தோற்றமாயிற்று. நிலவாலும், மன்மதனாலும் நிறை தளர்வு ஏற்பட்டது என்பதால் ஏதுவாயிற்று.

(ந) [1]**காரணமுந்துறூஉங் காரியநிலைஏது** என்பது காரணத்திற்கு முன்னர்க் காரியம் நிகழ்வது.

எ - டு : 'தம்புரவு பூண்டோர் பிரியத் தனியிருந்த
வம்புலவு கோதையர்க்கு மாரவேள் - அம்பு
[2]பொருமென்று மெல்லாகம் புண்கூர்ந்த மாலை
[3]வருமென்(று) இருண்ட மனம்'

இ - ள் : தம்மைக் காக்குந் தொழிலைப் பூண்ட தலைவர் பிரியத் தனித்து உயிர்கொண்டிருந்த வாசனை பொருந்திய கோதையையுடைய மடவாருக்கு, மாரன்கணை தைக்குமென்று மென்மையையுடைய மார்பகம் புண்ணாகா நின்றது; அதுவேயுமன்றி, மாலைப்பொழுது வருமென்று அவர்களுடைய மனம் இருண்டது எ - று.

(வி - ரை) இப்பாடற்கண் காரண முந்துறூஉங் காரியமாகக் கூறப்படுவன இரண்டு (க) ஆகம்புண் கூர்தல். (உ) மனம் இருளல். அம்பு தைத்தலாகிய காரணம் நிகழ்ந்த பின்னரே ஆகம் புண் கூர்தல் வேண்டும். மாலை வருதலாகிய காரணம் நிகழ்ந்த பின்னரே மனம் இருள வேண்டும். இங்கு அங்ஙனமின்றி அவ்வக் காரணங்கள் நிகழும் முன்னரே காரியம் நிகழ்ந்தன என்றலின், இவ்விரு நிகழ்ச்சிகளும் காரண முந்துறூஉம் காரியநிலை யாயின.

(ச) **யுத்தவேது** என்பது காரணத்திற்கேற்ற காரியம் நிகழ்வது.

எ - டு: 'பொன்னி வளநாடன் கைவேல் பொழிநிலவால்
முன்னர் அசைந்து முகுளிக்கும் — தன்னேர்
பொரவந்த வேந்தர் புனைகடகச் செங்கை
அரவிந்த நூறு யிரம்'

இ - ள்: சோழன் ஏந்திய வேலின்கண் உண்டாகியவெண்மை விளக்கம் பரந்த நிலவினால் முன்னே நடுங்கி மொட்டாகாநிற்கும், நேர்நின்று பொருதற்கு எதிர்ந்த வேந்தருடைய புனையப்பட்ட கடகத்தையுடைய சிவந்த கையாகிய தாமரைகள் பலவும் உண்டு எ - று.

---

1. 'காரிய முந்துறூஉங் காரணநிலை ஏது' என்பதும் பாடம்.
2. 'பொருமுன்னே' என்பதும், 3. 'வருமுன்' என்பதும் பாடங்களாகும்.

(வி - ரை) யுத்தம் - பொருத்தம்; காரணத்திற்குப் பொருத்தமான காரியம் நிகழ்வது. யுக்தம் என்பது யுத்தம் என்றாயிற்று.

இப்பாடற்கண் சோழனின் கைவேலிலிருந்து வரும் ஒளியாகிய நிலவினைக் கண்டு பகையரசர்களுடைய கைகளாகிய தாமரை குவியும் என்றதால் யுத்த ஏதுவாயிற்று. சந்திரனைக்கண்டு தாமரை குவிதல் இயல்பாதலின், இது காரணத்திற்கேற்ற காரிய மாயிற்று.

(௫) அயுத்தவேது என்பது காரணத்திற்கு ஏலாத காரியம் நிகழ்வது.

எ - டு: 'இகல்மதமால் யானை அனபாயன் எங்கோன்
முகமதியின் மூரல் நிலவால் — நகமலர்வ
செங்கயற்கண் நல்லார் திருமருவு வாள்வதன
பங்கயங்கள் சாலப் பல'

இ - ள்: வெற்றியையும், மதத்தையும் உடைய உயர்ந்த யானைகளையுடைய அனபாயனாகிய எம் அரசனுடைய முகமாகிய நிறைமதியின்கண் உண்டாகிய முறுவலின் வெண்ணிலவினால், செவ்வரியை யுடைய கயல்போன்ற கண்ணினையுடைய நல்லாருடைய திருமருவு வாண்முகமாகிய தாமரைகள் பல விளங்க மலர்கின்றன எ - று.

(வி - ரை) அயுத்தம் - பொருத்தம் இல்லாதது; காரணத்திற்குப் பொருந்தாத காரியம் நிகழ்வது.

சோழனின் முகமாகிய மதியத்தின் ஒளியால், பெண்களின் முகமாகிய தாமரைகள் மலர்கின்றன என்பதால் அயுத்த ஏதுவாயிற்று. நிலவினைக் கண்டு தாமரை குவிதல் பொருத்தமே யன்றி மலர்தல் பொருத்தமில்லை. ஆதலின் இது காரணத்திற்கு ஏலாத காரிய மாயிற்று.

'முடியும்' என்னுது 'இயலும்' என்றதனுன், பிறவாற்றான் வருவனவுங் கொள்க.

ஐயவேது

எ - டு: 'மாதர் உமைவாய் மழலை மொழியாலோ
ஓது மறையின் ஒலியாலோ - யாதாலோ
கோலம் இருதிறனுக் கொண்டான் திருமிடற்றின்
ஆலம் அமிர்தான வாறு'

இ - ள்: உமையாளுடைய வாயிலுள்ள அழகிய மழலைச் சொல்லாகிய அமிர்தத்தைச் செவியாற் பருகிய அதனாலோ, அன்றியே தானோதப்பட்ட வேத மந்திர ஓசைத் தழைப்பினாலோ, இவ்விரண்டனுள்ளும் எதனாலோ? இரண்டு வடிவமாகத் திருமேனியைக் கொண்ட பரமசிவனுடைய சிறந்த மிடற்றிலுள்ள நஞ்சம் அமிருதமாயவாறு; தெரியாது எ - று.

ஒலி - தழைப்பு. இருதிறம் - உருவமும், அருவமும். இது ஐயவேது. பிறவும் வந்தவழிக் கண்டு கொள்க.

(வி - ரை) இப்பாடற்கண் இறைவன் திருமிடற்றிலுள்ள ஆலம் அமிர்தமானதற்குக் காரணம், உமையின் மழலை மொழியோ, அல்லது மறையின் ஒலியோ, அன்றி யாதாலோ என ஐயுற்றவாறும், அவ்வகையான் அவை ஏதுவாயினவாறும் காண்க. (௫௬)

௧௪. நுட்பவணி

**௬௩. தெரிபுவேறு கிளவாது குறிப்பினும் தொழிலினும்
அரிதுணர் வினைத்திறம் நுட்ப மாகும்.**

எ - ன், நிறுத்த முறையானே நுட்பம் என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: தெரிந்து கொண்டு வேறுபட மொழியாது குறிப்பினுனுதல், தொழிலினுனுதல் அரிதாக நோக்கி உணருந் தன்மையை யுடையது நுட்பம் என்னும் அலங்காரமாம் எ - று.

அவற்றுள், (க) குறிப்பு நுட்பம்

எ - டு: *'காதலன் மெல்லுயிர்க்குக் காவல் புரிந்ததால்
பேதையர் ஆயம் பிரியாத - மாதர்
படரிருள்கால் சீக்கும் பகலவனை நோக்கிக்
குட திசையை நோக்குங் குறிப்பு'*

இ - ள்: காதலிக்கப்பட்ட தலைவனுடைய மெல்லுயிர்க்குப் பரிகாரஞ் செய்தது போலும், மடப்பத்தையுடைய ஆயத்தார் பிரியாது சூழப்பட்ட மாதர், உலகிற்குப் படர் செய்யும் இருளினது அடியை அறுக்கின்ற ஞாயிற்றினைப் பார்த்து மேற்றிசையைப் பார்க்கும் உள்ளக்கருத்து எ - று.

குடதிசை - மேற்கு. இதில் போந்த பொருள், மாலைக் காலத்துக் கூட்டம் நேர்ந்தவாறு.

(வி - ரை) இதன்கண் தலைவி குடதிசையை நோக்கிய குறிப்பானது தலைவனின் உயிர்க்குக் காவலாயிற்று என்னும் குறிப்பால், தலைவி இரவுக் குறிக்கு உடன்பட்டாள் என்னும் கருத்து நுட்பமாகப் பெறப்படுதலின், இது குறிப்பு நுட்பமாயிற்று.

(உ) தொழில் நுட்பம்

எ - டு: *'பாடல் பயிலும் பணிமொழி தன்பணைத்தோள்
கூடல் அவாவாற் குறிப்புணர்த்தும் - ஆடவற்கு
மென்தீந் தொடையாழின் மெல்லவே தைவந்தாள்
இன்தீங் குறிஞ்சி யிசை'*

இ - ள்: பாடுந் தொழிலைப் பயிலும் குளிர்ந்த மொழியாள் தனது பணைத்தோளினால் தலைவனைத் தழுவ வேண்டும் என்னும் ஆசையினாலே தலைவற்குத் தன் உள்ளக் கருத்தை அறிவியா நின்றாள், மெல்லிய இனிய நரம்பையுடைய யாழிலே முறையாக ஆக்கினாள், தித்தித்த ஓசையை யுடைய குறிஞ்சியாகிய பண்ணை எ - று.

தொடை - நரம்பு. குறிப்பு - கருத்து. குறிஞ்சிக்குக் காலம் இடையாமம் ஆதலால், இடையாமத்திற் கூட்டம் நேர்ந்தவாறு.

(வி - ரை) இதன்கண் தலைவி குறிஞ்சிப் பண்ணைப் பாடுதலாகிய தொழிலால், தனக்குள்ள புணர்தல் விருப்பத்தை நுட்பமாகத் தலைவனுக்கு அறிய வைத்தலின், இது தொழில் நுட்பமாயிற்று.

குறிஞ்சிக்குப் புணர்தல் உரிப்பொருளாதலும், அதற்குரிய சிறுபொழுது அவ்வொழுக்கத்திற்கேற்ற இடையாம மாதலும் அறிக. (௬௭)

கரு. இலேசவணி

**கூச. குறிப்பு வெளிப்படுக்கும் சத்துவம் பிறிதின்
மறைத்துரை யாடல் இலேச மாகும்.**

எ - ன், நிறுத்த முறையானே இலேசம் என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: கருதியது வெளிப்படுக்குஞ் சத்துவமாகிய குணங்களைப் பிறிதொன்றால் நிகழ்ந்தனவாக மறைத்துச் சொல்லுவது, இலேசம் என்னும் அலங்காரமாம் எ - று.

சத்துவம் என்பன - வெண்பளிங்கிற் செந்நூல் கோத்தால் அதன் செம்மை புறம்பே தோன்றுமாறு போல, உள்ளங் கருதியது புலனாக்கும் குணங்கள்; அவை: சொற்றளர்வு, மெய் வியர்ப்பு, கண்ணீர் நிகழ்ச்சி, மெய் விதிர்ப்பு, மெய்வெதும்பல், மெய்ம்மயிர் அரும்பல் முதலியன.

எ - டு: 'கல்லுயர்தோட் கிள்ளி பரிதொழுது கண்பனிசோர்
மெல்லியலார் தோழியர்முன் வேறொன்று - சொல்லுவரால்
பொங்கும் படைபரப்ப மீதெழுந்த பூந்துகள்சேர்(ந்து)
எங்கண் கலுழ்ந்தனவால் என்று'

இ - ள்: மலை போன்ற பெரிய தோள்களையுடைய சோழன் ஏறிய குதிரையைத் தொழுது நீர்வார்ந்த கண்ணையுடைய மெத்தென்ற நடையையுடைய நல்லார், 'எமது கண்ணீர் வார்தற்குக் காரணம், சினத்தை யுடைய சேனை பரந்து வருதலால் ஆகாயத்தில் எழுந்த பொலிவுடைய தூளியானது உட்புக்குக் கண்ணீர் வார்ந்தது' என்று தோழியர்க்கு நிகழ்ந்தது ஒழிய வேறோர் உபாயத்தான் மறைத்துச் சொல்லினர் எ - று.

கல் - மலை.

(வி - ரை) இப்பாடற்கண் குதிரைமீது சோழன் உலா வருதலைக் கண்ட பெண்கள், அவன் அழகைக் கண்டு காமுற்றதால் ஏற்பட்ட கண்ணீரை, அங்கெழுந்த புழுதியால் ஏற்பட்டது எனப் பிறிதின் மறுத்துரையாடியிருத்தலின், இது இலேசவணி யாயிற்று.

எ - டு: 'மதுப்பொழிதார் மன்னவனை மால்கரிமேற் கண்ட
விதிர்ப்பு மயிரரும்பு மெய்யும் - புதைத்தாள்
வளவா ரணநெடுங்கை வண்திவலை தோய்ந்த
இளவாடை கூர்ந்த தெனா'

என்பதும் அது.

இ - ள்: தேன்பொழி தாரையுடைய சோழனை உயர்ந்த களிற்றின்மேல் வரக்கண்டு அதனால் உண்டாகிய தன்னுடைய மேனி நடுக்கத்தையும், மெய்ம்மயிர் அரும்புதலையும், 'அவன் ஏறிவந்த வளப்பமுடைய களிற்றின் நெடிய கையிலுண்டாகிய வளவிய நீர்த்திவலையைக் கொண்டுவந்த இளவாடை என் மேனியை நனைத்ததனாலே வந்தது என் மேனி நடுக்கமும் மயிர் அரும்புதலும்' என நிகழ்ந்தது மறைத்து வேறொன்று தோழியர்க்குச் சொல்லினள் எ - று.

புதைத்தல - மறைத்தல். மால்கரி - பெரிய யானை. புதைத்தாள் - மறைத்துச் சொன்னாள்.

(வி - ரை) இப்பாடற்கண் சோழனைக் கண்ட ஆசையால் உண்டாகிய நடுக்கத்தையும், மயிர் சிலிர்த்தலையும், இளவாடையால் நேர்ந்ததெனப் பிறிதின் மறுத்துரையாடி யிருத்தலின், இது இலேசவணி யாயிற்று. (௬அ)

அதன்வகை

௬ரு. புகழ்வது போலப் பழித்திறம் புனைதலும்
பழிப்பது போலப் புகழ்புலப் படுத்தலும்
அவையும் அன்னதென்(று) அறைகுநர் உளரே.

எ - ன், அவ்விலேசத்தின் பாற்படுத்துப் பிறர் வேண்டுவன சில அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: ஒன்றனைப் புகழ்ந்தாற்போலப் பழித்து உரைத்தலும், பழித்தாற் போலப் புகழ்ந்து உரைத்தலும் என்னும் இரண்டும் அவ்விலேசத்தின் பாற்படும் என்று உரைப்பாரும் உளர் ஒருசார் தொல்லாசிரியர் எ - று.

அவற்றுள், (க) புகழ்வதுபோலப் பழித்தல்

எ - டு: 'மேய கலவி விளைபொழுது நம்மெல்லென்
சாயல் தளராமல் தாங்குமால் - சேயிழாய்!
போர்வேட்ட மேன்மைப் புகழாளன் யாம் விரும்பித்
தார்வேட்ட தோள்விடலை தான்'

இ - ள்: தேர் மீ! கேட்பாயாக! எம்மிற் பொருந்திய கலவி நிகழும்போது அக்கலவிக்கண் நமது மென்மை குன்றாதபடி பரிகரித் தொழுகுவான்; எப்பொழுதும் போர்த்தொழிலை விரும்பிய மேலாய புகழையுடையவன், யாம் முற்காலத்துக் காதலித்து மாலையிட்ட தோளையுடைய தலைவன் எ - று.

அக்காலத்து அறிவு அழியாமையால், பழிப்பாயிற்று.

(வி – ரை) ஒன்றனையே புகழ்வது போலப் பழிப்பது இதன் இலக்கணமாகும்.

இப்பாடற்கண் தலைவி, புணருங்காலத்துத் தன் தலைவன் தன் மென்மை கெடாமல் பாதுகாக்கின்றான் எனப் புகழ்வது போலக்கூறி, அக்காலத்துத் தன் மென்மை கெடத் தலைவன் கூட வேண்டியிருக்க, அங்ஙனம் கூடும் தன்மை அறியாதிருக்கின்றான் எனப் பழித்துக்கூறலின், இது புகழ்வது போலப் பழித்தலாயிற்று.

(உ) பழிப்பதுபோலப் புகழ்தல்

எ - டு: 'ஆடல் மயிலியலி அன்பன் அணியாகம்
கூடுங்கால் மெல்லென் குறிப்பறியான் - ஊடல்
இளிவந்த செய்கை இரவாளன் யார்க்கும்
விளிவந்த வேட்கை யிலன்'

இ - ள்: ஆடாநின்ற மயில்போலுஞ் சாயலினை யுடையாய்! நம்மீது அன்பு வைத்த தலைவனுடைய அலங்கரித்த மார்பகத்தை யாம் கூடுங்கால், நம் மெல்லென்ற நலம் பாராட்ட அறியான் ஆதலானும், ஊடற்கண் தனக்குத் தகாதன செய்து இரக்கும்

இரவாளன் ஆதலானும், யாவர்க்கும் வெறுக்கத்தக்க ஆசைப்பாடு உடையனல்லன் ஆதலானும், இகழ்தற்கு ஏதுவாயினன் எ - று.

அன்பன், இரவாளன், வேட்கையிலன் எனக் கூட்டுக. அக்காலத்து அறிவு அழிந்தமையாற் புகழாயிற்று.

(வி - ரை) இப்பாடற்கண் தலைவி, புணருங்காலத்துத் தன் தலைவன் தன் மென்மை கெடக் கூடுகின்றான் எனப்பழிப்பது போலக்கூறி, அக்காலத்து அங்ஙனம் கூடுவதே இயல்பாதல் தோன்றப் புகழ்ந்து கூறலின் இது பழிப்பது போலப் புகழ்தலாயிற்று. (ருக)

கக. நிரல்நிறையணி

கூகூ. நிரல்நிறுத் தியற்றுதல் நிரல்நிறை யணியே

எ - ன், நிறுத்தமுறையானே நிரல்நிறை என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: சொல்லையும் பொருளையும் நிரலே நிறுத்தி நேரே பொருள் கொள்வது, நிரல்நிறை என்னும் அலங்காரமாம் எ - று.

'நிரல் நிறுத்துதல்' என்றது 'இயற்றுதல்' என்றமையின், மொழிமாற்றிப் பொருள் கொள்வதூஉங் கொள்க.

அவற்றுள், (க) நிரலே நிறுத்தி நேரே பொருள் கொள்வது

எ - டு: 'காரிகை மென்மொழியால் நோக்கால் கதிர்முலையால்
வார்புருவத் தால்இடையால் [1]வாய்த்தளிரால் - நேர்தொலைந்த
கொல்லி வடிநெடுவேற் கோங்கரும்பு விற்கரும்பு
வல்லி [2]கவிர்மென் மலர்'

நேர் - முறை. தொலைதல் - கெடுதல். கொல்லி - ஓர்பண். 'தொலைந்தது' என்பது 'தொலைந்த' என ஈறு கெட்டது.

(வி - ரை) இ - ள்: அழகு பொருந்திய பெண்ணின் மென்மையான சொல்லாலும், நோக்காலும், ஒளி பொருந்திய கொங்கைகளாலும், நீண்ட புருவத்தாலும், இடையாலும், தளிரனைய கையாலும், கொல்லி என்னும் இனிய பண்ணும், கூர்மை பொருந்திய நீண்ட வேலும், கோங்கினது அரும்பும், மன்மதனின் வில்லாகிய கரும்பும், பூங்கொடியும், மென்மையான முருக்க மலரும் அழகு இழந்தன என்பதாம்.

இதன்கண் சொல்லால் பண்ணும், நோக்கால் வேலும், கொங்கையால் கோங்கரும்பும், புருவத்தால் கரும்பும், இடையால் வல்லியும், வாயால் முருக்க மலரும் நேர் தொலைந்த என நிரல்நிறையாக்கிப் பொருள்கோடலின், இது நிரல்நிறை யாயிற்று.

(உ) நிரலே நிறுத்தி மொழிமாற்றிப் பொருள்கொள்வது

எ - டு: "'ஆடவர்கள் எவ்வா(று) அகன்றொழிவார் வெஃகாவும்
பாடகமும் ஊரகமும் பஞ்சரமா - நீடியமால்
நின்றான் இருந்தான் கிடந்தான் இதுவன்றோ
மன்றார் மதிற்கச்சி மாண்பு'

1. 'வையகத்து' என்பதும், 2. 'தனியேன் மனத்து' என்பதும் பாடங்களாகும்.

பஞ்சரம் - இடம். அகன்றொழிவார் - விட்டு நீங்குவார்.

(வி - ரை) இ - ள்: நெடிய திருவுருவத்தை யுடைய திருமால் வெஃகா, பாடகம், ஊரகம் ஆகிய இடங்களைத் தனக்கு இடமாகக் கொண்டு, அவற்றில் முறையே கிடந்தான், இருந்தான், நின்றான்; மன்றுகள் பல நிறைந்ததும், மதில் சூழ்ந்ததும் ஆன காஞ்சீபுரத்தின் பெருமை இதுவன்றோ? இத்தகைய சிறப்பு மிக்க காஞ்சிப்பதியை மனிதர்கள் எங்ஙனம் விட்டு நீங்குவர்? என்பதாம்.

இப்பாடற்கண் இரண்டாம் வரியில் வெஃகா, பாடகம், ஊரகம் என நிறுத்தியதற்கேற்ப, மூன்றாம் வரியில் உள்ள சொற்களைக் கிடந்தான், இருந்தான், நின்றான் என மாற்றிப் பொருள் கோடலின், இது நிரலே நிறுத்தி மொழிமாற்றிப் பொருள் கொள்வதாயிற்று. (௬0)

கஎ. ஆர்வமொழியணி

௬எ. ஆர்வ மொழிமிகுப்ப(து) ஆர்வ மொழியே.

எ - ன், நிறுத்த முறையானே ஆர்வமொழி என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: உண்ணிகழ்ந்த ஆர்வம்பற்றி நிகழும் மொழி மிகத் தோன்றச் சொல்லுவது, ஆர்வமொழி என்னும் அலங்காரமாம் எ - று.

'உண்ணிகழ்ந்த' என்பது மேல்வரும் அதிகாரத்தால் கொள்ளப்பட்டது.

எ - டு: 'சொல்ல மொழிதளர்ந்து சோருந் துணைமலர்த்தோள்
புல்ல விருதோள் புடைபெயரா - மெல்ல
நினைவோ மெனில்நெஞ் சிடம்போதா தெம்பால்
வினைதாராய் வந்ததற்கு மாறு'

இ - ள்: நின் முன்னின்று மறுமொழி தர முயல்வேமாயின், எங்கள் மொழியானது தடுமாறிச் சோர்வுபடா நின்றது; நின் இணைமலர்த் தோள்களைத் தழுவ முயல்வேமாயின், எங்கள் இரண்டு தோள்களும் இடமுண்டாக வளர்வன அல்ல; மெல்ல நின் புகழை நினைப்போமாயின், எங்கள் உள்ளம் இடம் போதாது; அலங்கரிக்கப்பட்ட மாலையையுடையானே! எம்மிடத்து நீ வந்த இதற்குக் கைம்மாறு யாதென்று சொல்லப்படும்? எ - று.

மாறு - ஈடு.

(வி - ரை) இது தான் கூறியவாறு பொய்யாது குறிநேர்ந்த தலைவனிடத்துத் தலைவி கூறியதாகும்.

இப்பாடற்கண் தலைவி தலைவன்மாட்டுள்ள ஆர்வ மிகுதியால், தன் மொழி சோரும், தோள் புடைபெயரும், நெஞ்சு இடம் போதாது எனக் கூறுதலின் இது ஆர்வமொழி யாயிற்று. (௬க)

கஅ. சுவையணி

**௬அ. உண்ணிகழ் தன்மை புறத்துத் தோன்ற
எண்வகை மெய்ப்பாட்டின் இயல்வது சுவையே.**

எ - ன், நிறுத்த முறையானே சுவை என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: உண்ணிகழுந் தன்மை புறத்துப் புலனாய் விளங்க, எட்டு வகைப்பட்ட மெய்ப்பாட்டானும் நடப்பது, சுவை என்னும் அலங்காரமாம் எ - று.

'மெய்ப்பாட்டின் இயல்வது சுவை' என்பதனைப் 'பொன்னின் இயன்ற குடம்' என்பதுபோல் கொள்க.

(வி - ரை) 'பொன்னின் இயன்ற' என்பதற்குப் பொன்னால் இயன்ற எனப் பொருள் கொள்வது போல, 'மெய்ப்பாட்டின் இயல்வது' என்பதற்கும் மெய்ப்பாட்டான் நடப்பது எனப் பொருள்கொள்ள வேண்டும் என்பது கருத்து. (சஉ)

அதன் வகை

கூகூ. அவைதாம்
வீரம் அச்சம் இழிப்பொடு வியப்பே
காமம் அவலம் உருத்திரம் நகையே.

எ - ன், அவ்வலங்காரத்தை விரித்து உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: மேற்கூறிய எண்வகைப்பட்ட மெய்ப்பாடாவன வீரமும், அச்சமும், இழிப்பும், வியப்பும், காமமும், அவலமும், உருத்திரமும், நகையுமாம் எ - று.

அவற்றுள், (க) வீரம்

எ - டு: 'சேர்ந்த புறவின் நிறைதன் திருமேனி
ஈர்ந்திட்டுயர் துலைதான் ஏறினன் - நேர்ந்த
கொடைவீர மோ?மெய்ந் நிறைகுறையா வன்கட்
படைவீர மோ?சென்னி பண்பு'

[1]இ - ள்: தன்கண் சரண்புக்க புறவினது வாரம் தனது தசையை அறுத்திட்டும், தசைநிறை போதாததற்குத் தானும் துலாத்தலை ஏறிய இது, தனது கொடையின் வெற்றியோ? மெய்யொழுக்கம் குன்றாத வன்கண்மையுடைய படையின் வெற்றியோ? என ஆராய்வார்க்கு இவையிரண்டும் அன்று; சோழன் தனது தன்மை இருந்தபடி! எ - று.

(வி - ரை) கல்வி, தறுகண், புகழ், கொடை ஆகிய நான்கும்பற்றி வீரம் பிறக்கும் என்பர் தொல்காப்பியர். இப்பாடல் கொடை வீரம்பற்றி வந்ததாகும். வாரம் - எடைக்காக.

(உ) அச்சம்

எ - டு: 'கைநெரித்து வெய்துயிர்ப்பக் கால்தளர்ந்து மெய்பனிப்ப
மையரிக்கண் நீர்ததும்ப வாய்புலர்ந்தாள் - தையல்
சினவேல் விடலையாற் கையிழந்த செங்கட்
புனவேழம் மேல்வந்த போது'

பனித்தல் - நடுங்கல். புனவேழம் - காட்டுயானை.

1. இவ்வுரை சில பிரதிகளில் இல்லை.

(வி - ரை) இ - ள்: சினம் பொருந்திய வேற்படையை யுடைய வீரனால் துதிக்கையை யிழந்த சிவந்த கண்களை யுடைய காட்டுயானை தன் முன்னே வந்தபொழுது, ஒரு பெண், தன் கைகளை நெறித்துக்கொண்டு, பெருமூச்சு எறிய, கால் தளர்ந்து, உடல் நடுங்க, மைதீட்டிய செவ்வரி பரந்த கண்களில் நீர் ததும்ப, வாய் உலர்ந்தாள் என்பதாம்.

அணங்கு, விலங்கு, கள்வர், இறை ஆகிய நான்கானும் அச்சம் பிறக்கும் என்பர் தொல்காப்பியர். இப்பாடற்கண் யானையாகிய விலங்கு காரணமாகப் பிறந்த அச்சத்தைக் கூறுதலின், இது அச்சமாயிற்று.

(ங) இழிப்பு

எ - டு: 'உடைதலையும் மூளையும் ஊன்தடியும் என்பும்
குடரும் கொழுங்குருதி யீர்ப்ப - மிடைபேய்
பெருநடஞ்செய் பெற்றித்தே கொற்றப்போர்க் கிள்ளி
கருநடரைச் சீறுங் களம்'

கொழுங்குருதி - நிணக்குருதி. பெற்றி - தன்மை. கிள்ளி - சோழன்.

(வி - ரை) இ - ள்: வெற்றியைத் தரும் போரினைச் செய்யும் சோழன் கருநாடக அரசர்களைச் சினந்து தாக்கிய போர்க்களமானது, உடைந்த தலைகளையும், மூளைகளையும், கொழுப்பையும், தசைத் திரளையும், எலும்பையும் குடலையும், செழித்த இரத்த வெள்ளம் இழுக்க, நெருங்கிய பேய்கள் பெருங் கூத்தாடும் தன்மையை உடையது என்பதாம்.

இழிப்பு — அருவருப்பு. இதனை இளிவரல் என்றும், அது மூப்பு, பிணி வருத்தம், மென்மை ஆகிய நான்கினிடமாகப் பிறக்கும் என்றும் தொல் காப்பியர் கூறுவர். இப்பாடற்கண் போர்க்களத்திலுள்ள உடைதலை, ஊன் முதலியவைகளைக் கூறுமுகத்தான் அருவருப்புச் சுவை தோன்றலின், இது இழிப்பாயிற்று.

(ச) வியப்பு

எ - டு: 'மூத்தரும்பிச் செம்பொன் முறிததைந்து பைந்துகிரின்
தொத்தலர்ந்து பல்கலனுஞ் சூழ்ந்தொளிரும் - கொத்தினதாம்
பொன்னேர் மணிகொழிக்கும் பூங்கா விரிநாடன்
தன்னேர் பொழியுந் தரு'

[1]இ - ள்: பொன்னையும், அழகிய மணிகளையும் அலைத்துக் கொடு வருகின்ற பொலிவுடைய காவிரி நாடனுக்கு உவமை யாகச் சொல்லப்பட்ட கற்பதரு, முத்தமாகிய அரும்பை அரும் பிச் சிவந்த பொன் முறியாய தளிரினாலே செறிந்து பச்சைத் துகிராகிய கொத்துக்களை உடைத்தாய்ப் பலவகைப்பட்ட ஆபரணங்களால் சூழப்பட்டு விளங்கிய பணைகளை உடைத்தாய் இருக்கும் எ - று.

தரு - கற்பதரு.

(வி - ரை) முன்னர்க் காணப்படாததொன்றைக் காணுங்கால் ஏற்படும் உள்ள மகிழ்ச்சியே வியப்பாகும். இது புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் ஆகிய நான்கும் பற்றிப் பிறக்கும் என்பர் தொல்காப்பியர். இப்பாடற்கண்

1. இவ்வுரை சில பிரதிகளில் இல்லை.

கற்பகத் தருவில் முத்தரும்புதல், செம்பொன் முறிதழைதல், பைந்துகிரின் தொத்தலர்தல், பல்கலனும் சூழ்ந்தொளிர்தல் ஆகியன இருப்பதாகக் கூறலின், இது இதுவரை காணாத புதுமைபற்றிப் பிறந்த வியப்பாயிற்று.

(ரு) காமம்

எ - டு : 'திங்கள் நுதல்வியர்க்கும் வாய்துடிக்கும் கண்சிவக்கும்
அங்கைத் தளிர்நடுங்கும் சொல்லசையும் — கொங்கை
பொருகாலும் ஊடிப் புடைபெயருங் காலும்
இருகாலும் ஒக்கும் இவர்க்கு'

திங்கள் — பிறை. அங்கை — அழகிய கை.

(வி - ரை) இ - ள் : கொங்கைகள் என் மீது அழுந்துமாறு என்னைத் தழுவிய பொழுதும், என்பால் ஊடல் கொண்டு என்னிடத்தினின்றும் நீங்கியபொழுதும் இவர்க்கு, மூன்றாம் பிறையை யொத்த நெற்றி வியர்க்கும், வாய் துடிக்கும், கண்சிவக்கும், அழகிய கைகளாகிய தளிர்கள் நடுங்கும், சொல் தடுமாறும் என்பதாம்.

காமச் சுவையைத் தொல்காப்பியர் உவகை என்ற பெயரால் குறிப்பர். இது செல்வம், அறிவு, புணர்ச்சி, விளையாட்டு ஆகிய நான்கும் பற்றிப் பிறக்கும் என்பர்.

இப்பாடல் ஒரு தலைமகன், தன் தலைவியின்மாட்டுள்ள காதற் களிப்புப் புலப்படக் கூறியதாகும். 'ஊடல், உணர்தல், புணர்தல் இவை காமம் கூடியார்ப் பெற்றபயன்' ஆதலின் இவ்விரு நிகழ்ச்சியும் காமம் பற்றியதாயிற்று.

(சா) அவலம்

எ - டு : 'கழல்சேர்ந்த தாள்விடலை காதலிமெய் தீண்டும்
அழல்சேர்ந்து தன்னெஞ் சயர்ந்தான் — குழல்சேர்ந்த
தாமந் தரியா(து) அசையுந் தளிர்மேனி
ஈமந் தரிக்குமோ வென்று'

[1]இ - ள் : வீரக்கழலைக் கோத்த காலினையுடைய விடலையானவன், தன்னுடைய மனைவியின் மெய்யை எரிக்கும் அழலைச் சேர்ந்து, தன்னுடைய நெஞ்சம் வருந்தினன், 'குழலிடத்துப் பொருந்தின மாலையைப் பொறுது தளருந் தளிர் போலும் மேனியானது ஈமத்து எரியைப் பொறுக்கவற்றோ?' என்று எ - று.

(வி - ரை) இதனைத் தொல்காப்பியர் அழுகை எனக் குறிப்பிடுவர். இது இளிவு, இழவு, அசைவு, வறுமை ஆகிய நான்கும் பற்றிப் பிறக்கும என்பர். இப்பாடல் தலைவியை இழந்த தலைவனின் அவலத்தைப் பெரிதும் விளக்குதலின், இது இழவுபற்றிய அவலமாயிற்று.

(எ) உருத்திரம்

எ - டு : 'கைபிசையா வாய்மடியா கண்சிவவா வெய்துயிரா
மெய்குலையா வேரா வெகுண்டெழுந்தான் - வெய்யபோர்த்
தார்வேய்ந்த தோளான் மகனைத் தருகென்று
போர்வேந்தன் தூதிசைத்த போது'

1. இவ்வுரை சில பிரதிகளில் இல்லை.

வேய்தல் - சூடல். தூது - தூதன். இசைத்தல் - சொல்லல்.

(வி - ரை) இ - ள்: கொடிய போரில் வாகை சூடிய தோளினை யுடைய மன்னன் ஒருவனின் மகளைத் தனக்குத் தருமாறு பகை மன்னன் ஒருவன் தூது விடுக்க, அவனைக் கண்டதும் தன் கைகளைப் பிசைந்து, வாயை மடித்துக் கண்சிவந்து வெவ்விய பெருமூச்செறிந்து உடல் நடுக்குற்று வியர்த்துச் சினந்து போர்புரியவும் ஆயத்தமானான் என்பதாம்.

இதற்கு இவ்வாறன்றி திரௌபதியைச் சபைக்கு அழைத்து வருக எனத் துரியோதனன் தூதவனை நோக்கிக் கூற, அது கேட்ட வீமன் இங்ஙனம் சினந்தான் என்றும் பொருளுரைப்பர். இதற்குத்தகப் பாடலில் யாதொரு குறிப்பும் இன்மையின், முன்னைய பொருளே சிறப்புடைத்தாம்.

இதனைத் தொல்காப்பியர் வெகுளி என்பர். இது உறுப்பறை, குடிகோள், அலை, கொலை ஆகிய நான்கும்பற்றிப் பிறக்கும் என்பர். அரசன் ஒருவன் தன் மகளைத் தகுதியற்ற அரசன் ஒருவன் கேட்க, அது பொழுது அவனுக்கு எழுந்த வெகுளியை இப்பாடல் விவரித்தலின், இது குடிகோள் பற்றிய உருத்திர மாயிற்று.

(அ) நகை

எ - டு: 'நாண்போலும் தன்மனைக்குத் தான்சேறல் இந்நின்ற
பாண்போலும் வெவ்வழலிற் பாய்வதூஉம் - காண்தோழி!
கைத்தலங் கண்ணாக் களவுகாண் பானொருவன்
பொய்த்தலைமுன் [1]னீட்டியற்றும் போந்து'

பாண் - பாணன். காண் தோழி என்றது கேட்பாயாக தோழி என்றவாறு. சேறல் - வருதல்.

(வி - ரை) இ - ள்: தோழி! இதனைக் காண்பாயாக! தன் இல்லத்திற்குத் தான் வருவதும் நம் தலைவனுக்கு நாணம் போலும். நாம் அவர் வரவை மறுப்பின், அவர் தீயிற் பாய்வர் என இப்பாணன் சொல்வதும் இடத்திற்கேற்ப இவனுரைக்கும் கற்பனை போலும். தலைமகன் நேரில் தான் வாராது இப்பாணனை வரவிட்டது, கைகளையே கண்ணாகக் கொண்டு இரவில் களவு புரிவான் ஒருவன், தான் நுழைவதற்கு முன்னே பொய்த்தலையை நீட்டுவது போலாம் என்பதாம்.

இது தலைமகனது புறத்தொழுக்கங் கண்டு வருந்திய தலைவி, அவனால் அனுப்பப்பட்ட பாணனை நினைந்து தோழியிடம் நகையாடிக் கூறியதாகும்.

இச்சுவையைத் தொல்காப்பியர் நகை என்று குறிப்பிடுவர். இது எள்ளல், இளமை, பேதைமை, மடன் ஆகிய நான்கும்பற்றிப் பிறக்கும் என்பர். இது தலைமகனையும் அவனால் அனுப்பப்பட்ட பாணனையும் ஒருங்கு எள்ளி நகையாடுதலின், இது எள்ளல் பற்றி வந்த நகையாயிற்று.

இவையெல்லாம் தம்மில் தோன்றலும், பிறரில் தோன்றலும் எனப் பலவகைப்படும்; அவையெல்லாம் கூத்த நூலிற் கூறியவாறு கண்டு கொள்க. (சரு)

---

1. 'நீட்டியது போன்று' என்பதும் பாடம்.

கக. தன்மேம்பாட்டுரையணி

எo. தான்தற் புகழ்வது தன்மேம் பாட்டுரை.

எ - ன், நிறுத்த முறையானே தன்மேம்பாட்டுரை என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: ஒருவன் தன்னைத்தானே புகழ்வது தன் மேம்பாட்டுரை என்னும் அலங்காரமாம் எ - று.

எ - டு: 'எஞ்சினா ரில்லை யெனக்கெதிரா இன்னுயிர்கொண்(டு)
அஞ்சினர் அஞ்சாது போயகல்க - வெஞ்சமத்துப்
போரா தவராகத் தன்றிப் பிறர்முதுகிற்
சாராவென் கையிற் சரம்'

இதனாற் போந்த பொருள், எனக்கு எதிராய் முன்நின்று பொருது பிழைத்தார் இல்லை என்றவாறு.

(வி - ரை) இ - ள்: கொடிய போரில் எனக்கு எதிராக வந்து முன்னின்று பொருது, தமது இனிய உயிரைத் தப்புவித்துக் கொண்டு பிழைத்தார் எவருமில்லை; எனக்கு அஞ்சியவர்கள் அஞ்சாது விலகிச் செல்வாராக; என் கையால் எய்யப்படும் அம்புகள், புறங்கொடுத்துச் செல்லாதவர்களின் மார்பிலன்றி, புறங் கொடுப்பாரது மார்பில் சேரமாட்டா என்பதாம்.

இது ஒன்னுதார் படைகெழுமித் தன் ஆண்மை எடுத்துரைத்தலின் தன்மேம்பாட்டுரை ஆயிற்று. இதனைப் புறப்பொருள் இலக்கணத்தில் 'நெடுமொழிவஞ்சி' என்றும், 'நெடுமொழி கூறல்' என்றும் கூறுவர். (சச)

உo. பரியாயவணி

**எக. கருதியது கிளவா(து) அப்பொருள் தோன்றப்
பிறிதொன்(று) உரைப்பது பரியா யம்மே.**

எ - ன், நிறுத்த முறையானே பரியாயம் என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: தான் கருதியதனைக் கூறாது அப்பொருள் தோன்றப் பிறிதொன்றனைக் கூறுவது, பரியாயம் என்னும் அலங்காரமாம் எ - று.

எ - டு: 'மின்னிகரா மாதே! விரைச்சாந் துடன்புணர்ந்து
நின்னிகரா மாதவிக்கண் நின்றருள்நீ - தன்னிகராம்
செந்தீ வரமலருஞ் செங்காந்தட் போதுடனே
இந்தீ வரங்கொணர்வல் யான்'

[1]இ - ள்: மின்னுக்கு உவமையாகிய மாதே! விரையினையுடைத்தாகிய சந்தன மரத்தைத் தழுவி உனக்கு நிகராய் இருக்கின்ற இம்மாதவிக் கீழே நிற்பாயாக; தனக்கு நிகராய் இருக்கின்ற சிவந்த தீயினது ஒளி புலப்பட மலர்ந்த சிவந்த காந்தட் பூவுடனே நல்ல குவளை மலருங் கொண்டு நின் குழற்கு அணிய வாரா நின்றேன் என்று இடத்து நிறீஇ நீங்கினாள் எ - று.

1. இவ்வுரை சில பிரதிகளில் இல்லை.

மாதவி - குருக்கத்தி. சாந்தம் - சந்தனம். இந்தீவரம் - குவளைமலர். இது, குறியிடத்து உய்த்து நீங்குவாள் கூறியது.

(வி - ரை) இப்பாடலில் தோழி கருதிய பொருள் தலைமகளைக் குறியிடத்துய்த்து நீங்க நினைப்பதாகும். ஆயினும் அதனைக் கூறாது, காந்தள் மலரையும் குவளைமலரையும் கொண்டு வரும்வரை நீ இங்கிருப்பாயாக எனப் பிறிதொன்று உரைப்பதால், இது பரியாயமாயிற்று.

ஒட்டணிக்கும் இதற்கும் உரிய வேறுபாடு:— தான் கருதிய கருத்தினை மறைத்தலில் இதற்கும் ஒட்டணிக்கும் வேற்றுமை யின்றேனும், ஒட்டணியில் தான் கருதிய கருத்தினைக் கூறாது அதற்கு ஒத்த கருத்தைக் கூறுதலும், இவ்வணியில் தான் கருதிய கருத்தினைக் கூறாது அதற்கு வேறான கருத்தைக் கூறுதலும் ஆகிய வேற்றுமையுள்ளமையின் இவை வேறாயின. (சரு)

உக. சமாயிதவணி

எஉ. முந்துதான் முயல்வுறூஉந் தொழிற்பயன் பிறிதொன்று
தந்ததா முடிப்பது [1]சமாயித மாகும்.

எ - ன், நிறுத்த முறையானே சமாயிதம் என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: முன்பு தன்னால் முயலப்பட்ட தொழிலினது பயனனது அத்தொழிலால் அன்றிப் பிறிதொன்றால் நிகழ்ந்ததாகக் கூறி முடிப்பது சமாயிதம் என்னும் அலங்காரமாம் எ - று.

எ - டு: 'அருவியங் குன்றம் அரக்கன் பெயர்ப்ப
வெருவிய வெற்பரையன் பாவை — பெருமான்
அணியாகம் ஆரத் தழுவினாள் தான்முன்
தணியாத வூடல் தணிந்து'

இ - ள்: முன்பு தீராத ஊடலை உடையளாய் இருக்கின்ற மலையரையன் பயந்த பாவையாகிய உமையானவள், அருவியினை உடைத்தாய், அழகு பொருந்தி யிருக்கப்பட்ட கைலைமலையை இராவணன் அலைப்ப வெருவி, முக்கட் கடவுளினது அழகிய மார்பகத்தை ஊடல் தணிந்து தானே தழுவினாள் எ - று.

(வி - ரை) இப்பாடலில் சிவபெருமான் முன்னதாக முயன்ற தொழில் உமையம்மையின் ஊடலைத் தணிவிப்பதாகும். ஆனால் அப்பயன் அம்முயற்சியால் கிட்டாது இராவணன் மலையை அசைத்தலால் கிடைத்ததாகக் கூறப்பட்டிருத்தலின், இது சமாயித மாயிற்று. (சசு)

உஉ. உதாத்தவணி

எங. வியத்தகு செல்வமும் மேம்படும் உள்ளமும்
உயர்ச்சிபுனைந் துரைப்ப(து) உதாத்த மாகும்.

எ - ன், நிறுத்த முறையானே உதாத்தம் என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: வியக்கத்தக்க செல்வத்து உயர்ச்சியையும், மேம்பட்ட உள்ளத்து உயர்ச்சியையும் மிகுத்துச் சொல்வது உதாத்தம் என்னும் அலங்காரமாம் எ - று.

---

1. 'சமாகித மாகும்' என்பதும் பாடம்.

(க) செல்வ மிகுதி

எ - டு : 'கன்றும் வயவேந்தர் செல்வம் பலகவர்ந்தும்
என்றும் வறிஞர் இனங்கவர்ந்தும் - ஒன்றும்
அறிவரிதாய் நிற்கும் அளவினதால் அம்ம
செறிகதிர்வேற் சென்னி திரு'

கவர்தல் - கொள்ளுதல். ஆல் - அசை. சென்னி - சோழன்.

(வி - ரை) இ - ள் : சினந்து வருகின்ற வலிய அரசர்களுடைய செல்வங்கள் பலவற்றையும் நீளும் கவர்ந்து கொண்டு வருதலானும், வறுமையுற்றோர் தாம் கூட்டத்துடன் சென்று எப்பொழுதும் வேண்டியவாறு எடுத்துக் கொள்ளப்படுதலானும், நிறைந்த ஒளியையுடைய வேற்படையை யுடைய சோழனது செல்வமானது சிறிதளவேனும் அளவிட்டறியப் படாததாய் நிற்கும் என்பதாம்.

இப்பாடற்கண் சோழனுடைய செல்வத்தினது வியத்தகு நிலைமை பாராட்டப்பெற்றிருத்தலின், இது உதாத்த மாயிற்று.

(உ) உள்ள மிகுதி

எ - டு: 'மண்ணகன்று தன்கிளையின் நீங்கி வனம்புகுந்து
பண்ணுந் தவத்திசைந்த பார்த்தன்தான் - எண்ணிறந்த
மீதண்டர் கோன்குலையும் வெய்யோர் குலந்தொலைத்தான்
கோதண்ட மேதுணையாக் கொண்டு'

இ - ள் : இராச்சியத்தைக் கைவிட்டுத் தன் சுற்றத்தை அகன்று காட்டிற் புகுந்து செய்யப்பட்ட தவத்தால் வருந்தியிளைத்த பார்த்தனுனவன், எண்ணளவற்ற ஆகாயத்துத் தேவர்கட்குக் கோமானுகிய இந்திரன் நடுங்க வரும் உக்கிரத்தையுடைய அசுரர் குலங்கெட அறுத்தான், தனது கோதண்டமே துணையாக எ - று.

பார்த்தன் - அருச்சுனன். அண்டர் - தேவர். கோதண்டம் வில்.

(வி - ரை) இப்பாடற்கண் அருச்சுனன் தன்னுடைய ஒரே வில்லின் துணை கொண்டு, அவுணர் குலமனைத்தும் அழித்தான் என அவனுடைய உள்ள மிகுதி கூறப்பட்டிருத்தலின், இது உதாத்த மாயிற்று.

இவ்வுதாத்த அணியை 'வீறுகோளணி' என்றும் கூறுவர். (சஎ)

உ௩. அவநுதியணி

எச. சிறப்பினும் பொருளினும் குணத்தினும் உண்மை
மறுத்துப் பிறிதுரைப்ப(து) அவநுதி யாகும்.

எ - ன், நிறுத்த முறையானே அவநுதி என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: சிறப்பினுனும், பொருளினுனும், குணத்தினுனும் ஆகிய உண்மையை மறுத்துப் பிறிதொன்றுக உரைப்பது, அவநுதி என்னும் அலங்காரமாம் எ - று.

(வி - ரை) யாதானும் ஒரு பொருளிலுள்ள உண்மைத் தன்மையை மறுத்துப் பிறிதொரு தன்மையை அதன்கண் ஏற்றி உரைப்பது அவநுதி யாகும். இங்ஙனம் உண்மையை மறுத்துப் பிறிதுரைக்குங்கால் அப்பொரு ளுக்குச் சிறப்புத் தோன்றுமாறு அமையும்.

அவற்றுள், (க) சிறப்பவநுதி

எ - டு: 'நறைகமழ்தார் வேட்டார் நலனணியும் நாணும்
நிறையும் நிலைதளரா நீர்மை — அறநெறிசூழ்
செங்கோலன் அல்லன் கொடுங்கோலன் தெவ்வடுபோர்
வெங்கோப மால்யானை வேந்து'

இ - ள்: நறுநாற்றத்தையுடைய மாலையை ஆசைப்பட்ட மடவாருடைய அழகும், அணியும், நாணும், நிறையும் நிறை தளராதபடி தாங்கும் அறநெறியினை உடைத்தாகிய செங்கோலை உடையவனல்லன்; கொடுங்கோன்மை உடையவன்; போர்க் களத்துப் பகைவரை அட்ட வெவ்விய கோபத்தையுடைய பெரிய யானையையுடைய வேந்தன் எ - று.

(வி - ரை) இப்பாடற்கண் அரசனுக்குச் சிறப்பாயுள்ளதும், உண் மையாயுள்ளதுமான செங்கோன்மையை மறுத்துக் கொடுங்கோன்மையை அவன்மீது ஏற்றிச் சொல்லப்பட்டிருத்தலின், இது சிறப்பவநுதி ஆயிற்று. அரசனது மாலையை விரும்புவாருக்கு அவன் கொடுங்கோன்மையன் ஆவான் எனவே, அவனுடைய இன்பச் சிறப்பும், இதனால் இவர்கட்கன்றி ஏனையோர் களுக்கெல்லாம் செங்கோலனே ஆவன் என்பது பெறப்படுதலின் அவனுடைய குணச்சிறப்பும் ஒருங்கு விளங்கி நிற்றல் காண்க.

(உ) பொருளவநுதி

எ - டு: 'நிலனும் விசும்பாம் நிமிர்கால்நீர் தீயாம்
அலர்கதிராம் வான்மதியாம் அன்றி — மலர்கொன்றை
ஒண்ணறுந் தாரான் ஒருவன்[1] இயமானனுமாய்
எண்ணிறந்த எம்பொருளு மாம்'

இ - ள்: விரிந்த கொன்றைப் பூவினாற் செய்த நறுநாற் றத்தையுடைய ஒள்ளிய மாலையை அணிந்தவனும், ஏகனும் ஆகிய பரமசிவன், நிலமும், ஆகாயமும், உயர்ந்த காற்றும், நீரும், தீயும், பரந்த கதிரையுடைய இரவியும், வெள்ளிய மதிய மும் ஆகிய ஏழாதலுமன்றி ஆன்மாவுமாய் எண்ணிறந்த எல்லாப் பொருளுமாவான் எ - று.

(வி - ரை) இப்பாடற்கண் கூறப்பட்ட பொருள் சிவபெருமான் ஆவர். அப்பெருமானுக்கு இயல்பாகவும் உண்மையாகவும் உள்ள ஒருவனாந் தன்மையை மறுத்து, எண்ணிறந்த எப்பொருளுமாம் என்னும் பலவாந்தன் மையை ஏற்றியுரைக்கப்படுதலால், இது பொருளவநுதி யாயிற்று. இறைவனின் தனித்தன்மை ஒன்றாய் நிற்பதாகும். உயிர்களிடத்துக் கலந்துள்ள தன்மை யால் பலவாகியும் நிற்கின்றான் என்பது சைவசித்தாந்தத் துணிபாம். இம் ஙனம் இறைவன் ஒன்றாகியும், வேறாகியும், உடனாகியும் நிற்கும் திறமெல்லாம் ஞான நூல்களில் விரிவாகக் கூறப்படும். ஆண்டுக் காண்க.

1. 'இயமானனுமாம்' என்பதும, 'உயிர்க்குயிராம்' என்பதும் பாடங்க ளாகும்.

(ஙு) குணவவநுதி

எ - டு: 'மனுப்புவிமேல் வாழ மறைவளர்க்கும் ஆரப்
பனித்தொடையல் பார்த்திபர்கோன் எங்கோன் — தனிக்கவி
தண்மை நிழற்றன்று தன்தொழுத பேதையர்க்கு [கை
வெம்மை நிழற்றாய் மிகும்'

இ - ள்: மாந்தர் பூவுலகில் இனிது உயிர்வாழ வேதாகம நெறியை வளர்க்கும் தண்ணிய ஆத்திமாலையை யுடைய அரசர்க்குக் கோமானாகிய எம் இறைவனான சோழராசனது தனிக்குடையானது தண்ணிய நிழலை யுடையதன்று; அவனைக் கண்ட மடவார்க்கு மிக்க வெய்ய தன்மையைப் பண்ணுநிற்கும் எ - று.

தொடையல் - மாலை. பார்த்திபர் - அரசர். தனிக் கவிகை- ஒற்றை வெண்கொற்றக் குடை.

(வி - ரை) இப்பாடற்கண் கூறப்பட்ட பொருள் சோழனது வெண்கொற்றக் குடையாகும். அதனிடத்து இயல்பாகவுள்ள குளிர்ந்த தன்மையை மறுத்து, வெம்மைத் தன்மையை ஏற்றி உரைத்திருத்தலின், இது குண அவநுதி யாயிற்று. தண்மை, வெம்மை என்பன குணமாம்.

'அவநுதி' என்னாது 'ஆகும்' என்றதனால் இவ்வலங்காரம் பிற அலங்காரங்களோடு கூடி வருவனவுங் கொள்க.

விளைபற்றிய சிலேடை அவநுதி

எ - டு: 'நறவேந்து கோதை நலங்கவர்ந்து நல்கா
மறவேந்தன் வஞ்சியா னல்லன் — துறையின்
விலங்காமை நின்று வியன்தமிழ்நா(டு) ஐந்தின்
குலங்காவல் கொண்டொழுகுங் கோ'

இது விளைபற்றிய சிலேடை அவநுதி. நறவு - மது. ஏந்தல்- தாங்கல். துறையின் விலங்காமை - குலதருமத்தின் வழுவாமை. இதனுள் 'வஞ்சியா னல்லன்' என்பதற்குக் கருவூரை யுடைய சோழன் அல்லன் என்றும், பிறரை வஞ்சியாது ஒழிவானல்லன் என்றும் சிலேடையாகப் பொருள் கொள்க.

பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

(வி - ரை) அவநுதியணி சிலேடையணியோடு கூடி, அச்சிலேடைதானும் வினைச்சொல்லினிடமாகவரின், அது வினைபற்றிய சிலேடை அவநுதியாம்.

இ - ள்: தேனைத் தன்னகத்தே கொண்ட மாலையை அணிந்த பெண்ணொருத்தியின் அழகைக் கவர்ந்துகொண்டு மீண்டும் அதனை அவட்குக் கொடுக்காத கொடுமையை உடைய அரசன், பிறரை வஞ்சியாதவனல்லன் (வஞ்சியைத் தலைநகராக உடைய சேரனல்லன்), குலவொழுக்கத்தினின்றும் வழுவாமல் நின்று பெரிய ஐவகைத் தமிழ் நாட்டையும் பாதுகாத்து ஒழுகும் சோழன் ஆவன் என்பதாம்.

தமிழ்நாடு ஐந்து:— சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு, தொண்டைநாடு, ஈழநாடு.

'வஞ்சியா னல்லன்' என்பதற்கு வஞ்சிப் பதியைத் தலைநகராக வுடைய சோழன் அல்லன் என்றும், குலங்காவல் கொண்டொழுகும் கோவாகு விளங்கு

பவன் பாண்டியன் என்றும் பொருளுரைப்பது அத்துணைப் பொருத்தம் உடைத்தன்று.

இப்பாடற்கண் சோழன் வஞ்சியாதவன் என்ற உண்மையை மறுத்து, வஞ்சிப்பவன் எனக்கூறுவதால், இது அவநுதி யாயிற்று. 'வஞ்சியா னல்லன்' என்ற தொடர் இருபொருள் படுவதால் சிலேடையுமாயிற்று. இப்பாடலில் இத்தொடர் வினையாய் இருத்தலின், இது வினைபற்றிய சிலேடை அவநுதி ஆயிற்று. (சஅ)

உச. சிலேடையணி

எரு. ஒருவகைச் சொற்றொடர் பலபொருட் பெற்றி
[1]தெரிவுதர வருவது சிலேடை யாகும்.

எ - ன், நிறுத்த முறையானே சிலேடை என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: ஒருவகையாய் நின்ற தொடர்ச்சொல் பலபொருள்களது தன்மை தெரிய வருவது, சிலேடை என்னும் அலங்காரமாம் எ - று.

'சிலேடை' என்னது 'ஆகும்' என்றதனால், தொடர்ச் சொல்லேயன்றி ஒரு சொல்லே பலபொருட்பெற்றி தெரிவுதர வருவதும் அவ்வலங்காரமாம் என்க. (சக)

அதன் வகை

எசு. அதுவே
செம்மொழி பிரிமொழி யெனவிரு திறப்படும்.

எ - ன், அச்சிலேடையை விரித்து உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: அச்சிலேடை செம்மொழிச் சிலேடையும், பிரிமொழிச் சிலேடையும் என இருவகைப்படும் எ - று.

அவற்றுள், (க) செம்மொழிச்சிலேடை என்பது ஒருவகையாய் நின்று பலபொருள் படுவது.

எ - டு: 'செங்கரங்க ளானிரவு நீக்குந் திறம்புரிந்து
பங்கய மாதர் நலம்பயிலப் - பொங்குதயத் (து)
ஓராழி வெய்யோன் உயர்ந்த நெறியொழுகும்
[2]நீராழி நீணிலத்து மேல்'

இ - ள்: சிவந்த கரங்களான் இருள் கடியுந் திறமை மிக்குத் தாமரை காதலிக்கும் வனப்புடைத்தாக மேல்நோக்கிய தோற்றத்தையுடைய ஒருகால் ஊர்திப் பகலோன் வான்நெறி ஒழுகுங் கடல்சூழ்ந்த புவிமீது எனவும்; சிவந்த கைகளான் உலகினுள்ளோர் மிடி தீர்க்குந் தொழில் மிக்குத் திருமடந்தை செல்வம் பெருக மேம்படா நின்ற பொருள் வருவாய் உடையானுமாய்த் தனிச்சக்கரத்தை உடையானுமாய் உலகில் உள்ளாரால் விரும்பப்படும் விசேட நெறியே ஒழுகுவான், கடல்சூழ்ந்த உலகத்து எனவும் வந்தவாறு காண்க.

1. 'தெரிதர வுரைப்பது' என்பதும் பாடம். 2. 'நீராழி சூழ்ந்த நிலத்து' என்பதும் பாடம்.

இஃது ஆதித்தனுக்கும் சோழனுக்கும் சிலேடை. ஆதித்தன் மேல் செல்லுங்கால்:- கரம் - கதிர். இரவு - இருள். நீக்கல் - கடிதல். பங்கயம் - தாமரை. மாதர் - காதல். நலம் - அழகு. பயிலல் - உண்டாதல். பொங்குதல் - மேல் நோக்கி வளர்தல். உதயம் - தோற்றம். ஓராழி - தேரின் தனிக்கால். வெய்யோன் - ஆதித்தன். உயர்ந்த நெறி - ஆகாயம். சோழன் மேல் செல்லுங்கால்:- கரம் - கை. இரவு - மிடி. நீக்கல் - தீர்த்தல். பங்கயமாதர் - திருமடந்தை. நலம் - செல்வம். பயிலல் - பெருகுதல். பொங்குதல் - மேம்படுதல். உதயம் - பொருள் வருவாய். ஓராழி - தனிச்சக்கரம். வெய்யோன் - விருப்பமுடையோன். உயர்ந்த நெறி - சான்றோரால் புகழப்படும் வழி. நெறி என்றது, ஈண்டு ஒழுக்கம்.

(வி - ரை) இப்பாடலிலுள்ள தொடர்கள் சூரியன், சோழன் ஆகிய இருவருக்கும் பொருந்துவதா யிருப்பதால் சிலேடை யாயிற்று. இத்தொடர்கள் சூரியன் சோழன் ஆகிய இருவர்க்கும் ஒரே நிலையில் (செம்மையாகப்) பிரிந்து பொருள்படுதலால் செம்மொழிச் சிலேடையு மாயிற்று.

செம்மொழி - செம்மையான மொழி. சொற்கள் ஒவ்வொரு பொருள் படும் பொழுதும் பிரிவதில் மாறுபடுதலின்றி, ஒரே நிலையில் பிரிந்து பொருள்படின் அதனைச் செம்மொழி என்பர்.

(உ) பிரிமொழிச்சிலேடை என்பது ஒருவகையாய் நின்ற சொல்லைப் பிரித்துத் தொகை வேறுபடுத்துப் பல பொருளாகக் கொள்வது.

எ - டு: 'தள்ளா விடத்தேர் தடந்தா மரையடைய
எள்ளா வரிமா னிடர்மிகுப்ப - உள்வாழ்தேம்
சிந்தாந் தகைமைத்தே எங்கோன் திருவுள்ளம்
நந்தாந் தொழில்புரிந்தார் நாடு'

இ - ள்: அழகு கெடாத நிலங்களில் உண்டாய பகட்டேர் பெரிய தாமரையைப் பொருந்தவும், இகழப்படாத நெற்சூட்டை உழவர் திரட்டவும், அத்தாமரை மலரில் உண்டாகிய தேன்பொழியும் பெருமையை உடைத்து, எம்கோமானாகிய சோழனுடைய திருவுள்ளம் சிறக்கும்வகை ஒழுகினோர் நாடு எனவும்; அசையாத விடத்தேர் என்னும் மரமுடைத்தாய்ப் பெரிய மலைச்சிகரங்களைத் தாவும் மரைகளை உடைத்தாய் இகழப்படாத சிங்கப் போத்துக்கள் துன்பமுறுத்தவும் பட்டு நல்லோர் உள்ளங்களில் வாழும் நாடுகள் எல்லாம் அழிவுபடுந் தன்மையை உடைத்தாம், எம்கோமானாகிய சோழன் திருவுள்ளம் வேறுபடுந் தொழில் பயின்றார் வாழும் நாடு எனவும் வந்தவாறு காண்க.

இது சோழனுடைய மனம் களிக்கும்படி நடந்தோருடைய நாட்டிற்கும், அவன் மனம் வெறுக்கும்படி நடந்தோருடைய நாட்டிற்கும் சிலேடை.

சோழன் பகையாகாதார் நாட்டின்மேல் செல்லுங்கால்:— தள்ளா இடம் - அழகு கெடாத நிலம். ஏர் - உழவு எருது. தடந்தாமரை - பெரிய தாமரை. 'தடத்தாமரை' தடந்தாமரை என மெலிந்தது. அடைதல் - பொருந்துதல். எள்ளாத - இகழாத. அரி - நெற்

சூடு. மானிடர் - உழவர். மிகுத்தல் - திரட்டல். உள்வாழ்தல் - உள்ளே உண்டாதல். தேம் - தேன். சிந்தல் - பொழிதல். தகைமை - பெருமை. திருவுள்ளம் நந்தல் - அழகிய மனம் சிறத்தல். **பகைத்தார் நாட்டின்மேற் செல்லுங்கால் :—** தள்ளா - அசையா. விடத்தேர் - ஒரு மரம். தடம் - மலை. தாமரை - தாவுமரை. அடைதல் — சேர்தல். எள்ளாத — இகழாத. அரிமான் — சிங்கப்போத்து. இடர் மிகுத்தல் — துன்பம் உண்டாக்குதல். உள் - மனம். வாழ்தல் - மேவல். தேம் - நாடு. சிந்துகை - அழிவுபடுகை. தகைமை - தன்மை. நந்துந் தொழில் - வேறுபடுந் தொழில்.

(வி - ரை) இப்பாடலிலுள்ள தொடர்கள் சோழனின் நட்பு நாடு, பகை நாடு ஆகிய இரண்டற்கும் பொருந்துவதால் சிலேடை யாயிற்று. இத்தொடர்கள் சோழனின் நட்பு நாட்டிற்கு ஆங்கால் ஒருவிதமாகவும், பகை நாட்டிற்கு ஆங்கால் வேறொருவிதமாகவும் பிரிந்து பொருள் படுவதால், இது பிரிமொழிச் சிலேடை யாயிற்று. (௬௦)

சிலேடையின் விரி

எஎ. **ஒருவினை பலவினை முரண்வினை நியமம்**
நியம விலக்கு விரோதம் அவிரோதம்
எனும்எழு வகையினும் இயலும் என்க.

எ - ன், இதுவும் அச்சிலேடை அலங்காரத்தை விரித்து உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: அச்சிலேடை, ஒருவினைச் சிலேடையும், பலவினைச் சிலேடையும், முரண்வினைச் சிலேடையும், நியமச் சிலேடையும், நியமவிலக்குச் சிலேடையும், விரோதச் சிலேடையும், அவிரோதச் சிலேடையும் என்னும் ஏழு கூறுபாட்டான் நடக்குமென்று சொல்லுவர் நூலோர் எ - று.

அவற்றுள், (க) **ஒருவினைச்சிலேடை** என்பது ஒரு வினையான் வருவது.

எ - டு : 'அம்பொற் பணைமுகத்துத் திண்கோட் டணிநாகம்
வம்புற்ற வோடை மலர்ந்திலங்க - உம்பர்
நவம்புரியும் வானதியும் நாண்மதியும் நண்ணத்
தவம் புரிவார்க்(கு) இன்பம் தரும்'

இ - ள் : அழகிய பொலிவுடைய பருத்த முகத்தின் கண்ணே திண்ணிய கோட்டை யுடைத்தாய் அழகு பெற்றிருந்த யானையானது, கச்சோடு கட்டிய பட்டம் விரிந்து விளங்க, முடிமீது ஒளிமிக்குப் பெரிதாகிய கங்கையும் இளம்பிறையும் பொருந்த வந்து, தவம் செய்வோர்க்கு வேண்டிய இந்திர பதங்கள் முதலாகிய இன்பங் கொடுக்கும் எனவும்; அழகிய பொன்னோடு கூடிய மூங்கில் மிடைந்த பக்கமுடைத்தாய்த் திண்ணிய சிகரங்களையும் உடைத்தாய், அழகு பெற்ற மலை வாசனை கமழும் ஓடை பூத்து விளங்கத் தன்மீது ஒளி மிக்குப் பெரிதாகிய கங்கையும் பிறையும் மருவும்படி உயர்ந்து தவம் செய்வோர்க்கு அவர் வேண்டிய பொருள்கள் எல்லாம் கொடுக்கும் எனவும் வந்தவாறு காண்க.

இது விநாயகருக்கும் மலைக்கும் சிலேடை. **விநாயகர்மேல் செல்லுங்கால்:—** பொன் - பொலிவு. பணை - பருத்தல். முகம் - வ்தனம். கோடு - மருப்பு. நாகம் - யானை. வம்பு - கச்சு. உறுதல் - கட்டுதல். ஓடை - பட்டம். மலர்தல் - பரத்தல். உம்பர் - முடி. இன்பம் - இந்திரபதம் முதலாய போகம். **மலைமேல் செல்லுங்கால்:—** பொன் - கனகம். பணை - மூங்கில். முகம்-பக்கம். கோடு - சிகரம். நாகம் - மலை. வம்பு - மணம். உறுதல் - உண்டாதல். ஓடை - வாவி; ஒரு மரமுமாம். மலர்தல்-பூத்தல். உம்பர் - மேல். இன்பம் - தவத்தொழில் புரிவார்க்கு அவர் வேண்டிய உணவுகளும் தண்ணீருமாகிய பலவகைப்பட்ட பண்டங்கள்.

இப்பாட்டினுள் 'நவம் புரியும் வானதியும் நாண்மதியும் நண்ணத் தவம் புரிவார்க்கு' என்பதன் பொருள், இரண்டு தலைக்கும் ஒக்கும்.

(வி - ரை) இப்பாடலிலுள்ள தொடர்கள் விநாயகர், மலை ஆகிய இரு பொருள்களுக்கும் பொருந்தி, இறுதியில் 'இன்பம் தரும்' என்னும் ஒரு வினையால் முடிந்திருப்பதால், இது ஒருவினைச் சிலேடையாயிற்று.

(உ) **பலவினைச்சிலேடை** என்பது பலவினையால் வருவது.

எ - டு : *'தவிரா மதுவுண் களிதளிர்ப்ப நீண்டு
செவிமருவிச் செந்நீர்மை தாங்கிக் - குயிலிசையும்
மின்னுயிரா நுண்ணிடையார் மென்னோக்கு மேவலார்
இன்னுயிரை யீர்க்கின் றன'*

இ - ள்: இடைவிடாமல் நறவுண்ண வந்த களிப்பு உண்டாக நீண்டு செவியுட் புகுந்து நிறைந்து கோடாத நீர்மையவாகி யிருக்கப்பட்ட குயில்குரல் பிரிந்தோர் உயிர்களை வருத்தம் செய்யா நின்றன எனவும்; விடுதற்கு அரிதாகிய கள்ளை யுண்ட மயக்கத்தாலே தழைத்து நீண்டு செவியளவுஞ் சென்று சிவந்த குளிர்ச்சியினை யுடையவாகிய மின்னை யொத்த சிறுமருங்குலினை யுடையார் மெல்லியவாகிய கண்கள் தம்மைப் புணரும் தலைவனுடைய இனிய உயிரை நலியா நின்றன எனவும் கொள்க.

இது குயில்குரலுக்கும் மடவார் கண்ணுக்கும் சிலேடை. **குயில்குரல்மேல் செல்லுங்கால்:—** மது - தேன். செவிமருவி - செவிவ்யுட் புக்கு. செநநீர்மை - கோடாத தன்மை. மேவலார் - பிரிந்தார். இன் - சாரியை. **கண்ணின்மேல் செல்லுங்கால் :—** மது - கள். செவி மருவி - செவியளவுஞ் சென்று. செந்நீர்மை - சிவந்த குளிர்ச்சி. மேவலார் - புணருந்தலைவர். இன்னுயிர் - இனிய் உயிர்.

(வி - ரை) இப்பாடலிலுள்ள தொடர்கள் குயிலின் குரல், பெண்களின் கண்கள் ஆகிய இரண்டற்கும் பொருந்தி, அவையிரண்டும் இடையிடையே நீண்டு, மருவி, தாங்கி, ஈர்க்கின்றன என்ற பல வினைகளோடும் இயைந்து பொருள்படுவதால், இது பலவினைச் சிலேடை யாயிற்று.

(ங) **முரண்வினைச்சிலேடை** என்பது மாறுபட்ட வினையால் வருவது.

எ - டு : 'மாலை மருவி மதிதிரிய மாமணஞ்செய்
காலத் துணைமேவ லார்கடிய - வேலைமிசை
மிக்கார் கலியடங்கா தார்க்கும் வியன்பொழில்கள்
புக்கார் கலியடங்கும் புள்'

இ - ள் : மயக்கத்தை மருவிக் கருத்து வேறுபட மிகவும் மணங்கமழும் காலத்துத் தந்துணைவரைப் பொருந்தாதார் அஞ்சக் கரைமீது மிக்குக் கடல் பொங்கி ஆர்க்கும், அசன்ற பொழில்கள் புக்கு ஒலியடங்கும் பறவைகள் எனவும்; அந்திப் பொழுது மருவித் திங்கள் உலாவ மிக்கிருந்த கூட்டம் புரியுங்காலத்துத் தந்துணைவரைப் பொருந்தினோர் விளங்க எனவும் கொள்க; பின்பு ஒரு தன்மை எனக் கொள்க.

இது பிரிந்தார்க்கும் புணர்ந்தார்க்கும் சிலேடை. **பிரிந்தார் மேல் செல்லுங்கால் :—** மாலை - மயக்கம். மதி - கருத்து. திரிதல் - வேறுபடுதல். மணம் - வாசம். துணைமேவலார் - தம் துணைவரைப் பிரிந்தார். கடிய - அஞ்ச. **புணர்ந்தார்மேல் செல்லுங்கால் :—** மாலை - அந்திப்பொழுது. மதி - திங்கள். திரிதல் - உலாவல். மணம் - கூட்டம். துணைமேவலார் - துணைவரைப் புணர்ந்தார். கடிய - விளங்க.

(வி - ரை) இப்பாடலிலுள்ள தொடர்கள் துணைவரைப் பிரிந்தார்க்கும், புணர்ந்தார்க்கும் பொருந்தி, ஆர்க்கும், அடங்கும் என்ற முரண்பட்ட வினைகளோடு இயைந்து பொருள்படுவதால், இது முரண்வினைச் சிலேடை யாயிற்று.

(ச) நியமச்சிலேடை என்பது சிலேடித்தவற்றை நியமஞ் செய்வது.

எ - டு : 'வெண்ணீர்மை தாங்குவன முத்தே வெறியவாய்க்
கண்ணீர்மை சோர்வ கடிபொழிலே - பண்ணீர்மை
மென்கோல் யாழே யிரங்குவன வேல்வேந்தே!
நின்கோல் உலாவு நிலத்து'

இ - ள் : வெற்றியையுடைய வேல்வேந்தனே! நின் செங்கோல் உலாவும், உலகத்து வெண்மை நிறத்தை உடைத்தாய் இருப்பன முத்தே எனவும், விரை நாற்றத்தை உடைத்தாய் மதுச் சோர நிற்பன பெரிய பொழிலே எனவும், குளிர்ந்த ஓசையை உடைத்தாய் அழகோடு கூடி மெல்லிதாய்ப் பிறர்க்கு மனக் குழைவு கொடுப்பன யாழே எனவும் கிடந்தமையால், என்னப்பட்ட இவையொழிய அறிவின்மை தாங்குவதும், மிடியை யுடைமையால் கண்ணீர் சொரிவதும், பிறர் மனம் தளர்வதும் இல்லை எனக் கிடந்தவாறு கண்டு கொள்க.

வெண்ணீர்மை - வெண்ணிறமும், அறியாமையும். வெறியவாதல் - வாசம் உடையனவாதலும், வெறுமை உடையனவாதலும். கண்ணீர்மை - கள்ளாகிய நீரும், கண்ணின் நீரும்.

(வி - ரை) பல பொருள்களுக்கு இயையுமாறு சொற்களையும் சொற்றொடர்களையும் அமைத்து, அப்பொருள்களுள் சிலேடித்த பொருளாகிய ஒன்றற்கே ஏதற்றேகாரம் கொடுத்து வரையறைப்படுத்தி உரைப்பது இதன் இலக்கணமாகும்.

இப்பாடற்கண் வெண்ணீர்மை, வெறியவாய், கண்ணீர்மை, இரங்குவன என்ற சொற்கள் பல பொருள்களுக்கியையுமாறு புணர்க்கப்பட்டு, அப்பொருள்களுள் சிலேடித்த பொருள்களாகவுள்ள முத்து, பொழில், யாழ் என்பனவற்றிற்கே தேற்றேகாரம் கொடுத்து வரையறுக்கப்பட்டுள்ளமையின், இது நியமச்சிலேடை யாயிற்று.

(ரு) **நியமவிலக்குச்சிலேடை** என்பது சிலேடித்த பொருளை நியமஞ்செய்து அந்நியமத்தை விலக்குவது.

எ - டு : 'சிறைபடுவ புட்குலமே தீம்புனலும் அன்ன
இறைவநீ காத்தளிக்கும் எல்லை - முறையில்
கொடியன குன்றத்தின் மாளிகையே யன்றிக்
கடியவிழ்பூங் காவு முள'

இ - ள் : தலைவனே! நீ காத்தளிக்கும் நிலவரைப்பிற் சிறை உடைத்தாய் இருப்பன புட்சாதியே; 'தீம்புனலும் அன்ன' என்றதனால் தித்தித்த புனல்களும் சிறை யுடைய; கொடியை உடையன குன்றம் போன்ற மாளிகைகளே; அன்றிக் 'கடியவிழ் பூங்காவு முள' என்றதனால் நாற்றம் பரந்த பூவை உடைத்தாகிய சோலைகளும் கொடியை யுடையன எ - று.

இதனால் சிறைபடுதலும் கொடுமையும் இவன் காக்கின்ற நிலத்தின்கண் இல்லை எனக் கிடந்தவாறு கண்டு கொள்க. சிறை - சிறகும், கரையும், சிறைச்சாலையும். கொடி - பதாகையும், வல்லியும், கொடுமையும்.

(வி - ரை) இப்பாடற்கண் ஈரிடத்து நியம விலக்குச் சிலேடை யுள்ளன. (க) சிறைபடுவ என்ற தொடரைச் சிலேடைப் பொருள்படுமாறு அமைத்துப் புட்குலமே என முன்னர் நியமித்தவாறும், பின் அதனைத் 'தீம்புனலும் அன்ன' என்ற தொடரால் விலக்கியவாறும் காண்க. (உ) 'கொடியன' என்ற சொல்லைச் சிலேடைப் பொருள்படுமாறு அமைத்துக் குன்றத்தின் மாளிகையே என முன்னர் நியமித்தவாறும், பின் அதனைக் 'கடியவிழ் பூங்காவுமுள' என்ற தொடரால் விலக்கியவாறும் காண்க.

(சு) **விரோதச்சிலேடை** என்பது முன்னர்ச் சிலேடித்தவற்றைப் பின்னர் விரோதிப்பச் சிலேடிப்பது.

எ - டு : 'விச்சா தரனேனு மந்தரத்து மேவானல்
அச்சுத னேனும் மாயனலன் - நிச்ச
நிறைவான் கலையா னகளங்க னீதி
இறையா னகனெங் கோ'

இ - ள்: விஞ்சையர் ஆகாயத்திலே மேவுவார்; சோழன் கேட்டின்கட் செல்லான்; திருமால் மாயம் உடையான் ஆதலால் மாயன் எனப்படுவான்; இவன் அம்மாயம் இலன் ஆதலால் மாயன் எனப்படான்; நாடோறும் நிறைந்த வெண்மை எய்துங் கலைகளை உடையனாகிய சந்திரன் களங்கம் உடையவன்; நாடோறுங் கலைநூல்களால் பெருக்கம் உடையனேனும் சோழன் அகளங்கன் எனப்பட்டான்; முக்கட்கடவுள் பொருப்பு உடையன் ஆதலால் நகன் எனப்பட்டான்; சோழனாகிய எங்கோன் தீவினை இன்மையால் அநகன் எனப்பட்டான் எ - று.

விச்சாதரன் என்பது - விஞ்சையராகிய தேவசாதிக்கும், வித்தையையுடைய சோழனுக்கும் பெயர். **அந்தரம்** என்பது - ஆகாயத்திற்கும், கேட்டிற்கும் பெயர். **அச்சுதன்** என்பது - திருமாலுக்கும், கேடில்லானுக்கும் பெயர். **நிறை வான் கலையான்** என்பது - கலையையுடைய சந்திரனுக்கும், கல்வியால் நிறைந்த சோழனுக்கும் பெயர். **களங்கம்** என்பது - மாசுக்கும், பாவத்துக்கும் பெயர். **நீதி இறையான்** என்பது - முக்கட் கடவுளுக்கும், நீதி நெறி அரசனான சோழனுக்கும் பெயர். **அநகன்** எனபது - மலை இல்லாதோனுக்கும், பாவம் இல்லாதோனுக்கும் பெயர். இதனை நகன், அநகன் எனப் பிரித்துக் கொள்க.

(வி - ரை) எடுத்துக் கூறப்படும் இருபொருள்களில், ஒன்றற்கு விரோதமானவற்றைப் பின்னே அமைத்துக் கூறுவது விரோதச் சிலேடை ஆகும்.

இப்பாடற்கண் அடிதோறும் இவ்வணி அமைந்துள்ளது. (க) 'விச்சாதரன்' என்னும் சொல் விஞ்சையனுக்கும், சோழனுக்கும் பொருந்துவதால் சிலேடையாம். அது விஞ்சையன் என்னும் பொருள்படுங்கால் அந்தரத்து மேவான் (ஆகாயத்தில் பொருந்தமாட்டான்) என்பது விரோதமாய் இருத்தலின் விரோதச் சிலேடையாம். விஞ்சையன் என்பான் விண்ணகத் தியங்குபவன் ஆவன். (உ) 'அச்சுதன்' என்னும் சொல் திருமாலுக்கும் சோழனுக்கும் பொருந்துவதால் சிலேடையாம். அது திருமாலுக்காங்கால் மாயனலன் (மாயஞ் செய்யான்) என்னும் தொடருடன் முடிதல் விரோதமாய் இருத்தலின் விரோதச் சிலேடையாம். (ங) 'நிறை வான் கலையான்' என்னும் தொடர் சந்திரனுக்கும் சோழனுக்கும் பொருந்துவதால் சிலேடையாம். அது சோழனுக்காங்கால் களங்கன் (களங்கத்தை யுடையவன்) என்னும் சொல்லொடு முடிதல் விரோதமாய் இருத்தலின், விரோதச் சிலேடையாம். (ச) 'நீதி இறையான்' என்னும் தொடர் இறைவனுக்கும் சோழனுக்கும் பொருந்துவதால் சிலேடையாம். அது சோழனுக்காங்கால் நகன் (தீவினை யுடையவன்) என்னும் சொல்லுடன் முடிதல் விரோதமாய் இருத்தலின் விரோதச் சிலேடை ஆயிற்று.

(எ) **அவிரோதச்சிலேடை** என்பது முன்னர்ச் சிலேடித்த பொருளைப் பின்னர் விரோதியாமல் சிலேடிப்பது.

எ - டு: 'சோதி யிரவி கரத்தான் இரவொழிக்கும்
மாதிடத்தான் மன்மதனை மாறழிக்கும் - மீதாம்
அனகமதி தோற்றிக் குமுதம்' அளிக்கும்
தனதன் இருநிதிக்கோன் தான்'

இ - ள்: ஒளியினை உடைத்தாகிய ஆதித்தன் தன் கதிர்களாலே இருளை நீக்குவான்; புகழை உடையனாய் இரவிகுலத்தில் தோன்றிய இரவி என்னும் பெயரினையுடையனாகிய சோழன் கைகளாலே பிறருடைய வறுமையைத் தீர்ப்பான்; உமாதேவியை இடப்பாகத்திலுடையான் காமனை மாறுக்கி அழிப்பான்; இவன் மிகுந்த திட்பம் உடையனாதலால் மன்னவர் வலியினை மாறுகொண்டு கெடுப்பான்; ஆகாயத்தில் தோன்றிய குற்றமற்ற மதி உதயஞ் செய்து குமுதங்களை அலர்த்தும்; இவன் மேலாய குற்றமற்ற அறிவு தோன்றிப் பூதலத்துக்கு ஏற்ற மகிழ்ச்சியைக் கொடுப்பான்; குபேரன் தனதன் என்னும் பெயரை உடையவனாய்

இருநிதிக்குத் தலைவனுவான்; இவனும் பிறருக்குப் பொருளை அளித்து மிக்க பொருளுக்கு முதல்வன் என்னப்படுவான் எ - று.

சோதி - ஒளியும், புகழும். இரவி - சூரியனும், சோழனும். கரம் - கிரணமும், கையும். இரவு - இருளும், இரத்தலும். மாதிடத்தான் - சிவனும், மிக்க திட்பத்தையுடைய சோழனும். மன்மதன் - காமனும், மன்னரது வலியும். மதி - சந்திரனும், அறிவும். குமுதம் - ஆம்பலும், பூதல மகிழ்ச்சியும். தனதன் - குபேரனும், செல்வத்தைக் கொடுக்கிற சோழனும். இருநிதி - சங்கநிதி பதுமநிதியும், மிக்க பொருளும்.

(வி - ரை) எடுத்துக் கூறப்படும் இரு பொருள்களில் ஒன்றற்கு ஒன்று விரோதமின்றி அவ்வப் பொருளுக்கும் ஏற்பப், பின்னருள்ள தொடரை அமைத்துக் கூறுவது அவிரோதச் சிலேடையாம்.

இப்பாடற்கண் அடிதொறும் இவ்வணி அமைந்துள்ளது. (க) 'சோதியிரவி' என்னும் தொடர் சூரியனுக்கும், சோழனுக்கும் பொருந்துவதால் சிலேடையாம். அது 'கரத்தான் இரவொழிக்கும்' என்னும் தொடரொடு முடியுங்கால் விரோதமின்றி இருபொருளுக்கும் ஒப்ப அமைதலின் அவிரோதச் சிலேடை யாயிற்று. (உ) 'மாதிடத்தான்' என்னும் தொடர் சிவபெருமானுக்கும், சோழனுக்கும் பொருந்துவதால் சிலேடையாம். அது 'மன்மதனை மாறழிக்கும்' என்னும் தொடரொடு முடியுங்கால் விரோதமின்றி இரு பொருளுக்கும் ஒப்ப அமைதலின் அவிரோதச் சிலேடை யாயிற்று. (ந) 'மதி' என்னும் சொல் சந்திரனுக்கும், சோழனுடைய அறிவுக்கும் பொருந்துவதால் சிலேடையாம். அது 'குமுதம் அளிக்கும்' என்னும் தொடரொடு முடியுங்கால் விரோதமின்றி இரு பொருளுக்கும் ஒப்ப அமைதலின் அவிரோதச் சிலேடை யாயிற்று. (ச) 'தனதன்' என்னும் சொல் குபேரனுக்கும், சோழனுக்கும் பொருந்துவதால் சிலேடையாம். அது 'இருநிதிக் கோன்' என்னும் தொடரொடு விரோதமின்றி இருபொருளுக்கும் ஒப்ப முடிதலின் அவிரோதச் சிலேடை யாயிற்று.

அவிரோதம் — விரோதம் இன்மை. மாதிடத்தான் என்பதனை மாது + இடத்தான், மா + திடத்தான் எனப் பிரிக்க. மன்மதன் என்பதை மன்மதன், மன் + மதன் எனப் பிரிக்க. மீதாம் அனகம் — மேலாய ஆகாயம். மீதாம் அனகன் — மேலாய சோழன். குமுதம் என்பதை மலருக்கு ஆங்கால் ஒரு சொல்லாகக் கொள்க; மகிழ்ச்சிக்கு ஆங்கால் கு — நிலவுலகம், முதம் — மகிழ்ச்சி எனப் பிரித்துப் பொருள் காண்க.

இனி 'இயலும்' என்று ஒழியாது 'என்ப' என்ற மிகையான், இவ்வாறன்றிப் பிற வேறுபாட்டான் வருவனவும் கொள்க. அவை வந்தவழிக் காண்க. (ருக)

உரு. விசேடவணி

எஅ. குணந்தொழில் முதலிய குறைபடு தன்மையின்
மேம்பட ஒருபொருள் விளம்புதல் விசேடம்.

எ - ன், நிறுத்த முறையானே விசேடம் என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள் : குணமும், தொழிலும், சாதியும், பொருளும், உறுப்பும் முதலாயின குறைபடுதல் காரணமாக, ஒரு பொருட்கு மேம்பாடு தோன்ற உரைப்பது விசேடம் என்னும் அலங்காரமாம் எ - று.

அவற்றுள், (க) **குணக்குறை விசேடம்**

எ - டு : 'கோட்டம் திருப்புருவங் கொள்ளா அவர்செங்கோல்
கோட்டம் புரிந்த கொடைச்சென்னி - நாட்டம்
சிவந்தன வில்லை திருந்தார் கலிங்கம்
சிவந்தன செந்தீத் தெற'

கோட்டம் - வளைதல். திருந்தார் - பகைவர். கலிங்கம் - கலிங்க தேசம். சென்னி - சோழன்.

(வி - ரை) இ - ள் : கொடை நலம் சான்ற சோழனுடைய அழகிய புருவங்கள் கோட்டத்தைக் (வளைவைக்) கொள்ளவில்லை. ஆனால் அதற்குள் அவனுடைய பகைவர்களின் செங்கோல் கோட்டத்தை (கெடுதலை) அடைந்து விட்டன. அச்சோழனுடைய கண்கள் சிவக்கவில்லை; ஆனால் அதற்குள் அவனுடைய பகைவர்களின் கலிங்கநாடு எரியுற்றுச் சிவந்து விட்டன என்பதாம்.

சோழன் பகைவர்மீது சினங்கொள்ளுதற்கு முன்னமேயே அவர்தம் நாடு அழிந்து விட்டன எனபது கருத்து.

சோழன் தன் பகைவர் நாட்டை அழிக்க வேண்டுமெனில், முதற்கண் அவனுக்குச் சினம்' ஏற்பட வேண்டும். அச்சினம் உண்மையை அறிவிக்கும் குணங்களாய கோடுதலும், சிவத்தலும் சோழனுக்கு ஏற்படுவதற்கு முன்னமேயே பகைவர் நாடு அழிந்து விட்டன என்பதால் இது குணக்குறை விசேடமாயிற்று. குணத்தால் குறை விருப்பினும், செயலால் மேம்படுதலின் இது குணக்குறை விசேடமாம்.

(உ) **தொழிற்குறை விசேடம்**

எ - டு : 'எங்கா முகில்பொழியா நாளும் புனல்தேங்கும்
பூங்கா விரிநாடன் போர்மதமா - நீங்கா
வளைபட்ட தாளணிகள் [1]மாறெதிர்ந்தார்க் கந்நாள்
தளைபட்ட தாள்தா மரை'

இ - ள் : இடித்தலைச் செய்து முகில் பொழியாத நாளும் நீர் இரைத்தேறும் காவிரியாற்றை உடைய நாடனுடைய போரில், வலிய யானைகளின் கால்களெல்லாம் கழலாதபடி வளைத்திடப் பட்டவீரக்கழல் பூண்டன; இவை இவ்வண்ணம் செய்ய, மாறுபட்ட மன்னவர் கால்களாகிய தாமரைகள் எல்லாம் தளையாகிய விலங்கு பூண்டன எ - று.

'அந்நாள் தளைபட்ட' என்றது, யானைகளின் கால்கள் வீரக்கழல் பூண்ட அன்றே, பகைவர் தாள்களும் தளைபட்டன எனக் கொள்க.

(வி - ரை) மேகம் மழையைச் சொரிதலாகிய தொழிலை நிகழ்த்தினாலன்றி ஆற்றில் தண்ணீர் நிறையாது. யானை முதலிய படைகள் வீரக்கழல்

1. 'மாறெதிர்ந்த தெவ்வர்' என்பதும் பாடம்.

பூண்டு போரிடுதலாகிய தொழிலை நிகழ்த்தினலன்றிப் பகைவரைச் சிறையி லடைத்தல் இயலாது. எனினும் இப்பாடற்கண் அவ்வத்தொழில் நிகழும் முன்னமேயே, அவ்வச் செயல்கள் நிகழ்ந்து விட்டன எனக் கூறுவதால், இது தொழிற்குறை விசேட மாயிற்று.

தொழிற்குறை விசேடம் - தொழிலில் குறையிருப்பினும், செயலால் மேம்பாடு தோன்ற உரைப்பது.

(ங) சாதிக்குறை விசேடம்

எ - டு: 'மேய நிரைபுரந்து வெண்ணெய் தொடுவுண்ட
ஆயனார் மாறேற்(று) அமர்புரிந்தார் - தூய
பெருந்தருவும் பின்னுங் கொடுத்துடைந்தார் விண்மேற்
புரந்தரனும் வானேரும் போல்'

புரத்தல் - காத்தல். தொடுவுண்டல் - தோண்டியுண்டல். போல் - ஒப்பில் போலி.

(வி - ரை) இ - ள்: பொருந்திய ஆனிரைகளைக் காத்து வெண்ணெயைத் தோண்டி அதனை எடுத்துண்ட இடைக்குலத்தினராய கண்ணபிரான் தேவர்களுடன் எதிர்த்துப் போர் செய்தார். அது பொழுது விண்ணுலகிலுள்ள இந்திரனும் ஏனைய தேவர்களும் அப்போருக்கு ஆற்றாது தூய பாரிசாதம் என்னும் கற்பகத்தருவையும், தமது முதுகையும் கொடுத்தார்கள் என்பதாம்.

முதுகைக் கொடுத்தார் என்றது புறக்கிட்டார் என்றபடி. போல் — உரையசை. கண்ணபிரான் இடைக்குலத்தில் தோன்றினர் என்பதால் சாதிக் குறைவு தோன்றினும், தேவகுலம் அனைத்தையும் வென்றார் என்பதால் மேம்பாடு தோன்றலின், இது சாதிக்குறை விசேடமாயிற்று.

(ச) பொருட்குறை விசேடம்

எ - டு : 'தொல்லை மறைதேர் துணைவன்பால் ஆண்டுவரை
எல்லை யிருநாழி நெற்கொண்(டு)ஓர் - மெல்லியலாள்
ஓங்குலகில் வாழும் உயிரனைத்தும் ஊட்டுமால்
ஏங்கொலிநீர்க் காஞ்சி யிடை'

தொல்லை - பழமை. மறை - வேதம். தேர்தல் - ஓதுதல். துணைவன் - தலைவன். பால் - இடம். மெல்லியலாள் - உமாதேவி. ஆல் - அசை. இடை - இடம்.

(வி - ரை) இ - ள் : மிகுந்த ஒலியைச் செய்யும் நீர்வளம் மிக்க காஞ்சீ புரத்தில், மென்மைத்தன்மை வாய்ந்த ஒப்பற்ற பெருமை யுடைய உமையம்மையார், பழமையான வேதங்களும் அறிதற்கரிய தன்னுடைய தலைவனை சிவபெருமானிடத்தே இருநாழி நெல்லைப்பெற்று அதுகொண்டு ஓராண்டு அளவும் உலகுயிர்கள் அனைத்திற்கும் உணவூட்டிப் பாதுகாப்பாளாயினள் என்பதாம்.

இப்பாடற்கண் இருநாழி நெற்கொண்டு என்பதால் பொருட் குறைவு தோன்றினும், உயிரனைத்தும் ஊட்டும் என்பதால் மேம்பாடு தோன்ற உரைத்திருத்தலின், இது பொருட்குறை விசேடமாயிற்று.

(ரு) உறுப்புக்குறை விசேடம்

எ - டு : 'யானை இரதம் பரியாள் இவையில்லை
தானும் அனங்கன் தனுக்கரும்பு - தேனுர்
மலரைந்தி னல்வென் றடிப்படுத்தான் மாரன்
உலகங்கள் மூன்றும் ஒருங்கு'

இரதம் - தேர். பரி - குதிரை. ஒருங்கு - ஒருபடித்தாக.

(வி - ரை) இ - ள்: மன்மதனுக்கு யானை, தேர், குதிரை, காலாள் ஆகிய நால்வகைப் படைகளும் இல்லை, அவனும் உடம்பு இல்லாதவன், அவனுடைய வில்லோ வலிமையற்ற கரும்பு, அங்ஙனம் இருந்தும் தேன் நிறைந்த ஐந்து மலர்களினாலேயே மூவுலகையும் ஒருங்கே வென்று அடிப் படுத்தினான் என்பதாம்.

மலர் ஐந்து - தாமரை, முல்லை, கருவிளை, மாம்பூ, அசோகம் என்பன.

உலகம் மூன்றையும் ஒருங்கு அடிப்படுத்தற்கான உறுப்புக்கள் ஒன்றும் இல்லாத குறையிருப்பினும், அவற்றை வென்று அடிப்படுத்தான் என மேம்பாடு கூறினமையின் இது உறுப்புக்குறை விசேடமாயிற்று.

பிறவும் வந்தவழிக் கண்டு கொள்க. (கூஉ)

உகூ. ஒப்புமைக் கூட்டவணி

எகூ. கருதிய குணத்தின் மிகுபொருள் உடன்வைத்(து)
ஒருபொருள் உரைப்ப(து) ஒப்புமைக் கூட்டம்.

எ - ன், நிறுத்த முறையானே ஒப்புமைக் கூட்டம் என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: ஒருபொருளைச் சொல்லுமிடத்துத் தான் கருதிய குணமுதலாயினவற்றின் மிக்க பொருளைக் கூடவைத்துச் சொல்லுவது ஒப்புமைக் கூட்டம் என்னும் அலங்காரமாம் எ - று. (கூக)

அதன்விரி

அ௦. புகழினும் பழிப்பினும் புலப்படும் அதுவே.

எ - ன், அவ்வலங்காரத்தை விரித்து உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: அவ்வொப்புமைக் கூட்டம் என்னும் அலங்காரம், ஒன்றனைப் புகழ்தற்கண்ணும், பழித்தற்கண்ணும் தோன்றும் எ - று.

அவற்றுள் (க) புகழ் ஒப்புமைக்கூட்டம்

எ - டு : 'பூண்டாங்கு கொங்கை பொரவே குழைபொருப்பும்
தூண்டாத செய்வச் சுடர்விளக்கும் - நாண்தாங்கு
வண்மைசால் சான்றவரும் [1]காஞ்சி வளம்பதியின்
உண்மையால் உண்டிவ் வுலகு'

'பூண்தாங்கு கொங்கை பொரவே' என்பது உமாதேவியினுடைய அணிந்த அணிகலங்களையுடைய முலை பொரவே என்ற

1. 'காஞ்சி வண்பதியும்' என்பதும் பாடம்.

வாறு. 'குழை பொருப்பு' என்றது திருவேகம்பத்து இறையை. தெய்வச் சுடர் விளக்கு - நந்தா விளக்கு.

(வி - ரை) இ - ள்: அணிகளை யணிந்த உமையம்மையின் கொங்கைகள் அழுந்துவதால் மேனி குழைந்த மலையாகிய திருவேகாம்பர நாதரும், தூண்ட வேண்டாத தெய்வத்தன்மை வாய்ந்த ஒள்ளிய திருநந்தா விளக்கும், பிறர் நாணத்தக்க கொடைத்தன்மை வாய்ந்த சான்றவரும், காஞ்சீபுரம் என்னும் வளம் பொருந்திய நகரில் உள்ளமையால் இவ்வுலகம் நிலைபெற்றிருக்கின்றது என்பதாம்.

'பண்புடையார்ப் பட்டுண்டுலகம்' என்பர் வள்ளுவர். ஆதலின் இம்மூன்றும் காஞ்சீபுரத்தில் உள்ளதால் உலகம் நிலைபெற்றது என்றார். புகழத்தக்க இப்பொருள்கள் மூன்றும் ஒருங்கு தொகுத்துக் கூறப்பட்டிருத்தலின் இது புகழ் ஒப்புமைக் கூட்டமாயிற்று.

(உ) பழிப்பு ஒப்புமைக்கூட்டம்

எ - டு: 'கொள்பொருள் வெஃகிக் குடியலைக்கும் வேந்தனும்
உள்பொருள் சொல்லாச் சலமொழி மாந்தரும்
இல்லிருந்(து) எல்லை கடப்பாளும் இம்மூவர்
வல்லே [1]மழையருக்கும் கோள்' (திரிகடுகம் - ருo)

இ - ள்: கொள்ளும் பொருளை ஆசைப்பட்டுத் தன்கீழ்க் குடியை அல்லல் செய்யும் அரசனும், உண்மை சொல்லாது சலம் பற்றி வெல்ல வழக்குச் சொல்லுவாரும், ஒருவன் இல்லிருந்து அவ்வெல்லை கடக்கின்றாளும் இம்மூவராலும் மிகுதியாக இவ்வுலகத்துக் காலமழை அருகப்படும் எ - று.

'வல்லே' என்றது மிக என்றவாறு.

(வி - ரை) இப்பாடற்கண் பழிக்கத்தக்க பொருள்கள் மூன்றும் ஒருங்கு தொகுத்துக் கூறப்பட்டுள்ளமையின், இது பழிப்பு ஒப்புமைக் கூட்டமாயிற்று. (ருச)

உஎ. விரோதவணி

அக. மாறுபடு சொற்பொருள் மாறுபாட்(டு) இயற்கை
விளைவுதர உரைப்பது விரோத மாகும்.

எ - ன், நிறுத்த முறையானே விரோதம் என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: மாறுபட்ட சொல்லானும், பொருளானும் மாறுபாட்டுத்தன்மை விளைவு தோன்ற உரைப்பது விரோதம் என்னும் அலங்காரமாம் எ - று.

(க) சொல் விரோதம்

எ - டு: 'காலையும் மாலையும் கைகூப்பிக் கால்தொழுதால்
மேலை வினையெல்லாம் கீழவாம் - கோலக்
கருமான்தோல் வெண்ணீற்றுச் செம்மேனிப் பைந்தார்ப்
பெருமானைச் சிற்றம் பலத்து'

1. 'மழையறுக்கும்' என்பதும் பாடம்.

(வி - ரை) இ - ள்: அழகிய கருமையான யானைத் தோலையும், வெள்ளிய திருநீற்றையும், சிவந்த திருமேனியையும், பசுமையான கொன்றை மாலையையும் உடைய சிவபெருமானைச், சிதம்பரத்தில் காலை, மாலை ஆகிய இரண்டு வேளைகளிலும கைகளைக் கூப்பித், திருவடிகளைத் தொழுதால் முற்செய்த வினைகள் யாவும் கீழ்மைப்படும் (வினைகள் சிறிது சிறிதாகக் குறைந்து நீங்கிவிடும்) என்பதாம்.

இப்பாடற்கண் காலை, மாலை; கைகூப்புதல், கால் தொழுதல்; மேல், கீழ்; கருமை, வெண்மை; செம்மை, பசுமை என்ற சொற்கள் ஒன்றோ டொன்று மாறுபட்டு விரோதப்பட இருத்தலின், இது சொல் விரோதமாயிற்று.

(உ) பொருள் விரோதம்

எ - டு : 'சோலை பயிலுங் குயில்மழலை சோர்ந்தடங்க
ஆலும் மயிலினங்கள் ஆர்த்தெழுந்த - ஞாலம்
குளிர்ந்த முகில்கறுத்த கோபஞ் சிவந்த
விளர்ந்த துணைபிரிந்தார் மெய்'

விளர்த்தல் - வெளுத்தல்.

(வி - ரை) இ - ள்: சோலைகளிற் பொருந்திய குயில்களின் அழகிய சொற்கள் சோர்வுற்று அடங்க, ஆடுகின்ற மயில் கூட்டங்கள் ஆர்த்து எழுந்தன; நிலம் குளிர்தற்குக் காரணமான மேகங்கள் கறுத்தன; இந்திர கோபம் என்னும் பட்டுப்பூச்சிகள் சிவந்தன; தம் துணைவரைப் பிரிந்த மகளிரின் உடல்கள் வெளுத்தன என்பதாம்.

இது கார்கால வருணனை ஆகும். இப்பாடற்கண் முன் இரண்டடி களில் பொருள் விரோதம் அமைந்துள்ளது. குயில் மழலை சோர்ந்தடங்கலும், மயிலினங்கள் ஆர்த்து எழுதலும் ஒன்றற்கொன்று மாறுபட்ட பொருள் ஆதலின் பொருள் விரோதமாம். பின் இரண்டடிகளில் கறுப்பு, சிவப்பு, வெளுப்பு என்ற சொற்கள் ஒன்றற்கொன்று மாறுபட்டிருத்தலின் சொல் விரோதமும் அமைந்துள்ளது.

இனி, இவ்வலங்காரம் பிற அலங்காரங்களோடு கூடியும் வரும்.

சிலேடை விரோதம்

எ டு : 'இனமான் இகல வெளிய வெனினும்
வனமேவு புண்டரிகம் வாட்டும் - வனமார்
கரியுருவங் கொண்டும் [1]அரிசிதறக் காயும்
விரிமலர்மென் கூந்தல் விழி'

இ - ள் : இனமாயுள்ள மான்கள் மாறுபடுதற்கு எளிவந்தும் காட்டுள் வாழும் புலிகளை வருத்த வல்லவாயின; காட்டுயானை தன்வடிவைக் கொண்டும் சிங்கம் இரிந்தோடக் காயா நின்றன எனவும்; இனிக் கண்களின்மேல் செல்லுங்கால், இனமாயுள்ள மான்விழி போன்று வெண்மையை உடையவாய் நீருடனே பொருந்திய கமல மலரை அழகழித்து, அழகமர்ந்த மைமதர்ப் புடையவாய் அரிசிதற வெம்மை செய்ய வல்லன, விரிந்த மலரை யுடைய மெல்லிய கூந்தலையுடைய இவளுடைய விழிகள் எ - று.

1. 'அரிசிதறிக் காட்டும்' என்பதும் பாடம்.

இது சிலேடை விரோதம். இகலுதல் - பகைத்தலும், ஒத்தலும். வெளிய - எளிய, வெளிய. வனம் - காடும், நீரும். புண்டரிகம் - புலியும், தாமரையும். வனம் - காடும், அழகும். கரி - யானையும், மையும். அரி - சிங்கமும், செவ்வரியும். சிதறல் - அழித்தலும், பரத்தலும். காய்தல் - கோபித்தலும், வருத்தலும்.

பிறவும் வந்தவழிக் கண்டு கொள்க.

(வி - ரை) சிலேடை அணியுடன், விரோதஅணி கூடிவரின் அது சிலேடை விரோதமாம்.

மான் எளிய எனினும் புலியை வாட்டும் என்பதும், யானை தன் வடிவைக் கொண்டும் சிங்கம் பயந்தோடுமாறு காயும் என்பதும் இப்பாடற்கண் காணப் படும் பொருள் விரோதம் ஆகும். இப்பாடற்கண் அமைந்த சொற்கள் பலவும் சிலேடைப் பொருள்பட அமைந்துள்ளமையின் சிலேடையு மாயிற்று. இவ் வாற்றான் இது சிலேடை விரோதமாயிற்று. (ருரு)

உஅ. மாறுபடுபுகழ்நிலையணி

அஉ. **கருதிய பொருள்தொகுத்(து) ஆங்கது பழித்தற்கு**
வேறொன்று புகழ்வது மாறுபடு புகழ்நிலை.

எ - ன், நிறுத்த முறையானே மாறுபடு புகழ்நிலை என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: கவி, தான் கருதிய பொருளை மறைத்து அதனைப் பழித்தற்கு வேறொன்றனைப் புகழ்வது மாறுபடு புகழ்நிலை என்னும் அலங்காரமாம் எ - று.

எ - டு: 'இரவறியா யாவரையும் பின்செல்லா நல்ல
தருநிழலும் தண்ணீரும் புல்லும் - ஒருவர்
படைத்தனவும் கொள்ளாவிப் புள்ளிமான் பார்மேல்
துடைத்தனவே யன்றோ துயர்'

இரப்பவனைப் பழித்தற்கு மானைப் புகழ்ந்தது. இரவு - இரத்தல். பின் செல்லல் - குறையுறுதல். துடைத்தல் - நீக்குதல்.

(வி - ரை) இ - ள்: இந்தப் புள்ளிமான்கள் பிறரிடம் சென்று இரத்தலை அறியமாட்டா, எவரிடத்தும் குறையுற்றுச் செல்லமாட்டா, ஒருவரால் ஈட்டப்படாத நல்ல மரத்தின் நிழலையும், குளிர்ந்த நீரையும், புல்லையுமே தங்கும்இடமும், உணவுமாகக் கொள்ளும்; ஆதலின் இவை இவ்வுலகில் துன்பத்தினின்றும் நீங்கியனவன்றோ? என்பதாம்.

இப்பாடற்கண் கவிஞன் பழிக்கக் கருதிய பொருள் இரவலரை யாகும். ஆனால் அதனை மறைத்து மானைப் புகழ்ந்திருப்பதால், இது மாறுபடு புகழ் நிலை யாயிற்று.

எ - டு: 'போதுந் தளிரும் புனைந்து மணம்புணர்ந்து
சூதப் பணை தழுவித் தோன்றுமால் - மாதே
பலமா தவங்கள் பயின்றதோ பண்(டு)இக்
குலமா தவியின் கொடி'

என்பதும் அது.

இ - ள்: இந்தச் சிறந்த மாதவிக் கொடி, பூவினாலும் தளிரினாலும் அலங்கரிக்கப்பட்டு மணக்கோலத்தையும் உடையராய்

மணஞ்செய்து தங்காதலரைத் தழுவிக்கொண்டு நின்ற நற்குல மடவாரைப் போலத் தானும் பூவினாலும் தளிரினாலும் அலங்கரிக்கப்பட்டு நறுநாற்றக் கோலத்தை உடைத்தாய்ச் சூதப்பணைகளைச் சேர்ந்து தோன்றாநின்றன; ஆதலால், தோழீ! முற்காலத்திலே பல தவஞ்செய்தனவோ? சொல்லுவாயக எ - று.

இது களவிற் கூடிவந்த தலைவியைப் பழித்தற்கு மாதவியைப் புகழ்ந்தது. சூதம் - மாமரம். பணை - கிளை. மாதவி - குருக்கத்தி. ஆல் - அசை.

(வி - ரை) இப்பாடற்கண் கவிஞன் பழிக்கக் கருதிய பொருள் களவில் கூடிவந்த தலைவியை ஆகும். ஆனால் அதனை மறைத்து மாதவிக் கொடியைப் புகழ்ந்திருப்பதால், இது மாறுபடு புகழ்நிலை யாயிற்று. (ருசு)

உகூ. புகழாப்புகழ்ச்சியணி

அ௲. பழிப்பது போலும் பான்மையின் மேன்மை
புலப்பட மொழிவது புகழாப் புகழ்ச்சி.

எ - ன், நிறுத்த முறையானே புகழாப் புகழ்ச்சி என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: பழித்தல் போலும் பாகுபாட்டான், ஒன்றற்கு மேம்பாடு தோன்ற உரைப்பது புகழாப் புகழ்ச்சி என்னும் அலங்காரமாம் எ - று.

எ - டு : 'போர்வேலின் வென்றதூஉம் பல்புகழால் போர்த்ததூஉம்
தார்மேவு திண்புயத்தால் தாங்குவதூஉம் - நீர்நாடன்
தேரடிக்கூர் வெம்படையால் காப்பதூஉம் செங்கண்மால்
ஓரடிக்கீழ் வைத்த வுலகு'

நீர்நாடன் - சோழன். போர்த்தல் - பரப்புதல். தாங்குதல் - எடுத்தல். தேரடிக்கூர் வெம்படை - தேர்க்கால் ஒத்துக் கூர்த்த சக்கரம்.

(வி - ரை) இ - ள் : நீர்வளம் மிக்க நாட்டையுடைய சோழன் போர் செய்ய வல்ல வேலினால் வென்றி கொண்டதும், பல்வேறு வகைப்பட்ட புகழால் மூடியதும், மாலையை யணிந்த வலிய தோளினால் தாங்குவதும், தேர்க்காலின் பெயரையுடைய கூர்மை பொருந்திய கொடிய சக்கரப் படையால் காப்பதும், சிவந்த திருக்கண்களையுடைய திருமால் தனது ஒரு திருவடியின்கீழ் அடக்கிய நிலவுலகமே யாகும் என்பதாம்.

திருமாலானவர் தன்னுடைய ஓரடியால் அளந்த உலகையே சோழன் வேலின் வென்றும், புகழால் போர்த்தும், புயத்தால் தாங்கியும் காக்கின்றனன் என்பதால், அவனால் காக்கப்படும் உலகம் பழிக்கப்படுவதுபோல் தோன்றினும், அவன் உலக முழுவதையும் காக்கின்றான் என்ற மேன்மை புலப்படுதலின், இது புகழாப் புகழ்ச்சியாயிற்று.

எ - டு : 'வினைவரிய பல்புகழார் நின்குலத்துத் தொல்லோர்
அனைவரையும் புல்லினா ளன்றே - மனுநூல்
புணர்ந்த நெறியொழுகும் பூழியர்கோ நீநாள்
மணந்த தடமலர்மேல் மாது'

என்பதும் அது.

பூழியன் - சோழன். நீ இக்காலத்து உரிமைச் சுற்றமாகக் கைப்பிடித்த சீதேவியானவளே, நின்குலத்து முன்னோர்க்கும் மடவாள் என்றவாறு. தொல்லோர் - பழையோர். புல்லுதல் - தழுவுதல்.

(வி - ரை) இ - ள்: மனு நூலில் கூறியவாறு ஒழுகும் சோழனே! நின்னை இந்நாளில் உரிமையாகக் கொண்டு தங்கியிருக்கும், தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள், மனத்தாலும் நினைதற்கரிய பலவகைப் புகழுடைய உன்னுடைய முன்னோர்கள் அனைவரையும் உரிமையாகவே கொண்டொழுகினவளன்றோ? என்பதாம்.

அனபாயனிடத்துத் தங்கியிருக்கும் திருமகள், அவனுக்கு முன்னேயிருந்த அவனுடைய குல முதல்வர்கள் அனைவரையும் புல்லியவளே என்பதால், அவனிடத்து இருக்கும் திரு பழிக்கப்படுவதுபோல் தோன்றினும், அவன் வழிவழியாகப் பெருஞ்செல்வம் உடையவன் என்ற மேன்மை புலப்படுதலின், இது புகழாப் புகழ்ச்சி யாயிற்று.

அஃதேல், மேல் இலேசத்தின்பாற்படுத்துக் கூறிய பழிப்பது போலப் புகழ் புலப்படுத்தலோடு இப்புகழாப் புகழ்ச்சிக்கு வேற்றுமையும், புகழ்வது போலப் பழித்திறம் புனைதலோடு மேற்கூறிய மாறுபடு புகழ்நிலைக்கு வேற்றுமையும் யாதோ? எனின், **பழிப்பது போலப் புகழ் புலப்படுத்தல்** - ஒன்றனையே பழித்தாற் போலப் புகழ்வது. **புகழாப் புகழ்ச்சி** - ஒன்றனைப் பழிக்க, வேறொன்றற்குப் புகழாய்த் தோன்றுவது. **புகழ்வது போலப் பழித்திறம் புனைதல்** - ஒன்றனையே புகழ்ந்தாற் போலப் பழிப்பது. **மாறுபடு புகழ்நிலை** - ஒன்றனைப் புகழ, ஒன்றற்குப் பழிப்பாய்த் தோன்றுவது என உணர்க.

அல்லதூஉம் அவை யிரண்டும் ஒருசார் ஆசிரியர் இலேசத்தின்பாற்படுத்துக் கூறினர் என்பது அறிவித்தற்கு ஆண்டுக் கூறப்பட்டது. ஈண்டு ஒருசார் ஆசிரியர் வேறுபடுத்து வேறு அலங்காரமென்று வேண்டுவர் என்றது அறிவித்தற்கு ஈண்டும் கூறப்பட்டது என்க.

(வி - ரை) பழிப்பது போலப் புகழ் புலப்படுத்தற்கும், புகழாப் புகழ்ச்சிக்கும் உரிய வேற்றுமை:—

பழிப்பது போலப் புகழ் புலப்படுத்தல் ஒன்றனையே பழித்தாற்போலப் புகழ்வதாகும். 'ஆடல் மயிலியலி' என்ற பாடலில் 'அன்பன் கூடுங்கால் மெல்லென் குறிப்பறியான்' என எந்தத் தலைவன் பழிப்பதுபோலக் கூறப்பட்டானோ, அந்தத் தலைவனே ஆண்மையும் இன்பச்செறிவும் அமைந்தவன் எனப் புகழப்படுதல் காண்க.

புகழாப் புகழ்ச்சி ஒன்றனைப் பழிக்க, வேறொன்றற்குப் புகழாய்த் தோன்றுவதாகும். 'போர் வேலின்' என்று தொடங்கும் பாடலில் 'செங்கண்மால் ஓரடிக்கீழ் வைத்த உலகு' என உலகைப்பழிக்க, அதனைக் காக்கும் முகத்தான் சோழனுக்குப் புகழாய்த் தோன்றல் காண்க.

புகழ்வது போலப் பழித்திறம் புனைதற்கும், மாறுபடு புகழ் நிலைக்கும் உரிய வேற்றுமை:—

புகழ்வதுபோலப் பழித்திறம் புனைதல், ஒன்றனையே புகழ்ந்தாற்போலப் பழிப்பது. 'மேய கலவி' என்று தொடங்கும் பாடலில் 'விடலை (தலைவன்)

நம் மெல்லன் சாயல் தளராமல் தாங்குமால்' என எந்தத் தலைவன் புகழ்வது போலக் கூறப்பட்டானோ, அந்தத் தலைவனே ஆண்மையும் இன்பச்செறிவும் அற்றவன் எனப் பழிக்கப்படுதல் காண்க.

மாறுபடு புகழ்நிலை, ஒன்றனைப் புகழ ஒன்றற்குப் பழிப்பாய்த் தோன்றுவது. 'இரவறியா' என்று தொடங்கும் பாடலில், மானைப் புகழ, அது இரவலர்க்குப் பழிப்பாய்த் தோன்றல் காண்க.

இங்ஙனம் வேறுபாடு கூறிய உரையாசிரியர் 'அல்லதூஉம் அவை யிரண்டும்' என்று தொடங்கும் பகுதியில் ஒன்றாகக் கருதினும் அமையும் என்னும் கருத்தினராய் எழுதுகின்றார். அவர் கருத்து வருமாறு :— பழிப்பதுபோலப் புகழ் புலப்படுத்தலும், புகழாப் புகழ்ச்சியும் ஒன்றே. புகழ்வதுபோலப் பழித்திறம் புனைதலும், மாறுபடு புகழ் நிலையும் ஒன்றே. ஆயினும் இவற்றை இலேச அணியிடத்தும் ஈண்டும் கூறியதற்குக் காரணம், இவ்வகைகளைத் (அதாவது புகழாப் புகழ்ச்சி, மாறுபடு புகழ்நிலை) தனித்துக் கூறாது, இலேச அணியின் வகையாகக் கூறுவாரும் உண்டு என்பதை அறிவிக்க முன்னரும், ஒரு சில ஆசிரியர்கள் இவற்றைத் தனியாகவும் கொள்வர் என்பதை அறிவிக்க ஈண்டு வேறு வேறாகத் தனித்தும் கூறப்பட்டனவாம் என்பது. (௬எ)

௩௦. நிதரிசனவணி

அச. ஒருவகை நிகழ்வதற்(கு) ஒத்தபயன் பிறிதிற்குப்
புகழ்மை தீமை யென்றிவை புலப்பட
நிகழ்வ தாயின் நிதரிசன மதுவே.

எ - ன், நிறுத்த முறையானே நிதரிசனம் என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: ஒருவகையான் நிகழ்வது ஒன்றற்குப் பொருந்தியதொரு பயனைப் பிறிதொன்றற்கு நன்மை புலப்பட நிகழ்வதாதல், தீமை புலப்பட நிகழ்வதாதல், செய்வதெனச் சொல்லுவது நிதரிசனம் என்னும் அலங்காரமாம் எ - று.

அவற்றுள், (க) புகழ்மை

எ - டு : 'பிறர்செல்வம் கண்டால் பெரியோர் மகிழ்வும்
சிறியோர் பொறாத திறமும் - அறிவுறீஇச்
செங்கமல மெய்ம்மலர்ந்த தேங்குமுத [1]மெய்யயர்ந்த
பொங்கொளியோன் வீறெய்தும் போது'

பொங்கொளியோன் - ஆதித்தன். வீறெய்தல் - கதிர் விரித்தல். இது நற்பொருட் காட்சி.

(வி - ரை) இ - ள் : பிறர் தம் செல்வத்தைக் கண்டால் பெரியோர் மகிழ்வதையும், சிறியோர் அதற்குப் பொறாமை கொள்வதையும் அறிவுறுத்த, மிகுந்த ஒளியையுடைய கதிரவன் தோன்றும்பொழுது செந்தாமரை மலர்கள் நெகிழ்வுற்று மலர்ச்சி யடைந்தன; தேன் நிரம்பிய ஆம்பல் மலர்கள் குவிந்தன என்பதாம்.

---

1. 'மெய்யசந்த' என்பதும் பாடம்.

இப்பாடற்கண் இருவகை நிதரிசனம் உள்ளன. (க) கதிரவனின் ஒளியைக் கண்டு தாமரை மலர்வதானது பிறர்செல்வத்தைக் கண்டால் பெரியோர் மகிழ்வர் என்பதைக் காட்டுகின்றது. இங்ஙனம் ஒரு நிகழ்ச்சியைக் கொண்டு அதன் பயனை நன்மையான கருத்துப் பெறப்பட்டதாகக் கூறுவது, புகழ்மை நிதரிசனமாகும். (உ) கதிரவனின் ஒளியைக் கண்டு ஆம்பல் குவிதலானது, பிறர் செல்வத்தைக் கண்டால் சிறியோர் பொறார் என்பதைக் காட்டுகின்றது. இந்நிகழ்ச்சியைக் கொண்டு இதன் பயனைத் தீமை புலப்படக் கூறுதலின், இது தீமை நிதரிசன மாயிற்று.

இப்பாடல் புகழ்மை, தீமை என்ற இரண்டற்கும் எடுத்துக்காட்டாமேனும், ஆசிரியர் புகழ்மைக்காக இப்பாடலை எடுத்துக் காட்டியிருத்தலின், இவ்விரண்டனுள் முன்னையது ஒன்றுமே கருத்தாகக் கொள்க.

(உ) தீமை

எ - டு; 'பெரியோ ருழையும் பிழைசிறி துண் டாயின்
இருநிலத்துள் யாரும் அறிதல் - தெரிவிக்கும்
தேக்கும் கடலுலகில் யாவர்க்குந் தெள்ளமுதம்
வாக்கு மதிமேல் மறு'

இ - ள்: மதியத்தின் மீது உண்டாகிய மறு, பூமிக்கண் உண்டாகிய பெரியோரிடத்துக் குற்றங்கள் மறைத்தற்கு அரிதாய் யாவர்க்கும் புலப்படும் என்பது தெரியச் சொல்லுவது போல் இருந்தது எ - று.

உழை - இடம். இருநிலம் - பெரியநிலம். தெரிவித்தல் - தெரியக் காட்டுதல். தெள்ளமுதம் - தெள்ளிய அமுதம். வாக்குதல் - ஒழுக்குதல். இது தீப்பொருட் காட்சி.

(வி - ரை) இப்பாடற்கண் மதியத்தில் உள்ள மறு யாவர்க்கும் தெரியும் என்ற நிகழ்ச்சியைக் கொண்டு, மிகப் பெரியோரிடத்தும் தவறு சிறிது ஏற்படின் அதனை எல்லோரும் அறிவர் என்ற தீமைப் பயனைக் கூறலின், இது தீமை நிதரிசனமாயிற்று. இப்பாடல்,

'குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து' (குறள் - கூகஎ)

என்னும் திருக்குறளின் கருத்தை முகந்து எழுந்ததாகும்.

நிதர்சனம் — கண்ணால் காண்பது. நிதரிசன அணியைத் தமிழ் நூலார் 'காட்சியணி' என்பர். (கூஅ)

நக. புணர்நிலையணி

அரு. வினைபண் பெனஇவை இருபொருட்(கு) ஒன்றே
புணர மொழிவது புணர்நிலை யாகும்.

எ - ன், நிறுத்த முறையானே புணர்நிலை என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: வினையானும் பண்பானும் இரண்டு பொருளுக்கு ஒன்றே பொருந்தச் சொல்லுவது புணர்நிலை என்னும் அலங்காரமாம் எ - று.

அவற்றுள், (க) வினைப்புணர்நிலை

எ - டு : 'வேண்டுருவங் கொண்டு கருகி வெளிபரந்து
நீண்ட முகிலுடனே நீர்பொழிந்த - ஆண்டகையோர்
மேவல் விரும்பும் பெருநசையான் மெல்லாவி
காவல் புரிந்திருந்தோர் கண்'

இ - ள் : தான் வேண்டிய உருவத்தைக் கொண்டு கறுத்த நிறத்தை யுடையதாய் ஆகாயத்திலே பரந்து பெரிதாய் இருக்கப்பட்ட மழைமுகிலுடனே நீர் பொழியாநின்றன, பிறர் இச்சிக்கும் தன்மையை உடைத்தாகிய உருவத்தை யுடைத்தாய் அலங்கரித்து எழுதப்பட்ட மையோடு கூடிய வெண்மையான் நீண்டிருக்கப்பட்ட கண்கள் எ - று.

ஆண்மைத் தன்மையை யுடைய தலைவரைச் சேர்தலை விரும்பிய காதலாலே தம்முடைய மெல்லிய உயிர் போகாதபடி காக்குந் தொழில் மிக்கிருக்கின்ற மடவாருடைய கண் எனக் கூட்டுக.

(வி - ரை) இப்பாடற்கண் கூறப்பட்ட பொருள் இரண்டு. (க) முகில். (உ) கண். இவையிரண்டற்கும் 'நீர் பொழிந்த' என்னும் தொழில்பற்றிய ஒரு சொல்லே முடிக்கும் சொல்லாக அமைந்திருத்தலின் இது வினைப்புணர்நிலை யாயிற்று.

(உ) பண்புப்புணர்நிலை

எ - டு : 'பூங்காவிற் புள்ளொடுங்கும் புன்மாலைப் போழ்துடனே
நீங்காத வெம்மையவாய் நீண்டனவால் - தாங்காதல்
வைக்குந் துணைவர் [1]வருமவதி பார்த்தாவி
உய்க்குந் தமியார் உயிர்'

இ - ள் : காதலிக்கப்பட்ட துணைவர் வருங்காலம் பார்த்திருந்த மடவாருடைய உயிரானது, பூம்பொழிற்கண்ணே புட்களெல்லாம் ஒடுங்கப்பட்ட மாலைப் பொழுதுடனே, நீங்காத துயரஞ் செய்து, தானும் கழியாதே நின்றது எ - று.

'ஒன்றே மொழிவது' என்று ஒழியாது **'புணர மொழிவது'** என்ற மிகையால், மூன்றும் வேற்றுமை அதனோடு இயைந்த ஒருவினை எனப் பொருள்பட வரினே இவ்வலங்காரமாவது எனக் கொள்க.

(வி - ரை) இப்பாடற்கண் கூறப்பட்ட பொருள்கள் இரண்டு. (க) மாலைப் பொழுது. (உ) தமியார் உயிர். இவை யிரண்டற்கும் 'நீண்டன' என்னும் பண்புபற்றிய ஒரு சொல்லே முடிவாக அமைந்திருத்தலின், இது பண்புப் புணர்நிலை யாயிற்று.

'புணர மொழிவது' என்ற மிகையால் கூறப்பட்ட பொருள்:— நூற்பாவில் 'இருபொருட்கு ஒன்றே புணர மொழிவது' என்றிருப்பதால், இரு பொருள்கள் தனித்தனியே கூறப்பட்டிருக்க, அவற்றை ஒரு சொல் முடிக்க வரின் அது புணர்நிலையாம் என்றல் கூடாது. இங்ஙனம் கொள்ளின், பேருந்து வண்டிகளில் கைகளை வெளியே நீட்டல், புகை பிடித்தல் கூடாது என்பன போன்ற தொடர்கள் எல்லாம் புணர்நிலையாகக் கூற நேரும். ஆதலின் பொருள் இரண்டாக இருப்பினும் ஒன்று ஒன்றோடியைந்து மூன்றும் வேற்று

1. 'வரும்வழி' என்பதும், 'வருமாறு' என்பதும் பாடங்களாகும்.

மைக்குரிய உடனிகழ்ச்சிப் பொருள்பட நிற்க, அவையிரண்டும் ஒரு சொல்லால் முடியுமாறு இருப்பின் அதுவே புணர்நிலையாம் என்று கருத்தாகக் கொள்ள வேண்டும் என்பதாம்.

இங்குக் கூறப்பட்ட இரு பாடல்களிலும் முறையே 'முகிலுடனே கண் நீர்பொழிந்த' என்றும், 'மாலைப்போழ்துடனே தமியார் உயிர் நீண்டன' என்றும் இருபொருள்களும் உடனிகழ்ச்சிப் பொருளில் நின்று ஒரு சொல்லால் முடிந்திருப்பது காண்க. (ருக)

ருஉ. பரிவருத்தனையணி

அகூ. பொருள்பரி மாறுதல் பரிவருத் தனையே.

எ - ன், நிறுத்த முறையானே பரிவருத்தனை என்னும் அலங் காரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள் : பொருள்கள் ஒன்றற்கு ஒன்றுகொடுத்து, ஒன்று கொண்டனவாகச் சொல்லுவது பரிவருத்தனை என்னும் அலங் காரமாம் எ - று.

எ - டு : 'காமனை வென்றோன் சடைமதியும் கங்கையும்
தாம நிழலொன்று தாங்கொடுத்து - நாமப்
பருவா ளரவின் பணமணிகள் தோறும்
உருவா யிரம்பெற் றுள'

இ - ள் : காமனை வென்ற முக்கட் கடவுளுடைய சடைமீது உண்டாகிய மதியும், கங்கையும், வருத்தம் செய்யும் தன்மை உடைத்தாய்ப் பெரிதாய் இருக்கப்பட்ட ஒளியினை யுடைத்தாய் அங்கேயிருந்த அரவின் படங்களில் உண்டாகிய மணிகள் தோறும் தத்தம் உருவத்தைக் கொடுத்து, ஆயிரமாயிரம் உருவத்தைப் பெற்றன எ - று.

(வி - ரை) சிவபெருமான் தலைமீதுள்ள கங்கையும், மதியும், அரவின் மணி களுக்கு முன்னே தாந்தாம் கொடுத்த நிழல் ஒவ்வொன்றே. எனினும் அரவின் மணிகள்தோறும் அவ்வொவ்வொரு உருவமும் ஆயிரம் ஆயிரமாகக் காட்சி யளித்தன என்று கூறப்படுகின்றன. இங்ஙனம் கொடுத்தது ஒன்றாய்க், கொண்டது ஆயிரமாய்ப் பரிமாறிக்கொண்டிருத்தலின், இது பரிவருத்தனை யாயிற்று.

பரிவருத்தனை — ஒன்றைக் கொடுத்து வேறொன்றை வாங்குதல். இப் பாடற்கண் கொடுத்தது குறைவாய்க் கொண்டது மிகையாய்ப் பரிவருத்தனை செய்யப்பட்டுள்ளது.

'சீரினும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறா
நோயும் பசலையும் தந்து' (குறள் - ககஅரு)

என்னும் திருக்குறளில் கொள்வதும் மிகை கொளாது, கொடுப்பதும் குறை கொடாது சமமாய்ப் பரிவருத்தனை செய்யப் பெற்றிருத்தல் அறிந்து இன்புறற் குரியது. பிறவும் தமபோற் பேணிச் செய்வதே வாணிகம் என அறிவுறுத்திய பெரியவர் திருவள்ளுவர் ஆதலின், தாம் கூறும் அணியிலும் அகவாழ்விலும் கூட அந்நெறியைக் கடைப்பிடித்துள்ளார் என்பதை நினையுந்தொறும் பெரு மிதமும் மகிழ்வும் ஏற்படுகின்றன. (ருo)

ங ங. வாழ்த்தணி

அஎ. இன்னார்க்(கு) இன்ன(து) இயைக வென்றுதாம்
முன்னியது கிளத்தல் வாழ்த்தென மொழிப.

எ - ன், நிறுத்த முறையானே வாழ்த்து என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள் : இன்ன தன்மையை உடையார்க்கு இன்னது நிகழ்க என்று கவிகள் தாம் கருதியதனை விதிப்பது, வாழ்த்து என்னும் அலங்காரம் என்று சொல்லுவர் புலவர் எ - று.

எ - டு : 'மூவாத் தமிழ்பயந்த முன்னூல் முனிவாழி!
ஆவாழி! வாழி அருமறையோர்! - காவிரிநாட்(டு)
அண்ணல் அனபாயன் வாழி! அவன்குடைக்கீழ்
மண்ணுலகில் வாழி மழை'

முன்னூல் முனி - அகத்தியன்.

(வி - ரை) இ - ள் : அழியாத தமிழைத் தோற்றுவித்த பழைய நூல்களை யுணர்ந்த அகத்திய முனிவன் வாழ்க; ஆனிரைகள் வாழ்க; அரிய வேதங்களை யுணர்ந்த அந்தணர்கள் வாழ்க; காவிரி சூழ்ந்த சோழ நாட்டின் தலைவனான அனபாயன் வாழ்க; அவனுடைய ஆட்சிக்கு உட்பட்ட நிலவுலகில் மழையானது என்றும் பொய்யாது வாழ்க என்பதாம்.

இப்பாடற்கண் அனபாயனுக்கும் அவனுடைய நாட்டிற்கும் இன்றியமையாதனவாயுள்ள மொழி, மழை, சான்றோர்கள் ஆகிய அனைத்தும் வாழ்க என வாழ்த்தியுள்ளமையின், இதுவாழ்த்தணி யாயிற்று.

முன்னியது- கருதியது; 'முன்னியவள் நமக்கு முன் சுரக்கும் இன்னருளே என்னப் பொழியாய் மழை யேலோர் எம்பாவாய்' என்றவிடத்தும் இது இப் பொருள்படுதல் காண்க. (சுக)

ஙச. சங்கீரணவணி

அஅ. மொழியப் பட்ட அணிபல தம்முள்
[1]தழுவ வுரைப்பது சங்கீ ரணமே.

எ - ன், நிறுத்த முறையானே சங்கீரணம் என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள் : மேற் சொல்லப்பட்ட அலங்காரங்கள் பலவும் தம்முள் பொருந்த உரைப்பது சங்கீரணம் என்னும் அலங்காரமாம் எ - று.

எ - டு : 'தண்டுறைநீர் நின்ற தவத்தால் அளிமருவு
புண்டரிகம் நின்வதனம் போன்றதால் - உண்டோ!
பயின்றோர் உளம்பருகும் பால்மொழியாய்! பார்மேல்
முயன்றால் முடியாப் பொருள்'

இ - ள் : குளிர்ந்த துறைநீரிலே தவம் புரிந்த இதனாலே வண்டு மருவப்பட்ட தாமரை நின் முகமண்டலத்தை ஒப்பப்

1. 'தழுவ வைப்பது' என்பதும் பாடம்.

பெறுதலால், அணைந்தார் உள்ளத்தை வவ்வும் பால் போன்ற மொழியினை உடையாய்! உலகத்தில் முயற்சியால் முடியாத பொருள் யாதுமில்லை எ - று.

'உண்டோ' என்பதற்கு இல்லை எனப் பொருள் கொள்க.

இதனுள், 'தண்டுறை நீர் நின்ற தவம்' என்பது தற்குறிப் பேற்றம். 'தவத்தால்' என்பது காரகவேது. 'அளிமருவு' என்பது சிலேடை. 'புண்டரிகம் நின்வதனம் போலும்' என்பது உவமை. 'உண்டோ முயன்றால் முடியாப் பொருள்' என்பது வேற்றுப் பொருள் வைப்பு. 'உளம் பருகும் பால் மொழியாய்' என்பது சுவை. இப்பாட்டிற்கு இவ்வண்ணமே பல அலங்காரங்களும் காண்க.

இஃது, உறுப்பனைத்தும் கூட்டிய கலவை போல்வதொரு தன்மைத்தாய், ஒன்றற்கு மிகுதி தோன்றாமல் உரைப்பதாம் எனக் கொள்க. அல்லதூஉம், சந்தனத்தோடு கருப்பூரம் விரவினும், மான்மதத்தோடு கருப்பூரம் விரவினும், சந்தனமும், மான்மதமும் என்பதல்லது கலவை எனப்படா; அவ்வாறே இரண்டு அலங்காரம் கூடின் இவ்வலங்காரம் எனப்படாது; பல அலங்காரங்களும், இரண்டிறந்தனவே கூடின், இவ்வலங்கார மாவது. இரண்டிறந்த பல என்பதே ஈண்டு ஆசிரியர் கருத்து எனக் கொள்க. (சுஉ)

உவமை உருவகங்கட்குப் புறனடை

அசு. ஒப்புமை யில்லதும் ஐயமும் உவமையில்
செப்பிய திறமும் உவம வுருவகமும்
உருவகத் தடக்கலும் உணர்ந்தனர் கொளலே.

எ - ன், உவமை உருவகங்களைக் குறித்து ஒரு புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள் : ஒப்புமை யில்லது என்பது - பொதுநீங்குவமை. அது 'தானே உவமை தனக்கு' எனவரும்.

ஐயம் என்பது - ஐயவுவமை. அது 'தாதளவி வண்டு' என வரும். இதனுள் தாமரை கொல்! முகங்கொல்! என்பது ஐயம்.

இவை யிரண்டும், முன்னர் உவமை யனைத்திற்கும் பொது வாக ஓதிய சூத்திரத்துள் 'பண்பு தொழில் பயன்' என்பன காரணமாய ஒன்றாகியும் பலவாகியும் வரும் பொருளோடு பொருள் இயைய வைத்து ஒப்புமை புலப்பட உரைப்பதே உவமை என்பதே கொண்டு, 'பொதுவாகிய குணம் முதலாகியன காரணமாகப் பொருளோடு பொருள் இயைய வைத்து ஒப்பித்தன இல்லை' என்று குற்றங் கூறப்படாது.

என்னை யெனின், 'தானே உவமை தனக்கு' என்றவழியும், ஒக்கும் பொருளை யெடுத்தே அவற்றினும் சிறந்தது இஃது என்று உரைத்த துணையே, அவற்றோடு ஒப்புமை வேண்டியதிலனாயின் முன்னர்க் கூறான்; அதனால் பொருளோடு பொருள் இயைய வைத்து அவற்றின் ஒப்புமை கருதியே உரைத்தானும் எனக் கொள்க. ஐயவுவமையும், 'தாமரைகொல் முகங்கொல்' என்ற வழித் தாமரைக்கும் முகத்திற்கும் பொதுவாகியதொரு தன்மை

கருதியே உரைத்தது. அவ்வாறன்றேல், தாமரையோடு முகத்திடை ஐயந்தோன்ற உரையான் என்பது.

இனி, **உவமவுருவகம்:** 'வதன மதியம் உதய மதியமே யொக்கும்' என்றவழி, முன் குணப்பொருளை முக்கியப் பொருளோடு உருவகம் செய்து 'வதன மதியம்' என்றான். பின்னர் முக்கியப் பொருளோடு உவமித்து 'உதய மதியமே யொக்கும்' என்றான் என்பது.

எனவே, முன்னர் உருவகஞ் செய்த அதனைப் பின்னரும் உவமிப்பது புனருத்தமாம் பிறவெனின்; ஆகாது அஃது ஒரு சொல்லுதல் வகைமையான், முன்னர் இயல்பாகிய விளக்கமும், கிளர்ச்சியும் நோக்கி முக்கியப் பொருளோடு குணப்பொருளை ஒற்றுமை கொளுத்தி உருவகஞ் செய்து, பின்னரும், செயற்கையால் உளவாகிய மதர்ப்பும் செம்மையும் நோக்கி, 'மதுநுகர்ந் தார் முகம் உதயமதியம் போலும்' என்று உவமித்தமையின் வேற்றுமை உடைத்தாதலால் உருவகத்துள்ளே அடக்கப்பட்டது. உவமைப்பாற் படுப்பினும் இஃது ஒக்கும். புனருத்தம் - கூறியது கூறல் என்னும் குற்றம்.

'ஐயமும் ஒப்புமை யில்லதும்' என்றது, முறை பிறழக் கூறிய **வதனன்**, இவ்வோத்தின் ஒழிபுள்ளன தழீஇக் கொள்க என்பது. அவை இடத்திற்கேற்ற உவமையும், காலத்திற்கேற்ற உவமையும், பொருளிற்கேற்ற உவமையும், பண்பிற்கேற்ற உவமையும், சாதிக்கேற்ற உவமையும், மரபிற்கேற்ற உவமையும், பிற வாறும் பொருத்தமுடையன சிறப்புடையன எனக் கொள்க. ஓத்து - இயல்.

அவற்றுள், (க) இடத்துக்கேற்றது

எ - டு: 'பரற்பகை யுழந்த நோயொடு சிவணி
மாற்பழுத் தன்ன மறுநீர் மொக்குள்' (பொருந: சச - ரு)

(வி - ரை) இ - ள்: பருக்கைக் கற்களாகிய பகையாலே வருந்தின நோயோடு பொருந்தி, கற்றாழை பழுத்தாற் போன்ற துளும்பும் நீரையுடைய கொப்புளங்கள் என்பதாம்.

இது பாலைநில வருணனை பற்றியதாகும். அந்நிலத்தில் நடப்பாருடைய காலில் ஏற்பட்ட கொப்புளங்களுக்கு, அந்நிலத்திலுள்ள கற்றாழைப் பழத்தை உவமை கூறினமையின், இது இடத்திற்கேற்ற உவமையாயிற்று. மால் - கற்றாழை.

(உ) காலத்துக்கேற்றது

எ - டு: '**கிழற்பகோப மல்க**' என்பது.

(வி - ரை) இச்செய்யுளையும் அதற்குரிய உரையையும் ருo - ஆம் பக்கத்திற் காண்க.

இச் செய்யுள் கார்கால வருணனை பற்றியது. ஆதலின் இதன்கண் அக்காலத்திற்கு உரிய இந்திரகோபப்பூச்சி, காயாமலர், ஆடும்மயில் ஆகியவை கூறப்பட்டு, அவற்றிற்கேற்ப உவமையும் கூறப்பட்டிருத்தலின், இது காலத்திற்கேற்ற உவமை யாயிற்று.

(ங) பொருளுக்கேற்றது

எ - டு: 'கடலும் மலையும் போலக் கரியோய்' என்பது.

(வி — ரை) இ - ள் : கடலும் மலையும் போலக் கரிய நிறம் உடையவனே! அல்லது அவை போல உயர்ந்த தோற்றம் உடையவனே! என்பதாம்.

திருமாலின் நிறத்திற்குக் கடல், மலை ஆகியவற்றின் கருமையை எடுத்துக் கூறியிருத்தலின், இது பொருளுக்கேற்ற உவமை யாயிற்று. திருமாலின் பெருமைக்கேற்ப மலையும், கடலும் கூறப்பட்டிருத்தல் பொருள் பற்றியதாம்.

(ச) பண்பிற்கேற்றது

எ - டு : புலிநா வன்ன புல்லிதழ்த் தாமரை' என்பது.

(வி -ரை) இ - ள்: புலியின் நாவை யொத்த செறிந்த இதழ்களையுடைய தாமரை என்பதாம்.

இரண்டிற்கும் உள்ள செம்மை நிறம்பற்றி உவமித்திருத்தலின், இது பண்புவமை யாயிற்று.

(ரு) சாதிக்கேற்றது

எ - டு : 'சேற்றுவளர் தாமரை பயந்த வொண்கேழ்
நூற்றிதழ் அலரின் நிரைகண் டன்ன
வேற்றுமை யில்லா விழுத்திணைப் பிறந்து
வீற்றிருந் தோரை யெண்ணுங் காலை' (புறம் - உஎ)

எனவும்,

'விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ(டு) ஏனை யவர்' (குறள் - சகo)

எனவும் வரும்.

(வி - ரை) 'சேற்றுவளர் ..... காலை' என்பதன் பொருள்: சேற்றிலே தோன்றிய சிறந்த நிறத்தையுடைய நூறு இதழ்களை யுடைய தாமரை மலர்களை வரிசையாகக் கண்டாற் போல, உயர்வு தாழ்வு இன்றி விழுமிய அரசர் குடியிற் பிறந்து அரசாண்ட அரசர்களை எண்ணும்பொழுது என்பதாம்.

இப்பகுதியில் சிறந்த அரச சாதிக்கேற்பச், சிறந்த நூற்றிதழ்த் தாமரைகளை உவமை கூறியிருத்தலின், இது சாதிக்கேற்ற உவமை யாயிற்று.

'விலங்கொடு .... யவர்' என்பதன் பொருள் : விலங்கோடு நோக்க மக்கள் எத்துணை நன்மையுடையர், அத்துணைத் தீமையுடையர் விளங்கிய நூலைக் கற்றாரோடு நோக்கக் கல்லாதவர் என்பதாம்.

இதன்கண் கல்லாத மனிதசாதிக்குக் (இனத்திற்குக்) கல்லாத விலங்கு சாதியை உவமை கூறியுள்ளமையின், இது சாதிக்கேற்ற உவமை யாயிற்று.

(சு) மரபிற்கேற்றது

எ -டு : 'கவிர் போலுஞ் செவ்வாய்' எனவும், 'பவளம் போலுஞ் செவ்வாய்' என்வும் வரும்; இவை செம்பருத்தியும் கரவீரமும் உரையாமையின்.

(வி - ரை) வாயின் சிவப்பிற்கு முருக்கிதழ், பவளம் ஆகியவைகளை உவமை கூறுதல் மரபாதலின், இவை மரபிற்கு ஏற்ற உவமையாயின.

கவிர் - முருக்கிதழ். இங்ஙனமன்றி செம்மைநிறம் உடைமைபற்றி செவ்வலரி, செம்பருத்தி போன்றவைகளை வாயின் சிவப்பிற்கு உவமை கூறல் மரபன்றாம்.

பிற அலங்காரங்கட்கும் இவ்வாறே ஏற்புடைமை அறிந்து பாடுவன சிறப்புடைய எனக் கொள்க.

அல்லதூஉம், பண்பு தொழில் பயன் என்பனவற்றின்மேல் நிகழும் சொல்லின்றி அவற்றிற்கு முதலாகிய பொருள் கூறவே, அவ்வாற்றாற் பண்பு முதலாயின பெறப்படும் உவமையும் உள. அவை வருமாறு:—

எ - டு: 'மயில்போல் மடப்பிடிபோல் மான்போல் மழலைக்
குயில்போல் ஒளிர்மென் கொடிபோல் - பயிலும்
கொலைவா ரணத்துங்கன் கோழிக்கோன் கொல்லி
மலைவாணர் காதல் மகள்'

இதனுள், மயில்போலும் இயலினை யுடையாள் எனவும், பிடி நடை போலும் நடையினை யுடையாள் எனவும், மான் நோக்குப் போலும் நோக்கினையுடையாள் எனவும், குயில் மொழி போலும் மொழியினை யுடையாள் எனவும் கொள்ளக் கிடந்தமை அறிந்து கொள்க. என்னை?

'சுட்டிக் கூறா வுவமை யாயின்
பொருளெதிர் புணர்த்துப் பொருந்துவ கொளலே'
(தொல் - பொருள் - உஎஅ)

என்பவாகலின்.

(வி - ரை) இ - ள்: பகைவரைக் கொல்லுதற்குரிய யானைப் படையால் சிறந்தவனும், உறையூருக்குத் தலைவனும் ஆன சோழனுடைய கொல்லி மலையில் வாழும் வேடுவரின் பெண், மயில் போன்றும், இளமை பொருந்திய பெண்யானை போன்றும், மானைப் போன்றும், மழலையுடைய குயில் போன்றும், விளங்குகின்ற மெல்லிய கொடி போன்றும் பயிலுவாள் என்பதாம்.

வேட்டுவப் பெண்ணிற்கு மயில், மடப்பிடி, குயில், கொடி ஆகிய நான்கு பொருள்களையும் உவமை கூறியிருப்பினும், இன்ன இன்ன காரணங்களால் இவை உவமை யாயின என்று கூறாதிருத்தலின் இவையனைத்தும் சுட்டிக்கூறா வுவமை யாயின. சுட்டிக் கூறாவுவமை - பொருளுக்கும் உவமைக்கும் இன்ன வகையால் ஒப்புமை என்பதைக் குறித்துச் சொல்லாத உவமை. இங்ஙனம் இருப்பனவற்றைப் படிப்பவர்கள்தான் பொருளையும் உவமையையும் ஒருங்கு நிறுத்தி இன்னதால் இது உவமையாயிற்று என அறிந்து கொள்ள வேண்டும் என்பது 'சுட்டிக்கூறா' என்ற நூற்பாவின் பொருளாகும்.

பெண்ணிற்கு மயில், பிடி, குயில், கொடி என்பன எவ்வகையில் உவமையாயின என்பதை உரையாசிரியரே மேல் விளக்கியிருத்தல் காண்க.

(கூரு)

ரு௫. பாவிகவணி

௯0. பாவிகம் என்பது காப்பியப் பண்பே.

எ - ன், நிறுத்த முறையானே பாவிகம் என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: பாவிகம் என்று சொல்லப்படுவது பொருள் தொடர்நிலைச் செய்யுள் திறத்துக் கவியால் கருதிச் செய்யுப்படுவதொரு குணம் எ - று.

அஃது, அத்தொடர்நிலைச் செய்யுள் முழுதும் நோக்கிக் கொள்ளப்படுவதல்லது, தனித்து ஒரு பாட்டால் நோக்கிக் கொள்ளப் புலப்படாதது.

எ - டு: 'பிறனில் விழைவோர் கிளையொடுங் கெடுப
பொறையிற் சிறந்த கவசம் இல்லை
வாய்மையிற் கடியதோர் வாளி யில்லை'

என்பது போலக் கிடப்பது.

அஃதேல், முன் அதிகாரச் சூத்திரத்துப் பிற அலங்காரங்களுடன் வைத்த இதனை, ஈண்டுப் புறனடையின் பின்னாக வைத்தது என்னை? யெனின், பிற அலங்காரங்கள் ஒரு பாட்டானே உணரப் புலப்படும்; இஃது அன்னதன்று ஆகலான்.

ஆசிரியன் வாழ்த்து என்னும் அலங்காரத்தின் பின்னரே [1]விரவியல் வைத்தது, முன்னரளவே விரவுவன என்பது அறிவித்தற்கும்; இஃது அன்னது அன்று என்பதற்கும், வேறாகத் தனித்து இலக்கியப் பாட்டு இன்று என்பது அறிவித்தற்கும் என்க.

(வி - ரை) 'பிறனில் விழைவோர் கிளையொடும் கெடுப' என்பது இராமாயணத்திலிருந்து அறியப்படுவதாகும். 'பொறையிற் சிறந்த கவசம் இல்லை' என்பது பாரதத்தால் அறியப்படுவதாகும். 'வாய்மையிற் கடியதோர் வாளியில்லை' என்பது அரிச்சந்திர புராணத்தால் அறியப்படுவதாகும்.

இதுகாறும் ஒரு பாடலைக் கொண்டு அணி கூறப்பட்டது. இவ்வணியோ ஒரு நூலைக்கொண்டு கூறப்படுவதாகும்.

இலக்கணம் அனைத்தும் கூறிப் புறனடை கூறலே மரபு. அங்ஙனமிருக்கப் புறனடையின் (அக) பின்னாக இவ்வணியைக் கூறியது, முன்னர்க் கூறப்பட்ட அணிகள் எல்லாம் ஒவ்வொரு பாடலைக் கொண்டே கூறப்படும்; இஃது அன்னதன்றி ஒரு நூலைக் கொண்டே கூறப்படும் என்பதைப் பெறுவதற்கேயாம்.

அடுத்துச் சங்கீரண அணி (விரவியல்) யின் பின்னாக இதனை வைத்ததற்குக் காரணம் கூறுகின்றார் உரையாசிரியர். அதற்கு அவர் தரும் காரணம் இரண்டு. (க) சங்கீரண அணி ஒருபாட்டைக் கொண்டே கூறப்படுவதா யிருப்பினும் அவ்வொரு பாட்டில் பல அணிகள் இருக்கும். இப்பாவிக அணியோ ஒரு நூலைக் கொண்டே கூறப்படுதலின், அந்நூலின்கண் பெரும்பாலும் எல்லா அணிகளும் விரவியிருக்கும் என்பதை அறிவிக்கவாம் என்பது. சங்கீரண அணியில் இரண்டிற்கு மேற்பட்ட பலஅணிகள் வரினும், ஒரு நூலையே நோக்க, ஒரு பாடலில் வரும் அணிகள் குறைவாகவே இருக்கும் என்பது கருத்து. (உ) சங்கீரண அணியைத் தனித்த பாடல் கொண்டு விளக்கலாம். ஆனால் இதனையோ ஒரு நூலைக்கொண்டு விளக்க முடியுமேயன்றித் தனித்த பாடல் கொண்டு விளக்க முடியாது. ஆதலின் இதற்குத் தனித்த இலக்கிய மேற்கோள் பாட்டு இல்லை என்பது.

சங்கீரண அணி எனினும் விரவியல் எனினும் ஒக்கும். (கூச)

பொருளணியியல் முற்றிற்று.

---

1. 'சங்கீரணம் வைத்தது' என்பதும் பாடம்.

ரு. சொல்லணியியல்

மடக்கு

௯௧. எழுத்தின் கூட்டம் இடைபிறி தின்றியும்
பெயர்த்தும்வேறு பொருள்தரின் மடக்கெனும் பெயர்த்தே.

என்பது சூத்திரம். இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின், சொல்லானும் அணிகளது இயல்பு உணர்த்தினமையிற் **சொல்லணியியல்** என்னும் பெயர்த்து. அஃதேல் குற்றமும் குணமும் ஈண்டே யன்றே கூறியது; இதனைச் சொல்லணியியல் என்றது என்னை? எனின், அவையுங் கூறினரேனும், அவை சிறுபான்மைய ஆகலானும், இத்துணைச் சிறப்புடையன அன்மையானும், சொல்லானும் அணிகளது தலைமையும், பன்மையும் நோக்கி அப்பெயர்த்தாயிற்று என்பது. என்னை?

'ஒருபெயர்ப் பொதுச்சொல் உள்பொருள் ஒழியத்
தெரிபுவேறு கிளத்தல் தலைமையும் பன்மையும்
உயர்திணை மருங்கினும் அஃறிணை மருங்கினும்'
(தொல் - சொல் - ௪௯)

என்பவாகலின்.

இவ்வோத்தினுள் இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின், பொதுவகையான் மடக்கு என்னும் அலங்காரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: எழுத்துக்களது தொகுதி, பிற எழுத்தானும், சொல்லானும், இடையிடாதும் இடையிட்டும் வந்து, பெயர்த்தும் வேறு பொருளை விளைப்பது மடக்கு என்னும் அலங்காரமாம் எ - று.

எழுத்துக்களது தொகுதி எனவே, இரண்டு முதல் எனைத்து எழுத்தானும் வருமெனக் கொள்க. 'பிறிதின்றியும்' என்பது எதிரது தழீஇய எச்சவும்மை. 'பெயர்த்தும்' என்பது இறந்தது தழீஇய எச்சவும்மை. மடக்கு - யமகம்; அஃதாவது, வந்த சொல்லே வருதல்.

(வி - ரை) 'ஒருபெயர்ப் பொதுச்சொல்' என்ற நூற்பாவின் கருத்து:— பல பொருட்கும் பொதுவாகியதொரு இடத்தையோ, அன்றிப் பொருளையோ அப்பொதுமையினின்றும் நீக்கிச் சிறப்புச் சொல்லாற் கூறின், அது ஒருபெயர்ப் பொதுச்சொல் எனப்படும். அத்தகைய 'சிறப்புச் சொல் தலைமைபற்றியோ, அன்றிப் பன்மைபற்றியோ அமையும். இந்நெறி இருதிணைக்கும் ஒக்கும் என்பது. இவ்வியலில் சொல்லணிகள், வழுக்கள், மலைவுகள் இவற்றிற்குரிய அமைதிகள் அனைத்தும் சொல்லப்பட்டுள்ளன. இங்ஙனம் பல பொருளையும் கூறும் இவ்வியலுக்குச் சொல்லணியியல் என்று ஒன்றற்குரிய பெயரைக் கொடுத்தல் பொருத்தமின்றேனும், மேற்காட்டிய இலக்கண விதிப்படி ஏனையவற்றினும் சொல்லணிக்குத் தலைமையும் சிறப்பும் உளவாதலின் அவ்வகையால் பொருத்தமாயிற்று என்பதாம்.

யமகம், மடக்கு என்பன ஒரு பொருளன. முன்னது வடமொழிப் பெயர்; முதனூலில் எடுத்தாளும் பெயர். பின்னையது தமிழ்ப் பெயர்; இந்நூலில் எடுத்தாளும் பெயர். (க)

மடக்கு நான்கடிகளிலும் வரும் எனல்

௬௨. அதுதான்
ஓரடி முதலா நான்கடி காறும்
சேரும் என்ப தெளிந்திசி னோரே.

எ - ன், இதுவும் அதனையே வகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: அம்மடக்கு, நான்கடிச் செய்யுளுள்ளே மடக்குங்கால், ஓரடிக்கண்ணும், ஈரடிக்கண்ணும், மூன்றடிக்கண்ணும், நான்கடிக்கண்ணும் நடக்குமென்று சொல்லுவர் தெளிந்தோர் எ - று.

'நான்கடிச் செய்யுள்' என்பது ஆற்றலாற் போந்த பொருள். ஓரடிக்கண் வருவன :— முதலடிக்கண்ணும், இரண்டாமடிக் கண்ணும், மூன்றாமடிக்கண்ணும், நான்காமடிக்கண்ணும் வருவனவாம். அவை முன்னர்க் காட்டுதும். (உ)

அதன்வகை

௬௩. ஆதி இடைகடை ஆதியோ(டு) இடைகடை
இடையொடு கடைமுழு தெனஎழு வகைத்தே.

எ - ன், இதுவுமது.

இ - ள்: அம்மடக்கு, ஆதிமடக்கும், இடைமடக்கும், கடைமடக்கும், ஆதியோடு இடைமடக்கும், ஆதியோடு கடைமடக்கும், இடையோடு கடைமடக்கும், முழுதும் மடக்கும் என எழுவகைப்படும் எ - று. (ங)

அதன்விரி

௬௪. ஓரடி யொழிந்தன தேருங் காலை
இணைமுதல் விகற்பம் ஏழும் நான்கும்
அடைவுறும் பெற்றியின் அறியத் தோன்றும்.

எ - ன், இதுவுமது.

இ - ள்: ஓரடி மடக்கு ஒழிந்தன ஆராயுங்காலத்துத் தொடையின் இணைமுதலாகிய விகற்பத்தொடை ஏழும், அவை ஒழிந்த நான்குமாகிய பதினொன்றும் உண்டாகி விளங்குவது போல விளங்கித் தோன்றும் எ - று.

அவை :— முதலீரடிக்கண்ணும் மடக்குதலும், முதலடிக் கண்ணும் மூன்றாமடிக்கண்ணும் மடக்குதலும், முதலடிக்கண்ணும் நான்காமடிக்கண்ணும் மடக்குதலும், கடையீரடிக் கண்ணும் மடக்குதலும், இடையீரடிக் கண்ணும் மடக்குதலும், இரண்டாமடிக்கண்ணும் நான்காமடிக்கண்ணும் மடக்குதலும் என்னும் இரண்டடி மடக்கு ஆறும்; ஈற்றடியொழித்து ஏனை மூன்றடிக்கண்ணும் மடக்குதலும், முதலடி யொழித்து ஏனை மூன்றடிக் கண்ணும் மடக்குதலும், முதலயலடி யொழித்து ஏனைய மூன்றடிக்கண்ணும் மடக்குதலும், ஈற்றயலடி யொழித்து ஏனை

மூன்றடிக் கண்ணும் மடக்குதலும் என மூன்றடி மடக்கு நான்கும், நான்கடியும் மடக்கிய முற்றுமடக்கு ஒன்றும் ஆகிய பதினொன்றும்.

யாப்பதிகாரத்துள், தொடை விகற்பங்கட்கு நாற்சீரடியுள் ஓதியவதனை நான்கடிச் செய்யுளுள் ஓதினார், 'ஒப்பின் முடித்தல்' என்னும் தந்திரவுத்தியான். இப்பதினொன்றும், ஓரடி மடக்கு நான்கும் ஆகிய பதினைந்தும், மேற்கூறிய (கூ௩ - ஆம் நூற்பா) ஏழு கூறுபாட்டோடு கூட்ட நூற்றைந்து வகைப்படும்.

அவை, இடையிட்டு வருவனவும், இடையிடாது வருவனவும், இடையிட்டும் இடையிடாதும் வருவனவும் ஆகிய மூவகையோடும் கூட்ட முந்நூற்றிருபத்தைந்து வகைப்படும்.

(வி - ரை) கூஉ ஆம் நூற்பா முதல் இந்நூற்பாவரை கூறப்பட்ட தொடைகளை நான்கு வகையாகப் பிரிக்கலாம். (க) ஓரடி மடக்கு (உ) ஈரடி மடக்கு (௩) மூவடி மடக்கு (௪) முற்று மடக்கு என்பன.

க. மேற்கூறிய ஓரடிமடக்கு நான்கு வகைப்படும். (1) முதலடியில் மட்டும் மடங்கி வருவது. (2) இரண்டாமடியில் மட்டும் மடங்கி வருவது. (3) மூன்றாமடியில் மட்டும் மடங்கி வருவது. (4) நான்காமடியில் மட்டும் மடங்கி வருவது.

உ. ஈரடி மடக்கு ஆறு வகைப்படும். (1) முதல் ஈரடியில் மட்டும் மடங்கி வருவது. (2) முதலடியிலும் மூன்றாமடியிலும் மட்டும் மடங்கி வருவது. (3) முதலடியிலும் நான்காமடியிலும் மட்டும் மடங்கி வருவது. (4) இறுதி யிரண்டடியில் மட்டும் மடங்கி வருவது. (5) இடையிலுள்ள இரண்டடியில் மட்டும் மடங்கி வருவது. (6) இரண்டாமடியிலும் நான்காமடியிலும் மட்டும் மடங்கி வருவது.

௩. மூவடி மடக்கு நான்கு வகைப்படும். (1) ஈற்றடி யொழித்து ஏனைய மூன்றடியில் மடங்கி வருவது. (2) முதலடி யொழித்து ஏனைய மூன்றடியில் மடங்கி வருவது. (3) முதலடி, மூன்றாமடி, நான்காமடியில் மட்டும் மடங்கி வருவது. (4) முதலடி, இரண்டாமடி, நான்காமடியில் மட்டும் மடங்கி வருவது.

௪. முற்றுமடக்கு ஒன்று. ஆகப் பதினைந்து வகைப்படும்.

இணை முதலாகிய விகற்பத் தொடை ஏழு:— இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று என்பன.

ஒப்பின் முடித்தல் — ஒன்றற்குச் சொல்லப்பட்ட இலக்கணம், வேறொன்றற்கும் ஒத்து வருமாயின், அதற்கும் அதுவே இலக்கணமாகக் கொண்டு, உடன் சேர்த்துக் கூறுதலாகும். இவ்வுத்தியின்படி யாப்பிலக்கணத்தில் நாற்சீரடிக்குக் கூறப்பட்ட இணைமுதலாகிய ஏழு விகற்பங்களையும், அணியிலக்கணமாகிய இதனுள் நான்கடியினும் கொள்ளப்பட்டதாம். மேற்கூறிய பதினைந்து மடக்குகளுள் இவ்விகற்பங்களைப் பெற்று வரும் மடக்குகள் ஏழாம். அவையாவன :—

க. ஈரடி மடக்குகளில் வருவன:—

(1) முதல் ஈரடியில் மட்டும் மடங்கி வருவது — இணை.

(2) முதலடியிலும் மூன்றாமடியிலும் மட்டும் மடங்கி வருவது - பொழிப்பு.

(3) முதலடியிலும் நான்காமடியிலும் மட்டும் மடங்கி வருவது - ஒரூஉ.

உ. மூன்றடி மடக்குகளில் வருவன :—

(1) ஈற்றடி யொழித்து ஏனை மூன்றடியில் மட்டும் மடங்கி வருவது - கூழை.

(2) முதலடி, மூன்றாம் அடி, நான்காம் அடியில் மட்டும் மடங்கி வருவது – மேற்கதுவாய்.

(3) முதலடி, இரண்டாம் அடி, நான்காம் அடியில் மட்டும் மடங்கி வருவது - கீழ்க்கதுவாய்.

ங. நான்கடியிலும் வரும் மடக்கு : - முற்று மடக்கு.

இவை ஏழும் ஒழிந்த நான்கு மடக்குகள் இவ்வினை முதலாய விகற்பத்தை ஏலாதனவாம்.

இப்பதினைந்து மடக்குகளும், மேல் கூங ஆம் நூற்பாவில் கூறப்பட்ட ஏழு கூறுபாட்டோடும் வர $(15 \times 7 = 105)$ நூற்றைந்து மடக்குகளாகும். இந்த நூற்றைந்தும், இடையிட்டு வருவன, இடையிடாது வருவன, இடையிட்டும் இடையிடாதும் வருவனவாகிய மூவகையோடும் விகற்பிக்க $(105 \times 3 = 315)$ முந்நூற்றொருபத்தைந்து மடக்குகளாகும்.

அவற்றுள் சில வருமாறு :—

க. ஓரடி முதன்மடக்கு

(க) முதலடி முதன்மடக்கு

எ - டு : 'துறைவா துறைவார் பொழிற்றுணைவர் நீங்க
உறைவார்க்கும் உண்டாங்கொல்? சேவல் - சிறைவாங்கிப்
பேடைக் குருகாரப் புல்லும் பிறங்கிருள்வாய்
வாடைக் குருகா மனம்'

இ - ள் : நெய்தல்நிலத் தலைவனே! துறையின்கண் பெருத் திருக்கப்பட்ட பொழிலிடத்துத் தலைவர் பிரியத் தனித்திருப் பார்க்கும் உண்டாகுமோ? சேவற்குருகானது தன் சிறகை வளைத் துப் பேடைக் குருகை இறுகப்புல்லும் மிக்க இருளினையுடைய யாமத்துக்கண் வாடைக் காற்று வந்தால் கரையாத மனம் எ - று.

இதில் முதலடி முதலில், 'துறைவா துறைவா' என ஒரே சொல் மடங்கி வந்தமை காண்க.

(வி - ரை) இப்பாடல் தலைவி பிரிவிடையாற்றாள் எனத் தோழி தலைவற்கு உரைத்ததாகும். துறைவா - நெய்தல் நிலத்தவனே!, பெயர்விளி. துறை - கடல் துறையினிடத்து. வார் - பெருத்திருக்கப்பட்ட.

(உ) இரண்டாமடி முதன்மடக்கு

எ - டு : 'கனிவா யிவள்புலம்பக் காவல!நீ நீங்கில்
இனியார் இனியார் எமக்குப் - பனிநாள்
இருவாராத் தாங்கும் உயிரன்றி எங்குண்(டு)
ஒருவாராத் தாங்கும் உயிர்'

இ - ள் : கனிபோன்ற மொழியினை யுடைய இவள் புலம்பும் படி அரசனே! நீ பிரிந்த காலத்து எங்களுக்கு இனியராய் இனி

மையான சொற்களைச் சொல்லிக் காக்குந் தலைவர் இனி யாவர்? பனிக்காலத்துத் தம்மிற் புணர்ந்து பிரியாதிருந்த இருவரும் கூடித் தாங்கா நிற்கும் உயிரல்லது, ஒருதிறத்தாராகப் பிரிந்திருந்த மடவார் தாங்கும் உயிர் எக்காலத்து எவ்விடத்து உண்டு சொல் வாயாக! எ - று.

இதன் இரண்டாமடியில் 'இனியார் இனியார்' என ஒரு சொல் மடங்கி வந்தமை காண்க.

(வி - ரை) இப்பாடல் தோழி, தலைமகற்குத் தலைவியது ஆற்றாமை கூறிச் செலவழுங்குவித்ததாகும். முன்னது இனியார் என ஒரு சொல்லாய்ப் பொருள் கொள்ள நின்றது; பின்னையது இனி யார்? எனப் பிரித்துப் பொருள் கொள்ள நின்றது.

(ங) மூன்றாமடி முதன்மடக்கு

எ - டு : 'தேங்கானல் முத்தலைக்குந் தில்லைப் பெருந்தகைக்கு
ஓங்காரத் துட்பொருளாம் ஒண்சுடர்க்கு - நீங்கா
மருளா மருளா தரித்துரைக்கும் மாற்றம்
பொருளாம் புனைமாலை யாம்'

இ - ள் : தேனை யுடைத்தாகிய கழிக்கானற்கண் உண்டாகிய முத்தம் வந்தலைக்கப்படாநின்ற தில்லை மூதூர்ப் பெரியோனுக்குப் பிரணவத்தின் உட்பொருளாயிருக்கப்பட்ட ஒள்ளிய சோதி வடிவாகிய கடவுளுக்கு இடையறாத ஆசையாகிய மயக்கத்தினை மேற்கொண்டு ஒருவன் சொல்லுகிற அறிவழிந்தசொல் பொருளுமாம்; பூணப்பட்ட மாலையுமாம் எ - று.

இதன் மூன்றாமடியில் 'மருளா மருளா' என்று ஒருமொழி மடங்கி இருத்தல் காண்க.

(வி - ரை) இப்பாடற்கண் உள்ள மருளா, மருளா என்னும் சொற்களுள் முன்னையது மருள் ஆம் எனவும், பின்னையது மருள் ஆதரித்து எனவும் பிரித்துப் பொருள் கொள்ள நின்றன. தில்லைப் பெருமான்மீது ஆசையாகிய மயக்கம் கொண்டு உரைக்கும் சொல் என்பது பக்தி கொண்டு உரைக்கும் சொற்களாகும். தன்னை மறந்து தன்னுமம் கெட்டுத் தலைவன் தாளிலேயே தலைப்பட்டு உரைக்கும் சொற்கள் இறைவனிடத்து அன்பு பூண்டொழுக வேண்டுவார்க்குச் சிறந்த பொருளுரையாகும். இறைவன் பக்தி வலையிற் படுவோன் ஆதலின் அச்சொற்கள் அவனுக்கு மலையுமாகும்.

(ச) ஈற்றடி முதன்மடக்கு

எ - டு : 'இவளளவுந் தீயுமிழ்வ(து) என்கொலோ தோயும்
கவள மதமான் கடத்தின் — திவளும்
மலையார் புனலருவி கீயணுகா நாளில்
மலையார மலையா நிலம்'

இ - ள் : தலைவனே! நீ இவளை வந்து அணையாத போது, கவளத்தை யுண்ணும் மதயானையின் கவுளிடத்துத் தோயும் மதநீரைப் போலப் பெருகிப் புரண்டு பாறை நிரம்பி வரும் நீரருவிகள் மோதாநிற்கப்பெற்ற பொதியமலைக்கண்ணே பிறந்து எல்லார்க்கும் குளிர்ச்சியைச் செய்கின்ற

தென்றல், இவளளவும் அனலைச் சொரிகின்ற காரணம் என்? சொல்லுவாயாக எ - று.

இதன் ஈற்றடியில் 'மலையா மலையா' என்று ஒருசொல் மடங்கினமை காண்க.

இவை நான்கும் ஓரடி முதன்மடக்கு.

(வி - ரை) இப்பாடல் பிரிந்து மீண்ட தலைவனிடம் தோழி சொல்லியதாகும். ஈற்றடியில் உள்ள தொடர் மலையா, மலையாநிலம் எனப் பிரித்துப் பொருள் கொள்ள நின்றது. மலையா — (அருவி) மோதா நிற்கப்பெற்ற. அருவி மலையா எனக்கூட்டுக. மலயம் + அநிலம் = மலயாநிலம். மலயம் - மலை; பொதியமலை. அநிலம் - காற்று.

உ. ஈரடி முதன்மடக்கு

(க) முதலடியும் இரண்டாமடியும் முதன்மடக்கு

எ - டு : 'நினையா நினையா நிறைபோயகலா
வினையா வினையா மிலமால் - அனையாள்
குரவாருங் கூந்தல் குமுதவாய்க் கொம்பல்
புரவாள நீபிரிந்த போது'

இ - ள் : தலைவனே! குரவம்பூவினை யுடைத்தாகிய கூந்தலினையும், அல்லி மலரை யொத்த வாயினையும், உடைத்தாய் இருப்பதொரு வஞ்சிக்கொம்பு உண்டாயின், அக்கொம்பு போன்றுளாய இவளை நீ பிரிந்த பொழுதே நின்னை யாங்கள் நினைத்து எங்கள் நிறையாயினது எங்களை விட்டு நீங்கி வருந்தி ஒரு செய்தியும் அறியோமாயினேம் எ - று.

ஆதலால் எங்களைப் பிரியாது ஒழிவாயாக என்பது குறிப்பெச்சம். 'நின்னை' என்பது 'நினை' என விகாரமாயிற்று.

இதன் முதலடியில் 'நினையா நினையா' என்றும், இரண்டாமடியில் 'வினையா வினையா' என்றும் மடக்குகள் வந்தமை காண்க.

(வி - ரை) இது தலைவனைத் தோழி செலவழுங்குவித்ததாகும். முதலடியில் நினை யாம் நினையா எனவும், இரண்டாமடியில் இனையா வினையாம் எனவும் பிரித்துப் பொருள் கொள்ள நின்றன. இனையா - இனைந்து; வருந்தி.

(உ) முதலடியும் மூன்றாமடியும் முதன்மடக்கு

எ - டு : 'அடையார் அடையார் அரணழித்தற் கின்னல்
இடையாடு நெஞ்சமே! யேழை - உடையோர்
மயிலா மயிலா மதர்நெடுங்கண் மாற்றம்
குயிலாமென் றெண்ணல் குழைந்து'

இ - ள் : ஊசற்கயிறு ஒப்ப இடையாடும் உள்ளமே! நீ தலைவியினுடைய சாயலை மயிலாம் என்றும், அவளது மதர்த்த நெடிய கண்ணை வேலாம் என்றும், மொழியானது குயிலாம் என்றும், இளகி நினையாது ஒழிவாயாக; அன்றி, நினைத்தியாயின் பகைவர் அடையும் அரிய அரணை அழித்தற்கு வருத்தமாம் எ - று.

இதன் முதலடியில் 'அடையார் அடையார்' எனவும், மூன்றுமடியில் 'மயிலா மயிலா' எனவும் மடக்குகள் வந்தமை காண்க.

(வி - ரை) இப்பாடல் துணைவயிற் பிரிந்த தலைவன் பாசறைக்கண் இருப்புழி, தன் நெஞ்சிற்குக் கூறியதாகும். 'தூதும் துணைமையும் ஏதுவாகச் சென்றோன் அவ்வினை நின்று நீட்டித்துழிப் புலந்து பாசறை புலம்பவும் பெறுமே' என்ற விதியால் இது தலைவனது பெருமைக்கு இழுக்காகாமை அறிக.

முதலடியில் அடையார், அடை ஆர் அரணம் எனவும், மூன்றும் அடியில் மயிலாம், அயிலாம் எனவும் பிரித்துப் பொருள் கொள்ள நின்றன. அடையார் - பகைவர். அடை ஆர் அரணம் - அடைதற்கரியமதில். அயில் - வேல்.

(ங) முதலடியும் ஈற்றடியும் முதன்மடக்கு

எ - டு : 'மானவா மானவா நோக்கின் மதுகாஞ்சூழ்
கானவாங் கூந்தலெங் காரிகைக்குத் - தேனே
பொழியாரத் தார்மேலும் நின்புயத்து மேலும்
கழியா கழியா தாவு'

இ - ள் : மனுகுல வேந்தனே! மான்கள் ஆசைப்படும் நோக்கத்தையும், வண்டுகள் மதுவுண்ணும்படி சூழும் மணம் பொருந்திய கூந்தலையும் உடைய எமது காரிகையாட்கு, மதுப் பொழியும் நினது அழகிய ஆத்தித் தார்க்கண்ணும், நினது புயத்தின்கண்ணும் மிக்க ஆசை நீங்காது எ - று.

இதன் முதலடி முதலில் 'மானவா மானவா' எனவும், ஈற்றடி முதலில் 'கழியா கழியா' எனவும் சொற்கள் மடங்கினமை காண்க.

(வி - ரை) இது தலைவியின் வேட்கையைத் தோழி தலைவற்குக் கூறியதாகும். முதலடியில் மானவா, மான் அவா என்றும், நான்காம் அடியில் கழியா, கழி ஆதரவு என்றும் பிரித்துப் பொருள் கொள்ள நின்றன. மானவன் - மனு வேந்தனின் மரபில் தோன்றியவன். சூரியனின் மகன் மனு. அவன் மரபில் வந்தவர்கள் சோழர்கள். ஆதலின் சோழர்கள் மனுவழியில் வந்தவராவர். இம்முறையில் சூரிய வமிசத்தவருமாவர். கழி ஆதரவு கழியா எனக்கூட்டுக. கழி - மிகுதிப்பொருள் தருவதோர் இடைச்சொல். 'கழியாது' என்பது 'கழியா' எனக் கடைக் குறைந்து நின்றது.

(ச) மூன்றுமடியும் நான்காமடியும் முதன்மடக்கு

எ - டு : 'மாதருயிர் தாங்க வள்ளல் வருநெறியில்
பேதுறவு செய்யும் பெரும்பாந்தள் - யாதும்'
வரையா வரையா மெனுமா மதமா
விரையா விரையா வெழும்'

இ - ள் : வள்ளலே! இவள் உயிரைத் தாங்குதல் காரணமாக நீ வரும் வழியில், நடுக்கஞ் செய்யவற்றாகிய பெரும்பாந்தளானவை, யாதொன்றையும் வரையாதே கொல்லவற்றாகிய பெரிய மலை போன்ற மதத்தையுடைய யானைகளை இரையாக நினைந்து இரைந்து கொண்டு வரும் எ - று.

இதன் மூன்றுமடி முதலில் 'வரையா வரையா' எனவும், நான்காமடி முதலில் 'விரையா விரையா' எனவும் மடங்கினமை காண்க.

(வி - ரை) இது தோழி தலைவற்கு ஆற்றது இன்னுமை கூறி வரவு விலக்குவித்ததாகும். யாதும் வரையா - கொல்லுதல், கொல்லாமை என்னும் வரையறை யின்றி, யாவற்றையும் கொல்ல வல்ல. வரை ஆம் எனும் மா மதமா-மலை என்னும்படியான பெரிய மதம் பொருந்திய யானை. இரையா -இரையாக. 'இரையாக' என்பது 'இரையா' எனக் குறைந்து நின்றது. இரையா - இரைத்து (ஒலித்து).

(ரு) இரண்டாமடியும் மூன்றுமடியும் முதன்மடக்கு

எ - டு: 'குரவார் குழலாள் குவிமென் முலைதாம்
விரவா விரவாமென் தென்றல் - உரவா
வரவா வரவா மெனநினையாய் வையம்
புரவாளர்க்(கு) ஈதோ புகழ்'

இ - ள்: குராம்போதினையுடைய குழலாள் ஆகத்துத் திரண்ட மெல்லிய முலையின்மேல் நீ கூடாத இரவின்கண் உண்டாகிய மெத்தென்ற தென்றல் வரவு அதனைப் பாயும் பாம்பாகுமென நினையாதே பிரிகின்றுய், தலைவனே! வையங் காவலைப் புரிந்த தலைவற்கு இதுவோ புகழ் எ - று.

இதன் இரண்டாமடி முதலில் 'விரவா விரவா' எனவும், மூன்றுமடி முதலில் 'வரவா வரவா' எனவும் மடக்குகள் வருதல் காண்க.

(வி - ரை) இது பிரிவின்கண் தோழி, தலைவற்குத் தலைவியது ஆற்றுமை கூறிச் செலவழுங்குவித்ததாகும். விரவா - கலவாத; கூடாத. இரவு ஆம் - இரவில் தோன்றுகின்ற. தென்றல் வரவு எனக் கூட்டுக. வரவு அரவாம் - பாயும் பாம்பாகும்.

(சு) இரண்டாமடியும் ஈற்றடியும் முதன்மடக்கு

எ - டு: 'மழையார் கொடைத்தடக்கை வாளபயன் எங்கோன்
விழையார் விழையார் மெல்லாடை - குழையார்
தழையாம் உணவுங் கனியாம் இனமு
முழையா முழையா முறை'

இ - ள்: மழை போன்று மிகக் கொடுக்கவல்ல பெரிய கையினையும், ஒளியினையும் உடைய அபயனுகிய எம்மரசனைப் பகைத்தவர் விரும்பி உடுக்கின்ற அரிய மெல்லிய ஆடை தளிரார்ந்த தழையாம்; உணவும் கனிகளாம்; அவர்களுக்குச் சுற்றமும் மான்களாம்; இருப்பிடமும் மலைக்குகையாம் எ - று.

இதன் இரண்டாமடி முதலில் 'விழையார் விழையார்' எனவும், ஈற்றடி முதலில் 'முழையா முழையா' எனவும் மடக்குகள் வந்தமை காண்க.

இவை ஆறும் ஈரடி முதன்மடக்கு.

(வி - ரை) இது அனபாயனின் படை வீரன் ஒருவன் அவனுடைய மறத்தை எடுத்துரைப்பதாகும். விழையார் - விரும்பாதவர்; பகைவர். விழை ஆர்-விருப்பத்தைத் தருகின்ற. உழையாம் - மானும். முழை ஆம்-குகையாகும்,

௩. மூவடி முதன்மடக்கு

(க) ஈற்றடி யொழித்து ஏனை மூன்றடியும் முதன்மடக்கு

எ - டு : 'இறைவா இறைவால் வளைகாத் திருந்தியார்
உறைவார் உறைவார் புயலால் – நறைவாய்
வண்டளவு வண்டளவு நாளின்மயி லாலக்
கண்டளவில் நீர்பொழியுங் கண்'

இ - ள் : இறைவனே! இறைக்கண் வெள்ளிய வளைகள் வீழாத படி காத்திருந்து யார் உயிரோடு வாழ்வார்? துவலை மிக்க புயலி னாலே, தேனை யிடத்திலேயுடைய வளப்பத்தையுடைய முல்லை மலரின்மீதே வண்டுகள் இருக்கப்பட்ட கார்காலத்து மயிலாடக் கண்டு அளவில்லாத நீரைப்பொழியும் கண்கள் எ - று.

ஆதலால், யார் உயிரோடு வாழ்வார் என இயையும்.

இதில் 'இறைவா இறைவா' என்று முதலடி முதலிலும், 'உறைவார் உறைவார்' என்று இரண்டாமடி முதலிலும், 'வண்டளவு வண்டளவு' என்று மூன்றாமடி முதலிலும் மடக்குகள் வந்தமை காண்க.

(வி - ரை) இது தலைவனது பிரிவின்கண் தலைவியது ஆற்றாமை கூறித் தோழி செலவழுங்குவித்ததாகும். இறைவா - இறைவனே; தலைவனே! இறை - முன்கை. வால் - வெண்மையான. உறைவார் - தங்குவார் (உயிரோடு வாழ்வார்). உறை - நீர்த்துளி. வார் - மிக்க. வண்தளவு - வளப்பம் பொருந்திய முல்லை. வண்டு அளவு - வண்டுகள் இருக்கப்பட்ட.

(உ) முதலயலடி யொழித்து ஏனை மூன்றடியும் முதன்மடக்கு

எ - டு : 'கொடியார் கொடியார் மதில்மூன் றுங் கொன்ற
படியார் பனைத்தடக்கை நால்வாய்க் - கடியார்
உரியார் உரியார் எமையாள வோதற்
கரியார் கரியார் களம்'

இ - ள்: கொடியராய் உள்ளாருடைய கொடிகள் பொருந்திய முப்புரத்தையும் எரித்த தன்மையினை யுடையார், பனை போன்ற பெரிய கையினையுடைய யானையின் அச்சத்தைத் தரும் தோலையுடையார், எம்மை ஆண்டுகோடற்கு உரியார், யாவ ராலும் புகழ்தற்கு அரியார், கறுத்த மிடற்றினை யுடையார் எ - று.

மதில் - முப்புரம். இதில் 'கொடியார் கொடியார்' என்று முதலடி முதலிலும், 'உரியார் உரியார்' என்று மூன்றாமடி முத லிலும், 'கரியார் கரியார்' என்று நான்காமடி முதலிலும் மடக்கு கள் அமைந்திருத்தல் காண்க.

(வி - ரை) இது சிவபெருமானின் இயல்பினை விவரிப்பதாகும். கொடியார் - கொடியாராயுள்ளார். கொடிஆர் - கொடிகள் பொருந்திய. உரியார் - யானைத் தோலையுடையார். உரியார் - எம்மை ஆண்டு கோடற்கு உரியார். ஓதற்கு அரியார் - புகழ்தற்கு அரியார். கரியார் - கறுத்தமிடற்றினை யுடையார்.

(௩) ஈற்றயலடி யொழித்து ஏனை மூன்றடியும் முதன்மடக்கு

எ - டு : 'மலையு மலையு மகிழ்ந்துறையும் வேயும்
கலையுங் கலையுங் கடவும் - தொலைவில்
அமரி யெமக்கரணும் என்னுமவர் முன்னிற்
குமரி குமரிமேற் கொண்டு'

இ - ள் : பொருப்பின்கண்ணும் கடலின்கண்ணும் மகிழ்ந்து உறைபவளும், இளம்பிறையைச் சூடுபவளும், கலையேற்றை உகைப்பவளும், தொலைவில்லாத அமரினை உடையளுமாகிய குமரியாள், எமக்குக் காவலாம் என்பார்க்கு முன்னே சிங்கத்தை உகைத்துத் தோன்றுவள் எ - று.

இதில் 'மலையு மலையும்' என முதலடி முதலிலும், 'கலையுங் கலையும்' என இரண்டாமடி முதலிலும், 'குமரி குமரி' என நான்காமடி முதலிலும், மடக்குகள் வந்தமை காண்க.

(வி - ரை) இது வெற்றித் திருவின் (துர்க்கை) இயல்பை விவரிப்பதாகும். மலையும் அலையும் எனப் பிரிக்க. அலை - கடல். கலை - பிறை. கலை - மான். முன்னிற்கும் அரி - முன்னே இருக்கும் சிங்கம். குமரி - வெற்றித்திரு. குமரி முன்னிற்கும் அரிமேற் கொண்டு எனக் கூட்டுக.

(௪) முதலடி யொழித்து ஏனை மூன்றடியும் முதன்மடக்கு

எ - டு : 'பாலையாழ் தன்னிற் பதிற்றிரட்டி வெய்தன்றே
மாலைவாய் மாலைவாய் இன்னிசை - மேலுரை
மேவலர் மேவலர் மெல்லாவி வாட்டாதோ
காவலர் காவலராங் கால்'

இ - ள்: பாலையாழ் தன்னிலும் இருபது மடங்கு வெம்மையையுடையதன்றோ! அந்திப் பொழுதின்கண் விறலி பாட்டின்கண் உண்டாகிய இன்பத்தையுடைய இசை மேலாயுள்ள புகழ்ச்சியைப் பொருந்தாதார் விரும்பிக் கூறும் அலர்; அஃது எங்களுடைய மெல்லிய உயிரை வாட்டாதொழியுமோ? தலைவர் நம்மைக் காவாரான காலத்து எ - று.

இதில் 'மாலைவாய் மாலைவாய்' என்று இரண்டாமடி முதலிலும், 'மேவலர் மேவலர்' என மூன்றாமடி முதலிலும், 'காவலர் காவலர்' என நான்காமடி முதலிலும் மடக்குகள் வருதல் காண்க.

இவை நான்கும் மூவடி முதன்மடக்கு.

(வி - ரை) இது, தோழி அலர் மிகுதி கூறியது. மாலைவாய் - மாலைப் பொழுதின்கண். மாலை - விறலி. வாய் இன்னிசை - வாய்ப்பாட்டு. மேவலர் - பகைவர். மேவு அலர் - விரும்பிக்கூறும் அலர். காவலர் - தலைவர். கா அலர் - காப்பார் அல்லர்.

௪. முற்றுமடக்கு

முதல் முற்றுமடக்கு

எ - டு : 'வரைய வரைய சுரஞ்சென்றார் மாற்றம்
புரைய புரையவெனப் பொன்னே! - உரையல்
நனைய நனைய தொடைநம்மை வேய்வர்
வினையர் வினையர் விரைந்து'

இ - ள்: களவொழுக்கு ஆகாது எனக்கொண்டு வரைய வேண்டும் என்னும் ஆசையால் பிரிந்து மலைகளையுடைய சுரங் கடந்து போயினர், 'நின்னிற் பிரியேன், பிரியின் ஆற்றேன்.' என்று முற்காலத்து நம்மைத் தேற்றிய வார்த்தைகள் இப் பொழுது நமக்குப் பெரிதாகிய குற்றத்தைப் பயந்தனவென்று, பொன்னை யொப்பாய்! சொலற்பாலை யல்லை; மதுவோடும், குளிர்ச்சியோடும் கூடிய தொடையலை நமக்கு விரைந்து வந்து சூட்டுவர்; என்னையெனில், அவர் பல செய்தியும் அறிவினையும் உடையராதலால் எ - று.

இதில் 'வரைய வரைய' என்று முதலடி முதலிலும், 'புரைய புரைய' என இரண்டாமடி முதலிலும், 'நனைய நனைய' என மூன்றாமடி முதலிலும், 'வினையர் வினையர்' என நான்காமடி முதலிலும் மடக்குகள் வந்தமை காண்க.

இவை பதினைந்தும் அடிமுதன் மடக்கு.

(வி - ரை) இது பிரிவிடை ஆற்றாளாய தலைவியைத் தோழி ஆற்று வித்ததாம். வரைய - வரையவேண்டும் என்ற ஆசையால். வரைய - மலைகளை யுடைய. புரைய - பெரிதாகிய. புரைய - குற்றம். நனைய - தேன். நனைய - குளிர்ச்சி. வினையர் - பல செயல்களையும் உடையவர். வினையர் - அறிவினை யுடையவர்.

இடை முற்றுமடக்கு

எ - டு: 'மனமேங் குழைய குழையவாய் மாக்கர்
இனநீங் கரிய கரிய - புனைவதனத்
துள்வாவி வாவிக் கயலொக்கும் என்னுள்ளம்
கள்வாள வாளவாங் கண்'

இ - ள்: மனந்தளர்ந்த மானின் நோக்கத்தை யுடையனவு மாய்க், குழையைத் தொடர்வனவுமாய்த், [1]தோழியர் குழாம் விட்டு நீங்குதற்கு அரியனவுமாய்க், கருமையையும் உடை யனவாய் இருப்பன, அலங்கரிக்கப்பட்ட முகத்தில் உலாவிப் பொய்கைக் கயல் போலும்; என் உள்ளத்தைக் களவு கொண்ட வளுடைய அவ்வாளொத்த கண்கள் எ - று.

இதில் முதலடியின் இடையில் 'குழைய குழைய' எனவும், இரண்டாமடியின் இடையில் 'கரிய கரிய' எனவும், மூன்றாமடி யின் இடையில் 'வாவி வாவி' எனவும், நான்காமடியின் இடை யில் 'வாள வாள' எனவும் மடக்குகள் வந்தமை காண்க.

ஒழிந்த இடை மடக்கு வந்தவழிக் கண்டு கொள்க.

(வி - ரை) இது, பொழிலிடத்துத் தலைவியைக் கண்ட தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறியதாம். முதல் வரியில் மனம் ஏங்கு உழைய, குழைய எனவும், இரண்டாம் வரியில் இனம் நீங்கு அரிய கரிய எனவும் பிரிக்க. வாவி - உலாவி. வாவிக்கயல் - பொய்கையில் உள்ள மீன். கள்வாள் - களவுகொண்டவளுடைய. அ வாள் அவாம் கண் - அவ்வாளை யொத்த கண்கள்.

ஒழிந்த இடைமடக்காவன:— ஓரடி இடை மடக்கு நான்கும், ஈரடி இடைமடக்கு ஆறும், மூவடி இடைமடக்கு நான்கும் ஆம்.

---

1. 'இளைஞர் குழாம்' என்பதும் பாடம்.

இறுதி முற்றுமடக்கு

எ - டு : 'மாலை யருளாது வஞ்சியான் வஞ்சியான்
மேலை யமரர் கடைவேலை வேலை
வளையார் திரைமேல் வருமன்ன மன்ன
இளையாள் இவளை வளை'

இ - ள்: வஞ்சிக் காவலன் தன் மார்பின் மாலை தொடாதே வஞ்சனை செய்துகொள்வானல்லன்; மேலாயுள்ள வானவர் திருப்பாற் கடலைக்கடைந்த காலத்துக் கரையினையும் சங்குகளையும் உடைய கடலில் தோன்றின திருமகளாகிய அன்னத்தை யொத்த பேதையாகிய இவளுடைய வளைகளை எ - று.

இதில் நான்கடிகளின் ஈற்றிலும், 'வஞ்சியான் வஞ்சியான்' எனவும், 'வேலை வேலை' எனவும், 'மன்ன மன்ன' எனவும், 'வளை வளை' எனவும் மடக்குகள் வந்தமை காண்க. இவை அனைத்தும் ஓரிடத்தே மடங்கின. 'இவளை' என்பது வேற்றுமை மயக்கம்.

ஒழிந்த இறுதி மடக்கு வந்தவழிக் கண்டு கொள்க.

(வி - ரை) வஞ்சியான் மாலை யருளாது வஞ்சியான் அல்லன் எனக் கூட்டுக. வஞ்சியான் — வஞ்சிக் காவலன்; சோழன். 'மறவேந்தன் வஞ்சியானல்லன்' என முன்னும் கூறியது காண்க. கடை வேலை — கடைந்த காலத்து. வேலை - காலம்; அஃது அன்னதாதல் 'மணந்தார் உயிருண்ணும் வேலை' (குறள் - கஉஉக) என்றவிடத்தும் காண்க. அடுத்துள்ள வேலை என்னும் சொல், கடற்கரை என்னும் பொருளில் வந்தது. மூன்றும் அடியிலுள்ள தொடரைத் திரைமேல் வரும் அன்னம் அன்ன எனப் பிரித்துப் பொருள் காண்க. நான்காம் அடியிலுள்ள இவளை வளை என்பது இவளுடைய வளை என்னும் பொருள்பட நின்றது. இவளை என்பதிலுள்ள இரண்டனுருபு, மூன்றும் வேற்றுமைப் பொருள்பட நின்றது.

ஒழிந்த இறுதிமடக்காவன :— ஓரடி இறுதி மடக்கு நான்கும், ஈரடி இறுதிமடக்கு ஆறும், மூவடி இறுதி மடக்கு நான்கும் ஆம்.

முதற்கண்ணும் இடைக்கண்ணும் முற்றுமடக்கு

எ - டு : 'கொண்டல் கொண்டலர் பொழில்தொறும்
பண்ணையாய்ப் பண்ணையா யத்துள்ளார்
வண்டல் வண்டலர் தாதுகொண்
டியற்றலின் வருமண மணன்முன்றில்
கண்டல் கண்டக மகிழ்செய
வோதிமங் கலந்துறை துறைவெள்ளம்
மண்டல் மண்டல முழுதுடன்
வளைதரு வளைதரு மணிவேலை'

இ - ள் : கீழ்க்காற்று மோதுதலால் அலர்கின்ற சோலை தோறும், இசையை ஆராயும் விளையாடற் கூட்ட மகளிர் சிற்றிலை வண்டுகளூரற்றிய தாதுக்களைக் கொண்டு செய்தலால், மணம் வீசும் மணல் முற்றமாகிய கைதை மீதே கண்டார் கண்களிகூரும்படி அன்னங்கள் கூடியிருக்கும் துறையில் வெள்ளத்தைக் கொண்டு ஏறுதொழிவாயாக; நிலவலயம் முழுதையும்

சூழும் சங்குகளால் தரப்பட்ட முத்துக்களையுடைய கடலே! எ - று.

இதில் 'கொண்டல் கொண்டலர்' என்று முதலடி முதலிலும், 'பண்ணையாய்ப் பண்ணையாய்' என இடையிலும், 'வண்டல் வண்டலர்' என இரண்டாமடி முதலிலும், 'மண மணன்' என இடையிலும், 'கண்டல் கண்டக' என மூன்றாமடி முதலிலும், 'துறை,துறை' என இடையிலும், 'மண்டல் மண்டல' என நான்காமடி முதலிலும், 'வளைதரு வளைதரு' என இடையிலும் மடக்குகள் வந்தமை காண்க.

ஒழிந்த ஆதியோடிடை மடக்கு வந்தவழிக் கண்டு கொள்க.

(வி - ரை) இது வண்டலயரும் பெண்கள் கடலை நோக்கிக் கூறிய தாகும். கொண்டல் - கீழ்காற்று. கொண்டு அலர் - மோத அலர்கின்ற. பண்ணை ஆய் - இசையை ஆராய்கின்ற. பண்ணை - விளையாட்டு; 'பண்ணைத் தோன்றிய' (தொல் - மெய்ப் - க) என்றவிடத்தும் இது இப்பொருளாதல் அறிக. ஆயம் - கூட்டம். வண்டல் - வண்டல் கொண்டிழைத்த சிற்றில். வண்டு அலர் -வண்டுகள் அரற்றிய. மணம் மணல் மூன்றில் எனப்பிரித்துப் பொருள் காண்க. கண்டல் - கைதை; தாழை. கண்தக - கண்குளிரும்படி. ஓதிமம் கலந்து உறை துறை எனப் பிரித்துப் பொருள் காண்க. மண்டல் - எறுதொழிவாயாக; அல்லீற்று எதிர்மறை. மண்டலம் - நிலவயம். வளைதரு - சூழ்ந்த; வளை தரு - சங்குகளால் தரப்பெற்ற.

ஒழிந்த ஆதியோடு இடைமடக்காவன:— ஓரடி ஆதியோடிடை மடக்கு நான்கும், ஈரடி ஆதியோடிடை மடக்கு ஆறும், மூவடி ஆதியோடிடை மடக்கு நான்குமாம்.

முதற்கண்ணும் இறுதிக்கண்ணும் முற்றுமடக்கு

எ - டு : 'நிரையா நிரையா மணிபோல்நிறை கோடல் கோடல்
வரையா வரையா மிருள்முன்வரு மாலை மாலை
விரையா விரையா வெழுமின்னொளி மேக மேகம்
உரையா உரையா ரினுமொல்லன முல்லை முல்லை'

இ - ள் : ஆனிரைகளின் ஒழுங்கா ஒலிக்கும் மணியோசை போல எங்கள் நிறையைக் கவராதே காந்தளே! அளவிடவரிய அரையாம இருளுக்கு முன்னே வரும் மயக்கத்தைச் செய்யும் மாலையானது வரும்; மற்றும் கடுகி இரைந்து மின்னொளியை யுடைத்தாய் மேகங்களும் எழும்; முல்லை நிலத்துள்ள முல்லைக் கொடிகளும் ஒன்றுஞ் சொல்லாத புகழுடைய தலைவரினும் பகையாயின எ - று.

இதில் 'நிரையா நிரையா', 'கோடல்கோடல்' என முதலடி முதற்கண்ணும் இறுதிக்கண்ணும், 'வரையா வரையா', 'மாலை மாலை' என இரண்டாமடி முதற்கண்ணும் இறுதிக் கண்ணும், 'விரையா விரையா' 'மேக மேக' என மூன்றாமடி முதற்கண்ணும் இறுதிக்கண்ணும், 'உரையா உரையா', 'முல்லை முல்லை' என நான்காமடி முதற்கண்ணும் இறுதிக்கண்ணும் மடக்குகள் வந்தமை காண்க.

ஒழிந்த ஆதியோடு கடை மடக்கு வந்தவழிக் கண்டு கொள்க.

(வி - ரை) இது பிரிவிடை ஆற்றாத தலைவியின் நிலைகண்டு தோழி கூறியதாகும். காந்தளே! மாலையானது வரும், மேகங்களும் எழும், முல்லைக் கொடிகளும் தலைவரைக்காட்டிலும் பகையாயுள்ளன, ஆனிரைகளோ எங்கள் நிறையைக் கவர்ந்துள்ளன, ஆதலின் நீயும் கவராதே எனத் தோழி கூறிய தாகக் கொள்க.

நிரையா என்பதை ஆநிரை என மாற்றுக. நிரையாம் மணி — ஒழுங் காக ஒலிக்கும் மணியோசை. நிறை கோடல் — நிறையைக் கவராதே; அல்லீற்று எதிர்மறை. நிறை — காப்பன காத்துக் கடிவன கடிந்தொழுகும் ஒழுக்கம். கோடல் — காந்தள். வரையா அரையாம இருள் எனப் பிரிக்க. வரையா — அளவிடற்கரிய. இருள் முன்மாலை மாலை வரும் எனக் கூட்டுக. மாலை - மயக்கம்; மாலைப்பொழுது. விரையா - விரைந்து. இரையா - இரைத்து; ஒலித்து. மேக மேகம் - மேகங்கள்; அடுக்குப்பன்மை குறித்தது. உரையா— ஒன்றும் சொல்லாத. உரையார் — புகழையுடையார். உரை புகழாதல் 'உரையும் பாட்டும் உடையோர் சிலரே' (புறம் - உஎ) என்பதனானும் அறிக. முல்லை முல்லை என்பவற்றுள் முன்னையது நிலத்தையும், ஏனையது மலரையும் குறித்தன.

ஒழிந்த ஆதியோடு கடைமடக்காவன:— ஓரடி ஆதியோடு கடைமடக்கு நான்கும், ஈரடி ஆதியோடு கடைமடக்கு ஆறும், மூவடி ஆதியோடு கடை மடக்கு நான்குமாம்.

இடைக்கண்ணும் இறுதிக்கண்ணும் முற்றுமடக்கு

எ - டு : 'வருகம் புளினம் புளினம்பயில் வேலை வேலை
ஒருகால் உலவா வுலவாவரு மோத மோத
வருகே தகைகே தகைசேர்தரு மன்ன மன்ன
பெருகா தனவே தனவோசை மாதர் மாதர்'

இ - ள்: வாராநின்ற கம்புட் குழாங்கள் மணற் குன்று களிலே இருக்குங் காலத்தில், கடலானது ஒருகாலுங் குறையாது உலாவிக் கரையை மோதவரும்; அருகே நின்று தடுக்கப்பட்ட தாழை மீதே அன்னங்கள் சேரும்; ஆதலால் தலைவனே! முலை களினது அழகழியும் மடவாருடைய காதல் பெருகாதொழியுமோ எ - று.

இதில் 'புளினம் புளினம்', 'வேலை வேலை' என முதலடியின் இடையிலும் ஈற்றிலும், 'உலவா வுலவா', 'மோத மோத' என இரண்டாமடியின் இடையிலும் ஈற்றிலும், 'கேதகை கேதகை', 'மன்ன மன்ன' என மூன்றாமடியின் இடையிலும் ஈற்றிலும், 'தனவே தனவே,' 'மாதர் மாதர்' என நான்காமடியின் இடை யிலும், ஈற்றிலும் மடக்குகள் வந்தமை யுணர்க.

ஒழிந்த இடையோடு கடைமடக்கு வந்தவழிக் கண்டு கொள்க.

(வி - ரை) இது பிரிவின்கண் செல்லும் உள்ளத்தனைய தலைவனிடத் துத், தோழி தலைவியது ஆற்றாமை கூறிச் செலவழுங்வித்தது ஆகும்.

வரு கம்புள் இனம் புளினம் எனப் பிரித்துப் பொருள் கொள்க. கம்புள் இனம் — சம்பங் கோழிகள். புளினம் — மணற்குன்று. வேலை வேலை

என்பவற்றுள் முன்னையது காலத்தையும், ஏனையது கடலையும் குறித்தன. உலவா — குறையாத. உலவா — உலவி. உலவா வரும் ஓதம் எனப் பிரிக்க. மூன்றும் அடியை, அருகே தகை கேதகை சேர்தரும் அன்னம், மன்ன! எனப் பிரித்துப் பொருள் கொள்க. நான்காம் அடியைப் பெருகாதனவே, தனம் ஏர் அசை மாதர் மாதர் எனப் பிரித்துப் பொருள் காண்க. தனம் + ஏர் = தனவேர். மாதர் — மடவார். மாதர் — காதல்.

ஒழிந்த இடையோடு கடைமடக்காவன:—ஓரடி இடையோடு கடை மடக்கு நான்கும், ஈரடி இடையோடு கடை மடக்கு ஆறும், மூவடி இடை யோடு கடை மடக்கு நான்குமாம்.

அடிதோறும் மூன்றிடத்து மடக்கு

எ - டு: 'களைகளைய முளரியரு கடைகடைய
மகளிர்கதிர் மணியு மணியும்
வளைவளைய கரதலமு மடைமடைய
மதுமலரு மலைய மலைய
இளையிளைஞர் கிளைவிரவி யரியரியின்
மிசைகுவளை மலரு மலரும்
கிளைகிளைகொ ளிசையளிகள் மகிழ்மகிழ்செய்
கெழுதகைய மருத மருதம்'

இ - ள்: களைகளை வாங்கத் தாமரை யருகே யடைந்த, கடைசியருடைய ஒளியினையுடைய மணிகளும், இடப்பட்ட வளை சூழ்ந்த கையும், அடைத்த மடையிலுள்ள தேனையுடைய பூவும், மிகவும் தம்முள் மாறுபடா நிற்க, இளங்குறுமாக்கள் சுற்றங் கூடி, அறுத்திடப்பட்ட நெல் அரியின் மீதேயுள்ள [1] குவளைப்பூவும் மகிழும் பெற்றியது; இனத்துடனே கிளை என்னும் நரம்பினின்றும் எழும் இசை போலப் பாடாநின்ற அளிக்குலம், கள்ளை மகிழ மலரினுண்டு மகிழ் செய்யும் விளக்கமுடைய மருதமரத்தினை யுடைய மருத நிலமானது எ - று.

இதில் 'களை களை', 'கடை கடை', 'மணியு மணியும்' என முதலடி மூன்றிடத்தும், 'வளை வளை', 'மடை மடை', 'மலைய மலைய' என இரண்டாமடி மூன்றிடத்தும், 'இளை யிளை', 'அரி யரி', 'மலரு மலரும்' என மூன்றாமடி மூன்றிடத்தும், 'கிளை கிளை' 'மகிழ் மகிழ்', 'மருத மருதம்' என நான்காமடி மூன்றிடத்தும் மடக்குகள் வந்தமை யுணர்க.

ஒழிந்த முழுதும்மடக்கு வந்தவழிக் கண்டு கொள்க.

(வி - ரை) இது மருதநில வருணனையாகும். அடை கடைய மகளிர் — அடைந்த கடைசியர். கதிர் மணியும் — ஒளியினையுடைய மணிகள். அணி வளை — அணியப்பட்ட வளையல்கள். வளைய கரதலம் — (வளையல்கள்) சூழப் பட்ட கையும். அடை மடைய — அடைத்த மடை; நீர் அடைக்கப்பட்ட மடு. அலைய மலைய — மிகவும் மாறுபட. இளை — இளைய. இளைஞர் — மாக்கள்; அரி — அறுக்கப்பட்ட. அரியின்மிசை — நெல்லரியின் மீது, குவளை மலரும்- குவளைப்பூ. அலரும் — மகிழும். கிளை — இனம். கிளைகொள் இசை —கிளை

1. ''குவளைப்பூவும் மலரும்' என்பதும் பாடம்.

என்னும் நரம்பிலிருந்து எழும் இசை. மகிழ் - மகிழம்பூ. மகிழ்செய் - (அதன் கண் உள்ள தேனை யுண்டதால்) மகிழ்ச்சி செய்யும். மருதம் - மருதமரம். மருதம் - மருத நிலம்.

ஒழிந்த முழுதும் மடக்காவன:— ஓரடி முழுதும் மடக்கு நான்கும், ஈரடி முழுதும் மடக்கு ஆறும், மூவடி முழுதும் மடக்கு நான்குமாம்.

இனி, இடையிட்டு வந்த மடக்கும், இடையிடாது வந்த மடக்கும், இடையிட்டும் இடையிடாதும் வந்த மடக்கும் இவ்வாறே கண்டு கொள்க.

இடையிட்டு வரும் மடக்காவது:- ஒரு சொல்லானது இடையில் பல்வேறு வகைப்பட்ட சொற்கள் வர, வெவ்வேறிடத்தில் மடங்கி வருவது. **இடையிடாது வரும் மடக்காவது:-** ஒரு சொல்லானது, இடையில் வேறு சொற்கள் கலவாமல், அடுத்து 'வஞ்சியான் வஞ்சியான்' என்பது போல மடங்கி வருவது. அவற்றுள் சில வருமாறு:—

(க) இடையிட்டு வந்த முதன் முற்றுமடக்கு

எ - டு : 'தோடு கொண்டளி முரன்றெழக் குடைபவர் குழல்சேர்ந்த
தோடு கொண்டதே மலர்சுமந் தகில்கமழ்ந் தவர்தம்
தோடு தைந்தசெஞ் சாந்தணி திரண்முலை யிடைதோய்ந்
தோடு தண்புனல் நித்திலந் துறைதொறுஞ் சொரியும்'

இ - ள் : கூட்டங் கொண்டு வண்டுகள் ஒலித்தெழப் புனலாடுவார் குழலிற் சோர்ந்த இதழ் கொண்ட தேனோடு கூடிய மலரைச் சுமந்து, அகில் நாறப்பட்ட அம்மாதருடைய தோளைச் செறிந்த செஞ்சந்தனம் அணியப்பட்ட திரண்ட முலையிடையே பட்டு ஓடாநின்ற குளிர்ந்த புனலானது முத்துக்களைத் துறைகள்தோறும் குவியா நிற்கும் எ - று.

இதில் 'தோடு' என்ற சொல் நான்கடிகளிலும் முதலில் மடக்காக வந்தமை காண்க.

(வி - ரை) தோடு — கூட்டம்; இதழ். மூன்றாம் அடியைத் தோள் துதைந்த என்றும், நான்காம் அடியை ஓடு தண் புனல் என்றும் பிரித்துப் பொருள் கொள்க. இப்பாடற்கண் அடிதோறும் முதற்சொல் மடங்கி வந்தவாறும், அவை சீர்கள் இடையிட்டு வந்தவாறும் காண்க.

(உ) இடையிட்டு வந்த இடை முற்றுமடக்கு

எ - டு: 'பாவி நாடொறும் படியவாம் பல்புகழ்ப் பரப்பின்
இரவி சீறிய படியவாம் பரியெரி கவர
விரவி மான்பயில் படியவாம் வேய்தலை பிணங்கும்
அருவி வாரணம் படியவாம் புலர்பணை மருதம்'

இ - ள்: நாடோறும் வழுத்தி உயர்ந்தோர் விரும்பும் பல புகழை யுடைத்தாகிய நாட்டினையுடைய சோழன் சீறிய ஊர்கள் வாவிச் செல்லும் நெருப்பினாற் கொள்ளப்பட, அவை மானினம் திரண்டு சஞ்சரிக்கும் தன்மையவாம்; அந்தச் சோழனின் யானை புகுந்து கலக்க நீர் புலரும் தடங்களையுடைய வயல் மருதம், மூங்கில் தம்முள் செறிவனவாம் எ - று.

சோழன் சீறியவூர் மான் பயிலும் காடாகவும், மருதம், மூங்கில் செறியும் குறிஞ்சியாகவும் மாறும் என்பதாம்.

இதில் 'படியவாம்' என்ற சொல், நான்கடிகளின் இடையிலும் மடங்கி வந்தமை யுணர்க.

(வி - ரை) முதலடி : படி - உலகம்; ஈண்டு உயர்ந்தோர் மேற்று. அவாம் - விரும்பும். இரண்டாம் அடி: படிய – உலகிலுள்ள; ஈண்டு அதன் கண் உள்ள ஊர்களைக் குறித்தன. வாம் - தாவி., பரி - செலவு. மூன்றாம் அடி: படியவாம் - தன்மையவாம். நான்காம்அடி: பீடிய -(யானைகள்) படிந்து கலக்குதலால். ஆம் - உண்டாகின்ற.

(ங) இடையிட்டு வந்த இறுதி முற்றுமடக்கு

எ - டு: 'சொன்ன நாளிது சுரும்பிமிர் இதழிபொன் கால
மின்னு வாள்விட வில்வளைத் தூன்றிய கால
இன்ன கார்முகில் இனமிருண் டெழுதரு கால
மன்னர் வாரலர் தான்வரு மயில்மருங் கால'

இ - ள்: தாம் வருதுமென்று சொன்னநாள் இதுவாயிருந்தது; வண்டுகள் பாடாநின்ற கொன்றைகள் எல்லாம் பொன்பொழிய, மின்னுனது ஒளியை யுமிழ, இந்திரதனுவை வளைத்து வீழ்த்திய மழைத்துளிகளை யுடைத்தாய் இப்படி வந்த கார்காலப் பருவ முகில் இனமாய் இருண்டெழுதரும் பொழுதும் தலைவர் வந்திலர்; பக்கமெல்லாம் மயில்கள் ஆடப், பருவந்தான் வாராநின்றது எ - று.

இதில் 'கால்' என்னும் சொல் நான்கடிகளின் ஈற்றிலும் மடங்கி வருதல் காண்க.

இவை மூன்றும் இடையிட்டு வந்தன.

(வி - ரை) இது,பருவ வரவு கண்டு ஆற்றாளாய தலைவி கூறியதாகும். முதலடி: பொன்கால - பொன்னைப் பொழிய. இரண்டாம் அடி: ஊன்றிய கால – வீழ்த்தப்பட்ட மழைத்துளி. கால் - நீர்த்தாரை. மூன்றாம் அடி : எழுதரும் காலம் – (மேகம்) எழுதரும் பொழுது. நான்காம் அடி: மயில் மருங்கு ஆல - மயில்கள் பக்கத்தே ஆட.

இனி, இடையிட்டும் இடையிடாதும் வருவன வருமாறு:—

இடையிட்டும் இடையிடாதும் வந்த இடையும் இறுதியும் முற்றுமடக்கு

எ - டு : 'வாமான மான மழைபோல்மத மான மான
நாமான மான கமுற்றாழக மான மான
தீமான மான வர்புகாத்திற மான மான
காமான மான கல்சுரங்கனன் மான மான'

இ - ள் : வா மான் அ - தாவும் மான்களை யுடையன, மானம் மழைபோல் - பெரிய மேகம் போன்று, மதம் ஆன மான - மதம் அமைந்த யானைகளையுடையன, நாம் ஆன - அச்சமான, மால் நகம் உற்று - புலியுகிர் உறுதலால், ஆழ் அகம் - தாழ்ந்த மனத்தையுடைய, மானம் ஆன - விலங்குகளை யுடையன, தீம் ஆன - தீமையை யுடையன, மானவர் புகா - மக்கள் ஊடாடாத, திறம் ஆன மான - திறமான தன்மையை யுடையன, கா மான - சோலைகளை யொப்ப, மானம் கல் - வலிய கற்களை யுடையன.

சுரம் - இத்தன்மையை யுடைய வழிகள், கனல் மானம் ஆன - நெருப்பின் அளவாயுள்ளன எ - று.

தீமை - தீம் என ஈற்றுயிர் கெட்டது. கல்ல - கல் என ஈறு குறைந்தது.

இதில் 'மான மான' என்ற சொல் நான்கடிகளின் இடையிலும் ஈற்றிலும், இடையிட்டும் இடையிடாதும் மடங்கி வந்தமை காண்க.

இன்னும் பலவிதமாக வரும் மடக்குகளின் வேறுபாடுகளையும் வந்துழிக் கண்டு கொள்க. அவற்றுள் சில காட்டப்படுகின்றன.

அடிதொறும் தனித்தனியே வந்த இறுதி முற்றுமடக்கு

எ - டு: 'வருமறை பலமுறை வசையறப் பணிந்தே
மதியொடு சடைமுடி மருவுமப் பணிந்தே
அருநட நவில்வது மழகுபெற் றமன்றே
அருளொடு கடவுவ தணிகொள்பெற் றமன்றே
திருவடி மலரன திகழொளிச் சிலம்பே
தெளிவுட னுறைவது திருமறைச் சிலம்பே
இருவினை களைபவ ரடைபதத் தனன்றே
இமையவர் புகலிறை யெனநினைத் தனன்றே'

இ - ள் : பழமையாக வருகின்ற வேதங்கள் பலகாலும் தம் குற்றமறத் தொழுது போற்றச் சடையையுடைய முடியில் பிறையோடு சேரப்பட்ட கங்கையைத் தரித்து, அரிய நடமாடுவதும் அழகுடைய திருவம்பலத்தே; கருணையொடு ஏறிச் செலுத்துவது அலங்காரத்தை யுடைய விடையே; திருவடித் தாமரையிற் சேர்ந்து கிடப்பன விளங்குகின்ற ஒளியையுடைய சிலம்பே; விளக்கத்துடனே எழுந்தருளி யிருப்பது அழகிய வேத ரூபமான கைலை மலையே; இருவினையும் கடிந்தார் அடையும் பாதத்தன்; அநாதி காலந்தொட்டே தேவர்க்குப் புகலாகிய முதல்வன் என்று தியானித்தல் நன்மை பயப்பதாகும் எ - று.

இதில் 'பணிந்தே' என்ற சொல் முதலடியின் இடையிலும் ஈற்றிலும், 'பெற்றமன்றே' என்ற சொல் இரண்டாமடியின் இடையிலும் ஈற்றிலும், 'சிலம்பே' என்ற சொல் மூன்றாமடியின் இடையிலும் ஈற்றிலும், 'தனன்றே' என்ற சொல் நான்காமடியின் இடையிலும் ஈற்றிலும் மடங்கி வந்தமை காண்க.

(வி - ரை) தில்லைப் பெருமானை வணங்குதலே அழகு என்பதை இப் பாடல் விளக்குகின்றது.

வசையறப் பணிந்து - குற்றமறத் தொழுது. அப்பு அணிந்து - கங்கையைத் தரித்து. அழகுபெற்ற மன்றே - அழகுடைய திருவம்பலம். பெற்றம் அன்றே - விடையே; அன்றே - தேற்றப்பொருள் படுவதோர் இடைச் சொல். ஒளிச்சிலம்பு - ஒளியையுடைய சிலம்பு. மறைச் சிலம்பு - வேதவடிவான கைலைமலை. அடைபதத்தன் - (இருவினை கடிந்தார்) அடையும் பாதத்தன் (திருவடிகளை யுடையவன்). அன்றே - அநாதியே. நினைத்தல் நன்று - தியானித்தல் நன்மை பயப்பதாகும்.

இப்பாடற்கண் அடிதொறும் இறுதிக்கண் ஒவ்வொரு சொல் (பணிந்தே, பெற்றமன்றே, சிலம்பே, தனன்றே) மடங்கி வந்துள்ளமையின், இது அடிதொறும் தனித்தனியே வந்து இறுதி முற்று மடக்காயிற்று.

'உற்றுமை சேர்வது மெய்யினையே உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே கனல்விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பதும் உன்பணியே அமரர்கள் செய்வதும் உன்பணியே
பெற்றும் உகந்தது கந்தனையே பிரம புரத்தை யுகந்தனையே'

என்ற திருஞான சம்பந்தர் தேவாரமும், 'அரங்கம் ஐயற்கு வெள்ளியரங்கமே' என்றல் தொடக்கத்ததான குமாரகுருபாரின் திருவாக்கும் இவ்வகையில் அடங்குவனவாகும்.

அடிதொறும் முதற்சீர் ஒழித்து வந்த முற்றுமடக்கு

எ - டு : 'அனைய காவலர் காவலர் காவலர்
இனைய மாலைய மாலைய மாலைய
எனைய வாவிய வாவிய வாவிய
வினைய மாதர மாதர மாதரம்'

இ - ள் : அனைய - அத்தன்மையாகிய, கா அலர் - சோலையின் மலராகிய காமன் கணைகளை, காவலர் - நம் தலைவர், காவலர் - காத்தல் இலர், இனைய - (ஆகவே) இத்தன்மைத்தாகிய, மாலைய - மயக்கத்தைத் தருகிற, மாலைய - மாலைப் பொழுது, மாலைய - அத்தன்மையது, எனை - என்னை, அவாவிய - நீங்காது காதலித்த, ஆவிய - உயிர் போன்ற, ஆவிய - அறிவையுடைய, வினைய மாது - வினை செய்தலிற் சிறந்த தோழி, அரம் - அரத்தினை யொத்தாள், ஆதரம் - ஆசையானது, மாதரம் - மிகுதியாம் எ - று.

இதில் முதலடியின் இடையில் 'காவலர்' என்ற சொல் மும்முறையும், இரண்டாமடியில் 'மாலைய' என்ற சொல் மும்முறையும், மூன்றுமடியில் 'வாவிய' என்ற சொல் மும்முறையும், நான்காமடியில் 'மாதர' என்ற சொல் மும்முறையும் மடங்கி வந்தமை காண்க.

(வி - ரை) இது தலைவி வன்புறை எதிரழிந்து கூறியதாகும். பிரிவிடை ஆற்றாது வருந்தும் தலைவியைத் தோழி ஆற்றியிருக்கவேண்டும் என வற்புறுத்திக் கூறுவதால், அவ்வுரை தலைவிக்கு அரம் போன்றதாயிற்று.

இப்பாடற்கண் அடிதொறும் முதற்சீர் ஒழித்து, ஏனையசீர்கள் மடங்கி வந்தமை காண்க. (ச)

சொல் மடக்கு முற்றும்.

அடி மடக்கு

கூரு. அடிமுழுதும் மடக்கலும் ஆங்கதன் சிறப்பே.

எ - ன், ஈண்டு அம்மடக்கு என்னும் அலங்காரத்தையே வேறுபடுத்துக் கூறுகின்றது.

இ - ள் : அடிகள் முழுதும் மடக்கி வருதலும், அம்மடக்கிற்குச் சிறப்புடைத்து எ - று.

அவை: ஈரடி மடக்கும், மூவடி மடக்கும், நான்கடி மடக்கும் என மூன்று வகைப்படும்.

ஈரடி மடக்கு வருமாறு:—

(க) முதல் ஈரடியும் மடக்கு

எ - டு : 'விரைமேவு மதமாய விடர்கூடு கடுநாக
விரைமேவு மதமாய விடர்கூடு கடுநாக
வரைமேவு நெறியூடு தனிவாரல் மலைநாட!
நிரைமேவு வளைசோர இவளாவி நிலைசோரும்'

இ - ள் : விரை மேவு மதமாய - கமழும் கடமுடைய, விடர் கூடு - துன்பமுறும், கடுநாக இரை - கடிய யானைகளை இரையாகக் கொள்ள, மேவு - விரும்பும், மதமாய - வலிய முழையுள், கூடு கடு நாகம் - உறையும் நஞ்சையுடைய பாந்தளையுடைய, வரை மேவு - மலை பொருந்திய, நெறியூடு - வழியினூடு, தனி வாரல் - தனிமையாய் வாராதொழியாக, மலை நாட - குறிஞ்சி நிலத்தலைவனே! (அங்ஙனமின்றி வருவையாயின்), நிரை மேவு - வரிசை பொருந்திய, வளைசோர - வளை சரிய, இவள் ஆவி நிலை சோரும் - இவள் ஆவியும் நிலையினின்று நீங்கும் எ - று.

இதில் 'விரைமேவு மதமாய விடர்கூடு கடுநாக' என்ற சொற்றொடர் முதல் இரண்டடி முழுவதிலும் மடங்கி வந்தமை யுணர்க.

(வி - ரை) இது, ஆற்றது தீமை கண்டு தோழி தலைமகற்கு உரைத்ததாகும்.

(உ) முதலடியும் மூன்றுமடியும் மடக்கு

எ - டு : 'கடன்மேவு கழிகாதன் மிகநாளு மகிழ்வார்கள்
உடன்மேவு நிறைசோர மெலிவாட னுயிர்நோவு
கடன்மேவு கழிகாதன் மிகநாளு மகிழ்வார்கள்
உடன்மேவு பெடைகூடு மறுகாலு முரையாகொல்'

இ - ள் : கடன் மேவு - முறையாகப் புணரும், கழி காதல் மிக - மிக்க காதல் வளர, நாளும் மகிழ்வார்கள் உடன் - நாட்கள்தோறும் மகிழ்வார்களுடனே கூடிக்கொண்டு, மேவும் நிறை சோர - பொருந்திய ஒழுக்கம் குன்ற, மெலிவாள் தன் உயிர் நோவு - வருந்துவாளது உயிர் வருத்தத்தை, கடல் மேவு - கடலிற் பொருந்திய, கழி காதல் மிக நாளும் - கழிக்கண் காதல் மிக்க காலைதோறும், மகிழ்வார் - களிப்பு மிக்க, கள் உடன் மேவு - மலர்க்கள்ளை விரும்பும், பெடை கூடும் அறுகாலும் - பெடையோடு கூடிய வண்டுகளும், உரையா கொல் - தலைவற்குச் சொல்லா போலும் எ - று.

இச்செய்யுளில் 'கடன்மேவு கழிகாதன் மிகநாளு மகிழ்வார்கள்' என்ற சொற்றொடர் முதலடியிலும், மூன்றுமடியிலும், முழுதும் மடங்கி வந்தமை யுணர்க.

(வி - ரை) இது பிரிவிடை ஆற்றுளாய தலைவியது நிலையைத் தோழி, தலைமகற்குச் சிறைப்புறமாகக் கூறியது.

(ந) இடை யீரடியும் மடக்கு

எ - டு: 'கருமாலை தொறுகாதல் கழியாது தொழுதாலும்
உருமாய மதனாக மடுமாறு புரிவார்முன்
உருமாய மதனாக மடுமாறு புரிவார்முன்
வருமாய வினைதீர ஒருநாளும் அருளார் கொல்!'

இ - ள்: கருமாலை தொறும் - பிறவித் தொடர்ச்சிதோறும், காதல் கழியாது - அன்பு நீங்காது, தொழுதாலும் - தம்மை வணங்கினாலும், உருமாய - வடிவு அழியும்படி, மதன் ஆகம் அடுமாறு புரிவார் - காமன் உடலைக் கெடுக்கும் தன்மையைச் செய்வார், முன் - முன்னே, உருமு ஆய - உருமுப் (இடி)போல வந்த, மதன் நாகம் - கடாத்தை யுடைய யானையை, அடுமாறு புரிவார் - கொல்லும் இயல்பினை யுடையார், முன் வரும் - தொல்லையாய் வரும், மாய வினை தீர - வஞ்சவினை நீங்க, ஒரு நாளும் அருளார் கொல் - ஒருகாலமும் எமக்கு அருளார் போலும் எ - று.

இதில் 'உருமாய மதனாக மடுமாறு புரிவார்முன்' என்ற சொற்றொடர், இரண்டாமடியிலும் மூன்றாமடியிலும் முற்றும் மடங்கி வருதல் காண்க.

(வி - ரை) இன்ப துன்பத்தை யழித்தவர், என்னுடைய இருள்சேர் இருவினையையும் நீக்கார் போலும்! என்பது கருத்து.

(ச) முதலடியும் ஈற்றடியும் மடக்கு

எ - டு: 'மறைநுவல் கங்கை தாங்கினார்
நிறைதவ மங்கை தாங்கினார்
குறையென வண்டர் வேண்டவே
மறைநுவல் கங்கை தாங்கினார்'

இ - ள்: மறைநுவல் - வேதம் புகழும்படியான, கங்கை தாங்கினார் - கங்கா நதியைத் தரித்தார், நிறை தவ - மிக்க தவத்தையுடைய, மங்கை தாங்கினார் - உமாதேவியை இடப்பாகத்தில் தாங்கினார், குறையென - எமக்குக் குறை இதுவென்று, அண்டர் வேண்டவே - வானவர் தொழுது இரப்ப, மறை நுவல் - அற்றங்களைப் பிறர்க்கு உபதேசிக்கும், கம் - (பிரமன்) தலையைக், கை தாங்கினார் - கையிலே தாங்கினார் எ - று.

அற்றம் - இரகசியம். இதில் 'மறைநுவல் கங்கை தாங்கினார்' என்ற சொற்றொடர் முதலடியிலும், நான்காமடியிலும் மடங்கி வருதல் காண்க.

(ரு) கடை யீரடியும் மடக்கு

எ - டு: 'கொல்லியம் பொருப்பனை மேவார் கோநகர்
இல்லெரி மேவுவ தியம்ப வேண்டுமோ?
வல்லியந் தாயரை வணங்க லாயின
வல்லியந் தாமரை வணங்க லாயின'

இ - ள்: கொல்லியம் பொருப்பனை - கொல்லிமலையை யுடைய சேரனை, மேவார் - மேவாராகிய அரசர், கோநகர் இல் -

நகரத்து மாளிகைகளை, எரி மேவுவது இயம்ப வேண்டுமோ - எரி கவருதல் சொல்ல வேண்டுமோ?, வல்லி அம் தாமரை - வல்லி யோடு கூடிய அழகிய தாமரைகளையுடைய, வனங்கள் ஆயின - நீர்த்தடாகங்கள் ஆயின எல்லாம், வல்லியம் - புலியையும், தா மரை - தாவும் மரைகளை (மான்களை)யும் உடைய, வனங்கள் ஆயின - காடுகள் ஆயின எ - று.

இதில் 'வல்லியந் தாமரை வனங்க ளாயின' என்ற சொற் றொடர் மூன்றாமடியிலும் நான்காமடியிலும் மடங்கி வருதல் காண்க.

(வி - ரை) வனம் - நீர்த்தடம், காடு.

(ரு) இரண்டாமடியும் ஈற்றடியும் மடக்கு

எ - டு : 'நலத்தகை பெறவிரு சரண மோதுநம்
குலத்தகை பணிகொளே காம்ப ரத்தனே
நலத்தகை மகளொரு பாக நண்ணுமேல்
குலத்தகை பணிகொளே காம்ப ரத்தனே'

இ - ள் : நலத்தகை பெற - நலமிகுதி பெற வேண்டி, இரு சரணம் ஓதும் - இரண்டு சீர்ப்பாதத்தையும் ஏத்தும், நம் குலத்த - நமது குலத்துள்ளார், கை - கைகளை, பணிகொள் - தொழில் கொள்ளும், ஏகாம்பரத்தன் - ஏகாம்பரத்தையுடை யான், நலம் தகை - நன்மை மிக்க, மகள் - தலைமகளை, ஒரு பாக மாக நண்ணுமேல் - ஒரு பாகத்திலே சேர்க்கும், குலம் தகை - குலத்தான் மிக்க, பணிகொள் ஏக அம்பரத்தன் - பாம்பாற் புனையப்பட்ட ஒற்றை ஆடையை யுடையான் எ - று.

ஏகாம்பரன் - தனி மாவை உடையான். இதில் 'குலத்தகை பணிகொளே காம்ப ரத்தனே' என்ற சொற்றொடர், இரண்டா மடியிலும் ஈற்றடியிலும் மடங்கி வருதல் காண்க.

இவை ஆறும் ஈரடி மடக்கு.

இனி, மூன்றடி மடக்கு வருமாறு:—

(க) ஈற்றடி யொழித்து ஏனை மூன்றடியும் மடக்கு

எ — டு : 'காம ரம்பயி னீரம துகரம்
காம ரம்பயி னீரம துகரம்
காம ரம்பயி னீரம துகரம்
நாம ரந்தை யுறனினை யார்நமர்'

இ - ள் : கா - சோலையில், மரம் பயில் நீர - மரந்தொறும் நெருங்கின, மதுகரம் - வண்டினமானவை, காமரம் பயில் நீர - காமரம் என்னும் இசையைப் பாடாநின்றன, மது கரம் - தேன் பொழியும், காமர் அம்பு - மதவேள் அம்பு, அயில் நீர - வேற் செய்தியை யுடையவாயின, மது - வேனிற்காலத்து, கரம் - எதிர்ப்பட்ட, நாம் அரந்தையுற - நாம் துயருழப்பவும், நினை யார் நமர் - நினையாதொழிந்தார் நம் காதலர் எ - று.

மது - வேனிற்காலம். கரம் - எதிர்ப்படல். இதில் 'காம ரம்பயி னீரம துகரம்' என்ற சொற்றொடர், ஈற்றடி யொழிய மற்றைய மூன்றடிகளிலும் மடங்கி வந்தமை யுணர்க.

(உ) முதலடி யொழித்து ஏனை மூன்றடியும் மடக்கு

எ - டு : 'வரிய வாங்குழல் மாத ரிளங்கொடி
அரிய வாங்கய தானவ னங்களே
அரிய வாங்கய தானவ னங்களே
அரிய வாங்கய தானவ னங்களே'

இ - ள்: வரி அவாம் - வண்டுகள் விரும்பும், குழல் மாதர் இளங்கொடி - அளகத்தையுடைய காதல் இளங்கொடியே! அரிய - அடைதற்கரிய, ஆங்கு - அவ்விடத்தும், அயது ஆன - பள்ளத்தில் உண்டான, வனங்கள் - புனல்களாவன, அரி - வண்டுகள், வாம் கயம் - தாவப்படாநின்ற யானையினது, தான வனங்களே - மதசலங்களே, அரி - சிங்கங்கள், அவாம் - உலாவும், கய - பெரிய, தான வனங்கள் - இடத்தோடு கூடிய காடுகளில் எ - று.

அயம் - பள்ளம். கய - பெரிய. இதில் 'அரிய வாங்கய தானவ னங்களே' என்ற சொற்றொடர், முதலடி யொழிய மற்றைய மூன்றடிகளிலும் மடங்கி வந்தமை யுணர்க.

(வி - ரை) இது தோழி தலைமகட்குச் சாத்தியல்பு கூறியதாகும். மூன்றாமடியில் உள்ள அரிய என்பதை அரி + அ எனப் பிரித்து அகரத்தைச் சாரியையாகக் கொள்க.

(௩) இரண்டாமடி யொழித்து ஏனை மூன்றடியும் மடக்கு

எ - டு : 'கடிய வாயின காமரு வண்டினம்
அடிய வாவகன் றாருழை வாரலர்
கடிய வாயின காமரு வண்டினம்
கடிய வாயின காமரு வண்டினம்'

இ - ள் : கடியவாயின - விளக்கமுடையவாய, காமரு - அழகு பெற்ற. வண்டினம் - வளைகள், அடிய ஆ - (கழன்று) அடியிலே விழக்கண்டும், அகன்றார் - நம்மைப் பிரிந்தவர், உழை வாரலர் - நம்மிடத்து வந்திலர், கடி அ வாயின-நறு நாற்றத்தை விரும்பாநின்றன, காமரு - சோலைகளில் பயிலுகிற, வண்டு இனம் - வண்டின் கூட்டங்கள், கடிய ஆயின - அஞ்சத்தகுவன வாயின, காமரு - அழகுடன் புணர்ந்த, வண் தினம் - வளவிய நாட்கள் எ - று.

இதில் 'கடிய வாயின காமரு வண்டினம்' என்ற சொற்றொடர், இரண்டாமடி யொழிய மற்றைய மூன்றடிகளிலும் மடங்கி வருதல் காண்க.

(௪) மூன்றாமடி யொழித்து ஏனை மூன்றடியும் மடக்கு

எ - டு : 'கோவ ளர்ப்பன கோநக ரங்களே
கோவ ளர்ப்பன கோநக ரங்களே
மேவ ளக்கர் வியன்திரை வேலைசூழ்
கோவ ளர்ப்பன கோநக ரங்களே'

இ - ள்: கோ வளர்ப்பன - ஒளியை மிகுப்பன, கோ நகரங்கள் - தலைமையையுடைய நகரங்கள், கோ - சோழன், வளர்ப்

பன - பெருக்குவன, கோந - வேற்றரசருடைய, கரங்களே - திறைகளை, மே அளக்கர் - பொருந்திய கடலானது, வியன் திரை - பெரிய திரையோடும், வேலை சூழ் கோ - கரையோடும் சூழப்பட்ட நிலவலயத்தை, வளர்ப்பன - காப்பன, கோந - இச் சோழனுடைய, கரங்கள் - கைகள் எ - று.

கரம் - திறை. கோ - சோழன். இதில் 'கோவ ளர்ப்பன கோநக ரங்களே' என்ற சொற்றொடர், மூன்றாமடி யொழிய மற்றைய மூன்றடிகளிலும் மடங்கி வருதல் காண்க.

இவை நான்கும் மூன்றடி மடக்கு.

இனி, நான்கடி மடக்கு வருமாறு:—

நான்கடியும் மடக்கு

எ - டு: *'வான கந்தரு மிசைய வாயின*
வான கந்தரு மிசைய வாயின
வான கந்தரு மிசைய வாயின
வான கந்தரு மிசைய வாயின'

இ - ள்: வானம் - மேகம், கம்தரு - கடலினிடத்திற் கொடுக்கும், இசைய ஆயின - ஓசையோடு கூடியிருந்தன, வான் - ஆகாயத்தை, அகம்தரும் - வவ்விக்கொள்ளும், மிசைய ஆயின - எழுச்சியை யுடையவாயின, வானகம் - விண்ணுலகத்தை, தரும்- ஒக்கும், இசைய ஆயின - புகழையுடையன, தரு மிசைய ஆயின - மரங்களை உச்சியிலே உடையன, வால் நகம் - பெரிய மலைகள் எ - று.

இதில் நான்கடிகளும் ஒரேவிதமாக மடங்கினமை யுணர்க. இஃது ஏகபாதமுமாம்.

(வி - ரை) ஏகபாதம் - ஒரு அடி. பாதம் - அடி; 'அந்தமில் பாதம்' (யாப் - உஎ) என்றவிடத்தும் இப்பொருளாதல் அறிக. ஒரே அடி, நான்கடியாக மடங்கிவரின் அது ஏகபாதமாம்.

'பிரம புரத்துறை பெம்மான் எம்மான்
பிரம புரத்துறை பெம்மான் எம்மான்
பிரம புரத்துறை பெம்மான் எம்மான்
பிரம புரத்துறை பெம்மான் எம்மான்'

என்ற திருஞானசம்பந்தர் பாடலும் இதன்பாற்படும்.

ஒரு சொல்லானே நான்கடியும் மடக்குவதனை, இயமாஇயமகம் என்ப.

எ - டு: *'உமாதர னுமாதர*
னுமாதர னுமாதர
னுமாதர னுமாதர
னுமாதர னுமாதரன்'

இ - ள்: உமா - உமையை, தரனும் - தரித்தவனும், ஆதரனும் - ஆதரிக்கின்றவனும், மா தரனும் - மானைத் தரித்தவனும், மாதரனும் - திருவைத் தரித்தவனும், ஆ தரனும் - ஆனிரையைக் காத்தவனும், மா தரனும் - யானைத் தோலைத் தரித்தவனும்,

ஆ தரனும் - இடபத்தை நடத்துவானும், மா தரன் - பெருமையைத் தரித்த முக்கட்கடவுள் எ - று.

இதில் 'உமாதரன' என்ற ஒரு சொல்லே நான்கு அடிகளிலும் மடங்கி வந்தமை யுணர்க. அளவடிச் செய்யுளாக்கிற் செந்துறையாம்.

(வி - ரை) இப்பாடற்கண் ஒரு சொல்லே நான்கு அடிகளிலும் மடங்கி வருதலின், இது இயமாஇயமகம் ஆயிற்று.

'அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே' என்பதால் திருவைத் தரித்த திருமாலும் முக்கட் கடவுளின் ஒரு கூறே ஆவர். அதுபற்றியே ஈண்டு 'மாதரனும் உமாதரனே யாவன்' என்றார். செந்துறை என்றது ஈண்டுக் குறள் வெண் செந்துறையையாம். அளவடி - நாற்சீரடி. இங்ஙனம் பிரிப்பின் பின் வருமாறு ஆகும்.

'உமாதரனு மாதரனு மாதரனு மாதரனு
மாதரனு மாதரனு மாதரனு மாதரன்'

அந்தம் இல்லாதும், அளவிரண்டொத்து முடியின் வெள்ளைச் செந்துறையாகும் (யாப்பருங் - உள) என்பதாலும், விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையும் உடையதாக வருதலாலும், இது குறள்வெண் செந்துறை யாயிற்று.

இனிப் பாடக மடக்கு வருமாறு:—

இரண்டடிப் பாடக மடக்கு

எ - டு : 'பணிப வநந்தன தாக மன்னுவார்
பணிப வநந்தன தாக மன்னுவார்
அணியென மேயது மன்ப ராகமே
அணியென மேயது மன்ப ராகமே'

இ - ள் : பணி - பாம்புகளுக்கு, பவநம் - இடம், தனது ஆகம் மன்னுவார் - தனது மார்பகமாக நிற்பார், பணி-தாழ்ந்த, பவம் - பிறப்பு, நந்தல் - இறப்பு, நதாக - இல்லையாக, மன்னுவார் - நிலைபெறுவார், அணியென - அழகென்று சொல்ல, மேயதும் - உறைவதும், அன்பர் ஆகமே - அன்பருடைய உள்ளமே, அணியென - அலங்காரம் என்று சொல்ல, மேயதும் - விரும்புவதும், மன் - என்றும் உள்ள, பராகம் - திருவெண்ணீற்றை எ - று.

பவனம் - இடம். பணிபவம் - தாழ்ந்த பிறப்பு. நதாக - இல்லையாக.

(வி - ரை) பாடகம் - வளைவாக மடங்கியிருக்கும் ஒருவகைக் காலணி. அது மடங்கியிருத்தல் போன்று, இரண்டடிகள் இப்பாடற்கண் மடங்கி வருதலின், இது இரண்டடிப் பாடக மடக்காயிற்று.

நதாக - இல்லையாக; இதன்கண் உள்ள நகரம் இன்மைப் பொருளைக் குறித்தது. பராகம் - தூளி; இங்கே திருநீற்றைக் குறித்தது.

அடிதொறும் இருதொடர்கள் மடங்கிவந்த பாடக மடக்கு

எ - டு : 'கோடா ராவிப் பாற்குருகே!
கோடா ராவிப் பாற்குருகே

கொண்டற் போது மருங்கடலே!
　　கொண்டற் போது மருங்கடலே
வீடா விருப்புக் காப்புள்ளே!
　　வீடா விருப்புக் காப்புள்ளே
வீயுந் துயர முண்டகமே
　　வீயுந் துயர முண்டகமே!
நாடா மேகாம் பரத்தருவி
　　நாடா மேகாம் பரத்தருவி
நற்காஞ் சிவனத் தானத்தான்
　　நற்காஞ் சிவனத் தானத்தான்
சூடா மலர்க்கண் டலந்தேனே!
　　சூடா மலர்க்கண் டலந்தேனே
சுற்ற மலைவாய்த் தவராலே!
　　சுற்ற மலைவாய்த் தவராலே'

இ - ள்: கோடு ஆர் - கரை பொருந்திய, ஆவி - தடத்தின் கண், குருகே - குருகுகாள்!, கோள் தாரா - கொள்ளுதற்குப் பிடிப்பற்றன, இப்பால் குருகு - இப்புறம் வளைகள்; கொண்டல் மேகம், போதும் - முகக்கும், அருங்கடலே - அரிய கடலே!, கொண்டல் போதும் - கீழ்க்காற்றே போதும், மருங்கு அடலே - பக்கத்து நின்று துன்புறுத்தற்கு; கா வீடு ஆ — காவே வீடாக, இருப்பு புள்ளே - இருக்கும் புட்குலமே!, வீடா விருப்பு - நெகிழாது ஆசைக்கட்டு, காப்பு உள்ளே - மனத்தின்கண்; வீ உந்து உயர் - மதுகரம் அலைக்கும் உயர்ந்த, அம் முண்டகமே - அழகிய தாமரையே!, வீயும் துயரம் - சாதல் துயரம், உண்டு அகம் - உண்டு மனையில் உள்ளோரால்; நாள் தாம் - உடுக்குலம் தாவும், அம்பரத்து மேகம் - ஆகாயத்து உலவும் மேகத்தாலுண்டான, அருவி நாடு ஆம் - அருவியையுடைய நாட்டில் உண்டாம், ஏகாம் பரத் தருவின் - ஒரு மாமரத்தினுடைய, நல் காஞ்சி வனம் தானத்தான் - அழகிய காஞ்சி வனத்தினையுடையான், நற்கு ஆம்சிவன் - நஞ்சையுண்டான் சிவன், நத்தான் - நந்து (சங்கு) ஏந்திக்கு (திருமாலுக்கு), அத்தான் - அத்தான்; சூடா மலர்க் கண் தலம் - வளையாத தாழை மலரின்கண் உள்ள, தேனே - தேனீக்காள்!, சூடு ஆம் - சுடுதலை யொத்த, அலர் கண்டு - அயலார் அலர் தூற்றுதலைக் கேட்டு, அலந்தேன்-எய்த்தேன்; சுற்று அம் அலை வாய்த்த - சூழ நீர்த்தரங்கத்திலுள்ள, வரால்- வரால் மீன்களே!, சுற்றம் மலைவு ஆய்த்து - உறவு பகையானது, அவரால் - அந்தத் தலைவரால் எ - று.

(வி - ரை) இது, காம மிக்க கழிபடர் கிளவியால் தலைவி கூறியது. நற்கு ஆம் சிவன் - நன்மையை யுண்டாக்கும் சிவபெருமான். அடியவர்க்காகக் காய்சின ஆலமுண்டவன் ஆதலால் 'நற்கு ஆம் சிவன்' என்றார். சிவபெருமான் உயிர்களுக்கு விளையும் எத்துணையோ நன்மைகளில், பெயக்கண்டும் நஞ்சுண்ட பெருங்கருணை பெரிதாகலின், ஈண்டு அதனைக் குறித்தார் உரையாசிரியர். திருமால் தங்கை உமையாதல்பற்றி திருமாலுக்குச் சிவபெருமான் அத்தான் ஆனார். இதன்கண் அடிதொறும் இரண்டிரண்டு தொடர்கள் மடங்கி வந்தமை காண்க.

இடையிட்டு வந்த பாடக மடக்கு

எ - டு : 'கலைநி லாவரு மாலைம ணங்கொள்வான்
மலைய மாருத மாறல மாதர்கண்
கலைநி லாவரு மாலைம ணங்கொள்வான்
மலைய மாருத மாறல மாதர்கண்'

இ - ள் : கலை நிலா - கலை(ஆடை) நில்லாத, அருமாலை - அரிய அந்திப்பொழுதில், மணங் கொள்வான் - புணர்ச்சியை வேண்டி, மாதர் கண் - காதலோடு கூடிய கண், மலைய மாருதம் - மிகவும் அழுகை, மாறல - நீங்காது; கலை நிலா வரும் - மதியின் கண் உண்டாகிய நிலவு எழும், மாலை - தொடையலின், மணங் கொள்வான் - வாசங் கொள்ள வேண்டி, மலைய மாருதம் - தென்றலானது, மாறல - நீங்காது, மாதர்கண் - இவளுழை எ - று.

(வி - ரை) இப்பாடற்கண் முதலடி மூன்றாமடியாகவும், இரண்டாமடி நான்காமடியாகவும் மடங்கி வந்தமையின் இடையிட்டு வந்த பாடகமடக்காயிற்று.

இரண்டாம் அடியிலுள்ள மலையமாருதம் என்ற சொல் தென்றலைக் குறிக்குமேனும், ஈண்டு ஆகுபெயராய் அதனால் விளைந்த அழுகையைக் குறித்தது.

இதுவுமது

எ - டு : 'ஓத நின்றுல வாவரும் வேலைவாய்
மாத ரங்க மலைக்கு நிகரவே
ஓத நின்றுல வாவரு வேலைவாய்
மாத ரங்க மலைக்கு நிகரவே'

இ - ள் : நின்று ஓத - நின்று சொல்ல, உலவா - முடிவில்லாத, அரும் வேலைவாய் - அரிய காலத்தின்கண், மாதர் - இவளுடைய, அங்கம் - அவயவங்களை, அலைக்கும் நிகரவே - அழிக்கு மாறு பட்டன, ஓதம் நின்று - நீர் நிலைபெற்று, உலவா வரு - உலவி வருகின்ற, வேலைவாய் - கடலில், மா தரங்கம் - பெரிய திரைகள், மலைக்கு நிகரவே மலைக்கு ஒப்பாக இருக்கும் எ - று.

(வி - ரை) இதன்கண் முதலடி மூன்றாமடியாகவும், இரண்டாமடி நான்காமடியாகவும் மடங்கி வந்தமையின், இது இடையிட்டு வந்த மடக்காயிற்று.

இனி, அந்தாதி மடக்கு வருமாறு :—

அந்தாதியாவது, ஓரடியின் அல்லது செய்யுளின் ஈற்றில் வருஞ்சொல், அடுத்த அடியின் அல்லது அடுத்த செய்யுளின் முதலில் வருவது. அந்தம் ஆதி என்பன அந்தாதி என்று ஆயது. அந்தம் - ஈறு; ஆதி - முதல்; அந்தமே முதலில் வருவது என்பது இதன் பொருள்.

அந்தாதி மடக்கு

எ - டு : 'மாலை யாக [1]வெய் தனங்கவேள் பயில்தரு மாலை
மாலை வேட்டவர் மனங்கொலோ அவன்றுழாய் மாலை
மாலை யோவுடைத் ததுநினைந் தெழுதரு மாலை
மாலை யாவுடை யவரைவந் திடர்செயு மாலை'

1. 'வெய் யனங்கவேள்' என்பதும் பாடம்.

இ - ள் : மாலையாக - ஒழுங்காக, வெய்து - வெய்து, அணங்க வேள் - மாரன் ஆயுதம், பயில் தருமாலை - பயிலுமிடம், மாலை வேட்டவர் - அரியைக் (திருமாலைக்) காதலித்தவருடைய, மனங் கொலோ - உள்ளம் போலும், அவன் துழாய் மாலை - அவனுடைய துளவ மாலை, மாலை ஒவு உடைத்து - சேர்தற்கு அருமையுடைத்து, நினைந்து - அதனை நினைந்து, எழுதரும் மாலை - எழும் உள்ள மயக்கத்தை, மாலைஆ வுடையவரை - இயல்பாகவுடையவரை, வந்து - வந்து, இடர் செயும் மாலை - துயரம் உறுவிக்கும் அந்தியம்பொழுது எ - று.

இதனைச் 'சந்தட்டய மடக்கு' மென்ப; அல்லது இடையிட்டு முதலும் இறுதியும் மடக்கிய முற்று மடக்கு எனலுமாம்.

(வி - ரை) முதலடியின் இறுதியில் வந்த மாலை என்னும் சொல் அடுத்த அடியின் ஆதியாகவும், அங்ஙனமே ஏனைய அடிகளிலும் மடங்கி வந்திருத்தலின், இது அந்தாதி மடக்காம்.

இதன்கண் 'மாலை' என்னும் சொல் எட்டு முறை மடங்கி வருதலின் இதனைச் சந்தட்டய மடக்கு என்பர். அடிதொறும் மாலை யென்னும் சொல், இடையிட்டு முதலும் இறுதியுமாக மடங்கி வருதலின், இதனை 'இடையிட்டு மடங்கிய முற்றுமடக்கு' என்றும் கூறுவர்.

அந்தாதி மடக்கு *(வேறுவகை)*

எ - டு : *'கயலேர் தரவருங் கடிபுனற் காவிரி*
காவிரி மலருகக் கரைபொரு மரவம்
மரவம் பூஞ்சினை வண்டொடுஞ் சிலம்பும்
சிலம்புசூழ் தளிரடித் திருமனைக் கயலே'

இ - ள் : கயல் - கயல்கள், ஏர்தரவரும் - அழகு பெற வரும், கடிபுனல் காவிரி - விரைந்த புனலையுடைய காவிரியாறு, கா - சோலையில், விரிமலர் உக - விரிந்த மலர்கள் உகும்படி, கரை பொரும் அரவம் - கரையைப் பொரும் அரவமானது, மரவம் பூம் சினை - பிடா மரத்தில் உண்டான பூங்கொம்புகள், வண்டொடும் சிலம்பும் - வண்டோடு கூடி ஆர்ப்பெடுக்கும், சிலம்பு சூழ் - சிலம்பாற் சூழப்பட்ட, தளிர் அடி - தளிர்போலும் அடியினை யுடையாள், திருமனைக்கு அயலே - செல்வ மனைக்கு அருகு எ - று.

(வி - ரை) இது தலைவற்குத் தோழி குறியிடங் கூறியதாகும். இப் பாடற்கண் ஒவ்வோர் அடியின் இறுதியும், அடுத்த அடியின் ஆதியாகத் தொடுக்கப்பட்டு வருதலின், இது அந்தாதி மடக்கு ஆயிற்று.

சென்ற பாட்டில் ஒரு சொல்லே எல்லா அடியிலும் அந்தாதியாகத் தொடுக்கப்பட்டது. இப்பாடலில் அடிதொறும் வெவ்வேறு சொற்கள் அந்தாதியாக் வந்துள்ளன. இவை தம்முள் வேற்றுமை. (ரு)

மடக்கிற்கு எய்தியதோர் வேறுபாடு

கூகூ. **ஓரெழுத்து மடக்கலும் உரித்தென மொழிப.**

எ - ன், இன்னும் மடக்கிற்கு எய்தியதொரு வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள் : மேல் 'எழுத்தின் கூட்டம் இடைபிறி தின்றியும், பெயர்த்தும்வேறு பொருள்தரின் மடக்கெனும் பெயர்த்தே' (கூக) என்றாராயினும், ஓரெழுத்தே பெயர்த்து மடக்குதலும் அம்மடக்கணி என்பர் எ - று.

எ - டு : 'நாநா நாதங் கூடிசை நாடுந் தொழிலோவா
தாதா தார மாகவி ரைத்தண் மலர்மீதே
வாவா வார்தண் சோலையில் வாழும் வரிவண்டே
யாயா யாளிற் சேர்த்துவ தன்பிற் கிசையாயால்'

இ - ள்: நாநா நாதம்கூடு இசை-நாநாவிதமான ஓசையோடு கூடும் இசைகளை, நாடும் - ஆராயும், தொழில் ஓவா - தொழில் நீங்காது, தாது ஆதாரமாக - தாதுக்களே (மகரந்தப் பொடி) ஆதாரமாக, விரை தண்மலர் மீதே - வாசனையையுடைய குளிர்ந்த மலர் மீதே, வாவா - தாவி, வார்தண் சோலையில் - நீண்டுள்ள குளிர்ந்த சோலையின்மீது, வாழும் வரி வண்டே - வாழும் புள்ளி களையுடைய வண்டே! யாய் ஆயாள் - என் அன்னையாய் உள் ளாள், இல் சேர்த்துவது - இற்செறித்தலை, அன்பற்கு இசையா யால் - தலைவற்குச் சொல்லுவாயாக எ - று.

இதில் 'நாநாநா' என முதலடியிலும், 'தாதாதா' என இரண்டாமடியிலும், 'வாவாவா' என மூன்றுமடியிலும், 'யாயாயா' என நான்காமடியிலும் ஒவ்வோர் எழுத்தே மடங் கினமை காண்க.

(வி - ரை) வாவுதல் - தாவுதல். வாவா - செய்யாய் என்னும் வாய் பாட்டு வினையெச்சம். இது வண்டை முன்னிலைப் படுத்தித் தலைவி கூறுவது.

'மடக்கலும்' என்ற உம்மையால், ஓரெழுத்தும், ஈரெழுத் தும், மூன்றெழுத்தும், நான்கெழுத்தும், இனவெழுத்தும், மெய்யெழுத்தும், உயிரெழுத்தும் மடங்கும். உயிரும் மெய் யும் மடங்குங்கால் உயிர்மெய்யாய் வரும். இவையெல்லாம் ஒரு செய்யுள் முழுதும் மடங்கலும், ஓரடி முழுதும் மடங்கலும் உரியவெனக் கொள்க. அவற்றுள், சில வருமாறு :—

ஓர் உயிர் மடக்கு

(க) குற்றுயிரான் வந்த மடக்கு

எ - டு : 'அமல லகல மகல லபய
கமல பவன மவள
வமல மடர வளக
வதன மடர மதன'

இ - ள் : அமலல் - சேராதொழிவாயாக!, அகலம் - எங்கள் மார்பினை, அகல் - நீங்கிப்போ, அல் - இரவின்கண், அபய - அபயனே!, கமல பவனமவள் அ - தாமரையை யிடமாகவுடைய தேவியை யனைய இவளுடைய, அமலம் - குற்றமற்ற, அடர அளக வதனம் - செறிந்திருக்கப்பட்ட குழலினையுடைய முகத்தை, அடரல் - அழிவு செய்யாதொழிவாயாக!, மதன - காமனை யொத்தாய் எ - று.

அமல் - சேருதல் அல் - ஒழிதல். 'அடரல்' என்பது 'அடர' எனக் கடை குறைந்து நின்றது. இதில் எல்லா இடத்தும் அகரக் குற்றுயிரே வந்தமை காண்க.

(வி -ரை) இதன்கண் அகரமாகிய குற்றுயிர் முழுதும் மடங்கி வருதலின், இது குற்றுயிர் மடக்காயிற்று.

(உ) நெட்டுயிரான் வந்த மடக்கு

எ - டு : 'தாயாயா ளாராயா டாமாறு தாராயா
யாமாரா வானாடா மாதாமா தாவாவா
யாவாகா லாறுகா வாகாகா ணாமா
மாலாறு மாநாதா வா'

இ - ள்: தாயாயாள் - தாயாயுள்ளவள், ஆராயாள் - இவளது விதனத்தை அறியாள் ஆதலால், தா மாறுது - வருத்தம் மாறுது, ஆராயாய் - இதனை யாராய்; ஆராயா - அங்ஙனம் ஆராயாத நினக்கு, யாம் ஆர் - அறிவுணர்த்த யாங்கள் ஆராக, வான் நாடா - வான நாட்டை யொத்த நாட்டையுடையவனே! மாதா- மாதானவள், மா தா - பெரிய வருத்தம் உறுவள், வா - வருவாயாக!; வாயா ஆகா - வந்தால் வாயாதது எது?, கால் ஆறுவா - வரும் பொழுதும் காலாறி வருவாயாக; கா - எங்களையும் காப்பாயுமாக; ஆகா காண் - இவை யாகாதன காண்; நா நாம் ஆம் - அயலவர் நாவால் எங்களுக்கு அச்சம் உண்டாகா நின்றது; மால் ஆறு - மயக்கமும் மாறுது; மா நாதா வா - பெருமையை யுடைய தலைவனே! வருவாயாக எ - று.

இதில் எல்லா இடத்தும் ஆகார நெட்டுயிரே வந்தமை உணர்க.

(வி - ரை) இப்பாடலில் முதல் அடியில் உள்ள 'ஆராயாய்' என்பதும், இரண்டாம் அடியில் உள்ள 'வா' என்பதும் இருமுறை இயைத்துப் பொருள் கொள்ளப்பட்டன. தா - வருத்தம். நாம் - அச்சம்.

ஒருமெய் மடக்கு

(க) ககர விகற்பத்தான் வந்த மடக்கு

எ - டு : 'காக்கைக்கா காகூகை கூகைக்கா காகாக்கை
கோக்குக்கூ காக்கைக்குக் கொக்கொக்க - கைக்கைக்குக்
காக்கைக்குக் கைக்கைக்கா கா'

இ - ள் : காக்கைக்கு ஆகா கூகை - காக்கைக் குலங்கட்கு ஆற்று கூகைக்குலம்; கூகைக்கு ஆகா காக்கை - கூகைக் குலங்கட்கு ஆற்று காக்கைக்குலம்; (காலவசத்தானுதலால்) கோக்கு - அரசர்க்கு, கூ காக்கைக்கு - பூமியைக் காத்தற்கும், கொக்கு ஒக்க கைக்கைக்கு - கொக்கினை யொத்துப் பகையை அழித்தற்கும் (கால வாய்ப்பு வேண்டும்; அக்கால வாய்ப்பு இன்றேல்), காக்கைக்கும் - இந்திரற்கும், கைக்கைக்கு ஆகா - பகை அழித்தற்குக் கூடாது எ - று.

காலம், பகை என்னும் சொற்கள் எஞ்சிநின்றன. இது ககர விகற்பத்தான் வந்தது.

(வி - ரை) காலவசத்தானுதல் முதலிய தொடர்கள் இசையெச்சமாய் நின்றன.

'பகல்வெல்லும் கூகையைக் காக்கை யிகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது' (௪௮௧)

'கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்கச் சீர்த்த இடத்து' (௪௯0)

என்னும் குறட்பாக்கள் ஈண்டு நினைவு கூரத்தக்கன. கூ - பூமி. காக்கு - கற்பகச் சோலைக்கு. ஐக்கு – தலைவனுக்கு. இஃது இப்பொருட்டாதல் 'என்னைமுன் நில்லன்மின்' (குறள் - எ௭௧) என்றவிடத்தும் காண்க. இதன்கண் ககர இனமே அமைந்திருத்தல் காண்க.

(உ) தகர விகற்பத்தான் வந்த மடக்கு

எ - டு : 'தத்தித்தா தூதுதி தாதூதித் தத்துதி
துத்தித் துதைதி துதைத்ததா தூதுதி
தித்தித்த தித்தித்த தாதெது தித்தித்த
தெத்தாதோ தித்தித்த தாது'

இ - ள் : தத்தி - பாய்ந்து, தாது ஊதுதி - தாதுக்களையுடைய பூக்களின் மதுவை உண்ணா நிற்றி; தாது ஊதி தத்துதி - அங்ஙனம் உண்டு மீண்டும் வேறொரு பூவில் பாயா நிற்றி; துத்தி - அங்ஙனம் உண்டு பாய்ந்து, துதைதி - செறியாநிற்றி; துதைத்த தாது ஊதுதி - (மீண்டும்) வேறொரு செறிந்த பூவின் தாதுக்களைக் கோதாநிற்றி; தித்தித்த தித்தித்த தாது எது? - (இப்பூக்களில்) தித்தித்து இன்பந்தரும் பூ எது?; தித்தித்த தித்தித்த தாது எத் தாதோ? - தித்தித்து இன்பந்தரும் தாது எந்தப்பூவின் தாது? (எமக்குச் சொல்லுவாயாக) எ - று.

இதில் 'வண்டு' என்னும் சொல் எஞ்சி நின்றது. தலைவி அவயவங்களை வியந்த தலைவன், தலைவி கேட்ப வண்டினை நோக்கிக் கூறியது. இது தகர விகற்பத்தான் வந்தது.

ஈரெழுத்தான் வந்த மடக்கு

எ - டு : 'மன்னுமான் மான்முன்ன மானமு மீனமா
மின்னமா னேமுன்னு மானினி - மென்மென
மின்னுமா மென்னினு மன்னமுமா மென்மனனே
மன்னு மா மானுமான் மான்'

இ - ள் : மன்னுமால் மால் - உண்டாகாநின்றது மயக்கம்; முன்னம் மானமும் ஈனமாம் - முன்னுறவே மானமும் குறையாநின்றது; இன்னம் ஆனேம் - இத்தன்மையான எம்மால், முன்னும் - நினையப்படும், மான் இனி - மாது இனி, மென்மென - மெல்லென, மின்னும் ஆம் என்னில் நாம் - நாம் மின்னலையும் ஒப்பாள் என்பேமாயின், அன்னமும் ஆம் - அன்னமுமாம் எனலாய் நிற்பள்; 'என் மனனே மன்னும் - என் உள்ளத்துள்ளே தங்குவதும் செய்யா நிற்பள்; மா மான் மானுமால் - மாமை நிறத்தையுடைய மானை யொக்கும் கண்ணினையுடைய அம்மாது எ - று.

இதில் மகரமும் னகரமும் ஆகிய ஈரெழுத்துக்களே வருதல் காண்க.

(வி - ரை) மகரமும் னகரமும் ஆகிய ஈரெழுத்துக்களே இப்பாடல் முழுதும் வருதலின், இது ஈரெழுத்தால் வந்த மடக்காயிற்று. இதனை 'இருவருக்கப்பாட்டு' என்றும் கூறுவர்.

மூன்றெழுத்தான் வருவது

எ - டு : 'மின்னுவான் முன்னு மெனினு மினிவேனின்
மன்னு வினைவே னெனைவினவா - முன்னன
வானவனை மீனவனை மானவினை வென்வேன்
மானவனை மானுமோ வான்'

இ - ள் : மின்னு - மின்னி, வான் முன்னும் எனினும் - உருமேற்றினைத் தோற்றுவிக்கு மாயினும், இனி வேனில் மன்னு - பின்பு வேனிற்காலத்து நிலைபெற்று, இனைவேன் எனை - வருந்தும் என்னை, வினவா - ஆராயாத, முன்னன வானவனை - எவர்க்கும் முதலாயுள்ள சேரனை, மீனவனை - பாண்டியனை, மான வினை வென் வேல் மானவனை - மதிப்புமிக்க மிக்கவினைகளோடு கூட வென்ற வேலினையுடையனாகிய மனுகுலக் காவலனை, மானுமோ வான் - ஒக்கவல்லதோ இத்தன்மைத்தாகிய மேகம் எ - று.

வான் - உருமேறு. 'வென்ற' என்பது ஈறு குறைந்தது. இதில் மகரமும், னகரமும், வகரமும் ஆகிய மூன்றெழுத்துக்களே வருதல் காண்க.

(வி - ரை) இது தலைவி கூற்று. தலைவனாகிய சோழன் தன்னைப் பற்றி நினையான் எனினும், அவனுடைய பெருமையும் கொடையும் இகழத் தக்கதன்று என்பாள், 'வான் மானவனை மானுமோ?' என்றாள். சோழனுடைய ஆணை ஏனைய இருநாடுகளிலும் இருந்ததுபற்றி அவனை வானவன் என்றும், மீனவன் என்றும் கூறினாள். இதன்கண் மகர, னகர, வகரமாகிய மூன்றெழுத்துக்களும் வந்துள்ளமையால், மூன்றெழுத்தால் வந்தமடக்காயிற்று

நான்கெழுத்துக்களால் வருவது

எ - டு : 'யானக வென்னே யினையனு வாக்கின
கானக யானை யனையானைக் - கோனவனைக்
கொன்னயன வேனக்க கோகனகக் கைக்கன்னிக்
கன்னிக் கனியனைய வாய்'

இ - ள் : யான் - எத்துணையும் சிறிய யான், நக - பழிக்க, கானக யானை அனையானை - காட்டு யானையை யொத்த, கோனவனை - நம் தலைவனை, இனையனு ஆக்கின - இத்தன்மையாகப் பண்ணினவை, கன்னி - ஒரு பெண்ணினுடைய, கொல் வேல் நயனம் - கொல்லுந் தன்மையை யுடைய வேலை யொக்கும் கண்களும், நக்க கோகனகக் கை - மலர்ந்த தாமரை போன்ற கைகளும், கன்னி கனி அனைய வாய் - யாவராலும் தீண்டப் படாத கொவ்வைக்கனி போலும் வாயுமாய் இருந்தது, என்னே - ஈதோர் ஆச்சரியமாய் இருந்தது! எ - று.

(வி - ரை) இது பாங்கன் தன்மனத்து அழுங்கல் என்னும் துறையைச் சார்ந்தது. இதன்கண் யகரமும், னகரமும், ககரமும், வகரமும் ஆகிய நான்கெழுத்துக்களே மடங்கி வருதல் காண்க.

ஒற்றெழுத்தின்றி வருவது

எ - டு : 'நுமது புனலி லளியி வரிவை
யமுத விதழி னிகலு - குமுத
மருவி நறவு பருக வளரு
முருவ முடைய துரை'

இ - ள் : அளி - வண்டே!, நுமது புனலில் - நீ பயிலும் பூந்தடங்களில், இ அரிவை - இம்மடைந்தையுடைய, அமுதம் இதழின் - அமுதம் பொதியும் அதரம், இகலும் - ஒக்கும், குமுதம் - குமுத மலர்களில், மருவி - பல்காலும் பயின்று, நறவு பருக தேனைப் பருக, வளரும் உருவம் உடையது - பின்பும் தேன் உண்டாகும்படியை உடையது, உரை - (உண்டாயின்) சொல்லுவாயாக எ - று.

இதில், ஒற்றெழுத்தின்றி இருத்தல் காண்க.

(வி - ரை) இது தலைவன் வண்டை முன்னிலைப்படுத்திக் கூறியதாகும். 'பெருநயப்புரைத்தல்' என்னும் துறையைச் சாரும்.

வல்லினத்தான் வருவது

எ - டு : 'தடித்துத் தடித்துத் துடுப்பெடுத்த கோட
றொடுத்த தொடைகடுக்கை பொற்போற் - பொடித்துத்
தொடிபடைத்த தோடுடித்த தோகைகூத் தாடக்
கடிபடைத்துக் [1]காட்டிற்றுக் காடு'

இ - ள் : தடித்து - மின்னலானது, துடித்து - நடுங்கித் தோன்ற, கோடல் துடுப்பு எடுத்த - காந்தள்கள் பூத்துக் குலைகளைத் தாங்காநின்றன; கடுக்கை பொன்போல் தொடை தொடுத்த - கொன்றைகள் பொன் போன்ற நிறத்தையுடைத்தாகிய பூக்களை மாலையாகத் தொடுத்துத் தூக்காநின்றன; பொடித்து - எல்லாருக்கும் தோன்ற, தொடி படைத்த தோள் துடித்த - வளையையுடைய தோளும் இடப்பக்கம் துடியாநின்றது; தோகை கூத்தாட - மயில்கள் களித்தாட, காடு கடி படைத்துக் காட்டிற்று - காடு புதுமையை விளைத்துக் காட்டாநின்றது எ - று.

இதில், முற்றும் வல்லெழுத்துக்களே வருதல் காண்க.

(வி - ரை) தடித் - மின்னலைக் குறிக்கும் வடசொல்.

மெல்லினத்தான் வருவது

எ - டு : 'மானமே நண்ணு மனமென் மனமென்று
மானமான் மன்னு நனிநாணு - மீனமா
மனு மினன்மின்னி முன்முன்னே நண்ணினு
மாணு மணிமேனி மான்'

இ - ள் : மானம் மான் மன்னு - பெரிய யானைகளையுடைய வேந்தனே! ஆனு மினல் மின்னி - நீங்காது மின்னினது விளங்கி, முன் முன்னே நண்ணினும் - முன்னே முன்னே தோன்றினும்,

1. 'காட்டித்துக் காடு' என்பதும் பாடம்.

மாணு மணி மேனி - ஒவ்வாத அழகிய உருவத்தையுடைய, மான் - மானை யொப்பாள், மானமே நண்ணு மனம் - மானம் யாதும் மேவாத உள்ளம், என் மனம் என்னும் - எனது உள்ளம் என்னும்; நனி நாணும் - மிகவும் நாணும் குறைபடா நிற்கும்; ஈனமாம் - (ஆதலால், நீ இதுவரை வரைந்து கொள்ளாதிருத்தல் நினது பெருமைக்குக்) குறைபாடாகும் எ - று.

இதில், முழுதும் மெல்லெழுத்துக்களே வருதல் காண்க.

(வி - ரை) தலைவன் நெஞ்சு தன்னிடத்து வாராதிருந்தும், தன் நெஞ்சு தலைவன்பால் சேறலின் 'மானமே நண்ணு மனம்' என்றாள். 'செற்றார் பின் சொல்லாப் பெருந்தகைமை காமநோய், உற்றார் அறிவதொன் றன்று' (குறள் - கஉருரு) என்பது தலைவிக்கு அநுபவமாயிற்று.

இடையினத்தான் வருவது

எ - டு: 'யாழியல் வாய வியலள வாயவொலி
யேழிய லொல்லாவா லேழையுரை - வாழி
யுழையே லியலா வயில்விழி யையோ
விழையே லொளியா லிருள்'

இ - ள்: யாழ் இயல்வாய - யாழின் இயற்றப்படாநின்ற, இயல் அளவு ஆய - இசை நூல் சொல்லிய அளவையுடைய, ஒலி ஏழ் இயல் - இசை ஏழும் கூடி, ஏழை உரை ஒல்லா - இப்பேதையுடைய மொழியுடனே நிகர்க்க மாட்டா; உழையேல் அயில் விழியை இயலா - மானின் விழியும் இவள் வேல் போலும் விழியை யொக்க மாட்டா; ஓ இழையேல் - வியக்கத்தக்க ஆபரணங்களினது ஒளியும், ஒளியால் - இப்பேதையுடைய ஒளியாலே, இருள் - நிறங்கெட்டு இருளாம் எ - று.

இதில், இடையெழுத்துக்களே வருதல் காண்க. பிறவும் வந்தவழிக் கண்டு கொள்க.

(வி - ரை) ஆல், வாழி என்பன அசைகள். (சு)

மடக்கு முற்றிற்று.

சித்திரகவி வருமாறு: —

சித்திரகவியின் வகை

கூஎ. கோமூத் திரியே கூட சதுக்கம்
மாலை மாற்றே எழுத்து வருத்தனம்
நாக பந்தம் வினாவுத் தரமே
காதை கரப்பே கரந்துறைச் செய்யுள்
சக்கரம் சுழிகுளம் சருப்பதோ பத்திரம்
அக்கரச் சுதகமும் அவற்றின் பால.

எ - ன், இன்னும் அவ்வெழுத்து மடக்கு அலங்காரத்துள் படுவனவான சில மிறைக்கவி ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: கோமூத்திரி, கூடசதுக்கம், மாலைமாற்று, எழுத்து வருத்தனம், நாகபந்தம், வினாவுத்தரம், காதைகரப்பு, கரந்துறைச் செய்யுள், சக்கரம், சுழிகுளம், சருப்பதோபத்திரம், அக்கரச்சுதகம் ஆகிய பன்னிரண்டும், அவ்வெழுத்து மடக்கு அலங்காரத்தின் பாலவாய் வரும் எ - று.

'அக்கரச் சுதகமும்' என்னும் உம்மையால், நிரோட்டம், ஒற்றுப் பெயர்த்தல், மாத்திரைச் சுருக்கம், மாத்திரை வருத்தனை, முரசபந்தம், திரிபாகி, திரிபங்கி, பிறிதுபடு பாட்டு முதலிய சித்திர கவிகள் எல்லாம் கொள்க.

அவற்றுள், **(க) கோமூத்திரி** என்பது இரண்டிரண்டு வரியாக ஒரு செய்யுளை எழுதி, மேலும் கீழும் ஒன்றிடையிட்டு வாசித்தாலும் அச்செய்யுளே யாவது.



எ - டு : [1] 'பருவ மாகவி தோகன மாலையே
பொருவி லாவுழை மேவன கானமே
மருவு மாசைவி டாகன மாலையே
வெருவ லாயிழை பூவணி காலமே'

இ - ள் : பருவம் ஆக இது - அவர் குறித்த காலம் இது வாதல் வேண்டும்; கனம் மாலை - மேக வொழுங்கானது, ஆசை மருவும் - திசைகள் எல்லாம் பொருந்தும், மாலையே கனம் விடா - (அதுவுமன்றி) மாலைப்பொழுதின்கண் மழையை விடாது பொழியும்; பொருவிலா உழை - ஒப்பில்லாத மான்கள், மேவன கானமே - பொருந்தாநின்றன காட்டின்கண்; ஆயிழை - (ஆதலால்) குற்றமற்ற ஆபரணங்களை யுடையாய்!, வெருவல் - அஞ்சாதொழிவாயாக; பூ அணி காலமே - தலைவர் நம்மைப் பூவால் அலங்கரிக்கும் காலம் இது எ - று.

இதனுள் 'வேண்டும்' என்னும் சொல் வருவிக்கப்பட்டது. 'மேவின' என்பது 'மேவன' எனத் திரிந்து நின்றது.

பசுவானது நடந்துகொண்டே சிறுநீர் விடும்போது, அந்நீர் ஒழுகிய தாரையானது இவ்வாறே மேலும் கீழும் நெளிந்த வடிவமாய் இருக்கும்; அதுபற்றியே இதற்குக் **கோமூத்திரி** எனப் பெயர் ஏற்பட்டது.

(உ) கூடசதுக்கம் என்பது ஈற்றடி எழுத்துக்கள் ஏனை மூன்றடியுள்ளும் கரந்து நிற்கப் பாடுவது.

எ - டு : 'புகைத்தகைச் சொற்படைக் கைக்கதக் கட்பிறைப் பற்கறுத்த
பகைத்திறச் சொற்கெடச் செற்றகச் சிப்பதித் தூர்க்கைபொற்புத்
தகைத்ததித் தித்தந்த் தத்தசொற் றத்தைப்பத் தித்திறத்தே
திகைத்தசித் தத்தைத் துடைத்தபிற் பற்றுக் கெடக்கற்பதே'

இ - ள் : புகை தகை - நெருப்பின் தன்மையையுடைய, சொல் - சொற்களையும், படைக் கை - ஆயுதங்களோடு கூடிய கைகளையும், கதக்கண் - வெகுளியோடு கூடிய பார்வையையும், பிறைப்பல் - பிறை போன்ற கோரப்பற்களையும், கறுத்த - கரிய

1. இப்பாடல், பருவ வரவுகண்டு தோழி, தலைமகளுக்குக் கூறியதாகும்.

நிறத்தையும் உடைய, பகைத்திறச் சொல் கெட - பகைஞராகிய அவுணசாதி யென்னும் வார்த்தை மாள, செற்ற கச்சிப்பதி - செறுத்த காஞ்சிபுரப் பெரும்பதியில் உள்ள, துர்க்கை - கொற்றவை, பொற்புத் தகைத்த - அழகு தங்கிய, தித்தித்த துத்தத்த சொல் - இன்பந் தரா நின்ற யாழினிசை போன்ற சொல்லையுடைய, தத்தை - கிள்ளையை யொப்பாளிடத்து, பத்தித் திறத்தே திகைத்த - அன்பு செய்யாது அறிவழிந்த, சித்தத்தைத் துடைத்தபின் - உள்ளத்தை நீக்கிய காலத்து, பற்றுக் கெட - இருபற்றும் கெடுதற்கு ஏதுவாகிய, கற்பதே - ஞானத்தை அறிவது எ - று.

கிள்ளை மொழியினை யொத்த மொழியை யுடைய துர்க்கை எனக் கூட்டுக. இச்செய்யுளில், முதல் மூன்றடிகளிலும் ஆராயின் ஈற்றடி எழுத்துக்கள் காணப்படும். இங்ஙனம் ஓரடியின் எழுத்துக்கள் மற்றையடிகளில் மறைந்து நிற்றலால், இது **கூடசதுக்கம்** எனப்பட்டது. கூடம் - மறைவு. சதுக்கம் - நான் கடிக்கூட்டம்; இது செய்யுளை உணர்த்தும்.

(வி - ரை) *கொற்றவை யிடத்து அன்பு செய்தாலன்றி ஞானம் உளதாகாது என்பது கருத்து. சதுர்த்தம் - சதுக்கம் என்றாயிற்று. நான்கு அடிகள் உள்ள பாடலில், நான்காம் அடியிலுள்ள எழுத்துக்கள் ஏனைய மூன்றடிகளிலும் மறைந்து நிற்பது இதன் இலக்கணமாகும்.*

(ரு) **மாலைமாற்று** என்பது, ஒரு செய்யுளை ஈறு முதலாக வாசித்தாலும் அச்செய்யுளே யாவது.

எ - டு : *'நீவாத மாதவா தாமோக ராகமோ*
தாவாத மாதவா நீ' எனவும்,

இ - ள் : நீவாத - நீங்காத, மா தவா - பெரிய தவத்தை யுடையாய்!, தா மோக ராகமோ தாவாது - மிக்க மயக்க வேட்கை கெடாது; (ஆதலால்) அ மாது - அழகிய மாதினுடைய, அவா - ஆசையை, நீ - நீக்குவாயாக எ - று.

'வாயாயா நீகாவா யாதாமா தாமாதா
யாவாகா நீயாயா வா' எனவும்,

இ - ள் : வாயா யா - எங்கட்குக் கிடையாதன யாவை?, நீ காவாய் - நீ அருள் புரிவாயாக!, யாது ஆம் - என்னும்?, மாது ஆம் - மாதாகிய இவள், மா தா - மிக்க வருத்தமாவள்; யா நீ ஆகா - யாவை நினக்கு ஆகாதன?, ஆயா வா - ஆயனே நீ வருவாயாக எ - று.

'பூவாளை நாறுநீ பூமேக லோகமே
பூநீறு நாளைவா பூ' எனவும் வரும்.

இ - ள் : பூவாளை - இயல்பாய்ப் பூப்பில்லாதவளைக் கலந்து, நாறும் நீ - புலால் கமழும் நீ, பூ மேகம் லோகம் ஏ - எமக்குப் பூமழையும் பொன்மழையும் பொழியும் மேகமோ?, பூ நீறு நாளை வா - பூவும் திருநீறும் புனைந்து நாளைவா, பூ - இவள் இப்பொழுது பூப்பினளாய் இருக்கின்றாள் எ - று.

பூப்புனைதல் புலால் நாற்றம் நீங்க. திருநீறு புனைதல் தூற்றம் நீங்க.

27

மாலையை எப்பக்கம் திரும்பினும் அது ஒரே தன்மைத்தாய் இருத்தல் போல, இச்செய்யுட்களும் எவ்வாறு மாற்றி வாசிப்பினும் ஒரே தன்மைத்தாய் இருத்தலின் **மாலைமாற்று**எனப்பட்டது.

(வி - ரை) இப்பாடல்கள் மூன்றையும் இறுதியில் தொடங்கி படிப்பினும், முதற்கண் இருந்து படிப்பது போலாகுதல் காண்க. திருஞான சம்பந்தர் தேவாரத்தும்,

'யாமாமாநீ யாமாமா யாழீகாமா காணாகா
காணாகாமா காழீயா மாமாயாநீ மாமாயா'

என இங்ஙனம் ஒரு பதிகமே வருதல் காண்க.

(௪) **எழுத்து வருத்தனம்** என்பது, ஓரெழுத்தான் ஒரு மொழியாய்ப் பொருள் பயந்து, பின் ஓரெழுத்து ஏற்றப் பிறிதொரு மொழியாய்ப் பொருள் பயந்து, அவ்வாறே முறை முறையான் ஏற்ற ஒவ்வொரு மொழியாய்ப் பொருள் பயப்பது.

எ - டு : 'ஏந்திய வெண்படையும் முன்னாள் எடுத்ததுவும்
பூந்துகிலும் மாலுந்தி பூத்ததுவும் - வாய்ந்த
உலைவில் எழுத்தடைவே ஓரொன்றாச் - சேர்க்கத்
தலைமலைபொன் தாமரையென் றாம்'

இ-ள் : திருமால் தாங்கிய கம்புவும், அவன் எடுத்த நகமும், அவனது ஆடையாகிய கநகமும், அவன் உந்தி மலர்ந்த கோகநகமும் என்னப்பட்ட இவற்றில், கேடில்லாத எழுத்தின் அடைவே யென்று ஒன்றின் ஓரெழுத்தாக எடுத்துச் சேர்க்கப் பின்பு அது தலையென்றும், மலையென்றும், பொன்னென்றும், தாமரையென்றும் ஆம் எ - று.

அவ்வாறு சேர்த்தல் எங்ஙனம்? எனின், **கம்பு** என்பதில், 'கம்' என்கிற எழுத்தைப் பிரித்துத் 'தலை' எனவும்; **நகம்** என்பதில், ந - என்கிற எழுத்தைப் பிரித்து, முன் கம் என்பதற்குமுன் கூட்டி 'நகம்' ஆக்கி 'மலை' எனவும்; **கநகம்** என்பதில், க - என்கிற எழுத்தைப் பிரித்து, முன் நகம் என்பதற்கு முன் கூட்டிக் 'கநகம்' ஆக்கிப் 'பொன்' எனவும்; **கோகநகம்** என்பதில் கோ - என்கிற எழுத்தைப் பிரித்து, முன் கநகம் என்பதற்கு முன் கூட்டிக் 'கோகநகம்' ஆக்கித் 'தாமரை' எனவும் கொள்க.

இதில், எழுத்துக்களைப் பெருக்கி மொழியாக்கிப் பொருள் கொள்ளலால், இது **எழுத்துவருத்தனம்** எனப்பட்டது. எழுத்து வருத்தனம் - எழுத்துப் பெருகுதல். வருத்தனம் - பெருகுதல்.

(வி - ரை) கம்பு - சங்கு. கம் - தலை. நகம் - மலை. கநகம் - பொன். கோகநகம் - தாமரை.

(௫) **நாகபந்தம்** என்பது, இரண்டு பாம்புகள் தம்முள் இணைவனவாக உபதேச முறைமையான் எழுதி, ஒரு நேரிசை வெண்பாவும், ஓர் இன்னிசை வெண்பாவும் எழுதிச், சந்திகளில் நின்ற எழுத்தே மற்றை யிடங்களிலும் உறுப்பாய் நிற்கப் பாடுவது. மேற்சுற்றுச் சந்தி நான்கினும் நான்கெழுத்தும், கீழ்ச்சுற்றுச் சந்தி நான்கினும் நான்கெழுத்தும், இரண்டு பாம்புகளின் நடுச் சந்தி நான்கினும் இரண்டு பாட்டிற்கும் பொருந்த நான்கெழுத்துமாகச் சித்திரத்தில் அடைப்பது.



நேரிசை வெண்பா

எ - டு : 'அருளின் றிருவுருவே யம்பலத்தா யும்பர்
தெருளின் [1]மரு வாருசிர்ச் சீரே - பொருவிலா
வொன்றே யுமையா ளுடனே யுறுதிதரு
குன்றே தெருள வருள்' எனவும்,

இ - ள்: அறத்தினது அழகிய மேனியாய்! திருச்சிற்றம்பலத்தினை யுடையாய்! தேவர்கள் அறிவிற்கும் எட்டாதாய்! அழகிய புகழையுடையாய்! குற்றமில்லாத ஏகரூபத்தையுடையாய்! உமையோடு பொருந்தின மலைபோல்வாய்! யாங்கள் தெளிய அறிவை அருள்வாயாக எ - று.

அறிவு என்னும் சொல் வருவிக்கப்பட்டது.

இன்னிசை வெண்பா

'மருவி னவருளத்தே வாழ்சுடரே நஞ்சு
பெருகொளியான் றேயபெருஞ் சோதி திருநிலா
வானஞ் சுருங்க மிகுசுடரே சித்த
மயரு மளவை யொழி' எனவும் வரும்.

1. 'மருவாத சிர்ச்சீரே' என்பதும் பாடம்.

இ - ள்: அடைந்தவர் உள்ளத்தே வாழ்கின்ற விளக்கமாயுள்ளாய்! நஞ்சின்கண் உண்டாகிய பெருகிய நிறம் நிறைந்து பொருந்தின திருமிடற்றை யுடைய பெரிய சோதியாயுள்ளாய்! அழகிய மதியையுடைய ஆகாயமானது சிறுகப் பெருகிய வொளியே திருமேனியாயுள்ளாய்! எனதுள்ளம் நினது அடியை மறக்கும் எல்லையை ஒழிப்பாயாக எ - று.

இது நாகவுருவத்தில் பந்திக்கப்படுவதாதலின், நாகபந்தம் எனப்பட்டது.

இன்னும் நாகபந்தங்கள் பல உள. உதாரணமாகப் பின் வருவதைக் காண்க.

அட்ட நாகபந்தத்தின் விதி

ஒருநான்கக் கரத்தொடுநாற் பத்தொன் றுமா
றுடனாற்பத் தைந்தாமெட் டுடனேந் நான்காம்
இருளறுபன் னிரண்டுடனே பதினெட் டாகும்
இருபத்தி ரண்டுடனே நாற்பத் தேழாம்
பரவுமிரு பத்துநான் குடன்முப் பத்தொன்
பானமுப் பான்மூன்றே டைம்பத் தொன்றும்
அருமுப்பத் தேழுடனே நாற்பத் தொன்பா
னமைட்ட நாகபந்த மாஞ்செய் யுட்கே.

இ - ள் : நான்காம் எழுத்து நாற்பத்தோராம் எழுத்தாகவும், ஆறும் எழுத்து நாற்பத்தைந்தாம் எழுத்தாகவும், எட்டாம் எழுத்து இருபதாம் எழுத்தாகவும், பன்னிரண்டாம் எழுத்துப் பதினெட்டாம் எழுத்தாகவும், இருபத்திரண்டாம் எழுத்து நாற்பத்தேழாம் எழுத்தாகவும், இருபத்துநான்காம் எழுத்து முப்பத்தொன்பதாம் எழுத்தாகவும், முப்பத்துமூன்றும் எழுத்து ஐம்பத்தோராம் எழுத்தாகவும், முப்பத்தேழாம் எழுத்து நாற்பத்தொன்பதாம் எழுத்தாகவும் வரும்படி, ஒற்றுள்பட ஐம்பத்தோரெழுத்தினுல் ஒரு செய்யுட் செய்து உபதேச முறைமையால் அட்ட நாகபந்தம் வரைந்து அதில் அடைத்துக் கொள்வது அட்ட நாகபந்தத்தின் விதியாம் எ - று.

(௯) **வினவுத்தரம்** என்பது, வினவினதொரு சொற்றொடரைப் பிரித்து, அப்பதந்தோறும் வினயதற்கு உத்தரமாகப் பதப் பொருள் உரைத்துக், கடைக்கால் அவ்வினயதற்கு உத்தரமான அச்சொற்றொடர் முழுவதும் ஒருபொருளாக்கி உரைப்பது. அப்பதம் விரிக்குங்கால், செவ்வன் விரியாது அருமை தோன்ற விரித்துக்காட்டுவது.

எ - டு : 'பூமகள்யார்? போவானை யேவுவான் ஏதுரைக்கும்?
நாமம் பொருசரத்திற்(கு) ஏதென்பர்? தாமழகின்
பேரென்? பிறைசூடும் பெம்மான் உவந்துறையும்
சேர்வென்? திருவேகம் பம்' எனவும்,

இதனுள் பூமகள் யார் - திரு எனவும்; போவானை ஏவுவான் ஏதுரைக்கும்? - ஏகு எனவும்; நாமம் பொருசரத்திற்கு ஏது என்பர்? - அம்பு எனவும்; அழகின் பேர் என்? - அம் எனவும் கூட்டித் 'திருவேகம்பம்' எனக் கண்டு கொள்க.

பிறை சூடும் பெம்மான் உவந்து உறையும் சேர்வுஎன்? திருவேகம்பம் எ- று.

'நீத்தொழிந்த ஆறைந் தடக்கிப்பின் னிச்சயமே
வாய்த்தமைந்த வாயில்பெண் ணனையே - கூர்த்தகு
வாளேறு(டு) ஓசை விளைநிலம்இவ் வல்லாற்
கேளாய் உடன்வருவ தில்' எனவும்,

இதனுள் நீத்தொழிந்த ஆறு—நிலை எனவும், ஐந்தடக்கி - ஆமை எனவும், வாயில் - கடை எனவும், பெண்ணனை - பிடி எனவும், வாளேறு -புண் எனவும், ஓசை - இயம் எனவும், விளைநிலம் - செய்எனவும் கூட்டி, 'நிலையாமை கடைப்பிடி, புண்ணியஞ் செய்' எனக் கண்டு கொள்க.

இவ்விரண்டு உண்மைகளும் நட்பாய் இருந்து உறுதி பயக்குமே யன்றி, ஏனையதொன்றும் நட்பினதாய் உடன் வருவதில்லென்க எ - று.

'நல்வினை நாற்கால் விலங்கு நவைசேரும்
கொல்வினை யஞ்சி குயக்கலம் - மெல்ல
உறுதியும் அல்லவும் நாட்பேர் மரப்பேர்
இறுதியில் இன்ப நெறி' எனவும் வரும்.

இதனுள், நல்வினையை யுடைய நாற்கால் விலங்கு யாது? - முயல் எனவும், நவை சேரும் கொல்வினை யஞ்சி யாது? - ஆமை எனவும், குயக்கலம் யாது? - அகல் எனவும், மெல்ல உறுதியையும் உறுதியல்லனவற்றையும் சொல்லும் நாட்பெயர் யாது? - சோதி எனவும், மரப்பெயர் யாது? - தேறு எனவும் கூட்டி, 'முயலாமை யகல், சோதி தேறு' எனக் கண்டு கொள்க.

இவ்விரண்டு உண்மைகளுமே இறுதியிலின்ப நெறியாகும் என்றவாறு. இச்சித்திர கவி வினவும் விடையுமாக அமைதலின், **வினவுத்தரம்** எனப்பட்டது.

(வி - ரை) முயல் - எதற்கும் எந்தத் தீங்கையும் விளைவிக்காதது; அச்சம் பொருந்தியது. ஆதலின் அது 'நல்வினை நாற்கால்' என்ற தொடரால் குறிக்கப்பட்டது. ஆமை - இதுவும் எதற்கும் தீங்கு இழைக்காதது. ஆதலின் இதனைக் 'கொல்வினை யஞ்சி' என்றார். சுவாதி - இருபத்து நான்கு நட்சத்திரங்களுள் ஒன்று. சோதி - சோதித்துப்பார் என்னும் பொருள்படுதலின், உறுதியானது இது உறுதியற்றது இது என்பவற்றைச் சோதித்துப் (ஆராய்ந்து) பார் என்னும் பொருள்பட வந்தது. தேறு - தேற்று மரம்; 'மடிந்த தேறு பொடிந்த வேல்' என வரும் கலிங்கத்துப் பரணியாலும் இதனை அறியலாம்.

*(எ) **காதைகரப்பு** என்பது ஒரு செய்யுள் முடிய வெழுதி, அதன் ஈற்று மொழிக்கு முதலெழுத்துத் தொடங்கி ஒவ்வோர் எழுத்து இடையிட்டு வாசிக்கப் பிறிதொரு செய்யுட் போதுவது.

எ - டு : 'தாயேயா நோவவா வீரு வெமதநீ
பின்னை வெருவா வருவதொ ரத்தப
வெம்புகல் வேறிருத்தி வைத்திசினிச் சைகவர்
தாவா வருங்கலநீ யே'

இ - ள் : தாயே - தாயாய் உள்ளாய்! யாம் நோவு - யாங்கள் வருந்தும், அவா ஈரு - அவாவினை நீக்கு; எமது நீ - எமக்குச் சார்வாயுள்ள நீ, பின்னை வெருவா வருவது ஓர் - பின்பு அச்சமாக வருவது ஆராய்; அது தப எம் புகல் வேறு இருத்தி வைத்திசின் - அது கெட எமக்குப் புகலாயுள்ள இடம் வேறாகச் சமைத்து வைப்பாய்; இச்சை கவர் - ஆசைப்பாடு கைக்கொள்; தாவா அரும் கலம் நீயே - (எங்கட்குக்) கேடில்லாத அரிய ஆபரணமாய் உள்ள கடவுளே! எ - று.

இதனுட் போந்த செய்யுள்,

'கருவார் கச்சித்
திருவே கம்பத்
தொருவா வென்னீ
மருவா நோயே' என்பதாம்.

இ - ள் : மனமே! நீ கச்சித் திருவேகம்பத்து உறையும் ஒப்பில்லாதவனை என்று சொல்லக் கருவார் நோய் மருவா எ - று.

'வருங்கலநீயே' என்பதில் லகரம் மொழிக்கு முதலாகாமையின், அதனை நீக்கிக் ககர முதலாகக் கொள்க. இதில் வேறொரு செய்யுளின் சொற்கள் மறைந்து நிற்றலால், இது **காதைகரப்பு** எனப்பட்டது. காதை - சொல்; கரப்பு - மறைவு.

(வி - ரை) இப்பாடற்கண் உள்ள ஈற்று மொழி 'நீயே' என்பதாகும். அவ்வீற்று மொழிக்கு முன்னுள்ள எழுத்து 'ல' என்பதாகும். அது மொழிக்கு முதலாகாமையின், அதற்கு முன்னுள்ள 'க' என்பதை முதல் எழுத்தாகக் கொண்டு ஒவ்வோர் எழுத்து இடையிட்டு வாசிக்கப் பிறிதொரு செய்யுளாகும். ஒரு பாடலில், பிறிதொரு பாடலுக்குள்ள சொற்கள் மறைந்து கிடத்தலின், இது காதை கரப்பு எனப் பெயர்பெற்றது. இனிக் 'காதை' என்பதற்குக் கவிதை எனப் பொருள் கொண்டு, ஒரு செய்யுளில் பிறிதொரு செய்யுள் மறைந்து நிற்பது எனக் கொள்ளினும் அமையும்.

(அ) **கரந்துறைச்செய்யுள்** என்பது, ஒரு செய்யுள் பிறிதொரு செய்யுட்சொற் புகாது எழுத்துப் பொறுக்கிக் கொள்ளலாம்படி பாடுவது.

எ - டு : 'அகலல்குற் றேரே யதர மமுதம்
பகர்தற் கரிதிடையும் பார்க்கின் - முகமதிய
முத்தென்ன லாமுறுவன் மாதர் முழுநீல
மைத்தடங்கண் வெவ்வேறு வாள்'

இ - ள் : நண்பனே! நான் கண்ட மாதருடைய உருவத் தன்மை கேட்பாயாக: அல்குலானது தேரினது தட்டாயும், அதரமானது அமுதமாயும், இடையானது விசாரித்துச் சொல்லுவதற்கு அரிதாயும், முகமானது மதியமாயும், முறுவலானது முத்தமாயும், மைத்தடங்கண்ணானது நீலப் பூவாயும், வேறுபட வைத்த வாளாயும் இருக்கும். எ - று.

இதனுட் போந்த செய்யுள்,

'அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு' (குறள் – க) என்பதாம்.

இங்ஙனம், இதில் ஒரு செய்யுள் மறைந்து கிடத்தலால், இது **கரந்துறைச்செய்யுள்** ஆயிற்று.

(வி - ரை) காதை கரப்பிற்கும் இதற்கும் உள்ள வேறுபாடு:— இவ்விரண்டன்கண்ணும் பிறிதொரு செய்யுட்கேற்ற எழுத்துக்கள் மறைந்து கிடக்கும் வகையில் ஒப்புமை யிருப்பினும், முன்னையது இறுதிச் சொல்லை ஒழித்து, அதற்கடுத்துள்ள எழுத்துக்களிலிருந்து ஒவ்வோரெழுத்தினை இடையிட்டு எடுத்துக்கொள்ளப் பிறிதொரு செய்யுளாய்த் தோன்றுவதாகும்; இது பாட்டின் முதற்கண் இருந்தே எவ்வித வரையறையுமின்றி எழுத்துக்களைப் பொறுக்கிக் கோக்கப் பிறிதொரு செய்யுளாய்த் தோன்றுவதாகும்.

(௬) சக்கரம் என்பது, சக்கர பந்தம். இது நான்காரைச் சக்கரம், ஆறாரைச் சக்கரம், எட்டாரைச் சக்கரம் என மூன்று வகைப்படும்.

அவற்றுள், நான்காரைச் சக்கரம்



எ - டு: 'மேரு சாபமு மேவுமே
மேவு மேயுண வாலமே
மேல வாமவ ளுயமே
மேய ளுணடி சாருமே'

இ - ள்: மேருவை வில்லாகக் கொள்ளுவனவாயும், நஞ்சை உணவாக விரும்புவனவாயும், உயர்ந்த உருவத்தை உடையனவாயும் இருக்கும்; அவன் விளையாடுதற்கு இனமாயுள்ள கூளியாகலான், அத்தன்மையான் அடிகளைப் பொருந்துவீராக எ - று.

இது நான்கு ஆராய், நடுவே 'மே' என்னும் எழுத்து நின்று, ஆர்மேல் ஒவ்வோர் எழுத்து நின்று, சூட்டின்மேல் பன்னிரண்டெழுத்து நின்று முற்றுப் பெற்றது.

(வி - ரை) சக்கர பந்தம் - தேரினது உருள்போல் சக்கரம் வரைந்து, அதனுள் நடுவிடம், ஆர்க்கால்கள், வட்டை ஆகிய இடங்களில் எல்லாம் பாட்டின் எழுத்துக்களைப் பந்திப்பது (அடக்குவது) ஆகும். சூடு - வட்டை.

இதுவும் ஒருவகை நான்காரைச் சக்கரம்

எ - டு : 'மாதவா போதி வரதா வருளமலா
பாதமே யோத சுரரைநீ தீதகல
மாயா நெறியளிப்பா யின்றன் பகலாச்சீர்த்
[1]தாயே யலகில்லா டாம்'

இ - ள் : போதி வரதா - புத்த தேவா!, அமலா - குற்றமில்லாதாய்! பாதமே - (உன்னுடைய) பாதத்தை, ஓது அசுரரை - வழுத்தாநிற்கும் அசுரருக்கு, நீ தீது அகல மாயா நெறி அளிப்பாய் - நீ பாவங்கெட மோட்சம் அளிப்பாய்!, அன்பு அகலாச் சீர்த்தாயே - அன்பு நீங்காத அழகிய தாய்போல்வாய்!, அலகில் ஆடு ஆம் - எல்லையில்லாத மிக்க வலிதாகிய, மா தவா - பெரிய தவத்தை யுடையாய்! இன்று அருள் - இன்று அருள்வாயாக எ - று.

இதுவும் நான்கு ஆராய், நடுவே ரகரம் நின்று, குறட்டின் மேல் 'வசுதாரை' என்னும் பெயர் நின்று, ஆர் மேல் நந்நான் கெழுத்து நின்று, சூட்டின்மேல் இருபத்தெட்டு எழுத்து நின்று முற்றுப் பெற்றது.

ஆறாரைச் சக்கரம்



எ - டு : 'தண்மலர் வில்லிதன் போரன தஞ்ச நமக்களித்த
கண்மலர்க் காவிக் கெதிர்வன வன்றி கரமளந்த
பண்மலி யாழ்பயில் வாரன்பு சூழ்பதி நாகைமிக்க
தண்மைய கத்துப் பதுமத்த மாதர்த் தடங்கண்களே'

இ - ள் : கைகளால் தைவந்த விரிந்த பண்ணையுடைய யாழ் வல்லோர், அன்பு மேவிய நாகப்பட்டினத்தில், காமனுடைய

1. 'தாயலகில் லாத தவ' என்பதும் பாடம்.

போரில் நமக்கு அபயங் கொடுத்த கண்ணுகிய நீலப்பூவுக்கு ஒப்பாவனவல்ல, மிகக் குளிர்ச்சியையுடைய தாமரை மலரில் உறைவோட்கு ஒத்த பெண்களின் அகன்ற கண்கள் எ - று.

இது ஆறு ஆராய், நடுவே ரகம் நின்று, ஆர்மேல் ஒன்பதொன்பது எழுத்தாய்க், குறட்டின் மேல் 'போதி வானவன்' என்னும் பெயர் நின்று, சூட்டின் மேல் இருபத்து நான்கு எழுத்து நின்று முற்றுப் பெற்றது.

எட்டாரைச் சக்கரம்



எ - டு: 'மலர்மலி சோலை யகநலங் கதிர்க்க
மடமயி லியற்றக மாதிரம் புதைத்து
வளைந்து புகன்மேக வல்லிருண் மூழ்க
வரியளி துதைந்த கதுப்பினி தடைச்சி
மன்னுமா மடமொழி வடிவாள் வளவன்
கன்னித் துறைவன் கனகச் சிலம்பே'

இ - ள்: மலர் மிக்கிருந்த சோலையுள் நலம் விளங்க, மடப்பத்தோடு கூடியிருந்த மயிலியலுக்கு ஒக்கும்படியாகத் திசைகளை மறைத்துச் சூழ்ந்து மிக்க மேகங்கள் என்னு நின்ற வலிய இருளினுலே முழுகுந் தன்மைத்தாய், இசை மருவிய வண்டுகள் குடையத்தகாநின்ற மலர்களைக் குழலின்மீதே அழகுபெற அணிந்து பொருந்தும் மடப்பத்தோடு கூடாநின்ற மொழியையுடையாள்; கூரிய வாள் வளவனுகிய கன்னித்துறைவனது கனக மலையின்கண் எ - று.

இமய மலையின்கண், திசைகளை மறைத்து மேகஞ் சூழ்ந்து மலர் மலிந்து சோலைக்கு அழகு உண்டாகத் தன் குழலை அலங்கரித்து மயிலியல் ஒப்ப அழகு பெற்ற மடப்பத்தோடு கூடிய மொழியாள் நிற்பள் எனக்கூட்டுக.

இது எட்டு ஆராய், ஆர்மேல் அவ்வாறெழுத்தாய், நடுவே ககரம் நின்று, குறட்டின்மேல் 'அறமே தநமாவது' என்னும் சொல் நின்று, சூட்டின்மேல் முப்பத்திரண்டு எழுத்து நின்று முற்றுப் பெற்றது.

(கo) **சுழிகுளம்** என்பது ஒரு செய்யுளை எவ்வெட்டு எழுத்தாய் நான்கு வரியாக எழுதி, மேல்நின்று கீழ்இழிந்தும் கீழ்நின்று மேல்ஏறியும், புறநின்று வந்து உள்முடிய உச்சரித்தாலும் அவ்வரி நான்குமேயாகி அச்செய்யுளாயே முற்றுப் பெறுவது.



எ - டு: 'கவிமுதி யார்பாவே
விலையரு மாநற்பா
முயல்வ துறுநர்
திருவ ழிந்துமாயா'

இ - ள்: கவிகளால் முதிர்ந்தார் செய்யும் கவியே விலையிடுதற்கரிய கவி; இடைவிடாது முயல்வார் செல்வம் அழிந்து கெடாது எ - று.

இதுவுமது

எ - டு: 'மதந விராகா வாமா
தநத சகாவே நீவா
நதத நதாதா வேகா
விசந விரோதா காரா'

இ - ள்: மதனா! ஆசை யில்லாதவனே! ஒளியை யுடையானே! குபேரனுக்குத் தோழனாய் உள்ளானே! மேகத்தினும் அதனமான வள்ளலே! பணிப்பூணால் விரோதமான தோற்றத்தை உடையானே! நீ எங்கள் விதனங்களை நீக்கிக் காப்பாயாக எ - று.

நீக்கப் பொருண்மையின்கண் வந்த ஐந்தனுருபு ஆறனுருபாய் மயங்கின. இதனுள் 'நீக்கி' என்பது வருவித்து உரைக்கப்பட்டது.

(வி - ரை) ராகம் - ஆசை. வாநத்து அதந - மேகத்தினும் மிகுதியாகக் கொடுப்பவன். தாதா - வள்ளல்.

(கக) சருப்பதோபத்திரம் என்பது ஒருநிரை எட்டாக அறுபத்துநான்கு அறை கீறி, ஒரு செய்யுள் எவ்வெட்டு எழுத்தால் ஓரடியாக நான்கடி பாடி, மேல்நின்று கீழ்இழியவும் நான்கடியும எழுதி, கீழ்நின்று மேலேறவும் நான்கடியும் எழுதி, மேல் நின்று கீழ்இழியவும், கீழ்நின்று மேலேறவும், முதல் தொடங்கி இறுதியாகவும், இறுதி தொடங்கி முதலாகவும், மாலை மாற்றுக நான்கு முகத்தினும் வாசித்தாலும் அச்செய்யுளே யாவது.

மா	வா	நீ	தா	தா	நீ	வா	மா
வா	யா	வா	மே	மே	வா	யா	வா
நீ	வா	ரா	மா	மா	ரா	வா	நீ
தா	மே	மா	ரா	ரா	மா	மே	தா
தா	மே	மா	ரா	ரா	மா	மே	தா
நீ	வா	ரா	மா	மா	ரா	வா	நீ
வா	யா	வா	மே	மே	வா	யா	வா
மா	வா	நீ	தா	தா	நீ	வா	மா

எ - டு: 'மாவா நீதா தாநீ வாமா
வாயா வாமே மேவா யாவா
நீவா ராமா மாரா வாநீ
தாமே மாரா ராமா மேதா'

இ - ள்: மாவா - பெரியோனே!, நீதா - நீதியுடையோனே!, தா நீவா மா - மிக்க நீங்காத செல்வத்தை யுடையோனே!, யா ஆம்- என்னுகைக் கடவது?, மேவாய் - பொருந்துவாயாக; வாயா ஆமே - (இப்படி என்னைச் சேர்ந்தால்) வாயாதன யாவை?, நீவா - நீ வருவாயாக; ராமா - இராமனை யொப்பாய்!, மாரா - காமனுமாய் உள்ளாய்!, வான்நீ - மழையை யொப்பாய்! நீ, தா மே - (ஆதலால்) பெரிய மேம்பாட்டையுடைய, மார் ஆர் ஆமாம்ஏ தா - நின் மார்பில் நிறைந்திருக்கப்பட்ட ஆராகிய தாரினைத் தருவாயாக எ - று.

அரசர் மாளிகைகளில் உள்ளதோர் கட்டிடத்திற்குச் **சருப்பதோபத்திரம்** என்று பெயர்; அந்தக் கட்டிடம் நாற்புறமும் வாயில் உள்ளதாய், நினைத்த பக்கத்தில் மேலேறவும், கீழிறங்கவும் கூடியதாய் இருக்கும். இச்சித்திரகவியும் அதேபோன்று இருத்தலால் அப்பெயர் பெற்றது என்க.

(வி - ரை) சர்வதஸ் - எப்பக்கத்தும். பத்திரம் - வாயில்.

(கஉ) அக்கரச்சுதகம் என்பது, ஒரு பொருள் பயப்பதொரு சொற்கூறி, அதனில் ஒவ்வோர் எழுத்தாக நீக்க, வெவ்வேறு பொருள் பயக்கப் பாடுவது.

எ - டு : 'பொற்றூணில் வந்தசுடர் பொய்கை பயந்த அண்ணல்
சிற்றாயன் முன்வனிதை யாகி யளித்த செம்மல்
மற்றியார்கொல் என்னின் மலர்தூவி வணங்கி நாளும்
கற்றார் பரவும் கநகாரி நகாரி காரி'

இ - ள் : பொன்னாகிய தூணிலே தோற்றிய சோதியாய் உள்ளான் யார்? பொய்கையானது பெற்ற தலைமை யுடையவன் யார்? சிற்றாயனாகிய மால் முன்னாள் மோகினி வடிவு கொண்ட போது பெற்ற பிள்ளை யார்? என்று கேட்பீராயின், கற்றூரால் மலர் தூவி நாடோறும் வணங்கப்பட்ட கநகாரி என்றும், நகாரி என்றும், காரி என்றும் கொள்க எ - று.

கநகாரி - திருமால். நகாரி - முருகவேள். காரி - மாசாத்தன். அக்கரச் சுதகம் - அக்ஷர நீக்கம். சுதகம் - குறைவு. கநகாரி, நகாரி, காரி என முறையே ஒவ்வொரு அக்ஷரம் குறைந்து வருதல் காண்க.

(வி - ரை) அக்கரம் - எழுத்து. சுதகம் - நீக்கம். கனகன் - இரணியன். அவனை அழித்தலின், திருமால் கனகாரி எனப்பட்டார். நகம் - மலை; ஈண்டு கிரௌஞ்ச மலையைக் குறித்தது. 'தாரகனும் மாயத் தடங்கிரியும் தூளாக வீரவடிவேல் விடுத்தான்' முருகன், ஆதலின் 'நகாரி' என்ற சொல்லால் அப்பெருமானைக் குறித்தார்.

(கங) நிரோட்டம் என்பது இதழ் குவிக்கும் உயிரும் மெய்யும் தீண்டாமற் பாடுவது. என்னை சூத்திரம் என்றார்க்கு,

'உஊஒஓ ஔபம வஇவற் றியைபு
சேராநி ரோட்டத் திறத்து'

என்றாராகலின் என்க.

எ - டு : 'சீலத்தால் ஞானத்தால் தேற்றத்தால் சென்றகன்ற
காலத்தால் ஆராத காதலால் - ஞாலத்தார்
இச்சிக்கச் சாலச் சிறந்தடி யேற்கினிதாங்
கச்சிக்கச் சாலைக் கனி'

இ - ள் : ஒழுக்கத்தாலும், அறிவாலும், மனத்தெளிவாலும், தன்னிடனாகச் செலுத்தின காலத்தின் பெருமையாலும், ஒப்பில்லாத ஆசையாலும், உயர்ந்தோராயினோர் நினைப்பவும், எத்தனையுந் தாழ்ந்த எனக்கும், மிகவும் சிறந்து இனிதாகா நிற்கும், கச்சிப்பதியில் உண்டாகிய திருக்கச்சாலையில் தோன்றிய கனியை யொப்பான் எ - று.

நிரோட்டம் என்பதற்கு இதழோடு இதழ் ஒட்டாதது என்று பொருள். இதனை, நிரோட்டகம், நிரோட்டியம் என்றும் வழங்குவர். இச்செய்யுளில் உ ஊ ஒ ஓ ஔ ப ம வ இவற்று இயைபு சேராமை காண்க.

(கச) ஒற்றுப்பெயர்த்தல் என்பது, ஒருமொழியும் தொடர் மொழியுமாய்ப் பொருள்படும் அவற்றை, அப்பொருள் ஒழிய வேறு பொருள்பட வைப்பது.

எ - டு: 'வண்புயலைக் கீழ்ப்படுத்து வானத் தருமலர்ந்து
மண்குளிரச் சாயல் வளர்க்குமாம் - தண்கவிகைக்
கொங்கா ரலங்க லநபாயன் கொய்பொழில்சூழ்
கங்கா புரமா ளிகை'

இ - ள்: வளப்பத்தை யுடைய மேகங்கள் கீழாக மேலோங்கி, வானகத்தின்கண் உண்டாகிய கற்பகப் பூக்களை உச்சிமீது உடைத்தாய், உலகெல்லாம் தன் உருவச் சாயையாகிய நிழலைப் பெருக்கும்; குளிர்ச்சி பொருந்திய குடையினையும், மது நிறைந்த மாலையையும் உடைய அநபாயனது கங்காபுரத்தின் மாளிகை எனவும்; வளப்பத்தையுடைய மேகத்தைப் பழிக்கும் தன்மையை உடையதாய், வானகத்தில் உண்டாகிய கற்பகத் தோடு பகை கொண்டு கொடுத்து, உலகத்துள்ளாருடைய உள்ளம் குளிரும் வண்ணம் காவல் புரியும், கங்காபுரத்தை ஆளும் குளிர்ந்த குடையினையுடைய அனபாயனது கை எனவும், இரு வேறு பொருள்பட வந்தவாறு காண்க.

கங்காபுரம் - கங்கை கொண்ட சோழபுரம்.

இதுவுமது

'பொற்புடைய மாதர் புலவாரோ? பொய்ம்மருவாச்
சொற்பயிலும் பாண! சுடர்மணித்தேர் - கற்புடைய
வஞ்சிநகர் சேரினற மாமருதா ரான்மகிழா
நஞ்சனைய நல்வயலூ ரற்கு'

இ - ள்: பொய்யோடு கூடாத சொற்களைப் பலகாலும் சொல்லாநின்ற பாணா! அவரது சுடர்மணித்தேர் தம் கற்புடைய மனைவி மனையிலே சேருமாயின், பொலிவினையுடைய பரத்தையர் முனியாரோ? தேறல் வண்டு மருவப்பட்ட தாரான் இன்புறுந் தகைமையல்ல; நல்வயல் ஊரனாகிய தலைவற்கு நாங்கள் நஞ்சோடு ஒவ்வோமோ தீண்டு மிடத்து எ - று.

இப்பாட்டின் ஓரடியில், வஞ்சி, நகர், சேர், இல், நறவு, மா, மருது, ஆர், ஆல், மகிழ் என்னும் பத்து மரங்கள் வந்தன. என்னை?

'ஓரடியுட் பத்து மரமுடன்ஒற் றுப்பெயர்த்துத்
தேர்மருவி யூடல் திறம்புனைந்து - நீர்மை
மருதம் புணர்ந்ததுவும் வெண்பாவாய் வையம்
கருதப் பகர்வன் கவி'

என்றாராகலின்.

ஆல் - கசைக்கும், ஓர் மரத்துக்கும் பெயர்.

(வி - ரை) ஒரு சொல்லிலுள்ள ஒற்றெழுத்தினை எடுத்துவிட, அது வேறு பொருள்படின் ஒற்றுப் பெயர்த்தலாகும். ஒரு செய்யுளில் ஒன்றி நிற்கும் வேறு பொருளைப் பெயர்த்தெடுப்பினும் ஒற்றுப் பெயர்த்தலாம்.

ஈண்டுக் காட்டப்பட்ட இரு பாடல்களுள், 'வண்புயலைக் கீழ்ப்படுத்து' என்ற பாடல் முன்னையதற்கு எடுத்துக் காட்டாகும். இப்பாட்டில் இறுதியில் உள்ள சொல் 'மாளிகை' என்பதாகும். அதில் முதற்கண்ணுள்ள மகர ஒற்றை எடுத்துவிட் (ம் + ஆ), 'ஆளிகை' எனப் பொருள்படுதல் காண்க. இங்ஙனம் ஒற்றுப்பெயர்த்துப் பொருள் கொள்ளப்படுதலின், ஒற்றுப் பெயர்த்தல் ஆயிற்று. மாளிகை என்பதை ஒரு பொருளாகக் கொள்ளின் (கங்கா புரத்திலுள்ள) மாளிகை என்று பொருள்படும். ஆளி + கை எனப் பிரித்துத் தொடர்மொழியாகக் கொள்ளின், கங்கை கொண்ட சோழபுரத்தினை ஆளும் அநபாயனுடைய கை எனப் பொருள்படும்.

'பொற்புடைய மாதர்' என்ற பாடலில் ஒன்றி நிற்கும் மரப்பெயர்கள் பத்தாகும். அவற்றைப் பெயர்த்து எடுத்துக் கொள்ளும்படியாக இருத்தலின் அதுவும் ஒற்றுப்பெயர்த்தல் ஆயிற்று.

இங்ஙனம் வரும் ஒற்றுப் பெயர்த்தலின் இலக்கணத்தை விளக்குவதே 'ஓரடியுட் பத்துமாம்' என்ற பாடலாகும். இதன் பொருள்: ஒரு பாடலில் ஓரடியில் பத்து மரங்கள் வருதலோடு, பரத்தையிற் பிரிந்து வந்த தலைவனுடைய தேர் வருவதாகவும், அதனால் தலைவி பிணங்குவதாகவும் கூறும் மருதத்திணை ஒழுக்கம் சார்ந்துவர, வெண்பா யாப்பினதாய் உலகத்தார் ஏற்கும் கவியைப் புனையின், அது ஒற்றுப் பெயர்த்தலாகும் என்பதாம்.

இவ்விலக்கணப்படி 'பொற்புடைய மாதர்' என்ற பாடல் அமைந்திருத்தல் காண்க. சேர் - சேங்கொட்டை மரம். இல் - தேற்று மரம். நறவு - சாப்பிரா என்னும் ஒருவகை மரம். ஆல் - ஆல மரம்.

(கரு) மாத்திரைச் சுருக்கம் என்பது, ஒரு பொருள் பயந்து நிற்பதொரு சொல், ஒரு மாத்திரையைக் குறைப்பப் பிறிதொரு பொருள் பயக்குஞ் சொல்லாய் நிற்பது.

எ - டு : 'நேரிழையார் கூந்தலின்ஓர் புள்ளிபெற நீண்மரமாம்
நீர்நிலையோர் புள்ளிபெற நெருப்பாம் - சீரளவும்
காட்டொன்(று) ஒழிப்ப இசையாம் அதனளவில்
மீட்டொன்(று) ஒழிப்ப மிடறு'

இ - ள் : நேரிழையார் கூந்தல் - ஓதி; இதில் ஒரு மாத்திரையைச் சுருக்க, ஒதி என்னும் மரமாம். நீர்நிலை - ஏரி; இதில் ஒரு மாத்திரையைச் சுருக்க, எரியாகிய நெருப்பாம். காடு - காந்தாரம்; இதில் ஒரு மாத்திரையைச் சுருக்கக் கந்தாரம் என்னும் பண்ணும்; இதில் மீட்டும் ஒரு மாத்திரையைச் சுருக்கக் கழுத்தாம் எ - று.

இதில் புள்ளி பெறுவதைப் பிரித்து 'விந்துமதி' எனினும் அமையும்.

(வி - ரை) 'புள்ளிபெற' என்ற தொடரை நீக்கி 'விந்துமதி' என்ற தொடரைச் சேர்ப்பினும் அமையும் என்பது கருத்து. விந்து - ஒற்று; மதி - அளவிடு. எனவே ஓதி என்பதில் ஒரு புள்ளியை அளவிட (எடுத்துவிட) ஒதி என்றாயிற்று என்பது கருத்து.

புள்ளிபெற என்றது பண்டைய எழுத்துக்களின் நிலைமையை நோக்கி யாம். எ, ஒ என்பன பண்டைக் காலத்து ஏகார ஓகாரங்களாகும். அவற்றின் மீது புள்ளி வைத்தால்தான் அவை குற்றெழுத்துக்களாகக் கொள்ளப்படும்.

(கசு) **மாத்திரை வருத்தனம்** என்பது, இதனை மறுதலைப்படப் பாடுவது. (ஒருபொருள் பயந்து நிற்பதொரு சொல், ஒரு மாத்திரையைப் பெருக்கப் பிறிதொருபொருள் பயக்குஞ் சொல்லாய் நிற்பது.)

எ - டு : 'அளபொன் றேறிய வண்டதிர் ஆர்ப்பினல்
அளபொன் றேறிய மண்ணதிர்ந் தூக்குமால்
அளபொன் றேறிய பாடல் அருஞ்சுனை
அளபொன் றே(று)அழ(கு) ஊடலந் தாடுமால்'

வண்டு - அளி; அளபேறிய வண்டு - ஆளி எனவும்; மண் - தரை; அளபேறியமண் - தாரை எனவும்; பாடல் - கவி; அளபேறிய பாடல் - காவி எனவும்; அழகு - வனப்பு; அளபேறிய அழகு - வானப்பு எனவும் காண்க.

(வி - ரை) மாத்திரை வருத்தனம் - மாத்திரையைப் பெருக்கல்; மாத்திரையைக் கூட்டிச் சொல்லல். இது நற்றாய் இரங்கல் என்னும் துறையாம்.

இ - ள்: தலைவி தலைவனுடன் காட்டில் உடன்போகும் பொழுது, ஆளியின் ஆர்ப்பினல் தலைவியினுடைய காவி அனைய கண்கள், மழை போன்ற கண்ணீரில் மூழ்கியாடும், கண்ணீர் தாரை தாரையாக மார்பில் உகும் என்பதாம்.

(கஎ) **முரசபந்தம்** என்பது, ஓரடி ஒருவரியாக நான்குவரி யெழுதி, மேலிரண்டு வரியும் தம்முள் கோமூத்திரியாகவும், கீழிரண்டு வரியும் தம்முள் கோமூத்திரியாகவும், சிறுவார் போக்கி, மேல்வரி தொடங்கி இரண்டாம் வரியினும், மூன்றும் வரியினும், நான்காம் வரியினும் கீழுற்று மீண்டு மேல் நோக்கவும், கீழ்வரி தொடங்கி அவ்வாறே மேலுற்று மீண்டு கீழ்நோக்கவும் பெருவார் போக்கி, இந்த வார் நான்கும் நான்கு வரியாகவும் பாடுவது.



எ - டு : 'கான வாரண மரிய வாயினனே
தான வாரண மரிய வாயினனே
மான வாரண மரிய வாயினனே
கான வாரண மரிய வாயினனே'

இ - ள் : இனன் - சோழன், மான வார் ரணம் - வலிய மிக்க போர் செய்த இடமானவை, கானம் ஆரணம் அரியவாய் - இசையோடு கூடிய வேதம் அரியவாய், இனன் - கூட்டம் பொருந்திய, தான வாரணம் - மதயானை, அரியவாயின - அரியவாய், கான வாரணம் - காட்டுக் கோழியையும், அரிய ஆயின - சிங்கங்களையும் உடையவாயின எ - று.

சோழன் போர் செய்யாத முன்னர் மறை முழக்கமும், யானைகளும் உடையு இடங்கள், போர் செய்த பின்னர்க் காட்டுக் கோழி முழக்கமும், யானையைக் கொல்லவல்ல சிங்கங்களும் உடையவாயின எனக் கொள்க.

இது முரசின் வார்களைப்போல் அமைந்திருத்தலின் முரசபந்தம் எனப்பட்டது.

(வி - ரை) மூன்றாம் அடியிலுள்ள 'அரியவாய்' என்ற தொடருக்குப் பொருள் கூறப்படவில்லை. எனினும் பின்வருமாறு கூட்டிப் பொருள் கொள்ளல் தக்கதாம். மானவார் ரணம் - வலிய மிக்க போர் செய்த இடங்கள், அரியவாய் - இல்லாதவை யாயின (ஏன் எனில், அவன் போர் செய்த இடங்கள் எல்லாம்) என ஒரு தொடரை வரவழைத்துக்கொண்டு, பின்னுள்ள பகுதியுடன் கூட்டுக.

(கஅ) **திரிபாகி** என்பது, மூன்று எழுத்துக்கூட ஒரு மொழியாகியும், அதில் முதலெழுத்தும் கடையெழுத்தும் கூட வேறொரு மொழியாகியும், இடையெழுத்தும் கடையெழுத்தும் கூட மற்றொரு மொழியாகியும் வருவது.

எ - டு : 'மூன்றெழுத்தும் எங்கோ முதலீ றொருவள்ளல்
ஏன்றுலகங் காப்ப(து) இடைகடை - யான்றுரைப்பிற்
பூமாரி பெய்துலகம் போற்றிப் புகழ்ந்தேத்தும்
காமாரி காரி மாரி'

இதனுள், மூன்றெழுத்தும் எம்முடைய கோவாகிய **காமாரி** எனவும், இதன் முதலெழுத்தும் கடையெழுத்தும் கூடக் **காரி** என்றொரு வள்ளல் எனவும், இதன் இடையெழுத்தும் கடையெழுத்தும்கூட **மாரி** என்று உலகங் காக்கும் மழை எனவும் வந்தவாறு கண்டு கொள்க.

திரிபாகி என்பதற்கு மூன்று பாகத்தை உடையது என்று பொருள்.

(வி - ரை) காரி, இவன் கடை யேழு வள்ளல்களுள் ஒருவன். மலையமான் திருமுடிக்காரி என்ற பெயரை யுடையவன். இவனுடைய கொடைச் சிறப்பினைப் புறநானூற்றால் அறியலாம்.

(கக) **திரிபங்கி** என்பது, ஒரு செய்யுளாய் உறுப்பமைந்து ஒரு பொருள் பயப்பதனை, மூன்றாகப் பிரித்து எழுத வெவ்வேறு செய்யுளாய்த் தனித்தனியே பொருள் பயந்து, தொடையும் [1]கிரியையும் தனித்தனியே காண வருவது.

எ - டு : 'ஆதரந் தீரன்னை போலினி யாய்!அம்பி காபதியே!
மாதுபங் கா!வன்னி சேர்சடை யாய்!வம்பு நீண்முடியாய்!
ஏதமுய்ந் தாரின்னல் சூழ்வினை தீரெம்பி ரானினியார்
ஓதமொன் றே!உன்னு வாரமு தே!உம்பர் நாயகனே!'

1. கிரியை - வினை.

இ - ள் : அன்னை போல் இனிய நன்மை செய்பவனே! அம்பிகைக்கு நாயகனே! உமையை இடப்பாகத்தில் உடையவனே! கையில் நெருப்பைத் (மழுவைத்) தாங்கிய சடைக்கடவுளே! வாசனை தங்கிய நீண்ட சடைமுடியை உடையவனே! குற்றத்தினின்று நீங்கி நின் அருள் பெற்று வாழ்ந்தவர்களுடைய துன்பஞ் சூழ்ந்த இருவினைகளைத் தீர்க்கின்ற எமது கடவுளே! முத்தியின்பத்தை உடையவர்கள் துதிக்கின்ற ஏக வஸ்துவே! நினைப்பவர்க்கு அமுதம் போன்றவனே! தேவர்களுக்கு நாதனே! என்னுடைய ஆசையைத் தீர்ப்பாயாக எ - று.

இதனுள்,

'ஆத ரந்தீர்
மாது பங்கா!
ஏத முயர்ந்தார்
ஓது மொன்றே!' எனவும்,

'அன்னைபோ லினியாய்!
வன்னிசேர் சடையாய்!
இன்னல்சூழ் வினைதீர்
உன்னுவா ரமுதே!' எனவும்,

'அம்பிகா பதியே
வம்புநீண் முடியாய்!
எம்பிரா னினியார்?
உம்பர்நா யகனே!'

எனவும் மூன்று வஞ்சித்துறைகள் வந்தவாறு காண்க. இச்செய்யுட்களுக்கும் முதல் கட்டளைக்கலித்துறையின் பொருள்களே பெரும்பாலும் அமையும். இவற்றுள், 'எம்பிரா னினியார்' என்பதனை வினாவாகக் கொள்ளின், 'எமது கடவுளே! இனி எமக்கு உன்னையன்றி வேறுகதி யாவர்?' என்று பொருள் கொள்க.

இதுவுமது

எ - டு : 'சங்கந்தா பூணாரந் தாமே கலைதாநற்
புங்கவன்மால் காணாப் புலவுடைய - கங்கரா!
கோணா கலாமதிசேர் கோடீர! சங்கரா!
சோணா சலா!சலமே தோ?'

இ - ள் : நல்ல பிரமனும், திருமாலும் முறையே முடியையும் அடியையும் தேடிக் காண முடியாதவனும், ஊன் தங்கிப் புலால் நாறும் மழுப்படையை யுடையவனுமாகிய அரனே! வளைவாகிய மூன்று கலைகளையுடைய சந்திரன் சேர்ந்த சடையையுடையவனே! சங்கரித்தல் தொழிலை யுடையவனே! அருணாசலத்தில் உள்ளவனே! சங்கு வளையலைக் கொடு; அணியத்தக்க ஆரத்தைக் கொடு; மேகலாபரணத்தைக் கொடு; உனக்கு மாறுபாடு யாது? எ - று.

இவ்வெண்பாவே,

'பூணாரந் தாமே கலைதாநற் புங்கவன்மால்
காணாப் புலவுடைய கங்கரா! — கோணா
கலாமதிசேர் கோடீர! சஙகரா! சோணா
சலா!சலமே தோ?சங்கந் தா' எனவும்,

'சலமேதோ? சங்கந்தா பூணாக் தாமே
கலைதா?நற் புங்கவன்மால் காணப் - புலவுடைய
கங்கரா! கோணு கலாமதிசேர் கோடீர!
சங்கரா! சோணு சலசா!'

எனவும் மூன்று வெண்பாவாய்த் திரிபங்கியானது காண்க. இவற்றிற்கும் முதல் வெண்பாவின் பொருளே அமையும்.

இது, ஒரு செய்யுளே மூன்று பங்காவதால் திரிபங்கி எனப் பட்டது.

(வி - ரை) திரி - மூன்று. பங்கி - பங்கத்தை (வேறுபாட்டை) யுடையது. ஒரு செய்யுள் மூன்று வகையாகப் பிரிதலின், இது இப்பெயர்பெற்றது.

இதற்குக் காட்டப்பட்ட இருபாடல்களுள் முன்னையது ('ஆதரந்தீர்') மூன்று பாடல்களாகப் பிரிந்துள்ளன. அடுத்துள்ள பாடல் ('சங்கந்தா') இரண்டு வெண்பாக்களாகவே பிரிந்துள்ளன. எனினும் உரையில், 'மூன்று வெண்பாவாய்த் திரிபங்கியானது காண்க' எனக் காணப்படுகின்றது. 'சங்கந்தா' என்று தொடங்கும் பாடலமைப்புடன், அதனின்றும் பிரிந்த இரண்டு வெண்பாக்களையும் கூட்ட மூன்றாதல்பற்றி இங்ஙனம் கூறப்பட்டது என அறிக. முன்னையதில் ('ஆதரந்தீர்') முதற்கண் உள்ள பாடலமைப்பின் வேறாகவே மூன்று உள்ளது. பின்னையதில் காட்டப்பட்ட பாடலையும் கூட்டவே மூன்றாக அமைகிறது.

(௨௦) பிறிதுபடுபாட்டு என்பது, ஒரு செய்யுளை அடியும் தொடையும் வேறுபடுப்பச், சொல்லும் பொருளும் வேறுபடாது வேறொரு செய்யுளாய் முடிவது.

எ - டு : 'தெரிவருங் காதலிற் சேர்ந்தோர் விழையும் பரிசுகொண்டு
வரியளி பாட மருவரு வல்லி யிடையுடைத்தாய்த்
திரிதருங் காமர் மயிலிய லாயநண் ணுத்தேமொழி
யரிவைதன் னேரென லாகுமெம் மைய!யா மாடிடமே'

இ - ள் : எம் ஐயனே! யாம் விளையாடும் இவ்விடமானது, தெரிதற்கரிய காதலினாலே கூடியவர் விரும்பும் விதத்தைக் கொண்டு, இசைப்பாட்டையுடைய வண்டுகள் என்னும் பாடல் மகளிர் பாடுதலைச் செய்ய, மருவுதற்கரிய கொடிகளாகிய இடையினை யுடைத்தாய்த், திரிகின்ற அழகிய மயில்கள் என்னும் தோழியர் கூட்டத்தைப் பொருந்தி, தேன் போலும் மொழியினை யுடைய அரிவைக்கு ஒப்பாகும் என்று சொல்லலாந் தகைமைத்து எ - று.

இச்செய்யுளை அடியும் தொடையும் வேறுபடுப்ப,

'தெரிவருங் காதலிற் சேர்ந்தோர் விழையும்
பரிசு கொண்டு வரியளி பாட
மருவரு வல்லி யிடையுடைத் தாய்த்திரி
தருங்காமர் மயிலிய லாய நண்ணுத்
தேமொழி யரிவைதன் னேரென
லாகுமெம் மைய யாமா டிடமே'

என ஆறடியாய், ஈற்றயலடி முச்சீராய், ஏனையடி நாற்சீராய் வந்து 'நேரிசை ஆசிரியப்பா' ஆமாறு காண்க.

இனித் திரிபங்கிக்குச் சொன்ன பாட்டையே, இரண்டு பாட்டாகக் கூட்டி அடி தொடை பேதித்துச் சொல்லலுமாம்.

(வி - ரை) திரிபங்கியும், பிறிதுபடுபாட்டு எனக் கூறத்தகுமேனும் இவ்விரண்டற்கும் வேற்றுமையுண்டு. திரிபங்கியாவது அதற்குக் காட்டப்பட்ட பாடலிலிருந்து மூன்று பாட்டாகப் பிரிவதும், காட்டப்பட்ட பாடலிலிருந்து இரண்டு பாடல்கள் பிரிந்து அக்காட்டப்பட்ட பாடலுடன் கூட்ட மூன்றாக ஆதலும் ஆகிய இயல்பை யுடையது. பிறிதுபடுபாட்டிலோ காட்டப்பட்ட பாடலிலிருந்து பிரியும் பாட்டு ஒன்றாகவே இருத்தலாகிய இயல்பினை யுடையது. இவை தம்முள் வேற்றுமை.

திரிபங்கிக்குச் சொன்ன பாடலை, இருபாடலாக அடி தொடை வேறு படுத்திக் காட்டப் பின்வருமாறு வரும்.

'ஆத ரந்தீர்
மாது பங்கா!
ஏத முய்ந்தார்
ஓது மொன்றே!'

இது வஞ்சித்துறை.

'அன்னைபோ லினியாய்! அம்பிகா பதியே!
வன்னிசேர் சடையாய்! வம்புநீண் முடியாய்!
இன்னல்சூழ் வினைதீர் எம்பிரா னினியாச்
உன்னுவா ரமுதே! உம்பர்நா யகனே!'

இது கலிவிருத்தம். (௭)

சித்திரகவி முற்றிற்று.

வழுக்கள் மலைவுகள்

௯அ. பிரிபொருட் சொற்றொடர் மாறுபடு பொருண்மொழி
மொழிந்தது மொழிவே கவர்படு பொருண்மொழி
நிரனிறை வழுவே சொல்வழு யதிவழு
செய்யுள் வழுவொடு சந்தி வழுவென
எய்திய ஒன்பதும் இடனே காலம்
கலையே உலகம் நியாயம் ஆகம
மலைவும்உள் ளுறுத்தவும் வரைந்தனர் புலவர்.

எ - ன், முன் ஓதப்பட்ட அணிபெறும் செய்யுள்கட்குப் பொருந்தாதவழுவாவன இவை என்று தொகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: அவை: பிரிபொருட் சொற்றொடரும், மாறுபடு பொருண்மொழியும், மொழிந்தது மொழிதலும், கவர்படு பொருண்மொழியும், நிரனிறை வழுவும், சொல் வழுவும், யதி வழுவும், செய்யுள் வழுவும், சந்தி வழுவும் என்னும் ஒன்பது வழுவும்; இடமலைவும், கால மலைவும், கலைமலைவும், உலகமலைவும் நியாய மலைவும், ஆகம மலைவும் என்னும் ஆறுமலைவும் உள்ளிட்ட பதினைந்தும் செய்யுளிடத்து வரைந்தனர் புலவர் எ - று.

முன்னர் ஒன்பது வழுவும், பின்னர் ஆறு மலைவும் என இவ்வாறு வைத்தது என்னை? எனின், முன்னர் ஒன்பது வழுவும் குற்றமாதல் பெரும்பான்மைய, குணமாதல் சிறுபான்மைய என்றற்கும்; பின்னர் ஆறு மலைவும், ஒருதலையாகவே குற்றமாய்ப் புகழ்ச்சியிடத்துப் புனைந்துரையாகப் புணர்க்கத்தக்க புலவரால் மொழியப்படும் சிறுபான்மைய என்றற்கும் இவ்வாறு வைத்தது என்றறிக.

அஃதேல், குற்றம் செய்யுள் நோக்கி வருவனவல்லவோ ஆதலால், செய்யுட்கு இலக்கணம் கூறும் யாப்பு நூலுள் அன்றே யுணர்த்துவது, ஈண்டு உரைத்தது என்னை? எனின், செய்யுள் என்பது சட்டகம்; அலங்காரம் என்பது அச்சட்டகத்தைப் பொலிவு செய்வது; ஆதலால் செய்யுட்குப் பொலிவு ஈண்டு உரைக்கப்பட்டது. இக்குற்றம் அச்செய்யுட்குப் பொலிவழிவு செய்வன ஆதலால், அச்செய்யுட்குப் பொலிவழிவு வாராமல் புணர்க்க வேண்டுமென ஈண்டே யுணர்த்தப்படும்; ஆதலால், பிறிதெடுத்தல் அன்றென்க.

அஃதேல், இச்சூத்திரத்துள் செய்யுள் என்பது பெற்றிலமால் எனின், மேல் பொதுவியலுள் அதிகரித்த செய்யுட்கன்றே அலங்காரம் உணர்த்தியது, ஆதலால் இக்குற்றமும் அச்செய்யுட்கண் வாராமல் புணர்க்க வேண்டும் என்றே கொள்ளப்படும். அல்லதூஉம், இச்சூத்திரத்துள் 'சொற்றொடர்' என்றது அச்செய்யுளையேயன்றோ என்க. (அ)

பிறன்கோள் கூறி மறுத்தல்

கூகூ. மேற்கோள் ஏது எடுத்துக் காட்டென
ஆற்றுளி கிளக்கும் அவற்றது வழுநிலை
நிரம்ப வுணர்த்த வரம்பில வென்ப.

எ - ன், பிறன்கோள் கூறி மறுக்கின்றது.

இ - ள்: மேற்கோளும், ஏதுவும், எடுத்துக்காட்டும் என முறையால் சொல்லப்படும் அவற்றது வழுநிலையை ஈண்டு முற்றவுணர்த்த அளவிலவாதலால் கூறிற்றிலவென்று சொல்லுவர் எ-று.

மேற்கோள் முதலிய மூன்றும் நியாய நூலுள் சொல்லப்படும். அவைதாமும் மதங்கள்தோறும் வேறுபட்டு வருவன வாதலால், இன்பந்தர வுரைக்கும் இவ்வலங்கார இலக்கணத்தின்கண், மொழியின், இன்பம் அழிந்து பிறிதெடுத்து விரித்தல் என்பதாகும் ஆதலால், ஈண்டு வேண்டிற்றிலர். (கூ)

(க) பிரிபொருட் சொற்றொடர்

கoo. அவற்றுள்
பிரிபொருட் சொற்றொடர் செய்யுள் முழுவதும்
ஒருபொருள் பயவா(து) ஓரீஇத் தோன்றும்.

எ - ன், நிறுத்த முறையானே பிரிபொருட் சொற்றொடர் என்னும் வழுவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: அவற்றுள், பிரிபொருட் சொற்றொடர் என்பது, செய்யுள் முழுவதும் கூட்டி நோக்க ஒரு பொருளாக உணரப்படாது, தனித்தனி நோக்கப் பொருள் தோன்றுவது எ - று.

பிரிபொருள் - ஒன்றாத பொருள்; சொற்றொடர் - செய்யுள்; ஆதலால் ஒன்றாப் பொருளுடைச் செய்யுள். அஃதாவது, வாக்கியங்களை வெவ்வேறு நோக்கப் பொருளுடையவாய்க், கூட்டி நோக்க ஒரு பொருளாக உணரப்படாததாய் வருவது.

எ - டு: 'கொண்டல் மிசைமுழங்கக் கோபம் பரந்தனவால்
தெண்டிரைநீ ரெல்லாம் திருமுனியே - உண்டுமிழ்ந்தான்
வஞ்சியார் கோமான் வரவொழிக மற்றிவளோர்
பஞ்சியார் செஞ்சீ றடி'

இ - ள்: இதனுள், வானின்கண் மேகங்கள் முழங்க நிலத்தின்கண் இந்திர கோபம் பரந்தன எனவும்; தெளிந்த அலைகளையுடைய கடல் நீரையெல்லாம் அகத்திய முனியே உண்டு உமிழ்ந்தான் எனவும்; கருவூராருக்குக் கோமானாகிய சோழனே வருதலை ஒழிவாயாக எனவும்; இவள் செம்பஞ்சியை யூட்டிய சிவந்த சிற்றடியாள் எனவும்; தனித்தனி நோக்கப் பொருள் பயந்து, கூட்டி நோக்கப்பொருள் பயவாமையின் அப்பெயராயினவாறு காண்க. (௧௦)

மேலதற்கோர் சிறப்புவிதி

௧௦௧. **களியினும் பித்தினும் கடிவரை யின்றே.**

எ - ன், எய்தியது இகந்துபடாமல் காத்தல் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: மேல் மொழிந்த பிரிபொருட் சொற்றொடர், கள்ளுண்டு களித்தான் கூற்றின்கண்ணும், பித்தினால் மயங்கினான் கூற்றின்கண்ணும் கடிந்து நீக்கப்படாது எ - று.

அவற்றுள், களியான் மொழிந்தது

எ - டு: 'காமர் உருவங் கலந்தேன்யான் காங்கேயன்
வீமனெதிர் நின்று விலக்குமோ? - தாமரைமேல்
மால்பொழிய வந்தார் அருகர் மதுவுடனே
பால்பொழியும் இவ்வூர்ப் பனை'

இ - ள்: இதனுள், அழகிய உருவங்களிலே யான் புக்குக் கலந்தேன் எனவும்; காங்கேயனாகிய அரசன் வீமன் எதிர் நின்று போரை விலக்குமோ? எனவும்; தாமரை மலர்மேல் அருகர் [1]மால் பொழிய வந்தார் எனவும்; இவ்வூர்ப்பனை மதுவுடனே பாலைப் பொழியும் எனவும் பொருள் பயந்து நிற்றல் காண்க.

இவ்வாறு கள்ளுண்ட மகிழ்ச்சியால் சொல்லப்பட்டமையால், நீக்கப்படாது கொள்ள வேண்டுவதாயிற்று. இனி, பித்தினால் மயங்கிய கூற்று வந்துழிக் காண்க.

'வரையின்று' என்னாது **'கடிவரையின்று'** என்றதனால் பிள்ளைகள் இளமைத்தன்மையால் மொழியுங்காலும் வரையப்படா வென்றறிக. இக்கூற்றும் வந்துழிக் காண்க. (௧௧)

(உ) மாறுபடு பொருண்மொழி

௧௦௨. **மாறுபடு பொருண்மொழி முன்மொழிந் ததற்கு
மாறுபடத் தோன்றி வருமொழித் தாகும்.**

1. மால் - ஆசை.

எ - ன், நிறுத்த முறையானே மாறுபடு பொருண்மொழி என்னும் வழுவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள் : மாறுபடு பொருண்மொழியாவது, முன்மொழிந்த சொற்பொருளோடு, மாறுபட்ட பொருள் தோன்றி வருமொழி யுடைத்து எ - று.

'வருமொழி' என்றது அதன் பொருளை.

எ - டு : 'மின்னார் மணிப்பைம்பூண் வேந்தே! நினக்குலகில்
இன்னா தவர்யாரு மில்லையால் - ஒன்னார்
குலமுழுதும் கூற்றங் கொளவெகுண்டு நீயே
தலமுழுதும் தாங்கல் தகும்'

இ - ள் : இதனுள், ஒளியினை யுடைய மணிகள் இழைத்த பசும்பொன்னால் செய்த ஆபரணங்களை யுடைய வேந்தனே! நினக்கு இன்னாதவர் உலகில் யாவரும் இல்லை என்று கூறிப், பின்பு நின் பகைவர் உயிரை யெல்லாம் கூற்றுவன் குலத்தோடு கொள்ளும்படியாக வெகுண்டு நீயே இத்தல முழுவதும் தாங்குதல் நினக்குத் தக்கது என்றமையின், இது மாறுபடு பொருண்மொழி ஆயிற்று. (௧௨)

மேலதற் கோர் சிறப்புவிதி

௧௦௩. காமமும் அச்சமும் கைம்மிகின் உரித்தே.

எ - ன், மேலதற்கு ஓர் சிறப்புவிதி உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள் : காமம் கைம்மிகினும் அச்சம் கைம்மிகினும் அவ்வாறு உரைக்கப்படும் எ - று.

அவற்றுள், அச்சத்தால் மொழிந்தது

எ - டு : 'என்னோ டிகல்புரியப் பஞ்சவர்கள் அஞ்சாரோ
மின்னனைய பாஞ்சா லியைவிடேன் - அன்னே!
மிகல்புரியுங் கூற்றனைய வீமன் எதிர்நின்(று)
இகல்புரிய வாற்றுவலோ யான்'

இ - ள் : இதனுள், என்னோடு மாறுபட்டு எதிர்த்தற்குப் பஞ்சபாண்டவர் அஞ்சாரோ என்றும், மின்னனைய பாஞ்சாலியை விடேன் என்றும் கூறிப், பின்பு ஐயோ! மேம்பாட்டினை யுடைய கூற்றத்தை யொத்த வீமனுக்கு எதிரே நின்று மாறுபடுதற்கு யான் வல்லனோ என்றும் சொன்னமையால் அவ்வாறுதல் காண்க.

இது - அச்சம். மிகல் - மேம்பாடு. புரிதல் - செய்தல். இது மாறுபடு பொருண்மொழி யாயினும், அச்சம் கைம்மிக்குச் சொன்னமையின் கொள்ளற்கு உரித்தாயிற்று. (௧௩)

(௩)மொழிந்தது மொழிவு

௧௦௪. மொழிந்தது மொழிவே கூறியது கூறி
வேறுபட வொருபொருள் விளங்கா தாகும்.

எ - ன், நிறுத்தமுறையானே மொழிந்தது மொழிவு என்னும் வழுவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள் : மொழிந்தது மொழிதலாவது - முன்னே கூறியவதனையே மீண்டும் கூறி, அதனால் வேறுபட ஒரு பொருள் விளங்காதது எ - று.

எ - டு : 'அங்கமி லாதவ னங்கன் தலம்புரியும்
வெங்கணையுங் காக்குங்கொல்? வேல்வேந்தர் - தங்கோன்
நிலையார்த் தொடையதல னேரிழைக்காய் முன்னோர்
மலையாற் கடல்கடைந்தான் மால்'

இ - ள் : வேலைத் தாங்கிய அரசர்க்கரசனாகிய, நிலைத்த ஆத்தி மாலையைத் தரித்த ஒப்பில்லாத சோழன், அங்கம் இல்லாதவனாகிய மன்மதன் கைத்தலங்களால் எய்யப்படுகின்ற கொடிய அம்புகளையும் காப்பானோ? காப்பான்; ஏனெனில், ஆதியில் திருமால் திருமகளைப் பெறவேண்டி ஒரு மலையாலே பாற்கடலைக் கடைந்தான் எ - று.

இதனுள், 'அங்கமில்லாதவன்' என்று கூறியபின்னும், மீண்டும் அவனையே 'அனங்கன்' என்றும் சொன்னமையான் மொழிந்தது மொழிவாகிக் குற்றமாயிற்று.

அஃதேல், சொற்பின்வருநிலையும், பொருட் பின்வருநிலையும், சொற்பொருட் பின்வருநிலையும் மொழிந்தது மொழிவாகிக் குற்றமாகாதோ? எனின், அற்றன்று. **சொற்பின்வருநிலையாவது:** மொழிந்த சொல்லே மொழியினும் பொருள் வேறுபடும். அது,

'மால்கரி காத்தளித்த மால்' (பக் - அ௮) என்பது.

இ - ள் : மத மயக்கத்தை யுடைய யானையைக் காத்த திருமால் என்பதாம்.

(வி - ரை) இத்தொடரில் 'மால்' என்ற சொல் இருமுறை வரினும், முன்னையது மயக்கம் என்ற பொருளிலும், பின்னையது திருமால் என்ற பொருளிலும் வருதல் காண்க.

பொருட் பின்வருநிலையாவது: மொழிந்த பொருளையே மொழியினும், சொல் வேறுபடப் பொருள்தோறும் வருவதோர் அலங்காரம் உண்டாகும். அது,

'அவிழ்ந்தன தோன்றி அலர்ந்தன காயா' (பக் — அ௮) என்பது.

இ - ள் : மலர்ந்தன காந்தள்கள், மலர்ந்தன காயாமலர்கள் என்பதாம்.

(வி - ரை) : இதன்கண் அவிழ்ந்தன, அலர்ந்தன என்ற சொற்கள் ஒரு பொருளையே குறிப்பினும், சொல் வேறுபட்டு நிற்றல் காண்க.

சொற்பொருட் பின்வருநிலையாவது: சொல்லும் பொருளும் அதுவே யெனினும், அவற்றான் வெவ்வேறு பொருள்படுதல். அது,

'வைகலும் வைகல்' (பக் - அ௯) என்பது.

இ - ள் : நாள்தோறும் நாள் என்பதாம்.

(வி - ரை) 'வைகலும் வைகல்' என்புழிச் சொல்லும் பொருளும் ஒன்றாய் நிற்பினும், முன்னையது நாள்தோறும் என்ற பொருளிலும், பின்னையது கழிவு நாள் என்ற பொருளிலும் வருதல் காண்க. (௧௪)

மேலதற்கோர் சிறப்புவிதி

கஂ0௫. விரைவினும் சிறப்பினும் வரைவின் றதுவே.

எ - ன், மேலதற்கு ஓர் சிறப்பு விதி உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள் : மேல் ஒரு சொற்பொருள்மேல் பல சொல் வருதலன்றோ வழுவென்பது; அதுவே விரைவின்கண்ணும், சிறப்பின் கண்ணுமாயிற் குற்றமன்று எ - று.

அவற்றுள், **விரைவின்கண் வந்தது**

எ - டு : *'ஒருவர் ஒருவர்மேல் வீழ்ந்தவட நாடர்*
அருவர் அருவர்என அஞ்சி - வெருவந்து
தீத்தீத்தீ யென்றயர்வர் சென்னி படைவீரர்
போர்க்கலிங்க மீதெழுந்த போது'

இ - ள் : சோழனுடைய படைவீரர், போரையுடைய கலிங்க தேசத்தின் மீது சண்டைக்கு எழுந்தபோது, அவ்வடநாடர், ஒருவர்மேல் ஒருவர் வீழ்ந்து, 'நாம் குறைவுற்றவரானோம், குறைவுற்றவரானோம்' என்று பயந்து மயங்கி, 'நெருப்பு மூண்டது நெருப்பு மூண்டது' என்று வாடுவார்கள் எ - று. (கரு)

இது - விரைவு. பிறவுமன்ன.

(ச) கவர்படு பொருண்மொழி

கஂ0சு. ஒருபொருள் துணிய வுரைக்க லுற்றசொல்
இருபொருட்(கு) இயைவது கவர்படு பொருண்மொழி.

எ - ன், நிறுத்த முறையானே கவர்படு பொருண்மொழி என்னும் வழுவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள் : ஒரு பொருளைத் தெரிவுற உணர்த்தற்கு வந்த சொல், அதனையே ஐயுறும்படி பல பொருள்மேல் நிற்பது, கவர்படு பொருண்மொழி என்னும் குற்றமாம் எ - று.

எ - டு : *'புயலே புறம்பொதிந்து பூந்தா தொழுக்கி*
மயலே கடவுளர்க்கு வாய்த்துச் - செயலை
எரிமருவு பூந்துணர்த்தாய் யாவருமூ டாடார்
அரிமருவு சோலை யகத்து'

இ - ள்: மேற்புறம் மேகத்தால் மூடப்பட்டு, அழகிய மகரந்தங்களைச் சொரிந்து, தேவர்களுக்கும் மயக்கத்தை உண்டாக்கி, அசோகினது நெருப்பைப் போன்ற நிறம் பொருந்திய பூங்கொத்துக்களை யுடையதாய், அரி சார்ந்திருக்கின்ற சோலையினுள் எவரும் ஊடே செல்லார் எ - று.

இதனுள் 'அரிமருவு சோலை யகத்து' என்றவழி, அரி என்பது - வண்டு, சிங்கம், நெருப்பு முதலிய பல பொருள்களுக்கும் பொதுவாதலான், ஒன்று துணியப்படாமையின் வழுவாயிற்று. (கசு)

மேலதற்கோர் சிறப்புவிதி

கஂ0எ. வழூஉப்படல் இல்வழி வரைவின் றதுவே.

எ - ன், மேலதற்கு ஓர் சிறப்புவிதி உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: அக்கவர்படு பொருண்மொழி, வழுவில்லாத இடத்துப் பொதுப்பட வுரைப்பினும் குற்றமன்று எ - று.

என்னை? எனின்,

> 'வினைவேறு படாஅப் பலபொருள் ஒருசொல்
> நினையுங் காலைக் கிளந்தாங் கியலும்'
>
> (தொல் - சொல்—௫௪)

என்பது சூத்திரம். அதாவது, சொல் வேறுபடாத பலபொருள் ஒருசொல், ஆராயுமிடத்துக், குறித்துச் சொன்ன பொருளின்படி நடக்கும் என்பவாகலின்.

எ - டு: 'வானவர்கள் தாழ்ந்து பணிகேட்ப மாறுய
தானவர்கள் சுற்றந் தடிந்தொழித்த - மேன்மை
அரியே அனைத்துலகும் காக்கும் கடவுள்
எரியே மறையோர்க்(கு) இறை'

இ - ள்: தேவர்கள் பணிந்து ஏவல் கேட்ப, பகையான அசுரருடைய குலத்தைச் சேதித்துக் களைந்த, மேன்மை பொருந்திய அரியே அனைத்துலகும் காக்கும் கடவுள்; அக்கினியே வேதியர்க்கு இறை எ - று.

இதனுள், காத்தல் தொழில் திருமாலுக்கு முக்கியம். இனி, இந்திரன் எனினும் ஆம். 'அரி' என்பது இந்திரனுக்கும், திருமாலுக்கும் பொதுப் பெயர் ஆதலின், காவல் தொழில் யாவர் மேல் நிற்பினும் குற்றமன்று என்க. (௧௭)

(௫) நிரனிறைவழு

௧௦அ. ஒருநிரல் முன்வைத்(து) அதன்பின் வைக்கும்
நிரனிறை பிறழ்வது நிரனிறை வழுவே.

எ - ன், நிறுத்த முறையானே நிரனிறை வழுவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: ஒருநிரல் முன் எண்ணி வைத்து, அதன் பின் வைக்கும் நிரலை மொழிமாற்றிக் கொள்ளும்படி பிறழவைப்பது நிரனிறை வழுவாம் எ - று.

எ - டு: 'தெற்குக் குடக்கு வடக்குக் குணக்குமேல்
நிற்குந் திறத்துலகை நீடளிக்கும் - பொற்பினர்
ஈரெண் கலையோன் வருணன் இரவியமன்
யாரும் புகழியல்பி னர்'

இ - ள்: தெற்கு, மேற்கு, வடக்கு, கிழக்கு என்னும் திசைகளின்மேல் நிற்கும் திறமையினாலே உலகை நெடுங்காலம் காக்கும் பொற்பினை யுடையார், பதினாறு கலைகளை யுடைய சந்திரன், வருணன், சூரியன், இயமன் என யாவரும் புகழக்கூடிய இயல்பினை யுடையார் எ - று.

இதனுள், தென்திசை முதல் குணதிசை யீறாக அடைவே எண்ணி, அத்திசைகளினின்றும் உலகங்காப்பவர் - இயமன், வருணன், சந்திரன், சூரியன், என முறையே வையாது, சந்திரன், வருணன், சூரியன், இமயன் என முறைபிறழ வைத்தமையின் வழுவாயிற்று.

(வி - ரை) இயமன், வருணன், குபேரன், இந்திரன் ஆகிய நால் வரையும் முறையே தெற்கு, மேற்கு, வடக்கு, கிழக்கு ஆகிய திசைகளுக்குக் காவலர்களாகக் கூறலே மரபு. எனினும் வடதிசைக்கு ஈரெண் கலையானாகிய சந்திரனைக் காவலாகக் கூறியதன் கருத்து விளங்கவில்லை. குபேரன் திசை யாகிய வடதிசையினைத் திவாகர நிகண்டு 'சந்திர திசை' எனக் கூறுதல் பற்றி, 'ஈரெண் கலையோன் திசை' எனக் கூறினர் போலும்! அங்ஙனம் கொள்ளின் ஈரெண் கலையோன் என்பது குபேரனைக் குறிக்கும்; 'ஈரெண் கலை' என்னும் அடைமொழி சந்திரனுக்கு அடையாய்க் குபேரனைப் பெய ரளவில் குறித்ததாகக் கொள்ளல் வேண்டும். கீழ்த் திசைக்கு இந்திரனைக் காவலராகக் கூறாது சூரியனைக் கூறியது, அத்திசைக்குச் 'சூரிய திசை' என்ற பெயர் பற்றிப் போலும். (௧௮)

மேலதற்கோர் சிறப்புவிதி

௧௦௯. உய்த்துணர வரும்வழி யவ்வாறும் உரித்தே.

எ - ன், மேலதற்கு ஓர் சிறப்புவிதி உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: அந்நிரனிறை உய்த்துக்கொண்டு உணர்வதாகத் தோன்றுவதாயிற் பிறழினும் பிறழ்வன்று எ - று.

எ - டு: 'குடபால் வடபால் குணபால்தென் பால்என்(று)
அடைவே திசைநான்(கு) அவற்றுள் - இடையிரண்டு
நன்மைபுரி வோர்நயந்து நோக்குப ஏனைய
வன்மை புரிவோர்க்கே யாம்'

இ - ள்: மேற்குத்திசை, வடக்குத்திசை, கீழ்த்திசை, தென்திசை என்று முறையே ஏற்பட்ட திக்குகள் நான்கனுள், இடையிலுள்ள இரண்டும் நன்மை புரிவோர் விரும்பி நோக்கு வனவாம்; மற்றைய தீமை புரிவோர்க்கு உரியனவாம் எ - று.

நன்மைக்கு மறுதலை - அன்மை. இதனுள் உய்த்துணர்ந்து கொள்ளப் பிறழாதென வைத்தவாறுவது, மேல்திசை முதலாகத் தென்திசை யீறாக அடைவே எண்ணி, நடுக்கிடந்த வடதிசையும் குணதிசையும் நற்கருமஞ் செய்வோர் நோக்கற் பால வென்றும், மேற்கும் தெற்கும் தீக்கருமஞ் செய்வோர் நோக்கற்பால வென்றும் உய்த்துணர வைத்தவாறு காண்க. (௧௯)

(௬) சொல்வழு

**௧௧௦. சொல்வழு வென்பது சொல்லிலக் கணத்தொடு
புல்லா தாகிய புகர்படு மொழியே.**

எ - ன், நிறுத்த முறையானே சொல்வழுவாமாறு உணர்த் துதல் நுதலிற்று.

இ - ள்: சொல் வழுவாவது, சொல்லதிகாரத்தில் சொல்லிய இலக்கணத்தோடு மாறுபட்டு வருஞ்சொல் புணர்க்கப்படுவது எ - று.

எ - டு: 'யாவகைய தாயர்க்கும் எங்களுக்கும் எந்தையர்க்கும்
ஆவி யிவளே யனையவர்க்கும் - கோவே!
நுனக்க பயமித்த நுண்மருங்குல் மாது
தனக்கிடரொன் றில்லாமல் தாங்கு'

இ - ள்: ஈன்றதாய், ஊட்டுந்தாய், முலைத்தாய், கைத்தாய், செவிலித்தாய் என்ற எல்லாத் தாயர்க்கும், எங்களுக்கும், எங்கள் தந்தையர்க்கும், இன்னும் எல்லோருக்கும், இவளே உயிராவள்; ஆதலின், அரசனே! இந்த நுண்ணிய இடையினை யுடைய மாது உனக்கு அடைக்கலம்; இவளுக்கு இடர் ஒன்று மில்லாமல் இவளைக் காத்துக் கொள்வாயாக எ - று.

இது, கையடை கொடுத்தல். இதனுள் **'எங்களுக்கு'** எனவும் **'நுனக்கு'** எனவும் வழூஉச்சொல் புணர்க்கப்பட்டன ஆதலால் சொல்வழு ஆயிற்று.

'யாவகைய தாயர்க்கும்' என்று கூறிப், பின்னர் **'எங்களுக்கும்'** என்று கூறியது தவுறுகும்; இக்கூற்றிற்கு உரியாளும் தாய்மார் களில் ஒருத்தியாதலின். (௨0)

மேலதற்கோர் சிறப்புவிதி

௧௧௧. வழக்கா(று) ஆயின் வழுவின் றதுவே.

எ - ன், மேலதற்கு ஓர் சிறப்பு விதி உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: அச்சொற்கள் வழக்காறாய் அடிப்பட்ட சான்றோ ரால் வழங்குவனவாயின் வரையப்படா, வழக்காறு என்று தழுவப்படும் எ - று.

மரூஉ, கட்டுரைக்கண் இலக்கணம் இன்றியும் வரப்பெறும் என்க.

எ - டு: *'யாவர் அறிவார்? இவரொருவர் இக்குறிஞ்சிக்*
காவலரோ? விஞ்சையர்தங் காவலரோ' - பாவாய்!
அருமந்தன் னார்நம் அகன்புனம்விட் டேகார்
தெருமந் தழலுந் திறம்'

இ - ள்: பாவை போன்ற பெண்ணே! ஒப்பற்றவராகிய இவர், இக்குறிஞ்சி நிலத்திற்குத் தலைவரோ? வித்தியாதரர்க ளுடைய தலைவரோ? அருமருந்து போன்ற இவர், நம்முடைய விசாலமான தினைக்கொல்லையை விட்டுப் போகாதவராய் மயங்கி வருந்தும் தகைமையை எவர் அறிந்து சொல்லவல்லார்? எ - று.

இதனுள், 'அருமருந்தன்னார்' எனற்பாலது **'அருமந்தன்னார்'** என அடிப்பட்டு வந்து, வழக்காறு ஆயிற்று. அல்லதூஉம், 'மலையமானாடு' - மலாடு எனவும், 'பாண்டியனாடு' - பாண்டிநாடு எனவும் வருவனவும், அவ்வழக்காறே எனக் கொள்க. (௨௧)

(எ) யதிவழு

௧௧௨. யதிவழு என்ப(து) ஓசை யறுவழி
நெறிப்பட வாரா நிலைமைய(து) என்ப.

எ - ன், நிறுத்த முறையானே யதிவழுவாமாறு உணர்த் துதல் நுதலிற்று.

இ - ள்: யதிவழுவாவது, ஓசைகொண்டு சீரறுக்கும் வழி, அறுத்தற்கு அரிதாய் வேறுபட்டுவரும் தன்மையதாகும் எ - று.

எ - டு: *'மாடு பயிலும் வரையாளி மால்யானைக்*
கோடுபுயத் தூண்டுழலுங் கொள்கைத்தாம் - காடு
அரிதாம் இயல்பிற்(று) அரையிருட்கண் வாரல்
பெரிதாகும் ஐய! பிழை'

இ - ள் : மலைப்பக்கங்களிலே சஞ்சரிக்கின்ற சிங்கம், மதயானையினது கோட்டைப் புயத்திலே தாங்கி வருந்தும் இயல்பினை யுடையதாகிய காடு, எவரும் செல்லற்கு அரிதாம் தன்மை யுடையதாம்; ஆதலின், ஐயனே! அக்காட்டில் நள்ளிரவில் வருதலை ஒழிவாயாக; அங்ஙனம்வரின் பெரிதும் பிழையாகும் எ - று.

'யாளி யானைக்கோடு புயத்துண்டு' என்றது, யானை மதங்கொண்டு சிங்கத்தையும் பாய, அதன்புயத்தில் தந்தம் முறிந்திருக்க அதனோடு சிங்கம் வருந்தித் திரியும் என்றபடி. இங்ஙனம் யானை சிங்கத்தையும் பாயும் எனவே, காட்டின் கொடுமை மிகுதிப்பாடு விளங்கும். இது ஆறு பார்த்துற்ற அச்சங் கூறல். புயம் - புடை.

இதனுள், 'காடரிதாம்' எனற்பாலது 'காடு அரிதாம்' என்று, அச்சொற் கூடாது அறுத்திசைத்து யதிவழு ஆயிற்று. (உஉ)

மேலதற்கோர் சிறப்புவிதி

கக௩. வகையுளி யுரைப்புழி வரைவின் றதுவே.

எ - ன், வகையுளி ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள் : அச்சீர் அறற்பாலவழி அறுது நின்ற தெனினும், வகையுளி சேர்த்துக் கொள்ளலாமெனில் குற்றமன்று எ - று.

எ - டு : 'மேவிவாழ் வார்மே லிருணீக்கி யாருமலர்த்
தேவிநீங் காள்செம்பொற் றோளிணைகள் - கோவினணி
சென்னிவிடா மாலினடி வேலினுதி நீலநிறக்
கன்னிவிடா னீகைவிடா கை'

இ - ள் : தான் விரும்பி வாழ்வாரிடத்தே, வறுமை என்னும் இருளை நீக்கி, ஐசுவரியம் என்னும் தன்னுடைய பிரகாசத்தைப் பரப்பிப் பொருந்துகின்ற, செந்தாமரை மலரில் வாசம் செய்யும் திருமகள், அரசனுடைய செம்பொன் போன்ற தோள்களை விட்டு நீங்காள்; அவனது அழகிய சிரம் திருமாலின் அடியைவிட்டு நீங்காது; நீலநிறம் பொருந்திய சயமடந்தை அவனுடைய வேலின் முனையை விட்டு நீங்காள்; அவன் கை, ஈகையை விடமாட்டாது எ - று.

இதனுள், வகையுளி சேர்த்துக்கொள்ளக் குற்றமன்றாயிற்று. வகையுளியாவது :— அந்தந்தச் சொன்முடிபே சீர்முடிவாகத் தளைகொள்ளாமல் வேண்டியவிடத்துச் சீர்முடிவு செய்து தளைகொள்ளுதல். (உ௩)

(அ) செய்யுள்வழு

**ககச. செய்யுள் வழுவே யாப்பிலக் கணத்தோ(டு)[c]
எய்தல் இல்லா இயல்பிற் றாகும்.**

எ - ன், நிறுத்த முறையானே செய்யுள் வழுவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள் : செய்யுள் வழுவாவது யாப்பிலக்கணத்தோடு பொருந்தாத இயல்பினை யுடைத்து எ - று.

எ - டு : 'ஆதரந் துயர்தர வயர்தருங் கொடிக்குப்
பூதலம் புனைபுகழ் வளவன் - தாதரூத்
தாங்கரும் பாலன்றித் தணியுமோ தாரனங்கன்
பூங்கரும்பால் வந்தடுத்த போர்'

இ - ள் : ஆசையானது வருத்தத்தைத் தர அதனாலே வருந்துகிற பூங்கொடி போலும் மாதினுக்கு, பூமியை அலங்கரிக்கும்படியான புகழுள்ள சோழன் அணிந்திருக்கின்ற மகரந்தம் நீங்காத பூவரும்புகளால் ஆகிய மாலையாலன்றி, மாலையைத் தரித்த மன்மதனுடைய அழகிய கருப்பு வில்லால் வந்து சேர்ந்த போர்த் துன்பமானது தணியுமோ எ - று.

இது, முன்னர் ஆசிரியம் வந்து, பின்னர் வெண்பாவாய் முடிந்தது. இங்ஙனம் முடிதற்கு இலக்கணமின்மையால் யாப்பு வழுவாயிற்று. (உச)

மேலதற்கோர் சிறப்புவிதி

கக௫. ஆரிடத் துள்ளும் அவைபோல் பவற்றுளும்
நேரும் என்ப நெறியுணர்ந் தோரே.

எ - ன், மேலதற்கு ஓர் சிறப்பு விதி உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள் : செய்யுள் வழு ஆரிடத்துள்ளும், ஆரிடப் போலியுள்ளும் சிறுபான்மை வரையப்படா எ - று.

எ - டு : 'கண்டகம் பற்றிக் கடக மணிதுளங்க
ஒண்செங் [1]குருதியு ளோஒ கிடப்பதே - கெண்டிக்
[2]கெழுதகைமை யில்லேன் கிடந்தூடப் பன்னாள்
அழுதகண் ணீர்துடைத்த கை'

இ - ள்: தலைவரது பிரிவால் கூட்டம் இல்லாத யான், அப்பிரிவுத்துன்பம் உடம்பை யறுத்துத் தின்னப் பூமியில் கிடந்து பிணங்கப் பலநாளும் அழுத கண்ணீரைத் துடைத்துத் துன்பம் போக்கிய எனது கை, வாளைப் பற்றிக்கொண்டு கடகத்தில் உள்ள இரத்தினம் ஒளிவிடச் சிவந்த இரத்தத்தினுள்ளேயோ தோய்ந்து கிடப்பது எ - று.

இது, பதினறுசீர் வெண்பாவாய் யாப்பிலக்கணத்தோடு பொருந்தாது வந்தது.

ஆரிடமாவன - இருடிகளாற் சொல்லப்படுவன. ஆரிடப்போலியாவன - சாவவும், கெடவும், வாழவும், மனத்தது பாடவும் வல்ல புலவரால் சொல்லப்படுவனவாம்.

(வி - ரை) கெண்டி - வேறுபடுத்தி; அதாவது பிரிந்து என்றபடி. (உ௫)

(கூ) சந்திவழு

ககசு. சந்தி வழுவே எழுத்திலக் கணத்துச்
சந்தியொடு முடியாத் தன்மைத் தாகும்.

எ - ன், நிறுத்த முறையானே சந்தி வழுவாமாறு உணர்த்துதல் நுதலிற்று.

1. 'குருதியி னோஒ கிடந்ததே' என்பதும், 2. 'கெழுதகை யில்லேன்' என்பதும் பாடங்களாகும்.

இ - ள் : சந்தி வழுவாவது எழுத்ததிகாரத்து ஓதப்பட்ட புணர்ச்சி யிலக்கணத்தோடு பொருந்தாது வருவது எ - று.

எ - டு : 'என்பூ டுருக இனைவேன் மனங்கலக்கும்
பொன்பூண் சுமந்த புணர்முலையீர்! - மின்போல்
நுடங்கிடைக்கும் காவலாய் நோக்கங் கவரும்
படங்கிடைக்கும் அல்குற் பரப்பு'

இ - ள்: எலும்பும் உள்ளே உருகும்படி வருந்துவேனாகிய எனது மனத்தைக் கலக்குகின்ற பொன்னாலாகிய அணிகலங்களைத் தாங்கிய இணைந்த கொங்கைகளை யுடையீர்! பாம்புப் படத்தினை எதிர்க்கும் நும் கடிதடப் பரப்பானது, மின்னலைப் போல் அசைகின்ற இடைக்குங் காவலாய், பார்ப்பவரது நோக்கம் கவரும் எ - று.

இதனுள், 'பொற்பூண்' என்பது 'பொன்பூண்' என வந்தமை யிற் சந்தி வழுவாயிற்று.

(வி - ரை) 'னகார இறுதி வல்லெழுத் தியையின்
றகாரமாகும் வேற்றுமைப் பொருட்கே'
(தொல் - புள்ளி - ௩௩)

என்னும் விதிப்படி பொற்பூண் என்றாக வேண்டுவது, அங்ஙனமாகாது பொன் பூண் என நிற்றலின், இது சந்தி வழுவாயிற்று. (௨௬)

மேலதற்கோர் சிறப்புவிதி

௧௧௭. இரண்டாம் வேற்றுமைக்(கு) எதிர்மறுத்தும் வருமே.

எ - ன், அச்சந்திவழு சிறுபான்மை ஆகுமிடம் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள் : இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சியாயின் வல் லெழுத்து மொழிக்கு முதலாய் வந்துழி, [1]ஏனை வேற்றுமையோடு மாறுபட்டு முடியுவும் பெறும் எ - று.

எ - டு : 'இரவி துணைத்தாள் இகல்வேந்தர் சென்னி
விரவு மலர்பொழியும் மேவா - அரசிரிய
மின்பொழியும் செவ்வேல் வெறியோர் இனங்கவரப்
பொன்பொழியும் செங்கைப் புயல்'

இ - ள்: சூரிய வமிசத்தினனான சோழனுடைய இரண்டு பாதங்களும், பகை யரசர்களுடைய சிரசிலே சேர்ந்திருக்கின்ற மலரைச் சொரியும்; செம்மையாகிய வேலானது பகையரசர்கள் பயந்தோட மின்னலைச் சொரியும்; சிவந்த கையாகிய மேகமானது வறிஞர் கூட்டங் கொள்ளும்படி பொன்னைச் சொரியும் எ - று.

இதனுள், 'மலர்பொழியும்', 'மின் பொழியும், 'பொன் பொழியும்' என இயல்பாய் முடிந்தன. என்னை சூத்திரம், என் னுர்க்கு,

'இயற்கை மருங்கின் மிகற்கை தோன்றலும்
. . . .
மெய்பிறி தாகிடத் தியற்கை யாதலும்'
(தொல் - தொகைமரபு - ௧௫)

என்பவாகலின் என்க. என்னுர்க்கு இதுவும் இலக்கணம் அன்றே;

1. 'பொதுமுடிபொடு மாறுபட்டு' என்பதும் பாடம்.

எழுத்ததிகாரத்தோடு மாறுபட்டு வந்ததுண்டோ எனின், மாறுபட்டு வரும் என்றதன்று; ஐகார வேற்றுமை பொதுவகையான் ஓதிய முடிவோடு பொருந்தாது, இவ்வாறு சிறுபான்மை வருமென்று ஓதினுர் என்றறிக.

பிரிபொருட் சொற்றொடர் முதலாக ஓதிய ஒன்பதும், இவ்வாறுவரின் வழு எனப் பொது இலக்கணம் கூறிச், சிறப்பு வகையான் இவ்வாறுவரின் வழுவன்று எனக் கூறியதல்லது, வேறெ‌ன விதிக்கப்படாது எனக்கொள்க.

(வி - ரை) 'ரகார இறுதி யகார இயற்றே' (தொல் - புள்ளி - ௬௭) என்ற விதிப்படி 'மலர்ப் பொழியும்' என்றுதல் வேண்டும். 'ணகார இறுதி வல்லெழுத் தியையின், றகாரமாகும் வேற்றுமைப் பொருட்கே' (தொல் - புள்ளி - ௬௭) என்ற விதிப்படி 'மிற்பொழியும்', 'பொற்பொழியும்' என்றுதல் வேண்டும். இங்ஙனமின்றி மலர்பொழியும் என மிகாது வந்தது அந்நூற்பாவில் 'மெய்பெற' என்ற இலேசால் இயல்பாயும் மிகுந்தும் வரலாம் என்னும் விதிப்படியாகும். ஏனைய இரண்டும் அந்நூற்பாவில், 'மெய் பிறிதாகிடத்து இயற்கை யாதலும்' என்னும் விதிப்படி வந்தனவாம்.

எனினும் இத்தொகை மரபு நூற்பா புணர்ச்சி விதிக்கு மாறுபாடு உடையதன்றோ? அங்ஙனமாக இதனை விதியாக எங்ஙனம் ஏற்க முடியும்? எனில், அற்றன்று. இத்தொகைமரபு நூற்பா புணர்ச்சிகளுக்கு மாறுபட்டதன்று. புணர்ச்சி விதிப்படி வருதலே பெரும்பான்மை; ஐகார வேற்றுமைப் புணர்ச்சியில் மட்டும் அப்பொது விதி மாறி வருதலும் சிறுபான்மையுள என்பது இந்நூற்பாவின் கருத்தாகும். ஆதலின் இச்சிறுபான்மை விதியை இச்சொற்கள் பெற்றனவன்றி மாறுபட்டது அன்றென்க. இப்பாடலில் கூறப்பட்ட மூன்று சொற்களும் இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சியவாதல் காண்க. (௨௭)

மலைவு

(௧) இட மலைவு

௧௧௮. இடமெனப் படுபவை மலைநாடி யாறே.

எ - ன், நிறுத்த முறையானே இடம் முதலிய மலைவு உணர்த்துவான் தொடங்கி, அவற்றுள் இடமாவன இவையென உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள் : இடம் என்று கூறப்படுவன மலையும், நாடும், யாறும் எ - று.

மலையாவன : இமயமலை முதலியன. **நாடாவன** : பதினெண் மொழி வழங்கு நிலங்கள். **யாறுவன** : கங்கை முதலியன.

இவற்றின் மலைவாவது - ஒன்றினுள்ள பொருள் பிறிதொன்றினுளதாகச் சொல்லுதல்.

எ - டு : 'தென்மலையின் மான்மதமும் சாமரையும் தேமருசீர்ப்
பொன்மலையின் சந்தனமும் ஆரமும் - பன்முறையும்
பொன்னி வளநாடன் முன்றிற் பொதுளுமே
மன்னர் திறைகொணர வந்து' எனவும்,

இ - ள் : பொதிய மலையிலுள்ள கஸ்தூரியும், சாமரையும், வாசனை பொருந்திய சிறப்புடைய மேருமலையிலுள்ள சந்தனமும்,

பூமாலையும், அரசர்கள் திறைப் பொருள்களாகப் பன்முறையும் கொண்டுவர வந்து, காவிரி பாயும் வளம்பொருந்திய சோழ நாட்டை யாளும் சோழனுடைய முன்றிலிலே நிறையும் எ - று.

இதனுள், இமயத்தில் உள்ளன பொதியத்திற்கு உரியவாக வும், பொதியத்தில் உள்ளன இமயத்திற்கு உரியவாகவும் கூறின மையின், **மலையிட மலைவு** ஆயிற்று.

> 'தண்பொருநைச் செங்கனகம் மாதங் கிரித்தரளம்
> வண்கலிங்கந் தந்த வயப்புரவி - பண்பு
> மருவும் யவனத்து மால்யானை சென்னி
> பொருநர்க்கு வீசும் பொருள்' எனவும் வரும்.

இ - ள் : குளிர்ச்சி பொருந்திய பொருநை யாற்றிலுள்ள செம்பொன்னும், மாதங்கிரியிலுள்ள முத்தும், வளப்பம் பொருந் திய கலிங்க தேசத்திலிருந்து கொண்டு வரப்பட்ட வெற்றி பொருந்திய குதிரைகளும், நற்குணம் சேர்ந்த யவன தேசத்து மதயானைகளும் ஆகிய இவைகளே, சோழன், தன்னைப் புகழ்ந்து பாடும் பொருநர்க்கு வாரி யிறைக்கும் பொருள்களாம் எ - று.

இதனுள், பொருநைக்குரிய தரளத்தை மாதங்கிரியோடு புணர்த்தும், மாதங்கிரிக்குரிய கனகத்தைப் பொருநையோடு புணர்த்தும் கூறினமையின், **யாறிடமலைவு** ஆயிற்று.

மற்றும் இதனுள், யவனத்திற்குரிய புரவியைக் கலிங்கத் தோடு புணர்த்தும், கலிங்கத்துக்குரிய யானையை யவனத்தோடு புணர்த்தும் கூறினமையின் **நாடிடமலைவு** ஆயிற்று.

மலைவு - மாறுபாடு. இடமலைவு - இடத்தின் மாறுபாடு. இங்ஙனமே மேல் வருவனவற்றிற்கும் கொள்க. (உஅ)

(உ) கால மலைவு

கக௯. காலம் பொழுதொடு பருவமென்(று) இரண்டே.

எ - ன், காலம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள் : காலமாவது, பொழுதும் பருவமும் என இரண்டாம் எ - று.

அவற்றுள், **பொழுதாவன:** விடியல், உச்சி, எற்பாடு, மாலை, யாமம், வைகறை என இவை. இவற்றுள், ஒரோவொன்றுக்கு நாழிகை பப்பத்தாக, ஆறு பொழுதிற்கு நாழிகை அறுபதாம். **இவை தமிழ் நூல் முடிபு.**

பொழுது மலைவாவது: ஒரு பொழுதிற்குரிய பூவும், புள்ளும், தொழிலும் பிறிதொன்றற்கு உரியவாக உரைப்பது:

> எ - டு : 'செங்கமலம் வாய்குவியத் தேங்குமுதங் கண்மலர
> எங்கும் நெடுவானில் மீனிமைப்பப் - பொங்குதயத்'
> தோராழி வெய்யோன் உகந்தான் மலர்ந்ததே
> நீராழி சூழ்ந்த நிலம்'

இ - ள் : சிவந்த தாமரை மலர்கள் முகங்கூம்ப, வாசனை பொருந்திய அல்லிமலர்கள் முகமலர, நீண்ட ஆகாயத்தில் எங் கும் நாள்மீன் ஒளிர, பொங்குகின்ற தோற்றத்தை யுடைய

ஒற்றைச் சக்கரம் பொருந்திய தேரினனாகிய சூரியன் மகிழ்ந்து உதயஞ் செய்தான்; கடல் சூழ்ந்த உலகம் விளங்கிற்று எ - று.

இதனுள் மாலைக்கு உரியன, காலையோடு புணர்த்ததனால் **பொழுதுமலைவு** ஆயிற்று. பிறவுமன்ன.

(வி - ரை) சூரியன் உதித்த பொழுது தாமரை மலர்தலும், அல்லி குவிதலும், நாள்மீன் ஒளித்தலுமே மரபு. அங்ஙனமின்றி மாலை நேரத்தில் நிகழ வேண்டிய தாமரை மலர்தல், அல்லி குவிதல், நாள்மீன் இமைத்தல் ஆகியவற்றைக் காலைக்கண் உளவாகக் கூறியது பொழுது மலைவாம்.

பருவமாவன: கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என இவை. ஆவணி முதல் இவ்விரண்டு திங்கள் ஒவ்வொன்றாக அறுவகைப்படும். **இவை வடநூற்கும் ஒக்கும்.**

பருவ மலைவாவது: ஒரு பருவத்திற்குரியன, பிறிதொரு பருவத்தில் தோன்றினவாக் கூறல்.

எ - டு : 'காதலர் வாரார் களிக்கும் மயிலகவத்
தாதவிழ் பூங்குருந்தின் தண்பணையின் - மீதே
தளவேர் முகைநெகிழத் தண்கொன்றை பூப்ப
இளவேனில் வந்த திதோ'

இ - ள் : மகிழ்கின்ற மயில்கள் ஆட, மகரந்தங்கள் பரந்த மலர்களையுடைய குருந்த மரத்தின் குளிர்ந்த கிளைமீதே படர்ந்த முல்லைக்கொடியில் அழகிய முல்லையரும்புகள் மலர, குளிர்ந்த கொன்றை மரம் பூத்தலைச் செய்ய, இளவேனிற் பருவம் இதோ வந்தது; எனது காதற்குரிய தலைவர் வந்திலர் எ - று.

இதனுள், கார்ப்பருவத்திற்கு உரியன, இளவேனிற் பருவத்தில் தோன்றினவாகப் புணர்க்கமையின், **பருவமலைவு** ஆயிற்று. பிறவுமன்ன. (௨௬)

(௩) கலை மலைவு

௩௨௦. **கலையெனப் படுபவை காண்டக விரிப்பிற்
காமமும் பொருளும் ஏமுறத் தழுவி
மறுவறக் கிளந்த அறுபத்து நான்கே.**

எ - ன், கலைகளாவன இன்னவைக்குக் கருவியாகத் தோன்றும் எனவும், அவற்றது தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள் : கலை என்று சொல்லப்படுவனவற்றை விளங்க விரித்துரைப்பின், அவை இன்பமும் பொருளும் அழிவுபடாமல் தழுவிக் குற்றமறச் சொல்லப்படுவனவாய அறுபத்துநான்கு ஆகும் எ - று.

அவற்றின் மலைவாவது, அவ்வக் கலைநூலில் கூறியபடி கூறாது பிறழக் கூறுவது.

எ - டு : 'ஐந்தாம் நரம்பாம் பகைவிரவா(து) ஆறாக
வந்த கிளைகொள்ள நான்காய - முந்தை
இணைகொண்ட யாழியற்றும் எந்திழைதன் ஆவித்
துணைவன் புகழே தொடுத்து'

இ - ள் : ஐந்தாம் நரம்பாகிய பகை சாராது, ஆறும் நரம்பாக வந்த கிளையைக் கொள்ள, நான்காம் நரம்பாகிய முதன்மைத்தான இணையைக் கொண்ட யாழை ஏந்திய ஆபரணங்களையுடைய பெண்ணானவள், தனது ஆவிக்குத் துணைவனாகிய தலைவனது புகழையே தொடுத்து வாசிப்பாள் எ - று.

இதனுள், நின்ற நரம்பிற்கு ஐந்தாவது கிளையாகலான், அதனைப் 'பகை' என்றும், ஆறுவது பகையாகலான், அதனைக் 'கிளை' என்றும், நான்காவது நட்பாகலான் அதனை 'இணை' என்று எட்டாவதன் பெயர் கொடுத்தும் சொன்னமையின், **சங்கீதநூல் மலைவு** ஆயிற்று. பிறவுமன்ன.

(**வி - ரை**) *அறுபத்து நான்கு கலைகள் வருமாறு:—*

அக்கர இலக்கணம், இலிகிதம், கணிதம், வேதம், புராணம், வியாகரணம், நீதி சாஸ்திரம், சோதிட சாஸ்திரம், தரும சாஸ்திரம், யோக சாஸ்திரம், மந்திர சாஸ்திரம், சகுண சாஸ்திரம், சிற்ப சாஸ்திரம், வைத்திய சாஸ்திரம், உருவ சாஸ்திரம், இதிகாசம், காவியம், அலங்காரம், மதுர பாடனம், நாடகம், நிருத்தம், சத்தபிரமம், வீணை, வேணு, மிருதங்கம், தாளம், அத்திர பரீக்ஷை, கனக பரீக்ஷை, இரத பரீக்ஷை, கஜ பரீக்ஷை, அசுவ பரீக்ஷை, இரத்தின பரீக்ஷை, பூ பரீக்ஷை, சங்கிராம இலக்கணம், மல்ல யுத்தம், ஆகருஷணம், உச்சாடனம், வித்துவேஷணம், மதன சாஸ்திரம், மோகனம், வசீகரணம், இரசவாதம், காந்தர்வவாதம், பைபீலவாதம், கௌத்துக வாதம், தாதுவாதம், காருடம், நட்டம், முட்டி, ஆகாயப் பிரவேசம், ஆகாய கமனம், பரகாயப் பிரவேசம், அதிரிச்யம், இந்திர ஜாலம், மகேந்திர ஜாலம், அக்கினித்தம்பம், ஜலஸ்தம்பம், வாயுத்தம்பம், திட்டித் தம்பம், வாக்குத்தம்பம், சுக்கிலத்தம்பம், கன்னத்தம்பம், கட்கத்தம்பம், அவத்தைப் பிரயோகம் என்பன.

(ச) உலக மலைவு

கஉக. உலகெனப் படுவ(து)ஈண்(டு) ஒழுக்கின் மேற்றே.

எ - ன், உலகம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள் : உலகென்று சொல்லப்படுவது ஈண்டு ஒழுக்கத்தின் மேலது எ - று.

உலகு என்பது, மக்கள் மேலும், நிலத்தின் மேலும், ஒழுக்கத்தின் மேலும் நிற்கும் பலபொருள் ஒருசொல் ஆதலின், இவ்விடத்து ஒழுக்கத்தையே கோடற்கு '**ஈண்டு**' என்று உரைக்கப்பட்டது. அவ்வொழுக்கம் எல்லாராலும் அறியக் கிடந்தமையான் இன்னதென்று பகுத்தெடுத்து உரைக்க வேண்டுவதில்லை.

அதன் மலைவாவது, உலகத்து ஒழுகலாற்றோடு மாறுபட்ட ஒழுக்கம் நிகழ்ந்தனவாகக் கூறுதல்.

எ - டு : *'அலைகடல்கள் ஏழுந்தூர்த்(து) அந்தரத்தி னூடே*
மலையனைய மால்யானை யோட்டிக் - கலவாரை
நீறாக்கி வைய நெடுங்குடையின் கீழ்வைத்தான்
மாறாச்சீர் மாநிலத்தார் மன்' ௬

இ - ள்: மாறாத சிறப்பினையுடைய பெரிய பூமியில் உள்ளார்க்குத் தலைவனாகிய வேந்தன், அலைகளையுடைய சமுத்திரங்கள் ஏழனையும் தூர்த்து, ஆகாயத்தின் ஊடே மலையை யொத்த தனது

மதயானையைச் செலுத்தி, பகைவர்களைப் பொடியாக்கி, இந்தப் பூமி முழுவதையும் நீண்ட தனது கொற்றக்குடை நிழலின் கண்ணே தங்கும்படி செய்தான் எ - று.

தூர்த்தல் - வேறு பொருள்களை இட்டு நிரப்பி மேடாக்குதல்.

இதனுள், ஒரு நில வேந்தனை எழுகடலும் தூர்த்தானாகவும், ஆகாயத்தே தன் யானையைச் செலுத்திப் பகைவரை வென்றானாகவும், உலக ஒழுக்கோடு மாறுபடக் கூறினமையின், உலக மலைவு ஆயிற்று. (௩க)

(ரு) நியாய மலைவு

கஉஉ. நியாயம் என்பது நெறியுறக் கிளக்கின்
அளவையில் தெளிக்கும் விளைபொருள் திறமே

எ - ன், நியாயம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: நியாயம் என்பதனை இலக்கணவகையால் கூறுங்கால், காண்டல் முதலிய அளவையால் பொருள் விளையும் திறத்தைத் தெளிவிப்பது எ - று.

அது, அறுவகைப்பட்ட சமயத்தோரும் உலகத்தில் பொருள்களது தோற்றமும், நிலையும், அழிவும் இன்ன வகைய என்று கூறுதல்.

அவற்றின் மலைவாவது, அவற்றை அவ்வவர் கூறியவாறு கூறுது மாறுபடக் கூறல்.

எ - டு: 'ஆய பொருள்கள் கணந்தோ றழியுமெனத்
தூய அசோகின் முனியுரைத்த(து) - ஆய்வன்றே
காதலர் நீங்க எழுங்காம வெங்கனல்வாய்
மாதர் உயிர்தாங்கு மாறு'

இ - ள்: உலகத்தில் தோன்றிய பொருள்கள் எல்லாம், ஒவ்வொரு கணத்திலும் அழிந்துபோம் என்று, பரிசுத்தமாகிய அசோகமரத்தின் அடியில் எழுந்தருளி இருக்கின்ற முனிவனாகிய அருகன் சொன்னது, நல்ல ஆராய்ச்சியை உடையதன்று; ஏனெனில், தம் காதலர் பிரிய, அதனால் உண்டாகின்ற வெப்பமாகிய ஆசைக் கனலினிடத்தே அகப்பட்டு மாதர் உயிரைத் தாங்கியிருக்கும் வீரத்தால் எ - று.

இதனுள், தோன்றும் பொருள்கள் எல்லாம் கணந்தோறும் அழியும் எனப் போதிமுனி உரைத்தான் எனற்பாலதனை, அசோகின்முனி உரைத்தான் என்றமையால், நியாய மலைவு ஆயிற்று.

போதிமுனி - புத்தன், அசோகின்முனி - அருகன். பிறவு மன்ன.

(வி - ரை) அறுவகைச் சமயங்கள்:—உலகாயதம், பௌத்தம், சாங்கியம், நையாயிகம், வைசேடிகம், மீமாஞ்சகம் என்பன. காண்டல் முதலிய அளவைகளாவன:—காட்சி, அனுமானம், உரை, உவமை, அருத்தாபத்தி, இன்மை என்பன. இவ்வளவைகளின் இலக்கணத்தைச் சிவஞான சித்தியாரால் நன்கறியலாம். (௩உ)

(ரு) ஆகம மலைவு

கஉரு. ஆகமம் என்பன மநுமுத லாகிய
அறனொடு புணர்ந்த திறனறி நூலே.

எ - ன், ஆகமம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: ஆகமம் என்று சொல்லப்படுவன, மநுமுதலாகப் பதினெண் வகையவாய் அறத்தொடு பொருந்திய திறத்தை அறிவிக்கும் நூல்களாம் எ - று.

அவற்றின் மலைவாவது, இந்நூல் இன்னது செய்தல் அற மென்று விதிக்கப்பட்ட விதியிற் பிறழ வருவது.

எ - டு: *'தெய்வம் விருந்தொக்கல் தென்புலத்தார் தாமென்னும்*
ஐவகையுந் தம்பொருள்கொண் டாற்றுவார்—மையிலா
முக்கோலும் கல்தோய் முழுமடியும் தாங்கியே
தக்கோர் எனப்படுவார் தாம்'

இ - ள்: குற்றமற்ற திரிதண்டமும், காவியில் தோய்த்த முழுவஸ்திரமும் தரித்துப் பெரியோர் எனப்பட்ட சந்நியாசிகள், தேவர், விருந்தினர், சுற்றத்தார், பிதிரர், தாங்கள் என்னும் ஐவகையாரையும், தாங்கள் சம்பாதித்த பொருளைக் கொண்டே காப்பாற்றுவார்கள் எ - று.

இதனுள், இல்வாழ்வார்க்குரிய தொழிலைத், துறவு புரிந் தோரோடு புணர்த்தமையின் **ஆகம மலைவு** ஆயிற்று.

(வி - ரை) பதினெட்டு வகையான அறநூல்களாவன:—மநு, அத்திரி, விஷ்ணு, வாசிட்டம், யமம், ஆபஸ்தம்பம், யாஜ்ஞவல்க்யம், பராசரம், ஆங்கீரசம், உசனம், காத்தியாயனம், சம்வர்த்தம், வியாசம், பிரகஸ்பதி, சங்கலிதம், சாதாதபம், கௌதமம், தக்கம் என்பன. (௩௩)

இடமலைவு முதலியவற்றிற்குச் சிறப்பு விதி

கஉ௪. கூறிய நெறியின் ஆறுவகை மலைவும்
நாடக வழக்கில் நாட்டுதற் குரிய.

எ - ன், இது மேற்கூறிய ஆறுவகை மலைவிற்கும் ஆவதோர் அமைதி கூறுகின்றது.

இ - ள்: மேற்கூறிய வழு ஒன்பதும், இவ்வகையால் புணர்ப் பின் ஆம் என்றமையான், அதுபோல இச்சொல்லப்பட்ட அறு வகை மலைவும் நாடகவழக்கில் சொல்லுதற்கு உரிய எ - று.

நாடக வழக்கும், உலகியல் வழக்கும், பாடல்சான்ற புல னெறி வழக்கும் என்னும் மூன்று வழக்கினுள், **நாடக வழக்காவது;** இல்பொருளாய்ப் புகழ்ச்சியிடத்துப் புனைந்துரையாகத் தோன்றுவது. எனவே, அவ்வாறு மலைவும் புகழ்ச்சியிடத்து நீக்கப்படாது அலங்காரமாகியே வரும் என்பதாம்.

(க) இட மலைவமைதி

எ - டு: *'மாகதச் சோதியுடன் மாணிக்கச் சோதி*
இருமருங்குஞ் சேர்ந்தரிவை பாகன் — உருவம்
அலைக்கும் அகில்சுமந்(து) ஆர்த்து வான்கீ(டு)
அலைத்து வரும்பொன்னி யாறு'

இ - ள்: அகிற்கட்டைகளைத் தாங்கிச், சிறந்த சந்தனக் கிளைகளையும் அலையினால் அசைத்துக்கொண்டுவரும் காவிரியாறானது, பச்சை யிரத்தினத்தின் சோதியுடனே, செம்மணியின் பிரகாசத்தையும் இரண்டு பக்கத்திலும் சேர்ந்து, அவ்விருநிறத்தையும் கொண்ட உமைபாகனாகிய சிவபெருமானுடைய வடிவத்தையும் குறைவுறச் செய்யும் எ - று.

இதனுள், காவிரியாறு தன்னுள் பிறமலைக்கும், பிற நாட்டிற்கும் உரிய மரகதமும், மாணிக்கமும், சந்தனமும் அலைத்து வருகின்றது என்றமையான், இடமலைவாய்ப் புகழ்ச்சி யிடத்துப் பொருந்துவதால் அலங்காரமாயிற்று.

(உ) கால மலைவமைதி

எ - டு: 'மண்டபத்து மாணிக்கச் சோதியான் வாவிவாய்ப்
புண்டரிக மாலைப் பொழுதலரும் - தண்டரளத்
தாமஞ் சொரியுந் தகைநிலவால் மெல்லாம்பற்
பூவலரும் காலைப் பொழுது'

இ - ள்: மண்டபத்திலுள்ள செம்மணியின் சூரியப்பிரகாசம் போன்ற சோதியினாலே, தடாகத்தினிடத்திலே தாமரையானது மாலைநேரத்திலும் மலரும்; சந்திரப்பிரகாசத்தை நிகர்த்த குளிர்ந்த முத்துமாலை பொழிகின்ற நற்றகுதி வாய்ந்த நிலவினாலே மெல்லிய ஆம்பல் மலரானது காலை நேரத்திலும் மலரும் எ - று.

இதனுள், காலை மலருங் கமலம் மாலை மலர்ந்ததாகவும், மாலை மலரும் ஆம்பல் காலைமலர்ந்ததாகவும் கூறினமையின் கால மலைவாய்ப் புனைந்துரையிடத்துப் பொருந்துவதால் அலங்காரமாயிற்று.

(ங) கலை மலைவமைதி

எ - டு: 'கூடம் விரவிக் குறைநிலத்தா னத்தியன்ற
பாட லமுதம் பருகினான் - ஆடுகின்ற
ஊசலயல் தோன்றி யொளியிழைக்கு நாணளித்த
ஆசில் வடிவே லவன்'

இ - ள்: ஆடுகின்ற ஊஞ்சலின் பக்கத்திலே தோன்றி, பிரகாசம் பொருந்திய ஆபரணங்களை யணிந்த பெண்ணிற்கு, நாணத்தைக் கொடுத்த குற்றமற்ற கூர்மை தங்கிய வேலாயுதத்தை யுடையவன், ஆறும் நரம்பாகிய பகை நரம்போடு கூடிக் குறைநிலத் தானத்தான் இயன்ற பாடலாகிய அமுதத்தைப் பருகினான் எ - று.

இதனுள், ஆறும் நரம்பாகிய பகையதனோடு கூடிக் [1] குறைநிலத் தானத்தான் இயன்றதனைப் 'பாடலமுதம்' என்றமையின், கலைமலைவாய்ப் புனைந்துரைத்தமையின் அலங்காரமாயிற்று.

---

1. குறைநிலத்தானம் - குறைபாடுடைய ஸ்வர விஸ்தார முறை.

(௪) உலக மலைவமைதி

எ - டு : 'கடல்நான்கும் வந்தலைக்குங் காலாளும்தேரும்
அடல் செய் (து) இருதுணியா யிற்றே - உடலொன்றி
அந்தரமே யேகுவன காண்மினோ யானியற்றும்
இந்திர சாலம் இது'

இ - ள் : நான்கு கடலையும் வந்தலைக்கின்ற காலாட்படையும் தேர்ப்படையும் போர் செய்து இருகூறுயின; அவை தேகத்தோடு சேர்ந்து ஆகாயத்தே செல்வதைப் பாருங்கள்; இது யான் செய்யும் இந்திரசாலம் எ - று.

இதனுள், உலகமலைவாய்ப் பொருள்வந்து, இந்திரசாலம் என்றதனுல் அலங்காரமாயிற்று.

(௫) நியாய மலைவமைதி

எ - டு : 'வானுகி மண்ணுய் மறிகடலாய் மாருதமாய்த்
தேனுகிப் பாலாந் திருமாலே! — ஆனுயா!
வெண்ணெய் விழுங்க நிறையுமோ மேலொருநாள்
மண்ணை யுமிழ்ந்த வயிறு'

இ - ள் : விண்ணுகி, மண்ணுகி அலைகளால் மடக்குகின்ற கடலாகிக், காற்றுகித், தேனுகிப், பாலுமாகும் இலக்குமியை மார்பில் தரித்த மாலே! பசுக்களைக்காத்த இடையனே! முன் ஒரு நாள் மண்ணை உமிழ்ந்த உன்னுடைய வயிருனது, இப்பொழுது வெண்ணெயை விழுங்குவதால் நிறைவுறுமோ? எ - று.

இதனுள், அனைத்துப் பொருளும் ஆனுய் என்றும், வெண்ணெயை விழுங்கினுய் என்றும், மண்ணை உமிழ்ந்தாய் என்றும் மாறுபடக் கூறினமையின், நியாயமலைவாய்ப் புனைந்துரையால் அலங்காரமாயிற்று.

(௬) ஆகம மலைவமைதி

எ - டு : 'காய்கதி ரோனுக்குக் கன்னனையீன் றுங்கன்னி
ஆகிப்பின் மூவரையும் ஈன்றளித்த - தோகை
தலைமைசேர் கற்பினுள் தாள்வணங்கும் முன்னுள்
மலையெடுத்துக் கார்காத்த மால்'

இ - ள் : வெப்பத்தைச் செய்கின்ற சூரியனுக்கு முன்னே கன்னனைப் பெற்றும் கன்னியாகிப் பின்னர், தருமர், வீமன், அருச்சுனன் ஆகிய மூவரையும் யமன், வாயு, இந்திரன் ஆகிய மூன்று தேவர்களுக்கும் பெற்ற மயில் போன்ற சாயலை யுடையவளும், முதன்மையான கற்பினையுடையவளும் ஆகிய குந்தியின் தாளை வணங்கினன், முன்னுளிலே கோவர்த்தனகிரியை எடுத்து மழையைத் தாங்கி ஆயரைக் காத்த திருமால் எ - று.

இதனுள், சூரியனுக்குக் கன்னனைப் பெற்றுப் பின்னரும் கன்னியாயினுள் என்றும், அதன்பின் மூவரையும் பெற்றுள் என்றும், இவள் கற்புடைமையால் திருமால் வணங்கினுன் என்றும் கூறினமையின், ஆகமவழுவாய் அவ்வாறு சொல்லுதல் தகுதியாதலின் அலங்காரமாயிற்று.

(௯௪)

புறனடை

கஉ௫. மெய்பெற விரித்த செய்யுள் திறனும்
எய்திய நெறியும் ஈரைங் குணனும்
ஐயெழு வகையின் அறிவுறும் அணியும்
அடியினும் சொல்லினும் எழுத்தினும் இயன்று
முடிய வந்த மூவகை மடக்கும்
கோமூத் திரிமுதல் குன்று மரபின்
ஏழுற மொழிந்தமிறைக் கவியீ ராறும்
இவ்வகை யியற்றுதல் குற்றம் இவ்வகை
எய்த வியம்புதல் இயல்பென மொழிந்த
ஐவகை முத்திறத்(து) ஆங்கவை யுளப்பட
மொழிந்த நெறியின் ஒழிந்தவும் கோடல்
ஆன்ற காட்சிச் சான்றோர் கடனே.

எ - ன், இந்நூல் உரைக்கப்பட்ட இலக்கணம் அனைத்தும் தொகுத்து, இவ்வாறன்றிப் பிறவாறு வருவன உளவெனினும் தழீஇக் கொள்க எனப் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: பொருள்பெற விரித்த முத்தகம், குளகம், தொகைநிலை, தொடர்நிலை எனக் கூறப்பட்ட **செய்யுள்மரபும்;** அச்செய்யுட்குக் கௌடம், வைதருப்பம் எனப்பொருந்திய **நெறியும்,** அவற்றொடு தொடர்ந்த செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி என்று கூறப்பட்ட **பத்துவகைக் குணமும்;** தன்மை முதல் பாவிகம் ஈறுகக்கிடந்த **முப்பத்தைந்து அலங்காரமும்;** அடியினும், சொல்லினும் கூடி முற்றுப்பெற வந்த **மூவகை மடக்கு அலங்காரமும்;** கோமூத்திரி முதலாகக் குறைபாடில்லாத இலக்கணத்தில் பிழைப்பின்றி வந்த **மிறைக்கவி பன்னிரண்டும்;** இவ்வாறு கூறுதல் வழுவென்றும், அவற்றையே இவ்வாறு கூறுதல் வழக்கென்றும் சொல்லப்பட்ட **பதினைந்து** [1]**கூறுபாடும்** உள்ளிட்டுக் கூறப்பட்ட இலக்கண நெறியின் ஒழிந்து வருவன உளவெனினும் தழீஇக்கோடல், அமைந்த அறிவுடையோராகிய மேலோரது கடனும் எ - று.

அஃதேல், மேற்கூறியவற்றையே ஈண்டும் கூறியது புனருத்தமாம் பிறவெனின், '**தொகுத்து முடித்தல்**' என்பது தந்திரவுத்தியாகலான் இவ்வாறு உரைக்கப்பட்டது என்க.

அஃதேல், 'எழுத்தின் கூட்டம் இடைபிறி தின்றியும்' (சொல்லணி - க) என எழுத்து மடக்கேயன்றே முன் சொன்னது; ஈண்டு 'அடியினும் சொல்லினும் எழுத்தினும் இயன்று' என்று முறைபிறழக் கூறியது என்னையோ? எனின், இதுவும் **தலை தடுமாற்றம்** என்னும் உத்திவகையான் உரைக்கப்பட்டது. அல்லதூஉம், அடிமடக்கு என்பனவும், சொல்மடக்கு என்பனவும், எழுத்தின் கூட்டம் என்பது அறிவித்தற்கும்; ஓரெழுத்தானும், ஓரினத்தானும் வருவனவும் அப்பாற்படும் என்றற்கும்; கோமூத்திரி முதலாகக் கூறப்பட்ட மிறைக்கவியை நோக்கி ஆராயுங்கால் பெரும்பான்மைய எழுத்தின் மடக்கின்பாற்

1. 'வேறுபாடும்' என்பதும் பாடம்.

படுமாயினும், இவை வெவ்வேறு சிறப்புப் பெயர் உடையவாய் உலகில் உண்டாகின்றன ஆதலால், சொல்லின் முடியும் இலக்கணத்தால் அவ்வாறு சொல்லப்பட்டது என்றற்கும் இவ்வாறு முறைபிறழச் சொல்லப்பட்டது எனினும் அமையும்.

சொல்லின் முடியும் இலக்கணம் ஆண்டு யாதோ? எனின், ஒப்பினுன் ஆகிய பெயரும், குணங்காரணமாகிய பெயரும் குறித்து • உரைக்கப்படுதலான் அப்பொருளே உணர்ந்து கொள்ளப்பட்டது.

அஃதேல், மாலைமாற்றும், சுழிகுளமும், கோமூத்திரியும், சருப்பதோபத்திரமும் என நான்குமேயன்றே ஆண்டு ஆசிரியனுல் வடநூலில் உரைக்கப்பட்டன. ஈண்டு உரைத்தனவாகிய ஒழிந்த மிறைக்கவிகள் மிகைபடக் கூறிற்றும் பிறவெனின், ஆகா; ஒழிந்தன, 'ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல்' என்னும் தந்திரவுத்தியால் உரைக்கப்பட்டன. அல்லதூஉம், இது வடநூலுக்கு வழிநூல் ஆதலால் தனது விகற்பம்பட உரைத்தான் எனினும் அமையும் என்னை?,

'முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பம் கூறி
அழியா மரபினது வழிநூ லாகும்' (நன்னூல் - எ)

என்றாராகலின் என்க. (௩௫)

சொல்லணியியல் முற்றிற்று.

தண்டியலங்காரம் மூலமும் பழைய உரையும் நிறைவுற்றது.

நூற்பா முதற்குறிப்பு அகரவரிசை
எண் : நூற்பா எண்

அடிமுழுதும் ௯௫
அதுதான், ஓரடி ௯௨
அதுதான், பொருள் குணம் ௫௪
அதுவே, அடையும் பொருளு ௫௨
,, குணம் பொருள் ௪௯
,, செம்மொழி ௭௬
,, பொருள் குணஞ் ௨௯
,, பொருள் குணங் ௪௩
,, மாலை விருத்தம் ௪௦
,, விரியே தொகை ௩௧
அபாவந் தானு ௬௦
அவற்றுள், பிரிபொருட் ௧௦௦
,, பெருங்காப் ௮
,, முத்தகச் ௩
அவைதாம், ஒருதிறப் ௧௧
,, வீரம் அச்சம் ௬௯
அவையல பிறவி ௫௯
அறமுதல் நான்கினும் ௧௦
அற்புதஞ் சிலேடை ௩௨
அன்ன போலெனு ௫௬
ஆகமம் என்பன ௧௨௩
ஆதி இடை கடை ௯௩
ஆரிடத் துள்ளும் ௧௧௫
ஆர்வ மொழி ௬௭
இடம் எனப்படுபவை ௧௧௮
இரண்டாம் ௧௧௭
இன்னார்க்கு இன்னது ௮௭
உண்ணிகழ் தன்மை ௬௮
உதார மென்ப ௨௧
உய்த்துணர வரும் ௧௦௯
உரிய பொருளின்றி ௨௫
உருவகம் உவமை ௩௮
உலகறி காரணம் ௫௦
உலகெனப் படுவ ௧௨௧
உலகொழுக் கிறவா ௨௩
உவமையும் பொருளும் ௩௫
உவமை ஏது ௩௭
எவ்வகைப் பொருளும் ௨௮
எழுத்தின் கூட்டம் ௯௧
என்றும் அபாவமும் ௬௧
ஏற்ற செய்யுட்கு ௨௬
ஒப்புமை யில்லதும் ௮௯
ஒருவிரல் முன்வைத்து ௧௦௮
ஒருபொருள் துணிய ௧௦௬
ஒருவகைச் சொற் ௭௫
ஒருவகை நிகழ்வதற்கு ௮௪
ஒருவினை பலவினை ௭௭
ஒழுகிசை என்பது ௨௦
ஓரடி யொழிந்தன ௯௪
ஓரெழுத்து மடக்கலும் ௯௬
கருதிய குணத்தின் ௭௯
கருதியது கிளவாது ௭௧
கருதிய பொருளைத் ௨௨
கருதிய பொருள்.....அது ௫௧
கருதிய பொருள்....ஆங்கது ௮௨
கலையெனப் படுபவை ௧௨௦
களியினும் பித்தினும் ௧௦௧
காமமும் அச்சமும் ௧௦௩
காலம் பொழுதொடு ௧௧௯
குணந் தொழில் சாதி ௩௯
குணந் தொழில் முதலிய ௭௮
குளகம் பலபாட்டு ௪
குறிப்பு வெளிப்படுக்கும் ௬௪
கூறிய நெறியின் ௧௨௪
கூறிய உறுப்பிற் ௯
கூற்றினுங் குறிப்பினும் ௪௮
கோமூத்திரியே ௯௭
கௌட மென்பது ௧௫
சந்தி வழுவே ௧௧௬
சிறப்பினும் ௭௪
செய்யுள் அந்தாதி ௧௨
செய்யுள் என்பவை ௨
செய்யுள் வழுவே ௧௧௪
செறிவெனப் படுவது ௧௬
செறிவே தெளிவே ௧௪
சொல்லினும் பொருளினும் ௧௯
சொல்லின் கிழத்தி ௧
சொல்வழு என்பது ௧௧௦
தன்மை யுவமை ௨௭
தான்தற் புகழ்வது ௭௦
தூர காரியமும் ௬௨
தெரிபுவேறு ௬௩
தெளிவெனப் படுவது ௧௫
தொகைநிலைச் செய்யுள் ௫
தொகையே விரியே ௩௬
நியாயம் என்பது ௧௨௨

நிரல்நிறுத் தியற்றுதல்	௬௬	முன்னத்தின் மறுப்பின்	௪௨
பண்புந் தொழிலும்	௫0	முன்னென்று தொடங்கி	௪௬
பழிப்பது போலும்	௮௫	மெய்பெற விரித்த	௧௨௫
பாவிகம் என்பது	௯0	மெய்பெறு மாபின்	௧௫
பிரிபொருட் சொற்	௯௮	மேற்கோள் ஏது	௯௯
புகழினும் பழிப்பினும்	௮0	மொழிந்தது மொழிவே	௧0௪
புகழ்வது போலப்	௬௫	மொழியப் பட்ட	௮௮
பெயர்பொருள்	௫௫	யதிவழு என்பது	௧௧௨
பெருங்காப்பியமே	௭	யாதன் திறத்தினும்	௫௭
பொருளினுஞ் சொல்லினு	௬	வகையுளி யுரைப்புழி	௧௧௫
பொருள் பரிமாறுதல்	௮௬	வலியெனப் படுவது	௨௪
போல மானப்	௫௪	வழக்காறியின்	௧௧௧
மணப்படும் ஒருபொருள்	௫௫	வழூஉப்படல் இல்வழி	௧0௭
மாறுபடு சொற்பொருள்	௮௧	வன்சொல் வாழ்த்து	௪௪
மாறுபடு பொருண்மொழி	௧0௨	வியத்தகு செல்வமும்	௭௫
மிகுதலும் குறைதலும்	௫௫	விரவத் தொடுப்பது	௧௮
முதல்வனும் பொருளும்	௫௮	விரைவினும் சிறப்பினும்	௧0௫
முந்துதான் முயல்வுறாஉந்	௭௨	வினைபண் பெனவிவை	௮௫
முழுவதுஞ் சேறல்	௪௭	வேற்றுப் பொருள்	௪௫
முன்வருஞ் சொல்லும்	௪௧		

செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை

எண் : பக்கஎண்

அகர முதல	௨௧௪	அளபொன் றேறிய	௨௨௫
அகல்லுற் றேரே	௨௧௪	அளவே வடிவொப்ப	௪௨
அகலிரு விசும்பிற்	௨௮	அனைத்துலகுஞ் சூழ்	௧0௭
அங்கண்மா ஞாலத்	௨௬	அனைய காவலர்	௧௯௨
அலங்கமி லாதவ	௨௫௧	அன்னைபோ லினியாய்	௨௨௫
அங்கை மலரும்	௬௨	அன்னைபோல் எவ்	௪௫
அடிநோக்கின் ஆழ்	௭௬	ஆக்கம் புகழ்பெற்ற	௨௨
அடையார் அடையார்	௧௭௯	ஆசை பெரிதுடை	௯௫
அப்போ தடுப்ப	௯௭	ஆடல் மயிலியலி	௧௫௬
அமல வகல	௨0௨	ஆடவர்கள் எவ்வாறு	௧௫௭
அம்பிகா பதியே	௨௨௫	ஆதரந்தீர்	௨௨௫
அம்பொற் பணைமுகத்	௧௫0	ஆதரந் தீரன்னை	௨௨௪
அம்போ ருகஞ்	௧00	ஆதரந் துயர்தர	௨௫௭
அரிமா வன்ன	௫௬	ஆய பொருள்கள்	௨௪௫
அருவியங் குன்றம்	௧௪௪	ஆர வடமும்	௧0௪
அருளின் றிருவுருவே	௨௧௧	ஆளும் பரியும்	௧௨௧
அலைகடல்கள் ஏழுந்	௨௪௨	இகன்மதமால் யானை	௧௫௫
அவிழ்ந்த துணி	௨௫	இடர்திறத் தைத்	௧௮
அவிழ்க்தன தோன்றி	௮௮	இமையவர்கண்	௨௨
,,	௨௫௧	இரவறியா யாவரை	௧௬௧
அவ்வான், இலங்கு	௫௬	இரவி துணைத்தாள்	௨௫௮

இவ்வளவுந் தீயுமிழ் கஎஅ
இறையோன் சடை சரு
இறைவா இறைவால் கஅஉ
இனமான் இகல கருO
இன்றுமையாள் உசா
,, ,,
இன்னுயிர் காத்தளிப் கூசா
ஈர்ந்து நிலந்தோயும் எஅ
ஈட்டைதலையும் கசO
உண்ணிலவு நீர்மைத் ககஎ
உண்ணீர்மை தாங்கி ருகூ
உண்ணெகிழ்ந்த எஉ
உமாதரா னுமாதரா ககூஎ
உள்ளங் குளிர ருரு
உள்ளம் புகுந்தே கஉக
ஊசல் தொழில் கூஅ
எஞ்சினை றில்லை கசரு
எடுக்குஞ் சிலைநின் அஉ
எடுத்த நிரை அஉ
எண்ணும் பயன் கOஉ
எல்லாக் கமலத் சகூ
எல்லைநீர் வையகத் கஉரு
எற்றே கொடிமுல்லை கOரு
என்பூ ருருக உருஅ
என்னேய் சிலமடவார் உ
என்னை யுடையான் ருக
என்னே டிகல் உருO
எங்கா முகில் கருசா
எந்திய வெண் உகO
ஏரி யிரண்டும் எச
ஏறடர்த்து வில் ககஉ
ஐந்தாம் நரம்பாம் உசக
ஐயோ வகலல்குல் உரு
ஒருபே ருணர்வுட உரு
ஒருவர் ஒருவர்மேல் உருஉ
ஓங்க விடைவந்து ககO
ஓத நின்றுல உOO
ஓவத் தன்ன் சசா
கடலும் மலையும் கஎO
கடல்நான்கும் உசசா
கடன்மேவு ககூரு
கடிய வாயின ககூசா
கடுங்கை வயலுழ உஅ
கடைகொல் கககூ
கடையாமே ககச
கண்டகம் பற்றிக் உருஎ
கண்ணும் மனமும் கூக
கயல்போலு மென் சகூ
கயலேர் தாவரும் உOக
காடத்தான் கஉஎ
காமருவு பொற் அஉ
காவொடு நின்றார் கருO
கருங்கால் வேங்கை எஎ
கருமாலை தொறு ககூச
கருவார் கச்சித் உகச
கலைநி லாவரு உOO
கல்லுயர் தோட் கருரு
கவிமுதி யார் உகஅ
கழல் சேர்ந்த கசக
கழிந்தது இளமை கருO
களிக்குங் கயல் சக
களிறே, சுறவினத் ருசா
களிற்றிரை ருசா
களைகளைய கஅஅ
கனிகொள் பொழி கஉசா
கனிவா யிவள் கஎஎ
கன்றும் வயவேந்தர் கசரு
கன்னிதன் கொங்கை கூஎ
கன்னி யெயில் உஅ
காக்கைக்கா கா உOரு
காதலர் வாரார் உசக
காதலனைத் தாவென் கூஎ
காதலன் மெல்லியி கருச
காதலன்மேல் கஉஎ
காந்தள், அணிமலர் ருஎ
காமரம்பயி ககூரு
கார்மருதேர் கஉச
காமர் உருவந் உஉகூ
காமனை வென்றேன் ககூஎ
காய்கதி ரோனுக்குக் உசசா
காரணமின்றி ககரு
காரார் கொடிமுல்லை கஉகூ
காரிகை மென்மொழி கருஎ
கார்குலமும் கOஅ
காலையும் மாலையும் கருக
கான யானை ருஎ

கான வாரண	௨௨௩
கானற் கயலாம்	௮௭
கானிமிர்த்தாற்	௨௬
குடபால் வடபால்	௨௩௪
குமரி ஞாழல்	௨௮
குரவார் குழலாள்	௧௮௧
குழை பொருது	௫௭
குழையருகு தாழ்க	௫௨
கூடம் விரவிக்	௨௪௫
கைகாந்தள்	௬௬
கைத்தளிராற்	௬௮
கை நெரித்து	௧௩௯
கைபிசையா	௧௪௧
கொங்கை முகை	௬௩
கொடியார் கொடி	௧௮௨
கொண்டல் கொண்ட	௧௮௫
கொண்டல் மிசை	௨௨௯
கொல்லியம் பொருப்	௧௯௪
கொள்பொருள்	௧௫௯
கோடா ராவிப்	௧௯௮
கோட்டம் திருப்	௧௫௬
கோவலர் வாய்	௧0௫
கோவ ளர்ப்பன	௧௯௬
கௌவை விரிதிரை	௪௪
சங்கந்தா	௨௨௫
சந்தனத்திற்	௫௧
சரியும் புனைசங்கும்	௮0
சலமேதோ	௨௨௬
சிலைவிலங்கு	௧௫
சிறைபடுவ	௧௫௩
சீத மதியின்	௪௮
சீலத்தால்	௨௨0
சுற்றுவிற் காமனும்	௧௧0
சூழ்ந்து முரன்	௩௪
செங்கமல நாட்டஞ்	௮௯
செங்கமலம் வாய்	௨௪0
செங்காங்க ளாணிரவு	௧௪௮
செங்கலசக்	௨௭
செந்திருவுந்	௫௩
செம்மை மறை	௫௫
செருமானவேற்	௨௩
செல்கை திருவுள	௯௬
செல்லு நெறி	௯௪
செவ்வாய்த் தளிரும்	௬௪
செவ்வாய் நகை	௬௫
செவ்வான் அன்ன	௩௬
செருநர்த் தேய்த்த	௩௬
சென்று செவி	௧0௭
சேந்தன வேந்தன்	௮0
சேர்ந்த புறவின்	௧௩௯
சேற்றுவளர்	௧௭௧
சொல்ல மொழி	௧௩௮
சொன்ன நாளிது	௧௯0
சோக மெவன்கொல்	௧௭
சோதி யிரவி	௧௫௪
சோலை பயிலுங்	௧௬0
தண்கவிகையா	௯௯
தண்டுறைநீர்	௧௬௮
தண்ணளிசேர்க்	௧௧௮
தண்பொருநைச்	௨௪0
தண்மதிக்குத்	௬௬
தண்மலர் வில்லி	௨௧௬
தத்தித்தா தூதுதி	௨0௪
தம்புரவு பூண்	௧௩௨
தம்மாற் பயன்	௧௧௨
தலையிழந்தான்	௧0௫
தவிரா மதுவுண்	௧௫௧
தளிபெற்று	௪௧
தள்ளா விடத்	௧௪௯
தாதளவி வண்டு	௪௫
தாதொன்று	௪௪
தாமரை நாண்	௪௫
தாமரை யன்று	௪௩
தாமரை வாண்	௪0
தாயாயா ளாராயா	௨0௩
தாயேயா	௨௧௩
திங்கள் சொரி	௧௨௨
திங்கள் நுதல்	௧௪௧
திருமருவு தண்	௫௧
திருமுகம் போல்	௪௬
தீயின்றி வேந்	௧௧௩
துடித்துத் தடித்துத்	௨0௬
துறவுளவாச்	௮௩
துறைவா துறைவா	௧௭௭
துனைவருநீர்	௧௯
தெம்முனை யிடத்திற்	௩௬

தெய்வம் விருந்	௨௪௪
தெரிவருங் காதலிற்	௨௨௬
தெற்குக் குடக்கு	௨௩௩
தென்மலையின்	௨௫௯
தென்றல் அனங்	௮[illegible]
தேங்கானல்	௧௭௮
தேனக் கலர்	௬௪
தொல்லை மறை	௧௫௭
தோடு கொண்டளி	௧௮௯
நலத்தகை பெற	௧௯௫
நல்லார்கண்	௭௬
நல்வினை நாற்கால்	௨௧௫
நளிதடத்த	௫௪
நறவேந்து	௧௪௭
நறைகமழ்தார்	௧௪௬
நன்றுதீ தென்று	௪௭
நாட்டந் தடுமாறச்	௬௦
நாண்போலும்	௧௪௨
நாநா நாதங்	௨௦௨
நிரையா நிரையா	௧௮௬
நிலனும் விசும்பாம்	௧௪௬
நிழற்கோப மல்க	௫௦
நினையா நினையா	௧௭௯
நினைவரிய	௧௬௨
நின்னுழையே	௫௪
நீத்தொழிந்த	௨௧௫
நீலப் புருவங்	௫௯
நீல மணிமிடற்றன்	௫௫
நீவாத மாதவா	௨௦௯
நுமது புனலி	௨௦௬
நேரிழையார்	௨௨௨
பணிப வநத்தன	௧௯௮
பண்டு புரமெரித்த	௧௨௦
பதுமங் களிக்கும்	௧௦௯
பத்தித் தகட்ட	௫௪
பாவி நாடொறும்	௧௮௯
பாற்பகை யுழந்த	௧௭௦
பருவ மாகவிதோ	௨௦௮
பவளத் தன்ன	௫௬
பவளம் போலுஞ்	௧௭௧
பாடல் பயிலும்	௧௫௪
பாயாத வேங்கை	௧௧௫
பாரி பாரி	௭௯
பாலன் தனது	௯௦
பாலினிடை	௫௫
பாலையாழ்	௧௮௫.
பால்போலும்	௪௦
பிறர்க்கின்னா	௧௭
பிறர் செல்வம்	௧௬௪
பிறனில் விழைவோர்	௧௭௫
புகைத்தகைச்	௨௦௮
புயலே, புறம்	௨௩௨
புருவச் சிலை	௬௯
புலிநா வன்ன	௧௭௧
புறத்தன வூரன	௮௫
புறந்தந் திருளிரியப்	௧௦௨
புனனுடர் கோமா	௧௧௧
பூங்காவிற்	௧௬௬
பூட்டாதவிற்	௧௧௪
பூணாரத்த	௨௨௫
பூண்தாங்கு	௧௫௮
பூதலத்துள்	௧௦௦
பூமகள் யார்	௨௧௨
பூவாளை நாறுநீ	௨௦௯
பெரியோ ருழையும்	௧௬௫
பெரும்பெயர்க்கரிகால்	௫௬
பொங்களக மல்ல	௭௧
பொங்கிச் செறிந்து	௧௨௨
பொய்ம்மை நெறி	௯௪
பொய்ம்மையுடன்	௧௨௯
பொய்யாமை பொய்	௧௭
பொய்யுரையா	௧[illegible]
பொற்புடைய	௨௨௧
பொற்றாணில்	௨௨௦
பொற்றொடிப் புதல்வர்	௨௦
பொன்னி வள	௧௫௨
போதுங் தளிரும்	௧௬௧
போர்வேலின்	௧௬௨
மண்டபத்து	௨௪௫
மண்ணகன்று	௧௪௫
மண்படுதோட்	௧௨௫
மதாரிக் கூண்	௯௨
மதந விராகா	௨௧௮
மதுப்பொழிதார்	௧௫௫
மதுமகிழ்ந்த	௭௦
மயில்போல்	௧௭௨
மரகதச்சோதி	௨௪௪
மருவினவ ருளத்தே	௨௧௧

மலயத்து	௫௨	மின்னே பொழிலின்	௯௯
மலர்மலி	௨௧௭	முத்தரும்பிச்	௧௪௦
மலர்வாவி	௫௦	முத்துக் கூர்த்தன்ன	௪௮
மலிதேரான்	௧௦௮	முத்துக்கோத் தன்ன	௭௭
மலையிற் பயிலா	௭௪	முருகவேள்	௮௧
மலையின் அலைகட	௧௨௬	முல்லைக் கொடி	௯௦
மலையு மலையு	௧௮௫	முன்னங் குடை	௮௭
மல்லணிந்த	௯௬	முன்னைத்தஞ்சிற்றில்	௧௯
மழலை வாய்	௭௫	மூவாத் தமிழ்	௧௬௮
மழையார்	௧௮௧	மூன்றெழுத்தும்	௨௨௪
மறுப்பயின்ற	௪௪	மெய்யே பொருள்	௯௫
மறைநுவல்	௧௯௪	மேய கலவி	௧௫௬
மனமேங் குழைய	௧௮௪	மேய நிரைபுரந்து	௧௫௭
மனுப்புவிமேல்	௧௪௭	மேருசாபமு	௨௧௫
மனைக்கு விளக்கம்	௮௫	மேவிவாழ்வார்	௨௩௬
மன்றற் குழலார்	௭௬	யாண்டு மொழி	௧௨௮
மன்னவர்க்கு	௬௦	யாவகைய தாயர்க்	௨௫௪
மன்னவர் சேயா	௯௫	யாவர் அறிவார்	௨௩௫
மன்னுமான்	௨௦௪	யாழியல் வாய	௨௦௭
மாடு பயிலும்	௨௫௫	யானக வென்னே	௨௦௫
மாதருயிர்	௧௮௦	யானை இரதம்	௧௫௮
மாதர் உமை	௧௫௫	வண்ணங் கருக	௯௮
மாதர் துவரிதழ்	௯௨	வண்புயலைக்	௨௨௧
மாதர் நுழைமருங்	௯௧	வரிய வாங்குழல்	௧௩௬
மாதவா போதி	௨௧௬	வரிவண்டு நாணு	௮௫
மாரியன்ன	௫௬	வருகம் புளினம்	௧௮௭
மாலை நிலவொ	௧௨௧	வருமறை பலமுறை	௧௯௧
மாலை மருவி	௧௫௨	வரைய வரைய	௧௮௫
மாலை யருளாது	௧௮௫	வல்லி வதன	௭௧
மாலை யாகவெய்	௨௦௦	வாமான மான	௧௯௦
மால்கரிகாத்	௮௮	வாயாயா நீகாவா	௨௦௯
,,	௨௩௧	வாய்த்த பொருள்	௯௭
மாவா நீதா	௨௧௯	வார்புருவங்	௬௯
மாற்றத்தால்	௭௦	வாளரவின்	௫௮
மானமருங் கண்ணு	௮௫	வான கந்தரு	௧௯௭
மானமே நண்ணு	௨௦௬	வானவர்கள்	௨௩௩
மானவா மானவா	௧௮௦	வானுகி மண்ணுய்	௨௪௬
மானேர்	௨௦	விச்சா தரனேனும்	௧௫௫
மான்மருவி	௮௬	விண்ணின்மேற்	௫௬
மான்விழி	௪௬	வியன்ஞாலஞ்	௮௬
மான்றேற்பள்ளி	௫௪	விரவலராய்	௧௬
மின்னார் மணிப்	௨௩௦	விரிகடல்சூழ்	௬௫
மின்னவான்	௨௦௫	விரிந்த மதிநிலவின்	௧௫௧
மின்னிகரா	௧௪௫	விரைமேவு	௧௯௫

விலங்கொடு	௧௭௧	வேண்டுருவங்	௧௯௯
வில்லேர் உழவர்	௭௫	வேய்புரை	௫௯
விழித்த குவளைக்	௨௮	வேலுங் கருவிளையு	௪௭
விழியே களிவண்டு	௯௮	வேறொரு மாதர்	௧௫௧
வினைபொருள்மேல்	௯௫	வேனில் வெயிற்	௧௨௫
வெங்கதிர்க்குஞ்	௧௧௧	வைகலும் வைகல்	௮௯
வெண்ணீர்மை	௧௫௨		௨௫௧
வெய்ய குரல்	௧0௨	வையங் களியா	௯௪
வெறிகொள் இனச்	௧௧௭	வையம் புரக்குமால்	௭௧

வினாக்கள்

பொதுவணியியல்

1. அணியிலக்கணம் உணர்த்தும் ஓத்தில் செய்யுள் இலக்கணம் கூறுதல் பொருந்துமா? ஆராய்க.
2. செய்யுள் எத்தனை வகைப்படும்? அவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.
3. தொகைநிலைச்செய்யுளின் இலக்கணத்தை விளக்கி எழுதுக. (1962)
4. பெருங்காப்பியத்தின் இலக்கணம் யாது? (1957, 61, 67)
5. பெருங்காப்பிய இலக்கணத்துள் பேசப்படும், நாற்பொருள் பயக்கு நடை, சந்தி, சுவை, பாவம் என்பனவற்றை விளக்கிக் காட்டுக. (1965)
6. செய்யுள் நெறிகளுள் வைதருப்பம் என்பதற்கு இலக்கணம் கூறுக (1966)
7. கௌட நெறி என்பது என்ன? அதினின்றும் வேறுபடுவது எது? எவ்வெவ்வாறு வேறுபடும்? (1959)
8. ஆய்ந்த ஈரைங் குணனும் உயிரா வாய்ந்த செய்யுள் நெறியாது? அக்குணங்கள் யாவை? (1967)
9. சமநிலை, காந்தம், வலி — இவற்றிலே வைதருப்பரும் கௌடரும் கொண்டுள்ள கொள்கைகளை விளக்குக. ஒன்றற்கு உதாரணம் எழுதுக. (1963)
10. சமநிலை, ஒழுகிசை, உதாரம் சமாதி - இவ்வணிகளை விளக்குக.
11. செய்யுளுக்குரிய குணவணிகள் யாவை? அவற்றுள் ஏதேனும் ஒன்றுக்கு உதாரணம் தருக. (1961)
12. குணவலங்காரம் என்று எவற்றைக் கூறுப? இவற்றுள் வைதருப்பருக்கும் கௌடருக்கும் உரிய ஒத்த அணிகள் யாவை?

பொருளணியியல்

13. பொருளணியியல் என்னும் பெயர்க் காரணத்தை ஆராய்க.
14. தன்மையணியின் இலக்கணம் யாது? அதன் வகையைக் குறிப்பிட்டு ஒன்றிற்கு உதாரணமும் தருக.
15. பண்பி, பண்பு, தொழில், பயன் என்பனவற்றின் தன்மையை விளக்குக.
16. இதரவிதரவுவமை, அபியமவுமமை, மோகவுமை - இவற்றிற்கு இலக்கணமும் உதாரணமும் தருக. (1965)
17. விகாரவுவமை, விபரீதவுவமை, மோகவுமை, அபூதவுவமை - இவற்றை விளக்குக. (1959)

18. விபரீதவுவமை, ஆபூதவுவமை - இவற்றின் இலக்கணத்தை எழுதுக (1961)
19. பொதுநீங்குவமை, ஐயவுவமை, உவம உருவகம் - விளக்குக. ஒன்றற்கு உதாரணம் எழுதும். இவற்றை உவமை என்றது பொருந்துமா? ஆராய்க. (1963)
20. சந்தான உவமை, ஒருவயிற்போலியுவமை - இவற்றை உதாரணம் காட்டி விளக்குக. (1966)
21. சமுச்சயவுவமை × நியமவுவமை; அவநுதி × விபாவனை - இவற்றிடையே உள்ள வேறுபாட்டைப் புலப்படுத்துக. (1957)
22. சமுச்சயவுவமை, தெரிதருதேற்றவுவமை, இயம்புதல் வேட்கையுவமை, இன்சொல் உவமை - இவற்றை விளக்குக.
23. 'மன்னவர்க்கு நாய்போல் வனப்புடையர் வாள்வயவர்
மின்மினியும் வெஞ்சுடரோன் போல்விளங்கும் - அன்னப்
பெடைபோலும் சந்திரன் பைந்தடங்கள் போலும்
மிடைமாசொன் றில்லா விசும்பு' - இதனில் நேர்ந்துள்ள குற்றங்கள் யாவை? (1966)
24. முற்றுருவகம் யாது? உதாரணம் தருக. (1961)
25. உவமை உருவகம், உருவக உருவகம் - இவ்விரண்டினையும் விளக்கி உதாரணங்களும் தருக. (1967)
26. அவநுதி யுருவகம், தெரிதருதேற்றவுவமை - இவற்றிற்கு இலக்கணமும் உதாரணமும் தருக. (1966)
27. சிறப்புருவகம், சமாதான வுருவகம் - இவற்றை விளக்குக.
28. தீவக அணிக்கு இலக்கணங் கூறி, அது நடக்கும் முறைகளையும் சுட்டுக. (1965)
29. தீவகத்தின் வகைகளாகக் கூறப்படுவன யாவை? (1959)
30. 'எடுக்குஞ் சிலையின் றெதிர்ந்தவரும் கேளும்
வடுக்கொண் டூர்ந்தணிய வாளி - தொடுக்கும்
கொடையும் திருவருளும் கோடாத செங்கோல்
நடையும் பெரும்புலவர் நா' - இதனில் அமைந்துள்ள அணி யாதென்று காரணங்காட்டி நிறுவுக. (1966)
31. பின்வருநிலையணியும் நிரனிறையணியும் சொல்லணிகளாகாமல் பொருளணிகளாயினவாறு எங்ஙனம்? (1959)
32. முன்னவிலக்கென்பது யாது? ஒருதாரணங் காட்டி விளக்குக. (1967)
33. காரண விலக்கு, காரிய விலக்கு - இரண்டிற்குமுள்ள வேறுபாட்டினைப் புலப்படுத்துக.
34. 'செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை'
'நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற' - இவை விலக்கணியில் எவ்வகையுள் அடங்கும்? விளக்குக.
35. வேற்றுப்பொருள் வைப்பணி என்பதற்கு இலக்கணம் யாது? இதன் வகைகள் யாவை? ஏதேனும் ஒன்றற்கு உதாரணம் தருக. (1966)
36. வேற்றுப்பொருள்வைப்பணியை ஓர் உதாரணங்கொண்டு விளக்குக. இதன் வகைகள் எவை? (1963)

37. ‘புறந்தந் திருளிரியப் பொன்னேமி யுய்த்துச்
சிறந்த வொளிவளர்க்கும் தேரோன் - மன்றத்தான்
புறவாழி சூழ்ந்த புவனத்தே தோன்றி
இறவாது வாழ்கின்றார் யார்’ -இதன் கண் அமைந்துள்ளது இன்ன அணி என்பதை விளக்குக. (1961, 65)

38. உவமையணி, உருவக வணி, தீவகவணி, முன்னவிலக்கு, வேற்றுமையணி -இவ்வணிகள் எவ்வெவ்வணிகளோடு கூடிவரும், வகைக்கு ஓர் எடுத்துக் காட்டு தந்து விளக்குக.

39. ஒட்டணியின் இலக்கணமும் அதன் வகைகளும் கூறி, அவற்றுள் ஒன்றற்கு இலக்கியம் காட்டுக. (1962)

40. ஒட்டணி என்பது யாது? அதன் வேறு பெயர்கள் யாவை? அதன் வகைகளையும் கூறுக. (1967)

41. ‘வெறிகொள் இனச்சுரும்பு மேய்ந்ததோர் காவிக்
குறைபடுதேன் வேட்டும் குறுகும் - நிறைமதுச்சேர்ந்
துண்டாடும் தன்முகத்தே செவ்வி யுடையதோர்
வண்டா மரைபிரிந்த வண்டு’ - இதன்கண் ஒட்டணி அமைந்துள்ள வாற்றை விளக்குக. (1961)

42. அதிசய அணிகளின் வகைகளைக்கூறி ஒன்றற்கு உதாரணம் தருக.(1961)

43. ‘மாலை நிலவொளிப்ப மாத ரிழைபுனைந்த
நீல மணிகள் நிழலுமிழ - மேல்விரும்பிச்
செல்லு மிவள்குறித்த செல்வன்பாற் சேர்தற்கு
வல்லிருளா கின்ற மறுகு’ - அணி புலப்படுத்துக. (1957)

44. தற்குறிப்பேற்ற வணியின் இலக்கணம் யாது? அதற்குரிய வேறு பெயர் என்ன?

45. ‘இயல்பின் விளைதிற னன்றி அயலொன்று, தான் குறித்தேற்றுதல்’— இஃது எந்த அணியின்பாற்படும்? உதாரணமுந் தருக. (1967)

46. ‘அபாவந் தானும் அதன்பாற் படுமே’ — எதன்பாற்படும்? இதன் வகைகளை எழுதி விளக்குக.

47. சித்திரவேது என்றால் என்ன? இதன்கண் அடங்கியுள்ள அணிகளை எழுதி விளக்குக.

48. அடியிற் குறிக்கப்படுவன எவற்றிற்கு இலக்கியமாய் எடுத்தாளப் பட்டுள்ளன? இலக்கணமும் விளக்கமும் எழுதுக. (1962)

(அ) ‘தாமரை யன்று முகமேயீ தீங்கிவையும்
காமருவண் டல்ல கருநெடுங் கண்’

(ஆ) ‘மதுமகிழ்ந்த மாதர் வதன மதியம்
உதய மதியமே யொக்கும்’

(இ) ‘பூட்டாத விற்குனித்துப் பொங்கு முகிலெங்கும்
தீட்டாத வம்பு சிதறுமால்’ (1963)

(ஈ) ‘வேறொரு மாதர்மேல் வேந்தன் நகநுதியால்
ஊறுதர இம்மா துயிர்வாடும்’

49. குறிப்பு நுட்பம், தொழில் நுட்பம் — இவற்றிற்கு வேறுபாடு தருக.
50. இலேச அணி, நுட்பவணி — இவற்றை விளக்குக. (1961)
51. நுட்பவணிக்கும் இலேசவணிக்கும் உள்ள வேற்றுமை யாது? உதாரணத்துடன் நிறுவுக. (1966)
52. புகழ்தலும் பழித்தலும் எவ்வெவ்விடத்து அணிகளாகின்றன? விளக்குக. (1957)
53. எண்வகை மெய்ப்பாடுகள் எவை? இவற்றுள் இயலும் அணி எது? ஒன்றற்கு எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.
54. இலேசவணிக்கும் சுவையணிக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை உதாரணத்துடன் விளக்குக. (1965)
55. பரியாய அணியை உதாரணங் கொண்டு தெளிவுறுத்துக. (1961)
56. பரியாய அணி, ஒட்டணி — இவற்றிடையே வேறுபாடு புலப்படுத்துக. (1959)
57. வீறுகோளணி, மயக்கவணி, பிறிதுமொழிதலணி - இவ்வணிகளைத் தண்டியாசிரியர் எவ்வெப் பெயரால் கூறுவர்?
58. 'நறவேந்து கோதை நலங்கவர்ந்து நல்கா, மறவேந்தன் வஞ்சியானல்லன்' - இன்ன அணி என விளக்குக. (1959)
59. 'தள்ளா விடத்தேர் தடந்தா மரையடைய
எள்ளா வரிமா னிடர்மிகுப்ப - உள்வாழ்தேம்
சிந்துந் தகைமைத்தே எங்கோன் றிருவுள்ளம்
நந்துந் தொழில்புரிந்தார் நாடு' - இதனில் அமைந்த அணி யாது? பொருள்கூறிப் புலப்படுத்துக. (1967)
60. நியமவிலக்குச் சிலேடை, குணக்குறை விசேடம், சருப்பதோ பத்திரம் - இவை எவ்வெவ்வாறு வருவன? (1959)
61. மடக்கு, சிலேடை, விபாவனை - இவற்றை உதாரணங் காட்டி விளக்குக. (1965)
62. கீழ் வருவன எவற்றுக்கு உதாரணம்? எப்படி? (1963)
(அ) 'சிறைபடுவ புட்குலமே தீம்புனலும் அன்ன'
(ஆ) 'இரவறியா யாவரையும் பின்செல்லா நல்ல
தருநிழலும் தண்ணீரும் புல்லும் - ஒருவர்
படைத்தனவும் கொள்ளாஇப் புள்ளிமான் பார்மேல்
துடைத்தனவே யன்றே துயர்'
(இ) 'கனிவாய் இவள்புலம்பக் காவலநீ நீங்கில்
இனியார் இனியார் எமக்கு'
63. விலக்கணி, விசேடவணி - இவற்றை விளக்குக. வகைகளையும் தெரிவிக்க. (1957)
64. 'புகழினும் பழிப்பினும் புலப்படும் அதுவே' - எது? எடுத்துக் காட்டுடன் விளக்குக.
65. மாறுபடு புகழ்நிலை, புகழாப் புகழ்ச்சி - இவ்விரண்டின் வேறுபாட்டை விளக்குக. (1961)

66. பழிப்பது போலப் புகழ்புலப்படுத்தல், புகழாப் புகழ்ச்சி - இவற்றிற்குள்ள வேற்றுமையையும்; புகழ்வது போலப் பழித்திறம் புனைதல், மாறுபடு புகழ்நிலை - இவற்றிற்குள்ள வேற்றுமையையும் புலப்படுத்துக. (1966)

67. சங்கீரண அணிக்கு ஓர் உதாரணங் காட்டுக. (1965)

68. 'தண்டுறைநீர் நின்ற தவத்தால் அளி[illegible]
புண்டரிக நின்வதனம் போன்றதால் உண்டோ
பயின்றா ருளம்பருகும் பான்மொழியாய் பார்மேல்
முயன்றான் முடியாப் பொருள்' - இவ்வெண்பாவில் சங்கீரண அணி அமைந்துள்ளமையைத் தெரிவிக்க. (1967)

69. 'ஐயமும் ஒப்புமையில்லதும்' என்னாது 'ஒப்புமையில்லதும் ஐயமும்' என முறைபிறழக் கூறியவாற்றான் பெறப்படுவதென்ன?

70. பாவிக அணியைப் புறனடையின் பின்னாகக் கூறியது ஏன்?

71. பின்வரும் முதற்குறிப்புடைய பாடல்கள் எவ்வெவ்வணியைச் சார்ந்தன? எவ்வாறு?

(1) மலயத்து மாதவனே போன்றும் (2) வையந்தகழியா வார்கடலே நெய்யாக (3) விரிகடல்சூழ் மேதினி நான்முகன் மீசானு (4) எரியிரண்டும் சிறகா (5) அடிநோக்கின் ஆழ்கடல் வண்ணன் (6) பாரி பாரி என்று பல வேத்தி (7) முருகவேள் சூர்மா முதல்தடிந்தான் (8) துறவுளவாச் சான்றோர் இளிவாவும் (9) மனைக்கு விளக்கம் மடவார் (10) முன்னங் குடைபோல் முடிநாயகமணிபோல் (11) வைகலும் வைகல் வரக்கண்டும் (12) பாலன் தனதுருவாய் (13) தலையிழந்தான் எவ்வுயிருந் தந்தான் (14) சென்று செவியளக்கும் செம்மையவாய் (15) மலிதேரான் கச்சியும் (16) ஓங்கலிடை வந்து (17) பண்டு புரமெரித்த தீ (18) திங்கள் சொரிநிலவு (19) காமரு தேர் வெய்யவன் (20) யாண்டும் மொழிதிறம்பாச் சான்றவர் (21) பொய்ம்மையுடன் புணரார் மேலானோர் (22) வேறொரு மாதர்மேல் வேந்தன் (23) தம்புரவு பூண்டோர் பிரிய (24) ஆடவர்கள் எவ்வாறு அகன்றொழிவார் (25) தொல்லை மறைதேர் துணைவன்பால் (26) காலையும் மாலையும் கைகூப்பிக் கால் தொழுதால்.

72. இலக்கணம் தருக: விபாவனையணி, தற்குறிப்பேற்றவணி, சமாகிதவணி, ஒப்புமைக் கூட்டவணி, நிதரிசனவணி, புணர்நிலையணி, சங்கீரணவணி, பாவிகவணி.

சொல்லணியியல்

73. மடக்கின் வகைகள் 315 ஆதலை விளக்குக.

74. கோமூத்திரி, கூடசதுக்கம், எழுத்து வருத்தனம் இவற்றை விளக்குக.

75. காதை கரப்பு, கரந்துறைச் செய்யுள், அக்கரச்சுதகம் — இவற்றை விளக்குக. (1962)

76. காதை கரப்பு X கரந்துறைச் செய்யுள் - வேற்றுமை தருக.

77. 'அக்கரச் சுதகமும்' - என்னும் உம்மையால் பெறப்படும் சித்திரகவிகள் எவை? அவையுள் எவையேனும் இரண்டினை விளக்குக.

78. திரிபாகி X திரிபங்கி - வேற்றுமை தருக.

79. செய்யுளிலே நேரு[illegible]வழுக்கள் எவை? அவற்றுக்கு அமைதி உண்டா? (1963)

80. 'ஆதா[illegible]து[illegible]தா[illegible] வயர் தருங் கொடிக்குப்
பூ[illegible]புக[illegible]கழ் வளவன் – தாதரு
த[illegible]ங்கரும் பா[illegible]ன்றித் தணியுமோ தாரணங்கள்
பூங்கரும்பா[illegible]தடுத்த போர்' இதனில் அமைந்துள்ள வழுவைக் காரணங் காட்டி நி[illegible] இவ்வழு சிறுபான்மை வரைய்ப்படா இடங்கள் யாவை? (1965)

81. மலைவுகள் ஆறு எவை? அவற்றுள் இரண்டினை விளக்குக.

82. ஆகம மலைவு என்பதன் இயல்புகூறி, அதற்கு அமைதியும் எழுதுக. (1962)

பொது

83. சொல்லிலக்கணம் பொருளிலக்கணம் யாப்பிலக்கணங்களிற் கூறப்படும் விதிகளிற் சில தண்டியலங்காரத்தில் அணிகளாகக் கூறப்பட்டுள்ளன என்பர். அவற்றுள் ஒவ்வொன்று காட்டி விளக்குக. (1962)

84. செய்யுளிலே அணி அமைவது அதை இயற்றும் புலவரது கற்பனைச் சக்தியைப் பொறுத்தது. இதனை ஓர் அணிக்குக் கூறும் இலக்கணத்தின் வாயிலாக விளக்குக. (1963)

ரூ. 6-00